தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண் - 178

ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு - III

(English Social History-III)

(சாஸர் முதல் விக்டோரியா அரசிவரை
ஆறு நூற்றாண்டுகள்—ஒரு கண்ணோட்டம்)

ஆசிரியர்
ஜி. எம். டிரெவெலியன்

தமிழாக்கம்
இர. ஆலாலசுந்தரம் எம்.ஏ.,
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசினர் கலைக்கல்லூரி, சேலம்.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழக அரசு

First Edition—December, 1968

B.T.P. No. 178

© Bureau of Tamil Publications

English Social History—IV

G. M. TREVELYAN

Translation

R. ALALASUNDARAM

Price Rs. 6-50

This Tamil edition of 'English Social History' by G. M. Trevelyan is published by arrangement with Messrs. Longmans Green and Company, Limited, London.

Printed by
Manickam Press
Madras-29

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், *தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர்***)**

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன **'ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு–III'** என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 178ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 213 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்.

பொருளடக்கம்

		பக்கம்
14.	பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இறுதியிலும் ஸ்காட்லந்து ...	1
	I. 1707ஆம் ஆண்டு ஐக்கியத்தின்போது ஸ்காட்லந்து ...	5
	II. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்காட்லந்து ...	50
15.	காப்பெட்டின் இங்கிலாந்து (1793–1832)–I ...	70
16.	காப்பெட்டின் இங்கிலாந்து–II ...	103
17.	இரண்டு சீர்திருத்த மசோதாக்களுக்கு இடையில் (1832–1867) ...	138
18.	விக்டோரியாக் காலத்தின் பின்பாதி (1865-1901) ...	200
	பொருள்குறிப்பு அகராதி ...	267

ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு-III

14. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இறுதியிலும் ஸ்காட்லந்து

ஐக்கியம், 1707–கல்லோடனும் ஹைலந்தைக் கைப்பற்றுதலும், 1746.

இங்கிலாந்தின் சமூக வரலாற்றை ஆராய்வதே இந் நூலின் நோக்கமாக இருப்பதால், அண்டை அரசான ஸ்காட் லந்தைப் பற்றி இதுவரை ஒன்றும் சொல்லப்படவில்லை. மூதலாம் எட்வர்ட், வாலஸ் ஆகியோரின் போர்களுக்குப் பின்னர் இருநூற்றாண்டுகளுக்கு மேலாக இங்கிலீஷ்காரர் களும் ஸ்காட்டிஷ்காரர்களும் போர்க்களத்தில் மட்டுமே சந்தித்து வந்தனர்; வேறு தொடர்பு ஒன்றுமில்லை. எலிச பெத்தின் ஆட்சியில் அவர்களது பகைமையின் தீவிரம் தணிந்தது; ஏனெனில், கத்தோலிக்க விரோதிகட்கெதிராகத் தங்களது தீவைப் பாதுகாக்கும் பொதுப்பணியை இருவரும் மேற்கொள்ள வேண்டியதாயிற்று; ஆனல், சமய ஆட்சி முறையில் அவை இரண்டும் அடிப்படையிலேயே வெவ் வேருன அமைப்புகளை ஏற்றுக்கொண்டன; இதன் காரணமாக எல்லைக்கோட்டின் (Border) இரண்டு பக்கங்களிலும் சமூக, அறிவியல் வாழ்வின் தன்மையில் காணப்பட்ட வேறு பாடுகள் மேலும் அதிகரித்தன.

ஸ்காட்லந்தின் ஜேம்ஸ் VI இங்கிலாந்தில் அரியணை யேறியதால் (1603) அவரது அரசுகள் இரண்டும் இரட்டை முடியாட்சி (Dual Monarchy) என்றதொரு சிக்கல் நிறைந்த உறவினல் பிணைக்கப்பட்டன. ஜேம்ஸுக்கு இங்கிலாந்தை விட ஸ்காட்லந்துதான் மிக நன்றாகத் தெரிந்திருந்தது; ஆனல், அவரது மகன், பேரர்கள் ஆகியோரின் ஆட்சியில், ஸ்காட்லந்தின் தேவைகளையும் பழக்க வழக்கங்களையும் பற்றி அணுவளவும் அறியாத பிஷப்புகளும், அரசவைப்


Orkney Islands
SUTHERLAND
Moray Firth
Elgin
Culloden
Inverness
BANFF
ABERDEEN
R. Spey
Aberdeen
R. Dee
Fort William
Blair Atholl
Line
FORFAR
Glencoe
R. Tay
Dundee
Perth
Firth of Tay
St. Andrews
FIFE
Inverary
Highland
R. Forth
Kirkcaldy
Firth of Forth
LENNOX
Stirling
Carron
Dumbarton
Edinburgh
HADDINGTON
LOTHIAN
Glasgow
RENFREW
R. Clyde
LANARK
Berwick
R. Tweed
Ayr
AYR
Moffat
R. Nith
R. Annan
R. Esk
Cheviots
Dumfries
GALLOWAY
Stranraer
R. Tyne
Carlisle
SCOTLAND
Scale of Miles
0 10 20 30 40 50
Solway Firth
CUMBERLAND
Emery Walker Ltd. sc.

பிரபுக்களும், பாராளுமன்ற ஆட்களும் வகுத்த திட்டங்களின் படியே ஸ்காட்லந்து ஆளப்பட்டது; அன்றைய ஆங்கிலேயக் கட்சி நலன்களைப் பேணும் நோக்கத்துடன்தான் இம்மனிதர்கள் அத் திட்டங்களை வகுத்தனர். எடின்பரோ பிரிவிகவுன்சில், ஒயிட் ஹாலின் (White Hall) உத்தரவுகளின்படியே செயல்பட்டது. ஸ்காட் மக்கள் இவ்வாறு தாங்கள் இங்கிலாந்துக்கு அடிமைப்பட்டிருப்பதை வெறுத்தனர்; தம் நாட்டிலிருந்து ஆளாத மன்னர் சார்லஸோ, ஆலிவரோ, ஜேம்ஸோ அல்லது வேறு யாராக இருப்பினும் அவர்களுக்கு அக்கறையில்லை. தங்களது விருப்புவெறுப்புகள் என்ற போர்வையை இன்னும் இறுகப் போர்த்திக்கொண்டு, தங்களது மிக வலிய அண்டை நாட்டிலிருந்து வந்து புகும் எதையும் மேலும் அதிகச் சந்தேகத்துடன் நோக்கினர்.

இத்தகைய அரசியல் நிலைமைகளில் இவ்விரு நாடுகளின் சமூக வாழ்வும் தனித்தனிக் கால்வாய்களாக ஒன்றோடொன்று இணையாமல் ஓடிக்கொண்டிருந்தன. இரு நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் மேலும் வளர்வதற்குப் பொருளாதார, பூகோளத் தடைகள் பல இருந்தன. சுங்கவரிகளாலும் வடக்குப் பெருஞ்சாலை (Great North Road) யின் மோசமான நிலைமையினாலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. எடின்பரோவிலிருந்து இலண்டன் செல்ல ஒரு வாரம் பிடித்தது. எல்லைக் கோட்டுக்கு (Border) அருகிலிருந்த இங்கிலீஷ் கவுண்டிகள் மிகவும் அநாகரிக நிலையிலும், ஸ்காட் மக்களிடம் மிகப் பகைமை பாராட்டுபவையாகவும் இருந்தன. சமயம், சட்டம், கல்வி, விவசாய முறைகள், வகுப்புகளிடையில் (Classes) பரஸ்பர உறவுகள் ஆகிய அனைத்திலும் இங்கிலாந்தின் உதாரணத்தைப் பின்பற்ற ஸ்காட்லந்து சிறிதும் தயாராக இல்லை; இங்கிலாந்துக்கு வழிகாட்டக்கூடிய நிலையிலும் அது இல்லை.

இவ்வாறு வில்லியம் அரசர் சிரமத்தோடு ஆண்ட இரு அண்டை தேசங்களும் ஒன்றை ஒன்று அடியோடு வெறுத்தன; 1702-ல் அவரது மரணத்துக்கு முன்பே, அவரது இரு அரசுகளிலும் இருந்த அறிஞர்களுக்கு ஒன்று தெளிவாயிற்று: இரு தேசங்களுக்குமிடையில் மேலும் நெருங்கிய அரசியல், வாணிக ஐக்கியம் ஏற்பட வேண்டும்; அல்லது இரு தேசங்களும் மீண்டும் பிரிந்து, போர் மூளும். ஏனெனில், 1688 புரட்சிக்குப் பிறகு எடின்பரோப் பாராளுமன்றம் ஒரு சுதந்திரமான புதிய போக்கை மேற்கொண்டது; அதன் காரணமாகத் தனது அடக்க ஒடுக்கமான பிரிவிகவுன்சிலைக்

கொண்டு ஸ்காட்லந்தின் விவகாரங்களைத் தொடர்ந்து நிர்வகிப்பது இங்கிலாந்துக்குச் சாத்தியமில்லாததாகிவிட்டது. இரட்டை முடியாட்சி (Dual Monarchy) முறை முரிந்து கொண்டிருந்தது. பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒரு சமத்துவ அடிப்படையில் இரு நாடுகளும் இன்னும் நெருக்கமாக ஐக்கியப்படவேண்டும்; அல்லது நிலவிவரும் உறவை அறுத்துக்கொள்ள வேண்டும். இரண்டிலொன்றை இரு நாடுகளும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

சரியான முடிவே மேற்கொள்ளப்பட்டது; ஆயினும், ஸ்காட்லந்து மக்கள் தங்களது எதிர்காலத்தைப் பற்றிப் பெரும் அச்சம் கொண்டிருந்தார்கள். 'கிரேட் பிரிட்டன்' என்ற புதிய அரசை முதன்முதலில் ஆண்டவர் ஆன் அரசி; அவரது ஆட்சியில் இரு நாட்டுப் பாராளுமன்றங்களும் ஐக்கியமுற்றன; இரு தேசங்களின் வாணிப முறைகளும் ஒன்றுபட்டன; ஆனல், திருச்சபைகளும் சட்டங்களும் வெவ் வேருயிருந்தன. 1707ஆம் ஆண்டின் ஐக்கியத்தின்படி (Union) ஸ்காட்லந்து தனது பாராளுமன்ற வாழ்வை இழந்தது. (அதற்கு மேல் இந்த ஐக்கியத்தில் முக்கியம் ஒன்றுமில்லை; ஆயினும், சமீப காலத்தில் அது சற்று முக்கியமானதாகத் திகழ்ந்தது.) அதே சமயத்தில் இங்கிலாந்தின் மார்க்கெட்டுகளிலும் காலனிகளிலும் அதற்குச் சரிஉரிமை கிடைத்தது. இதன் விளைவாகத் தனது கொடிய, இடையருத வறுமையிலிருந்து விடுபட அதற்குக் கடைசியில் சமயம் வாய்த்தது.

ஒரு தலைமுறைக்கும் மேலாக ஐக்கியத்தின் நல்விளைவுகளைப் பற்றிச் சந்தேகமிருந்தது. ஆனல், யாகோபிய, ஹைலந்து (Highlands) பிரச்சினைகள் 1745—1746ல் ஒழித்துக் கட்டப்பட்ட பிறகு ஸ்காட்லந்தானது இன்ப நாட்களை நோக்கித் துள்ளிக் குதித்தோடியது. இதுவரை அடி முதல் நுனிவரை காலத்துக் கொவ்வாத பத்தாம் பசலி முறைகளைக் கொண்டு பரிதாப நிலையிலிருந்த அதன் விவசாயம், அபிவிருத்தி மனப்பான்மை கொண்ட இங்கிலாந்தின் நிலப் பிரபுக்களுக்கு முன்மாதிரியாய் விளங்குமளவுக்கு அந் நூற்றாண்டு முடிவதற்குள் வளர்ந்துவிட்டது. ஸ்காட்டிஷ் குடியானவர்களும், தோட்டக்காரர்களும், பொறியியல் வல்லுநர்களும், மருத்துவர்களும் தெற்கில் வந்து, ஆங்கிலேயர்கட்குப் பலவற்றைக் கற்றுத் தந்தனர். ஆங்கிலேயர்கள் ஸ்காட்லந்துக்குப் பயணம் செய்து, அதன் மலைகளையும் மனிதர்களையும் கண்டு ரசித்தனர். பிரிட்டிஷ் பேரரசின் வாணிபத்திலும்

காலனி வளர்ச்சியிலும், பிரிட்டனின் போர்களிலும், இந்தியாவின் அரசாங்கத்திலும் ஸ்காட்லந்து மக்கள் பெரும் பங்கு வகித்தனர். பல யுகங்களாகத் தான் அடைந்து கிடந்த வறுமை என்ற சிறையிலிருந்து விடுபட்டு ஸ்காட்லந்து திடீர்ச் செல்வச் செழிப்பில் மிதந்தது. அதன் சமயம் தனது நம்பிக்கையின்மையையும் வெறியையும் பெருமளவில் விட்டொழித்தது; ஆயினும், உயிர்த்துடிப்பையும் ஜனநாயகத் தன்மையையும் தொடர்ந்து பெற்றிருந்தது. ஹ்யூம், ஆடம் ஸ்மித், ராபர்ட்சன், டுகால்ட் ஸ்டீவார்ட் (Dugald Stewart) போன்ற அதன் மக்களின் அறிவொளி உலகத்தின் சிந்தனைக்கு வழி காட்டியது; இவ்வறிஞர்கள் தங்களது செல்வாக்கை பிரிட்டனில் பரப்பினது மட்டுமன்றி, ஐரோப்பியக் கண்டப் பகுதியில் வாழ்ந்த தத்துவ ஞானிகளின் அறைகட்குள்ளும் செலுத்தினர். ஸ்மோலெட், பாஸ்வெல், பர்ன்ஸ் (Burns) ஆகியோர் இலக்கியத்திலும், ரேபர்ன் (Raburn) கலையிலும் தமது தாய்நாட்டுக்குப் புகழைத் தேடித்தந்தனர். இவ்வாருகப் பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பகுதி ஸ்காட்லந்தின் பொற்காலம். சர் வால்டர் ஸ்காட் தனது கதைப் பாடல்களாலும் வீரச்சுவை ததும்பும் காதலோவியங்களாலும் ஐரோப்பா முழுவதிலும் ஸ்காட்டிஷ் முத்திரையைப் பதித்து, அப்பொற்காலத்தை மீண்டும் ஒரு தலைமுறைக்கு நீடித்தார்.

ஹனோவர் வமிசத்தின் ஆட்சிக் காலத்தில் ஸ்காட்லந்தில் ஏற்பட்ட மாறுதல்களின் விரிவையும் தன்மையையும் தெளிவாகப் புலப்படுத்துவதற்கு வேண்டி, ஆன் அரசியின் ஆட்சியில் நிகழ்ந்த ஐக்கியத்தின்பொழுது அது இருந்த நிலையை[1] இந்த அத்தியாயத்தில் முதலில் விளக்கிவிட்டு, ஜார்ஜ் III ஆட்சியின் இடைப் பகுதியில் அது எவ்வாறு மாறியது என்பதை அடுத்தபடியாக விளக்குவேன்.

I. 1707ஆம் ஆண்டு ஐக்கியத்தின்போது ஸ்காட்லந்து

அரசர் வில்லியம், 1689—1702—அரசி ஆன், 1702—1714

பர்ன்ஸ், சர் வால்டர் ஸ்காட் ஆகியோர் காலந்தொட்டே ஆங்கிலேயர்கள் ஸ்காட்லந்தின் பழங்கதைகளை—மலைப் பிரதேசத்துக் கதைகளையும் சமவெளிப் பிரதேசத்துக் கதை

1. 'England under Queen Anne' என்ற எனது நூலின் இரண்டாவது தொகுதியில் ஸ்காட்லந்து பற்றி உள்ள விவரங்களை நான் இதற்குப் பயன்படுத்தியிருக்கிறேன்.

களையும்—கேட்டுத் தீர்த்துவந்தனர்; அவர்களுக்கு அதில் ஒரே பைத்தியம் என்றுகூடச் சொல்லலாம். அந்நாட்டின் இயற்கை அழகைக் காண்பதற்கு அவர்கள் அங்குச் செல்கிறார்கள்; தங்களது நாட்டிலும், உலக முழுவதும் பரந்துள்ள தமது பேரரசு பூராவிலும் கூட ஸ்காட்லந்து மக்களின் அரும் பெரும் திறமைகளை அவர்கள் புகழ்ந்து பேசியுள்ளனர்; இதில் ஓரளவு பொருமையும் கொண்டனர் எனலாம். என்றாலும் ஆனின் ஆட்சியில் ஸ்காட்லந்தைப் பற்றிய அறியாமை இன்னும் இருந்துவந்தது; விரோத உணர்வும் வெறுப்புணர்ச்சியும் இதனால் விளைந்தன. இவ்விரு மக்களுக்கு மிடையிலான தொடர்பு மிக மிகக் குறைவு; அச் சிறு உறவும் கூடப் பெரும்பாலும் போர்க் களத்தில் ஏற்பட்டதே. வாழ்க்கை முன்னேற்றம் கருதிய ஸ்காட்லந்தியர்கள் இங்கிலாந்தைக் காட்டிலும் ஐரோப்பியக் கண்டப் பகுதிக்கே அதிகம் சென்றனர். நாடு கடத்தப்பட்ட யாகோபியர்கள் இத்தாலியிலும் பிரான்சிலும் வாழ்ந்தனர். கால்வினியத் தத்துவத்துக்கும் ரோமானியச் சட்டத்துக்கும் ஊற்றுக் கண்ணாக விளங்கிய டச்சுப் பல்கலைக் கழகங்களுக்கே பிரஸ்பிடீரிய மதகுருக்களும் வழக்கறிஞர்களும் சென்றார்கள். ஹாலந்துடனும் ஸ்காண்டிநேவியாவுடனும் வாணிபம் செய்த ஸ்காட்டிஷ் கடல் வணிகர்கள், இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளிலிருந்து இன்னும் விலக்கியே வைக்கப்பட்டிருந்தனர். வியாபாரத்துக்காக சீவியாட் (Cheviots) மலைகளைத் தாண்டிய ஆங்கிலேயர்கள் மிகவும் குறைவு; ஸ்காட்லந்தைச் சேர்ந்த எப்பொருளிடத்திலும் பரம்பரையாகவே பகைமை பாராட்டி வந்த எல்லை வாழ் மக்கள் மட்டுமே அம் மலைகளைத் தாண்டினர்; பொருமை பிடித்த நார்த்தம்பிரியர்கள் தெற்கிலிருந்து வரும் பிரயாணிகளிடம் ஸ்காட்லந்துதான் 'உலகிலேயே அதி அநாகரிக நாடு' என்று கூறி, அவர்கள் அங்குச் செல்லாமல் தடுப்பதுண்டு. ஸ்காட்லந்தியர்கள் தங்களது கால்நடைகளை வட இங்கிலாந்தின் சந்தைகளில் விற்றனர்; இது தவிர வேறு எந்தவிதமான வியாபாரமும் இவ்விரு நாடுகளுக்கிடையில் கிடையாது. சிற்சில சமயங்களில் இலண்டனிலிருந்து வந்த தபால் பையில் ஒரே ஒரு கடிதம் தான் எடின்பரோவுக்கு இருந்தது.

பொழுது போக்குக்காக ஸ்காட்லந்துக்கு வந்த மனிதர்களின் தொகை ஒவ்வோர் ஆண்டும் ஒரு டஜனுக்கு மேல் இருக்காது. இவர்களிலும் கூட ஒரு சிலர் மனத்திடமின்மை காரணமாக உடனே திரும்பினர்; இதற்குக் காரணம் அசுத்தம் மலிந்த விடுதிகளும், தங்கும் வசதியின்மையும்.

வாய்க்குச் சுவையான உணவு அங்குக் கிடையாது; தங்கும் அறைகள் அழுக்குப்படிந்து காணப்பட்டன. நல்ல ஃபிரெஞ்சு மதுவும், புதிய சால்மன் மீன்களும் நிறையக் கிடைத்தாலும் கூட, இக் குறைகட்கு ஈடுசெய்ய முடியவில்லை. இவ்வாறு தமக்கு வசதிகள் போதாமைபற்றி ஆங்கிலேயப் பிரயாணிகள் குறைபட்டனர். அதேபோல் தமது குதிரைகள் கட்டப்படும் லாயங்களைப்பற்றியும் குறை கூறினர். 'பன்றிகளுக்குக் கூட லாயக்கில்லாத விடங்களில்' அவை அடைக்கப்பட்டன, உலர்ந்த புல்லுக்குப் பதிலாக உலர்ந்த வைக்கோல்தான் அவைகட்குப் போடப்பட்டது. சிற்சில சமயங்களில் சில கனவான்கள் அறிமுகக் கடிதத்துடன் வந்து, ஸ்காட்டிஷ் கனவான்களின் வீடுகளில் வசதியுடன் தங்கினர். அவர்களுக்கு இத்தகைய குறைகள் இல்லை.

அக்காலத்தில் அழகைத் தேடியலைவதாகச் சிலர் சொல்லிக்கொண்டார்களே, அவர்களைக் கவரக்கூடியது ஸ்காட்லந்தில் ஒன்றுமில்லை. தெற்கத்திய மனிதர்களுக்கு இயற்கையான தாவரமடர்ந்த சதுப்பு நிலக்காட்சி பிடிப்பதில்லை; ஆனால், 'கருஞ்சிவப்புப் புதர்களும் தழைமலி மரங்களும்' ஸ்காட்லந்தியரின் உள்ளத்தைப் பிணித்தன. ஆனால், தமது உள்ளத்தின் அடித்தளத்தில் தமக்கே தெரியாமல் வேரோடியிருந்த இந்தக் காதலுக்கு அவர்கள் இன்னும் இலக்கியத்தில் உருக்கொடுக்கவில்லை. எனவே, இது அவர்களை வெறுத்த ஆங்கிலேயர்களுக்கும் தெரியாது. பெர்விக்கிலிருந்து (Berwick) எடின்பரோவுக்குக் குதிரைமீது பயணம் செய்த ஆங்கிலேயர்கள், சோகம் நிறைந்ததாகக் காணப்பட்ட தரிசு நிலமாகவும், திறமையற்ற முறையில் நிர்வகிக்கப்பட்ட ஓட்ஸ் தானிய வயல்களாகவும் பிரிக்கப்பட்டிருந்த லோலந்து (Lowland) சமவெளியை வெறுத்தனர். அது வேலியிடப்படாமல் அகன்று கிடந்தது; மரங்கள் அருகிலேயே காணப்பட்டன; எடின்பரோவை நெருங்கும்வரை அழகிய மாளிகைகள், தோட்டங்கள், நன்கு கட்டப்பட்ட பண்ணையில்லங்கள், கம்பீரமான பாரிஷ் மதாலயங்கள் ஆகிய எதையும் காண முடியும். தனது நாட்டில் கிராமப்புற முழுவதிலும் இவைகளைக் கண்ட ஓர் ஆங்கிலேயப் பிரயாணிக்கு இது எப்படியிருக்கும் ? ஹைலந்து மலைப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலோ ஒரு சில ஆங்கிலேயர்களே வியாபாரம் அல்லது அரசாங்க வேலை சம்பந்தமாக அங்குப் பெருஞ் சிரமத்துடன் சென்று மீண்டனர். அவர்களும் அப் பிரதேசத்தை 'அருவருக்கத் தக்கது' என்றும், 'பயங்கரமானது' என்றும்,

'புதர்கள் பூத்திருக்கும்பொழுது மற்றெல்லாச் சமயங்களைக் காட்டிலும் அதிகம் வெறுக்கத்தக்கது' என்றும் வருணித்தனர்.

ஸ்காட்லந்து மக்கள் எல்லோரும் யாகோபியர்களாகவோ அல்லது பிரஸ்பிடீரியர்களாகவோ இருந்தனர்; எனவே, ஆங்கிலேயர்களுக்கு அவர்களிடம் வெறுப்பு. சமயத்தில் நம்பிக்கை கொண்ட அல்லது நம்பிக்கை யற்ற எல்லா ஆங்கிலேயர்களுக்கும் கெர்க்கின் (Kirk) சமூகக் கட்டுப்பாட்டு விதிகளின் கடுமை வேடிக்கையாக இருந்தது அல்லது அதிர்ச்சியூட்டியது. கிராம்வெல்லின் குதிரைவீரர்கள் தாங்கள் ஸ்காட்லந்தில் ஆட்சி செலுத்திய காலத்தில் பாரிஷ் மதாலயங்களில் நுழைந்து 'பாவமன்னிப்பு நாற்காலியில்' (stool of repentence) கேலியாக உட்காருவது வழக்கம்; மனிதனின் நடத்தையைத் திருத்தும் இந்நாற்காலியானது, ஆனின் ஆட்சியில் சுதந்திர உணர்வுகொண்ட ஆங்கிலேய டிஸ்ஸென்டர் வகுப்புகளுக்கும் அதே சமயம் கிராமக் குருவின் அன்பான அதிகாரத்துக்கும் ஏற்புடைய தல்லாததாக விளங்கியது. ஆங்கிலேய கன்பார்மிஸ்ட் அல்லாதவர்களின் தலைவரான கலாமி (Calamy) பிரஸ்பிடீரியர்களுடன் பழகி நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதற்காக 1709-ல் ஸ்காட்லந்தில் பயணம் செய்தார். அப்பொழுது மதாலயச் சபையின் (Church Assembly) சில நடவடிக்கைகளை 'சித்ரவதைக் கூடங்களின் கண்விழிப்பு' (Inquisition) என்று வருணித்ததன் மூலம் பிரஸ்பிடீரியர்களுக்கு ஆத்திர மூட்டினர். அரசியல், சமயக் காரணங்கள் அனைத்தையும் விட்டுவிட்டாலுங்கூட, வறுமையில் உழன்று கொண்டிருந்த ஸ்காட்லந்து மக்கள் தமது தேசத்தைப் பற்றியும் தம்மைப்பற்றியும் கொண்டிருந்த பெருமைகள், பிறரை நன்கு உணர முடியாத சில ஆங்கிலேயர்களுக்கு நகைக்கத் தக்கவையாகத் தோன்றின. கிழிந்த கோட்டை அணிந்திருந்த ஒரு 'கனவான்' பெருமையுடன் நடந்து கொள்வது, விலையுயர்ந்த ஆடை அணிந்திருந்த ஓர் ஆங்கிலேய வியாபாரிக்குக் கேலிக்கூத்தாகத் தோன்றியது. எல்லாப் பக்கத்திலும் இத்தகைய அநாகரிகமான ஏளனத்தையே கண்ட ஸ்காட்லந்தியர்கள் மேலும் அதிக மௌனத்தையும், அதிக சினத்தையும் கொண்டனர்.

அதேபோல் ஸ்காட்லந்தியர்களும் ஆங்கிலேயர்களைப் பணத்திமிர் பிடித்தவர்கள் என்றும், பிறரை மதிக்கத் தெரியாத மூர்க்க குணம் படைத்த அண்டைட்யர் என்றும் வெறுத்தனர். பாமரர் பாடல்கள், பழங்கதைகள், வரலாறு—சிந்தனைத்

திறம் மிகுந்த, உணர்ச்சி வேக மிக்க ஒரு மக்களினத்தின் மீது இவை ஒரு பலமான சக்தியாக விளங்கின—ஆகியவை இங்கிலாந்தை ஒரு நெடுங்காலப் பகையாக உருவகப்படுத்தின. தெற்கத்திய மக்களோடு நான்கு நூற்றாண்டு காலம் நடைபெற்ற போர்கள்தாம் ஸ்காட்லந்தின் கிராமியக் கதைகளுக்கும் பாடல்களுக்கும் கருப்பொருள். தமது புராதன ராஜ்யத்தில் ஒவ்வோர் இடத்தையும் எவ்வாறு ஆங்கிலேயர்கள் தீக்கிரையாக்கினர் என்பதைப்பற்றி அங்குள்ள மக்கள் கூறமுடியும்; எல்லா இடங்களுக்குமே இதே கதிதான். மேலும் ப்ளாடன் (Flodden) போர்க்களத்தில் ஏற்பட்ட அவமானம் இன்னும் துடைத்தெறியப்படவில்லை; இதை நினைத்தே ஒவ்வொரு ஸ்காட்லந்துக்காரனின் உள்ளமும் ஒவ்வொரு கணமும் துடித்துக்கொண்டிருந்தது.

1688ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிறகு எடின்பரோப் பாராளுமன்றமானது ஓரளவு அதிக முக்கியத்துவம் பெற்றது; ஆயினும் கூட, சமூக வாழ்விலோ அல்லது மக்களின் எண்ணத்திலோ அதற்கு எந்தவிதமான சிறந்த இடமும் கிடையாது. ஹை தெருவிலிருந்த (High Street) பாராளுமன்றக் கட்டடம் என்றழைக்கப்பட்ட அந்தப் பெரிய மண்டபத்தில் அது தனது கூட்டத் தொடர்களை நடத்தியது; ஐக்கியத்துக்குப் பிறகு அது தலைநகரின் வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஸ்காட்லந்திலேயே மிகவும் புகழ்பெற்ற அறையாக அது இன்னமும் இருந்துவருகிறது. அங்கு, அதன் உயரமான மரத்திராய்கள் வெளித்தெரியும் கூரையின் கீழ்ப் பிரபுக்களும் (Nobles), பாரன்களும் (Barons), நகரத்தார்களும் (Burgesses) ஒன்றுக அமர்ந்தனர்; அவர்கள் தனித்தனி வகுப்புகளாகக் (Estates) கருதப்பட்டனர் ஆயினும், எல்லோரும் ஒரே அறையிலேயே அமர்ந்து விவாதம் நடத்தி, வாக்கெடுப்புச் செய்தனர்.

பழைய ஸ்காட்டிஷ் சட்டத்தின்படி அரசனின் பிரதமானியதார்களாகக் (tenants-in-chief) கருதப்பட்ட சில கனவான்களால் பாரன் வகுப்பைச் சேர்ந்த அல்லது கவுண்டியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டனர். ஆனால், இங்கிலாந்தின் காமன்ஸ் சபைக்கு இவர்களைத் தேர்ந்தெடுத்த முறை வேறு; அங்கு 40 ஷில்லிங் மதிப்புடைய நிலச் சொந்தக்காரர்களால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆங்கிலேய சிதைந்த பேராக்களைப் போலவே ஸ்காட்டிஷ் பர்க்குகள் (Burgh) அனைத்துமே மிகவும் 'சிதைந்தவை' (Rottan). எனவே,

ஆங்கிலேயப் பாராளுமன்றத்தைக் காட்டிலும் ஸ்காட்டிஷ் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவ அம்சம் குறைவு. இங்குப் பொதுமக்களின் பிரதிநிதித்துவமானது 'நடைமுறையானது' என்று மட்டுமே கூறமுடியும். இதன் காரணமாகவும், ஸ்காட்லந்தின் சமுதாய அமைப்பு இன்னும் நிலமானிய முறையின் அடிப்படையிலேயே அமைந்து, உயர் குடியினரைத் தலைவர்களாகக் கொண்டிருந்தாலும், சபையில் பிரபுக்களே மிகவும் பலம் வாய்ந்த சக்தியாக விளங்கினர். அதன் விவாதங்களைத் தலைமை தாங்கி நடத்தியதும், அதன் கட்சிப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கியதும், அதன் செயல்களையும் கொள்கைகளையும் வகுத்ததும் பெரும்பாலும் அவர்களே.

மேல் வகுப்பினர் தலைமை வகித்தது பாராளுமன்றத்தில் மட்டுமன்று; ஸ்காட்லந்தின் கண்களில் ஒவ்வொரு பிரதேசத்தையும் ஒரு பெரிய குடும்பம் பிரதிநிதித்துவப் படுத்தியது. பழக்கவழக்கம், பெருமை, பயம், பாதுகாப்புப் பெறும் நம்பிக்கை ஆகிய எல்லாவற்றாலும் பொதுமக்கள் அக்குடும்பத்துடன் பிணைக்கப்பட்டிருப்பதை ஒவ்வொரு மாவட்டத்திலும் காண முடிந்தது. லோலந்துக் கனவான்கள் லோர்டுகள் (Lairds) என அழைக்கப்பட்டனர்; இவர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்டது; தமது ஆயுதங்களுடன் தான் இவர்கள் வெளியில் சென்றனர். தலப் பிரபுக்கள் தங்களது மாளிகைகளில் இவர்களுக்கு விருந்தளித்து உபசரித்தனர்; இவர்களது சண்டைகளில் தலையிட்டு, இவர்களது நலன்களைத் தம் நலன்போல் காத்தனர்; கைம்மாறுகத் தாம் அரசாங்கத்துக்காதரவாக அல்லது எதிராக நடத்தும் போரில் தம்மை ஆதரிக்குமாறு இவர்களிடம் நம்பிக்கையோடு எதிர் பார்த்தனர்.

விக்குகளும் யாகோபியர்களும் மோதிக்கொண்டால்—ஆனின் ஆட்சியில் இது பலமுறை நடைபெற இருந்தது; 1715-ல் உண்மையில் நடக்கவே செய்தது—ஒவ்வொரு பிரதேசமும் தனது ஆர்ஜில் (Argyle), ஆதோல் (Atholl), மார் (Mar) போன்ற ஏதாவது ஒரு பிரபுக் குடும்பத்தைப் பின் பற்றும். லோலந்திலும் கூட இவ்வாறுதான் நடைபெறும்; ஆனால், ஹைலந்தைப்போல் அவ்வளவு தீவிரமாக அன்று. அரசாங்கத்துக் கெதிராக எல்லாப் பிரபுக்களும் ஒன்று சேருவார்களேயானால், சின்னஞ் சிறு ஸ்காட்டிஷ் சேனை திணறிப் போகும். ஆனால், மற்ற வகுப்பினரைப் போலவே இவர்களிடையிலும் பிளவுகள் இருந்தன. மேலும், அரசியலில்

ஈடுபட்ட அனைவருமே பெரும்பாலும் அதிகாரப்பித்துக் கொண்டவர்களாக இருந்தனர்; ஏனெனில், மிகவும் கொடிய வறுமையில் வாடிய மக்கள் கொடுத்த சொற்ப குத்தகையும் இதர மாமூல்களும் இவர்களது பிரபுத்துவக் குடும்பத்தின் ஆடம்பரத் தேவைகளுக்குப் போதுவதில்லை. எனவே, ஒரு பெரிய பிரபுவின் பணப் பற்றாக்குறைக்குச் சிறந்த, இயற்கையான மருந்தாகவே அரசாங்க அலுவல் பணி கருதப்பட்டது. ஆயினும், யாகோபிய முகாமிலும் விக் முகாமிலும் இருந்தவர்களில் பலர் நாட்டுப்பற்று மிக்கோராயும் தன்னலம் கருதுவோராயும் இருந்தனர்; ஆனால், சிலர் சிறந்த, மதிநுட்பம் வாய்ந்த அரசியல் வல்லுநர்களாயுமிருந்தனர்; தமது நாட்டின் உண்மையான நலன்களை எப்படிப் பேணுவது என்பது இவர்களுக்குத் தெரியும்; இவர்களது உயர்குடிப்பிறப்பும் வளர்ப்பும் வாழ்வும், பொதுமக்களின் கைதட்டலைப் பெறும் அவசியத்தை இவர்களுக்குத் தேவையற்றதாக்கின. ஐக்கியச் (Union) சட்டத்தை நிறைவேற்றியவர்கள் இத்தகைய மனிதர்களே.

பிரபுக்களுக்கு அடுத்தவர்கள் லேர்டுகள் (Lairds) அல்லது நாட்டுப்புறக் கனவான்கள். இவர்களது உயரமான கருங்கல் மாளிகைகள், மரமோ வேலியோ இல்லாத வெற்று வெளியில் செங்குத்தாகவும் அரண்களின்றியும் ஓங்கி நின்றன; அவை ஒவ்வொன்றும் தண்டையக்கட்டுப் படிகளையும் மஞ்சடைப்புக் கூரையையும் உடையன. இங்கிலாந்தைப் போல் இங்குக் கட்டடக்கலை செழிக்கவில்லை. முந்திய காலத்துப் போர்க் கோபுரங்கள் (war-towers) பின்னர் ஒழுங்கற்ற முறையில் விரிவுபடுத்தப்பட்டதன் விளைவுகளே இந்த நாட்டுப்புற இல்லங்களில் பல. திறந்த வடபுறத்தில் சன்னல்களே இல்லை; அப்பக்கம் சிறந்த இயற்கைக் காட்சி அமைந்திருந்தாலும்கூட சன்னல்கள் வைக்கப்படுவதில்லை. புல்தரை, இரு மருங்கிலும் மரங்களைக்கொண்ட பாதை, மதில் சூழ் தோட்டம் எல்லாம் இன்னும் தோன்றவில்லை. கால் நடைத் தொழுவத்தின் முடையும் இதர நாற்றங்களும் வீசிய பண்ணைக் கட்டடங்கள் மாளிகையை அடுத்து இருந்தன; ஒருபுறத்தில் அதன் சுவர்கள்வரை தானிய வயல் நீண்டு கிடந்தது; இன்னொரு புறத்தில் கேல் கோசு, மருந்து மூலிகைகள், மலர்ச் செடிகள் ஆகியவை யடங்கிய தோட்டம் போதிய கவனமின்றிக் கிடந்தது.

அதேபோல் வீட்டின் உட்புறத்திலும், இங்கிலாந்தில் காணப்பட்டதைப் போன்ற ஆடம்பரப்பொருள்கள் கிடையா.

மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் மிகமிக எளியவை; தரைமேல் சமுக்காள விரிப்புக் கிடையாது; சுவர்களில் தாள்களோ, சட்டங்களோ, திரைகளோ அல்லது படங்களோ கிடையா. படுக்கையறைகளில் நெருப்புத் தொட்டிகள் இல்லை; 'நெருப்பு அறைகளில்' மட்டுமே அவை இருந்தன. விருந்தினர் அறையில் அவர்களுக்கென்று மூடிய படுக்கை ஒன்று தயாராக இருக்கும்; ஏனெனில், இரவு நேரங்களில் லோர்டுகள் விருந்துக்குப்பின் வீடு திரும்புவது ஆபத்து நிறைந்தது. விழாவிலிருந்து ஷேண்டர் டாம் (Tam O' Shanter) வீடு திரும்பிய கதைதான். விருந்தோம்பல் என்பது, சாதாரணமாகச் சமைக்கப்பட்ட இறைச்சியை ஏராளமாகப் பரிமாறுவதுதான்; ஸ்காட்டிஷ் ஏல், பிரெஞ்சு பிராந்தி, கிளாரெட் ஆகிய மதுபானங்கள் பின்னர் அருந்தப்பட்டன; ஹைலந்து பகுதிகளில் அங்கேயே தயாரிக்கப்பட்ட விஸ்கி அருந்தப்பட்டது. அரசி ஆனின் ஸ்காட்டிஷ் குடிகளுக்குத் தேநீர் ஒரு விலையுயர்ந்த மருந்து. சிக்கனம் என்பது இன்றியமையாத ஒரு தேவை, ஆனால் விருந்தோம்பல் என்பது அந்தத் தேசத்துக்கே உரிய ஒரு பண்பு. குதிரைமீதேறி அண்டை மனிதர்கள் திடீரென்று வருவார்கள்; பாதி நாள் தங்குவார்கள்; அவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டனர். ஏனெனில், இங்கிலாந்தைப் போலன்றி ஸ்காட்டிஷ் நாட்டுப்புற இல்லங்களில் பொழுது போக்குவதற்கான வழிகள் மிகவும் குறைவு.

எடின்பரோவிலும் மற்ற நகரங்களிலும் கோல்ப் (golf) ஆடுவது ஒரு நெடுங்கால வழக்கம். ஸ்காட்லந்து முழுவதிலும் முயல், கிரௌஸ் பறவை, காட்டுக்கோழி, கௌதாரி ஆகியவை நாய், பருந்து, கண்ணி ஆகியவை மூலம் பிடிக்கப்பட்டன; சிற்சில சமயங்களில் நீளமான துப்பாக்கியும் பயன்படுத்தப்பட்டது. முன்பு எல்லாவிடங்களிலும் துள்ளி ஓடிய சிவப்பு மான் இப்பொழுது ஹைலந்துப் பள்ளத்தாக்குகளில் அடைந்துபோயிற்று. சால்மன், ட்ரவுட் (trout) மீன்கள் மிக ஏராளமாகக் கிடைத்தன; இவைகளைப் பிடிப்பது நல்ல பொழுதுபோக்கு; இவைகளால் மக்களுக்கும் விலை மலிவான உணவு கிடைத்தது. சிற்சில பகுதிகளில் கனவான்களுக்கு சால்மன் மீன் பிடிப்பதில்லை; அவை சீக்கிரம் தெவிட்டிவிடுகின்றன என்பது அவர்கள் குற்றச்சாட்டு. தினந்தோறும் சால்மன் பரிமாறினால் பண்ணையாள்களும்கூட வேலை நிறுத்தம் செய்தனர்.

லோலந்துப் பகுதிகளில் வசித்த கனவான்களில் ஒரு பாதி பிரஸ்பிடீரிய சமயத்தையும், மற்றொரு பாதி எபிஸ்கோப்பிய

சமயத்தையும் சார்ந்திருந்தனர்; இப்பிரிவானது விக் கட்சி என்ற அரசியல் பிரிவை ஒட்டியதே. இங்கிலாந்திலிருந்ததைப் போல அங்கு டோரிகள் இல்லை; ஏனெனில், இங்கிலாந்தில் டோரிகள் என்பவர்கள் எபிஸ்கோப்பியர்களே; தங்கள் திருச்சபையைப் புரட்சி ஏற்பாடானது (Revolution settlement) எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்பதால் அவர்கள் அவ்வேற்பாட்டை ஏற்றுக்கொண்டுவிட்டனர். ஆனால், ஸ்காட்லந்தில் நிறுவப்பட்டிருந்த எபிஸ்கோப்பிய திருச்சபையை அப் புரட்சியானது அகற்றி, அதைச் சட்டத்துக்குப் புறம்பானதாக்கியது; எனவே, ஸ்காட்டிஷ் எபிஸ்கோப்பியர்கள் யாகோபியர்களாயினர்; தங்களை மீட்பதற்கு ஓர் எதிர்ப்புரட்சி தோன்றுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இதுதான் இங்கிலாந்தின் அரசியலுக்கும் ஸ்காட்லந்தின் அரசியலுக்கு மிடையிலான அடிப்படை வேற்றுமை. வடக்கு அரசாகிய ஸ்காட்லந்தின் சமூக வாழ்வையும் உறவுகளையும் இது தீவிரமாகப் பாதித்தது.

எபிஸ்கோப்பியக் குடும்பங்களைக் காட்டிலும் பிரஸ்பிடீரியக் குடும்பங்களில் குடும்பக் கட்டுப்பாடுகளும் சமயக் கட்டுப்பாடுகளும் அதிகக் கடுமையாக இருந்தன; யாகோபியக் குடும்பங்களில் வழக்கமாகவே அதிக மகிழ்ச்சியும் சுதந்திரமும் நிலவின. ஆயினும், ஆழ்ந்த பிரஸ்பிடீரியப் பக்தியும், சமுதாயக் கடமை பற்றிய தீவிரமான உணர்வும் கூட, நிறைய மது அருந்துதலையும் குதூகலத்துடன் விருந்தோம்புதலையும் ஆழ்ந்த நூலறிவையும் பரந்த மனப்போக்கையும் கொண்டிருந்த கல்லோடன் ஃபோர்பெஸுக்கு (Forbes of Culloden) ஒரு தடையாக விளங்கவில்லை. ஆன் அரியணையேறியபொழுது பிரஸ்பிடீரியர்களின் பாரிஷ் மதாலயத்திலும் எபிஸ்கோப்பியர்களின் தொழுகைக் கூடங்களிலும் பெரும்பாலும் ஒரே மாதிரியான சங்கீத வாசிப்பு, உபதேசம், வழிபாடு ஆகியவை நடைபெற்றன. அவரது ஆட்சியின் பின்பாதியில்தான் வழிபாட்டு நூலானது (Prayer Book) தொழுகைக் கூடங்கள் சிலவற்றில் நுழைந்தது. திருச்சபை நிர்வாகம் தவிர வேறு எந்த விதத்திலும் இவ்விரு பிரிவினருக்கு மிடையில் கோட்பாட்டில் வேற்றுமை இல்லை. திருச்சபை நிர்வாகம் குறித்த வேறுபாடும் மிக மிகக் குறைவு; ஏனெனில், எபிஸ்கோப்பியர்களுக்கும் கூட பிரஸ்பிடெரிகள் உண்டு; சித்திரவதை முறைகளையும், ஒழுக்க நெறிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தையும் கொண்ட கெர்க் கூட்டத் தொடர்களும்கூட அவர்களுக்கு உண்டு.

எனவே, அரசியல் துறையில் மட்டுமே பிளவு தீவிர மானது; பொதுவான ஸ்காட்டிஷ் மனப்போக்கு, நாகரிகம் ஆகியவற்றின் அடிப்படையை அது எவ்விதத்திலும் பாதிக்க வில்லை. சிந்தனை உரிமையானது ஷாபஸ்பரி, போலிங் புரோக் ஆகியோரின் நாட்டிலிருந்து ஹ்யூமின் நாட்டுக்கு இன்னும் பரவவில்லை. திரித்துவம் (Trinity) பற்றியும் பைபிள் பற்றியும் தான் ஐயங்களை வெளியிட்டதற்காக ஒரு எடின்பரோ மாணவன் வில்லியம் மன்னர் காலத்தில் தூக்கிலிடப்பட்டான்; இதையே அவன் இலண்டன் காப்பி விடுதி ஒன்றில் செய்திருந்தால் எரிச்சலோடு அவனைச் சிலர் கண்டித்திருப்பர்; அவ்வளவுதான்.

கிட்டத்தட்ட எல்லா ஸ்காட்டிஷ் குடும்பங்களும், சிறப்பாக எல்லாக் கனவான்களும் பாரிஷ் மதாலயத்துக்கு அல்லது எபிஸ்கோப்பிய தொழுகைக் கூடத்துக்குத் தவருமல் சென்றனர். இவ்விரு இடங்களிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான ஆன்மிக மருந்தே அளிக்கப்பட்டது. வறுமையும் சமயப் பூசலும் சேர்ந்து தேசிய ப் பண்பை உருவாக்கின; தீவிர அரசியல் பிளவுகள் மங்கிப்போயின; சீலியாட் மலைகளுக்குத் தெற்கிலிருந்த செல்வம் படைத்த, கட்டுப்பாடுகளற்ற நாகரிகத்துக் கெதிராக எல்லா ஸ்காட் லந்தியர்களும் மனத்தாலும் சமய ஒழுக்கத்தாலும் ஒன்று பட்டனர். ஆன் ஆட்சியின் இறுதியில் அடிசனும் ஸ்டீலும் நடத்திவந்த 'Spectator' பத்திரிகையை எடின்பரோ சீமாட்டி களும் கனவான்களும் ஆவலோடு படித்தனர்; இவ்வாறு தெற்கத்திய பிரிட்டன் வடக்கை நோக்கித் தனது அறிவுத் துறைப் (intellectual) படையெழுச்சியைத் துவக்கியது. ஐக்கியத்துக்குப் (Union) பிறகு இத்தகைய செல்வாக்குப் பெருகியது.

அக்காலத்திய ஸ்காட்டிஷ் லேர்டுகள் தங்களது பிள்ளை களைக் கிராமப் பள்ளிகளுக்கே அனுப்பினர்; இதனால் தேசத் தின் அறிவுத்துறை ஒற்றுமையும், பல்வேறு வகுப்புக் கிடை யிலான நல்லுறவுகளும் வலுப்பெற்றன. ஒரு ஸ்காட்டிஷ் கனவானின் பிள்ளையை ஓர் ஆங்கிலேயப் பொதுப் பள்ளிக்கு (Public School) அனுப்புதல் என்பது எண்ணிக்கூடப் பார்க்க முடியாதது; இதற்குக் காரணம் சிக்கனம், நாட்டுப்பற்று. கிராமப் பள்ளிக் கல்வியானது நாட்டின்மீதும், நாட்டின் இயற்கை யழகின்மீதும் பற்றுதலை அதிகரித்தது. இதன் விளைவாகத் தனது தந்தையின் பண்ணையை நிர்வகிக்கும் காலம் வந்ததும் ஓர் இளம் லேர்டு, தன்னோடு முன்பு

பள்ளித் தோழர்களாக இருந்த குத்தகைக் குடிகளிடம் (tenants) பரிவோடு நடந்துகொண்டான். வளமான ஸ்காட்டிஷ் மொழி; நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள் ஆகியவை எல்லா மக்களுக்கும் பொதுச் சொத்து; மேல் வகுப்பினருங்கூடப் பொது மக்களின் அம்மொழியைப் பேசக் கூசியதில்லை. இதனால்தான் இரு தலைமுறைகட்குப் பிறகு, பர்ன்ஸும் ஸ்காட்டும் வாழ்ந்த காலத்தில் ஸ்காட்லந்தின் கவிதைகளும் பழங்கதைகளும் நாட்டுக்கு வெளியே பரவி, ஸ்காட்லந்தைவிடவும் பின்தங்கியிருந்த நாடுகளில், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையில் ஒரு பொதுப் பண்பாடு இல்லாத நாடுகளில், மக்களின் மனத்தை ஆட்கொண்டன. இங்கிலாந்தைவிடவும் அதிகமாக நிலமானிய முறை ஸ்காட்லந்தில் நிலவியது; அதே சமயம் சமத்துவமும் அங்கு அதிக அளவில் நிலவியது. சமுதாய அமைப்பில் வகுப்பு வேறுபாடுகள் திட்டவட்டமாக வரையறை செய்யப்பட்டிருந்தாலும்கூட, அவ்வகுப்புகளுக்கிடையில் நிலவிய பேச்சுச் சுதந்திரம் வியக்கத்தக்கது; இதற்குக் காரணம், அவர்கள் அனைவரும் பள்ளியில் ஒரே பெஞ்சின்மீது அமர்ந்து கல்வி பயின்றவர்கள்; அவர்களது தந்தைகளோ தோளோடு தோளாகக் குதிரைச் சவாரி செய்து சுற்றியவர்கள்.

ஆயினும், ஆனின் காலத்தில் எந்தவிதமான இலக்கிய, அறிவியல் சாதனையையும் உலக அரங்கில் ஸ்காட்லந்து இயற்றவில்லை. அதன் வறுமை அவ்வளவு கொடியது; அதன் சமயம் அவ்வளவு குறுகியது. ஆயினும், எதிர்கால வெற்றிக்கான விதைகள் ஊன்றப்பட்டுவிட்டன; அதே வறுமையும் சமயமுமே தேசத்தின் மனத்தையும் தன்மையையும் உருவாக்கிக்கொண்டிருந்தன. பிரஸ்பிடீரியர்கள் என்று ஸ்காட்லந்தியர்களை வெறுத்த ஸ்விஃப்ட்கூட, ஆங்கிலேய இளைஞர்களைவிட ஸ்காட்லந்தியர்கள் நல்ல முறையில் கல்வி பயிற்றப்படுகிறார்கள் என்பதை ஏற்கெனவே ஒப்புக்கொண்டுவிட்டார்; அதே சமயம் டீஃபோ,

> 'அறியாமையில் உழல்கின்ற, கல்வியறிவில்லாத கனவான்களை நீங்கள் காணமுடியாது. அதுமட்டுமன்று, படிக்கவோ எழுதவோ தெரியாத ஒரு வேலைக்காரனைக்கூட ஸ்காட்லந்தில் நீங்கள் சாதாரணமாகப் பார்க்க முடியாது'

என்று எழுதினார். இதில் ஓரளவு மிகையிருக்கலாம்;

ஆயினும், பொதுவாக இது உண்மை. 1705-ல் கல்லோடன் போர்பெஸ் தனது சட்டப் படிப்பை முடிப்பதற்காக லேடன் (Leyden) பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அங்கு இளம் ஆங்கிலேய ஊதாரிகள் 'குடித்துக் கும்மாளமடித்துத் தீயொழுக்கத்தில் ஈடுபட்டு' ஊர்சுற்றிப் பார்ப்பதையும், 'உள்ளூர் மக்கள் காட்டும் பொறுமைக்கும் பெருந்தன்மைக்கும் மாறுக இவர்கள் வெறுப்புடனும் அறியாமையுடனும் நடந்துகொள்வதையும்' இவர் கண்டார்; அதே சமயம் தன்னூட்டிலிருந்து சென்றவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்வதையும் சுறுசுறுப்புடன் செயலாற்றுவதையும் கண்டார்.

ஆயினும், நவீன அளவுகோலைக்கொண்டு பார்த்தால் ஸ்காட்லந்தின் பள்ளிக் கல்வி படுமோசமான நிலையிலிருந்தது. 'எதிர்காலத் தேவையை உணர்ந்த பக்தியுள்ளம் படைத்த' ஜான் நாக்ஸால் (John Knox) கல்விக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட திருச்சபை மானியங்கள் சமயச் சீர்திருத்தத்தின் (Reformation) பொழுது பிரபுக்களால் திருடிக் கொள்ளப்பட்டன. அப்பொழுதிருந்து மக்களுக்குக் கல்வி புகட்ட முயன்றுவந்த திருச்சபையானது பணம் போதாமல் சிரமப்பட்டது; கனவான்களும் கஞ்சத்தனமான நிலச் சொந்தக்காரர்களும் பள்ளிப் பணத்தை நிர்வகித்துவந்தனர். ஆயினும், இவர்கள் செய்த உதவி மிக மிகக் குறைவு. ஒவ்வொரு பாரிஷிலும் நல்ல பள்ளிகள் நிறுவப்பட வேண்டுமென்றும், பாரிஷ் வரி மூலம் அவை நடத்தப்பட வேண்டுமென்றும் 1633இலும் 1696இலும் இயற்றப்பட்ட சிறந்த சட்டங்கள் விதித்தன. ஆனால், உண்மைநிலை வேறு மாதிரி இருந்தது. ஆனின் ஆட்சியில் பல பாரிஷ்களில் பள்ளிகளே இல்லை; அப்படியே ஒரு பள்ளி எங்காவது இருந்தாலும் அது இருண்ட, அசுத்தமான குகையாக இருந்தது. ஆசிரியருக்குப் பட்டினிச் சம்பளமே கொடுக்கப் பட்டது. ஃபைபில் (Fife), ஆன் ஆட்சியின் இறுதியில் மூன்று ஆண்களில் இரண்டு பேருக்கும், பன்னிரண்டு பெண்களில் ஒருவருக்குமே கையெழுத்துப் போட்டுத் தெரிந்திருந்தது; கேலோவேயில் (Galloway) யாருக்குமே படிக்கத் தெரியாது.

போதிய பள்ளிகள் இல்லாமற் போனலும், இருந்த சில பள்ளிகளிலும் இலத்தீன் மொழி பெரும்பாலும் சொல்லிக் கொடுக்கப்பட்டது; நகரங்கள் நடத்திவந்த பர்க் (Burgh) பள்ளிகளில் அது நன்கு சொல்லித்தரப்பட்டது. கிராமப் பள்ளிகளும் பர்க் பள்ளிகளும் வெறும் துவக்கப் பள்ளிகள்

அல்ல; கல்லூரியில் படித்த ஆசிரியர்கள் வயதில் கூடிய கெட்டிக்கார மாணவர்கள் சிலரைப் பல்கலைக் கழகத்துக்காகத் தயார்செய்து வந்தனர். அரைப் பட்டினி ஆசிரியர்களுக்குப் புத்தகங்கள் வாங்கப் பொருள் கிடையாது; ஆயினும் அவர்களிடம் விஷயம் இருந்தது. அவர்கள் மக்கட்தொகையில் ஒருபகுதிக்கே கல்வியறிவூட்டினர்; ஆயினும், ஸ்காட்டிஷ் மக்கள்சமூகத்தின் தரமான பகுதி அதுதான்; இச் சிறுவர்கள் பெருந்தியாகங்கள் புரிந்து கல்விகற்றனர்; தாங்கள் பெற்ற கொஞ்சம் படிப்பையும் கூட, ஐரோப்பாவின் வேறு எந்த தேசத்தைக் காட்டிலும், சிறந்த முறையில் பயன்படுத்தினர். இவ்வாறுக இறுதியில் தம்மையும் தமது தாய்நாட்டையும் நீர்த்ரிக வாழ்வின் உயரமான முகடுகளுக்கு உயர்த்தினர்.

அந் நூற்றுண்டு விடிந்தபோது ஸ்காட்லந்தின் பல்கலைக் கழகங்கள் ஒரு மந்தமான நிலையில் இருந்தன. ஆனல், அந் நூற்றுண்டின் இறுதியில், கல்லூரி முதல்வர் (Principal) இராபர்ட்சன், ஆடம்ஸ்மித், எடின்பரோ தத்துவ அறிஞர்கள் (Edinburgh philosophers) ஆகியோர் செங்கதிர் பரப்பினர். உள்நாட்டு அரசியலில் கொந்தளிப்பு நிகழும் ஒரு காலத்தில் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் கல்விநிலையங்கள் வளர்ச்சி பெறுவதற்கான சூழ்நிலை இருக்காது. சார்லஸ் II-ன் எபிஸ்கோப்பிய ஆட்சியானது, கற்றறிந்த ஸ்காட்லந்தியரில் பாதிப்பேரைக் கல்வித் துறையிலிருந்து ஒதுக்கிவைத்தது. 1688ஆம் ஆண்டுப் புரட்சியானது மற்றப் பாதியில் பெரும் பான்மையினரை அகற்றியது; கல்வியை விட்டுவிட்டு மத வெறியைக் கற்றுக்கொண்ட சிலர் இவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டனர். அரசாங்கத்தின் படைகள் தங்களைக் கண்டுபிடித்துத் தாக்குமோவென்று அஞ்சி, ஊருக்கு அப்பால் இரகசிய மதக்கூட்டங்கள்கூடி அங்குச் சமயவெறியை இவர்கள் போதுமான அளவு கற்றுவைத்திருந்தனர்.

பிரபுக்கள், லேர்டுகள், மதகுருக்கள், குடியானவர்கள், மெக்கானிக்குகள் முதலியோரது பிள்ளைகள் எல்லோரும் படித்தார்கள். இவர்களில் கிட்டத்தட்ட எல்லோருமே மானியச் சொத்துடைய மதகுருமாராக விரும்பினர்; ஆனல் அத்தகைய பதவிகளின் எண்ணிக்கை குறைவு. சிறுசிறு உபகாரச் சம்பளங்கள் ஏராளமான எண்ணிக்கையில் வழங்கப்பட்ட காரணத்தாலும், ஸ்காட்டிஷ் விவசாயியின் அறிவுத் தாகம் காரணமாகவும் மதகுருமார் தொழிலில் அளவுக்கு

மதிகமான பேர் ஈடுபட்டிருந்தனர்; படித்தவர்கட்கு வேறு எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாத அக்காலத்தில் இது இயற்கையானதுதான். 'தகுதிபெற்றும் பதவி கிடைக்காத மதகுரு', லேர்டின் குடும்ப ஆசிரியர், கட்டைச் சம்பளம் வாங்கிய பள்ளி ஆசிரியர் இவர்களது வாழ்க்கை மிகவும் கடினம். ஆனால், பாரிஷ் மதகுருப்பதவி கிடைத்துவிட்டால், அக்கால வாழ்க்கைத்தரத்தின்படி ஓரளவு திருப்தியுடன் வாழலாம். ஆங்கிலேயக் கன்பார்மிஸ்ட் அல்லாதாரின் தலைவரான கலாமி 1709-ல் வடபிரிட்டனிலிருந்த பிரஸ்பிடீரியர் களைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து இவ்வாறு எழுதினர்:

'ஸ்காட்லந்து திருச்சபையின் மானியம் வாங்கும் மதகுருமார்களைப்பற்றிக் கவனிப்போம். இங்கிலாந்தில் நிறுவப்பட்ட திருச்சபையின் மதகுருமார்கள் பலரைப்போல் இவர்களுக்கு அவ்வளவு அதிக வருவாய் கிடையாது. ஆயினும் இவர்கள் அனைவரும் திறமை படைத்தவர்கள்; எனவே சுலபமாக, வசதியாக, பிறரது வெறுப்புக்கு ஆளாகாமல் இவர்களால் வாழமுடிகிறது.'

இந்தப் பதவியை எவ்வாறுவது பெறவேண்டுமென்பதற்காக, ஸ்காட்டிஷ் இளைஞர்கள் பல்கலைக் கழகத்தில் சிரமப்பட்டுப் படித்தனர்; இவர்கள் தங்கிப்படித்த வீட்டின் மச்சு அறையில் சுவரின்மீது சார்த்திவைக்கப்பட்டிருந்த ஓட்ஸ் மாவு மூட்டைதான் இவர்களது பல்கலைக்கழக வாழ்வுக்கு ஆதாரமாக இருந்தது. விடுமுறை நாட்களில் இந்தக் கிராமப் புறத்து மாணவன் காலிக்கோணியுடன் தன்ஊருக்கு நடந்தான்; தனது தந்தையின் 'புழைக்கடை வயலில்' ('Infield') விளைந்த ஓட்ஸ் மாவு, திரும்பி வருகையில் இவன் முதுகில் கனத்தது.

ஸ்காட்லந்துப் பண்ணைகளில் வசித்த குடியானவர்கள் தங்களது லேர்டுகளோடு நெடுங்காலமாகவே அன்னியோன்னியமாகப் பழகிவந்தனர்; லேர்டுகள் தமது வயல்களில் தினந்தோறும் குதிரைமீதேறிச் செல்லும்போது, ஒளிவு மறைவு இல்லாமல் வாய்விட்டுப் பேசும் ஸ்காட்லந்தியரின் வசைகளையும் கேட்டனர். ஆயினும், நிலமானிய முறையிலும் பொருளாதார முறையிலும் அடிமைநிலையிலேயே லேர்டுகளின்கீழ்க் குடியானவர்கள் வாழ்ந்தனர். இத்தகைய உறவானது ஆங்கிலேயப் பிரயாணிகளுக்குப்

புதியதாகத் தோன்றியது. தமது குத்தகைக் குடியானவர்களின்மீது லேர்டுகளுக்கு நீதியதிகாரம் இருந்தது; சில விவகாரங்களில் சிவில் அதிகாரமும், வேறு சிலவற்றில் சிவில் கிரிமினல் அதிகாரங்களும் இவர்களுக்கு இருந்தன. இங்கிலாந்திலோ இத்தகைய நிலமானிய நீதிமன்றங்கள் மறைந்து நெடுநாட்களாகி விட்டன. அரசாங்க நீதிமன்றத்தின் பாதுகாப்பிலிருந்து ஸ்காட்டிஷ் குடியானவர்களை நீக்கி, அவர்களது உடலையும் பொருளையும் யாகோபிய எஜமானர்களுக்கு உடைமையாக்கிய இந்த முறை காரணமாக, புராடஸ்டண்ட் வம்சத்தின் ஆட்சியேகூட அழிந்துவிடலாம் என்று இலண்டனில் ஆட்சியாளர்கள் கருதினர்.

குடியானவர்கள் தங்களது நிலங்களை ஓராண்டுக் குத்தகைக்குப் பயிரிட்டனர்; லேர்டுகள் விரும்பினால் ஓர் ஆண்டுக்குப் பிறகு ஒரு குடியானவனை விரட்டிவிடலாம். இதனால் லேர்டை அல்லது அவனது பிரதிநிதியை இவர்கள் அண்டிப் பிழைக்க வேண்டியிருந்தது; இந்த முறை காரணமாகத் தாம் உழுதுபயிரிடும் நிலத்தில் அபிவிருத்திகள் செய்ய வேண்டும் என்ற எண்ணமே குத்தகைதாரர்களிடம் எழ வழியில்லை. தனது குத்தகைக் குடியானவர்கள் பயிரிட்ட நிலத்தில் தன்பணத்தை முதலீடுசெய்ய லேர்டும் விரும்பவில்லை. அப்படியே அவர் விரும்பினாலும்கூட அவருக்கு வசதி போதாது. 500 பவுன் குத்தகைப்பணம் குபேர சம்பத்து என்று ஸ்காட்லந்தில் கருதப்பட்டது; 50 பவுன் வெகு சாதாரணம்; 'பானட் தொப்பியணிந்த பல லேர்டுகள்' (bonnet lairds) தமது 'புழைக்கடை நிலத்தைப்' பயிரிட்டும் 20 பவுன் குத்தகை பெற்றும் குடும்பங்களை நடத்தினர். ஆங்கிலேயக் கனவான்களுக்கோ ஸ்காட்லந்துக் கனவான்களைவிடப் பத்துமடங்கு அதிக வரும்படி வந்தது. அதுமட்டுமின்றி ஸ்காட்லந்தில் குத்தகையில் பாதிக்கும் அதிகம், பொருளாகச் செலுத்தப்பட்டது; ஆடு, கோழி, ஓட்ஸ் மாவு, பார்லி, விறகு முதலியவைகளைக் குத்தகைதாரர்கள் மேனர் இல்லத்துக்குக் கொண்டு வந்து கொடுத்தனர். வண்டிகளில் கொண்டுவரவில்லை; அவர்களுக்கு வண்டிகள் ஏது? சப்பைக் குதிரைகளின் மீதேற்றிக் கொண்டுவந்தனர். புருக்கூண்டில் வளர்ந்து வந்த புருக்களும் அவனது சமையலறைத் தேவைகளை ஓரளவு பூர்த்திசெய்தன; இவை, சுற்றியிருந்த நிலங்களில் மேய்ந்து, குத்தகைதாரர்களின் சொற்ப தானியக்கதிர்களைத் தமது சதையாக மாற்றி லேர்டின் சாப்பாட்டு மேசையில் மணம்வீசின. இடைக்காலத்து இங்கிலாந்தின் உட்

குடியைப் போல் (villein) ஸ்காட்டிஷ் குடியானவனும் தனது லேர்டின் 'புழைக்கடை நிலத்துக்கு' எருவிட்டு, விதைத்து, அறுவடைசெய்ய வேண்டியிருந்தது; பருவநிலை மோச மடைந்திருந்த நாட்களில் அவன் பெரும்பாலும் இவ்வாறு வேலை செய்தான்; இதனால் அவன்விளைச்சல் பாழ்பட்டது; வரப்போகும் ஆண்டில் தன் குடும்பம் பட்டினியால் வாடுவதைத் தடுக்க அவனால் ஒன்றும் செய்யமுடிய வில்லை.

இந்நிலையில் ஆனின் ஆட்சியில் ஸ்காட்லந்தின் வயல் வெளியில் பத்தில் ஒன்பதுபாகம் வேலியிடப்படாமல் இருந்ததில் வியப்பொன்றுமில்லை. மாடுகள் நாள் முழுவதும் நீண்ட கயிற்றில் கட்டப்படவேண்டும்; அல்லது ஆள் வைத்து மேய்க்கப்பட வேண்டும். இரவில் கொட்டகையில் அடைக்கப்பட்டன. லோத்தியன் (Lothians) பகுதியிலிருந்த பணக்கார நிலப்பிரபுக்கள் மட்டுமே தங்களது நிலங்களைச் சுற்றிக் கல்மதில்களை எழுப்பத் தொடங்கியிருந்தனர். உயிர் வேலிகள் வெகு அருமை; தானியங்களைத் தின்றழிக்கும் பறவைகளுக்கு இவை புகலிடமாக விளங்கின என்று நம்பப் பட்டதால், இவைகளை எழுப்பவேண்டுமென்று யாரும் விரும்பவில்லை. மரங்கள்பற்றியும் இதைப் போன்றதொரு சந்தேகம் இருந்தது. எனவே, சின்னஞ்சிறு கன்றுகள் கால்நடைகளால் மேயப்படுவதுமின்றி, குடியானவர்களாலும் வேண்டுமென்றே ஒடித்துத் தள்ளப்பட்டன. தண்டனைகள் விதிக்கப்படும் என்ற அறிவிப்பினாலும் பயன் ஒன்றுமில்லை. மேலும், அவர்கள் அழிப்பதற்கும் அங்கு மரம் எங்கு இருந்தது? பண்ணையில்லங்களையும் மதாலயங்களையும் சுற்றி மட்டுமே சில மரங்கள் இருந்தன. பண்டைக் காடுகள்– இராபர்ட் புரூஸின் (Robert Bruce) இறுதிக் கட்டளைகளின்படி இங்குதான், ஆங்கிலேயப் படையெடுப்பின்போது மக்கள் புகலிடம் தேடினர்–இப்பொழுது அழிந்துவிட்டன. காற்றைத் தடுப்பதற்கும் மார்க்கெட்டுக்கு வேண்டிய மரத்தை வளர்ப் பதற்கும் மரங்கள் நடும் நவீன இயக்கமானது அப்பொழுது இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருந்தது. ஸ்காட் லந்தின் நிலப்பரப்பானது அன்றிருந்ததைப்போல் அதற்கு முன்போ அல்லது பின்போ எப்பொழுதுமே அவ்வளவு தூரம் மரங்களின்றி, வெறுமையாகக் காட்சியளித்ததில்லை. அங்கும் இங்கும் சிலவிடங்களில், குறிப்பாகக் கிளாட்சைடில், சின்னஞ்சிறு காடுகள் அல்லது மரக்கூட்டங்கள் காணப் பட்டன; ஆனால் யாரும் போகாத தூரத்துவடக்குப் பகுதி

யில் பழங்காலத்துக் காடுகள் ஹைலந்துக் காற்றுக்குத் தமது கிளைகளையும் இலைகளையும் அசைத்து இன்னும் சலசலத்தன. அதேபோல் லோலந்திலிருந்த சிறு பள்ளத்தாக்குகளும், ஓடைகளின் உயர்ந்த செங்குத்தான கரைகளும் எஞ்சியிருந்த சில பிர்ச், ஆல்டர், குள்ள ஓக் மரங்களை இன்னும் தம் குளுமையால் காத்துவந்தன; ஒரு காலத்தில் நிலமுழுவதும் விரிந்து பரந்திருந்த இவைகளின் இன்றையநிலை இரங்கத் தக்கது.

நிலப்பரப்பு எவ்வாறு வெறுமையுற்றுக் காணப்பட்டதோ, விவசாய அபிவிருத்திக்கான முறைகள் எவ்வாறு ஒன்றுமே இல்லையோ, அதே நிலையில்தான் குடியானவர்களின் வீடு களும் இருந்தன. ஆன் அரசியின் காலத்திய ஸ்காட்டிஷ் குடியானவனின் வீட்டை நன்கு கற்பனைசெய்து பார்க்க வேண்டுமானால், பிற்காலத்திய அழகிய கல்வீடுகளை நாம் மறந்துவிட்டு, மேற்குஅயர்லாந்தின் குடிசைகளைப் போல் ஒன்றை நினைத்துக்கொள்ள வேண்டும். அதில் பெரும் பாலும் மாடிகள் இல்லை; ஒரேஒரு அறையே இருந்தது. கட்டு வதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் கட்டட அமைப் பும் வறுமையின் அளவும் இடத்துக்கிடம் மாறுபட்டன; ஆனால், புல் வளர்ந்த மதில்கள் அல்லது பூச்சுவேலை செய்யப்படாத மதில்கள் எங்கும் காணப்பட்டன; புல் அல்லது வைக்கோல் வேயப்பட்டிருந்தது. புகைபோக்கி களும் கண்ணாடி சன்னல்களும் வெகு அருமை; தரை என்பது வெறும் மண்தரைதான்; பல குடிசைகளில் ஒரே அறையில் ஒரு பக்கத்தில் கால்நடைகளும் மறுபக்கத்தில் மனிதர்களும் குடியிருந்தனர்; இடையே தடுப்பு ஒன்றும் கிடையாது. நெருப்பைச் சுற்றிக் கற்கள்மீது அல்லது மண்திம்மைகள் மீது குடும்பத்தினர் அமர்ந்தனர்; உயரே கூரையில் ஒரு துளை வழியாகப் புகை சிறிது வெளியேசென்றது. வடிகால் வசதி யற்ற நிலத்தில் அவர்கள் வேலைசெய்தனர்; அது இன்னும் ஓரளவு சதுப்பாகவே இருந்தது; எனவே, ஈர ஆடையுட னேயே வீடு திரும்பினர்; அங்கும் மாற்றுக்கு வேறு ஆடை கிடையாது. இதன் விளைவாகக் குளிர்காய்ச்சலும் கீல்வாதமும் இவர்களது ஆயுளைக் குறைத்தன.

அங்கேயே நெய்து தைக்கப்பட்ட உடைகளை ஆண் களும் பெண்களும் அணிந்தனர்; இவை பெரும்பாலும் நெச வாளியின் குடிசையிலேயே நூற்கப்பட்டு, சாயம் தோய்க்கப் பட்டன. குழந்தைகளும் பெரியவர்களும் பெரும்பாலும்

வெறுங்காலுடனேயே வெளியில் சென்றனர். அகன்ற, தட்டையான, வட்டமான, நீலக்கம்பளத்தால் செய்யப்பட்ட பானெட் தொப்பியை ஆண்கள் அணிந்தனர்; உலகத்தின் கண்களில் ஸ்காட்லந்தியரை வேறுபடுத்திக் காட்டிய தலையணி இதுதான். லேர்டுகளும் மதகுருமார்களும் மட்டுமே ஃபெல்ட் (felt) தொப்பி யணிந்தனர்; அவர்களும்கூட அங்கேயே நெய்து தைக்கப்பட்ட உடைகளையே அணிந்தனர். கோவிலிலும் சரி, வெளியிலும் சரி மதகுரு கருப்பு அங்கி அணியாததைக் கண்டு தென்பிரிட்டனிலிருந்து வந்த டிஸ்ஸென்டர்கள் வியப்புற்றனர்; பொதுமக்களைப் போல் கழுத்துக்குட்டை, வண்ணக்கோட்டு, வீட்டில் நூற்ற கம்பளத்தாலான இடுப்புக்கோட்டு ஆகியவை அணிந்தே அவர்கள் வெளியில் சென்றனர்; தமது பிரசங்கங்களை நிகழ்த்தினர்.

சாக்சானியர் காலத்துக்கு முற்பட்ட இங்கிலாந்தைப் போல, ஸ்காட்லந்தில் சிறந்த விளைச்சலுக்கேற்ற நிலங்கள் பெரும்பகுதியும் இன்னும் சதுப்பாகவே விளங்கி, பள்ளத்தாக்குகளை அடைத்துக் கிடந்தன; அதே சமயம் வறண்ட குன்றுகளின் சரிவுகளில் குடியானவர்கள் எலும்பொடிய உழுதனர். பண்டையகாலத்துப் பளுமிக்க கலப்பைகள், கொழுவைத் தவிர எல்லாம், மரத்தாலேயே செய்யப்பட்டவை; அதுவும் குடியானவர்களாலேயே செய்யப்பட்டவை. எட்டு அல்லது பத்துச் சின்னஞ்சிறு காளைகள் அவைகளைக் குன்றுச்சரிவுகளில் இழுத்துச்சென்றன; ஐந்தாறு ஆவேசமிக்க குடியானவர்கள் கூச்சலிட்டு, அடித்து அவைகளை ஓட்டினர். மாடும் மனிதனும் சேர்ந்து நடத்திய இந்த ஊர் வலம் மாலையில் முடிந்தபொழுது அரை ஏக்கர் நிலம் நன்றுகச் சுரண்டப்பட்டிருக்கும்.

குடியானவர் சிலர் ஒன்றுசேர்ந்து தங்களது நிலங்களை உழுவது வழக்கம்; ஒவ்வொரு குடியானவனும் இறுதியில் ஒரு 'துண்டின்' வருவாயை அடைந்தான்; ஒவ்வொரு அறுவடையின்பொழுதும் வெவ்வேறு 'துண்டு' அவனுக்கு ஒதுக்கப்பட்டது. இவ்வாறுதான் அவர்கள் லாபத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். 50 பவுன் குத்தகையுடைய ஒரு பண்ணையை ஐந்தாறு குத்தகைக்காரர்கள் பயிரிட்டனர்; ஒவ்வொரு ஆண்டும் நிலமானது அவர்களுக்கிடையில் திருவுளச் சீட்டு முறையில் பங்கீடு செய்யப்பட்டது. இம்முறையினாலும், நிச்சயமற்ற ஆண்டுக் குத்தகைமுறையினாலும் விவசாய

அபிவிருத்தி என்பது இயலாமற் போயிற்று. இந்தக் கூட்டுக் குத்தகைதாரர்களுக்கிடையில் ஏற்பட்ட சண்டைகளால்—கேமரோனியர்களையும் (Cameronians) கெர்க் பிரிவாளர்களையும் (Kirk seceders) தோற்றுவித்த மூர்க்ககுணம் படைத்தவர்களும் இக் குத்தகைதார்களிடையில் இருக்கத்தான் செய்தனர்—பொதுவிவசாயம் பல வாரங்கள் தடைப்பட்டது. சோம்பேறிகளான அல்லது கபடு நிறைந்த தமது சகாக்கள் தூங்கியெழுந்து வரும்வரையில் சில சுறுசுறுப்பான குடியானவர்கள் காத்திருக்கவேண்டியிருந்தது.

மேலும், பண்ணையானது 'புழைக்கடை நிலம்' (infield) என்றும் 'வெளிக்கடை நிலம்' (outfield) என்றும் வேறு பிரிக்கப்பட்டிருந்தது. கிராமத்தின் வீடுகளுக்கருகிலிருந்த 'புழைக்கடை நிலத்தில்', கிடைக்கும் உரம் அனைத்தும் கொட்டப்பட்டன; குடிசைக் கூரையில் வேய்ந்திருந்த வைக்கோல் செத்தைகூட சில சமயங்களில் உரமாகப் போடப்பட்டது. அதே சமயம், மொத்தநிலத்தில் முக்கால்பகுதியான 'வெளிக்கடை நிலத்துக்கு' உரமே போடப்படுவதில்லை; அதில் ஆடுமாடுகள் எட்டு அல்லது பத்து ஆண்டுகள் அடுத்து மேய்ந்தன; பின்னர் ஒரிரண்டு ஆண்டுகள் பயிரிடப்பட்டு, மீண்டும் மேய்ச்சல்வெளி யாயிற்று. ஆங்கிலேயத் திறந்த வயல் விவசாயத்தில் நிலவிய மூவகை வயல்முறையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இம்முறை மிகமிக நஷ்டமானது; ஆயினும், இதைப் போன்றதொரு முறை மேற்கு இங்கிலாந்து, வேல்ஸ், கார்ன்வால், கிழக்கு ரைடிங் ஆகிய வற்றின் சில பகுதிகளிலும் நிலவியது.

ஸ்காட்லந்தில் ஓட்ஸும் பார்லியும் விளைந்தன. ஓட்ஸ் மக்களின் பிரதான உணவுத்தானியம். ஸ்கோன் (scones) அடையும் ஸ்காட்டிஷ் ஏலும் செய்யப் பார்லி பயன்பட்டது. ஹைலந்திலிருந்து அந்தப் பொல்லாத விஸ்கி வந்துசேரும் வரை லோலந்துமக்கள் மிகவும் விரும்பி அருந்திய உடல் நலத்துக்கேற்ற நல்ல பானம் இந்த ஏல்தான். கேல்கோசு, பட்டாணி, அவரை முதலியவை காய்கறிக்காகப் பயிரிடப்பட்டன. ஆயினும் கால்நடைகளின் தீவனத்துக்காக டர்னிப், புற்கள் ஆகியவை பயிரிடுதல் கேள்விப்படாத ஒன்று. சில தோட்டக்காரர்கள் உருளைக்கிழங்கு பயிரிட்டனர்; மக்களின் உணவு என்ற முறையில் அன்று; லேர்டுகளின் இறைச்சியைக் குளிர்காலத்தில் பக்குவப்படுத்த அது தேவை என்பதால்.

மக்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தப் பத்தாம் பசலி விவசாய முறையின் கொடிய ஆதிக்கத்தினால் பஞ்சத் துடனேயே அவர்கள் எப்பொழுதும் வாழவேண்டியநிலை ஏற்பட்டது. இம்முறையில், விதைத்த தானியத்துக்கு விஞ்ந்த தானியம் ஒன்றும் கூடுதலில்லை. அவ்வாறு அறு வடையான சொற்ப தானியமும், ஒரு பழமொழி சொல்வது போல 'ஒன்று உலகுக்கு, ஒன்று விதைக்கு, ஒன்று லேர்டுக்கு' என்று செலவழிந்தது. லேர்டுகளும்கூட வறுமையின் இரும்புப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள இயல வில்லை; இவ்வாறிருக்க, தம் குத்தகைக் குடியானவர்களுக்கு மட்டும் அவர்கள் எவ்வாறு உதவ முடியும்? ஆயினும், இப் பொழுது புலர்ந்துகொண்டிருந்த புது நூற்றாண்டில் விவசாய முறையைப் புரட்சிகரமாக மாற்றியமைத்து, எல்லா வகுப் பினருக்கும் செழிப்புண்டாகும் வகையில் செயல்புரிந்தவர் கள் இதே லேர்டுகள்தாம்; ஐக்கியம் (Union) காரணமாக ஏற்பட்ட வாணிகஉறவுகளை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டதன் விளைவு இது.

வில்லியம் ஆட்சியின் கடைசி ஆறு ஆண்டுகளும் 'பஞ்ச ஆண்டுகள்' (dear years) என்று ஒவ்வொரு ஸ்காட்லந்துக்காரனாலும் நினைவுகூரப்படுகின்றன; அந்த ஆறு ஆண்டுகளிலும் பருவநிலைக்கோளாறு காரணமாகக் கதிர்கள் முற்றுமல் போய்விட்டன. வெளிநாடுகளிலிருந்து உணவுத்தானியம் வாங்கவும் பொருள் இல்லை. ஆகவே மக்கள் பட்டினி கிடந்து இறந்துபோயினர். பல பாரிஷ் களில் மக்கட்தொகை பாதியாக அல்லது மூன்றில் ஒன்றாகக் குறைந்துபோயிற்று. ஐக்கிய உடன்படிக்கை (Treaty of Union) விவாதிக்கப்பட்டு வந்தபொழுது இந்தக் கொடிய சோதனையிலிருந்து ஸ்காட்டிஷ் மக்கள் சிறிது சிறிதாக விடுபட்டுக்கொண்டிருந்தனர்; ஆனால், இந்தச் சோதனை வடபிரிட்டானியர்களின் கண்ணோட்டத்தில் ஒரு திரிபை ஏற்படுத்தி, மூடநம்பிக்கைகளை மேலும் வளர்த்து, அரசியல் உணர்வுகளில் ஒரு வெறித்தன்மையை ஊட்டியது; ஆங்கிலேயர் மீதிருந்த வெறுப்பு அதிகரித்தது. ஏனெனில், அன்பு மனமுடைய ஸ்காட்லந்தியர்கள் பட்டினியால் செத்துக்கொண் டிருந்தபொழுது அவர்கள் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்; உதவி செய் வதற்காக ஒரு துரும்பைக்கூட அசைக்கவில்லை; உதவி செய்வதற்கு மாறாக, டேரியன் திட்டத்தை (Darien

scheme) எதிர்த்ததன்மூலமாக ஸ்காட்லந்தியரின் துன்பங்களே மேலும் அதிகமாக்கினர். நல்லகாலமாக, வில்லியம் ஆட்சியின் பஞ்ச ஆண்டுகளுக்குப் பிறகு ஆன் ஆட்சியில் சில செழிப்பான ஆண்டுகள் வந்தன. ஆனால், ஐக்கியச் சட்டம் ஒருவாறுக நிறைவேற்றப்பட்ட பின்னர் 1709-ல் மீண்டும் மகசூல் குறைந்து பஞ்சம் ஏற்பட்டது. பண்ணைகளிலும் கிராமங்களிலும் மக்கட்தொகை குறைந்தது; பிச்சைக்காரர்கள் நிறைந்தனர். விவசாய முறைகள் அடியோடு மாற்றப்பட்டாலொழிய, ஒரேஓர் ஆண்டில் பருவக்கோளாறு ஏற்பட்டாலும் விளைவுகள் இதுபோலத்தான் இருக்கும்.

இந் நிலைமைகளில், உண்ணும் உணவை விட்டு விட்டால், விவசாயச் செல்வத்தின் முக்கிய ஆதாரங்களாக விளங்கியவை ஆடுமாடுகள்தாம். ஆட்டின் கம்பளம் நாட்டின் துணிஉற்பத்திக்குத் துணையாய் விளங்கிற்று; மேலும், ஆடுகளும் மாடுகளும் பெரும் எண்ணிக்கையில் இங்கிலாந்தில் விற்பனையாயின. கேலோவேயில் (Galloway) கால்நடை வளர்ப்புத்தொழில் செழித்தோங்கியது; ஆயினும் அவ்விடத்தில்கூட, சார்லஸ் IIஇன் ஆட்சியில் நிலவிய 'சித்திரவதைக் காலத்தில்' ஹைலந்தியர்களாலும், தாயன்புமிக்க அரசாங்கத்தின் மற்ற ஆட்களாலும் நடத்தப்பட்ட கொடிய அழிவுகளிலிருந்து கால்நடைகள் இன்னும் மீளவில்லை. 1705-ல் ஸ்காட்லந்து 30,000 மாடுகளை இங்கிலாந்தில் விற்பனைசெய்தது என்று கணக்கிடப்பட்டது; மாட்டின் வழக்கமான விலை ஒரு பவுனிலிருந்து இரண்டு பவுனுக்குள். ஸ்காட்டிஷ் லேர்டின் வருமானத்தில் கால்நடைவிற்பனையும் முக்கியமானதொன்று. அக்காலத்திய சின்னஞ்சிறு ஆங்கிலேய ஆடுமாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும்கூட ஸ்காட்டிஷ் ஆடுமாடுகள் மிகவும் சிறியவை. அவைகள் பெரும்பாலும் ஊர்ப் பொதுக்கரம்பு நிலங்களிலேயே மேய்ந்தன; வேலிகள் இல்லாததால் இரவு முழுவதும் கொட்டகைகளில் அடைத்தே வைக்கப்பட்டன. இங்கிலாந்தில் விற்கப்பட்டவை போக எஞ்சியவைகளில் பல, குளிர்காலம் வருமுன் மார்ட்டின்மஸ் சமயத்தில் கொல்லப்பட்டன; ஏனெனில், அவைகளின் தீவனத்துக்கு உலர்ந்த புல்லோ அல்லது கிழங்குப் பயிரோ கிடையாது. அடுத்த ஆறு மாதங்களில் உப்பிட்ட இறைச்சியையே கனவான்கள் உண்டனர்; ஆனால் ஆண்டு முழுவதிலும் ஒரு தடவைகூட

விவசாயிக்கு இறைச்சியுணவு கிடைப்பதில்லை. வசந்தம் மெதுவாக வந்ததும், குளிர்காலம் முழுவதும் இருளில் அடைபட்டு, வைக்கோலையும் கொதிக்க வைத்த தவிட்டையும் தின்று எலும்புந் தோலுமாய்ப் போய் விட்ட மாடுகள் தொழுவத்திலிருந்து மேய்ச்சலுக்கு வெளியே கொண்டுசெல்லப்பட்டன; அது ஒரு பரிதாபமான ஊர்வலம்; மூன்று நான்கு பேர் முன்னின்றிழுக்கப் பலர் பின்னிருந்து தள்ள மாடுகள் நகர்ந்தன. ஒவ்வோர் ஆண்டும் தவறாமல் நடந்த இந்தத் திருவிழாவுக்குத் 'தூக்குதல்' என்பது பெயர். எவ்வளவு பொருத்தம்!

எவ்விதத்தில் பார்த்தாலும் ஸ்காட்லந்தின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவு; ஆயினும், வில்லியத்தின் பஞ்ச ஆண்டுகளுக்குப் பின்னரும்கூட, கஷ்டச் சுமைகளால் மக்கள் மனமொடிந்து போகவில்லை. ஸ்காட்டிஷ் பொதுமக்கள் தர்மம் (alms) வாங்குவதைத் தவிர்க்கப் பெரிதும் முயன்றனர்; செல்வநிலையிலிருந்த இங்கிலாந்தில்கூட இதைக் காணமுடியாது. இவ்விரு நாடுகளிலும் இரவலர் சட்ட முறை (poor law system) வேறுவேறுனவை. இங்கிலாந்தில் எலிசபெத்தின் ஆட்சிதொட்டு, ஏழைகளைப்பேணுவது சமூகத்தின் பொறுப்பு; அவர்கள் கட்டாய பாரிஷ் கட்டணங்கள் (Parish rates) மூலம் பேணப்பட்டனர். ஆன் ஆட்சியின் இறுதியில் ஒவ்வோர் ஆண்டும் இந்த வரியின் மொத்தமதிப்பு ஒரு மில்லியன் பவுன்கள்; ஒரு பெரும் தேசீயச்சுமையாக இது கருதப்பட்டது. ஆனால் ஸ்காட்லந்தில் கட்டாயவரி கிடையாது; ஏழைகள் நிவாரணம் என்பது அங்குத் திருச்சபையின் பொறுப்பு; அரசாங்கத்தின் பொறுப்பன்று. தனிமனிதர்கள் ஏழைகளுக்காக மானியங்கள் வழங்கினர்; இவை மதாலயங்களில் அறிவிக்கப்பட்டன; சிற்சில சமயங்களில் அவைகளின் சுவர்களில் தொங்கிய பலகைகளில் இவை எழுதி அறிவிக்கப்பட்டன. கோவில்களில் ஏழைகளுக்கென்று உண்டியல்கள் இருந்தன; சிக்கனக்காரர்களான ஸ்காட்டிஷ் மக்கள் அவற்றில் செல்லாத செப்புக் காசுகளை நிறைய அள்ளிஅள்ளிப் போட்டனர்; அதே சமயம் செலவிடக்கூடிய சில நல்ல செப்புக்காசுகளும் கூட போடப்பட்டன. டீக்கன் (deacon) என்பவர் ஒரு திருச்சபை அதிகாரி; இவர் மதகுரு அல்லர். பல பாரிஷ்களில் இவர் காணப்பட்டார். உண்டியல் பணத்தை இரவலருக்குப் பங்கிட்டு வழங்குவது இவரது கடமை. புகழத்தக்க முறையில் பலர் இதை வாங்கிக் கொள்ள மறுத்தனர். தங்கள்து உற்றார் உறவினரை இந்த தர்மத்தை ஏற்றுக்கொள்வதிலிருந்து

காப்பது தமது கடமை என்று பரம ஏழைகளும்கூடக் கருதினர்; அதற்காகப் போற்றத்தக்க வகையில் பாடுபட்டனர்.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் வீடுவீடாகப் பிச்சைஎடுப்பதற்கு அதிகாரம் அளிக்கும் லிசென்சுகள் மதிப்புமிக்க 'ஊர் சுற்றிப் பரதேசிகளுக்கு' (gaberlunzies) அல்லது 'நீலக்கவுன்களுக்கு' கெர்க் சபைக் கூட்டத்தால் வழங்கப்பட்டன. அவர்களில் எடி ஓச்சில்ட்ரீ (Edie Ochiltree) போன்ற பலர் தூரத்துப் பண்ணைகளுக்குச் செய்திகள் கொண்டுசெல்ல மிகவும் பயன்பட்டனர்; கிராமப்புறத்துப் பாடல்களையும் பழங்கதைகளையும் இவர்கள் சாகாமல் காத்துவந்தனர்; பொது மக்களால் இவர்கள் மதிக்கப்பட்டனர். கிராமப்புற சமுதாயத்தில் இவர்களுக்கு ஒரு நல்ல இடம் உண்டு.

அதே சமயத்தில் லிசென்சு பெறுத, விரும்பத் தகாத ஊர்சுற்றிகளும் இதைவிடப் பெரிய எண்ணிக்கையில் இருந்தனர். டியூடர் காலத்து இங்கிலாந்திலிருந்த 'உடல் திடமான பிச்சைக்காரர்களுக்குப்' (sturdy beggars) பதிலாக ஆன்அரசியின் ஸ்காட்லந்தில் 'அழையா விருந்தினர்' (sorners) இருந்தனர். வில்லியத்தின் 'பஞ்ச ஆண்டுகளில்' இந்தக் கூட்டத்தின் எண்ணிக்கை பெருத்தது; இவர்களுக்குத் தலைவர்களோ, கட்டுப்பாடோ எதுவும் கிடையாது. சால்ட்டூனைச் சேர்ந்த பிளெட்சர் (Fletcher of Saltoun's) இவர்களது தொகை 200,000 என்று குருட்டுத்தனமாகக் கணக்கிட்டார். இதுஆதாரமற்றது. ஏனெனில், இது மொத்த மக்கட்தொகையில் ஆறு அல்லது ஐந்தில் ஒன்றாகிறது. என்றாலும், தனித்திருந்த பண்ணைகளையும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த வீடுகளையும்கொண்ட கிராமப்புறங்களில் மக்களை உருட்டி மிரட்டும் அளவுக்கு இவர்களதுஎண்ணிக்கை பெரிது; இத்தீயவர்களில் சிலர் ஒன்றுகூடிப் பட்டப்பகலில் கொள்ளைநடத்தினர். குடிசைகளிலிருந்த சொற்ப ரொட்டியையும், தொழுவத்திலிருந்த பசுவையும், பெற்றோரிடமிருந்து அவர்களது குழந்தையையும் பறித்துக்கொண்டனர். இவ் 'அழையா விருந்தினர்களின்' எண்ணிக்கையும் அட்டூழியமும் ஆச்சரியப்படத்தக்கவை அல்ல; இங்கிலாந்தைப்போல் தானும் ஒரு முறையான இரவலர் சட்டத்தை (poor- law) வகுத்துக் கொள்ளாத, ஸ்காட்லந்து இதை அனுபவித்துஆக வேண்டியிருந்தது. மேலும், இவ்விரு நாடுகளிலுமே ஒரு முறையான போலீஸ் படையில்லை.

சால்ட்டூனைச் சேர்ந்த பிளெட்சர் ஒரு தீவிரக் குடியரசு வாத தேசபக்தர். அக்காலத்திய ஸ்காட்டிஷ் அரசியலுக்கு அவர் ஒரு சுவையூட்டினர். 'அழையா விருந்தினர்களிடம்' கட்டாயவேலை வாங்கவேண்டும் என்று வழிகூறினர் அவர். இது ஒன்றும் புதிய கருத்தன்று. கட்டாயவேலை என்பது ஸ்காட்லந்தில் வழக்கிலிருந்த ஒன்றுதான். நிலக்கரிச் சுரங்கங்களும் உப்புச்சுரங்கங்களும் பெரும்பாலும் 'அடிமைகளைக்' (bondsman) கொண்டே இயங்கின. இவர்கள் ஓடிவிட்டால் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். சுதந்திரமான, ஒப்பந்தத்தின் அடிப்படையிலமைந்த நவீன நிறுவனங்களிலும் கூடத் 'தொழிலகங்களுக்குள் சிறைச்சாலை' ஒன்று இருந்தது; உதாரணம், ஹேடிங்டன்ஷயரிலிருந்த 'நியூ மில்ஸ்' துணி ஆலை. ஓடிப்போய்விட்ட அல்லது ஒப்பந்தத்தை மீறிய ஆட்கள் விசாரணை ஏதுமின்றி உடனே தண்டிக்கப்படுவர். ஆனால், நியூமில்ஸ் தொழிலாளர்களின் நிலைமையை அக்கால நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதை ஒன்றும் குறை கூற முடியாது. ஏனெனில், சுரங்கங்களில் வேலை செய்த பரம்பரை அடிமைகள் தட்டுமுட்டுச் சாமான்களைப்போல் எண்ணி நடத்தப்பட்டனர். மற்றவர்கள் இவர்களைப்பற்றிக் 'கருஞ் சிவப்பு மனிதர்கள்' என்றும் 'கருப்பர்கள்' என்றும் இரக்கத்துடனும் அச்சத்துடனும் பேசினர்.[1]

ஐக்கியத்தின்பொழுது விவசாய முறைகளில் ஸ்காட்லந்தானது இங்கிலாந்துக்குப் பின்தங்கியிருந்தது என்றால், தொழில் வாணிகத்துறைகளிலும் அதேநிலைதான். அது ஏற்றுமதி செய்த பொருள்கள் அனைத்துமே கிட்டத்தட்ட உணவுப் பொருள்கள் அல்லது கச்சாப்பொருள்கள். மாடுகளும் சால்மன் மீனும் இங்கிலாந்துக்கும், நிலக்கரியும் சால்மனும் ஹாலந்துக்கும், உப்பும் காரீயமும் நார்வேயுக்கும், ஹெர்ரிங் மீன்கள் ஐபீரிய தீபகற்பத்துக்கும் ஏற்றுமதியாயின. உள்ளூரிலேயே நெய்யப்பட்ட ஆடைகளை ஸ்காட்லந்தியர் அணிந்தனர்; மிகச்சிறிய அளவிலேயே லினன்துணியும் கம்பளி ஆடையும் வெளிநாடுகளில் விற்கப்பட்டன. ஹேடிங்டன் நியூமில்ஸ் புகழ்பெற்றிருந்தது; ஆயினும் வளர்ச்சியுற்றிருக்க

[1] இந்தக் கொடிய அடிமை ஊழியமுறை பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஒழிக்கப்பட்டது. அதற்கு முன்னால் ஸ்காட்டிஷ் சுரங்கத் தொழிலாளியும் அவன் குடும்பமும்—அவர் வெட்டிய நிலக்கரியை அவன் பெண்டு பிள்ளைகள் உயரே சுமந்து சென்றனர்—சுரங்கமானது விற்பனை செய்யப்பட்டபொழுது தாமும் புதிய சொந்தக்காரனிடம் கைமாறினர். வாழ்நாள் முழுவதும் வேலையை விட அவர்களுக்கு உரிமையில்லை.

வில்லை. முஸ்ஸல்பரோவிலும் (Musselburgh) ஆபர்டீனிலும் கூடக் கம்பளி ஆலைகள் இருந்தன. தங்களுக்குப் பணமும் சர்வாதீன உரிமைகளும் தந்து ஆதரிக்கவேண்டுமென்று அவை ஸ்காட்டிஷ் பாராளுமன்றத்தைக் கேட்டுக்கொண்டன. ஆனால், ஒரு சில சலுகைகள்மட்டுமே கிடைத்தன. கம்பளம் உற்பத்திசெய்த நிலப்பிரபுக்களோ ஸ்வீடனுக்கும் ஹாலந் துக்கும் கச்சாக்கம்பளத்தைத் தாம் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று பாராளுமன்றத்தைக் கட் டாயம் செய்தனர்; இதனால் அந் நாடுகளுடனான ஸ்காட்டிஷ் துணிவியாபாரம் பாதிக்கப்பட்டது. இது இங்கிலாந்தின் கொள்கைக்கு முற்றும் மாறுபட்டது. ஹெர்ரிங் வியாபாரத்தி னாலும் நிறைய லாபம் கிடைத்தது. ஆனால் ஸ்காட்டிஷ் கடற் கரையில் டச்சுக்காரர்கள் பிடித்த ஹெர்ரிங்மீன்கள் ஸ்காட் லந்தியர்கள் பிடித்ததைவிட அதிகம். எடின்பரோப் பாராளு மன்றத்தின் வேலையில் பெரும்பகுதி, தனது நாட்டின் சொற் பத் தொழில்முயற்சியையும் வாணிபமுயற்சியையும் ஊக்கு வித்து நடத்துவதற்கான ஒழுங்குமுறைகளை வகுப்பதிலேயே செலவழிந்தது.

ஸ்காட்டிஷ் அதிகாரிகளும் படைவீரர்களும் தாம் பிறந்த மண்ணுக்குப் புகழைத் தேடித்தந்தனர். வெல்லிங் டனின் படைகளில் ஸ்காட்டிஷ் சிப்பாய்கள் எவ்வளவு புகழ் பெற்றனரோ, அவ்வளவு புகழை மார்ல்பரோவின் படைகளி லும் பெற்றனர். ஆயினும், பிரான்சுடனான போரில் ஸ்காட் டிஷ் மக்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லை. அது இங்கி லாந்தின் போர்; அவர்களுடையது அன்று. ஐக்கியத்துக்கு நான்கு ஆண்டுகட்குமுன்பு எடின்பரோப் பாராளுமன்றம் ஒரு மதுச்சட்டத்தை இயற்றியது; விரோதியுடனான, மக்களால் மிகவும் ஆதரிக்கப்பட்ட மதுவியாபாரத்தைச் சட்டப்படி யானதாக்கச் செய்யப்பட்ட முயற்சி அது. பிரெஞ்சுத் துறை முகங்களோடு தாங்கள் சட்டத்தை மீறிக் கள்ளவியாபாரம் மட்டுமே செய்துவந்தபோது, இப்போர்க்காலத்தில் ஸ்காட் லந்தியர்கள் இவ்வளவு துணிச்சலுடன் வரையறையை மீறு வதைக் கண்டு ஆங்கிலேயர்கள் ஆத்திரமுற்றனர். ஆயினும் நடவடிக்கை எடுக்க அவர்களுக்குத் துணிவில்லை; ஏனெனில் பிராந்தி, கிளாரெட் மது, யாகோபிய ஏஜன்டுகள் ஆகிய வற்றை ஏற்றிவரும் ஒரு ஸ்காட்டிஷ் கப்பலை ஆங்கிலேயப் போர்க்கப்பல் பிடித்திருந்தால் விளைவு என்னவாகும்? அடுத்தநாள் காலையில் ஸ்காட்லந்துடன் போரிட வேண்டி யிருக்கும்.

முன்னிலைமீட்சி தொடங்கி, கிளாஸ்கோ (Glasgow) நகரமானது ராஜ்யத்திலேயே இரண்டாவதாகவும், வியாபாரத்திலும் தொழிலிலும் முதலாவதாகவும் கருதப்பட்டது. ஆனால் சமீபத்தில் அதன் மக்கட்தொகை குறைந்திருந்தது; விக்டோரியத்தின் ஆட்சியில் ஏற்பட்ட பஞ்சமும் அதன் விளைவுகளும் இதற்குக் காரணமாயிருக்கலாம். 1707-ம் ஆண்டில் ஐக்கியச் சட்டம் நிறைவேற்றப்பட்டபொழுது ஸ்காட்லந்தின் மொத்த மக்கட்தொகை ஒரு மில்லியனுக்குச் சற்று அதிகம்; அதில் கிளாஸ்கோவின் மக்கட்தொகை 12,500தான். அந்நகர் வியாபாரிகளிடம் பதினைந்து கப்பல்கள் இருந்தன; அவைகளின் மொத்த டன்கள் 1182. இந்தச் சின்னஞ்சிறு கப்பல்களும்கூட நகரத்துக்குப் பத்துப் பன்னிரண்டு மைல் தூரத்திலேயே சரக்குகளை இறக்கவேண்டியிருந்தது. ஏனெனில் கிளைட் (Clyde) நதியில் படகுகளைத் தவிர வேறு ஒன்றும் அப்பொழுது போகமுடியாது. ஆங்கிலேயச் சார்புநாடுகளுடன் (dependencies) வர்த்தகம் நடத்த ஸ்காட்டிஷ் வியாபாரிகள் அனுமதிக்கப்படவில்லை. எனவே, அவர்களது வியாபாரம் ஐரோப்பாவுடன்மட்டுமே நடந்தது. இறுதியில் ஐக்கியம் வந்தது; ஆங்கிலேயக் குடியேற்றங்களுடனான புகையிலை வியாபாரத்தில் பெய்லி நிகோல் ஜார்வியும் மற்ற ஸ்காட்லந்தியரும் பங்குகொண்டனர். ஆனின் ஆட்சியில் கிளாஸ்கோ ஓர் அழகிய சின்னஞ்சிறு நகரமாகவே இன்னும் இருந்து வந்தது; நடுவில் நான்குசாலைகள் சந்திக்குமிடத்தில் ஒரு தூண் மண்டபம் இருந்தது. அங்கு வியாபாரிகள் கூடித் தங்களது தொழிலை நடத்தினர். மேலும் ஸ்காட்லந்தின் நான்கு பல்கலைக்கழக நகரங்களில் அது ஒன்று. 'அங்குக் கல்லூரியில் நாற்பது மாணவர்கள் மட்டுமே உறைகிறார்கள்; ஆனால், அதில் 200 அல்லது 300 பேர்கள் படிக்கிறார்கள். அவர்கள் அனைவரும், ஆபர்டீனிலும் செயின்ட் ஆண்ட்ரூஸிலும் உள்ளவர்களைப் போலவே, சிவப்பு மேலங்கி அணிகிறார்கள்' என்று பிளென்ஹீம் நடந்தஆண்டில் ஓர் ஆங்கிலேயப் பிரயாணி எழுதினர்.

எடின்பரோவே நான்காவது பல்கலைக் கழக நகரம். ஸ்காட்லந்தின் சட்டங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் தலைமையகம் இது. மூன்று வகுப்புகளைக் (Estates) கொண்ட பாராளுமன்றம் கூடிய இடமும் இதுதான். இப்பாராளுமன்றத்தையும்விட நீடித்து நிலைத்துநின்ற அந்த மற்றொரு பாராளுமன்றமும்–திருச்சபையின் பொதுமன்றம் (General Assembly)–இங்கேதான் கூடிற்று. மேலும், ஹோலிரூட் அரண்மனையும்

(Holyrood Palace) இங்கேதான் இருந்தது; ஆனால் இந்தக் கூட்டிலிருந்து ஸ்காட்லந்து அரசர்கள் என்றோ பறந்து போய்விட்டார்கள். ஒரு மைல் நீளமிருந்த கேனன்கேட்டுக்கும் (Canongate) ஹை தெருவுக்கும் அந்தக் கோடியில்—'உலகிலேயே கம்பீரமான தெரு இது' என்று ஒரு பிரயாணி கூறினார்—ஒரு குன்றின்மீது அரண்மனை காட்சியளித்தது. அங்கு வதியாத ஆன்அரசிக்குப் பதிலாக, சிவப்புக்கோட் டணிந்த ஸ்காட்டிஷ் படை அவ்வரண்மனையில் அவரைப் பிரதிநிதித்துவப் படுத்தியது. வேலையற்று நின்றுகொண் டிருந்த சிப்பாய்கள் எடின்பரோவின் கூரைமுகடுகளையும், மேலெழும் புகைகளையும் பார்த்துக்கொண்டிருந்தனர்; கீழே யிருந்த அந்த இரைச்சல் மிக்க நகரத்தில் எத்தகைய சதித்திட் டங்கள் தீட்டப்படுகின்றனவோ, சமயம், அரசியல் அல்லது பொருளாதாரம் பற்றிய எந்தக் கிளர்ச்சியைத் தாம் அடுத்த படியாக அடக்கவேண்டியிருக்குமோ என்று அவர்கள் தமது மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தார்களோ என்னவோ!

எடின்பரோவின் பழங்காலத்திய நகர்க்காவல் படையையும் (City Guard) அதன் லொஹாபர் பரசையும் (Lochaber axe) கண்டு ஸ்காட்லந்தியர்கள் விழுந்துவிழுந்து சிரித்தனர்; ஆயினும், அந்தத் தலைநகரில் வீட்டில் நுழைந்து திருடுதலோ கொள்ளையடித்தலோ கேள்விப்படாதவை. இரவில்கூட மக்கள் கதவுகளைத் தாழிடுவதோ பூட்டுவதோ கிடையாது. இது ஸ்காட்லந்துமக்களின் நேர்மையை நன்கு காட்டுகிறது; அவர்களைக் கட்டுப்பாட்டுடன் வளர்த்த அந்தச் சமய அமைப்புக்கும் இது ஒரு நற்சான்று. அந்தச் சமயஅமைப் பானது எடின்பரோவில், ஸ்காட்லந்தின் தலைநகராகவும் நவநாகரிகத்தின் மையமாகவும் விளங்கிய அந்நகரில்கூட எல்லா நாடகங்களையும் நடனங்களையும் தடை செய்தது; சபாத் (Sabbath) நாட்களில் 'சன்னல் வழியாக வேடிக்கை பார்ப்பது,' ஊர்சுற்றுவது, தெருக்களில் வேகமாக நடப்பது ஆகிய எல்லாம் தடைசெய்யப்பட்டன. இந்நிலையில் மதகுருக்களை நையாண்டிசெய்து டாக்டர் பிட்கெய்ர்ன் (Dr. Pitcairn) சிரிப்பூட்டும் பாடல்களை எழுதியதில் வியப்பில்லை; நாடகம், நடனம் ஆகியவைகளைவிடவும் மோசமானவழிகளில் திருச் சபை ஆணைகளை மீறுவதற்காக 'எமலோகத்து அக்கினிக் கிளப்புகளும்' 'கந்தகக் கிளப்புகளும்' (Hell-fire Clubs, Sulphur Clubs) திருட்டுத்தனமாகக் கூடியதிலும் வியப் பில்லை.

ஆனால், ஞாயிறு தவிர மற்றநாட்களில் லீத் (Leith) மணலில் நடந்த குதிரைப் பந்தயத்தையோ, கோல்ப் ஆட்டத்தையோ, கோழிச்சண்டையையோ அல்லது குடிவெறியையோ தடுக்கத் திருச்சபைகூட முயலவில்லை. ஒவ்வொரு வாரத்திலும் ஆறுமாலைகளில் மதுக்கடைகளில் எல்லா வகுப்பைச் சேர்ந்த மக்களும் நிறைந்திருந்தனர்; ஏலியும் கிளாரெட்டையும் மூக்குமுட்டக் குடித்தனர். கடைசியாகப் பத்து மணிக்கு மாஜிஸ்டிரேட்டின் உத்தரவின்பேரில் முரசு ஒலித்து, எல்லோரும் வீடுதிரும்பும் நேரம் வந்துவிட்டது என்பதை அறிவித்தது. அடுத்த நிமிடத்தில் ஹைதெருவிலும் கேனன்கேட்டிலும் மக்கள்வெள்ளம் பெருகியது. எல்லா வகுப்பைச் சேர்ந்த மக்களும் தள்ளாடும் கால்களோடு ஓடினர்; உயர்நீதிமன்ற நீதிபதிகள் தமது அந்தஸ்துக்கு ஏற்ற வகையில் தலையுயர்த்தி நடக்கமுயன்றனர்; மூர்க்கர்களான ஹைலந்துக்காரர்கள் தங்களது செடான் நாற்காலிகளைச் சுமந்து முரட்டுத்தனமாக வழிவிலக்கிக்கொண்டும், தமது கேலிக் (Gaelic) மொழியில் வசைச்சொற்களை அள்ளி வீசிக்கொண்டும் விரைந்தனர். அதே சமயம் தலைக்குமேல் வெகு உச்சியில் ஐந்தாவது ஆறுவது அல்லது பத்தாவது மாடியின் சன்னல்கள் திறந்தன. கடந்த இருபத்துநான்கு மணிகளாகச் சேர்த்துவைக்கப்பட்ட எடின்பரோ மலம் மழையாகக் கீழே வருஷித்தது. கொட்டியவர்கள் மிகவும் நல்ல பழக்கவழக்க முடையவர்கள்; எனவே, கொட்டுவதற்கு முன்னால் 'தண்ணீர் ஜாக்கிரதை' என்று உரத்தகுரலில் எச்சரிக்கைசெய்தனர். திரும்பிவரும் உல்லாச மனிதர்கள் 'ஒரு வினுடி பொறுங்கள்' என்று பதிலுக்குக் கத்திவிட்டுத், தமது உடலை ஒரு சாணுகக் குறுக்கிக்கொண்டு ஓடினர். விரிந்த, விலையுயர்ந்த தமது பொய்மயிர்த் தோகையை (wig) அந்த மணங்கமழ் அருவி கொட்டி நனைக்காமலிருந்தால் நல்லகாலம்தான்! இவ்வாறு கீழே கொட்டப்பட்ட அவ் வாசனைப்பொருள், அகன்ற ஹைதெருவிலும் அதைச் சுற்றியிருந்த சந்துகளிலும் இரவு முழுவதும் கிடந்து சகிக்கமுடியாத வாடையை எழுப்பியது. அதிகாலையில் நகர்க்காவல்படை வந்து அதை அப்புறப்படுத்தீற்று. ஆனால், சபாத்நாளில்மட்டும் அதைத் தொடக்கூடாது என்பதால் அந்நாள் முழுவதும் அது அங்கேயே கிடந்தது; வேண்டாத ஒரு சமயக் கொள்கையின் மணம் இவ்வாறு அந்நாளில் ஸ்காட்லந்தின் தலைநகரில் கமழ்ந்தது.

எடின்பரோவின் இந்தப் பிரசித்திபெற்ற சுகாதார அமைப்புமுறையைப்பற்றி ஆங்கிலேயப் பிரயாணிகள்

நிறைய எழுதினர்; டிஃபோவின் வார்த்தைகளில் சொன்னால் 'இனிமையாகவும் தூய்மையாகவும் வாழ விரும்பாதவர்கள்' என்று ஸ்காட்டிஷ்காரர்கள் இகழப்பட்டனர்; 'மற்ற தேசங்களால் தூற்றப்பட்டு, வரி விதிக்கப்படுகிறோம்' என்று அவர்கள் நொந்தனர். ஆனால், இவ்விஷயத்தில் அவர்களுக்காதரவாக டிஃபோ எழுதியதையும் நாம் இங்குக் கவனிக்க வேண்டும்:

'குன்றுகளும் மலைகளும் சூழ்ந்த இடத்தில், பத்துப் பன்னிரண்டு மாடிகள் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள ஒரு நகரத்தில், நீர்வசதி குறைந்த, அதையும் உச்சிமாடிக்கு எடுத்துச் செல்லவேண்டிய சிரமம் உள்ள ஓர் ஊரில் வேறு எந்த மக்கள் வசித்தாலும்கூட நிலைமை இவ்வாறுதான் இருக்கும். இந்நிலையில் இலண்டனும் பிரிஸ்டலும்கூட எடின்பரோவைப்போல் அவ்வளவு அசுத்தமாகத்தானிருக்கும். வேறு பல நகரங்களில் அதிக மக்கள் வசிக்கலாம்; ஆனால், உலகின் வேறு எந்த நகரிலும் இவ்வளவு குறைவான இடத்தில் இவ்வளவு அதிகமான மக்கள் வாழவில்லை என்று நான் நினைக்கிறேன்.'

பிரெஞ்சுமாதிரியில் அமைந்த நகரங்களுக்கு ஒரு படு மோசமான எடுத்துக்காட்டு எடின்பரோ. காவல், தற்காப்பு ஆகிய காரணங்களால் அது பழைய எல்லைகளுக்குள்ளேயே கட்டப்பட்டது. எனவே, வளருகின்றபொழுது வானை நோக்கி வளர வேண்டியிருந்தது. இங்கிலாந்தின் வசதிகள் மிகுந்த அமைதியான நகரங்களின்வளர்ச்சி இதற்கு மாறானது; அவை பழைய எல்லைகளைத் தாண்டிச் சுற்றுப்புறங்களில் விரிவடைந்தன; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு தனிவீடு தரப்பட்டது; முடிந்தால் தோட்டமும் தரப்பட்டது. பிரான்சின் செல்வாக்கினாலும், கடந்த காலத்தில் ஸ்காட்லந்தில் நிலவிய சூழப்பத்தினாலும் எடின்பரோநகர் தனது மதில்கட்குள்ளேயே அடைபட்டு, விண்ணை நோக்கி வளர்ந்தது. சமீபகாலம் வரை, மதில்கள் சூழாத ஓர் இல்லத்தில் இரவைக் கழிப்பதென்பது கனவானுக்கு ஒரு பெரும் ஆபத்தான செயல்; இதற்கு கெர்க் ஆப் பீல்ட்ஸிலிருந்த (Kirk o' Fields) டார்ன்லி (Darnley) ஓர் உதாரணம். எனவே, புளும்ஸ்பரியிலும் ஸ்டிராண்டிலும் (Strand) ஆங்கிலேயப் பிரபுகளுக்கு மாளிகைகள் இருந்ததைப்போல் ஸ்காட்டிஷ் கனவான்களுக்கு அழகிய எடின்பரோ மாளிகைகள் கிடையா. ஆகவே, பாராளுமன்றக் கூட்டத்தொடரின்பொழுது ஹைதெருவில் ஒரு

வீட்டின் மாடியில் ஒரு தனிப் பகுதியில் இவர்கள் ஒவ்வொரு வரும் தங்கினர்.

இந் நகரில் வீட்டின் ஒவ்வொரு தனிக்குடியிருப்புப் பகுதியும் (flat) தனிவீடு என்ற முறையிலேயே கருதப்பட்டது; ஒரு வீட்டுக்கும் கதவுஎண் கொடுக்கப்படவில்லை. இந்நிலையில் கடிதங்கள் உரிய முகவரிக்குப் போய்ச்சேருவதும், புதியவர்கள் வழிகண்டுபிடிப்பதும் எவ்வளவு கடினம் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். இங்கு ஓர் 'உதவிக்காரப்' பட்டாளமே இருந்தது. இவர்கள் கெட்டிக்காரர்கள்; நம்பத் தகுந்தவர்கள்; அடக்க ஒடுக்கமுடையவர்கள். இவர்கள் மட்டு மில்லாமலிருந்தால் பழைய எடின்பரோவின் சந்து பொந்துகளிலும், மாடிப்படிகளிலும் எந்தவிதமான வாழ்க்கை யும் தொழிலும் நடந்திருக்கமுடியாது.

ஸ்காட்டிஷ் இலக்கியமானது தலைநகரிலேயே மையம் கொண்டிருந்தது; ஆயினும், புதிய நூற்றாண்டின் பின்பாதியில் அதில் ஏற்படவிருந்த பெரிய மலர்ச்சிக்கான அறிகுறி எதுவுமே அப்பொழுது தெரியவில்லை. அம்மலர்ச்சிக்கு வேண்டியபொருள் அத்தேசத்தின் இதயத்திலும் உள்ளத்தின் பழக்கவழக்கங்களிலும் இருந்ததாயினும், அதற்கு உயிரூட்டி ஒளிவிடச் செய்யக்கூடிய தீ இன்னும் வரவில்லை. பாடப்பட்ட நாட்டுப் பாடல்களில், சொல்லப்பட்ட கதைகளில், குடியான வனின் குடிசைகளில் அனல் தொட்டியைச் சுற்றிஅமர்ந்து விவாதிக்கப்பட்ட தத்துவங்களில் மக்களின் மனம் திளைத்தது. பைபிள் தவிர, சமயத் தத்துவ நூல்கள், அரசியல் துண்டுப் பிரசுரங்கள் ஆகியவையே அன்று பெரும்பாலும் அச்சிடப் பட்ட நூல்கள்.

ஸ்காட்லந்தில் பத்திரிகைத்தொழில் ஒன்றும் செழித் திருக்கவில்லை. இரண்டே பத்திரிகைகள்தாம் எடின்பரோவி லிருந்து மாதம் மும்முறை வெளிவந்தன. அவை, நெடு நாட்களாக வெளிவந்துகொண்டிருந்த கஜட்டும் (Gazette) அதற்குப் போட்டியாக 1705-ல் துவக்கப்பட்ட கௌரன்டும் (Courant) ஆகும்; இவை பிரிவிகவுன்சிலின் விசேஷ அனுமதி யின்பேரில் உயிர்வாழ்ந்தன; அரசாங்கத்தின் மிகவும் கீழ்ப் படிதலுள்ள சேவகர்கள் இவை. வடிவில் அப்படியே இலண் டன் பத்திரிகைகளைப் பின்பற்றின. ஐரோப்பியக் கண்டத்தின் செய்திகளையும் இங்கிலாந்தின் செய்திகளையும் இவை வெளி யிட்டனவே யொழிய, தமது நாட்டைப்பற்றி ஸ்காட்லந் தியர்கட்கு ஒன்றும் சொல்லவில்லை. ஐக்கியத்துக்குப் பிறகு

ஸ்காட்டிஷ் பிரிவிகவுன்சில் மறைந்தது; அப்பொழுது எடின்பரோப் பத்திரிகைகள் ஓரளவு சுதந்திரம் பெற்றன. ஆன் ஆட்சியின் கடைசிஆண்டுகளில் அவை சுதந்திரமான முறையில் செயல்பட்டன; பலவிதமான செய்திப்பத்திரிகை தோற்றமளித்தன.

நிலமானிய முறையின் அடிமைத்தளையிலும் இடைக்கால வறுமையிலும் கட்டுண்டுகிடந்த ஸ்காட்டிஷ் குடியானவனுக்குத் தனது வாழ்க்கைச்சுமையிலிருந்து ஆறுதல்பெறச் சமயம் என்ற ஒரேஒரு வழிதான் இருந்தது. வேறு எந்தவிதமான அறிவியல் (intellectual) உணவும் அவனுக்குக் கிடைக்கவில்லை. பைபிளைக் கையிலேந்தி, தனது மத குருவுடனும் நண்பர்களுடனும் கடுமையான, ஆனல் மனத்துக்கினிய விவாதத்தில் ஈடுபட்டு அவன் ஒரு சிந்தனையுலகில், கற்பனையுலகில் வசித்தான். அது ஓர் ஆழ்ந்த, குறுகிய, தீவிரமான உலகு. இன்றைய தொடர்பற்ற செய்திகளிலும் கருத்துகளிலும் சுற்றிவரும் பொதுமக்களின் மனஉலகிலிருந்து அது முற்றிலும் மாறுபட்டது. அரசியல் விவகாரங்களில் இவனது விருப்பங்களைப்பற்றி யாரும் கேட்டதில்லை; பாராளுமன்றத்தின் வகுப்புகளிலும் (Estates) இவனுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை; எனவே, தனக்கு எங்கு அதிகச் செல்வாக்கும் மதிப்பும் இருந்ததோ, அந்தச் சபைகளின் நடவடிக்கைகளில் இவன் மிக ஆழ்ந்த அக்கறை காட்டினன். அவை திருச்சபையின் பல்வேறு மன்றங்களான பாரிஷின் கெர்க் சபை, பத்துப் பன்னிரண்டு பாரிஷ்களின் பிரஸ்பிடெரி, மாகாண சினட், ஆண்டுதோறும் எடின்பரோவில் கூட்டப்பட்ட தேசீயப் பொதுச்சபை (General Assembly). யார்க்கிலும் காண்டர்பரியிலும் (Canterbury) மதகுருமார்மட்டுமே பங்கு கொண்ட இச்சபைகளில் ஸ்காட்லந்தில் பொதுமக்களும் பங்குபெற்றனர். மூன்று வகுப்புகளைக் (Estates) கொண்ட பாராளுமன்றத்தைக் காட்டிலும் இந்தத் திருச்சபையின் பொதுச்சபையே ஸ்காட்லந்தின் உண்மையான பாராளுமன்றம் என்று அடிக்கடி சொல்லப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட எவ்விதமான ஸ்தலஸ்தாபன ஆட்சியும் இல்லாத அக்காலத்தில், பாரிஷ் கவுன்சில் மிகமிக ஒட்டிய ஓர் அமைப்பு கெர்க் சபைதான்; இங்குப் பாமரமக்களின் முதிய பிரதிநிதிகளைக் கண்டு மதகுருக்களும் நடுங்கினர்கள்.

விழல் வேய்ந்த பாரிஷ் மதாலயமானது ஒரு சின்னஞ் சிறு பாழடைந்த கட்டடம்; இடைக்காலத்து அலங்

காரமோ அல்லது வசதிகளோ அதில் இல்லை. இங்கிலாந்தில் அது ஒரு தானியக் களஞ்சியத்துக்குமட்டுமே தகுதியான கட்டடமாகக் கருதப்பட்டிருக்கும். கிராமத்துக் கோயில்களில் பொதுமக்களுக்கென ஆசனங்கள் கிடையா; பெரியவர்களுக்கும், சில முக்கியக் குடும்பத்தினருக்கும் மட்டுமே இருந்தன. பெரும்பாலும் எல்லா ஆண்களும் பெண்களும்தொழுகையின்பொழுதுநிற்பர்; அல்லது தாழ்வான ஸ்டூல்களில் அமர்வர். இத்தகைய ஸ்டூல்களைக்கொண்டுதான் 'வழிபாட்டு நூல் தொழுகை' சம்பந்தமான தனது ஆட்சேபங்களை ஜென்னி கெட்டிஸ் (Jennie Geddes) வெளியிட்டார். ஆயினும், சபாத் நாட்களில் ஒவ்வொன்றும் மூன்று மணி நேரம் நடைபெற்ற இரண்டு தொழுகைகளின்போதும் வசதிகளற்ற அந்த அறை நிறைந்துவழிந்தது ; தொழுகைக்கு வந்தவர்களில் பலர் பல மைல் தூரம் நடந்து வந்திருந்தனர். இடநெருக்கடி காரணமாக மக்கள்கூட்டம் கோயிலின் வெளிமுற்றத்திலும்கூட வழிந்தது ; இங்கு நின்ற மக்களுக்காக ஒரு பையன் கல்லறை ஒன்றின்மீது நின்று பைபிள் வாசித்தான்.

பொதுமக்களின் மிகவும் முக்கியமான, கவர்ச்சி மிக்க சமயச் சடங்கு நன்மைபெறுதல் (Communion) என்பது. இது கோடைக்காலத்தில் திறந்தவெளியில் நீண்ட மேசைகள் போட்டு நடத்தப்பட்டது. முன்பு 'சித்திரவதைக் காலத்தில்' (Killing times) ஊருக்கு அப்பால் இரகசியமாக நடந்த ஆபத்து மிக்க கூட்டங்களை இது எல்லோருக்கும் நினைவூட்டியது. எட்டு அல்லது பத்துப் பாரிஷ்கள் கூடி மாற்றிமாற்றி நன்மைச் சடங்கு நடத்தின ; இவை ஜூன் முதல் ஆகஸ்ட் வரை நடந்தன. மலைப்பகுதிகளில் நாற்பது மைல் தூரம் கூட நடந்து பலர் ஒருவர்பின் ஒருவராக இச்சடங்குகளில் பங்கு கொண்டனர்.

ஆன் அரசியின் காலத்திய பிரஸ்பிடீரிய மதகுருக்கள் அரசாங்கத்தின் கொடுமை காரணமாகப் படிப்பைப் பாதியில் விடுத்துப் பல தொல்லைகட் காளானவர்கள். இது காரணமாக அவர்களது உள்ளத்தில் ஒரு கசப்பு வளர்ந்திருந்தது. தள்ளாத வயதை எட்டியிருந்த அம்மனிதர்களோடு பழகிய ஒருவர் இவ்வாறு அவர்களைப் பற்றி வருணித்தார் :

'அவர்கள் மெலிந்தவர்கள்; அரைகுறைப் படிப்பாளிகள். அவர்களது வாழ்வு மாசற்றது ; அவர்களது பழக்க வழக்கங்களில் கிராமப்புறத்து எளிமையையும் துறவியின் ஆசை

யின்மையையும் காணலாம். தங்களைப் பின்பற்றிய மக்களின் தப்பெண்ணங்கள் (Prejudices) இவர்களிடமும் காணப்பட்டன. சிறந்த அடிப்படைக் கொள்கைகள் காரணமாக, இவர்களின் குற்றங்களையும் பலவீனங்களையும் அம்மக்கள் பொருட்படுத்தவில்லை.'

'பிரஸ்பிடீரியர்களது சொற்பொழிவு' என்றால் ஆங்கிலேயர்களுக்கு உடனே நினைவுக்கு வந்தவை கடவுள் இரகசியங்களைப்பற்றிய அருவருக்கத்தக்க வாதம், கடவுளை அடிக்கடி அழைப்பது, கோயிலுக்கு நல்ல ஆடை அணிந்து வருதல் அல்லது இலண்டன் பத்திரிகையை (Spectator) உள்ளே எடுத்துவருதல் போன்ற தவறல்லாத செயல்களைக்கூடக் கடிதல் முதலியன ஆகும். அதே சமயத்தில் ஓர் ஆங்கிலேயர் எழுதினார்:

'ஸ்காட்லந்தில் மதகுருமார்கள் கடின உழைப்பும் சுயநலத்தில் அக்கறையின்மையும் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் பதவி உயர்வும் கிடையா. இங்கிலாந்திலும் மதகுருமார் தொழில் இவ்வாறு இருக்குமாயின், ஆயிரக்கணக்கான குருமார்கள் இத்தொழிலை விட்டொழித்துவிட்டு மெக்கானிக்குகளாக ஆகியிருப்பார்கள் என்று நான் நிச்சயம் சொல்லுவேன். ஸ்காட்லந்தில் சோம்பேறி மதகுரு ஒருவர்கூடக் கிடையாது; விசேஷ சலுகைகள் பெற்ற பாதிரி ஒருவர்கூடக் கிடையாது; அதிக ஆசையைத் தூண்டக்கூடிய எந்தவிதமான பதவிஉயர்வுகளும் சலுகைகளும் மரியாதைகளும் கிடையா.'

மதகுருக்களில் பெரும்பாலோர் குடியானவக் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். அவர்களது ஆசை ஒரு பாரிஷுக்குத் தலைவர்களாக ஆகி, மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும் என்பதுதான். அந் நம்பிக்கை அவர்களுக்கு நிறைவேறியது. அதே சமயம் ஓர் இளந்தலைமுறையும் வளர்ந்துவந்தது; தொல்லைகள் அருகிய ஒரு காலத்தில் அது நல்ல முறையில் கல்விகற்றது. அதன் சிந்தனை நியாயத்தன்மை பெற்றது; பேசும் சொல் நாகரிகமடைந்தது. இவர்கள் 'மிதவாதிகள்'. இவர்களுக்கும் கிளாவர்ஹவுஸால் (Claverhouse) கொடுமைப்படுத்தப்பட்டு மதவெறியர்களாகிப் போன பழைய தலைமுறையினருக்கும் பூசல் மூண்டது.

பெருமிதம்படைத்த கிராமப் பெரியவர்களடங்கிய கெர்க் சபை, மதகுருமார்களுடன் கூடி அன்றாட வாழ்வில்

அளவுக்கதிகமாகத் தலையிட்டது. கெர்க் சபையும் அதற்கு மேலான பிரஸ்பிடெரி மன்றமும் வாரந்தோறும் வசைச் சொல், அவதூறு, வாய்ச்சண்டை, சபாத் நாள் ஒழுங்குகளை மீறியது, பில்லி சூனியம், ஆண்-பெண் தீயொழுக்கங்கள் போன்ற வழக்குகளை விசாரணை செய்தன. சிலவற்றில் விசாரணையும் தீர்ப்பும் ஒழுங்கானமுறையில் நடைபெற்றன; பயன் தந்தன. இங்கிலாந்தில் சாதாரணமான மாஜிஸ்டிரேட்டுகள் செய்துவந்த வேலை இது. வேறு சில வழக்குகள் அவசியமற்ற, பொறுக்கமுடியாத தொல்லைகளாயிருந்தன; உதாரணமாக, நோன்பு நாளன்று ஒரு பெண் வாளியை எடுத்துச் சென்றது, ஞானஸ்நான விருந்தின்பொழுது கூட்டத்தில் ஒருவன் பிடில் வாசித்தது போன்ற குற்றச்சாட்டுகள். தீயொழுக்கக்காரர் ஆணையினும் பெண்ணையினும் பாபமன்னிப்பு நாற்காலியில் அமர்த்தப்படுவர்; கூட்டத்திலிருக்கும் இளைஞர்கள் கேலிசெய்து மகிழ்வார்கள்; முதியவர்கள் கடுகடுப்போடு கண்டனச்சொல் சொல்லுவர்; மதகுரு சற்றும் நாணமல் அத் தீச்செயலை இகழ்ந்து பேசுவார்; இதுவே பத்து, இருபது சபாத்நாட்களுக்குத் தொடர்ந்து சிற்சில சமயங்களில் நடைபெறும். பல சமயங்களில் குற்றம் செய்தவர்களின் எண்ணிக்கை அதிகமிருக்கும்; அவர்கள் வரிசையாக நிற்பார்கள். அவர்கள் அணியும் 'கவுன்கள்' அடிக்கடி பயன்படுத்தப்படுவதால், அவைகளை மாற்ற வேண்டியிருக்கும். பொறுக்கமுடியாத இந்த அவமானத்திலிருந்து தப்புவதற்காகப் பல ஏழைப்பெண்கள் தாம் கருவுற்றிருப்பதை மறைத்து, சிசுக்கொலையில் ஈடுபட்டனர். இத்தகைய வழக்குகளில் விதிக்கப்பட்ட கடுந்தண்டனைகளை நிறைவேற்றுவது அல்லது குறைப்பதுபோன்ற விஷயங்களை பிரிவிகவுன்சில் சதா கவனிக்க வேண்டியிருந்தது.

கெர்க் சபை, பிரஸ்பிடெரி ஆகியவற்றின் இந்த நடவடிக்கைகள் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தன. இல்லாவிட்டால், இங்கிலாந்தில் இத்தகைய திருச்சபை அதிகாரங்கள் ஒழிந்த பின்னும், ஸ்காட்லந்தில் மட்டும் இவை எப்படி நிலைத்திருக்க முடியும்? என்றாலும், பலர் இவைகளை அடியோடு வெறுத்தனர்; குறிப்பாக, மேல்வகுப்பினருக்கு இவை பிடிக்கவில்லை. கனவான்களைப் பொறுத்தவரை தவம் அல்லது நோன்புத்தண்டனையானது அபராதத்தொகையாக மாற்றப்படுவது அனுமதிக்கப்பட்டது. ஆயினும், கீழ்க்குடியில் பிறந்த பெரியவர்களும், மதகுருக்களும் பெருமித மிக்க லேர்டுகள், பிரபுக்கள் ஆகியோரின் நடத்தையைப்பற்றி

விசாரணை செய்வது என்பது மேற்குடியினருக்கு ஓர் அநீதி யெனப்பட்டது; பிரஸ்பிடீரிய திருச்சபையின் தொழுகை முறைகளையும் கோட்பாடுகளையும் எவ்விதத்திலும் எதிர்க்காத பலர் எபிஸ்கோப்பிய சமயத்தையும் யாகோபிய அரசியலை யும் ஏற்றுக்கொண்டதற்கு முக்கியக் காரணம் இதுதான். மத குருமார் எதிர்ப்பு எவ்வாறு இங்கிலாந்தில் விக்குகளைப் பலப் படுத்திற்றோ அதேபோல் ஸ்காட்லந்தில் யாகோபியர்களைப் பலப்படுத்திற்று. என்றாலும், பாவமன்னிப்பு நாற்காலியும் கெர்க்சபையின் நீதியதிகாரமும் சார்லஸ்II-ன் எபிஸ் கோப்பிய நாட்களிலும்கூட நிலவின என்பதை மறந்துவிடக் கூடாது; அது மட்டுமின்றி, எபிஸ்கோப்பிய குருக்களால் இன்னும் ஆளப்பட்டுவந்த பல பாரிஷ்களிலும்கூட அவை ஒழிந்துவிடவில்லை என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பொதுவாகக் கூறப்போனால், எபிஸ்கோப்பிய அல்லது யாகோபியக் கட்சியானது பிரஸ்பிடீரிய அல்லது விக் கட்சியைவிடவும் அதிகமான அளவில் மேல்வகுப்பினரின் ஆதரவை நம்பியிருந்தது. நாக்ஸின் (Knox) சீடநிலை (disci-pleship) எவ்வளவுக்கெவ்வளவு கடுமையானதாக இருந் ததோ, அவ்வளவுக்கவ்வளவு அவரது கோட்பாடுகளும் நடைமுறையும் ஜனநாயக முறையிலமைந்தன. ஆனால், மத குருமார் நியமனத்தில் மோதல் ஏற்பட்டது; தீவிரப் பிரஸ்பிடீ ரியர்கள் இப்பதவிகள் பாரிஷ் மக்களுக்கே அளிக்கப்பட வேண்டும் என்று வாதாடினர்; பாரிஷ்குருக்கள்பற்றிய சமயக்கோட்பாட்டை இவர்கள் மேற்கோள் காட்டினர்; மேலும், குருமார்களை நியமிக்கும் அதிகாரம்படைத்தவர்கள் பலரது பிரஸ்பிடீரியப்பற்று ஐயத்துக்கிடமானது என்பதை யும் ஒரு காரணமாகக் காட்டினர்.

எபிஸ்கோப்பியத் துண்டுப்பிரசுர எழுத்தாளர்கள் பிரஸ்பிடீரியர்களுக்குக் கொள்கை ஏதும் கிடையாது என்று கேலிசெய்தார்கள்; 'மதகுருக்கள் நியமனம்பற்றிய விஷயத் தில் பிரபுக்கள், கனவான்களுக்கும் ஏழைமக்களுக்கு மிடையேயான தகராறுகளில் நீங்கள் எப்பொழுதும் ஏழை களையே ஆதரிக்கிறீர்கள்; உங்களது திருச்சபை நிறுவனங் கள் நிலைக்கவேண்டுமானால் நீங்கள் இவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட் டிருக்கிறது போலும்.....ஸ்காட்லந்துப் பொதுமக்களின் சிண்டு பிரபுக்கள், கனவான்களின் கையில் நன்கு சிக்கியிருக் கிறது; இந்நிலையில் நீங்கள் செய்யும் இத்தவற்றில் உங்களது

மடத்தனத்தை என்னவென்று சொல்வது?' 'பெரிய மனிதர் கள்' ('the Great') விஷயத்தில் மிகவும் அஞ்சாமையுடன் திருச்சபை நடந்து கொள்வதை ஸ்காட்லந்து சென்ற ஆங்கி லேயக் கன்பார்மிஸ்ட் அல்லாதார்கூடக் கண்டு திடுக்கிட்டு அஞ்சினர். ஜான் நாக்ஸ் நிறுவிய திருச்சபையின் தவறுகள் என்னவாக இருப்பினும் அது செய்த சிறந்தசெயல் ஒன் றுண்டு; ஸ்காட்லந்தின் வறிய கீழ்க்குடிகளைத் தமது நில மானிய எஜமானனின் முன்னிலையில் அச்சமின்றித் தலை யுயர்த்தி நிற்கும்படி அது செய்தது.

பதினெட்டாம் நூற்றுண்டின் துவக்கத்தில் எபிஸ்கோப் பியர்களின்நிலை மிகவும் குழப்பமானதாயிருந்தது. அவர் களது தொழுகை, கோட்பாடுகள், ஸ்தாபன அமைப்பு, கட்டு திட்டம் ஆகிய எல்லாம் பிரஸ்பிடீரியர்களுடையவை போன்றே இருந்தன. இவைகளில் அவர்கள் காட்டிய வேகத்தில்மட்டுமே சிறிது வேறுபாடு இருந்தது—ஆனால் எபிஸ்கோப்பிய அமைப்பில்மட்டுமே பிஷப்புகள் உண்டு; என்றாலும் அப்பிஷப்புகளுக்கு எவ்வித அதிகாரமும் கிடை யாது.—ஆயினும் இவர்களுக்கிடையில் மனக்கசப்பு ஏராள மாக இருந்தது. ஏனெனில், திருச்சபைகளுக் கிடையிலான வேற்றுமையை ஒட்டியே விக், யாகோபிய அரசியல் வேற் றுமைகளும் விளைந்தன. இரண்டுதலைமுறைகளாக நடந்த பூசல்களும் தீங்குகளும் இதற்குக் காரணம். இவைகளால் இரு கட்சிகளுமே இன்னலுற்றன; பூசல்களை மறக்காமல் நினைவும் வைத்திருந்தன.

ஸ்காட்லந்தின் எபிஸ்கோப்பியர்களை இங்கிலாந்தின் கன்பார்மிஸ்ட்அல்லாதவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எபிஸ்கோப்பியர்கள் ஒருவிதத்தில் நல்லநிலையிலும், மற்றொரு விதத்தில் சிரமமான நிலையிலும் இருந்தனர் என்று கூறலாம். இவர்களது தொழுகையைச் சட்டப்படியானதாக்கும் பொறைச்சட்டம் (Act of Toleration) 1712 வரையில் இயற் றப்படவில்லை; இது ஒரு பக்கம். மற்றொரு பக்கம், பாரிஷ் மதாலயங்களில் ஆறில் ஒன்றுக்கும் அதிகமானவை இவர் களது குருமார்களின் கையில்இருந்தன. ஆபர்டீன்ஷையர், ஹைலந்து, கிழக்கு எல்லைப்பகுதிகள் ஆகியவிடங்களில் தலைகாட்டும் பிரஸ்பிடீரியக் குருமார்கள் பொதுமக்களால் மிருகத்தனமாகத் தாக்கப்படும் அபாயம் இருந்தது; தென் மேற்குப் பகுதியைச் சேர்ந்த எபிஸ்கோப்பிய 'துணைக் குருக்களை' 'இரும்புத் தடியால் இறுக்கிய' அத்தகைய காட்டு மிராண்டிகள் இங்கும் இருந்தனர். 1704-ல் டிங்வாலில்

(Dingwall) ஒரு பிரஸ்பிடீரிய குரு பதவிஏற்க வந்தபொழுது, ஆண்களும் பெண்களும் அவரைக் கல்லாலடித்து விரட்டி விட்டனர்; 'மன்னர் வில்லி இறந்துவிட்டார்; ஆனால், எங்கள் மன்னர் இருக்கிறார்' என்று அவர்கள் கூச்சலிட்டனர்.

வடகிழக்கில் இவ்வாறு வெளிப்பட்ட பொதுமக்களின் விருப்புவெறுப்புகளுக்கு ஒரு முக்கியக் காரணம் சமய வேற்றுமைகள் என்று கூறுவது அவ்வளவு பொருத்தமன்று. அரசியல் தகராறுகள், தென்மேற்கு விக்காமோர்களிடம் (Whiggamores) வெறுப்பு, ஊர்க்குருக்களிடம் மக்கள் கொண்ட நீண்டகால ஆழ்ந்த விசுவாசம் ஆகியவையே முக்கியக் காரணங்கள். 1707-ல் கூட ஸ்காட்லந்தின் 900 பாரிஷ் களில் 165-ல் எபிஸ்கோப்பிய மதகுருக்கள் இன்னும் இருந் தனர். ஆயினும் எபிஸ்கோப்பிய குருமார்களில் பெரும்பான் மையோரின் பதவிகள் புரட்சியின்பொழுது பறிக்கப்பட்டு விட்டன. ஆனின் ஆட்சியில் அவர்களின் வாழ்க்கை இரங்கத் தக்கதா யிருந்தது. அதிருஷ்டசாலிகளான சிலர் பணக்காரர் களின் வீட்டில் குடும்பக்குருவாக இருந்தனர்; ஸ்காட் லந்தில் வாழ்ந்த தங்களது சமயத்தினரிடம் தர்மம் பெற்று வாழ்ந்தவர்தொகை ஏராளம்; தாங்களும் ஈடுபட்டுள்ள ஒரு பொதுவான பணியில் யாவற்றையும் இழந்த தியாகிகள் என்று இவர்களைக் கருதிய ஆங்கிலேயர்களும்கூட தர்மம் செய்தனர்.

இங்கிலாந்தின் மேல்வகுப்பு மக்களிடையில் சூன்ய வித்தைகளிலிருந்த நம்பிக்கை எவ்வாறு வெகுவாகக் குறைந்து போயிற்று என்பதை நான் முந்திய ஓர் அத்தியா யத்திலேயே விளக்கியுள்ளேன்; இதனால் சட்டப்படியாகவும் பொதுமக்களின் மூடநம்பிக்கை காரணமாகவும் சூனியக் காரிகள் துன்புறுத்தப்படுவது குறைந்துவந்தது; தனது படித்த வகுப்பின் கருத்துகளின்படி ஆளப்பட்டு வந்த இங்கிலாந்தில் இது இயற்கையே. இதையும்கூட நான் அங்கு விளக்கியுள்ளேன். ஸ்காட்லந்திலும்கூட ஓரிரு தலை முறைகட்குப் பிறகு இப்படியே நடந்தது. பதினெட்டாம் நூற்றுண்டின் துவக்கத்திலேயே மேல்வகுப்பினரில் ஒரு பகுதியினர் குட்டிச்சாத்தான் போன்ற மாயஉருக்களில் நம்பிக்கை இழந்தனர்; ஆயினும், பாமரமக்களுடைய, மத குருமார்களுடைய மூடநம்பிக்கைகளின் வலிமை இன்னும் குறையவில்லை. ஆன்அரசி ஆண்டகாலத்தில் ஸ்காட்லந் தில் சூனியக்காரிகள் என்று சந்தேகப்படப்பட்ட பலர் கொல் லப்பட்டனர். பலர் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டனர்.

ஜார்ஜ்I-ன் ஆட்சியில் தூரத்து சதர்லந்துஷயரின் (Sutherlandshire) மூலைகளில், கடைசி முறையாக சூனியக்காரிகட்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சூனியவித்தைக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டம் 1736-ல் வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தினால் கிரேட் பிரிட்டனில் ரத்து செய்யப்பட்டது. இன்னொரு தலைமுறை ஓடியது. பர்ன்ஸும் அவரது குடியானவ நண்பர்களும் சூனியக்காரிகளையும் 'அட்டைக் கறுப்புச் சாத்தானை'யும் கண்டு சிரித்தார்களே யொழிய அஞ்சவில்லை. ஆயினும், பிரஸ்பிடீரிய சமயத்தை மிகவும் கட்டுப்பாடுகளோடு பின்பற்றிவந்தவர்கள் சூனியவித்தையை நம்ப மறுப்பது 'நாத்திகம்' என்றும், கடவுளது வார்த்தைகளை மீறுவது ஆகும் என்றும் கருதிவந்தனர்.

பிரஸ்பிடீரிய திருச்சபைதான் பொதுமக்களின் மூடநம்பிக்கைகட்குத் தாய் என்று கூறமுடியாது. அவைகளில் சில வற்றை அது உரமிட்டு வளர்த்துவந்த அதே சமயத்தில், வேறு சிலவற்றை ஒதுக்கித்தள்ளியும் வந்தது. இவை அனைத்தும் வெகுகாலத்துக்கு முந்திய போப்பியக் (Popish) கொள்கைகளிலும், கிறிஸ்தவ சமயம் பரவுவதற்கு முந்திய ஆதிகால உணர்வுகளிலும் பழக்கவழக்கங்களிலும் வேர் கொண்டிருந்தன. மலையும் சதுப்பும், மனிதனால் இன்னும் வெல்லப்படாத இயற்கையும் சூழ்ந்த அப்பிரதேசத்து மக்களிடையில் அப் பழக்கவழக்கங்களும் உணர்வுகளும் இன்னும் நிலவத்தான் செய்தன. லோலந்துப் பகுதிகளிலும்கூட மக்களில் பெரும்பகுதியினர் கெல்ட்டுகள்; அவர்கள் பல விதங்களில் பண்டைக்கால வாழ்க்கைநிலைமைகளிலேயே இன்னும் வாழ்ந்துவந்தனர். நள்ளிரவில் நீரில் இறங்கி ஆற்றைக்கடந்து வீடுதிரும்புகையில் நீர்த்தேவதை ஓலமிடுவதை அவர்கள் இன்னும் கேட்டனர். குறுகிய பள்ளத்தாக்குகளின் முள் நிறைந்த மரங்களில் வனதேவதைகள் இன்னும் கரந்து வாழ்ந்தன; அவைகளுக்குப் பூசையிடவேண்டும்; இன்றேல், தொழுவத்திலிருக்கும் மாடுகளை அவை கொன்றுவிடும், அல்லது தொட்டிலிலிருக்கும் குழந்தையைத் தூக்கிச் சென்று விடும். டேயிக்கு (Tay) வடக்கில் மேமாதம் முதல்நாளன்று மலைமீது மக்கள் பெல்டன் (Belton) திருவிழாக் கொண்டாடினர்; சொக்கப்பனை கொளுத்தி, அதைச் சுற்றி நடனமாடினர். பயிர்களும் மாடுகளும் பற்பலமுறைகளில் இத்தேவதைகளின் சீற்றத்திலிருந்து காக்கப்பட்டன; இவைகளில் சில ஆதியில் மனிதன் ஆடுமாடு மேய்த்த காலந்தொட்டே, உழுது விதைக்கத் தொடங்கிய காலந்தொட்டே,

பேய்கள் வதிந்த காட்டுமரங்கள் தெய்வம்
நீரும் நெருப்பும் காற்றும் தெய்வம்—

என்று கருதப்பட்ட காலந்தொட்டே வழக்கிலிருந்தன. மந்திரக் கிணறுகட்கு மக்கள் சென்றனர்; அச்சத்தாலும் நன்றியுணர்வாலும் மக்கள் மரங்களையும் புதர்களையும் கந்தல் துணிகளாலும் மற்றவற்றாலும் அலங்கரித்தனர். ஹைலந்தின் சில பகுதிகளில் இத்தகைய சடங்குகளே மக்களின் சமயமாக விளங்கின; கிறிஸ்தவர்கள் வாழ்ந்த லோலந்தில் இவை அவ்வளவு முக்கியத்துவம்பெற்று விளங்கவில்லையாயினும் மக்களின் வாழ்விலும் நம்பிக்கைகளிலும் ஒரு நிச்சயமான இடத்தைப் பெற்றிருந்தன.

கிராமப்புறங்களில் முறையான மருத்துவர்கள் கிடையாது; எனவே வழிவழி வந்த மருத்துவமுறைகளையே மக்கள் பின்பற்றினர். சிற்சில சமயங்களில் மந்திர சூனிய வித்தைகளுக்கும் மருத்துவமுறைகளுக்கும் இடையில் வேறுபாடு காண்பது கடினம். மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதற்காக உழைத்த, அறிவுமிக்க ஆண்களும் பெண்களும் வாழ்ந்த அதே சமயத்தில், அதைத் தடைசெய்த மந்திரவாதிகளும் சூனியக்காரிகளும்கூட இருக்கத்தான் செய்தனர். பின்னல் சொல்லப்பட்ட மனிதர்களை ஒழித்துக்கட்டுவதைத் திருச்சபை ஆதரித்தது; ஆனல், முன்னல் சொல்லப்பட்ட மனிதர்களின் உதவியை மக்கள் நாடுவதைத் தடைசெய்ய முடியவில்லை. மதகுரு சர்வவல்லமையும் படைத்தவராக இருக்கவில்லை. தீங்கற்ற களியாட்டங்களில் அவர்கள் ஈடுபடுவதைத் தடுக்கும் அவருக்கு அவ் வல்லமை எப்படி இருக்கமுடியும்? இளம்ஆண்களும் பெண்களும் திருச்சபையின் தடையையும் மீறி ஒவ்வொரு விழாக்கூட்டத்தின்போதும் பிடிலும் குழலும் வாசித்து 'சேர்ந்துநடனமாடினர்'. முதியவர்களையோ இளைஞர்களையோ, பிரஸ்பிடருக்கும் போப்புக்கும் பழமையான சடங்குகளிலிருந்து தடைசெய்யும் வலிமை யாருக்கும் கிடையாது. பிறப்பு, திருமணம், இறப்பு, தயிர் கடைதல், பயணம் கிளம்புதல், விதைத்தல் போன்ற எல்லாவித நிகழ்ச்சிகளின்போதும் தீயவிளைவுகளைத் தவிர்க்கும் நூற்றுக்கணக்கான மந்திரங்களும் முறைகளும் அப்பொழுது இருந்தன.

அற்புதம் (Miracle) என்பது அன்றுட நிகழ்ச்சியாக ஸ்காட்லந்தில் கருதப்பட்டது; கற்பனை குறைந்த, நம்பிக்கையில்லாத இங்கிலாந்தைக் காட்டிலும் இங்கு அது அதிகம் நிலவியது. பேய், சகுனம், பொய்த்தோற்றம் ஆகியவை

ஸ்காட்டிஷ் மக்களின் வாழ்வில் மிகவும் சாதாரணமானவை. மனிதனின் சாதாரண விவகாரங்களில் உயிர்பெற்றுத் திரும்பிய பிணங்கள் பங்கெடுத்துக் கொள்வது விரிவாக வருணிக்கப்பட்டது; நம்பப்பட்டது. மனித நடமாட்டமில்லாத சதுப்புப் பகுதியில் ஒரு புதிய மனிதனை ஸ்காட்லந்துக்காரன் கண்டால் அவன் உண்மையான மனிதன்தானா அல்லது பொய்யுருவா என்று மூளையைக் குழப்பிக்கொள்வான்; ஹோமர் காலத்திய கிரேக்கர்களின் நிலைதான். 'அட்டைக் கறுப்புச் சாத்தான்' மாலைவேளைகளில் வீட்டுக்கதவுக்கு வெளியே இருட்டில் மறைந்து நிற்பதையும், கோயில்மதிலுக்கு வடபுறமாகக் குதித்து ஓடுவதையும் அவன் அடிக்கடி கண்டான். ஊருக்கு அப்பால் இரகசியமாகக் கூடி, படைகளால் தாக்கப்பட்ட அம் மனிதர்கள்—அவர்களது வரலாற்றுசிரியர் உட்ரூ (Wodrow) இதற்கு ஓர் உதாரணம்—விந்தைநிகழ்ச்சிகளைத் தம்மை மறந்து, வாய்திறந்து கேட்டனர். தேவதைகள், பிசாசுகள், ஆவிகள் ஆகியவற்றில் அவர்களுக்கு அதிக நம்பிக்கை. மத குருக்கள் தங்களது சபைகளில் இத்தகைய நம்பிக்கைகளுக்கு ஊக்கமூட்டினர். ஆடுமேய்ப்பதற்காகக் குன்றுகளுக்குச் சென்று, பலமணி நேரத்தைத் தனிமையில் கழிக்கும் சிறுவர்கள் வேடிக்கையான அழகான கற்பனைகளில் திளைத்தனர். 'மனிதவாடையே இல்லாத ஓர் ஒதுக்குப்புறத்தில் ஒரு நாள் ஆடுமேய்த்துக் கொண்டிருந்தபொழுது ஓர் அழகிய மனிதர் அவன்முன் தோன்றினர்; நிறையப் பிரார்த்தனை செய்யவேண்டும் என்றும் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை கூறினர்; அவர் ஏசு நாதரே என்று அவன் நினைத்தான்' என்று ஒரு பையனைப் பற்றி உட்ரூ 1704-ல் எழுதினர். ஒரு சமயம் கிணற்றில் ஒரு பையன் மூழ்கி மூச்சுத்திணறிக் கொண்டிருந்தான்; 'ஓர் அழகிய மனிதர் அவன்கையைப் பிடித்து வெளியேஇழுத்து அவனைக் காப்பாற்றினர். அப்பொழுது அருகில் யாருமே இல்லை; எனவே, இது ஒரு தேவதூதனே என்று அவர்கள் முடிவு செய்தனர்' என்று மற்றொரு பையனைப்பற்றி அவர் அடுத்தஆண்டு எழுதினர்; இது, டேவிட் ஹ்யூம், ஆடம் ஸ்மித், எடின்பரோ ரெவியூக்காரர்கள் ஆகியோர் வாழ்ந்த ஸ்காட்லந்து அன்று; பர்ன்ஸ், வால்டர் ஸ்காட் ஆகியோரின் ஸ்காட்லந்தும் அன்று; அவர்களுக்கெல்லாம் முந்திய, பழைய ஸ்காட்லந்து. ஆயினும், அவர்களது எழுத்துகளுக்கெல்லாம் கருப்பொருள் தந்தது இதுதான்.

லோலந்தில் நிலவிய பண்டைய இயற்கைநிலைமைகள், பண்டைய நம்பிக்கைகளையும் இயற்கைக் கற்பனைகளையும்

தோற்றுவித்தன; லோலந்திலேயே இது இவ்வாறுயின் ஹைலந்தைப்பற்றிக் கூறவே வேண்டாம். ஏனெனில், மலைப்பகுதிகளின் தேவதைகள், படகுக்கு அடியில் ஆழமான நீரில் கண்ணுக்குத்தெரியாமல் வதியும் உருவற்ற பேய், வருவது உரைத்தல், சகுனங்கள் ஆகியவைபோன்ற, மனித வாழ்வோடு இரண்டறக் கலந்துநின்று எல்லாவற்றுக்கும் தாயகமாக அன்று விளங்கியது ஹைலந்துதான். லோலந்தியர்கள் நுழையாத அந்த ஹைலந்து மலைப்பகுதிகள் பயங்கரமானவை; அங்குச் சாலைகள் கிடையா; அதன் புவியியல்அமைப்பு இன்னும் ஆராயப்படவில்லை. அங்குச் சென்ற வெகு சிலரில் பெய்லி நிகோல் ஜார்வி ஒருவர். தனது பிரசித்திபெற்ற பயணத்தை இவர் அப்பகுதிகளில் மேற்கொண்டபொழுது இவரது உள்ளமெலாம் அச்சத்தால் நடுங்கிற்று. அங்குச் சென்ற லோலந்தியர் சிலரும்கூட இவ்வாறே நடுங்கினர். அம் மலைப்பகுதிகளில் வசித்தவர்கள் கெல்ட்டிக் குலத்தினர். (tribes). அவர்கள் வேறொரு மொழி பேசினர்; வேறோர் உடை அணிந்தனர்; தெற்கு ஸ்காட்லந்துக்கு ஆயிரம் ஆண்டுகள் முந்திய ஒரு சமுதாயத்தையும் சட்டங்களையும் கொண்டிருந்தனர். கெர்க்குக்கோ (kirk) ஆன்அரசிக்கோ கீழ்ப்படியாத இவர்கள், தங்களது குலத்தலைவர்களை, குலப் பிரிவை, (clan), பழக்க வழக்கங்களை, மூடநம்பிக்கைகளை உயிருக்கும் மேலாக மதித்தனர். ஒரு தலைமுறைக்குப்பின் ஹைலந்தில் முதன்முறையாக ஒரு நல்ல சாலையை அமைத்தவர் தளபதி வேட் (Gen-Wade). அதற்கு முன் அப்பகுதிகளில் இயற்கையின் இருண்ட, சிறந்த, எதிர்ப்பில்லாத ஆட்சி நடைபெற்றது; அவ்வியற்கையைக் கண்டு ரசித்தவர்கள்கூட அப்பொழுது கிடையாது. அது பேரரசு செலுத்திய மூலைகளில் மனிதன் அமர்ந்திருந்தான்.

ஆப்பிரிக்காவின் தூரத்து மூலைகளைப்பற்றிய விவரங்களை இன்று நாம் ஒரு புத்தகக்கடையில் வாங்க முடியும். ஆனால் அன்று ஹைலந்தைப்பற்றி இலண்டனில்—எடின்பரோவில் கூட—ஒன்றுமே தெரியாது. அதைப்பற்றி ஒரு சுமாரான நூல்கூடக் கிடையாது. அடுத்த தலைமுறையில் வெளியான திரு. பர்ட்டின் (Burt) கடிதங்கள்தாம் இக்குறையை ஓரளவு தீர்த்தன. ஸ்காட்லந்தைப் பற்றிய மோரெர் (Morer) எழுதிய நூலின் முதல் சில பக்கங்களிலிருந்து, தமது கைக்குள் வராத தமது விநோதமான தீவின் வடக்கத்திய முனையைப் பற்றி ஆன் காலத்திய ஆங்கிலேயர்கள் ஓரிரண்டு விஷயங்களைத் தெரிந்துகொண்டனர்:

'ஹைலந்தில் கணிசமான அளவு தானியம் விளைகிறது. ஆயினும், அவர்களது எண்ணிக்கைக்கு அது போதாது. ஆகவே, அவர்கள் ஆண்டுதோறும் தங்களது மாடுகளுடன்—அவர்களுக்கு ஏராளமான மாடுகள் உண்டு—கீழிறங்கி வந்து, லோலந்துக்காரர்களுடன் வியாபாரம்செய்து, தங்களது தேவைக்குப் போதுமான ஓட்ஸ், பார்லி ஆகியவற்றை வாங்கிக்கொண்டு திரும்புவர். .....ஆண்டில் ஓரிரண்டு தடவைகள் அவர்கள் பெரும்அளவில் கூடி, லோலந்துப் பகுதிக்கு இறங்கி வந்து, அங்குக் கொள்ளையடித்துத் திரும்பிச் சென்று கலைந்து போவர். இதை அவர்கள் மிகமிக அமைதி யாகச் செய்வர்; ஏனெனில், கொள்ளையடித்து மகிழ்வது அவர் களுக்கு இயற்கையானது.'

1705 நவம்பரில் டஃபோ, எடின்பரோவிலிருந்து ஹார் லிக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் ஹைலந்துக்காரர்கள் பற்றிய தனது கருத்தைத் தருகிறார்:

'அவர்கள் பயங்கரமான ஆட்கள். நமது மாட்சிமை தங்கிய அரசிக்கு இவர்களில் 25,000 பேர் ஸ்பெயினிலும் இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஏனெனில், இவர்களைப் போலவே ஸ்பானிஷ்காரர்களும் பெருமிதம் படைத்த அநாகரிக மக்களே. இவர்கள் எல்லோருமே பெரிய கனவான்கள்; யாரும் தம்மைப்பற்றி அலட்சியமாகப் பேசுவதைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள்; இவர்களின் துடுக்குத்தனத்துக்கு எல்லையே கிடையாது. இவர்களில் ஒருவன் தனது மலைஉடையுடன் உடைவாள், கேடயம், பிஸ்டல், இடுப்பில் குத்துவாள், தடி எல்லாம் ஏந்தி, ஒரு பிரபுவைப் போல நன்றாக நிமிர்ந்து, திமிராக ஹைதெருவில் நடந்து—எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், ஒரு பசுவை ஓட்டிக்கொண்டு—வருவதைக் கண்டால் அந்த கேலிக்கூத்தை எப்படி வருணிப்பது!'

லோலந்தியருடன் வியாபாரம் செய்யாமல், தனது கால் நடைகளை ஓட்டிப் போகாமல், வீட்டில் யாருடைய பார்வை யும் படாமல் இருக்கும்பொழுது இந்த மலைக்குலமனிதன் எத்தகைய வாழ்வு வாழ்ந்தான்? மலைக்குலத்தின் வயல்கள் மக்களின் வயல்கள் என்றும், அங்கு அவர்கள் சுதந்தரத் துடன் வாழ்ந்தனர் என்றும், 'நாற்பத்தைந்துக்குப்' பிறகு திடீரென்று கொடிய எண்ணங்களால் உந்தப்பட்டு இக் குலங்களின் தலைவர்களால் வயல்கள் அபகரிக்கப்பட்டன என்றும் கருதுவது தவறு. உண்மையில், குலத்தலைவன்

டாக்ஸ்மன் (tacksman) அல்லது குத்தகைக்காரனிடமிருந்து, ஆன் காலத்திய விவசாயி ஒரு சிறு துண்டுநிலத்தைக் கீழ்க் குத்தகைக்கு வாங்கினன். இந்தக் கீழ்க்குத்தகையின் மதிப்பு வழக்கமாகப் பொறுக்கமுடியாததாக இருந்தது. மலைச்சரிவு வயலிலோ மண்ஆழம் கிடையாது; கற்கள் நிறைந்திருந்தன; வெள்ளத்தில் மண் அடித்துப்போகப்பட்டு விட்டது; உரம் இடப்படவில்லை; தெற்கு ஸ்காட்லந்தைக் காட்டிலும் மிகவும் பழைய காலத்திய விவசாயக் கருவிகளையும் முறைகளையும் கொண்டிருந்தனர்; அதாவது விவசாயியின் சிறு பண்ணை என்பது ஒரு துண்டுக்கரம்பும் ஓர் ஓட்டைக் குச்சுமே. அது வேறு எப்படி யிருக்கமுடியும்? ஏனெனில், மக்கட்தொகை மிகவும் குறைவே ஆயினும், அப் பள்ளத்தாக்குகளைப் பொறுத்தவரை அது அதிகம்; நல்ல விளைநிலம் அவ்வளவு குறைவு. மக்கட்தொகை ஏறஏற, சிறுசிறு பண்ணைகள் மேலும் மேலும் பிளவுசெய்யப்பட்டன; இதன் விளைவு ஆபத்தாயிற்று. சாலைகள் அமைத்தல் அல்லது இராணுவ, அரசியல் ஆக்கிரமிப்பு மூலமாக ஹைலந்தானது வெளி உலகுடன் இணைக்கப்பட்டிருக்குமேயானால், தங்களது வாழ்க்கைமுறையிலும் மாறுதல் சாத்தியமே என்ற எண்ணத்தை இம் மலைக்குலமக்கள் பெற்றுப் பெரிய அளவில் இடம் பெயர்ந்திருப்பர் என்று எல்லோரும் எளிதாகக் கூறுவர். ஆனின் ஆட்சியில் ஒருதுளி மக்களே முரட்டு வேலைகள் செய்வதற்காக லோலந்திற்கு வந்து குடியேறினர்; அதே போல் மற்றொரு துளி ஐரோப்பாவுக்குச் சென்று 'ஐரிஷ்' ரெஜிமென்ட்டில் சேர்ந்து, பிரெஞ்சுக்காரர்கள் தந்த சம்பளத்தில் காலம்தள்ளிற்று. இந்த ரெஜிமென்ட்டின் தீரச் செயல்களுக்கு ஒரு முக்கியக் காரணம் இதில் இருந்த ஸ்காட்டிஷ் ஹைலந்துக்காரர்கள்தாம்.

தனது குலத்தைச் சேர்ந்தவர்களின்மீது எல்லா அதிகாரமும்—மரணதண்டனை விதிக்கும் அதிகாரமுள்பட—தலைவனுக்கு உண்டு; அவ்வதிகாரத்தை அவன் முழுவதும் பயன்படுத்தித் தனது குடிகள் தம்மைக்கண்டு அஞ்சி நடுங்குமாறு செய்தான். குடிகளின் பரம்பரை விசுவாசமும் அன்பும் தலைவனின் அதிகாரப்பிடியை மேலும் வலிவுடையதாக்கின. ஆனால் ஒரு தலைவன் கொடுங்கோலனா அல்லது அன்புடைய தந்தையா அல்லது இவ்விரண்டுக்கும் இடைப்பட்டவனா என்பது நிச்சயமற்ற அவனது மனிதஇயல்பைப் பொறுத்தது. தனது படையைப் பலம் குன்றுமல் வைத்திருப்பதற்காக லூயி XIV எவ்வாறு தனது விவசாயிகள்மீது வரி விதித்தாரோ, அதேபோல் குலத்தலைவன் தனது பரிவாரங்கள் புடை

சூழச் சுற்றிவந்தான்; தனது குடிகளின் பணத்தைக் கொண்டு இந்தச் சோம்பேறிப் பரிவாரத்துக்கு உணவு, உடை, சம்பளம் முதலியவை அளித்துவந்தான்; ஆனால், வாழ்வில் நல்ல சிக்கனத்தையும் அமைதியான போக்கையும் கடைப்பிடிப்பது என்பது, சொந்தப் பெருமைக்கும் குலப்பெருமைக்குமே தலையாய முக்கியத்துவம் கொடுத்து வந்த ஒரே இனத்தினரால் போற்றப்பட்டிருக்காது.

ஹைலந்துக் குலத்தலைவர்களில் பலர் பிரபுக்களாயுமிருந்தனர்; இவர்களுக்குப் பெரும் ஆர்ஜில்கோமகன் (Argyle) ஓர் உதாரணம். இவர்களுக்கு எடின்பரோ அரசியலில் ஓர்இடம் உண்டு; இவர்கள் வாழ்வில் பிரெஞ்சு அல்லது ஆங்கிலேயக் கலாச்சாரக்கலப்பு இருந்தது. ஆயினும், பண்பாடுமிக்க தலைவனுக்கும் பண்பாடற்ற குடிகளுக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன; அவைகுலப்பெருமை, ஹார்ப்வாத்தியத்தில்குழலில் விருப்பம், கதைகள், பாடல்கள் ஆகியன. பழைய சண்டைகளும் கருத்துகளும் மலைக்குலக் கவிஞர்களால் கதைகளாகவும் பாடல்களாகவும் வடிக்கப்பட்டன; இறவாத கேலிக் மொழி இலக்கியம் உருவாயிற்று. பள்ளத்தாக்கின் ஒதுக்குப் புறத்திலும் கடலோரக் குன்றுகளின்மேலும்தான், தீவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் அதிக வறுமையும் காட்டுமிராண்டித்தனமும் காணப்பட்டன. என்றாலும், அங்குத்தான் கவிதையும் கட்டுக்கடங்காத கற்பனையும் காணப்பட்டன.

இத்தகைய நிலைமைகள் திருச்சபைக் கூட்டத்தின் (Church Assembly) ஆர்வத்தையும் கிறிஸ்தவ அறிவைப் பரப்பும் சங்கத்தின் ஆர்வத்தையும் தூண்டின; 1704-க்குப் பிறகு நூல் நிலையங்கள், பள்ளிகள், பிரஸ்பிடீரிய சங்கங்கள் ஆகியவற்றை ஹைலந்தில் நிறுவுவதற்கு ஆயிரக்கணக்கான பவுன்கள் திரட்டப்பட்டன—ஹைலந்தில் பிரஸ்பிடீரிய சமயம், ரோமன் கத்தோலிக்க சமயம், எபிஸ்கோப்பிய சமயம், கிறிஸ்துவுக்கு முந்திய ஆதிசமயம் ஆகிய எல்லாம் காணப்பட்டன. இவை எந்தவிகிதத்தில் காணப்பட்டன என்பதைக் கூற முடியாது—உடனே ஓரளவு வெற்றிகிட்டியது; ஆனால், சிலவிடங்களில் குலத்தலைவனின் உத்திரவின் படி இச்சங்கமானது நசுக்கப்பட்டது; வேறு சிலவிடங்களில் அது காலப்போக்கில் இறந்துபோயிற்று. தெற்கிலிருந்து ராணுவ, அரசியல் படையெடுப்புக்காரணமாக மலைக்குல வாழ்வுமுறையானது வெற்றிகரமாக ஒடுக்கப்பட்டபின்

அதாவது 'நாற்பத்தைந்துக்குப்' பின், பிரஸ்பிடீரிய மதப் பிரசாரத்துக்கு வேண்டிய சூழ்நிலை கிட்டியது; ஹைலந்தில் உண்மையான பைபிள் பிரசாரம் நடைபெற்றது.

ஸ்காட்லந்தில் நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது தான், தீவு முழுவதும் நெருங்கிய முறையில் ஐக்கியமுற வேண்டும் என்ற பழைய பிரச்னைக்கு ஓர் இறுதித்தீர்வு காணும் வேளை வந்தது. அந்தத் திட்டத்தில் முரட்டுத்தன மான எட்வர்ட் மன்னர் தோற்றுவிட்டார்; கிராம்வெல்லின் கரங்களும் மரணத்தில் தமது பிடியைத் தளர்த்தின; வன்முறை தோற்ற அவ்விடத்தில், ஆன் அரசியின் அமைதி யானமுறை வென்றது; பெண்மைக்குப் பெருமை யூட்டும் முறை அது. இரு நாடுகளுக்குமிடையே சுதந்திரமான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையானது 1707-ல் அமுலாக்கப்பட்டது. இவ் விரு நாடுகளின் பாராளுமன்றங்களும் வாணிகமும் ஐக்கிய முற்றன; நவீன ஸ்காட்லந்தை உருவாக்கிய அந்த இயக்கங் களுக்கு அவ்வுடன்படிக்கை வழிதிறந்தது.

மேலும் படிப்பதற்குரிய நூல்கள் :

H. G. Graham, Social Life of Scotland in the Eighteenth Century. என்னுடைய England under Queen Anne (Ramillies and the Union with Scotland) என்ற நூலின் இரண்டாவது தொகுதியில் இப் பொருள்பற்றிய வேறு பல நூல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

II. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்காட்லந்து

ஜார்ஜ் III, 1760—1820

'முன்னேற்றம்' (Progress) என்பது விக்டோரியாக் காலத்து முன்னோர்களைவிட இருபதாம் நூற்றாண்டினரான நமக்கு நன்கு தெரியும். கெட்டதிலிருந்து நல்லதுக்கோ அல்லது நல்லதிலிருந்து மிக நல்லதுக்கோ மாறுவது என்பதன்று அதன் ஒரே பொருள். உதாரணமாகத் தொழிற்புரட்சியோடு சம்பந்தப்படுத்திப் பேசப்படும் 'முன்னேற்றம்' மனிதனின் நன்மைக்கே முழுவதும் வகைசெய்தது என்று கூற முடியாது. ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பாதியில் ஸ்காட்லந்தில் ஏற்பட்ட 'முன்னேற்றம்' வெகு துரிதமானது மட்டுமன்று; அதன் வளர்ச்சிப்போக்கும் நல்லதை நோக்கியே அமைந்திருந்தது. எதிர்காலத் தீமைக்கான விதையும் அதன் கருவிலிருந்தது என்பதை நாம் மறுக்கவில்லை; ஆயினும் 1800-ம் ஆண்டு ஸ்காட்லந்து, 1700-ம் ஆண்டு ஸ்காட்லந்தைவிட ஒரு நல்ல இடமாக இருந்தது. பொதுமக்களை அழுத்தி நசுக்கிக் கொண்டிருந்த பொல்லாத வறுமையும், மேல்வகுப்பினரையும் பிடித்திருந்த பற்றுக் குறையும் விலக்கப்பட்டன. இதனால், மிகச்சிறந்த சாதனைகளை எட்டுவதற்கு ஏற்றமுறையில் ஸ்காட்டிஷ் மக்கள் வாழ்க்கைச் சுமையிலிருந்து விடுதலைபெற்றனர்.

இந்த அத்தியாயத்தின் முதல்பகுதியில் ஸ்காட்லந்தில் நிலவிய வறுமைநிலையைப் பற்றிப் பார்த்தோம். அந்நிலையிலிருந்து பெற்ற விடுதலையானது விவசாயமுறைகளில் ஏற்பட்ட புரட்சி காரணமாகவே பெரும்பாலும் நிகழ்ந்தது. அதே காலத்தில் இங்கிலாந்தின் கிராமப்புறங்களில் நடைபெற்றுவந்த இயக்கத்தையே இது ஒத்திருந்தது. என்றாலும் அதை விடவும் பெரியதொரு மாறுதல் இது. ஏனெனில்,

அந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்காட்டிஷ் விவசாயமானது ஆங்கிலேய விவசாயத்தைவிட மிகவும் படுமோசமான நிலையிலிருந்தது. சில ஸ்காட்டிஷ் நிலப்பிரபுக்களின் செயல் காரணமாக அபிவிருத்தி தொடங்கிற்று; இவர்கள் ஆங்கிலேய உழவர்களையும் குடியானவர்களையும் கொண்டு வந்து, தமது குத்தகைதாரர்களுக்கு நவீனமுறைகளைக் கற்றுத் தரும்படி அமர்த்தினர். இச்செயலின் வெற்றிகரமான விளைவுகளை நாம் நெப்போலியப் போர்களின்பொழுது காணமுடிந்தது; ஸ்காட்லந்தில் புதிதாக உருவாக்கப்பட்ட முறைகளை ஆங்கிலேயர்களுக்குக் கற்றுத் தருவதற்காகப் பண்ணை ஸ்டுவார்டுகளும் உழவர்களும் லோதியன் பகுதிகளிலிருந்து இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டனர். 1760-க்கும் 1820-க்குமிடையில் முன்பு, பின்பு எப்பொழுதைக் காட்டிலும் அதிக வேகத்துடன் ஆங்கிலேய விவசாயம் முன்னேறிக் கொண்டிருந்தது. ஆயினும், அதே ஆண்டுகளில் ஸ்காட்டிஷ் விவசாயம் ஆங்கிலேய விவசாயத்தை எட்டிப் பிடித்துத் தாண்டிச் சென்றது.

இங்கிலாந்தைப் போலவே ஸ்காட்லந்திலும் மாறுதலுக்கு முதன்முதலில் வித்திட்டவர்கள் நிலப்பிரபுக்களே; இவர்களது சொற்ப மூலதனமும் முயற்சியும் வெளிஉலக அறிவும் இதற்குத் துணைநின்றன. பொதுஉழவு செய்யப்பட்ட 'துண்டு நில' முறையானது (முன்பக்கங்களில் இது விளக்கப்பட்டுள்ளது) முதலில் ஒழிக்கப்பட்டது; ஆங்கிலேயத் 'திறந்த வயல்' முறையைவிட மிகவும் பழமையானதும் பிற்போக்கானதுமான முறைகளில் இது நடத்தப்பட்டு வந்தது; தனியார்முயற்சிக்கு இது தடையாக விளங்கிற்று; காலத்துக் கொவ்வாத நிலமானிய முறையினுல் நசுக்கப்பட்ட குட்டிக்குடியானவர்களுக்கு நிலக்குத்தகையில் உத்தரவாதத்தையோ அல்லது முன்னேற்றத்துக்கான ஊக்கத்தையோ இது தரவில்லை. முன்பு இங்கிலாந்திலிருந்த உரிமைப் பத்திரக் குடியானவர்களைப் (copy holders) போலன்றி, ஸ்காட்டிஷ் குத்தகைதாரர்களுக்கு நிலத்தில் சட்டப்படியான உரிமையொன்றுமில்லை; அவர்களுக்குக் குறுகியகாலக் குத்தகைமட்டுமே இருந்தது; சிற்சில சமயங்களில் அதுவுமில்லை. ஆயினும், இந்தக் கெட்டமுறையில்கூட ஒரு நன்மை இருந்தது: அதாவது, குத்தகை ஒப்பந்தத்தைச் சுலபமாக முடிவுக்குக் கொண்டுவரலாம். அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று தீவிரமாகக் கருதுகிற ஒரு நிலப்பிரபு எவ்விதத் தடையுமின்றித் 'துண்டுகளை' அகற்றி, நிலத்தை வசதிமிக்க பண்ணை

175163

யாக மாற்றியமைக்க முடியும். பிறகு, இவைகளைக் குடியான வர்களுக்குப் பத்தொன்பது அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகட்கு நீண்டகாலக் குத்தகைக்கு விடமுடியும். இந்தப் பெரிய சீர்திருத்தம் காரணமாக, ஸ்காட்டிஷ் மக்களிடம் நீண்ட காலமாக உறங்கிக்கிடந்த சக்தியையும் முயற்சியையும் பயன்படுத்துவதற்கான எண்ணம் முதல் தடவையாகக் குத்தகைதாரர்களிடம் தோன்றியது.

சீர்திருத்தத்துக்குப் பலியாகச் சில பழைய குத்தகைதாரர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் அபாயமும் இருக்கத் தான் செய்தது ; இங்கிலாந்திலும்கூட வேலியமைப்பு செய்யப்பட்டபொழுது நடந்தது இதுதானே ! உதாரணமாக, முன்பு பத்துக் குத்தகைதாரர்கள் விவசாயம் செய்துவந்த ஒரு 'துண்டு நிலப்' பண்ணைக்கு இப்பொழுது வேலியிட்டு, பாதிப் பேர்களிடையில் அதைப் பங்கிட்டால், மற்றவர்கள் கதி என்ன? சிலர் செழித்து வளர்ந்துகொண்டிருக்கும் நகரங்களுக்குச் சென்றனர் ; வேறு சிலர் குடியேற்றநாடுகளுக்குச் சென்றனர். ஐக்கியம் ஏற்பட்டபின் அங்குச் செல்வதற்கு ஸ்காட்டிஷ்காரர்களுக்கு வழி திறக்கப்பட்டது. ஆனால், பொதுவாகச் சொல்லப்போனால் ஸ்காட்லந்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மக்களின் எண்ணிக்கை பெருகியதே யொழியக் குறையவில்லை. விவசாய நிலம் சதா அதிகரித்ததுதான் இதற்குக் காரணம். மேலும், புதிதாகத் திருத்திப் பயிரிடப்பட்ட நிலங்கள் மிகவும் சிறந்தவையா யிருந்தன; ஏனெனில், செழிப்பு மிக்க பள்ளத்தாக்குகளில் அவை அமைந்திருந்தன. செயற்கைமுறையில் வடிகால் வசதி மட்டும் அமைத்துவிட்டால், இயற்கைமுறை வடிகால்வசதியைக் கொண்டிருந்த பழைய மலைச்சரிவு நிலத்தைவிட இவை சிறந்தவை ஆகிவிடும்.

பழைய நிலங்களையும் புதிய நிலங்களையும் சுற்றி இப்பொழுது கற்சுவர்களும் உயிர்வேலிகளும் எழுப்பப்பட்டன; உயரமான வரப்புமேடுகள் நிரவப்பட்டன; வயல்கட்கு வடிகால் வசதி அமைக்கப்பட்டு, சுண்ணும்புச் சத்து சேர்க்கப்பட்டு எருவிடப்பட்டது; நீண்ட வரிசையாகப் பூட்டப்பட்ட எலும்புந்தோலுமான எருதுகளுக்குப் பதில் ஓரிரு நல்ல குதிரைகள் இப்பொழுது ஏரை இழுத்தன; குதிரைமயிர் அல்லது நாரால் செய்யப்பட்ட கயிற்றுக்குப் பதிலாகத் தோல் சேணத்தையும், மரக்கலப்பைக்குப் பதில் இரும்புக் கலப்பையையும், ஸ்லெட்ஜுக்குப் பதிலாக வண்டியையும் உப

யோகிக்குமளவுக்கு மக்களின் நிலை சற்று உயர்ந்தது. வயலில் விளைந்த உருளைக்கிழங்கும் தோட்டத்தில் விளைந்த காய்கறி களும் அவர்களின் உணவுக்குச் சுவையூட்டின. கிழங்கு களும் மற்றப் பயிர்களும் குளிர்காலத்தில் மாடுகளுக்குத் தீவன மாயின. மரங்கள் பெரும் எண்ணிக்கையில் நடப்பட்டன; இதனால், காற்றின் வேகம் குறைந்தது; தேவையான மரமும் கிடைத்தது; ஸ்காட்லந்தின் மலைச்சரிவுகளில் புதிய காடுகள் ஏராளமாகத் தோன்றின.[1]

1751-ம் ஆண்டின் சுங்கச்சாலைச் சட்டத்துக்குப் (Turnpike Act) பின்னர்ச் சாலைகளில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டது. இதனால், குடியானவர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் வியா பார வசதிகள் பெருகின. விவசாயச் செழிப்பின் காரணமாக நல்ல இலாபம் கிடைத்தது; இம் மூலதனம் நிலஅபிவிருத்திக் காகச் செலவிடப்பட்டது. ஜார்ஜ் III-ன் ஆட்சியின் முன் பகுதியில் கவுண்டி நகரங்களில் பாங்குகள் நிறுவப்பட்டன; லேர்டுகளும் குடியானவர்களும் சேர்ந்து செய்துவந்த மாறுதல்களுக்கு வேண்டிய நிதியுதவியை இவை அளித்தன. கிளாட்சைடு (Clydeside) தொழில்துறையிலும் வாணிகத் துறையிலும் வளர்ந்ததால் விவசாயப்பொருள்களுக்கு ஒரு மார்க்கெட் கிடைத்தது; இதனால் நிலஅபிவிருத்திக்கு மேலும் தேவையான மூலதனம் உண்டாயிற்று. கிளாஸ்கோ நகரத்துக் (Glasgow) கப்பல் முதலாளிகளான 'புகையிலைப் பிரபுக்க'ளும், பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து பெருஞ் செல்வத் தோடு திரும்பிய ஸ்காட்டிஷ்காரர்களும் பெரும் பண்ணைகளை வாங்கி அபிவிருத்தி செய்தனர். சுருக்கமாகச் சொல்லப் போனால், பொருளாதார, சமூக வாழ்வின் எல்லாத் துறை களும், ஒன்றுக்கொன்று ஊறு செய்யாமல், ஒரே சமயத்தில் வளர்ச்சியுற்றன; ஏனெனில், அந்த நல்ல காலத்தில் தொழி லும் வாணிகமும் விவசாயத்துக்குப் போட்டியாக விளங் காமல் துணையாகநின்றன.

இவ்வாறு, ஸ்காட்டிஷ் மக்களின் உயிரையும் உரத்தை யும் உறிஞ்சிய பஞ்சங்கள் முடிவுக்குவந்தன. முன்பைவிட, உண்மைக் கூலி (real wage), விவசாய லாபம், குத்தகை

[1] 1773-ல் ஸ்காட்லந்தில் பயணம் செய்த டாக்டர் ஜான்சன் அங்கு மரங்களே இல்லாததுபற்றி எப்பொழுதும் கேலி செய்வது வழக்கம். பெருந் தோப்புகள் ஏற்கெனவே நடப்பட்டுவிட்டன; ஆனால், அவர் அங்குச் சென்ற சமயம் அவை இளங் கன்றுகள். முப்பது ஆண்டுகட்குப் பின்னர் அந் நாட்டின் பல பகுதிகளின் தோற்றமே பெரிய அளவில் மாற்றப்பட்டு விட்டது.

ஆகிய எல்லாம் இப்பொழுது பெரிதும் அதிகரித்தன. உருளைக் கிழங்கு, காய்கறிகள், பாலடைக்கட்டி, சில சமயங்களில் இறைச்சி ஆகியவை ஏழையின் கஞ்சியோடும் பாலோடும் இப்பொழுது சேர்ந்தன. கஞ்சியும் பாலும் மக்களின் முக்கிய உணவாக இன்னும் இருந்துவந்தாலும்கூட, முன்னைவிட இப்பொழுது அவனது கிண்ணம் நிறைந்திருந்தது. இங்கிலாந்தைப் போலவே ஸ்காட்லந்திலும்கூட தேயிலையானது ஏழையின் இல்லத்தில் புகுவதற்குக் கள்ளக்கடத்தல்காரன் வழிசெய்தான். ஸ்காட்லந்தியரின் வீடுகள் இன்னும் கேவலமான நிலையிலேயே இருந்தன; ஆயினும், அங்குமிங்கும் பெரும் அபிவிருத்திகள் இருக்கத்தான் செய்தன. சில பகுதிகளில் கருங்கற்களால் கட்டப்பட்ட பண்ணை இல்லங்கள், ஒன்று அல்லது இரண்டு அறைகளைக் கொண்ட குடிசைகள், அவைகளில் புகைபோக்கிகள், கண்ணாடி சன்னல்கள், படுக்கைகள், மேசை நாற்காலிகள், வெளியில் கக்கூசுகள் ஆகியவை புதியனவாகத் தோன்றின; முன்பு, தனது கால் நடைகளுடன் சேர்ந்து விவசாயி வாழ்ந்த குச்சு இப்பொழுது மறைந்து வந்தது. முன்பு, உணவு உடை உஷ்ணம் ஆகியவையின்மையால் எலும்புந் தோலுமாகவும் அழுக்கேறியும் சோம்பலுடனும் காட்சியளித்த ஸ்காட்லந்தியர் மறைந்தனர்; பர்ன்ஸின் (1759–1796) காலத்திய உடற்கட்டு வாய்ந்த ஸ்காட்லந்தியர் வந்து உதித்தனர்.

அதுமட்டுமின்றி, ஸ்காட்லந்துக்காரர்கள் இப்பொழுது சுதந்திர மனிதர்கள். செத்துக்கொண்டிருந்த நிலமானிய முறையின் இறுதி மூச்சு—இங்கிலாந்தில் இது நின்றுபோய்ப் பல நூற்றாண்டுகட்குப் பிறகுகூட ஸ்காட்லந்தில் நீடித்தது—1748-ல் 'பரம்பரை நீதியதிகாரத்துக்கு' (hereditable jurisdiction) முடிவுகட்டிய அந்தச் சட்டத்தோடு நின்றுபோயிற்று. லோலந்திலும் ஹைலந்திலும் பிரபுக்களும் மலைக்குலத் தலைவர்களும் தங்களது நீதிமன்றங்களில் தமது கீழ்க்குடிகளையும் குத்தகைதாரர்களையும் நினைத்தபடி விசாரணை செய்து வந்தனர்; அவர்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் காற்றோட்டமற்ற இருட்டறைகளில் அடைக்கப்பட்டனர்; மன்னனது நீதிமன்றங்களுக்குக்கூட இவ்வழக்குகளில் மேலதிகாரம் கிடையாது. 1745-ல் யாகோபிய லேர்டுகளும் குலத்தலைவர்களும் 'தங்களது ஆட்களைத் திரட்டுவதற்கு' இவ்வதிகாரங்கள்தாம் உதவிபுரிந்தன என்று நம்பப்பட்டது. ஆகவே, முன்றாண்டுகள் கழித்து இவை அகற்றப்பட்டன. இவைகளை முடிவுக்குக் கொண்டுவந்தது அரசியல் நோக்கமே என்றாலும்கூட,

இவைகளை ஒழிப்பதற்கான வேறு நல்ல காரணங்களும் ஏராளமாயிருந்தன.

'பரம்பரை நீதியதிகாரம்' தவிர வேறு பலவும்கூட ஹைலந்தில் மறைந்துபோயின. வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே ஸ்காட்லந்தின் மலைப்பகுதிகளில் சிறிதும் மாற்றமில்லாமல் நிலவிவந்த வாழ்க்கைமுறையும் சமுதாய அமைப்பும் 'நாற்பத்தைந்தாம் ஆண்டுக் கிளர்ச்சி' ஒடுக்கப் பட்டதும் அடுத்த சில ஆண்டுகளில் ஒரேயடியாக ஒழித்துக் கட்டப்பட்டன. குலஅமைப்பு, அகன்ற வாளும் கேடயமும் ஏந்திக் கில்ட்சட்டை (kilted) அணிந்த போர்வீரன், குலத் தலைவனின் பரம்பரையாட்சி ஆகிய எல்லாம் இறுதியாக மறைந்துபோயின. சட்டம், நிலஉரிமை முறை, கல்வி, சமயம் ஆகியவை ஹைலந்தியரையும் லோலந்தியரையும் எந்தஅளவில் ஒன்றுபடுத்த முடியுமோ அந்த அளவில் ஹைலந்தானது தனது வரலாற்றில் முதல்முறையாக ஸ்காட் லந்தின் இதர பகுதிகளுடன் ஒன்றுபட்டது. 1745-க்குச் சில ஆண்டுகள் முன்பே தளபதி வேட் அவர்கள் ஹைலந்தில் முதல்சாலைகளை அமைத்தார்; இதனால், லோலந்தின் பண்பாடு மலைப்பகுதிகளுக்குள் புகமுடிந்தது; பின்னால் வரப்போகிற பெருமாற்றத்துக்கு வித்திடப்பட்டது. அது மெதுவாக அமைதியாகச் சிறுகச்சிறுக வந்திருக்கும்; ஆனால், நீண்ட நாட்களாக அல்லல்பட்டுக்கொண்டிருந்த தெற்குப் பகுதி யானது யாகோபியப் படையெடுப்பினால் வெகுண்டெழுந்து, ஆயிரம் ஆண்டுகளாகக் கொள்ளையும் சூறையும் அடித்துத் தொல்லைவிளைத்துக் கொண்டிருந்த மலைக்குலங்களின் பொல் லாத செயலுக்கு இறுதி முடிவுகட்டியது.

போருக்காகவும் போரினாலுமே இதுவரை வாழ்ந்து வந்த ஒரு மக்கள்கூட்டம் இப்பொழுது நிராயுதபாணியாக்கப் பட்டது; அதே சமயம் அரசாங்கமானது ஹைலந்து ரெஜி மென்ட்டுகளை நிறுவி அம் மக்களின் போர்க்குணத்தை நல்ல வழியில் திருப்பிவிட்டது; இப்பொழுது ஆங்கிலேயர்களுக்கும் ஸ்காட்லந்தியருக்கும், கேல்களுக்கும் (Gaels) சாக்சானியர் களுக்கும் பொதுவாகப் போய்விட்ட பேரரசுக்கு இந்த ரெஜி மென்ட்டுகள் நல்ல பணிபுரிந்தன. குலத்தலைவர்கள், தெற்கி லிருந்த லோர்டுகளைப்போல் நிலப்பிரபுக்களாக மாற்றப் பட்டனர். இப்பொழுதுமுதல் நீதியும் நிருவாகமும் அரச ருடையவை ஆகி, தேசீய அடிப்படையில் அமைந்தன. சமுதாயத்தின் அமைப்பில் இப் பெருமாறுதல்கள் எளிதாக

ஏற்றுக்கொள்ளப்பட்டதைப் பார்த்தால், அம்மாறுதல்கள் நிகழ்வதற்கான காலம் ஏற்கெனவே வந்து காத்திருந்தது என்பது தெரிகிறது. கிளர்ச்சிக்குப் பிறகு சில ஆண்டுகள் வரை கொடுங்கோன்மையும் அடக்குமுறையும் தாண்டவ மாடின; இக் காலம்தான் ஸ்டீவன்சனின் நாவலில் (Kidnapped) வருணிக்கப் பட்டுள்ளது. குலத்தலைவர்களிடம் அவர்களது குடிமக்கள் கொண்டிருந்த அன்பும் விசுவாசமும் உருக்கமான முறையில் இக்காலத்தில் வெளிப்பட்டன. ஆனால், செல்லரித்துப்போன ஒரு சமுதாய அமைப்பை மீண்டும் நிறுவுதற்கான எந்தவிதமான பொதுமக்க ளியக்க மும் அங்கில்லை; மேலும், பழைய யாகோபியக் குலத்தலைவர் கள் ஐரோப்பாவிலிருந்து திரும்பிவர அனுமதிக்கப்பட்டு, புதிய நிலஉரிமை முறைப்படி அவர்களது நிலங்கள் அவர் களிடமே மறுபடியும் ஒப்படைக்கப்பட்டதும், விசுவாசம் பற்றி அவர்களது மனத்தில் தொடந்துவந்த போராட்டம் ஓய்ந்தது. இதுவரை தடைசெய்யப்பட்டிருந்த டார்ட்டான் என்ற மலைக்குலத்தினரின் ஆடை (tartan) இப்பொழுது மீண்டும் அனுமதிக்கப்பட்டது; ஏனெனில், அதனுடன் சம்பந்தப்பட்ட பெருமித உணர்வுகள் இப்பொழுது சமுதாயத்துக்கோ சட்டத்துக்கோ ஆபத்தாக விளங்க வில்லை.

இதற்கிடையில் பிரஸ்பிடீரிய மதப்பிரசாரகர்களும் பள்ளி யாசிரியர்களும் ஹைலந்தில் தமது பணியைத் தொடங்கி விட்டனர்; அங்கு அனுப்பப்பட்ட அரசாங்க அதிகாரிகளைக் காட்டிலும் இவர்கள் ஆரம்பத்திலிருந்தே அப் பிரதேசத்து மக்களிடம் அன்புடனும் சாமர்த்தியத்துடனும் நடந்து கொண்டனர். கல்வியறிவற்ற, ஆனால் கவிதைமனம் கொண்ட மலைவாழ்மக்களின் சிந்தனைக்கும் அறிவுக்கும் இப்பள்ளிகள் காரணமாக ஒரு புதிய வழிதிறந்தது. ஸ்காட் லந்தின் கிறிஸ்துவ அறிவைப் பரப்பும் சங்கத்தினால் (Scottish Society for Propagating Christian Knowledge) ஹைலந்துப் பகுதிகளில் எழுதுவதும் படிப்பதும் பரவின. இச் சங்க மானது ஆனின் ஆட்சியிலேயே அந்த மலைப்பகுதியில் தனது பணியைத் துவக்கியது. என்றாலும், கல்லோடனுக்குப் பிறகு குலப்பிரிவுகள் உடைத்தெறியப்பட்ட பின்னரே அது விரிந்த அளவில் செயல்பட முடிந்தது. ஹைலந்தில் இரு மொழிகள் தொடர்ந்து பேசப்பட்டாலும்கூட, சமயத்துறை யிலும் கல்வித்துறையிலும் ஸ்காட்டிஷ் சமுதாயத்தின் ஒற்றுமையானது அந் நூற்றாண்டு முடியுமுன்னேயே எய்தப்

பட்டுவிட்டது. ரோமன் கத்தோலிக்க சமயம் நிலவிய பள்ளத்தாக்குகளில் அதன் பிடி சற்றும் தளரவில்லை; ஆயினும் கிறிஸ்துவ சமயத்துக்கு முந்திய பண்டைச் சமயம் மறைந்துபோயிற்று.

ஹைலந்து வாழ்வின் பொருளாதாரத் துறையிலும் பெரும் மாறுதல் நிகழ்ந்தது; முன்பு சொல்லப்பட்ட கல்வித் துறை அபிவிருத்தியுடன் நெருங்கியமுறையில் சம்பந்தப் பட்டது இது. குல அமைப்புமுறையின்கீழ், வறண்ட அம் மலைப்பகுதிகளின் உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மக்கள்எண்ணிக்கை அதிகம். ஒவ்வொரு குலத் தலைவனும் தனது வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எண்ணினானே யொழிய, தனது குத்தகைகளை அதிகரிக்க எண்ணவில்லை. கொடிய வறுமையிலும், அடிக்கடி தோன்றும் பஞ்சத்திலும் வாழ்ந்து பழக்கப்பட்டுப் போன மலைவாசி, கேலிக் மொழி பேசப்படாத பகுதிகட்குச் சென்று குடியேற எண்ணவில்லை; அதற்கு வேண்டிய அறிவும் சந்தர்ப்பமும் அவனுக்கு வாய்க்கவில்லை. ஆனால், இப்பொழுது வந்த புதியகாலம் குடிப்பெயர்ச்சிக்குச் சாதகமாயிருந்தது. அமைதி யான நிலப்பிரபுவாக மாற்றப்பட்டுவிட்ட குலத்தலைவனுக்கு வேண்டியிருந்தது நிறைய ஆட்களன்று; பணம். இதுவரை அவனால் நசுக்கப்பட்டுவந்த குடிகள், தமது மலைகட்கும் கடலுக்கும் அப்பால் ஒரு செல்வமிக்க உலகு இருப்பதைப் புதிய சாலைகள் மூலமாகவும் பள்ளிகள் மூலமாகவும் தெரிந்து கொண்டனர். ஹைலந்தின் குடிப்பெயர்ச்சிக் காலம் துவங் கியது; பெரும்பான்மையோர் கானடாவுக்குச் சென்றனர். ஹைலந்தில் சின்னஞ்சிறு வயல்கள் போய், ஆட்டுப் பண்ணைகள் வந்தன. ஏழாவது பத்தாண்டில் ஹைலந்தி லிருந்தும் சுற்றியிருந்த தீவுகளிலிருந்தும் பெரும்எண் ணிக்கையில் மக்கள் வெளியேறினர்; 1782—1783-ல் ஏற்பட்ட கொடிய பஞ்சம் காரணமாக இக்குடிப்பெயர்ச்சி 1786–1788-ல் மீண்டும் ஏற்பட்டது. பண்டைச் சமுதாய அமைப்பின் கீழும் பஞ்சங்கள் ஏற்பட்டன; ஆனால், அதனால் மக்கள் இடம் பெயரவில்லை; காரணம், எப்படி எங்கே போவது என்பது மலைக்குடிகட்குத் தெரியாது.

இப்பொழுது சில மாவட்டங்களில் நிலப்பிரபுக்கள் தமது குத்தகைதாரர்களை நிலத்தைவிட்டு விரட்டி, குடிப்பெயர்ச் சிக்கு உதவினர். ஆனால், வேறு சில மாவட்டங்களில் உருளைக் கிழங்கைப் பயிரிடத் தொடங்கியும், கிறிஸ்துவ அறிவைப் பரப்பும் சங்கம் நடத்தி வந்த பள்ளிகளை எதிர்த்தும் மக்களின்

குடிப்பெயர்ச்சியைத் தடைசெய்ய முயன்றனர். இந்தச் சங்கத்தைச் சேர்ந்த பள்ளியாசிரியர்கள்தாம் குடிப்பெயர்ச் சிக்கு முக்கியக் காரணம். 'அறியாமையிலும் அடிமைத்தனத் திலும் மக்களைத் தங்களுடனேயே வைத்திருக்க' முயலுகிறார் கள் என்று கனவான்களைக் குறைகூறியவர்களும் இவர்கள் தாம். கடல் கடந்து சென்றுல்தான், அல்லது தமது மலைப்பகுதிகளையாவது விட்டுச்சென்றுல்தான், ஹைலந்துக் காரர்களின் வாழ்க்கைத்தரம் உயரமுடியும். அவ்வாறு வெளி யேற வேண்டுமானுல் ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டும்; அதற்குச் சங்கத்தினர் நடத்தும் பள்ளிகளில் அவர்கள் இப்பொழுது சேர்ந்தனர்.

'தாங்கமுடியாத அளவுக்குத் துரிதமாக மோசமடைந்து வந்த நிலைமைகளிலிருந்து தப்புவதற்கான இரு வழிகளை ஆங்கில மொழியும் கேலிக் (Gaelic) பைபிளும் காட்டின. ஹைலந்தியர்களுக்கே இயல்பான சுதந்திரத்துக்கு ஊறு செய்யாமல், அதை மிகவும் சிறப்பாக நடைமுறையில் அனுபவிப்பதற்கான வழிகளை அறப்பள்ளிகள் (Charity Schools) காட்டின. சுறுசுறுப்பும் அஞ்சாமையும் கொண்டவர் களுக்குக் கடலுக்கு அப்பால் ஒரு புதிய உலகத்தை ஆங்கில மொழி காட்டியது; தமது நாட்டிலேயே தங்கிவிட்டவர் களுக்கு, பைபிள் ஊட்டும் ஆறுதலைப் பெறுவதற்கான சுதந்திரவழியைப் பள்ளிக்கூடங்கள் காட்டின.'[1]

இங்கிலாந்து, ஸ்காட்லந்து ஆகியவற்றின் அரசியல், வாணிக அமைப்புகள் ஐக்கியமுற்றதால்மட்டுமே ஹைலந் தில் சமூகப் புரட்சி ஏற்படுதல், பிரிட்டிஷ் பேரரசில் ஸ்காட் லந்தியர் சென்று குடியேறுதல், கிளாஸ்கோ நகரின் அட்லாண்டிக்கடல் வாணிபம், இதன் விளைவாகக் கிளாட்சைட் தொழில்மயமாதல் ஆகிய எல்லாம் சாத்தியமாயின. விவசாயப் புரட்சியைப் போலவே இம்மாற்றங்கள் அனைத்தும் பெரும் பாலும் அந்நூற்றுண்டின் பின்பாதியிலேயே ஏற்பட்டன; ஆனுல், அக்காலத்தில் அவை வெகுதுரிதமாக நடை பெற்றன.

1707-ம் ஆண்டு ஐக்கியத்தின்பொழுது கிளாஸ்கோ ஒரு மார்க்கெட் நகரமாகவும் பல்கலைக்கழக நகரமாகவும் விளங் கிற்று. மக்கள்தொகை 12,500. ஹைலந்து மலைக்குலங்களுக்

[1] Miss M. G. Jones, The Charity School Movement of the 18th Century, அத்தியாயம் VI

கெதிராகத் தெற்கத்திய நாகரிகத்தின் கடைசிக் காவல் நிலையம் அது; காவனன்ட்டைச் சேர்ந்த மேற்குப் பிரதேசத்தின் தலை நகரம் அது. அதில் வாழ்ந்த மக்கள் தங்களது பிரஸ்பிடீரிய ஆவேசத்தில் பிடிவாதமும் கண்டிப்பும் நிறைந்தவர்கள். பழக்க வழக்கங்களில் எளிமையானவர்கள்; செலவில் சிக்கனமானவர்கள்; குடிப்பழக்கத்தில் நிதானமானவர்கள்; பெய்லி நிகோல் ஜார்வி போன்ற அதன் தலைவர்கள் தங்களது சகக்குடிகளுடன் நகரின் மையத்தில் ஆடம்பர மின்றி சாதாரண இல்லங்களில் வாழ்ந்தனர். ஆனால், 1800-ம் ஆண்டின்பொழுது பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன; கிளாஸ்கோவின் மக்கட்தொகை 80,000 ஆகி விட்டது; செல்வத்திலும் வாழும்முறையிலும் ஏற்றத் தாழ்வுகள் பளிச்சென்று தெரிந்தன; எல்லா வகுப்பினரிடை யிலும் கோயிலுக்குச் செல்லும் வழக்கம் குறைந்தது; குடிப் பழக்கம் அதிகரித்தது. ஊரைச் சுற்றிலும் பணக்காரர்களுக் கான பங்களாக்கள் ஒரு பக்கமும், ஏழைகளுக்கான சேரிகள் இன்னொரு பக்கமும் தோன்றின. பல வகுப்பினருக்கும் ஏற்ற கடைகள் நிறைந்தன ; இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய விடங்களிலிருந்து வந்த பொருள்கள் அங்கு விற்பனை யாயின. செடான் நாற்காலிகள், இசைக்கச்சேரிகள், நடனம், சீட்டாட்டம், பகடை, பஞ்ச், பணக்காரர்களுக்கு ஒயினும் ஆங்கில இலக்கியமும், ஏழைகளுக்கு ஹைலந்து விஸ்கி ஆகிய எல்லாம் இப்பொழுது கிடைத்தன. பேராசிரியர் ஆடம் ஸ்மித் காரணமாக கிளாஸ்கோப் பல்கலைக் கழகம் ஐரோப்பா முழுவதும் புகழ்பெற்றது.

இந்தச் சமூகமாறுதல்களுக் கெல்லாம் காரணம் அமெரிக்காவுடனும் மேற்கிந்தியத் தீவுகளுடனும் நடந்த வாணிபம். புகையிலையும் பருத்தியுமே முக்கிய வியாபாரப் பொருள்கள். இந்த வர்த்தகம் காரணமாக 1800-ம் ஆண்டுவாக்கில் கிளாஸ்கோ மட்டுமின்றி, கிளாட்சைட் முழுவதுமே ஒரு வர்த்தக, தொழில்மாவட்ட மாகிவிட்டது; இங்கிலாந்தின் எந்த மாவட்டத்துக்கும் அது இளைத்ததன்று. வளர்ந்துவரும் புதுப்பிரபுக்களில் ஒருவரும், நவீன நீராவி எஞ்சினைக் கண்டு பிடித்தவருமான ஜேம்ஸ் வாட்டை அது ஏற்கெனவே உலகுக்கு அளித்துவிட்டது. ஐரிஷ்தொழிலாளிகள் ஏற் கெனவே மேற்கு ஸ்காட்லந்துக்குப் பெரும் எண்ணிக்கையில் வந்துவிட்டனர்; முன்பே மோசமாயிருந்த கிளாஸ்கோ நகரத்துச் சேரிகள் இவர்களின் வருகையால் மேலும் மோச மடைந்தன.

அந்நூற்றாண்டின் கடைசி இருபது ஆண்டுகளில் லானர்க் (Lanark), ரென்புரூ (Renfrew), அயர் (Ayr) ஆகிய கிராமங்களில் பஞ்சாலைகள் தோன்றின. இதனால் ஏற்பட்ட சமூக விளைவுகள் கால்ட் (Galt) எழுதிய நூலில் (Annals of the Parish) வருணிக்கப்படுகின்றன. இந்தச் சின்னஞ் சிறிய கதைப்புத்தகம் 1821-ல் முதன்முறையாகப் பதிப்பிக்கப் பட்டது. ஜார்ஜ் III-ன் ஆட்சியில் ஸ்காட்லந்தில் ஏற்பட்ட மாறுதல்களை மிகவும் அன்னியோன்னியத்துடனும் மனிதத் தன்மையுடனும் படம்பிடித்துக் காட்டும் சிறந்த நூல் இன்றுங்கூட இதுதான்.

ஐக்கியம் (Union) ஏற்பட்டதனால் ஸ்காட்லந்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வர்த்தகத்துக்கான வழி திறந்தது என்பதை முன்பே கண்டோம். கிழக்குக்கரையிலிருந்த நகரங்கள் இதனால் குறைந்த பயனையே பெற்றன. இது இயற்கையானதே. ஐரோப்பாவுடனான வர்த்தகத்தைக் குறைத்து அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடனே வியாபாரத்தைப் பெருக்குவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கை. இதனால் ஏற்பட்டவையே கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் (Navigation Acts). லீத், (Leith) டண்டீ (Dundee) ஆகிய நகரங்கள் பால்டிக், ஜெர்மென் துறைமுகங்களுடன் நீண்ட காலமாக நடத்திவந்த வர்த்தகம் இதனால் குறைந்ததே யொழியக் கூடவில்லை.

ஆனால், ஸ்காட்டிஷ் இரும்புத்தொழிற்சாலைகள் கிழக்குக் கரையில்தான் முதன்முதலில் நிறுவப்பட்டன. ஸ்டர்லிங்குக்கும் (Stirling) எடின்பரோவுக்குமிடையில் கரானில் (Carron) இரும்புக்கனிசம், நிலக்கரி, நீர்விசை ஆகிய மூன்றும் சேர்ந்து கிடைத்தன; இரும்பை உருக்குவதற்கு இப்பொழுது நிலக்கரி பயன்படுத்தப்பட்டது. 1760-ல் நிறுவப்பட்ட கரான் கம்பெனி நன்கு வளர்ந்தது. இது முதலில் உற்பத்திசெய்த பொருள்களில் ஒன்று சிறு கப்பல் பீரங்கி; இதன் பெயரே 'கரானேட்' (carronade) என்று வழங்கலாயிற்று. அடுத்துவந்த நூற்றாண்டில் பிரமாண்டமாக வளர்ச்சியுற்ற ஸ்காட்டிஷ் இரும்புத் தொழில் தொடங்கியவிதம் இதுதான்.

ஆனால், ஸ்காட்லந்தின் கிழக்குக்கரையில் அமைந்த நகரங்களில் பதினெட்டாம் நூற்றாண்டில் வியக்கத்தக்க முன்னேற்றமடைந்த ஒரே நகரம் எடின்பரோதான். அது அரசியல் தலைநகரமாயிருந்தநிலை மாறிவிட்டது; ஆயினும், ஸ்காட்

லந்தின் சட்ட, நவநாகரிக, அறிவுஉலகத் தலைநகராக அது இன்னும் விளங்கிற்று; முன்எப்பொழுதையும்விட அதிகச் செல்வத்தையும் சுறுசுறுப்பான மூளையையும் கொண்டிருந்த புதிய ஸ்காட்லந்தில் சட்டம், நவநாகரிகம், அறிவாற்றல் ஆகிய அனைத்தும் விரைவாக முன்னேறிவந்தன. மேலும், இப்பொழுது பிரசித்திபெற்று விளங்கிய லோத்தியன் பிரதேசத்து விவசாயமானது மேற்குப்பிரதேசத்து விவசாயத்தைவிட அதிக வேகமாக முன்னேறியிருந்தது. வால்டர் ஸ்காட் தனது இளமைப்பருவத்தைக் கழித்த தென்கிழக்கு ஸ்காட்லந்தின் கிராமப்புறத்தில் செல்வம் கொழித்தது; அறிவாற்றல் பெருகியது; இவ் வளர்ச்சியும் எடின்பரோவை மையமாகக் கொண்டதுதான். ஸ்காட்லந்தின் இத் தலைநகர் ஹியூம், இராபர்ட்சன், டுகால்ட் ஸ்டீவார்ட் ஆகிய தனது 'தத்துவ அறிஞர்களால்' ஐரோப்பா முழுவதிலும் புகழ்பெற்றிருந்தது; அதன் வழக்கறிஞர்களும் பேராசிரியர்களும் பேராற்றலும் பேரறிவும் படைத்தவர்கள். இவர்களும், அப்பிரதேசத்தில் விவசாயத்தை அபிவிருத்திசெய்தும் காடுகளை ஆக்கியும் வந்த பிரபுக்களும் கனவான்களும் ஒன்றுகூடி அருமையான ஒரு சமுதாயத்தை உருவாக்கினர்; தனது கலைஞரான ரேபர்ன் (Raeburn) தேடித்தந்த இறவாப்புகழுக்கு இச் சமுதாயம் அருகதையானதுதான்.

ஸ்காட்லந்தின் இப் பொற்காலத்தின்பொழுது அரசியல் வாழ்வு உயிரற்றுப் போய்விட்டது என்பது உண்மை. காக்பர்னின் (Cockburn) சொற்களில் கூறினால் 'அங்கு எத்தகைய சுதந்திரமான அரசியல் நிறுவனங்களும்' அப்பொழுது கிடையாது.' ஐக்கியம் (Union) தொடங்கிச் சீர்திருத்த மசோதா (Reform Bill)வரை அங்கு 'அரசியல் நிறுவனங்களே இல்லை; விக்குகள் ஆண்ட காலத்திலும் டோரிகள் ஆண்ட காலத்திலும் இதேநிலைதான். ஆயினும், யாகோபிய இயக்கம் சுறுசுறுப்புடன் இருந்தவரை ஒருவகையான வியாதிபிடித்த அரசியல் வாழ்வு—அரசாங்கத்துக்கு விரோதமான ஓர் இடைவிடாத துரோகச் செயல்—காணப்பட்டது. 1746-க்குப் பிறகு அதுவும் போய்விட்டது. ஆனால், 1790-ல் தீவிரவாத (Radical) இயக்கம் தலைதூக்கிற்று; உடனடியாகக் கொடுமையான முறையில் அரசாங்கம் இதையும் ஒடுக்கிவிட்டது. பிட்டின் (Pitt) நண்பரான டண்டாஸின் (Dundas) ஆட்சியில் 'ஒரு பெரிய மனிதனின் வாசலிலிருக்கும் ஒரு விடுதியாக' ஸ்காட்லந்து இருந்தது என்று சீர்திருத்தக்காரர்கள் (Reformers) ஆத்திரத்தோடு கூறினர். ஆனால், அரசியல்தான் சர்வமும்

என்பதன்று. ஏனெனில், ஒரு பக்கம் அரசியலைப் பாரிச வாயு பீடித்திருந்த அதே சமயத்தில், பர்ன்ஸும் ஸ்காட்டும் வாழ்ந்த அந்நாட்டின் சமூக, கலை, அறிவியல் (intellectual) வாழ்வானது மிகவும் துடிதுடிப்புடன் விளங்கியது; இவ் வூற்றுக்கள் தேசீய மண்ணிலிருந்தே கிளம்பின. இங்கிலாந் துடன் ஏற்பட்ட நெருங்கிய தொடர்பானது இவைகட்கு ஒரு தூண்டுசக்தியாக விளங்கியது என்பது உண்மை; அதே சமயம் ஸ்காட்லந்து இங்கிலாந்திடமிருந்து எவ்வளவு கடன் வாங்கியிருந்ததோ அதைவிட அதிகமாகவே திருப்பிக் கொடுத்தது; கிரேட் பிரிட்டனின் ஆட்சியாளர்களுக்குக் கொள்கைகளை வகுத்துத் தந்தவர் ஆடம் ஸ்மித். பத்தொன் பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல ஆண்டுகள் வரை Lay of the Last Minstrel, Marmion ஆகியவை நமது தீவின் 'ரொமான்டிக்' (romantic) இலக்கியத்தை ஆரம்பித்து வைத்துக்கொண்டிருந்த அதே சமயத்தில், அந்த வாடை சிறிதும் வீசாத Edinburgh Review பத்திரிகையானது இலக்கிய உலகிலும் தத்துவ உலகிலும் விமர்சனத்துறையில் இங்கி லாந்தில் சர்வாதீனஉரிமையைப் பெற்றிருந்தது எனலாம். சீக்கிரமே இதற்குப்போட்டியாக Quarterly பத்திரிகை தொடங் கப்பட்டது; இதுவும் பெரும்பாலும் ஸ்காட்லந்துக்காரர்களின் முயற்சியினால் தோன்றியதேயாகும். சில ஆண்டுகள் வரை, பிரிட்டிஷ் எழுத்துலகத்தில் இலண்டனுக்குச் சமமான இடத் தினை எடின்பரோ வகித்துவந்தது.

உருவத்திலும்கூட எடின்பரோ தனது பழைய, உறுதி யான கூட்டை உடைத்துக்கொண்டு வளர்ந்துவிட்டது. முற்காலத்தில் ஸ்காட்லந்தின் மாபெரும் மனிதர்களும் அவர்க ளது குடும்பங்களும் இருளிலும் அழுக்கிலும் அடைபட்டுக் கிடந்த ஹை தெரு (High Street) அடுக்குமாடி அறைகளும், குறுகிய தெருக்களிலும் சந்துகளிலும் இருந்த குகைவீடு களும் இப்பொழுது போய்விட்டன; 1780-க்குப்பிறகு பிரின்ஸ் கள் தெருவுக்கு (Princes Street) அப்பாலுள்ள புதிய சதுக்கங் களைச் சுற்றிக் கட்டப்பட்ட விசாலமான அழகான வீடுகளுக்கு அவர்கள் குடியேறிவிட்டனர். 1767-ல் நார் லாச்சுக்குப் (Nor' Loch) பாலம் அமைக்கப்பட்ட பின்னர் இந்தப் புதிய எடின்பரோவின் வளர்ச்சி தொடங்கியது. ஏழாவது மாடி யில் வெளிச்சமில்லாத ஒரு பகுதிக்கு ஆண்டுக்கு 15 பவுன் வாடகை தருவதற்குப் பதிலாக, வசதியான ஒரு நகர வீட் டுக்கு ஆண்டுக்கு 100 பவுன் கொடுக்கக்கூடிய நிலையில் பலர் இருந்தனர். அதேபோல் நாட்டுப்புறங்களிலும் கன

வான்களின் கிராமத்து இல்லங்களாக விளங்கிய, வயல்களுக்கு மத்தியில் கட்டப்பட்ட உயரமான அச்சமூட்டுகின்ற காதிக் கோபுரங்கள், வசிப்போரின்றிப் பொலிவிழந்து நின்றன; அவைகளுக்குப் பதிலாக ஜார்ஜிய அல்லது 'கிளாசிகல்' முறையில் கட்டப்பட்ட மனதுக்குப் பரவசமூட்டும், காற்றோட்டமான, மரங்கள் சூழ்ந்த மாளிகைகள் எழும்பின. ஆனால், கட்டடக் கலையானது ஸ்காட்லந்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறவேயில்லை; இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளாகவே அதற்கு அந்தச் சிறந்த இடம் உண்டு. கட்டடக்கலையில் எவ்வளவுதான் அபிவிருத்தி ஏற்பட்டாலும்—லோத்தியன் பகுதியில் கருங்கல்லால் கட்டப்பட்ட நேர்த்தியான பண்ணையில்லங்கள் இதற்கு ஒரு சிறந்த உதாரணம்—ட்வீடுக்கு (Tweed) வடக்கே கட்டப்பட்ட வீடுகள் தென்பிரிட்டனின் தரத்துக்கு மிகவும் குறைந்தவையாகவே இருந்தன. லோலந்தில்கூட இன்னும் பல ஓரறைக்குடிசைகள் இருந்தன. மனிதர்களுடன் சேர்ந்து பசுக்களும் அவைகளில் வாழ்ந்தன. கிளாஸ்கோவிலும் எடின்பரோவிலும் இருந்த அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகள் (Flats) முன்பு எப்பொழுதையும்விட இப்பொழுது படுமோசம்; காரணம், இப்பொழுது பணக்காரர்கள் இங்கு வாழ்வதில்லை. என்றாலும், இந்நூற்றாண்டில் வீடு கட்டும் கலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. ஆனால், உணவு, உடை, கல்வி ஆகியவற்றில் இதையும்விட அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது.[1]

பதினெட்டாம்நூற்றாண்டில் ஸ்காட்டிஷ் மக்களின் மனத்திலும் பழக்க வழக்கங்களிலும் ஏற்பட்ட துரித மாற்றங்கள் திருச்சபையின் ஆதிக்கத்தோடு மோதல்களை விளைவிக்கவில்லை. அதே காலத்தில் பிரான்சில் அவை நேர்ந்தன. ஏனென்றால், ஸ்காட்லந்தில் மதகுருமார்களும் மற்றவர்களும் காலத்துக்கு ஒட்டியவாறு சமயப்பொறை யுடையவர்களாக விரிந்த கண்ணோட்டமுடையவர்களாக மாறினர். 1688-ம் ஆண்டுப் புரட்சிக்குப் பிந்திய சில ஆண்டுகளில் பிரஸ்பிடீரியச் சமயவெறி குறைய ஆரம்பித்தது. இது இயற்கையானதுதான். ஏனெனில், கோபாவேசமிக்க முந்திய மதத்தலைவர்கட்குப் பதிலாக கிளாவர் ஹவுஸை அறியாத ஒரு புதிய தலைமுறையைச் சேர்ந்த

1. 1820 வாக்கில் ஸ்காட்டிஷ் தொழிலாளர்களின் இல்லங்களும் ஆங்கிலேயத் தொழிலாளர்களின் இல்லங்களும் அவைகளின் பிராந்திய மாறுபாடுகளுடன் கீழ்வரும் நூலில் சுவையுடன் ஒப்பிடப்படுகின்றன: Professor Clapham's Economic History of Modern England, I, பக். 21-41.

இளங்குருமார்களும் பெரியவர்களும் (elders) இப்பொழுது தோன்றினர். சமயப்பொறை அனுபவம், சிறந்த கல்வி, ஆங்கிலேயப் பண்பாட்டின் செல்வாக்கு, வருணிக்க முடியாத 'அக்காலத்தின் மனப்பாங்கு' ஆகியவை யெல்லாம் சேர்ந்து காலஞ் செல்லச்செல்ல அவர்களது கண்ணோட்டத்தை விரிவுபடுத்தின. சூனியக்காரியை வேட்டையாடுவது நின்றுபோயிற்று. அக்காலத்தில் இங்கிலாந்தின் திருச்சபையில் நிலவிய லாடிடூடினேரியக் கருத்துகளுக்கும் இந்த மிதவாதிகளின் (Moderates) கருத்துகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருந்தது. ஸ்காட்டிஷ் குருமார்வகுப்பில் மிக மிகச் செல்வாக்குடைய பகுதியாக இம் மிதவாதிகள் ஆகி விட்டனர். வரலாற்றுசிரியரான இராபர்ட்சன் (1721-1793) என்ற பெருஞானியின் தலைமையில் திருச்சபையின் சபை (Church Assembly) அமைதியான வழிகளில் நடத்திச் செல்லப்பட்டது.

மிதவாதிகளில் சிலர் அளவுக்குச் சற்று அதிகமாகவே மிதவாதக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டனர் என்பது உண்மையாக இருக்கலாம். இவர்களது 'நீதி யொழுக்கம் பற்றிய இடைவிடாத சலசலப்பில்' வைதீகக் கோட்பாடுகளோ, சமயப் பிரசார ஆர்வமோ இல்லை என்று இவர்களது சமயச் சொற்பொழிவுகளைக் கேட்ட சிலர் குறைகூறினர்; இதிலும் சிறிது உண்மையிருக்கலாம். நாளாவட்டத்தில் பழைய கதை மீண்டும் தொடர்ந்தது! பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் எவஞ்சலியப் புத்துயிர்ப்பு இயக்கம் (Evangelical revivalism) ஸ்காட்டிஷ் சமயத்துக்கு ஒரு புதிய சக்தியை ஊட்டியது. டாக்டர் சால்மர்ஸ் (Dr. Chalmers, 1780-1847) போன்ற மனிதர்கள் இதற்குக் காரணம். ஆனால், சால்மர்ஸின் சமயம் குறுகிய நோக்குடைய, மாறுபட்டவரைத் தண்டிக்கும் தன்மையுடைய ஒருவகை அன்று; ஏனெனில், 'மிதவாதிகள்' தங்களது பணியை நன்கு செய்துவிட்டனர்.

எபிஸ்கோப்பியச் சிறுபான்மையினரின் வலிமையிலும் உள்ளத்திலும்கூடப் பதினெட்டாம் நூற்றாண்டு பெரும் மாறுதல்களைக் கண்டது. 1707-ம் ஆண்டு ஐக்கியத்தின் பொழுது எபிஸ்கோப்பியர்கள் வலிமைமிக்கவர்களாயிருந்தனர்; யாகோபியக் கொள்கைகளைக் கொண்டவர்களாயிருந்தனர்; தங்களது திருச்சபையையும் மன்னரையும் மீண்டும் நிறுவுவதற்குப் போராடத் தயாராயிருந்தனர். ஆயினும், அவர்கள் வழிபாட்டுநூலை உபயோகிக்கவில்லை; பிரிஸ்

பிடிரிய சமயத்தின் கொள்கைகளையே ஏறளவு மிதமானமுறையில் பின்பற்றும் ஒரு மதமாக அவர்களது சமயம் இருந்தது. ஆனால், அந்நூற்றாண்டு செல்லச்செல்ல, அரசியலில் மற்றவர்களுக்கு மிகநெருக்கமாகவும்,மதத்தில் அவர்களிடமிருந்து மேலும் விலகியும் சென்றனர். யாகோபியஇயக்கம் புதைக்கப்பட்ட பிறகு அவர்கள் ஜார்ஜ் III-ன் விசுவாசமுள்ள குடிகளாயினர்; ஆங்கிலேய வழிபாட்டு நூலையொத்த ஒன்றை ஏற்றுக்கொண்டனர். தங்களுக்கே உரிய சில பண்புகளைக் கொண்டதொரு சமயச்சமூகம் என்ற முறையில் மற்ற ஸ்காட்லந்தியரிடமிருந்து இந்த வழிபாட்டுநூல் இவர்களைப் பிரித்தது. இவர்களது எண்ணிக்கை குறைந்தது. ஆனின் ஆட்சியில் கிழக்குஸ்காட்லந்தின் பல பகுதிகளில் மக்களின் திருச்சபையாக அவர்கள் விளங்கி வந்தனர்; சட்டத்துக்கும் மாறுகப் பாரிஷ் திருச்சபைகளையும் குருமார்ல்லங்களையும் தொடர்ந்து வைத்துக்கொள்ள இதே காரணத்தால் புரட்சியின்போதும் அனுமதிக்கப் பட்டனர். ஆனால், அக்குருமார்தலைமுறை மறைய மறைய, பிரஸ்பிடிரிய மதகுருக்கள் இவர்களது இடத்தைக் கைப்பற்றினர்.

அதே சமயம், எபிஸ்கோப்பியர்களின் நிலைமையிலும் ஒரு முக்கிய விஷயத்தில் அபிவிருத்தி ஏற்பட்டது. புரட்சியின் பொழுது ஆங்கிலேய டிஸ்ஸென்டர்களுக்காகச் சமயப் பொறைச்சட்டம் (Act of Toleration) ஒன்று இயற்றப்பட்டதைப் போல இவர்களுக்கும் ஒன்று செய்யப்படவில்லை. எனவே, இவர்களது நிலைமை ஆங்காங்கே மக்களின் அபிப்பிராயத்தையும் வலிமையையும் பொறுத்திருந்ததே ஒழிய, சட்டத்தைப் பொறுத்திருக்கவில்லை; இது ஒரு குழப்பமான நிலை. கடைசியில்1712-ல் வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்து டோரிகள் ஸ்காட்லந்துக்கான ஒரு சமயப் பொறைச் சட்டத்தை நிறைவேற்றினர். ஐக்கியத்தினால் (Union) விளைந்த மிகநல்ல முதலாவது பயன் இது; ஆனால், ஸ்காட்லந்தில் பரந்து நிலவிய தங்களது சமயத்தின்மீதான முதல் தாக்குதல் என்ற எண்ணத்தோடு பிரஸ்பிடிரிகள் மிகுந்த ஐயத்துடன் இதை நோக்கினர்.

அடுத்த சில வாரங்களில் ஸ்காட்டிஷ் திருச்சபையின் விவகாரங்களில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் மறுபடியும் தலையிட்டது; ஆனால், இது அவ்வளவு தேவையானது என்று கூறமுடியாது. 1712-ல் ஆதரவுமுறை (Patronage), அதாவது நிலப்பிரபுக்கள் திருச்சபைப் பதவிகட்கு ஆட்களை நியமிக்கும் முறை, மீண்டும் அனுமதிக்கப்பட்டது. ஆங்கிலிக திருச்

சபையின் பழக்கவழக்கங்களை நன்கு தெரிந்த ஓர் ஆங்கிலேயருக்கு இது ஒரு சிறிய விஷயமாகத் தோன்றலாம்; ஆனால், ஆதரவுமுறை மீண்டும் அனுமதிக்கப்பட்டதால் ஸ்காட்டிஷ் சமய வரலாறும் சமூக வரலாறும் பின்னர்வந்த 150 ஆண்டுகளில் பெரிதும் பாதிக்கப்பட்டன.

பாரிஷ்குருமார் நியமனத்தில் ஜனநாயகமுறை நிலவுவது தமது சமயத்தின் மிக முக்கியமான ஓர் அம்சம் என்று வைதீகப் பிரஸ்பிடீரியர்கள் கருதினர்; நிலப்பிரபுக்களால் நியமிக்கப்படுவது கொள்கையடிப்படையில் சரியா தவரு என்ற வாதத்தை விட்டுவிட்டாலும்கூட, அதில் ஒரு நடைமுறை ஆபத்து இருந்தது; அப் பிரபுக்களிலும் கனவான்களிலும் பலர் லாடிடுனேரியர்களாகவும் எபிஸ்கோப்பியர் அல்லது யாகோபியர்களாகவும் இருந்தனர். இதே காரணத்தினால்தான் புரட்சியின்பொழுது ஸ்காட்டிஷ் பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலம் ஆதரவுமுறை அகற்றப்பட்டது; 1690-ம் ஆண்டுச் சட்டத்தின்படி பாரிஷின் புராட்டஸ்டண்ட் நிலச்சொந்தக்காரர்களும் பெரியவர்களும் (elders) முழுச் சபையில் (congregation) ஒருவரது பெயரை மதகுருவின் பதவிக்குப் பிரேரணை செய்யவேண்டும்; சபைக்கு இது பிடிக்கவில்லையென்றால் பிரஸ்பிடெரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்; அதன் முடிவே இறுதியானது. ஆனால், 1712-ம் ஆண்டில் 'பிரிலேட்டுகளின்' (prelatic) வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றம், ஐக்கிய உடன்படிக்கைக்கு (Union Treaty) விரோதமான முறையில், இச்சட்டத்தைத் திருத்தியது. நியமிக்கும்உரிமை பழைய நிலச்சொந்தக்காரர்களுக்கே மீண்டும் அளிக்கப்பட்டது; ஆனால், அவர்கள் ரோமன் கத்தோலிக்கர்களாக இருக்கக்கூடாது.

இப்புதிய சட்டத்தை மக்கள் கடுமையாக வெறுத்தனர். ஆயினும், ஒரு தலைமுறைவரை இதன் விளைவுகள் குறிப்பிடத் தக்கவையாக இல்லை. ஆனால், இறுதிவிளைவுகள் வெகு முக்கியமானவையாயிருந்தன. அரசாங்கத்தினால் இயற்றப்பட்ட இந்தச் சட்டத்தினால் கட்டுண்டுகிடந்த திருச்சபையிலிருந்து பிரஸ்பிடீரியர்கள் பெரும் எண்ணிக்கையில் தொடர்ந்து வெளியேறினர்; இதற்கு அடிப்படைக் காரணம் இந்த ஆதரவுமுறைதான். இங்கிலாந்திலிருந்ததைப் போல் சிறு சிறு சமயவகுப்புகளை (Sects) இதுவரை வெறுத்து வந்த ஸ்காட்லந்தில், கன்பார்மிஸ்ட்டல்லாதார் திருச்சபைகள் பல இப்பொழுது முளைத்தன; பழைய திருச்சபையுடன் கோட்பாடுகளிலோ சடங்குகளிலோ இவை சிறிதும்

வேறுபடவில்லை. என்றாலும், அதற்குப் போட்டியாய் முளைத்தன.

ஆதரவுமுறை மீண்டும் புகுத்தப்பட்டது, திருச்சபையில் மிதவாதக் கட்சி தோன்றுவதற்குத் துணைபுரிந்தது. தீவிரவாதிகள் நிறைந்த பாரிஷ்களில் மிதவாத மனப்போக்குடைய குருமார்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் நியமிக்கப்பட்டனர். சமய வெறியர்கள் இந்தக் குறுக்கீட்டை எதிர்த்தாலும்கூட, மிதவாதக் குருமார்களின் பொறைமிக்க நிருவாகத்தினால் பயனடைந்தனர். கால்டின் (Galt) நூலைப் (Annals of the Parish) படிப்பவர்கள், ஜார்ஜ் III ஆட்சியின் முதல் ஆண்டில் மிகச் சிறந்தவரான திரு. பால்விட்டர் (Mr Balwhidder) விஷயத்திலும் இத்தகைய குறுக்கீடு ஏற்பட்டது என்பதை மறந்துவிட மாட்டார்கள்; 'நான் நியமிக்கப்பட்டேன்; மக்களுக்கு என்னைப்பற்றி ஒன்றுமே தெரியாது; அச்சமயத்தில் மக்களின் மனத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டது' என்று அவர் எழுதினார். பழைய கால்வீனியத்தின் சமயவெறியைக் குறைகூறும் சிலர் அவசரப்பட்டு, ஸ்காட்டிஷ்காரர்கள் 'பாதிரிகளுக்கு வால்பிடிப்பவர்கள்' என்று சொல்லியிருக்கின்றனர்; ஸ்காட்லந்தில் 'மதகுருமார்கள் மக்களுக்கு வால் பிடிக்கிறார்கள்' என்று கூறுவதுதான் இன்னும் பொருத்தமாக இருக்கும். சபையிலிருந்த (congregation) சமய வெறியர்கள் தங்களது குருமார்களின் வைதீகத்தைக் கண்ணிமைக்காமல் கவனித்துக்கொண்டே யிருந்தனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட குருமார்களில் பலர் ஸ்காட்டிஷ் சமயத்தின் கட்டுதிட்டங்களைத் தளர்த்துவதற்குத் தம்மாலான அனைத்தையும் பதினெட்டாம் நூற்றாண்டில் செய்தனர். இதனால் சில நேரங்களில் தங்களது பாரிஷ்மக்களின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டனர்.

1712-ம் ஆண்டு ஆதரவுமுறைச் சட்டத்தின் (Patronage Act) தொடர்ச்சியான விளைவுகளின் உச்சக்கட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் (1843) வந்தது; சால்மர்ஸின் தலைமையில் சுதந்திரத் திருச்சபை (Free Church) பிரிந்தது; ஸ்காட்லந்தின் நவீன வரலாற்றுப் பேருண்மைகளில் ஒன்றான எவஞ்சலிய சுதந்திரத்துக்கு ஆதரவாக இப்பிரிவு நடைபெற்றது. ஆனின் ஆட்சியில் அலட்சியமாக நிறைவேற்றப்பட்ட அச்சட்டம் இறுதியாக 1875-ல் ரத்து செய்யப்பட்டது. ஸ்காட்லந்து திருச்சபையின் பிரிந்துபோன பகுதிகள் மீண்டும் இறுதியில் ஒன்றுபடுவதற்கு வழிஏற்பட்டது; இது நமது காலத்தில்

நடைபெற்றது. ஆன்மீக விஷயங்கள் அனைத்திலும் திருச் சபைக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்று 1921-ம் ஆண்டுச் சட்டத்தின்மூலம் அரசாங்கம் அறிவித்தபின்னர் இது நடந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஸ்காட்லந்தின் மக்கட் தொகை பத்துலட்சத்திலிருந்து 1,652,000 ஆக உயர்ந்தது. இது இயற்கையான வளர்ச்சியையே குறிக்கிறது; ஏனெனில் ஹைலந்திலிருந்து மக்கள் வெளியேறியதும் ஐரிஷ்காரர்கள் வந்து புகுந்ததும் ஒன்றையொன்று ஈடுகட்டின. ஸ்காட்டிஷ் வரலாற்றில் முன்பு எந்த நூற்றாண்டிலுமே காணப்படாத இம் மக்கட்பெருக்கம், அதே காலத்தில் இங்கிலாந்திலும் காணப்பட்டதைப் போல், இறப்புவீதம் வீழ்ச்சியுற்றதால் ஏற்பட்டது. வாழ்க்கைவசதிகளில் அபிவிருத்தி, நோய் சிகிச்சைமுறையில் முன்னேற்றம் ஆகியவைகளின் விளைவு இது. நோய்சிகிச்சைத் துறையில் ஜார்ஜ் III-ன் ஆட்சியில் ஆங்கிலேயர்களுக்குச் சொல்லிக்கொடுக்கும் அளவுக்கு ஸ்காட்லந்தியர் வளர்ந்து விட்டனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஸ்காட்லந்தின் மக்கட் தொகை துரிதமாக வளர்ந்தது. ஆயினும், அந் நாட்டின் செல்வ வளர்ச்சியுடன் அது போட்டியிட முடியவில்லை. 1707-ல் கலால்வரி வருமானம் 30,000 பவுன்; 1797-ல் இது கிட்டத்தட்ட பதின்மூன்று லட்சம். சிறு விஷயங்களின் காலம் மலையேறிப் போய்விட்டது.

ஆயினும், ஸ்காட்லந்துக்கு ஒரு கெட்டகாலம் இன்னும் காத்திருந்தது. நெப்போலியப் போர்கள் காலத்தில் உணவுப் பொருள்களின் விலை ஏராளமாகக் கூடியது; இதன் விளைவாக மக்கள் கடுந்துயர் உற்றனர்; மீண்டும் 1799லும் 1800லும் விலைகள் உயர்ந்தன; அப்பொழுது 'ஒரு ஸ்டோன் ஓட்ஸ்மாவின் விலை பத்து ஷில்லிங்குகள்'; தொழிலாளர்கள் 'தனித் தனியாக ஓடைக்குச் செல்வார்கள்; சாப்பிடுவதற்குப் பதிலாகத் தண்ணீரைக் குடிப்பார்கள்; வெளிப்படையாகக் குறைபட்டுக்கொள்ள மாட்டார்கள்; ஏனெனில், இவர்கள் குடிப்பது பிறருக்குத் தெரியக்கூடாது என்பதற்காக.' இவ்வாறு தாமஸ் கார்லைலின் (Thomas Carlyle) தந்தை தாம் கண்ணால் கண்டதைக்கூறினர். ஆனால், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வில்லியம்அரசரின் 'பஞ்ச ஆண்டுகளில்' ('dear years') நடந்ததைப்போல் மக்கள் நூற்றுக்கணக்கில் மடிந்துபோக

வில்லை; கிராமங்கள் தம் மக்களை இழந்து வெறிச்சோடிப் போகவில்லை.[1]

[1]கார்லைல் தனது நூலில் (Reminiscences) தனது தந்தை ஜேம்ஸ் கார்லைலைப்பற்றி வருணிக்கிறார். அதன் பின்பாதியில், பதினெட்டாம் நூற்றாண்டின் பின்ஐம்பது ஆண்டுகளில் ஸ்காட்டிஷ் விவசாயிகளின் வாழ்க்கையைப்பற்றிய உயிர்ஓவியங்கள் நிறைய உள்ளன. லாங்ஹோமில் (Langholm) 'கள்ளத்தனமாகக் கடத்திக்கொண்டுவரப்பட்ட ஒரு புகையிலைக்குவியல் எல்லோர் முன்னிலையிலும் எரிக்கப்பட்டதை ஒரு சமயம் நான் கண்டேன். உருவிய வாளுடன் அதைச்சுற்றிப் படையினர் நின்றனர்; சில கிழவிகள் அதில் ஒரு சிறிது எடுக்கத் தமது சுருக்கம் நிறைந்த கைகளை நீட்டினர்; படையினர் அவர்களைத் தடுக்கவில்லை' என்று ஜேம்ஸ் கார்லைல் கூறினர். அந்த மேற்குப்பகுதியின் தொழிலாளிப்பெண்கள் குட்டையான களிமண் குழாய்களில் புகையிலை பிடித்தனர்; தாமஸ் கார்லைலின் தாயாரும் கூட அவர்களில் ஒருவரே.

15. காப்பெட்டின் இங்கிலாந்து [1793-1832]

I

நகரத்திலும் கிராமத்திலும் மாறுதல்கள்—தொழிற்சாலைகள்—தொழிலாளரின் நிலைமைகள்—குடியேற்ற நாடுகள்—கல்வி—லுட்டைட்டுகள் (Luddites)—தொழிற்சங்கங்கள்.

(*பிரான்சுடன் போர்கள்*, 1793-1815. *வாட்டர்லூ*, 1815. *பீட்டர்லூ*, 1819. *சீர்திருத்த மசோதா*, 1831-1832.)

தன்னம்பிக்கையும் திருப்தியும் நிலவிய பதினெட்டாம் நூற்றுண்டின் பொன்னெளிர் காலத்துக்கும், பீட்டர்லூவையும் வைக்கோல்போர் கொளுத்துதலையும் கண்ட, பைரனும் காப்பெட்டும் வாழ்ந்த அமைதியில்லா இங்கிலாந்துக்கும் இடையில் போர்நிறைந்த இருபது ஆண்டுகள் குறுக்கிட்டன; இப் போர்கள் புரட்சிப் பிரான்சுடனும் நெப்போலியனுடனும் நடந்தவை (*1793-1815*).

நமது சமூக வளர்ச்சியில் ஒரு நெருக்கடியான கட்டத்தில் ஏற்பட்ட இந் நீண்ட போர்கள் மிகவும் துரதிருஷ்டமானவை. பொருளாதார வாழ்வு இதனால் தாறுமாறுயிற்று; சீர்திருத்தம் என்ற பேச்சையும் ஏழைகளின் துயரங்கள் உரிமைகள் என்ற பேச்சையும் காதில் கேட்கவே மறுத்த 'யாகோபிய எதிர்ப்பு' மனப்போக்கு அதிகாரவட்டத்தில் குடிகொண்டது. இந்தப் படுமோசமான சூழ்நிலையில்தான் அன்று வேகமாக முன்னேறி வந்த தொழில், சமூக மாறுதல்கள் ஏற்பட வேண்டியிருந்தன. அப்பொழுது தோன்றிய புதியவகை வேலையளிப்போனும் (employer), ஊகவாணிகத்துக்காக வீடு கட்டுவோனும் (jerry builder) ஒன்றுகூடி அன்றையத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முயன்றதன் விளைவாகத் தற்கால ஆங்கிலேயச் சேரிநகரங்கள் (slum towns) கட்டப்பட்டன;

எந்தவிதமான அரசாங்கக் கட்டுப்பாடும் திட்டமும் இத் துறையில் செயல்படவில்லை. தலைவிரித்தாடிய தனிநபர் வாதம் (individualism), பணம் குவிக்கவேண்டும் என்ற ஒரே கருத்தால் உந்தப்பட்டு இத்தகைய மலிவான, சாக்கடை நிறைந்த தொழிலாளர் குடியிருப்புகளை உண்டுபண்ணியது. நகரமைப்புத் திட்டம், சுகாதார அமைப்பு, மற்ற வசதிகள் ஆகியவை புதியஉலகை நிர்மாணித்துவந்த பேய்க்கலைஞர் களின் கற்பனையில்கூட உதிக்கவில்லை. அதே வேளையில், பிரபுத்துவ ஆளும்வகுப்போ தனது இன்பவாழ்வில் மூழ்கி, ஒதுங்கிநின்றது; நகரமைப்பும் சுகாதாரமும் தொழிற்சாலை நிலைமைகளும் அரசாங்கத்தின் பொறுப்புகளல்ல என்று அது எண்ணியது. எப்படியாயினும் பெருநகரங்களில் இப் பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும்; பதினெட்டாம் நூற் றுண்டு இலண்டனின் சேரிப்பகுதிகள் இதை நன்கு தெளி வாக்கிவிட்டன. ஆயினும், நெப்போலியன்காலத்தில் இங்கி லாந்தில் நிலவிய சூழ்நிலைகள், வடக்கத்திய இருண்டதொழிற் சாலை நகரங்கள் நல்லமுறையில் அபிவிருத்தியாவதற்கும், புதியவகை முதலாளிக்கும் புதியவகைத் தொழிலாளிக்கு மிடையிலான உறவுகள் நல்லமுறையில் விருத்தியாவதற்கும் சிறிதும் ஏற்றவையாயில்லை. எத்தகைய வாழ்வை உருவாக்கு வது தனக்கு நல்லது என்பதைப்பற்றி மனிதன் சிறிதும் சிந்திப்பதற்கு முன்னாலேயே, அதற்கு வேண்டிய மாபெரும் கருவிகளை அவன் சமைத்துவிட்டான்.

இடைக்காலத்து நகராட்சியில் சிறந்த பொதுப்பணி மரபுகளும் ஆர்வமும் குன்றி, சுணக்கமும் ஊழலும் மலிந் தன. இந்நிலையில் தொழிலாளர் குடியிருப்புப்பகுதிகள் திடீரென்று முளைத்தபோது, நகராட்சிக் குழுவினரின் சுக மான நித்திரை கலையவில்லை. இத்தனை காலமாகத் தங்களது பழைய பொறுப்புகளில் தவறிய இம்மனிதர்களால், புதிய கடமைகளுக்கேற்றவாறு சுறுசுறுப்புடன் செயல்பட எவ் வாறு முடியும்? மேலும், ஒருநகரத்தின் எல்லைகட்கு அப்பால் இக் கட்டட வேலைகள் நடைபெற்றபொழுது—வழக்கமாக நடைபெற்றது இங்கேதான்—கவுண்டியைச் சேர்ந்த மாஜிஸ்டிரேட் கனவான் அவைகளை நிர்வகிக்க முயலுவ தில்லை.

வாட்டர்லூப்போர் நடந்தபொழுது, கிராமப்புற இங்கி லாந்தின் அழகு இன்னும் குறையாமல் ஒளிவீசியது; அதே போல ஆங்கிலேய நகரங்களில் பெரும்பான்மை அழகாகவும்

கவர்ச்சியாகவும் விளங்கின. மொத்தத்தில் தொழிற்சாலைப் பிரதேசங்கள் கடுகளவு; ஆனால், துரதிருஷ்டம் என்னவென்றால், அதுவே எதிர்காலத்துக்கு ஒரு மாதிரியாய்விட்டது. ஒரு புது வகை நகரசமுதாயம் வளர அனுமதிக்கப்பட்டது; கண்மூடி அதைப் பின்பற்றுவதும், விரிவுபடுத்துவதும் எளிதாயிருந்தது. இது இரங்கத்தக்கது! இதன் விளைவு என்னவென்றால் அடுத்த நூறுண்டுகளில் ஆங்கிலேயர்களில் மிகப் பெரும் பான்மையினர் குறுகிய, காற்றோட்டமற்ற, சாக்கடையும் அழுக்கும் மண்டிய தெருக்களில் வசித்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு வந்தது; ஸ்தல ஸ்தாபன ஆட்சி வந்தது; ஜனநாயக முறையிலான தலத்தேர்தல்கட்கும், ஓயிட் ஹாலின் மத்தியக் கட்டுப்பாட்டுக்கும் அது உட்பட்டு அமைந்தது; அப்பொழுது சுகாதாரம், வாழ்க்கை வசதிகள், கல்வி ஆகியவைகளுக்காகப் பெருந்தொகைகள் ஒதுக்கப்பட்டன. பயன்மிக்க துறைகளில் இத்தகைய சீர்திருத்தங்கள் ஏற்பட்ட பின்னரும்கூட, அவலட்சணம் நவீன நகரத்தின் ஒரு தன்மையாக இருந்துவந்தது; தான் கண்டதை மட்டுமே சிந்தித்துப் பார்க்கக்கூடிய ஒரு சமூகம், பழக்க வழக்கம் காரணமாக இந்த விகாரத்தை அழகென ஏற்றுக் கொண்டது.

கடல் முற்றுகையும் எதிர்முற்றுகையும் நிறைந்த நெப்போலியப் போர்கள் (Nepoleonic wars) வியாபாரத்தையும் தொழிலையும் ஒரு சூதாட்டமாக்கின. தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு எல்லாவிதமான ஊக்குசக்திகளும் இருந்தன; பாதுகாப்பு மட்டும்தான் இல்லை. இங்கிலாந்தின் கடலாதிக்கமும், பிறநாடுகளால் இன்னும் பின்பற்றப்படாத இயந்திர உற்பத்தி என்னும் புதியசக்தியும் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, தூரக்கிழக்கு நாடுகள் ஆகியவற்றின் மார்க்கெட்டுகளில் ஒரு சர்வாதீனத்தை அதற்கு ஏற்படுத்தின. ஆனால், அரசதந்திரம், போர் ஆகியவைகளின் வெற்றி தோல்விகளைப் பொறுத்து, பிரிட்டிஷ் பண்டங்களுக்கு ஐரோப்பிய மார்க்கெட்டுகள் சில சமயங்களில் திறக்கப்பட்டன; சில சமயங்களில் மூடப்பட்டன. ஓர் ஆண்டில் ஒரு நட்பு நாட்டின் சிப்பாய்கள் இங்கிலாந்தில் உற்பத்திசெய்யப்பட்ட உடையையும் பூட்சுகளையும் அணிந்திருப்பர்; அடுத்த ஆண்டு அது பிரான்சின் காலடியில், நெப்போலியனின் 'கண்டத் திட்டத்தின்' (continental system) ஒரு பகுதியாகக் கிடக்கும். அமெரிக்க ஐக்கியநாடுகளுடன் அப்பொழுது நடந்த தேவையில்லாத போர் (1812—1815), வியாபாரத்

தைக் கெடுத்த மற்றொரு நிகழ்ச்சி. தேவையும் (demand) வேலைவாய்ப்பும் நாள்தோறும் ஏறி, இறங்கிப் பெருமாற்றத் துக்கு உள்ளாயின. இதனால், ஆங்கிலேயத் தொழிலாளர் வகுப்பின் துன்பம் அதிகரித்தது. வாட்டர்லூவுக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின்பொழுது (slump) முன்பு எப்பொழுதையும்விட வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமா யிருந்தது.

இப்போரினால் மற்றொரு விளைவும் ஏற்பட்டது; ஐரோப் பாவிலிருந்து வந்துகொண்டிருந்த தானியம் நின்றுபோயிற்று. மக்கட்தொகை அதிகரித்துவிட்ட நமது தீவில் உணவுப் பொருள்களின் விலையை ஒரு வரம்புக்குள் வைத்திருப்ப தற்கு இத்தானியம் அவசியம். 1792-ல், அதாவது போர் துவங்குவதற்கு முந்திய ஆண்டில், கோதுமையின்விலை ஒரு குவார்ட்டருக்கு 43 ஷில்லிங்கா யிருந்தது. ஆனால், நெப்போ லியன் மாஸ்கோ சென்ற 1812-ல் அது 126 ஷில்லிங்காக ஏறிப்போயிற்று. ரொட்டிவிலை ஏற்றத்தினால் நகரங்களிலும் கிராமங்களிலும் ஏழைகள் அவதிப்பட்டனர். ஆனால், குத் தகைக் குடியானவர்கள், நிலச்சொந்தக்காரக் குடியான வர்கள், பத்தில் ஒன்றும் குத்தகையும் வாங்கியவர்கள் ஆகியோரின் பைகளில் அதிகப் பணம் சேர்ந்தது. போர் நடந்த இருபது ஆண்டுகளிலும் விவசாயத்தின் அளவும் தன்மையும் இவ்வுயர்ந்த விலைகளை ஒட்டியே இருந்தன. எனவே, சமாதானம் ஏற்பட்டதும் தானியவிலை வீழ்ச்சியுற்ற பொழுது குடியானவர் பலர் அழிந்துபோனார்கள்; குத்தகை களைச் செலுத்தமுடியவில்லை. இந்நிலையில் விவசாயிகட்குப் பாதுகாப்பளிப்பதற்காக 1815-ல் தானியச் சட்டம் (Corn Law) இயற்றப்பட்டது; துய்ப்போருடைய (consumer) செலவில் விவசாயச் செழிப்பை ஏற்படுத்துவது இதன் நோக்கம். கட்சிவேறுபாடின்றி நகரங்களில் வசித்த எல்லா வகுப்பினரும் மிகக்கடுமையாக இதை எதிர்த்தனர். அம் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்காகத் தாங்கள் பாராளுமன்றச் சபைக்குச் சென்றுகொண்டிருந்தபொழுது "பாங்கர் பாரிங்கின் ஆவேசத்தைக் கிளறிவிடும் பேச்சா லும், இலண்டன் மேயர்ப் பிரபுவின் தவருன அறிக்கை களாலும்' தூண்டிவிடப்பட்ட ஒரு கூட்டம் தங்களை மிருகத் தனமாகத் தாக்கியது என்று நிலப்பிரபுத்துவ வகுப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சிலர் புகார் செய்தனர். (Sir R. Heron's Notes, ed. 1851, p. 50.) 1846-ல் தானியச் சட்டங்கள் ரத்து (Repeal of the Corn Laws) செய்யப்படும்

வரை விவசாயப் பாதுகாப்புப் பிரச்னை இங்கிலாந்தைப் பிளவுபடுத்தி, நகரவாழ்வுக்கும் கிராமவாழ்வுக்கு மிடையிலான வேறுபாட்டுக்கு அரசியல் தன்மையை ஊட்டியது. இந்த வேறுபாடானது தொழிற்புரட்சி காரணமாக ஒவ்வோர் ஆண்டும் தீவிரமாயிற்றே ஒழியக் குறைந்தபாடில்லை; ஏனெனில், நகரத்து மக்கள் விவசாயத்துடனும், கிராமத்து மக்கள் தொழிலுடனும் தொடர்பற்றுப் போய்விட்டனர்.

ஆன்அரசியின் இங்கிலாந்தில் குறுக்கும் நெடுக்குமாகக் குதிரைச்சவாரி செய்துகொண்டிருந்த டூஃபோவின் கூரிய கண்கள், பொருளாதார வாழ்வும் சமூக வாழ்வும் ஒன்றோடொன்று நன்கு இயைந்துநிற்பதைக் கண்டுகளித்தன. ஆனால், இன்றோ அது போய்விட்டது; கிராமத்துக் கெதிராக நகரம், ஏழைகளுக் கெதிராகப் பணக்காரர்கள் என்ற போட்டி நலன்களின் மோதுதலால் குழப்பம் வந்தது. டூஃபோவுக்கு நூறு ஆண்டுகட்குப் பின்னர் இன்னொரு குதிரைக்காரர்—வில்லியம் காப்பெட்—கிராமப்புறங்களில் சவாரி செய்தார்; புது அறிகுறிகளைக் கண்டார்; சொத்துப் பறிக்கப்பட்ட ஏழைகளுக்கு, இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்ணுற்றார்; அவர்களை நசுக்குபவர்களுக் கெதிராக ஆவேசத்துடன் தன்னந்தனியாகப் போராடத் துணிந்தார். ஏழைகள் எப்பொழுதும் இதுவேபோல் வறுமையில் உழந்து, கொடுமையாக நடத்தப்பட்டனர். ஆயினும், இன்று தாங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டு, ஒன்றுக ஊர்ப்புறத்தே கூட்டப்பட்டுக் கிடந்த தங்களது இரங்கத்தக்க நிலை அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெள்ளத் தெளிவாகப் புலனுகியது. முன்பு, வறுமை என்பது ஒரு தனிமனிதனின் சொந்த துரதிருஷ்டம்; ஆனால், இன்று அது ஒரு குழுவின் குறைபாடு. பதினெட்டாம் நூற்றுண்டு தூண்டிவிட்ட மனிதாபிமான உணர்வுக்கு அது ஒரு சவால். பிரெஞ்சுப் புரட்சியைக் கண்டு இங்கிலாந்தில் ஏற்பட்ட சீற்றமும் அச்சமும் அவ்வுணர்வைச் சிறிதுநேரம் மங்கச் செய்தன; ஆனால், புதிய நூற்றுண்டில், பொருளாதார நிலைமைகட்குப் பலியான இம்மக்களைக் கண்டு மனத்தைக் கல்லாக்கிக் கொண்டிருப்பது முன்புபோல் முடியாது. எனவே, காப்பெட்டின் சூருவளிச் சொற்களுக்கு மதிப்பு இருந்தது.

போரினல் ஏழைகள் அல்லலுற்றனர்; ஆனல், நிலம் படைத்த கனவான்களோ இதற்குமுன் எப்பொழுதுமே இவ்வளவு செல்வத்திலும் களிப்பிலும் திளைத்ததில்லை; நாட்டுப்

புற இல்லங்களில் தங்களது காலத்தை இவ்வளவு இனிமையாகக் கழித்ததில்லை. அவர்களைப் பொறுத்தவரை போர் என்பது செய்தித்தாள்களில்தான்; அவர்களது வாழ்வில் அது நுழையவில்லை. செல்வி ஆஸ்டினின் (Miss Austen) தோழிகளான இளம்சீமாட்டிகள் அனைவரும் ஸ்காட், பைரன் ஆகியோரின் அடுத்த கவிதைநூல் எப்பொழுது வரும் என்று ஆவலோடு காத்திருந்த அதே சமயத்தில், தமது நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தில் திரு. தோர்ப்பும் (Mr. Thorpe) திரு. டாம் பெர்ட்ரமும் (Mr. Tom Bertram) என்ன பணியாற்றப் போகிறார்கள் என்று ஒருபொழுதும் கேட்டதில்லை. ஏனெனில், அந்த இன்பநாட்களில், நமது தீவின் பாதுகாப்புக்கும் வாழ்க்கைவசதிகளுக்கும் ஒரு நல்ல கவசமாகக் கடற்படை இருந்தது. ஐரோப்பா முழுவதும் நெப்போலியனின் கோபக்கனலில் எரிந்துகொண்டிருந்த பொழுது, நமது உல்லாசவாசிகளின் ஊதாரித்தனமும் கேளிக்கைகளும் உச்சக்கட்டத்தை எட்டின; போ பிரம்மல் (Beau Brummel) இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. ஆங்கிலக் கவிதைக்கும் இயற்கைக்காட்சி ஓவியங்களுக்கும் அன்று ஒரு பொற்காலம். பிரெஞ்சுப் புரட்சியால் அமைதியான நாட்களில் கலக்கமுற்றிருந்த வேர்ட்ஸ்வொர்த்தின் உள்ளம், பின்னர்வந்த நீண்ட போரின்பொழுது தனது அமைதியை மீண்டும் முழுமையாகப் பெற்று,

> ஓயாத புயல்மையத்தில் மோனத்தவ மிருக்கும்
> அமைதிக் கரு'

பற்றித் தத்துவக் கவிதைகளை இயற்றமுடிந்தது! தற்கால உலகப் போர்நிலைமைகளில் இத்தகைய மனநிலையைப் பெறுவது மிகவும் கடினம்.

பிரான்சுடன் போராட்டம் நடைபெற்ற ஆண்டுகளில் பாதிக்காலம் முழுவதும் இங்கிலாந்தின்படை எதுவும் ஐரோப்பாவுக்கு அனுப்பப்படவில்லை; தீபகற்பப் போரின் (Peninsular War) ஏழு படையெடுப்புகளின்போதுகூட 40,000-க்கும் குறைவான பிரிட்டிஷ்காரர்களே கொல்லப்பட்டனர்; அதாவது இரத்தவரியானது எல்லா வகுப்பினருக்கும் குறைவுதான். திரு. பிட் விதித்த வருமானவரி அதிகமானது; ஆனால், குத்தகையும் பத்திலொன்றும் தானியவரிலையைஒட்டிக் கூடிப் போனதால் நிலச்சொந்தக்காரர்களுக்கு நல்ல இலாபமே. பயிற்சிபெற்ற போர்வீரனை நெப்போலியனை 'இங்கிலாந்தின் கனவான்கள்' தோற்கடித்தனர்; அவ் வெற்றியினால்

புகழையும் பெருமதிப்பையும் எய்தினர். அவ்வெற்றிப் பயன் கனவுத் தவருன முறையில் உபயோகிக்காத காரணத்தால், இன்னெரு 'பெரும் போரிலிருந்து' நூருண்டுக் காலத்துக்கு நமக்கு ஒரு பாதுகாப்பு ஏற்பட்டது. ஆனால், இந்தக் கனவான்கள் நெப்போலியனை மிகவும் எளிதில், துன்பங்களை அனுபவிக்காமல் போரிட்டு வென்றனர்; எனவே, அமைதி நிறுவப்பட்ட பின்னர், வளர்ந்துவந்த சீர்திருத்தக்காரத் தலை முறையினரால் இவர்கள், போரில் கொள்ளைலாபம் அடித்தவர்கள் என்று, ஓரளவு நன்றிமறந்த முறையில் இழித்துக் கூறப்பட்டனர்.

'பாருங்கள் இந்தச் சீர்கெட்ட சின்சினாட்டிக் கூட்டத்தை! போர்க்களத்து உழவர், வயலின் கொடுங்கோலர். அவர்தம் கலப்பைக்கொழு கூலிப்படையின் கைவாள்; அவர்தம் வயலுரம் பிறநாட்டார் குருதி; மாளிகையில் தாமிருந்து விரட்டுகின்றார் ஏழைகளைப் போரில் சாக; காரணமோ, குத்தகைதான்! பாராளு மன்றத்திற்குப் பணமும் குருதியும் வியர்வையும் கண்ணீரும் வடித்த கணக்கற்ற இப்பெரியோர் ஓட்டளித்தனர்; காரணமோ குத்தகைதான்! இரைந்தார்கள், உண்டார்கள், குடித்தார்கள், தாய்த்திரு இங்கிலாந்துக்காக உயிர்விடுவோம் என்றார்கள்; பின் ஏன் வாழ்கின்றார்கள்?—குத்தகைக்காக!'

—(பைரன், The Age of Bronze, 1823)

இப்போரினுல் நிலப்பிரபுக்களுக்குப் பெருஞ்செல்வம் கிட்டியது; கூலிவேலை செய்வோர் கடுந்துயருற்றனர்; அதே சமயம் 'சமூகத்தின் இடைநிலை மக்களுக்கு' இது ஒரு சூதாட்டம். ஒரு வியாபாரி கொள்ளைலாபம் சம்பாதித்தான்: உதாரணம் Vanity Fair நாவலில் வரும் முதிய ஆஸ்போர்ன்; இன்னெரு வியாபாரி திவாலானான்: உதாரணம் திரு. செட்லி (Mr. Sedley). பொதுவாகச் சொல்லப்போனால் இந்தக் 'கடைக்காரர்கள் தேசம்' (Nation of Shop-keepers) முழுவதுமே அமைதி எப்பொழுது வரும் என்று ஏங்கியது; பாதுகாப்பு எப்பொழுது ஏற்படும், ஐரோப்பிய மார்க்கெட்டுகள் எப்பொழுது தமக்குத் திறந்துவிடப்படும், வரிகள் எப்பொழுது குறைக்கப்படும் என்று அது ஆவலோடு காத்துக்கிடந்தது. ஆனால், போனபார்ட்டிக்குமுன் மண்டியிடும் எண்ணம் சிறிதும் இல்லை. செல்வந்தர்களில் பலர்—பாங்கு முதலாளிகள், பழைய வியாபாரிகள், பணம் படைத்தவர்கள், இவர்களது குடும்பங்கள்—டோரிகளின் 'தரங்குன்றுத' அரசியலில் பங்கு

கொண்டனர்; அவர்களது சமூகத்தில் அனுமதிக்கப்பட்டனர்; அவர்களோடு திருமணஉறவுகள் வைத்துக்கொண்டனர்; அவர்களிடமிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஸ்தானங்களையும், படையில் கமிஷன்பதவிகளையும் விலைகொடுத்து வாங்கினர். ஆனால், புதியவகையைச் சேர்ந்த பல செய் பொருள் உற்பத்தியாளர்கள் (manufacturers)—இவர்கள் அல்லது இவர்களது தந்தையர் குடியானவர் அல்லது தொழிலாளர் குடும்பத்தில் தோன்றியவர்கள்; பெரும்பாலும் டிஸ்ஸென்டர்கள். இவர்களது நாட்டம் முழுதும், பெனின் மலைகளிலிருந்து ஓடிவரும் ஏதாவதொரு ஓடையின்கரையில் தாம் கட்டிய தொழிற்சாலையிலேயே இருந்தது—இந்த நிலப் பிரபுக்களை வெறுத்தனர்; பிரான்சுடன் நடந்துகொண்டிருந்த போர்களையும் வெறுத்தனர்; அப்போர்களின் வெற்றியிலும் புகழிலும் தங்களுக்கு ஒரு பங்கும் தரப்படமாட்டாது என்று கருதினர். இத்தகைய மனிதர்கள்தாம் இங்கிலாந்தின் புதிய செல்வத்தைப் படைத்துக்கொண்டிருந்தனர்; ஆனால், அதன் மத்திய அரசாங்கத்திலோ அல்லது தல நிருவாகத்திலோ அவர்களுக்கு ஒரு பங்கும் கிடையாது; இவைகளில் தங்களுக்குப் பங்கு தராத அந்தத் திமிர்பிடித்த வகுப்பினரைக் கண்டு பொருமைப் பட்டனர். அதே சமயம், போரினால் உண்மையில் அவதியுற்ற மனிதர்களிடம்—தொழிலாளர்களிடம்—இவர்களுக்குச் சிறிதும் அனுதாபம் இல்லை; தங்களது நிலத்தில் உழைத்துத் தங்களது பைகளை நிரப்பிய பட்டினித் தொழிலாளிகளிடம் நிலப்பிரபுக்களும் குடியானவர்களும் எவ்வாறு சிறிதும் இரக்கம் காட்டவில்லையோ, அதே போல் தான். தனித்தனி வகுப்புகளாகப் பிரிவுபட்டுக் கிடந்த ஒரு கடின உலகம் அது; அந்நிய எதிரி அச்சுறுத்தினால் தவிர தேசீய சகோதரஉணர்வை அங்குக் காணமுடியாது.

இதையெல்லாம் வைத்துக்கொண்டு, மக்களிடத்தில்—அதுவும், போரின் முதல் பாகத்தில்—நிலவிய அதிருப்தியை நாம் மிகைப்படுத்திக் கூறமுடியாது. பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்கத்தினாலும் டாம் பெய்னின் எழுத்துகளினாலும் தூண்டப்பட்ட ஜனநாயக இயக்கமானது, 1790-க்குப் பிறகு, பொதுமக்கள் அபிப்பிராயத்தாலும் அரசாங்கத்தின் நடவடிக்கையாலும் நசுக்கப்பட்டது. பர்மிங்ஹாமிலும் மான்செஸ்டரிலும் டிஸ்ஸென்டர் பிரிவைச் சேர்ந்த சீர்திருத்தவாதிகளின் கோயில்களும் வீடுகளும் தொழிலாளிகளால் சூறையாடப் பட்டன; டர்ஹாம் சுரங்கத் தொழிலாளிகள் டாம் பெய்னின் கொடும்பாவியைக் கொளுத்தினர். வாழ்க்கைக் கஷ்டங்களின்

விஷேவாகத் தொழிலாளர்வகுப்பின் பெரும்பகுதியில் அதிருப்தியானது சிறிது சிறிதாகப் பரவியது; நீண்டகாலம் வரை அது, தேசமுழுவதும் பரவாமல் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரிடை, ஒரு குறிப்பிட்ட பகுதியில்மட்டுமே காணப்பட்டது. யாகோபியர்களுக்கெதிரான அடக்குமுறைக் காலத்திலும் கூட—சீர்திருத்த வாதியாயிருப்பதைக் காட்டிலும் கொடிய குற்றவாளியாயிருப்பது ஆபத்தில்லாதது என்று கருதப்பட்ட அக்காலத்திலும்கூட—தாங்கள் சுதந்திரமான மக்கள் என்று பெரும்பாலான ஆங்கிலேயர்கள் பெருமிதம் கொண்டனர். ட்ரபால்கர் (Trafalgar) நடந்த ஆண்டில், இலண்டன் நாடக அரங்குகளைச் சென்று பார்த்த ஒரு கீர்த்தி மிக்க அமெரிக்க விஞ்ஞானி கண்டது இது:

'சுதந்திர உரிமைக் கருத்தை ஆமோதித்து 'காலரியில்' அமர்ந்திருந்த மக்கள் இன்று மாலை பலத்த கரகோஷம் செய்தனர். ஓர் ஏழைக்கு நேர்மையான உள்ளம் இருக்குமேயானால் அவனை நசுக்கும் எண்ணமோ அல்லது அதிகாரமோ கொண்ட மனிதன் ஒருவன்கூட இங்கிலாந்தில் இல்லை என்பது இன்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. தனிமனிதனின் உரிமைகளைக் காப்பாற்றவேண்டும் என்ற தணியாத ஆவல் இங்கிலாந்தின் கீழ்வகுப்பு மக்களிடம் கூட இருப்பதை இந்தச் சம்பவம் காட்டுகிறது'[1]

இந்த 'உணர்வு' அளவுக்குமீறிய நம்பிக்கையில் பிறந்தது என்று நாம் கருதுகிறோம்; ஆயினும், அதைக் 'காலரி' மக்கள் கை தட்டி ஆமோதிக்கமுடிந்தது என்பது மகிழ்ச்சிக்குரியது.

தெற்குக்கவுண்டிகள் பலவற்றில் ரொட்டியும் பாலாடைக் கட்டியுமே தொழிலாளிகளின் முக்கிய உணவாயிற்று; அவைகளை அடுத்துப் பீர் அல்லது தேநீர் அருந்தப்பட்டது. அவர்கள் இறைச்சியை வெகுஅருமையாகவே கண்ணால் கண்டனர். ஆயினும், பலரது தோட்டத்தில் உருளைக்கிழங்கு விளைந்தது. போரினால் அதிக விலையும் குறைந்த கூலியும்நிலவியதால் பல மாவட்டங்களில் கிராமத்து ஏழைமக்கள் பட்டினி கிடக்கும் நிலை ஏற்படும்போலிருந்தது; ஆனால், இது ஒரு திட்டத்தினால் தவிர்க்கப்பட்டது. இத்திட்டம் பின்னர்ப் பல தீமைகளையும் கொண்டுவந்தது. 1795 மே மாதத்தில் பெர்க்ஷயர் மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரும், நியூபரியின் வடபுறத்தி

[1]. B. Silliman's Travels in England in 1805, நியூயார்க் 1810, I, பக். 252.

லுள்ள ஸ்பீன்ஹாம்லந்தில் கூடும்படி அழைக்கப்பட்டனர். கவுண்டியில் ரொட்டிவிலையை வைத்து ஒரு குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்து, அமுலாக்குவதே இக்கூட்டத்தின் நோக்கம். விலைகள் தாறுமாறாக ஏறியும் இறங்கியும் வந்த அச் சமயத்தில் குடியானவர்களின் கடுமையான எதிர்ப்பைச் சமாளித்து இதைப் புகுத்துவது என்பது மிகவும் கடினம்; ஆனால், கொள்கையளவில் இது ஒன்றுதான் உண்மையான மருந்து. பெர்க்ஷயரிலும், இங்கிலாந்து முழுவதிலும் இது பின்பற்றப் பட்டிருந்தால், நமது நவீன சமூக வரலாறு, வேறு மகிழ்ச்சி நிறைந்த பாதையில் ஓடியிருக்கும். அது ஒன்று தான் நல்ல வழி; நமது பண்டைய மரபுகளும் சட்டமும் அதைத்தான் குறித்துக்காட்டின. ஆனால், துரதிருஷ்டவசமாக ஸ்பீன்ஹாம்லந்தில் இந்த நல்ல காரியத்துக்காகக் கூடிய அமைதிகாக்கும் நீதிபதிகளின் (Justices of Peace) கருத்து மாற்றப்பட்டது. கூலிஉயர்வை அமுலாக்கும் திட்டம் கைவிடப்பட்டது. கூலியுடன் இரவலர் வரியிலிருந்து (Poor-rate) கொஞ்சம் தர்மம் தந்து விலையுயர்வுக்கு ஈடுகட்டுவது என்று முடிவாயிற்று. ஒரு துண்டு ரொட்டியின்விலை ஒரு ஷில்லிங்காக இருக்கும்வரை ஒவ்வோர் 'ஏழை உழைப் பாளியும்' ஒவ்வொரு வாரமும் தனது கூலியுடன் ஒரு குறிப் பிட்ட தொகையைத் தனக்காக இவ்வளவும் தனது குடும்பத் தினருக்கு இவ்வளவுமாகப் பாரிஷிலிருந்து பெறவேண்டியது என்று ஓர் அட்டவணை வரையப்பட்டது. ரொட்டித் துண் டின் விலை ஏறினால், தர்மத் தொகையின்அளவும் ஏறும். இந்த வசதியான அட்டவணை—இதன் சிறப்புப் பெயர் 'ஸ்பீன்ஹாம்லந்து சட்டம்' — ஒன்றன்பின் ஒன்றாகப் பல கவுண்டிகளில் மாஜிஸ்ரேட்டுகளால் ஏற்றுக்கொள்ளப்பட் டது. இவ்வாறு இந்தத் தீயமுறை இங்கிலாந்தில் பாதியில், குறிப்பாக சமீபத்தில் வேலிஅமைப்புகள் ஏற்படுத்தப்பட்ட கவுண்டிகளில் அமுலாயிற்று. வடக்குக் கவுண்டிகள் இத் திட்டத்திற்குள் வரவில்லை; ஏனெனில், வடக்கில் தொழிற் சாலைகளும் சுரங்கங்களும் போட்டி மூலம் கிராமத்துக் கூலியை ஏற்ற உதவின.

தனது உழைப்பாளிகளுக்கு வாழ்க்கைக்குப் போதுமான கூலியைக்கொடுக்கும் அவசியத்திலிருந்து பெருங்குடியான வர்களை இத்திட்டம் காப்பாற்றியது; அதே சமயம் அப் பெரியமனிதனுக்கு உதவுவதற்காகப் பாரிஷிலிருந்த சிறுசொத்துக்காரர்களும் இரவலர்வரி செலுத்தவேண்டிய பெரும் அநீதி ஏற்பட்டது: தவருமல், தொடர்ந்து வேலை

செய்துவந்த தொழிலாளியும்கூட இரவலன் என்ற பட்டத்தைப் பெறும்படி கட்டாயப்படுத்தப்பட்டான்! எல்லோரது ஒழுக்கநெறி உணர்விலும் இது நஞ்சைக் கலந்தது. கூலிகளை உயர்த்துவதில்லை என்ற பெருங்குடியானவனின் சுயநல மிக்க முடிவு மேலும் உறுதிப்பட்டது; சுதந்திரமானசிறு சொத்துக்காரர்கள் இரவலர்வரிச்சுமை தாங்காமல் திணறினர்; இரவலராக்கப்பட்ட தொழிலாளர்களிடையில் சோம்பேறித்தனமும் குற்றமும் அதிகரித்தன. 1830-ல் ஓர் அமெரிக்கர் எழுதிய கீழ்வரும் வரிகளில் உண்மை மிகுதியாகப் பொதிந்து கிடக்கிறது:

'இங்கிலாந்தில் குறிப்பாக விவசாய மாவட்டங்களில், தங்களது உழைப்பைமட்டுமே நம்பி வாழ்கின்ற எல்லா வகுப்பினருக்கும் இரவலர் என்ற சொல் பொருந்தும்படி இருக்கிறது.'[1]

மக்கட்தொகை துரிதமாகக் கூடியது. இதைக் கண்டு மக்கள் பேரச்சம் கொள்ளவேண்டுமென்று மால்தஸ் அன்று எழுதிவந்தார். கூலியோடு இரவலர் வரிப்பணத்திலிருந்து ஒரு சிறு தொகையையும் கூட்டிக்கொடுப்பதுதான் மக்கட்தொகைப் பெருக்கத்துக்குக் காரணம் என்று அப்பொழுது தவறுகக் கருதப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டைப் போலவே பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் மக்கட்தொகைப் பெருக்கத்துக்குக் காரணம் பிறப்புவீதம் அதிகரித்தது அன்று; இறப்புவீதம் குறைந்ததுதான். 1801-1831-ல் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லந்து ஆகியவற்றின் மக்கட்தொகை பதினொரு மில்லியனிலிருந்து பதினாறரை மில்லியனாக உயர்ந்தது. இதற்குக் காரணம் கிரேட் பிரிட்டனின் நல்ல மருத்துவர்கள்தாமே யொழிய, ஸ்பீன்ஹாம்லந்தில் கூடிய முட்டாள் மாஜிஸ்டிரேட்டுகள் அல்லர்.

போரின்பொழுது தானியவிலையினால் உழைப்பாளி மக்கள் பட்டினி கிடந்து, இரவலர் ஆயினர்; ஆனால், நிலப்பிரபுக்களும் பெரிய குத்தகைக்குடியானவர்களும் பய

[1] 1792-க்கும் 1831-க்குமிடையில் டார்செட் (Dorset) கவுண்டியில் இரவலர் சட்டத்தின்கீழான செலவுகள் 214 சத வீதம் அதிகரித்தன; குற்றவாளிகளைப் பிடித்துத் தண்டித்த செலவுகள் 2135 சத வீதம் அதிகரித்தன. ஆனால், மக்கட்தொகையின் அதிகரிப்போ 40 சத வீதம்தான். (Victoria County History, Dorset, II, 259). 1813-ல் இங்கிலாந்து முழுவதிலும் வசூலிக்கப்பட்ட மற்றத் தலவரிகள் ஒன்றரை மில்லியன்தான்; ஆனால் அவ்வாண்டின் இரவலர் வரியோ ஏழு மில்லியனுக்கும் அதிகம்.

னடைந்தனர். அதுமட்டுமின்றி, நிலச்சொந்தக் குடியான வர்கள், உரிமைப்பத்திர விவசாயிகள் (copyhold peasants) ஆகியோரின் எண்ணிக்கையில் இதுவரை ஏற்பட்டுவந்த வீழ்ச்சி இதனால் தடைப்பட்டது. ஆனால், வாட்டர்லூப் போருக்குப் பிறகு தானியவிலைகள் சரிந்ததால் சிறுவிவசாயி களின் எண்ணிக்கை மறுபடியும் குறையத்தொடங்கிற்று. இவர்கள்மீதுதான் ஸ்பீன்ஹாம்லந்து திட்டத்தின்சுமை மிக அதிகமாக விழுந்தது. தெற்குக்கவுண்டிகளில், குறிப்பாக வில்ட்ஷயரில், சின்னஞ்சிறு குடியானவர்கள் ஏராளமாயிருந் தனர்; அவர்கள் கூலியாட்களை அமர்த்தாமல் தாமே உழைத்துவந்தனர். ஆனால், நிறையக் கூலியாட்களை அமர்த் திய பெருங்குடியானவர்கள்—தமது நிலங்களைப் பிறகு பிடுங் கிக்கொண்டு தம்மை விரட்டப்போகிற விரோதிகளான அப் பெருங்குடியானவர்கள்—கொடுத்துவந்த கூலிக்கு ஈடு கட்டுவதற்காக இவர்கள் மிகவும் பளுவான இரவலர் வரியைச் செலுத்தவேண்டி யிருந்தது. மேலும், திறந்த வயல் களும் பொதுநிலங்களும் வேலியிடப்பட்டு வந்ததால் சிறு விவசாயி இன்னும் அல்லலுற்று வந்தான்; குடிசைத் தொழில்கள் நசித்துவந்ததும் அவனைப் பெரிதும் பாதித்தது.

ஆனால், மாறுதலின் வேகத்தையும் விரிவையும் நாம் மிகைப்படுத்திக் கூறக்கூடாது. 1831-ம் ஆண்டுக் கணக் கெடுப்பின்படி ஒரு மில்லியனுக்கும் சற்றுக் குறைவான குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தன; அவர்களில் 145,000 குடும்பங்கள் கூலியாட்களை அமர்த்தாமல் விவசாயம் செய்தன; நிலங்களில் கூலிக்கு வேலைசெய்த குடும்பங்களின் எண்ணிக்கை 686,000. அதாவது, சீர்திருத்த மசோதா (Reform Bill) வரையப்பட்டு வந்த சமயத்தில் விவசாயப் பாட்டாளி மக்களின் (agricultural proletariate) எண்ணிக்கை, சுதந்திர மான குடியானவர்களின் எண்ணிக்கையைப்போல் இரண் டரை மடங்கே அதிகம். மேலும் 'சிறு விவசாயிகளும்' அப் பொழுது நிறைய இருந்தனர்; கூலியாட்களை அமர்த்தி விவசா யம் செய்த குடியானவர்களின் தொகைக்கு இச் சிறுவிவசாயி களின்தொகை ஒன்றும் குறைந்ததன்று. ஆயினும், பயிரிடப் பட்ட நிலத்தின் பெரும்பகுதி இப்பொழுது பெருங்குடியான வர்களின் கையில் இருந்தது; திறந்த வயல்களும் பொது நிலங்களும் பெரும்பாலும் மறைந்துபோயின.

போரும் போரின்விளைவுகளும் தீர்ந்த பின்னர், 1824-ல் விவசாயத் தொழிலாளியின் உண்மைக்கூலி (real wage),

தேச முழுவதுக்குமான சராசரியின்படி பார்த்தால், முப்பது ஆண்டுகட்குமுன்பு இருந்ததைவிட ஒன்றும் மோசமில்லை என்பதையே புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.[1] சில பகுதிகளில் அவன் முன்னைவிட அதிகக் கூலியும் வாங்கினான். ஆனால், தொழிற்சாலை, சுரங்கங்கள் ஆகியவற்றின் கூலிப் போட்டியில்லாத தெற்குப்பிரதேசத்துக் கிராமப்புறங்களில் குறிப்பாக கூலியைக் குறைத்துத் தருவதற்காகவே இரவலர் வரி பயன்படுத்தப்படும் இடங்களில், தன்னை அமர்த்திய குடியானவனே கட்டிக்கொடுத்த மண்குச்சில் வாழ்ந்தனர். அதற்காகவே அவனுக்கு உழைத்த தொழிலாளிகள் வாழ்ந்த விடங்களில் அவர்களது வாழ்க்கைத்தரம் குறைந்து போயிற்று. அடிக்கடி கூலியில் ஒருபகுதிக்குப்பதிலாக அவன் பூச்சியரித்த தானியத்தையும் கெட்டுப்போன பீரையும் கூடப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அந்தக் கவுண்டிகளில் நேர்ந்த வைக்கோல்போருக்குத் தீவைத்தல், கலகங்கள் ஆகியவை மக்களின் முடிவில்லாத வாழ்க்கைத்துன்பத்தின் பிரதிபலிப்புகள். வாழ்க்கைச்சிக்கல் அதிகமில்லாத முந்திய நாட்களில் பண்ணையுழைப்பாளி பண்ணையிலேயே குடியிருந்தான்; பண்ணைக்காரனின் உணவை உண்டுவாழ்ந்தான். பின்னுட்களில் தனது எஜமானன் தந்த குடிசையில் வாழ்ந்து, அதற்காக அவனுக்கு உழைத்த மாதிரியே இதுவும் ஒரு சுதந்திரமில்லாத வாழ்வுதான். ஆயினும், அன்று எஜமானனுக்கும் உழைப்பாளிக்குமிடையில் அது ஒரு நெருங்கிய பாசஉணர்வை உண்டுபண்ணிற்று. உழைப்பாளி தனது வகுப்பு (class) காரணமாகப் பிரித்துவைக்கப்படவில்லை. எஜமானனின் உணவைச் சமநிலையில் பழைய உழைப்பாளி பங்கிட்டுக்கொண்டதைப்பற்றிக் காப்பெட் கூறுகிறார்.

1830-ம் ஆண்டு குளிர்காலத்தில், சீர்திருத்த மசோதா கொண்டு வரப்படுவதற்குச் சில மாதங்கள் முன்பு, தேம்ஸுக்குத் தென்புறக்கவுண்டிகளில் பட்டினியால் வாடிய உழைப்பாளிகள் நாளொன்றுக்கு அரைக் கிரௌன் கூலி வேண்டுமென்று கோரிக்கலகஞ்செய்தனர். நீதிபதி பழிவாங்கியமுறை பயங்கரமானது. கலகக்காரர்களில் மூவர் அநீதியாகத் தூக்கிலிடப்பட்டனர்; நானூற்றுஇருபது பேர் தத்தம் குடும்பத்தினரிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஆஸ்திரேலியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். பீதியினால் விளைந்த இக்கொடுமையானது எத்தகையதொரு தவறான கருத்து, மேல்வகுப்பினரை ஏழை

[1] பார்க்க: Clapharm, Ec. Hist. of Modern England, I, பக். 125-131.

களிடமிருந்து பிரித்து, சமூகத்தில் ஒரு பெரிய பிளவை ஏற்படுத்தியிருந்தது என்பதைக் காட்டியது. அதுவும் யாகோபிய எதிர்ப்பு என்ற பிசாசு, அரசியல்வாழ்விலிருந்து விரட்டப்பட்ட பிறகும், அரசரின் மந்திரிகள்கூட 'சீர்திருத்தம்' என்ற சொல்லை ஒரு மந்திரத்தைப்போல் ஏற்று உச்சரித்து வந்த பொழுதும்கூட நடந்த இக்கொடுமைக்கு வேறு பொருளிருக்க முடியாது. (Hammond, Village Labourer, அத். XI, XII.)

ஆனால், தேம்ஸுக்குத் தென்புறக் கவுண்டிகளில் காணப்பட்ட உழைப்பாளிகளின் வறியநிலைதான் இங்கிலாந்தின் கிராமப் புறமெங்கணும் காணப்பட்டது என்று கருதுவது பெருந்தவறு. வடக்கிலும், தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் பெருகிவந்த எல்லாப் பிரதேசங்களிலும், விவசாய உழைப்பாளிகளின் கூலிகூட அதிகம்; இரவலர்வரி குறைவு; இந்த நிவாரணத்தொகையைப் பெற்றுவந்தவரின் எண்ணிக்கையும் குறைவு. எல்லாப் பிரதேசங்களையும் எல்லா வகுப்பினரையும் சேர்த்துப் பார்த்தால் முந்திய நூற்றாண்டைக் காட்டிலும் இந்த நூற்றாண்டில் வாழ்க்கைத்தரம் நிச்சயம் அதிகம். குடியானவர்கள் 'பிரபுக்களைக் காப்பியடிக்கிறார்கள்' என்றும், தமது பழைய எளிய பழக்கவழக்கங்களை விட்டுவிட்டு, ஈயப் பாத்திரத்துக்குப் பதிலாக வெட்ஜ்உட் பாத்திரத்தில் உணவருந்துகிறார்கள் என்றும், பெண்களைப் படிக்கவைக்கிறார்கள், 'கிக்' (gig) வண்டியில் பறக்கிறார்கள், வேட்டைக்குச் செல்கிறார்கள் என்றும் காப்பெட் மட்டுமின்றி, எல்லோருமே குறைகூறினர்கள். இது நல்லதா, கெட்டதா என்பது அவரவர் கண்ணோட்டத்தைப் பொறுத்தது; ஆனால், இது 'வாழ்க்கைத் தரஉயர்வை' நிச்சயம் காட்டியது.[1]

[1]குடியானவனின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்பற்றி வாட்டர்லூ சமயத்தில் குறைகூறப்பட்டது. முப்பது ஆண்டுகட்குப் பின்னரும்கூட இதே குற்றச்சாட்டைக் கேட்கமுடிந்தது. 1848-ல் எழுதப்பட்ட இப்பாடல்கள் இதற்கு உதாரணம்:

பழைய பாடல்:

கணவன் ஏரோட்ட,
மனைவி மாடுமேய்க்க,
மகள் நூல்நூற்க,
மகன் களஞ்சியத்தில்,
ஆக, உன் குத்தகைக்கு ஆபத்தில்லை, அறிந்து கொள்வாய்.

புதிய பாடல்:

ஐயாவுக்கு நரிவேட்டை,
குமாரிக்குப் பியானோ,

கிராமத்தில் சாதாரண மக்களின் வாழ்வில் நிறைய மகிழ்ச்சியும் ஓரளவு செல்வமும் குடிகொண்டிருந்தன. ஆனால் இவை இடத்துக்கிடம் காலத்தையும் சூழ்நிலையையும் ஒட்டி மாறுபட்டன. வயல்களிலும் புதர்களிலும் காடுகளிலும் ஓடியாடிய கிராமத்துக் குழந்தைகளின் வாழ்வு, நிறைவுபெற்றும் இனிமையாகவும் விளங்கியது; முன்தலைமுறையில் வாழ்ந்த பெவிக், வேர்ட்ஸ்வொர்த், காப்பெட் ஆகியோரும், இப்புதிய நூற்றாண்டில் ஹோவிட்டும் (Howitt) தமது சிறுவயது அனுபவங்களைப்பற்றி எழுதியிருப்பவைகளில் இதை நாம் காண்கிறோம். வில்லியம் ஹோவிட்டும் ஜார்ஜ் பாரோவும் (George Borrow) மற்ற எழுத்தாளர் பலரும் தெருச்சந்துகளிலும் வயல்வெளிகளிலும் குடிசைகளிலும் சாதாரண மக்களின் வாழ்வில் அந்நூற்றாண்டின் இரண்டாவது, மூன்றாவது பத்தாண்டுகளில் பங்குகொண்டவர்கள். மக்கள் சிரமங்களை அனுபவித்த அதே சமயத்தில் உடல்நலத்துடனும் மன மகிழ்ச்சியுடனும் வாழ்ந்தனர் என்பதை அவர்கள் நமக்குக் கூறுகிறார்கள்.[2] கிராமத்து விளையாட்டுகள், பொழுதுபோக்குகள், பழங்கதைகள், பகல் முழுதும் இயற்கையுடனான தொடர்புகள்—இரவுவேளைகளிலும் வேலியோரங்களில் அரவம் செய்யாமல் முயல்வேட்டையாடுகையில் இயற்கையுடன் கொள்ளும் தொடர்புகள்—இவைகளையெல்லாம் 'கிராமத்து ஏழைகளின் நிலைமையைக்' கணக்கிடும் பொழுது எவ்வாறு மதிப்பிடுவது? பல்வேறு கவுண்டிகளிலும் பிரதேசங்களிலும், பல்வேறு பண்ணைகளிலும் வயல்களிலும் மக்கள் வாழ்ந்த பலவகை வாழ்க்கையை ஒரு பொதுப்படையான முறையில் எவ்வாறு கூறுவது?

அம்மாவுக்கு சில்க்கும் சேட்டினும்,
பிள்ளைக்கு கிரீக்கும் லேட்டினும்,
உங்கள் எல்லோருக்கும் 'கெசட்' உத்தியோகம்.

எர்னல் பிரபு (English Farming, பக். 347) இக்குற்றச் சாட்டுகளைக் கண்டு நகைக்கிறார். இவை முழுவதும் பொய் என்று அவர் கூறுவிட்டாலும், விவசாயஉழைப்பாளிகளின் துன்பத்தை விளக்க இவை போதுமானவை அல்ல என்று கருதுகிறார். குடியானவர்களின் கஷ்டங்கள்பற்றிய இந்த விளக்கம் 'மலைகளைப்போல் பழமையானவை' என்றும், பறவை வேட்டையாடுவதற்காகக் குடியானவர்கள் வேலையை விட்டுவிட்டுச் சென்றதை 1573 லேயே டஸ்ஸர் (Tusser) கண்டார் என்றும் அவர் எழுதுகிறார்.

[2]ஹோவிட் எழுதிய சுவைமிக்க Rural Life in England என்ற நூலும், Boy's Country Book என்ற நூலும் 1802முதல் 1838வரை அவரது அனுபவங்களைக் கூறுகின்றன; பாரோவின் Lavengro என்னும் நூல் 1810முதல் 1825 வரையான அவரது அனுபவங்களை உரைக்கிறது.

பிரயாண வசதிகள் அதிகரித்ததால் கிராமங்களிலிருந்து பையன்களும் பெண்களும் இலண்டனுக்குச் செல்வது அதிகரித்துவிட்டது என்று 1171-ம் ஆண்டிலேயே ஆர்தர் யங் வருந்தினர். ஆனல், இப்பொழுது வேறு பல நகரங்களும் கூட ஆயிரக்கணக்கான கிராமப்பெண்களையும் பிள்ளைகளையும் கவர்ந்தன. சுரங்கங்களும் தொழிற்சாலைகளும் பருத்தி ஆலைகளும் நிறைய இருந்த வடக்குப் பிரதேசத்தில் இவ்வியக்கம் மிகஅதிக அளவில் காணப்பட்டது. 1801—1831-க்கான மக்கட்கணக்கெடுப்பு விவரங்களிலிருந்து வடக்குப் பிரதேசத்தின் தூரத்துப் பாரிஷ்களின் மக்கட்தொகை ஒவ்வொரு பத்தாண்டிலும் குறைந்துகொண்டே இருந்தது என்பதைத் தெரிந்துகொள்கிறோம். எல்லா ஆங்கிலேயக் கிராமங்களிலும் இது நடந்தது என்று கூற முடியாது; ஆனல் அந் நூற்றாண்டின் முதல்முப்பது ஆண்டுகளில் ஒரு நாட்டுப் புறத்துப் பாரிஷின் மக்கட்தொகை ஒருசிறிதும் குறையவில்லை என்றாலும், அது தனது இளைஞர்களில் பலரைக் குடியேற்ற நாடுகளுக்கு அல்லது அமெரிக்காவுக்கு அல்லது உள்நாட்டிலேயே இருந்த தொழில், வியாபார நகரங்களுக்கு அனுப்பிக் கொண்டுதானிருந்தது.

மக்கட்தொகை சதாக் கூடிவந்ததால் இங்கிலாந்தின் கிராமங்களில் ஒவ்வொருவருக்கும் வேலைகொடுப்பது இயலாதது ஆயிற்று. தனக்குத் தேவையான அத்தனை பேர்களையும் விவசாயம் ஏற்கெனவே எடுத்துக்கொண்டுவிட்டது. பரம்பரையாக இருந்துவந்த பல கிராமத்தொழில்களும் வேலைகளும் மறைந்துவந்தன. துணியுற்பத்தியைப் போன்ற பெரிய தேசீயத் தொழில்கள், தாங்கள் பிந்திய இடைக்காலத்திலும் டியூட்டர்கள் காலத்திலும் சென்று குடியேறிய நாட்டுப்புற மாவட்டங்களைவிட்டு இப்பொழுது வெளியேறிக்கொண்டிருந்தன. கிராமமானது விவசாயத்தைமட்டுமே நம்பியிருக்க ஆரம்பித்தது; வெளிமார்க்கெட்டுக்காகச் செய்பொருள்களை உற்பத்திசெய்வதை அது இப்பொழுது நிறுத்திவிட்டது; மேலும், தனக்காகவே அது உற்பத்தி செய்துவந்த பொருள்களின் எண்ணிக்கையும் குறைந்தது.

சாலைகளும் போக்குவரத்துச் சாதனங்களும் அபிவிருத்தியானதால் முதலில் மேனர்ப்பண்ணைச் சீமாட்டியும், பிறகு குடியானவனின் மனைவியும், கடைசியாகக் குடிசையில் வாழும் ஏழைகளும் முன்பு தமது கிராமத்திலும் மேனர்ப் பண்ணையிலும் செய்யப்பட்ட பல பொருள்களை, இப்பொழுது

நகரத்திலிருந்து வாங்க ஆரம்பித்தனர். நகரங்களிலிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் வந்த பொருள்கள் நிரம்பிய கடைகள் கிராமங்கள் பலவற்றில் இப்பொழுது தோன்றின. தன்னிறைவு பெற்ற, தனக்கு வேண்டிய ஆடைகளைத் தானே தயாரித்துக்கொண்ட கிராமமானது மறைந்துபோய்விட்டது. சேணம் செய்வோன், விவசாயக் கருவிகள் செய்வோன், தையல்காரன், மாவு ஆலைக்காரன், மேசை நாற்காலி முதலிய செய்வோன், நெசவாளி ஆகியோரும், சிற்சில சமயங்களில் தச்சனும் கொத்தனும்கூட, ஒருவர்பின் ஒருவராக மறைந்து வந்தனர். விக்டோரியா ஆட்சியின் இறுதியில் கருமான் ஒருவன்தான் பல கிராமங்களில் காணப்பட்டான்; குதிரைக்கு இலாடங்கட்டும் அவனது பண்டைத்தொழில்கூட குறைந்து போயிற்று; எனவே, பிரயாணிகளின் பொத்தலாகிவிட்ட சைகிள் டயர்களை ஒட்டி ஒருவாறு பிழைப்பு நடத்தினன்! சிறு தொழில்கள், கைத்தொழில்களின் எண்ணிக்கை குறைந்துபோனதால் கிராமத்துவாழ்வு சுவையற்றுப் போய்விட்டது; தனது மனப்போக்கிலும், வேண்டிய பொருள்களிலும் தன்னிறைவை இழந்துவிட்டது; தேசத்து வாழ்வின் ஊற்றுக்கண்ணாக இருந்த நிலையை இழந்து, ஒதுக்குப்புறத்துக் குட்டையாக ஆகிவிட்டது. நூற்றுக்கணக்கான வழிகளில் நகரமானது தனது இரத்தத்தையும் மூளையையும் உறிஞ்சிவந்ததால் கிராமத்தின் உயிர்ச்சக்தி சிறிதுசிறிதாகக் குன்றியது. வாட்டர்லூவுக்கும் சீர்திருத்த மசோதாவுக்கும் (Reform Bill) இடைப்பட்ட காலத்தில் தொடங்கிய இந்த வளர்ச்சிப் போக்கு ஒரு நூற்றாண்டுக்காலம் நீடித்தது.

ஆயினும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்பாதியில் கடலுக்கு அப்பாலிருந்த புதிய நாடுகளுக்குத் தேவையான சிறந்தவகை மனிதர்களைத் தருவதற்கு ஆங்கிலேயக் கிராமங்களால் இன்னமும் முடிந்தது. வாழ்க்கைக் கஷ்டங்களிலும் வயல்வேலைகளிலும் நன்கு அடிபட்டு, திடப்பட்டுப் போனவர்கள் அவர்கள். இதனால் மரங்களை வெட்டுதல், விவசாயம், முரட்டுக் கைத்தொழில்கள் ஆகியவற்றைச் செய்ய அவர்கள் தயாராயிருந்தனர். அதேபோல் பெண்கள் நிறையக் குழந்தைகளைப் பெற்றெடுத்துப் பெருங் குடும்பங்களை நிர்வகிக்கத் தயாராயிருந்தனர்.

போருக்குப் பின்னர் இங்கிலாந்தில் நிலவிய சூழ்நிலைகள் மக்கள் பெருமளவில் குடியேற்ற நாடுகளுக்குச் செல்வதற்குத் துணைசெய்தன. மால்தஸ்காலத்து மக்கள் கண்டு

மிரண்ட மக்கட்பெருக்கம், பொருளாதார—சமூகத் தொல்லைகள், கனவான்கள்—குடியானவர்களின் ஆட்சிக் கெதிராகச் சுதந்திர உணர்வுடைய சிலர் கொண்டிருந்த அருவருப்பு ஆகிய இவையெல்லாம் சேர்ந்துதான் கானடா, ஆஸ்திரேலியா, நியூசீலந்து ஆகிய நாடுகளில் பிரிட்டிஷ் ஆண்களையும் பெண்களையும் கொண்டுகுவித்து, இரண்டாவது பிரிட்டிஷ் பேரரசை (Second British Empire) நிறுவ உதவின; 'கனடாவில் நாம் எல்லாச் சுதந்திரத்தையும் பெற முடியும். நமது உரிமைகளைப்பற்றிப் பேச அங்கு அஞ்சவேண்டிய தில்லை' என்று அங்குக் குடியேறிய ஒருவர் கூறினர். 'இங்கு நம்மை விரட்டியடிக்கும் காவல்காரர்கள் யாருமில்லை; ஏனவே, நமது உரிமைகள் அதிகம்' என்றார் இன்னொருவர். ஹைலந்திலும் லோலந்திலும் வசித்த ஸ்காட்டிஷ்காரர்கள் கூட கானடா சென்றனர். காடுகள் அழிந்து, மரத் துண்டுகளால் கட்டப்பட்ட குடிசைகள் தோன்றின. வளமிக்க அவ்வனந்திரத்தில் விவசாயமும் மனிதர்களும் பெருகினர். ஆஸ்திரேலியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் முதலாளித்துவ 'நில ஆக்கிரமிப்பாளர்கள்' (squatters) கால்நடைப் பண்ணைகளைப் பெருமளவில் தொடங்கி, துணிவுமிக்க ஆட்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான தொழில் ஆரம்பித்துவைத்தனர். நியூசீலந்துக் குடியேற்றம் சற்றுப் பிறகே, முக்கியமாக 1837-க்கும் 1850-க்கு மிடையில் ஏற்பட்டது; கிப்பன் வேக்பில்டின் ஆர்வத்தினாலும், ஆங்கிலிக சமயத்தையும் ஸ்காட்டிஷ் பிரஸ்பிடீரிய சமயத்தையும் சேர்ந்த குழுக்களின் சமயஉணர்வினாலும் இது ஓரளவு திட்டமிட்ட முறையில் நடைபெற்றது. ஹனேவீரிய காலத்தையும் விக்டோரியாக்காலத்தின் முன்பகுதியையும் சேர்ந்த பிரிட்டிஷ்காரர்கள் கிராமத்துமனிதர்கள்; அல்லது, கிராமத்துமக்களிடமிருந்து ஒரேஓர் அடி மட்டுமே விலகியவர்கள்; மீண்டும் விவசாயத்துக்குத் திரும்பிச் செல்லமுடியாத அல்லது ஒரேஒரு தொழிலைமட்டுமே செய்யும் திறம் படைத்த முழு நகரவாசிகளல்லர் அவர்கள். ஒரு புதிய வாழ்வின் கடினங்களுக்கும் சிரமங்களுக்கும் ஏற்றவகையில், அதன் பல்விதத் தேவைகளுக்கும் வாய்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் தம்மை மாற்றியமைத்துக்கொள்ள அவர்களால் இன்னும் முடிந்தது. இதனால்தான் பொருத்தமான வேளையில் பிரிட்டிஷ் காமன்வெல்த் நிறுவப்பட்டது.

ஆனால், பல ஆங்கிலேயக் கிராமவாசிகள் கடலைக் கடந்து கொண்டிருந்த அதே சமயத்தில், வேறு பலர் உள்நாட்டி

லிருந்து தொழில்நகரங்களையும் நோக்கி நகர்ந்துகொண் டிருந்தனர். நெப்போலியப் போர்களின்பொழுது நமது தீவுக்குள் இவ்வியக்கமானது வெகு தீவிரமாக நடை பெற்றது. 'நிலக்கரி—இரும்புக் காலம்' நன்கு தொடங்கி விட்டது. ஒரு புதிய வாழ்வு தொடங்கியது; அது தொடங்கிய சூழ்நிலைகள் ஒரு புதுவித அமைதியின்மைக்கு வழிவகுத்தன.

சமூக அமைப்பிலும் ஒழுக்கநெறி யுணர்விலும் கடந்த காலத்தைச் சேர்ந்த ஒரு பழைய கிராமப்புற உலகைவிட்டு சுரங்கத்தொழிலும் தொழிற்சாலைகளும் நிறைந்த ஓர் உலகுக்கு மக்கள் குடிபெயர்ந்தனர்; இப் புதிய உலகில் குப்பைகளைப் போல் இவர்கள் குவிக்கப்பட்டு, இரசாயன மாற்றமுற்று, எளிதில் தீப்பிடிக்கும் ஓர் ஆபத்தான பொரு ளாயினர். தாங்கள் விட்டுவந்த வயல்களிலும் கிராமத்துக் குடிசைகளிலும் கிடைத்த உணவு, உடை, கூலி ஆகிய வற்றைவிடப் பெரும்பாலும் அதிகமாகவே இங்கு அவர் களுக்குக் கிடைத்தது. இரவலர் நிவாரணத்தொகை பெற்று வந்த விவசாயத் தொழிலாளியைவிட அவர்களுக்கு அதிக சுதந்திரம் இருந்தது. ஆனால், தொழிற்சாலைகளுக்கு அவர்கள் குடிபெயர்ந்திருந்ததில் இலாபம், இழப்பு இரண்டும்இருந் தன. வயல், காடு, வேலி ஆகியவற்றின் வனப்பு, கிராமத்து வாழ்வின் பண்டைப் பழக்கவழக்கங்கள்—கிராமத்துப்பசும் புல் மைதானம், அதில் நடக்கும் விளையாட்டுகள், அறுவடை விருந்து, பத்திலொன்று(tithe) விருந்து, மேதினச் சடங்குகள், வேட்டை, குதிரைப் பந்தயம்—ஆகிய இவையெல்லாம் மனிதாபிமான வாடை வீசிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி, வறுமையுணர்வைத் தணித்தன. ஆனால் சுரங்கம், தொழிற் சாலை, தொழிலாளர்கள் வசித்த வரிசைவரிசையான செங்கல் வீடுகள் ஆகிய எதுவும் அச் சூழ்நிலையை உண்டுபண்ண முடியாது. தாங்கள் விட்டுவந்த கிராமத்துக்குடிசைகள் இச் செங்கல்வீடுகளைவிட மோசமானவைதாம். அழகிய சூழலில் அமைந்திருந்தாலும் அவை இடிந்த பாழ்கள்; உடல் நலத்துக்கு ஊறுசெய்பவை. ஆயினும், மலர்க்கொடிகள் ஏறிப் படர்ந்த அந்த உடைந்த சன்னலையும், காளானோடு புருக்களுக்கும் புகலிடம் தந்த அந்த ஓட்டைக் கூரையையும் நேசிக்காமல் எப்படி இருக்க முடியும்! வேர்ட்ஸ்வொர்த்தின் 'ஏழைப்பெண் சூசான்' (Poor Susan), பெரு நகரில் திக்கற்று வாழ்ந்த அப்பேதை, தான் பிறந்த அந்தக் கிராமத்துக் குடிசையை,'உலகில் தான் நேசிக்கும் அந்த ஒரே இல்லத்தை'

நினைத்து உருகினாள். இத்தகைய நேசத்தைப் பட்டணத்துச் சேரிகளிடம் காட்டுவது இயலாது; தொழிலாளிக்காக இன்று கட்டித் தரப்படும் நவீனக் குடியிருப்புப் பகுதிகளிடம்கூட காட்டுவது முடியாது.

புதிய நகரங்களில் ஐரிஷ் தொழிலாளர்கள் வசித்துவந்த பகுதிகள்தாம் படுமோசமான சேரிகள். இங்கிலாந்தின் கிராமங்களைவிட மிகமிக மோசமான கிராமப்புறத்துச் சேரிகளிலிருந்து அவர்கள் வந்தவர்கள்; எனவே, அவர்களோடு கெட்ட பழக்கங்களும் வந்தன. அயர்லந்தில் ஐரிஷ் விவசாயியை இங்கிலாந்து நடத்திய இழிவான முறைக்கு, அவர்கள் இங்கு விடாமல் பழிதீர்த்துக் கொண்டனர். ஆனால் தொழிற்சாலைப் பிரதேசங்களில் மிக மோசமான சுகாதார நிலைமைகள் நிலவியகாலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் அன்று; அதன் மத்திய காலம். ஏனெனில் புதிய வீடுகள் சேரிகளாக மாறுவதற்கு அவ்வளவு காலம் செல்லவேண்டியிருந்தது; காரணம், ஆண்டுகள் செல்லச் செல்ல அவைகளைச் செப்பனிடுவோரும், அங்குச் சாக்கடை வசதி அமைப்போரும் யாருமில்லை.

தொழிற்சாலையில் வேலைசெய்வோர் தொழிலாளர்கள் என்ற முறையில் வேலையளிப்போனுக்கு (employer) எதிராக ஒன்றுசேர்ந்தனர்; தொழிலளிப்போன் தொழிலாளர்களிடமிருந்து விலகித் தனியாக ஒரு வீட்டில், தனியான ஒரு சமூகச் சூழ்நிலையில் வாழ்ந்தான். பழைய கிராமஅமைப்பில் இத்தொழிலாளர்கள் ஒவ்வொரு வயலிலும் ஒன்று, இரண்டு அல்லது அதிகமாகப் போனால் ஆறு பேர்களாக, எங்கும் பரவி வாழ்ந்தனர்; குடியானவனுகிய தமது எஜமானனுடன் நெருங்கி வாழ்ந்தனர்; இதனால் இவர்களுக்கும் குடியானவனுக்குமிடையில் நேசம் நிலவியது; அவனுடைய வீட்டிலேயே, அவனது மனைவியால் சமைக்கப்பட்ட உணவைத் திருமணமாகாத தொழிலாளர்கள் அருந்தினர்.

யாராலும் மதிக்கப்படாத, தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் வேலைசெய்த இந்தத் தொழிலாளர்கூட்டத்துக்கு, முன்பு கிராமவாழ்வின்போது தான் பெற்றிருந்த வசதிகளையும் மரபுகளையும் இழந்துபோயிருந்த அந்த மக்கள்கூட்டத்துக்கு, ஈடுசெய்யக்கூடிய வகையில் எத்தகைய சமூகப் பணிகளோ அல்லது நவீனவகைப் பொழுதுபோக்குகளோ அப்பொழுது தோன்றவில்லை. திருச்சபையும் அரசும் அவர்களை அடியோடு புறக்கணித்தன; இரக்க சிந்தையுடைய

எந்தச் சீமாட்டியும் கம்பளிப்போர்வையையும் அறிவுரையையும் கொண்டு அவர்களின் சேரியில் நுழையவில்லை; கன்பார்மிஸ்ட் அல்லாத மதகுருவைத் தவிர நண்பர்கள் அவர்களுக்குக் கிடையாது. மதுவைத் தவிர வேறு ஆடம்பரப் பொருள் அவர்களுக்கு இல்லை; தங்களைத் தவிரப் பேச்சுத் துணைக்கு வேறு யாருமில்லை; தங்களது துன்பங்களையும் குறைகளையும் தவிரப் பேசவும் வேறு பொருளில்லை. எனவே போராட்டம் என்ற நெருப்புக்கு ஏற்ற பஞ்சுப்பொதியாக அவர்கள் விளங்கினர். எவஞ்சலிய சமயத்தையும் (Evangelical religion), தீவிரவாத (Radical) அரசியலையும் தவிர அவர்களுக்கு வாழ்வில் வேறு அக்கறையோ அல்லது நம்பிக்கையோ கிடையாது. சில சமயங்களில் இவை இரண்டும் கைகோத்துச் சென்றன; ஏனெனில், கன்பார்மிஸ்ட் அல்லாப் பிரசாரகர்களில் பலரே தீவிரவாதத் தத்துவங்களை ஆழ்ந்து பருகிப் பிறரிடம் பரப்பினர். ஆயினும், வெஸ்லியின் இயக்கம் தோன்றத் துணையாயிருந்த அரசியல் பத்தாம்பசலித்தனம் இன்னும் இறந்துபோகவில்லை; தீவிரவாதத்தைத் தடை செய்யும் ஒரு சேணமாக அது இன்னும் விளங்கிவந்தது. பொருளாதாரக் குழப்பமும் சமூகத்துறையில் புறக்கணிப்பும் மிகுந்து காணப்பட்ட இக்காலத்தில் இரத்தக்கறை படிந்த புரட்சிப் பாதையில் நமது நாடு அடியெடித்து வைப்பதைத் தடுத்த பிரதான சக்தி இந்த எவஞ்சலிய சமயம்தான் என்று, நமக்காகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இங்கிலாந்தின் வரலாற்றை எழுதிய அந்த மாபெரும் பிரெஞ்சு வரலாற்றாசிரியர் எலி ஹலேவி (Elie Halevy) கருதினர்.

'எவஞ்சலியர்களை அவர்களது குறுகிய பியூரிட்டானியக் கொள்கைகளுக்காகக் கற்றவர்களும், அவர்களது அறிவின் ஆழமின்மைக்காக விஞ்ஞானிகளும் வெறுத்தனர். ஆயினும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய சமுதாயத்தின் ஒழுக்கநெறியைக் காத்தது எவஞ்சலிய சமயம்தான். பிரிட்டிஷ் பிரபுக்களுக்கு ஒழுக்கநெறி பிறழாக் கண்ணியத்தை ஊட்டி, பொதுமக்களின் அணியிலிருந்து சமீபத்தில் முன்னேறி மேலுக்குவந்த பணக்காரர்களை ஆடம்பரத்துக்கும் தீயொழுக்கத்துக்கும் ஆளாகாமல் இழுத்துப்பிடித்து, தூய்மை, தன்னடக்கம் போன்ற நற்பண்புகளில் அதிகம் ஈடுபாடுடைய சில தொழிலாளர்களைப் பாட்டாளிவகுப்புக்குத் தலைவர்களாகத் தந்து பெரும்பணியாற்றியது இந்த எவஞ்சலியர்கள்தாம். ஆகவே, புரட்சிச் சக்திகள் மேலுக்குவந்த சமயத்தில் தற்காலிகமாக அழிந்துபோன ஒரு சமநிலையை

இங்கிலாந்தில் மீண்டும் நிறுவிய ஒரு பழமை விரும்பி சக்தி தான் எவஞ்சலிசம்.' (ஹலேவியின் History of English People; ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு : E. I. வாட்கின், III, பக். 166.)

வாட்டர்லூவுக்குப் பிறகு வந்த தலைமுறையில் தீவிரவாத இயக்கம் குறைந்த அளவு வெற்றியே பெற்றதற்கும், அதன் மிதவாதத் தன்மைக்கும், இந்த வலிமிக்கப் பொதுமக்கள் சமயத்துக்கு அடுத்தபடி வேறு ஒரு காரணமும் இருந்தது. அச் சமயம் தொழிற்சாலைகள் நிறைந்த பிரதேசங்களில் வெற்றிகரமாகப் பரவியது என்பது உண்மை; ஆனால், அப் பிரதேசங்கள் இங்கிலாந்தின் மொத்தப் பரப்பில் ஒருசிறுபகுதி யாகவே அன்று இருந்தன. 1819-ல் தொழிற்சாலைநிலைமை கள் இலங்காஷயர் பருத்திப் பிரதேசத்துக்கு அப்பால் விரி வாகப் பரந்திருக்கவில்லை; எனவே தீவிரவாத இயக்கத்தை, பீட்டர்லூப் படுகொலையாலும் (Peterloo massacre) ஆறு சட் டங்களாலும் (Six Acts) தற்காலிகமாக நசுக்குவது சாத்திய மாயிற்று. எதிர்காலத்தில் தொழிற்சாலைமுறை வெற்றியடை யப்போகிறது; ஆனால் இப்பொழுது விவசாயம், தொழில், வீட்டுவேலை, கடல்கடந்து செல்லுதல் ஆகிய எல்லாவற்றி லும் பழைய வாழ்க்கைநிலைமைகளிலேயே ஆங்கிலேயத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் வேலை செய்தனர். பீட்டர்லூ ஒரு முக்கிய நிகழ்ச்சி; ஏனென்றால், மான்செஸ்டர் பருத்தியாலைத் தொழிலாளிகள்மீது குடியான வர்கள் வாளேந்தி நடத்திய துயர்மிக்க தாக்குதலை ஆங்கி லேய இளைஞர்கள் கண்டனர். அடுத்த தலைமுறையை உரு வாக்கப்போகும் இவர்களிடம் யாகோபிய எதிர்ப்பு டோரி இயக்கத்தைப்பற்றி (Anti-Jacobin Toryism) ஒரு வெறுப்பு இதனால் வளர்ந்தது. ஆயினும், பீட்டர்லூப் படுகொலையில் பலியானவர்கள் தென்லங்காஷயர் தொழிலாளர் வகுப்புக்கு ஒரு சிறந்த உதாரணமாக இருந்தாலும் கூட, அன்றைய இங்கிலாந்துக்கு உதாரணம் அல்லர்.

திரு. பிக்விக்கினுடைய (Mr. Pickwick) உலகம், பிரயாணி களுக்காக வேகமான கோச்சுவண்டிகள் ஓடிய, முதல் சீர் திருத்த மசோதா கொண்டுவரப்பட்ட உலகம்; ஓர் இடை நிலை (Transition) உலகம்; பழைய பொருளாதாரச் சமூகமும் புதிய பொருளாதாரச் சமூகமும் கலந்துநின்ற உலகம். ஆயி னும், பழையதே இன்னும் முக்கியத்துவம்பெற்று விளங்கி யது. இன்னும் சிறிது காலம்வரை சுரங்கத் தொழிலாளி

களையும் தொழிற்சாலைகளில் வேலைசெய்வோரையும்விட, விவசாயத் தொழிலாளிகளும் சிறு தொழிற் பட்டறைகளில் வேலைசெய்வோருமே அதிக எண்ணிக்கையில் இருந்தனர். பிறகு, வீட்டுவேலை செய்துவந்த ஆண், பெண் வேலைக் காரர் பட்டாளம் ஒன்றும் இருந்தது. அந் நூற்றாண்டின் மூன்றாவது பத்தாண்டுகளில் வீட்டுவேலைக்காரப் பெண்கள் மட்டும், 'பருத்தியாலைகளில் வேலைசெய்துவந்த ஆடவர் கள் பெண்டிர்கள், சிறுவர்கள் சிறுமிகள் ஆகியோரது மொத்த எண்ணிக்கையைவிட ஐம்பது சத விகிதம் அதிக மிருந்தனர்.' (கிளாப்ஹாம் 1, பக். 73). வீட்டுவேலைக்காரர் களின் வேலைநிலைமைகள், கூலி ஆகியவை பொருளாதார அல்லது சமூக வரலாற்றாசிரியர்களால் சிறிதும் ஆராயப் படவேயில்லை; அவைகளை மதிப்பிடுவதும் மிகவும் கடினம்; ஏனென்றால், அவை வேலையையும் எஜமானரின் தன்மையை யும் பொறுத்து வீட்டுக்குவீடு மாறுபட்டன. இவ் வேலைக் காரர்கள் வகுப்பில் மிகவும் சலுகைகளையும் உரிமைகளையும் அனுபவித்தவர் திரு. சாமுவேல் வெல்லர் (Mr. Samuel Weller). அவருக்குச் 'செய்வதற்கு ஒரு வேலையு மில்லாவிட் டாலும், அனுபவிப்பதற்கு எல்லா வசதிகளும் கிடைத்தன.' அவரும் அவரது மேரியும் ('திரு. நப்கின்ஸின் வேலைக் காரி') தமது கருத்திலோ அல்லது பரம்பரையிலோ தீவிர வாதிகள் (Radicals) அல்லர்; ஆயினும், சீர்திருத்த மசோதாவை அவர்கள் மனமார ஒருவேளை வரவேற்றிருக்கக்கூடும்.

தொழிற்சாலைகளிலும் வீடுகளிலும் வேலைசெய்யாத இன் னொரு பெரிய பட்டாளம் 'நவ்விகள்' (navvies). தொழில் திறமையற்ற (unskilled) இவர்கள், கூட்டம்கூட்டமாகக் கால் வாய்கள் வெட்டிக்கொண்டும் [1] சாலைகள் அமைத்துக் கொண்டும் இடம்விட்டு இடம் சென்றனர்; அடுத்த தலை முறையில் இவர்கள் இரயில்பாதைகளுக்கு வேண்டிய மேடு களையும் சுரங்கப்பாதைகளையும் அமைத்தனர். வடக்குப் பிர தேசத்தில் இவர்களது அணியில் ஐரிஷ்காரர்கள் பெரும் எண் ணிக்கையில் இருந்தனர்; ஆனால், தெற்கிலோ இவர்கள் அனை வருமே வேலைகிடைக்காத ஆங்கிலேயக் கிராமவாசிகள். தெற்கில் தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் அதிகமில்லாத தால் இவர்களுக்கு வேறு வேலைவாய்ப்புகள் கிடையா. இந்த 'நவ்விகள் பட்டாளத்'தில் நிறையச் சம்பளம் வாங்கிய சில எஞ்சினியர்கள் அதிகாரிகளாக இருந்தனர்; இரயில்பாதை

[1] 'Inland navigators' என்ற சொல்லிலிருந்து 'நவ்வி' என்ற சொல் தோன்றியது.

அமைப்பும் சுரங்கப்பாதைகள் குடைதலும் வந்தபொழுது இவர்களின்தொகை அதிகரித்தது; ஊதியமும் அதிகரித்தது. ஆயினும், மற்றப் புதிய தொழிலாளர்வகுப்புகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த 'நவ்விகள்' பொதுவாக மிகக் குறைந்த தொழில்திறமும் ஊதியமும், அதிக அறியாமையும் பெற்றவர்கள். ஆனால், இவர்கள்தாம் புதிய உலகத்தின் நாடோடிகள்; அதன் அஸ்திவாரத்தை நிர்மாணித்தது இவர்களது புயவலிதான்.

உழைப்பாளிகள்அணியின் எதிர்க்கோடியில் இருந்தவர்கள் தொழில்திறம்பெற்ற எஞ்சினியர்களும் மெக்கானிக்குகளும். இயந்திரங்களைச் செய்து செப்பனிட்ட இம்மனிதர்கள்தாம் தொழிற்புரட்சியின் செல்லப்பிள்ளைகள்; அதன் மெய்க்காவலர்களும் இவர்களே. மற்றத் தொழிலாளிகளைவிட இவர்களுக்கு அதிகச் சம்பளம் கிடைத்தது; அவர்களைவிட அறிவிலும் மேம்பட்டு விளங்கினர்; கல்வி இயக்கங்களையும் தலைமைதாங்கி நடத்தினர். இவர்களது எஜமானர்களும் இவர்களை மதித்தனர்; இவர்களோடு ஆலோசனை நடத்தினர்; இவர்களது தொழில் நுட்ப (technical) அறிவுக்குச் சிரம் தாழ்த்தினர். முன்னேற்றம், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் முன்னணியில் தாம் நின்று புதிய யுகத்துக்கு வழிகாட்டுவதில் தாம் தலைமை தாங்குவது குறித்து இவர்கள் மகிழ்ந்தனர். இதைப் போன்றவர்கள்தாம் டைன்சைடைச் சேர்ந்த ஸ்டீவன்சன் முதலியோர். இரயில் எஞ்சினைக் கண்டுபிடித்த அம்மனிதருக்கும் நடுத்தர வகுப்புக்கும் (middle class) ஒரு துளிச் சம்பந்தமும் கிடையாது. அவர் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டதே தனது பதினேழாவது வயதில்தான்.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளிகள் பஞ்சாலைத் தொழிலாளிகள் ஆகியோரின் ஆரம்ப வரலாற்றை வரைவது, மெக்கானிக்குகள், எஞ்சினியர்கள் ஆகியோரின் வரலாற்றை வரைவதைவிட எளிது; ஏனெனில், பின்னல் சொல்லப்பட்ட இவர்கள் நாடுமுழுவதும் சிதறிக்கிடந்தனர். ஆனால், மெக்கானிக்குகளை விட்டுவிட்டால், தொழிற்புரட்சியின் ஆரம்பக்கட்டம்—அதுவே மிக மோசமான கட்டம்—பற்றிய வருணனையானது மிகப் பயங்கரமானதாக இருக்கும். வரப்போகும் காலத்தின் குறிக்கோள் 'சுய உதவி'; இந்தக் கோட்பாடுகாரணமாக வலி குறைந்த, அதிருஷ்டம் குறைந்த பலர் பின்தங்கிப்போயினர்; ஆனால், எஜமானர்கள், நடுவர்கள் (middle men) ஆகியோர் தவிர வேறு வகுப்பினரும் முதலிலிருந்தே இருந்துவந்தனர்;

இவர்களும் இக்கோட்பாட்டின் பலன்களை அனுபவித்தனர்; தனிநபர்வாதக் கோட்பாட்டினால் (individualist doctrine) ஒழுக்கநெறிகளிலும் அறிவாற்றலிலும் தூண்டுதல்பெற்று இவர்களும் பெருகினர்.

மெக்கானிக்குகள் பொதுவிஞ்ஞான அறிவைப் பெற விரும்பினர்; நடுத்தரவகுப்பைச் சேர்ந்த சில அறிவாளிகளும் இதற்கு உதவவிரும்பினர். எனவே, தொழிற்புரட்சியினால் முதியோர் கல்விக்கு (Adult Education) வித்திடப்பட்டது. இவ்வியக்கமானது தொழிலாளி மக்களுக்காகப் பலன் கருதித் தோன்றிய ஒன்று; ஆயினும், அறிவு பெருக வேண்டும் என்ற எண்ணமும், ஓர் இலட்சியக் கனவும் கூட அதில் காணப்பட்டன. பயன் கருதாமல் விஞ்ஞான அறிவைப் பெறும் எண்ணமும் ஊதியமிக்க வடக்குப்பக்கத்துத் தொழிலாளிகளிடையில் நன்கு வேரூன்றியிருந்தது. ஸ்காட்லந்தில் டாக்டர் பெர்க்பெக் (Dr. Birkbeck) அவர்களால் துவக்கப்பட்ட மெக்கானிக்குகளின் இன்ஸ்டிடியூட்டுகள் (Mechanics' Institutes) 1823முதல், இங்கிலாந்தின் தொழிற்சாலைப் பகுதிகளில் பரவின. இத் தீ, ஹென்றிபுரோகம் (Henry Brougham) தந்த ஆர்வத்தினால் கொழுந்துவிட்டெரிந்தது. அவரது அற்புதமான ஸ்தாபனத்திறமையும் விளம்பரத்திறமையும்தாம் இதற்குக் காரணம். எதிர்காலத்தையும் அதன் தேவைகளையும் சுட்டிக்காட்டி, பாராளுமன்றத்திலும் நாட்டிலும் ஓர் உண்மையான 'எதிர்க்கட்சி' அவசியம் என்று அவர் வாதாடினர்; அவரது பொதுப்பணிகளில் தலையாயது இதுதான். இதே சமயத்தில்தான் தொழிலாளர்கல்வியிலும் அவர் அக்கறை காட்டினர். தமது கல்வியறிவைக்கண்டு தாமே திருப்தியடைந்த பீகாக் (Peacock) போன்ற பண்டை நூல் அறிஞர்கள் இந்தக் 'கற்ற நண்பரைக்' கண்டும், அவரது 'நீராவி—அறிவுச் சமூகத்தைக்' கண்டும் நகைக்கலாம்; ஆனால், அக்காலத்திய சமயமணம் கமழ்ந்த ஆக்ஸ்போர்டிலும் கேம்பிரிட்ஜிலும் பிறரது கைகளுக்கெட்டாத வகையில் பூட்டிவைக்கப்பட்ட பண்டை இலக்கிய அறிவை மட்டுமே கொண்டு புதிய உலகம் வாழமுடியாது. கல்வியறிவு அவசியம் என்பதை உணருமாறு சமுதாயத்தை மாற்ற வேண்டிய பணியை முதலாவதாகக்கொண்ட அக்காலத்தில் 'கல்வியில் பாதிகடலாகவும், எல்லாவற்றையும் அரையளவு அறிந்தவராகவும்' ஹென்றி புரோகம் இருந்ததால் ஒன்றும் முழுகிப் போகவில்லை; கல்லாதவர்க்குக் கற்பிப்பதே அவர் இலட்சியம். இவ்விலட்சியத்தைப் பிரசாரம் செய்வதில்

அவருக்கிருந்த ஆர்வத்தை எந்த சக்தியும் தடைசெய்ய முடிய வில்லை; கற்றவர்முன் முட்டாளாக நடந்துகொள்வதைப் பற்றியும்கூட அவர் கூசவில்லை; தனது இலட்சியம் நிறை வேறவேண்டும். இதுவே அவரது நோக்கம்.

ஒரு கினி ஆண்டுச் சந்தா வாங்கிய இந்த மெக்கானிக்கு களின் இன்ஸ்டிடியூட்டுகள் வெற்றிகரமாக நடைபெற்றன. தொழிற்புரட்சி காரணமாக மற்ற வகுப்புத் தொழிலாளிகட்கு என்ன நடந்தாலும், எஞ்சினியர்களுக்கும் மெக்கானிக்கு களுக்கும் செழிப்பே ஏற்பட்டது என்பதை இது காட்டியது. ஒரு தலைமுறைக்கு முன்னர்த் தொழிலாளிமக்கள் சுயக்கல்வி (self-education) பெறச்செய்த முதல்முயற்சி யாகோபிய எதிர்ப்புப் பீதி காரணமாக நசுக்கப்பட்டதைத் தீவிரவாதி யான (Radical) தையல்காரர் பிரான்சிஸ் ப்ளேஸ் (Francis Place) கண்டார்; ஆனால், அவரே 1824-ல் இரசாயனம்பற்றிய ஒரு விரிவுரையை 'மிகுந்த அக்கறையுடன் 800 முதல் 900 வரை எண்ணிக்கையுள்ள, தூய்மையாக உடை உடுத்த, மதிப்பான தோற்றமுடைய மெக்கானிக்குகள் கேட்டுக் கொண்டிருந்ததைக்'கண்டு மகிழ்ச்சியோடு வருணித்தார். அந்த ஆண்டில் Mechanics' Magazine என்ற பத்திரிகை 16,000 பிரதிகள் விற்பனையாயின; இலண்டன் இன்ஸ்டிடியூட் டுக்குத் தலைக்கு ஒரு கினி வீதம் 1500 தொழிலாளிகள் சந்தா செலுத்தினர். முயற்சிமிக்க பதிப்பாளர்கள் மலிவான விலை யில் நூல்களையும் பத்திரிகைகளையும் வெளியிட்டு பல்துறை அறிவையும் பரப்பினர்; அறிவுத் தாகம் கொண்ட தொழிலாளிகள் அவைகளை ஆர்வத்துடன் வாங்கிப் படித் தனர்.

முதியோர் கல்வியும் சுயக்கல்வியும் (self-education) ஒரு புதிய வலிய சக்தியால் உந்தப்பட்டு முன்னேறி வந்த அச் சமயத்தில், அதே சக்தியால் தூண்டப்பட்டு இலண்டன் பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டது (1827). ஆக்ஸ்போர்டி லும் கேம்பிரிட்ஜிலும் நுழையமுடியாத கன்பார்மிஸ்ட் அல்லாதாரும் சமயச் சார்பற்றோரும் (secularists) ஒன்று கூடி எச் சமயத்தையும் சேராத ஒரு கல்விநிலையத்தைத் தலைநகரில் நிறுவினர்; சமயத் தத்துவம் அந் நிலையத்தின் பாடத்திட்டத்தில் இடமளிக்கப்படவில்லை; ஆசிரியர்களுக்கும் சரி, மாணவர்களுக்கும் சரி, சமயம் சம்பந்தமான தேர்வுகள் நடத்தப்படவில்லை. விஞ்ஞானத்தையும் உள்ளிட்ட நவீன கல்வியைப் போதிப்பதே, பின்னர்ப் பல்கலைக்கழகமாக வள

ரப்போகும் அந்நிலையத்தின் நோக்கம். கிரேக்கம், இலத்தீன் ஆகியவை இடம்பெற்ற பழைய பாடத்திட்டம் திருச்சபை அல்லது அரசாங்கக் கட்சியினர் நடத்திவந்த சமயச்சார் புடைய கல்வி நிறுவனங்களே மக்களுக்கு நீனவுபடுத்தியது. நகரமக்களில் எந்தவிதமான விசேஷஉரிமைகளும் பெற் றிராத கீழ்வகுப்பினர் 'பயன் தரத்தக்க' கல்வியே வேண்டினர். எனவே, இலண்டன் பல்கலைக்கழகம் நிறுவப் பட்டது கல்வித்துறையில் ஒரு முதல்முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி; ஆனல், அச்சமயத்தில் அதன் உண்மை யான முக்கியத்துவம் மக்களின் கண்களில் படவில்லை; சமய, கட்சிப் பூசல்கள் அதை மறைத்துவிட்டன. புரோகத்தின் ஓரளவு அன்புடனன கேலிப் பேச்சும் அவரது 'காக்னி கல் லூரியும்' (Cockney College) கூட அதற்குக் காரணம்.

சமயப் பிரிவுகளுக்கிடையிலான பூசல்களினல் ஆரம்பக் கல்விக்கு (Primary education) இலாபம், நஷ்டம் இரண்டுமே ஏற்பட்டன. இப் பூசல்கள் இயற்கையே; ஏனெனில், டிஸ் ஸெண்டர்கள் தொகையில் பெருகிவிட்டனர்; ஆயினும் நிறுவப்பட்ட திருச்சபையைச் சேர்ந்தவர்கள் தங்களது விசேஷ உரிமைகளில் ஒருசிறிதும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. மேலும், பொதுமக்கள் கல்விக்கு வரிப் பணத்தைச் செலவிட முடியவில்லை; ஏனென்றல், அது அரச சமயத்தின் (State religion) மூலமாகவே செலவிடப்பட வேண்டும் என்று திருச்சபை வாதித்தது; இந்த நிபந்தனை களோடு பொதுப்பணத்தைச் செலவழிப்பதற்கு டிஸ்ஸென் டர்கள் சம்மதிக்கவில்லை. இவைமட்டுமின்றி, எதிரிகளான இச் சமயப்பிரிவுகள் அனைத்தும் பகல் பள்ளிகளையும் (Day Schools) ஞாயிறு பள்ளிகளையும் (Sunday Schools)நடத்துவதற் காக மக்களிடம் நிதி திரட்டுவதில் ஒன்றேடொன்று போட்டி யிட்டன. போட்டிப் பள்ளிகள் நடத்தும் விருந்து வருணிக் கப்படும் காட்சி ஒன்று செல்வி பிரான்ட் (Miss Bronte) எழுதிய Shirley நாவலில் வருகிறது (அத். XVII). இதில் நிறுவப்பட்ட திருச்சபை நடத்தும் பள்ளிப்பிள்ளைகள் படை, 'பாதிரிகளாலும் பெண்களாலும் நடத்தப்பட்டு', அதன் பாண்டு வாத்தியக் குழு 'ரூல் பிரிட்டானியா'வை (Rule Britannia) இசைக்க, வேகமாக அடிவைத்துக் குறுகிய சந்தில் அணிவகுத்துச் சென்று, டிஸ்ஸென்டர்கள் நடத்தும் பள்ளிப்பிள்ளைகளின் படையைச் சிதறடிக்கிறது; இப் படை யும் அதன் ஊர்க்குருக்களும் (Pastors) மெல்லிய குரலில் ஒரு

பாட்டைத் தொடங்கிப் புறமுதுகு காட்டி ஓடுகிறார்கள். பண்டை ஆங்கிலேய அரசியலிலும் சமயத்திலும் கல்வியிலும் காணப்பட்ட பல அம்சங்களின் இரகசியங்களையும் இந் நூலில் நாம் தெரிந்துகொள்கிறோம்.

டிஸ்ஸென்டர்களும் விக்குகளும் 'பிரிட்டிஷ், அந்நிய பள்ளிச் சங்கம்' (The British and Foreign School Society) என்ற ஒன்றை நடத்தினர். இது சமயப் பிரிவுச் சார்பற்ற முறையில் பைபிளைப் போதிக்கும் அடிப்படையில் இயங்கியது. நிறுவப்பட்ட திருச்சபையினர் இதற்கெதிராக 'இங்கிலாந்து திருச்சபையின் கோட்பாடுகளின்படி ஏழைகட்குக் கல்வி கற்பிக்கும் தேசீய சங்கம்' (National Society for the Education of the Poor according to the Principles of the Church of England) என்பதை நிறுவினர். 'தேசீய' அல்லது திருச்சபைப் பள்ளிகள்தாம் ஆங்கிலேயக் கிராமங்களில் மிகவும் சாதாரணமான கல்வி நிறுவனங்களாயின.

இன்றையக் கல்வியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அக் காலத்தியக் கல்வியில் பல குறைபாடுகள் இருந்தன. ஆயினும், வாட்டர்லூக் காலத்தில் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த பலருக்குப் பைபிள் தமது உள்ளங்கைகளைப் போல் வெகு நன்றாகத் தெரியும்; இதனால், மனத்தின் கீழ்மையை வென்று அவர்களின் சிந்தனைகள் மேல்நோக்கி எழ முடிந்தது; ஆனால், இன்றைய அச்சடிக்கப்பட்ட ஏடுகளின் பெருக்கமோ அக் கீழ்மையைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரிக்கவே செய்கிறது.

புதிய தொழில்நிலைமைகள் தோன்றின. கற்றுக்குட்டி முறை (apprenticeship) மறைந்தது; ஜெர்னிமேனுக்கும் அவனது எஜமானனுக்கும் இடையில் நிலவிய அன்பான உறவுகள் மறைந்துபோயின. எனவே, தொழிலாளியின் நலன்களைப் பாதுகாக்கத் தொழிற்சங்கம் (Trade Union) தேவைப்பட்டது. டியூடர் காலத்தில் கூலியை நிர்ணயம் செய்வது அரசின் வேலை; ஆனால், அக்கொள்கையை இப் பொழுது அது கைவிட்டுவிட்டதால் தொழிற்சங்கங்கள் அவசியமாயின. ஆனால், யாகோபிய எதிர்ப்புக் காலத்தில் (1792—1822), அரசியல் நோக்கத்துக்கோ அல்லது வெறும் பொருளாதார நோக்கத்துக்கோ தொழிலாளிகள் ஒன்று படுவது 'தேசத் துரோகம்' என்று கருதப்பட்டது. இதில் வியக்கத்தக்க ஒன்றேஒன்று என்னவென்றால், எஜமானனது

காவல் நாயாக அரசாங்கம் இயங்கி வந்த இக் கொள்கையால் இன்னும் அதிக வன்முறைச்செயல்களோ இரத்தம் சிந்துதலோ நடைபெறவில்லை என்பதுதான். ஆனால் 'லுட்டைட்டு' (Luddite) குழப்பங்கள் இதனால் ஏற்படத்தான் செய்தன.

நெப்போலியப் போர்களின் இடைப்பகுதியில் நாட்டிங்ஹாம்ஷயர், யார்க்ஷயர், லங்காஷயர் ஆகிய பகுதிகளில் வேலையின்மை, குறைந்த கூலி, பட்டினி ஆகியவை தொழிலாளிகளிடையில் அடிக்கடி நிலவின; புதிய இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதும் இதற்கு ஒரு காரணம். 1811–1812-ல் திட்டமிட்ட முறையில் 'லுட்டைட்டுகள்' இயந்திரங்களை உடைக்கத் தொடங்கினர். அவர்களது அணியிலிருந்த சில ஐரிஷ்காரர்களிடையில் வன்முறைப் போக்குக்கான அறிகுறிகள் காணப்பட்டாலும்கூட, கிளர்ச்சி வெடிப்பதற்கான சாத்தியப்பாடு ஒன்றுமில்லை. கிளர்ச்சி தோன்றும் என்ற அச்சத்துக்குக் காரணம் அப்பொழுது நமது தீவில் ஒரு நல்ல போலீஸ்படை இல்லாததுதான். இதே காரணத்தினால், இயந்திரங்களைக் காக்கவும் கூட்டத்தை அடக்கவும் சிப்பாய்களைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஒரு சிவில் போலீஸ் படையில்லாத காரணத்தால் அரசியல், சமூகக் கிளர்ச்சியின் அறிகுறிகள் மிகைபடத் தோன்றின; பீட்டர்லூவில் நடந்த துக்க நிகழ்ச்சிக்கும் இதுதான் நேரடிக் காரணம். நீலக் கோட்டும் உயரமான தொப்பியும் அணிந்து, கையில் கழி ஏந்திய, பிரசித்திபெற்ற போலீஸ்படையை 1829-ல் பீல் (Peel) உருவாக்கினர். இதனால் நிலைமை திருந்தத் தொடங்கியது. முதலில் இது இலண்டனில் நிறுவப்பட்டது; இரண்டு ஆண்டு கட்குப் பிறகு சீர்திருத்த மசோதா சம்பந்தமான போராட்டத்தின்பொழுது இந்தப் 'புதிய போலீஸ்' தலைநகரைக் காத்தது; இல்லாவிட்டால் பிரிஸ்டலும் வேறு சில நகரங்களும் தாக்கப்பட்டதுபோல இலண்டனும்கூட தீவிரவாதக் (Radical) கூட்டத்தினரால் சேதமுற்றிருக்கும். ஐம்பது ஆண்டுகட்குமுன்னர் அது கார்டன் கலகங்களால் (Gordon riots) சேதமுற்றதை இங்கு நினைவுகூரலாம். சிறிதுசிறிதாக நாடு முழுவதிலும் பீலின் போலீஸ் நிறுவப்பட்டது; கலகமும் கலகம்பற்றிய பீதியும் முன்பு ஆங்கிலேய வாழ்வில் கொண்டிருந்த முக்கியத்துவத்தை இப்பொழுது இழந்துவிட்டன.

ஆனால், இந்த 1812-ம் ஆண்டு இயக்கத்தில் இயந்திரத்தை உடைத்தல் தவிர வேறு ஓர் அம்சமும் இருந்தது. தொழி

லாளிக்கும் எஜமானுக்குமிடையில் நியாயமான முறையில் கூலியையும் வேலைநேரத்தையும் அரசாங்கம் நிர்ணயம் செய்யவேண்டும் என்று லுட்டைட்டுகள் பாராளுமன்றத்துக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டனர்; இதற்காக வேண்டி ஏற்கெனவே இருக்கும் சட்டங்களை—அவைகளில் மிகப் பழைய சில எலிசபெத்தின் காலத்தைச் சேர்ந்தவை—அமுலாக்கவேண்டும் என்று கோரினர்.[1] இந்த விண்ணப்ப முறை சட்டப்படியானது; கோரிக்கையும் நியாயமானது. அதே சட்டங்களில் சில, தொழிலாளர்கள் தங்களது நலன்களைக் காத்துக்கொள்வதற்கெனச் சங்கங்கள் அமைத்துக் கொள்வதைத் தடுப்பதற்காக அரசாங்கத்தால் பயன்படுத்தப் பட்டன; மேலும், சமீபத்தில் 1800-ல் பிட்டின் தொழிற் கூட்டுச் சட்டம் (Combination Act) நிறைவேற்றப்பட்டது மூலமாகத் தொழிலாளர்கள் சங்கம் அமைப்பது தடைசெய்யப்பட்டு எஜமானர்களின் நிலை வலுப்படுத்தப்பட்டது. இந்நிலைமையில் லுட்டைட்டுகளின் இந்தக் கோரிக்கை மிகமிக நியாயமானது. தொழிற்கூட்டுச் சட்டம், எஜமானர்கள் தொழிலாளர்கள் ஆகிய இருவரது சங்கங்களையும் தடை செய்யவே பெயரளவில் ஏற்பட்டது. ஆனால், எஜமானர்கள் தங்கள் விரும்பியபடியெல்லாம் சுதந்திரமாகக் கூடிச் செயல்பட அனுமதிக்கப்பட்டனர்; ஆனால், தொழிலாளர்மட்டும் வேலைநிறுத்தம் செய்தால் தண்டிக்கப்பட்டனர். கடைசியாக, குறைந்தபட்சக் கூலியை அமுலாக்கும் அதிகாரத்தை மாஜிஸ்டிரேட்டுகளுக்குத் தந்த எலிசபெத் காலத்துச் சட்டங்களையும் பாராளுமன்றம் 1813-ல் ரத்து செய்தது.

கூலி, வேலைநேரம், தொழிற்சாலைநிலைமைகள் ஆகியவை விஷயத்தில் அரசாங்கம் தொழிலாளியைப் பாதுகாப்பின்றி விட்டு, அதே சமயம் சங்கம் அமைத்து அவன் தன்னைக் காத்துக்கொள்ளும் உரிமையையும் மறுத்தது பெரும் அநீதி. அது தலையிடாமை (laissez-faire) அன்று; எஜமானர்களுக்கு உரிமையும் தொழிலாளிகட்கு அடக்குமுறையும் தருவது அது. தலையிடாமைக் கொள்கையை வியாக்கியானம் செய்த ரிக்கார்டோ (Ricardo) போன்ற பெரும் பண்டிதர்கள் இந்த விஷயத்தில் தொழிலாளர்களை ஆதரித்து, தொழிற்சங்கங்

[1] பதினேழாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து சில சமயங்களில் மாஜிஸ்டிரேட்டுகள் கூலியை நிர்ணயம் செய்தனர். ஆனால், அதிக பட்சக்கூலி (Maximum wage) மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்டதால், தொழிலாளர்கட்கு அதனால் எவ்விதப் பயனுமில்லை.

களுக்குச் சட்டப்படியாக அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்று கோரினர்.

1822-க்குப் பிறகு யாகோபிய எதிர்ப்புஅலை ஒருவழியாக ஓய ஆரம்பித்தது. பீல் (Peel) உள்விவகார அமைச்சர் ஆனார்; அடக்குமுறை தணிந்தது. 1824-25-ல் அந்தப் புதிய, நல்ல காலத்துக்கு ஏற்றவகையில் காமன்ஸ் சபையானது (House of Commons) பிட்டின் தொழிற்கூட்டுச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, தொழிற்சங்கங்களைச் சட்டப்படியாக அங்கீகரித்தது. இதற்கு முக்கியக் காரணம் ஜோசப் ஹ்யூம் (Joseph Hume), பிரான்சிஸ் ப்ளேஸ் (Francis Place) ஆகிய இருவரும் விடாமுயற்சியுடன் சபை உறுப்பினர்களின் மனத்தை மாற்றியதுதான். இதற்குப் பிறகு பலவிதமான தொழிலாளர் சங்கங்களும் கூட்டியக்கமும் தோன்றின. சமூக அமைப்பின் ஒரு வழக்கமான அங்கமாக அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. தொழிற்கூட்டுச் சட்டம் அமுலிலிருந்திருந்தால் அவை புரட்சிகரமாக மாறியிருக்கும்; அது இப் பொழுது தவிர்க்கப்பட்டது.

வகுப்புகளுக்கிடையிலான விரோதம் இங்கிலாந்தில் எப் பொழுதுமே தீவிரமாயிருந்தது என்றோ, அல்லது எல்லா எஜமானர்களுமே தங்களது உழைப்பாளிகளிடம் கடுமையாக நடந்துகொண்டார்கள் என்றோ, அல்லது அவர்களது துன்பங்களைக்கண்டு வாளாவிருந்தார்கள் என்றோ எண்ணுவது தவறு. வேலையளிப்போரில் (employers) நவீன கருத்துகளைக் கொண்ட சிலர் தொழிற்சங்கங்களைச் சட்டப்படியாக அங்கீகரிக்கவேண்டும் என்பதை ஆதரித்தனர். நெப்போலியப் போர்களின்பொழுது தொழில்துணிவு மிக்க செய்தொழில் உற்பத்தியாளரான மூத்த சர் ராபர்ட்பீல் (Sir Robert Peel the elder)—கீர்த்திபெற்ற ஒரு பிரதம மந்திரியை மகனாகப் பெற்ற இவர்—தொழிலாளர் நலனுக்காகப் போராடினார். தொழிற் சாலைகளில் வேலைசெய்யும் குழந்தைகளின் நிலைமையை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்றும், வறிய கற்றுக்குட்டிகளுக்குப் (pauper apprentices) பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றும் அவர் வாதாடினார். இக் கற்றுக்குட்டிகளை வைத்துப் பொதுஅதிகாரிகள் ஒரு பயங்கரமான அடிமை வியாபாரமே நடத்தி வந்தனர். 15000 தொழிலாளர்களைக் கொண்டிருந்த இந்த நல்ல மனிதர் சர் ராபர்ட், நேர்மையற்ற தம் போட்டிக் காரர்களின் நடவடிக்கைகளை இதனால் கட்டுப்படுத்தவும் முயன்றார் என்பதில் ஐயமில்லை. ஆனால், சீர்திருத்த மசோதாவுக்கு மேற்பட்ட தொழிற்சாலைச் சட்டங்கள் (Factory Acts) சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மட்டுமே இயற்றப்பட்

டன; அது மட்டுமின்றி, அவைகளை அமுலாக்குவதற்கான சாதனம் ஒன்றுமில்லாத காரணத்தால் அவை ஏட்டளவிலேயே நின்றுபோயின.

தொழிலாளர்களின் நலன்களைக் காப்பதற்கு அரசாங்கம் முயலவேண்டும் என்ற கருத்து அந்நூற்றாண்டின் முதல் ஆண்டுகளில் பிரிட்டனை ஆண்ட பெரியவர்களுக்குப் பிடிக்காமற்போனது இரங்கத்தக்கது. தனது நியூ லானர்க் மில்ஸ் (New Lanark Mills) பிறர் பின்பற்றத்தக்க ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றும், சுகாதாரம், பொதுநலம், வேலை நேரம், கூலி, கல்வி ஆகியவற்றில் முன்மாதிரியாக விளங்கத்தக்க அபிவிருத்திகளைத் தோற்றுவித்து, தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்பு எப்பொழுதும் காணமுடியாத அளவுக்கு உயர்த்துவதற்கு இப்புதிய தொழிலமைப்பு உலகுக்கு ஓர் உதாரணம் என்றும் இராபர்ட் ஓவன் (Robert Owen) சுட்டிக்காட்டியபொழுது அரசாங்கத்தின் காதுகளில் அது விழவில்லை. இதையொத்த அமைப்பையும் வசதிகளையும் மற்ற எல்லாத் தொழிற்சாலைகளிலும் புகுத்த அரசாங்கம் முயலவேண்டும் என்றார் ஓவன். உலகம் நியூ லானர்க் மில்ஸுக்குச் சென்று பார்த்து வியந்தது; பாராட்டியது. ஆனால் அதைப் பின்பற்ற மறுத்தது. சூழ்நிலைதான் மனிதனின் குணத்தையும் தன்மையையும் உருவாக்குகிறது. சூழ்நிலையை மனிதன் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரமுடியும் என்ற இந்த நவீன கோட்பாட்டை முதன்முதலில் தெளிவாக அறிந்து, பிறருக்குப் போதித்தவர் ஓவன். ஆனால், மனிதர்களால் அதை இன்னும் அப்பொழுது உணர்ந்துகொள்ள முடியவில்லை. அவரது தூரப்பார்வை ஒரு பெரிய வாய்ப்பைக் காட்டியது; ஆனால், உலகம் அதைப் பின்பற்றுமல் இழந்துவிட்டது. அந்நூற்றாண்டு செல்லச்செல்ல அரசின் கண்கள் திறந்தன; தொழிற்சாலைகளையும் அவைகளில் வேலைசெய்யும் எல்லோரின் நிலைமைகளையும் அபிவிருத்திசெய்ய அரசாங்கம் முயலவேண்டும் என்ற ஓவனின் கோட்பாட்டை அது ஏற்றுக்கொண்டது. லிவர்ப்பூல் மந்திரி சபைக்கும் கேசல்ரீ (Castlereagh) மந்திரிசபைக்கும் ஓவன் போதிக்க முயன்று தோற்றுப்போன அதே கோட்பாடு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட பல தொழிற்சாலைச் சட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆகியவை காரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு வழி ஏற்பட்டது; ஆயினும், ஆடைசெய்யும் தொழில் போன்ற 'இரத்தத்தை உறிஞ்சும் இல்லத் தொழில்கள்

(domestic trades) பலவற்றைத் தொழிற்சாலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை; எனவே, இங்கு வேலை செய்வோர், குறிப்பாகப் பெண்கள், இன்னும் கொஞ்ச காலம் மிகக்கேவலமாக நசுக்கப்பட்டுவந்தனர்.

போருக்குப் பிந்திய காலத்தில் நடைபெற்ற சமூக மாறுதல்களைப் பற்றிய ஓர் உண்மைச் சித்திரத்தைக் காண வேண்டுமானால், ஒரு தவறான கருத்தை விட்டுவிட வேண்டும்; அச் சமயத்தில், தொழிற்புரட்சிக்கு முன்பு இருந்ததை விட தொழிலாளர்வகுப்பு முழுவதுமே பொருளாதார ரீதியில் அதிகக் கஷ்டங்களை அனுபவித்தது என்பதுதான் அந்தத் தவறான கருத்து. அத் தொழிலாளர்களது குறைகள் புதிய வகையைச் சேர்ந்தவை; எனவே, அவைகளைக் கண்டு அவர்கள் இன்னும் அதிகமாக வருந்தினர். அவர்களது குறைகளும்கூட முன்பு எப்பொழுதையும்விட இப்பொழுது அதிக அளவு வெளிப்படையாகப் பேசப்பட்டன. அக் காலத்தியப் பொருளாதார வரலாற்றில் மிகப் பெரிய நிபுணரான பேராசிரியர் கிளாப்ஹாம் (Clapham) இவ்வாறு எழுதுகிறார்:

'மக்களின் சாசனம் (People's Charter) வரையப்பட்ட காலத்துக்கும், மாபெரும் கண்காட்சி (Great Exhibition) நடைபெற்ற காலத்துக்கும் இடையில் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாத ஓர் ஆண்டு வரையில், தொழிலாளியின் நிலைமை எல்லாவகையிலும் சீர்கேடடைந்து வந்தது என்பது ஒரு கட்டுக் கதை. 1820—1-ல் நேர்ந்த விலைவீழ்ச்சிக்குப் பிறகு, பொதுவாகக் கூலியின் வாங்கும்சக்தி—ஒவ்வொரு வரின் கூலியையும் எடுத்துக் கொள்ளக் கூடாது—பிரெஞ்சுப் புரட்சிப் போர்களும் நெப்போலியப் போர்களும் தொடங்குவதற்குச் சற்றுமுன்பு இருந்ததைவிட நிச்சயம் அதிகம்; இது மேற்சொன்ன கட்டுக்கதையைப் பொய்ப்பிக்கிறது. எனவே, சமூக வரலாற்றுசிரியர்கள் இந்த உண்மையை எடுத்துக் கூறுவதேயில்லை; கூலி, விலைபற்றிய புள்ளி விவரங்கள் இவர்களால் மறைக்கப்படுகின்றன. (Economic History of Modern Britain என்ற நூலின் முகவுரை.)

இது உண்மையும் முக்கியமும் ஆகும்; ஆனால், மனிதனின் மகிழ்ச்சி என்பது கூலியின் வாங்கும் சக்தியில் மட்டுமில்லை. கிராமங்களில் வசித்த தமது மூதாதையர் அனுபவித்ததை விடக் குறைந்த வாழ்க்கைவசதிகளே பலருக்குக் கிடைத்தன.

16. காப்பெட்டின் இங்கிலாந்து [1793-1832]

II

பெண்களும் புதிய உலகமும்—நிதி செலுத்தியவர்கள்—சமயம்—கப்பல் போக்குவரத்து — கடற்படையும் தரைப்படையும் — விளையாட்டுகளும் பொழுது போக்குகளும்—வேட்டைச் சட்டங்கள்—மனித உணர்வு.

தொழிற்சாலைமுறையும் முதலாளித்துவ விவசாயமும் வளர்ந்ததால் பெண்களின் வேலைகளில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன; இதனால் குடும்ப வாழ்க்கை நிலைமைகள் மாறின; இறுதியில் ஆண்—பெண் உறவுகளும் பாதிக்கப் பட்டன.[1]

மனித இனத்தின் ஆரம்ப காலந்தொட்டே பெண்களும் குழந்தைகளும் வீடுகளில் சில தொழில்களை நடத்திவந்துள்ள னர். இங்கிலாந்தில் ஸ்டுவர்ட்டுகள் காலத்திலும் ஹனோவீரிய காலத்தின் ஆரம்பத்திலும் குடிசைத்தொழிலின் வகைகளும் சிக்கல்களும் அதிகரித்துவிட்டன. புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் குடிசைத்தொழில் திடீரென நசி வுற்றது; ஏழைகளின் வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளில் இதன் முதல்விளைவுகள் தென்பட்டன; தனிப் பெண்களிடையில் வேலையின்மையும் வறுமையும் புகுந்தன; கணவனின் பற்றுத வருமானத்தோடு மனைவியும் குழந்தைகளும் சம்பாதித்த தொகையையும் சேர்த்துக் காலந்தள்ளிய பல கிராமத்துக் குடும்பங்கள் அழிந்தன.

உடனே தொழிற்சாலைகளை நோக்கி நடப்பது என்பது முடியாது; பலர் கடைசிவரை அவ்வாறு நடக்கவுமில்லை.

[1] *இந்தப் பொருளுடன் சம்பந்தப்பட்ட பல விவரங்களை டாக்டர் ஐவி பிஞ்ச்பெக் (Dr. Ivy Pinchbeck) எழுதிய* Women Workers and the Industrial Revolution *என்ற நூலில் காணலாம். பதிப்பு* 1930.

குடிசைத்தொழில்கள் அழிவுற்றதால் தமது பழைய வருவாயை இழந்துவிட்ட பல பெண்கள் நெப்போலியப் போர்களின்பொழுது வயல்வேலையில் இறங்கி ஆண்களோடு நின்று உழைத்தனர். பெரும் முதலாளித்துவப் பண்ணைக்காரர்கள் களைஎடுக்கும் வேலைக்குப் பெண்களைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். கிராமத்துப் பெண்களுக்கு இவ்வேலைகள் ஆண்டு முழுவதும் கிடைக்கவில்லை; புல்லறுக்கும் காலங்களிலும் (haytime) அறுவடைக் காலங்களிலும் அவர்களுக்கு எப்பொழுதும் வேலையிருந்தது. ஆனால், ஸ்பீன்ஹாம்லந்து காலத்தியப் பெரும் பண்ணைக்காரர்கள் ஆண்டு முழுவதும் பெண்களுக்கு வேலைகொடுத்தனர்; ஏனெனில், புதிதாக வேலியிடப்பட்ட நிலங்களில் களையெடுக்கும் வேலையும் பண்படுத்தும் வேலையும் அதிகமிருந்தன; கணவனோடு மனைவியும் சம்பாதித்தால் இரவலர் வரிச்சுமை குறையும் என்பதுவும் ஒரு காரணம். பெண்களும் வேலைசெய்தால் ஆண்களுக்குக் கூலி குறைத்துக் கொடுக்கலாம் என்பது இன்னொரு காரணம். இது ஒரு நாசச் சுழல்; அச் சமயத்தில் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குக் கணவனின் ஊதியம் போதவில்லை என்பதால் அவனது மனைவியும் பெண்களும் வயல்வேலையில் இறங்கி ஆண்களோடு போட்டியிட வேண்டியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் வயல்உழைப்பாளியின் கூலி கொஞ்சங் கொஞ்சமாகக் கூடியது; ஆட்களுக்குப் பதிலாக விவசாய இயந்திரங்கள் வந்தன; இதனால், முந்திய காலத்தைப் போலவே இப்பொழுதும் விவசாய வேலை செய்துவந்த பெண்களின்தொகை குறைந்தது.

பழைய சமூகமுறையில், கிராமப் பெண்களில் பலர் தங்களது குடும்ப நிலத்தை உழுவதில் பங்குகொண்டனர்; பன்றிகளையும் பசுக்களையும் கவனித்துக் கொண்டனர்; பொருள்களை விற்பனை செய்தனர்; அல்லது கிராமத்திலேயே சிறு வியாபாரம் ஏதாவது நடத்துவதில் உதவிசெய்தனர்: அதாவது, இன்றைய பிரான்சில் காணப்படுவது போல அன்றைய இங்கிலாந்தில் கணவனும் மனைவியும் குடும்பத் தொழில்களில் சமமாகப் பங்கெடுத்து உழைத்தனர். ஆனால் பெரும் பண்ணைகளும் தொழில்களும் தோன்றியபின் இவ் வேலைகளிலிருந்து பெண்கள் அகற்றப்பட்டனர்; சிலர் வேலை ஒன்றுமில்லாத 'சீமாட்டிகளாயினர்'; வேறு சிலர் வயலில் அல்லது தொழிற்சாலைகளில் தொழிலாளிகளாயினர்; இன்

னும் சிலர் தொழிலாளிகளின் மனைவிகளாகிக் குடும்பத்தில் முழுக் கவனம் செலுத்தினர்.

மனிதவாழ்வின் பல மாற்றங்களைப் போலவே இதிலும் இலாபமும் இருந்தது, நஷ்டமும் இருந்தது. தொழிலாள மக்களின் இல்லங்கள் இன்னும் அதிக வசதியும் அமைதியும் சுகாதாரமும் பெற்றுவிளங்கின; இவை குட்டித் தொழிற் சாலைகளாயிருந்த காலம் போய்விட்டது. உதாரணமாகக் கொட்டை நீக்கிப் பஞ்சடித்துச் சுத்தம் செய்யும் வேலை இப்பொழுது குடிசையிலிருந்து ஆலைக்குச் சென்றுவிட்ட தால் மனைவிகள் பலர் முன்னைவிட மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்; பல வீடுகளில் முன்னைவிட இனிமை இருந்தது.

மேலும், தொழிற்சாலைகளில் வேலைசெய்யச் சென்ற பெண்கள்—வாழ்வில் சிறந்த சிலவற்றைத் தாங்கள் இழந்து விட்டாலும் கூட—சுதந்திரம் பெற்றனர். தாங்கள் சம்பாதித்த பணம் தங்களுடையது. நாட்கள் செல்லச்செல்ல ஆலையில் வேலைசெய்தவள் ஒரு சுயமான பொருளாதார நிலையைப் பெற்றாள்; மற்றப் பெண்கள் இதைக் கண்டு பொறுமை யுற்றனர். சுதந்திரம் பெறவேண்டும் என்ற உணர்வின் காரணமாக எழுந்த இப் பொறுமை தொழிலாளி வகுப்புப் பெண்களிடம்மட்டும் காணப்படவில்லை. மேல்வகுப்பு களிலும் இது காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓய்வுநிறை வகுப்பைச் (leisured class) சேர்ந்த பிரான்ட் சகோதரிகள், பிளாரன்ஸ் நைட்டிங்கேல் போன்ற பெண்கள் இதைக் கண்டனர். ஆலையில் வேலை செய்த பெண், தன்பணத்தைக்கொண்டு வாழ்ந்த அந்தச் சுதந்திரப் பெண், 'சீமாட்டிகளும்' பின்பற்றக்கூடிய ஓர் உதாரணமாக விளங்கினாள் என்பதை அவர்கள் உணர்ந் தனர்.

'ரீஜன்சி' (Regency) காலத்திலும் விக்டோரியாக் காலத் தின் முன்பகுதியிலும் வாழ்ந்த 'சீமாட்டிகளுக்கு' ஆண்கள் கண்டு பாராட்டும்படி வாழ்வது தவிர உலகில் வேறு வேலை இல்லை; குடும்பச் செலவுக்கு வேண்டிய பொருளை ஈட்டிய ஆடர்வர்க்கு ஏற்ற மனைவியாகவும் மகளாகவும் ஒரு மாதிரிப்பெண்ணாகவும் வாழ்வதே அவர்களின் நோக்கம்.[1]

[1]விக்டோரியாக் காலத்தின் இறுதிவாக்கில் மணமான பெண் களின் சொத்துச் சட்டங்கள் (Married Women's Property Acts) வரும்

ஓய்வு நிறைந்த (leisured) பெண்களின் தொகை சதா அதிகரித்ததால் படிப்போர் தொகையும், கலைக்கும் இலக்கியத்துக்குமான ஆதரவும் கூடியது என்பதில் சந்தேகமில்லை. ஜேன் ஆஸ்டின், மேரியா எட்ஜ்வொர்த் (Maria Edgworth), ஹன்னா மூர் (Hannah More) ஆகிய ஓய்வுநிறைந்த பெண்களுக்கு அவர்கள் நூலாசிரியர்களாகவும் கலைஞர்களாகவும் ஆவதற்கு வேண்டிய ஓய்வும் கல்வியும் கிடைத்தன. இது நல்லதே. ஆனால் ஸ்காட், பைரன் காதலோவியங்களிலேயே ஊறித்திளைத்து, அவர்களின் கதாநாயகிகளாகவே தாமும் ஒத்திருக்க முயன்ற பல இளஞ்சீமாட்டிகள் அளவுக்கு மீறிய ஓய்வினால் அவதிப்பட்டார்கள் என்றுதான் கூற வேண்டும். கலை, இலக்கியத்தில் தோன்றும் நவநாகரிகங்கள் (fashions) நாளாவட்டத்தில் ஓய்வு, கல்வி, வசதி ஆகியவை நிறைந்த வகுப்பினரின் வாழ்க்கை முறையையும் தோற்றத்தையும்கூட பாதிக்கின்றன. காதல்மயக்கத்தில் கட்டுண்டு கிடக்கும் கதாநாயகன் வழிபடும் 'இளம் சீமாட்டியை' ஸ்காட் சித்தரித்தார்; அவள் இடைக்காலத்துப் பாணியில் உருவானவள். ஓர் அந்தப்புரத்து அடிமைப் பெண்ணைப்போல பைரனின் சுல்தான் பார்வைக்கு அவள் தோற்றமளித்தாள். இத்தகைய கதாநாயகிகளைப் பெண்கள் பலர் தமது இலட்சியங்களாகக் கொண்டனர். இதனால் நவநாகரிகப் பெண்களின் மதிப்புப் பெண்கள் சமுதாயத்தில் உயர்ந்தது.

மேல்வகுப்பினரும் நடுத்தர வகுப்பினரும் இன்னும் பணக்காரராயினர்; கிராமப்புறத்துக் கனவான்களும் நகரத்து வாழ்வை மேற்கொண்டனர். இதனால் ஏற்பட்ட சமூக கௌரத்தின் விளைவு என்னவென்றால் இக் குடும்பத்து இளஞ் சீமாட்டிகள் பள்ளிக்கூட அறையில் சொந்த ஆசிரியையால் (governess) சொல்லிக் கொடுக்கப்பட்டனர்; பிறகு வரவேற்பு அறையில்தான் (drawing-room) அவர்களுக்கு இடம்; வீட்டுவேலைகள் ஒன்றுமில்லை. செல்வி ஆஸ்டின் நாவல்களில் வரும் பெண்கள் சிறிய கனவான் குடும்பங்களிலிருந்தும் மேல்தட்டு பூர்ஷ்வாக் குடும்பங்களிலிருந்தும் வந்தவர்கள். கவிதை படித்தல், ஊர்வதந்தியைப் பரப்புதல், இளங்

வரையில் திருமணத்தின்பொழுது ஒரு பெண்ணின் சொத்து அவளது கணவனது சொத்தாயிற்று. மணச்சடங்கின்பொழுது 'எனது சொத்துக்கள் அனைத்தையும் உனக்கு உடைமையாக்குகிறேன்' என்று ஆண் சொல்வதற்கு எதிரானது இச்சட்டம். உண்மையில் நடைமுறை மணமகனின் இந்த வார்த்தைகட்குத் தலைகீழானது.

கனவான்களின் அன்பு உபசாரங்களுக்காகக் காத்திருத்தல் ஆகியவை தவிர இவர்களுக்கு வேறுவேலை கிடையாது. அதே சமயம் பெரிய அரசியல் குடும்பங்களில் நிலைமை வேறு என் பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்; லேன்ஸ்டௌன் மாளிகையிலும் (Lansdowne Home) ஹாலந்து மாளிகையிலும் சீமாட்டிகளின் வாழ்க்கை இவ்வளவு வேலையின்றியோ சுவையின்றியோ இருக்கவில்லை.

மேலும், 'சீமாட்டிகள்' நடனம் ஒன்றைத் தவிர வேறு எவ்விதத்திலும் தமது உடலுக்கு வேலைகொடுக்கக் கூடாது என்று கருதப்பட்டது. அக்காலத்தில் வெகுசில பெண்களே வேட்டையில் பங்கெடுத்துக் கொண்டனர்; ஆனால் சுறு சுறுப்பு மிக்க விக்டோரியாக்காலத்தில் பெண்கள் வேட்டை யில் ஈடுபடுவது அதிகரித்தது; பஞ்சின் (Punch) படங்களி லும் ட்ரோலோப்பின் (Trollope) நாவல்களிலும் இதை நாம் காணலாம். இதற்கு முந்தியகாலத்துப் பெண் அலுங்காமல் நலுங்காமல் தன் உடம்பைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப் பட்டது. எலிசபெத் பென்னட் (Elizabeth Bennet) மூன்று மைல் தூரம் சகதியில் நடந்து, 'கால் ஓய்ந்து, சேறு பூசிய காலுறையோடு, உடலுஷ்ணம் உழைப்புக் காரணமாக ஒளிவீசும் முகத்துடன்' நெதர் பீல்டுக்கு வந்துசேர்ந்தபோது திருமதி ஹர்ஸ்ட்டும் செல்வி பிங்லியும் 'அதற்காக அவளை வெறுத்தனர்'. உழைப்பு மிக்க வடக்குப்பிரதேசத்தில்கூட வேர்ட்ஸ்வொர்த் 'ஊர்வெளியில் நீண்ட தூரம் நடந்து உலவிவந்ததற்காக நிந்திக்கப்பட்ட ஓர் இளஞ் சீமாட்டி'க்கு ஆறுதலும் உற்சாகமும் ஊட்டும் பொருட்டு அத்தலைப்புடைய ஒரு கவிதையை 1801-ல் எழுதி னார்! இவையெல்லாம் நகைக்கத் தக்கவை. ஏனென்றால் இத்தகைய செயற்கையான பழக்க வழக்கங்கள் மலியாத வகுப்புகளில் பெண்கள் நீண்டதூரம் நடந்து வேலைக்குச் சென்று திரும்பினர்; இலண்டனைச் சுற்றியிருந்த பழ, காய் கறித்தோட்டங்களில் பருவகாலங்களில் வேலைசெய்வதற் காக வேல்ஸிலிருந்து கால்நடையாக இவ்வளவு தூரம் ஆண்டுதோறும் நடந்துவந்து திரும்பிய பெண்கள் எவ் வளவோபேர் இருந்தனர்.

மேல்வகுப்புப் பெண், வாழ்விலும் அதன் வேலையிலு மிருந்து துண்டிக்கப்பட்டுத் தனது உயிர்ச்சக்தியை இழந்து வந்தாள். இதற்குக் காரணம் அவளது குடும்பத்து ஆண் களின் அதிகரித்துவரும் செல்வமும் நவீன வாழ்க்கையில்

செயற்கையான முறையில் உண்டுபண்ணப்பட்ட நிலைமைகளுமே. தனக்கு வேண்டிய பொருள்களனைத்தும் தானே உற்பத்தி செய்துகொண்ட பழைய மேனர் இல்லங்களில் வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செய்யவேண்டிய வேலைகள் கணக்கற்றிருந்தன. இதனால் பேஸ்டன் (Paston), வெர்னி (Verney) குடும்பங்களைச் சேர்ந்த சீமாட்டிகள்கூட தங்களுக்கென்று சில குறிப்பிட்ட வேலைகளைப் பெற்றிருந்தனர். ஆனால், இப்பொழுதோ 'சீமாட்டி' என்றால் ஒரு வேலையும் செய்யக்கூடாது என்ற நாகரிகவிதி ஏற்பட்டுவிட்டது.

அதே சமயம் செல்வக் குடும்பங்களில்கூட சில பெண்கள் சுறுசுறுப்பான பயனுள்ள வாழ்க்கை நடத்தினர்; சிலர் பழைய முறையில் குடும்ப வேலைகளையும் செய்துவந்தனர்; வேறு சிலர் ஹன்னா மூரைப்போல் நவீன, அறிவுத்துறைப் பணிகளிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபட்டனர். ஆயினும் 'கொலுப்பெண்' என்ற இந்தத் தவறான இலட்சியத்தினால், புதிய நூற்றாண்டுக்கு ஓர் உண்மையான தீமை காத்திருந்தது. மேலே உள்ளவர்களைப் பார்த்து அப்படியே பின் பற்றும் மக்கள் வாழ்கிற இந்தப் போலிநாகரிக சமுதாயத்தைக் கொண்ட இங்கிலாந்தில் இந்தக் 'கொலுப்பெண்' இலட்சியம் கீழ்நோக்கிப் பரவி, நகரங்களைச்சுற்றி இப்பொழுது வளர்ந்துகொண்டிருக்கும் புதிய குடியிருப்புப் பகுதிகளில் வாழும் சிறிய பூர்ஷ்வாக்கள் மத்தியில் வேரூன்றியது.

கிராமப்புறங்களில்கூட பணக்காரக் குடியானவர்களின் மனைவிமார் சிலர் தம்மை மிகவும் 'உயர்வாக' நினைத்துக்கொண்டு, வேலைசெய்யாமல் 'சீமாட்டிகளைப்' போல் மாறிவந்தனர். பழைய காலத்தில் குடியானவனின் மனைவி எப்பொழுதும் வேலைசெய்துகொண்டே இருந்தாள். (இப்பொழுதுங்கூட இதுதான் வழக்கம்); குடும்பப் பொறுப்பு முழுவதும், வயல்வேலைப் பொறுப்புகளில் சில உள்பட அவளையே சேர்ந்திருந்தன. பால்பண்ணைகளில் அவள்தான் தலைமைத்தொழிலாளி; பால் கறக்கும் பெண்களை விடியற் காலையில் எழுப்புவது, இரவில் நெடுநேரம்வரை வெண்ணெய் எடுப்பது, அல்லது பாலாடைக்கட்டி செய்வது ஆகிய வேலைகளைச் செய்தாள். மேற்குப் பகுதிகளில் பால் பண்ணைகள் நிறைய இருந்தன. இலண்டனுக்கு வெண்ணெயும் பாலாடைக்கட்டியும் இங்கிருந்துதான் வந்தன. பெண்களுக்கு மிகவும் சிரமமான, மிகவும் இலாபகரமான தொழில் இதுதான். வேறு பண்ணைகளில் பெண்களின்

நேரம் பெரும்பாலும் வீட்டுவேலையிலேயே கழிந்தது. அவர்கள் தமது குடும்பத்தினருக்காகவும், தமது குடும்பத்தோடு வாழ்ந்து உணவருந்திய தொழிலாளர்கட்காகவும் சமைக்க வேண்டியிருந்தது; வேறு வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது. பெரும்பாலும் ஓய்வே அறியாமல் கடின உழைப்பு உழைத்தனர் அவர்கள்.

ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலில் புதிய வகையைச் சேர்ந்த பெரிய வேலையிடப்பட்ட வயல்களில் நிலவிய வீட்டுநிலைமைகள் (domestic conditions) மாறி விட்டன. வேலை செய்த நபர்களின்தொகை கூடியது; ஆனால், இதே காரணத்தினால் அவர்கள் தங்களது எஜமான்னர்களோடு உறைதலும் உண்ணுதலும் நின்றுபோயின. 'புழுதி படிந்த ஷூ அணிந்த வண்டிக்காரன் உள்ளே நுழையக் கூடாத அளவுக்கு மிகவும் தூய்மை' பெற்று விட்டது பண்ணை இல்லம் என்று காப்பெட் முறையிட்டார். பெரிய குடியானவர்கள் தங்களது மனைவியின் வீட்டுவேலைச் சுமையைக் குறைப்பதற்காகவும், வரவேற்பு அறைக்கு (parlour) ஒரு கண்ணியமான தோற்றத்தைத் தருவதற்காகவும்— சாதாரண சமயங்களில் சமையல் அறையிலேயே உண்ணல் போன்றவை நடந்தன— புதியவகை வீட்டுவேலைக்காரர்களை அமர்த்திக் கொண்டனர். குடியானவனின் பெண்கள் 'தங்களது கடமைகளையும் பால்பண்ணை வேலைகளையும் வீட்டிலேயே கற்றுக்கொள்ளாமல், தங்கும் வசதியுள்ள பள்ளிகளில் (Boarding Schools) கல்வி பெறுகிறார்கள்; நடனம், பிரெஞ்சு மொழி, ஹார்ப்ஸிகார்டு (harpsichord) வாத்தியம் வாசித்தல் ஆகியவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள்' என்று கூறப்பட்டது.

ஆனால், மிகப் பெரிய பணக்காரக் குடியானவர் விஷயத்தில்மட்டுமே இது உண்மை; இவர்களில் சிலர் சிறிது சிறிதாகக் கனவான்களாகவும் ஆகிவந்தனர். குடியானவர் வகுப்பில் பல்வேறு சமூகத் தரங்களும் வரிசைகளும் (grades and standards) அடங்கியிருந்தன. வடக்கிலிருந்த குடியானவர்கள் ஸ்பீன்ஹாம்லந்துப் பிரதேசத்திலிருந்த குடியானவர்களைப் போல் கனவான்களைக் கண்மூடிப் பின்பற்றவில்லை. வடக்கத்திய உழைப்பாளி தெற்கத்திய இரவலர்தொழிலாளியை விட (pauperized labourer) அதிகச் சுதந்திரமாயிருந்தான்; அவனுக்கும் அவனது எஜமானனுக்கு மிடையிலான சமூகப் பிளவுக்கோடு அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை; குறிப்

பாகச் சதுப்புநிலத்து இடையர்களைப் பொறுத்தவரை இது உண்மை. குடும்பத்துப் பெண்கள் எல்லாவகை வேலைகளிலும் பங்குகொண்ட ஆயிரக்கணக்கான வயல்கள் இன்னும் இங்கிலாந்து முழுவதிலும் இருக்கத்தான் செய்தன; எஜமானனோடு சேர்ந்து உறைந்து உணவருந்திய வேலையாட்களைக் கொண்ட வயல்களும் பல இருக்கத்தான் செய்தன.

அக்காலத்தில் பெண்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும்பொழுது, எங்கும் நிறைந்து காணப்பட்ட பொதுமகளிரைப் (prostitutes) பற்றியும் கூறத்தான் வேண்டும். இவர்கள் சமுதாயத்தில் எக்காலத்திலும் இருக்கத்தான் செய்தனர். நாட்டில் செல்வமும் மக்கட்தொகையும் பெருகப் பெருக இவர்களது எண்ணிக்கையும் பெருகியது. சமயப் பற்று மிக்கவர்கள் இப்பொழுது தீவிரத்துடன் மேற்கொண்டுவந்த 'மீட்புப்பணியைத்' (rescue work) தவிர இத்தீமையை ஒழிக்க எம்முயற்சியும் செய்யப்படவில்லை. எவ்விதமான பொதுக் கட்டுதிட்டமும் இல்லாத நகரங்களில் இது சீக்கிரம் பரவியது; முன்னிரவில் 'தெருத் தெருவாக விலைமகளிர் கத்துவது' பொதுவிடுதிகளை அருவருக்கத்தக்க இடமாக்கின. பதினெட்டாம் நூற்றுண்டுச் சமுதாயத்தில் கணிசமானதொரு பங்காற்றிய 'வைப்பாட்டியின்' நிலை இப்பொதுமகளிரின் நிலையைவிட எவ்வளவோ மேல். ஆனால் பத்தொன்பதாம் நூற்றுண்டில் செல்வந்தர்களின் வளர்ந்துவரும் 'மதிப்பு மிக்கதன்மை' (respectability) காரணமாக இந்த வைப்பாட்டிகளின் எண்ணிக்கையும் நிலையும் குறைந்தன. இதே காரணத்தால் சாதாரணப் பொதுமகளிருக்குக் கிராக்கி கூடியது; ஏனெனில் யாருக்குந் தெரியாமல் இரகசியமாக இவர்களிடம் போய்வரலாம். உலகத்து ஒழுக்கவிதிகளின் கடுமை காரணமாக ஒரு தடவை தவறிய பெண் வேசைத்தொழிலில் இறங்கவேண்டியிருந்தது. இவ்விதிகளைப் பெற்றோர்களும் ஆமோதித்தனர். ஒற்றைப் பெண்களின் மோசமான பொருளாதார நிலைமை, அவர்களில் பலரைத் தாங்கள் மனமார அஞ்சி வெறுத்த இதே தொழிலில் ஈடுபடச் செய்தது. பருத்தித் தொழில் நசித்ததால் அனைதைப் பெண்கள் பலர் பட்டினி கிடந்து இறுதியில் உணவு வேண்டித் தலைகுனியலாயினர். விதிமுறைகள் இல்லாத, இரத்தத்தை உறிஞ்சும் இல்லத் தொழில்களில் (domestic trades) கொடுக்கப்பட்ட குறைந்த ஊதியமும் இதற்கு ஊக்கமளித்தது. தொழிற்சாலைகளில்

ஒழுங்காக ஊதியம் தரப்பட்டதும் அங்கு நிலவிய வாழ்க்கை நிலைமைகளும் உயர்ந்த ஒழுக்கத்துக்கு அடிகோலின. தொழிற் சாலை முறையைக் குறைகூறிய பலர் இந்த உண்மையை நீண்டகாலம் மறுத்துவந்தாலும், பின்னர் இதை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. புதிய நூற்றாண்டு செல்லச் செல்ல, தொழிற்சாலைச் சம்பளமும் நிலைமைகளும் சிறிது சிறிதாகச் சீர்ப்படவே, அங்கு வேலைசெய்த பெண்களின் தன்மானத்துக்கு ஓர் உறுதியான பொருளாதார அடிப்படை கிடைத்தது.

நிலம், தொழில், வர்த்தகம், வேறு வேலைகள் ஆகிய எதனுடனும் நேரடித் தொடர்பில்லாத ஒரு பெரிய ஓய்வு நிறைந்த வகுப்பை இப்புதிய காலம் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. நெப்போலியப்போர்களை அடுத்துவந்த ஆண்டுகளில் 'நிதி செலுத்தியவர்களைப்' (fund-holders) பற்றி எங்கும் பேசப்பட்டது; இவர்கள் தேசீயக் கடனுக்கு நிதியளித்து அதிலிருந்து வந்த வருவாயை அனுபவித் தவர்கள்.

வில்லியம் III-ன் ஆட்சி தொடங்கி ஒவ்வொரு போரின் காரணமாகவும் தேசீயக் கடன் (National Debt) தொகை சதா அதிகரித்து வந்தது; அது விடாமல் கூடிக்கொண்டே வந்ததால் நாட்டுக்கு எப்பொழுதும் தீமை விளையக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடன்தொகையானது பிரிட்டனின் வளர்ந்துகொண்டிருக்கும் செல்வத்தைவிட எப்பொழுதுமே அதிகமானதில்லை; அதன்மீது செலுத்தப் பட்ட வட்டிப் பணம் நாட்டிற்குள்ளேயே செலவிடப் பட்டது. ஜார்ஜ் III-ன் ஆட்சி ஆரம்பத்தில் 'நிதி செலுத் தியவர்களின்' எண்ணிக்கை 17,000 என்று கணக்கிடப் பட்டது; மொத்தக் கடன்தொகையில் ஏழில் ஒருபங்கு அன்னியரால், முக்கியமாக டச்சுக்காரர்களால் செலுத்தப் பட்டது. ஆனால் வாட்டர்லூவுக்குப் பிறகு பிரிட்டனின் பிரம்மாண்டமான கடன்தொகையில் இருபத்தைந்தில் ஒரு பங்கே அன்னியரின் பணம். 1829-ல் அரசாங்கப் புள்ளி விவரப்படி நிதிசெலுத்தியோரின் எண்ணிக்கை 275,839. இவர்களில் 250,000-க்கும் அதிகமானவர்கள் சிறுதொகை செலுத்தியவர்கள்; இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு தோறும் 200 பவுன் அல்லது அதற்கும் குறைவான வட்டியே கிடைத்து வந்தது.[1]

[1]Halevy, Hist. of Eng. People (Pelican ed.) II, பக். 204—212

பாதுகாப்பான, எளிதில் பெறக்கூடிய செல்வம் இவ்வாறு ஏராளமான குடும்பங்களுக்கு விரிவான முறையில் பிரித்துத் தரப்பட்டது. இவர்கள் மிகவும் சிக்கனமான மனிதர்கள். 'நிதி செலுத்தியவர்களுக்கு' அரசாங்கம் கொடுத்த வட்டிப் பணத்தில் ஐந்தில்ஒன்று மறுபடியும் பொதுநிதியிலேயே முதலீடு செய்யப்பட்டது என்று 1803-ல் கணக்கிடப்பட்டது. நிதி செலுத்தியவர்களில் பலருக்கு வேறுவழியிலும் வருவாய் வந்திருக்கலாம்; ஆனல் சிலர் வேலை, தொழில் எதுவுமின்றியே கண்ணியமாக வாழ்ந்துவந்தனர்; அவர்களது சிறிய நன்முகப் பாதுகாக்கப்பட்ட பணம் இதற்கு வழிசெய்தது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மணமாகாத மங்கையர்; இந்தத் தூய மங்கையரைப் பற்றித்தான் திருமதி கேஸ்கெல் (Mrs. Gaskell) தமது கிரான்போர்டு (Cranford) நாவலில் வருணித்தார்.

பொதுமக்களின் வரிப்பணத்தைத் தின்று கொழுத்த அட்டைகள் என்று 'நிதி செலுத்தியவர்களைப்' பற்றிக் காப்பெட் வசைபாடினர்; தேசீயக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று அவர் கோரினர். ஆனல் ஒரு பாவமும் செய்யாத, எளிய மக்களில் எத்தனை ஆயிரம் பேருக்குத் தம் கோரிக்கையால் நாசம் விளையப்போகிறது என்பதை அவர் அறியார். நூற்றுக் கணக்கான 'பங்கு வியாபாரிகளின்' (stock-jobbers) தலையிலும் இதனல் இடி விழும்; ஆனல் இவர்களுக்கு இது வேண்டியதுதான். இவர்களைத்தான் அவர் அதிகமாக வெறுத்தார்; ஏனென்றல் அகன்ற இலண்டனின் (Greater London) 'வீக்கத்தை' இன்னும் பெரிதாக்குவதற்கு இவர்களும் ஒரு காரணம். 'செங்கல்லும் சுண்ணும்பும் படையெடுப்பது' தொடர்ந்து நடைபெற்றது; பசுமையான மிடில்செக்ஸ் வயல்கள் மறைந்து கட்டடங்கள் எழுந்தன. தலைநகரத்துப் பங்குவியாபாரிகள், தொழிலதிபர்கள், நிதி செலுத்தியவர்கள் ஆகியோருக்குப் பங்களாக்கள் கட்டப்பட்டன. தமது நாட்டின் பழைய குடியானவக் காலத்தில் மனத்தைப் பறிகொடுத்த காப்பெட்டுக்கு இந்தப் புதிய அழகற்ற வீட்டுக் கூட்டமும், மண்ணில் வேர் பாயாத இந்தச் செயற்கைச் சமுதாயமும் கண்களை உறுத்தின. ஆனல், எதிர்கால இங்கிலாந்து என்பது இத்தகைய நகரங்களையும் மனிதர்களையுமே பெரும்பாலும் கொண்டிருக்கப் போகிறது.

இலண்டனின் ஒரு பகுதியாக பிரைட்டன் (Brighton) ஏற்கெனவே ஆகிவிட்டது. ஜார்ஜ் IV-க்கு மிகவும் பிடித்தமான

இடம் அதுதான். அங்கே தான் தமது பிரசித்திபெற்ற மண்டபத்தை (Pavilion) அவர் கட்டினார். 'அதன் முன்னேற்றத்தைப் பாருங்கள்' என்று காப்பெட் உறுமினார்; 'சஸ்ஸக்ஸில்,இலண்டனுக்கு ஐம்பது மைல் தொலைவில் கடற்கரையில் அமைந்திருக்கிறது பிரைட்டன் நகரம்; அங்கு உடல்நலத்துக் கேற்ற காற்று வீசுகிறது என்று பங்கு வியாபாரிகள் நினைக்கிறார்கள். காலையில் அங்கிருந்து புறப்படும் கோச்சு வண்டி நடுப்பகலில் இலண்டனை அடையும்படி எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது...பங்கு வியாபாரிகள் தங்கள் பெண்டுபிள்ளைகளுடன் ஈசல்களைப்போல் அங்கு நிறைந்திருக்கிறார்கள். கோச்சுகளில் போவதும் திரும்புவதுமாக இருக்கிறார்கள்; தாங்கள் பிரைட்டனில் வசித்தாலும்கூட பங்கு வியாபாரத்தை சேஞ்சு அலியிலேயே (Change Alley) நடத்துகிறார்கள்' (Rural Rides, மே 5, 1823.)

அந் நூற்றாண்டின் முதல்முப்பதாண்டுகளில் வாழ்க்கை சிந்தனை ஆகியவற்றில் ஏற்பட்ட பல மாறுதல்களுக்குக் காரணம் சமுதாயத்தில் எல்லா வகுப்புகளிலும் எவஞ்சலிய சமயம் சிறிதுசிறிதாகப் பரவியதுதான்; இறுதியில் இது உச்ச வகுப்பில் கூடப் பரவியது. இது கீழிருந்து மேல் நோக்கிப் பரவிய ஓர் இயக்கம். மனிதாபிமானப் பணிகள், நடத்தையில் தூய்மை, பக்தி ஆகியவற்றுடன் நெருங்கிப் பிணைந்த சுறுசுறுப்புமிக்க, தனிநபர் வாதப் புராட்டஸ்டன்ட் சமயம் பதினெட்டாம் நூற்றாண்டு இங்கிலாந்தில் ஒரு முக்கியமான பங்குவகித்தது என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். ஆயினும், பரந்த நோக்குடைய நிறுவப்பட்ட திருச்சபையின் (Established Church) மீதோ அல்லது வாழ்க்கையை நன்கு அனுபவித்துவரும் மேல்வகுப்பு மக்களின் சுதந்திரமான வாழ்வின்மீதோ இதன்நிழல் சிறிதும் அப்பொழுது படவில்லை. ஆனால், இங்கிலீஷ் கால்வாய்க்கு அக்கறையிலிருந்து, தமது விசேஷ உரிமைகளையும் உடைமைகளையும் யாகோபியக் கோட்பாடுகள் அச்சுறுத்தியதை இவர்கள் கண்டபொழுது ஒரு மாற்றம் நிகழ்ந்தது. பிரெஞ்சு நாட்டு 'நாத்திகத்தையும் இயற்கைச் சமயக் கொள்கையையும்' (atheism and deism) கண்டு அவர்கள் அதிர்ச்சியுற்றனர். இதனால் கனவான்கள் மத்தியில் ஒரு 'கடுமைக்கு' வழியேற்பட்டது. மதத்தில் அக்கறையின்றியிருப்பதும் பரந்த நோக்கினைக் கொண்டிருப்பதும் இப்பொழுது புரட்சி என்றும் தேசத்துரோகம் என்றும் கருதப்பட்டது; நடவடிக்கைகளிலும் இதையொத்த ஒரு மாறுதல் ஏற்பட்டது. எல்லையற்ற உரிமை அல்லது இன்பம் நிறைந்த வாழ்வு போய்,

போலி வேடம் அல்லது புனிதத்தன்மை வந்தது. வியாபாரி யின் வீடுமுதல், நாட்டுப்புற இல்லம் (country home) வரை எல்லாவீடுகளிலும் குடும்ப வழிபாடு (family prayer) பரவியது. 'ஞாயிறு ஆசாரம்' ('Sunday observance') மீண்டும் அனுஷ்டிக் கப்பட்டது. 'இங்கிலாந்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆலயங் களுக்குச் செல்லும் வழி நெடுகிலும் கோச்சுவண்டிகள் நிறைந்திருந்ததைக் கண்டு கீழ்வகுப்புமக்கள் வியப்புற்ற னர். இந்தப் புதிய காட்சியைக் கண்டு எளிய கிராமப் புறத்து மக்கள் விஷயம் என்ன என்று விசாரிக்கத் தொடங் கினர்' என்று 1798-ல் (Annual Register) எழுதியது.

சமயத் துறையில் இவ்வாறு கடுமை ஏற்பட்டது யாகோபியஎதிர்ப்புப் பீதியின் அறிகுறியே தவிர வேறென்று மில்லை என்றால், அந்த அபாயம் முடிவுற்றவுடனேயே இதுவும் முடிவுற்றிருக்கும். ஆனால், 1815-ல் அமைதிநிலை மீண்டும் ஏற்பட்ட பிறகுகூட இது நீடித்தது. அப்பொழுது ஏற்பட்ட பரந்த மனப்போக்கு இயக்கத்துடன் தொடர்பு கொண்டது. ஹொரேஸ் வால்போல், சார்லஸ் பாக்ஸ் (Charles Fox) ஆகியோரது இன்ப நாட்டம் மிகுந்த காலத்தை விட விக்டோரியாக்காலத்துக் கனவான்களும் அவர்கள் குடும் பத்தினரும் தங்களது பழக்கவழக்கங்களில் அதிக சமயப் பற்றுடையவர்களாகவும், தங்களது சிந்தனைப் போக்கில் அதிக நிதானத் தன்மையுடையவர்களாகவும் இருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் எல்லா வகுப் பினரும் தீவிர புராட்டஸ்டன்டுகளாக இருந்தனர்; அவர்களில் பலர் சமயப்பற்று மிக்கவர்கள்; பலர் (பயன்முதற் கொள்கை யினரும் (Utilitarians) அறியொணாக் கொள்கையினரும் (Agnostics) கூட) 'கடுமை' மிக்கவராயிருந்தனர். ஒழுக்க நெறிக்கே முதலிடங் கொடுத்தனர்; பியூரிட்டானியத் தன்மை யின் சிறப்பும் அபாயமும் இதுதான். இப்புதிய காலத்து மனிதனுக்கு இரண்டுவிதமான கவலைகள் தோன்றின; ஒன்று நடைமுறையிலிருந்த ஒழுக்கநெறியைப் பின்பற்றி நடப் பது; இரண்டு, இலாபகரமான தொழிலில் முன்னேறுவது. இந்தக் கவலைகள் காரணமாக அவனுக்கு வாழ்விலிருந்த மற்ற வாய்ப்புகள் தெரியாமற்போயின. ஒரு தனிநபர் வாத வர்த்தகமும், அதேயளவு தனிநபர் வாதவகையைச் சேர்ந்த சமயமும் ஒன்றுசேர்ந்து தன்னம்பிக்கை மிகுந்த, நம்பத் தகுந்த மனிதர்களை உற்பத்திசெய்தன. இவர்கள் பலவிதங் களில் நல்ல மனிதர்கள்; ஆனால், 'பிலிஸ்தியர்கள்' (Philistines) என்ற சொல், பிற்காலத்தில் அவர்களை மிகவும் கடுமை யாகத் தாக்கிய ஒரு மனிதரால் பொதுமக்களிடையில் பரப்பப்

பட்டது. இயந்திரத் தொழிலும் சரி எவஞ்சலிய சமயமும் சரி கலியிலாஞே அழகினுலோ எவ்விதப் பயனுமில்லை என்று கருதின; இவை ஆண்மையைக் கெடுப்பவை என்று வடக் கத்தியப் பெரும் தொழிற்சாலைநகரங்களை நிர்மாணித்தவர் களால் வெறுக்கப்பட்டன.

பிரெஞ்சுக் குடியரசின் நாத்திகக் கோட்பாடு சமுதாயத் தின் கீழ்வகுப்புமக்களிடையில் ஒரு பீதியை ஏற்படுத்தி விட்டது. இதனுல் அங்கு வெஸ்லிய இயக்கம் வெகு விரி வாகப் பரவியது. 1791-ல் இதன் ஸ்தாபகர் இறந்தபின் எப் பொழுதுமே அது இவ்வளவு விரிவாகப் பரவியதில்லை. புதிய மெதாடிச ஆலயங்களின் உறுப்பினர்தொகை இலட்சக்கணக் காக உயர்ந்தது; அது மட்டுமின்றி, பாப்டிஸ்ட்டுகள் (Baptists) போன்ற பழைய கன்பார்மிஸ்ட்அல்லாப் பிரிவுகளிடையிலும் மெதாடிச உணர்வு புகுந்தது. பிரெஞ்சுப் புரட்சி தொடங் கும் வேளையில் பிரீஸ்ட்லி, தனியொருமைக் கோட்பாட்டினர் (Unitarians) ஆகியோரது லாடிடூடினேரிய, தீவிரவாத உணர்வு, வைதீகமான டிஸ்ஸென்டர் பிரிவுகளுக் கிடையி லுங்கூட ஓரளவு பரவியிருந்தது. ஆனுல், சமய வெறியைக் குறைத்துவந்த அந்தப் பரந்த நோக்குடைய கொள்கைகள் அந் நூற்றுண்டின் இறுதிவாக்கில் தலைதூக்கிய பிற்போக்கு இயக்கத்தினுல் அழிக்கப்பட்டன; அவைகளின் இடத்தைப் பலம் பொருந்திய, குறுகிய எவஞ்சலிய சமயம் பிடித்துக் கொண்டது. இவ்வாறு புத்துணர்வுபெற்ற பல்வேறு கன்பார் மிஸ்ட்அல்லாப் பிரிவுகளும் புதிய தொழில்மாவட்டங்களில் புகுந்து மக்களைக் கிறித்தவ சமயத்துக்கு மாற்றும்பணியை மேற்கொள்ளலாயின. இத்தகைய பணியைச் செய்வதற்கு, நிறுவப்பட்ட திருச்சபையிடம் அன்று போதிய நிறுவனமோ ஆர்வமோ கிடையாது.

போர் நடந்தவரையில், புதிய வகையைச் சேர்ந்த கன் பார்மிஸ்ட்அல்லாக் கொள்கைகள் பிரெஞ்சு எதிர்ப்புத்தன்மை யையும், பழமை விரும்பித் தன்மையையுமே கொண்டிருந் தன; எனவே, ஆளும் வகுப்பினர் இக் கொள்கைகள் பரவு வதைக் கண்டு முன்புபோல் பீதியுறவில்லை. ரோமன் கத் தோலிக்கர்களையும், தங்களுக்கு அரசியலில் சம உரிமைகள் வேண்டுமென்ற அவர்களது கோரிக்கையையும் டோரிக் கட்சியைச் சேர்ந்த மேல்வகுப்பினரும், புதிய எவஞ்சலியக் கோட்பாடுகளைத் தழுவிய டிஸ்ஸென்டர் பிரிவுகளும் எதிர்த் தன; இதனுல் இவர்களுக் கிடையில் மேலும் ஓர் உறவு ஏற் பட்டது. இதைக் கண்ட விக்குப் பிரபுக்களுக்குப் பொருமை

யாயிருந்தது; இவர்கள் மட்டும்தான் பதினெட்டாம் நூற்றாண்டின் கொள்கைகளைப் பொதுவாக விடாமல் பிடித்துக்கொண்டிருந்தனர். ஆனால், போர் முடிந்ததும், யாகோபிய எதிர்ப்பு அச்சம் குறைந்ததும், சீர்திருத்த மடையாத, நிறைய விசேஷ உரிமைகளைப் பெற்றிருந்த நிறுவப்பட்ட திருச்சபையும், பலம் பொருந்திய கன்பார்மிஸ்ட்டல்லாப் பிரிவுகள் பலவும் மட்டுமே களத்தில் இருந்தன. இப்பிரிவுகள் அனைத்தும் ஒரு புதிய எவஞ்சலிய ஆவேசத்தைப் பெற்று விளங்கின; வெறும் பொறையினால் (toleration) மட்டும் அவை திருப்தியடையக் கூடிய நிலையிலில்லை. அத்தகைய பலவீனமான கன்பார்மிஸ்ட்டல்லாப் பிரிவுகள் இறந்து நெடுங்காலமாகி விட்டது.

இப்பொழுது நிறுவப்பட்ட திருச்சபைக்குள்ளேயே சிறிய, ஆனால் செல்வாக்குமிக்க எவஞ்சலியக் கட்சி யொன்று தோன்றியது. அது திருச்சபையையும் டிஸ்ஸென்டர்களையும், யாகோபிய எதிர்ப்பாளர்களையும் லிபரல்வாதிகளையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைந்தது. அடுத்த தலைமுறையில் தோன்றிய ஆக்ஸ்போர்டு இயக்கத்தைப் போல இதன் கொள்கைகள் மதகுருவினுடையவை அல்ல. திருச்சபைக்குள் மிகவும் ஆர்வமுள்ள மதகுருக்கள் எவஞ்சலியர்கள்தாம்; ஆனால், ஆன்மாக்களைக் காப்பதில்தான் இவர்களது முழு அக்கறையும் இருந்ததே யொழிய, திருச்சபையின் நிறுவனத்தைப் பற்றி யன்று; தங்களது பாதிரிகள்தாம் சிறந்தவர்கள் என்றும் இவர்கள் பெருமையடித்துக் கொள்ளவில்லை. கேம்பிரிட்ஜை சேர்ந்த சார்லஸ் சிமியோன் (Charles Simeon), ஐசக் மில்னர் (Issac Milner) ஆகியோரைத் தவிர, வேறு முக்கியப் 'புனிதர்கள்' (Saints)—எவஞ்சலியர்கட்கு இதுதான் பொது மக்கள் தந்த பெயர்—வில்பர்போர்ஸ் (Wilberforce), பக்ஸ்டன் குடும்பத்தினர், கிளாப்ஹாம் 'பிரிவு' எல்லோரும் சாதாரண மனிதர்கள். இக்காலத்தில் மிகவும் உறுதிமிக்க ஆங்கிலேயக் கனவான்கள் பெரும்பாலும் எவஞ்சலிய சமயத்தைச் சார்ந்தவர்களே. படைவீரர்கள் அவர்களிடம் மரியாதை காட்டினர்; இந்தியா அச்சத்தையும் நன்றியையும் காட்டியது. ஸ்டீபன் குடும்பம் (Stephens) போன்ற பல குடும்பங்கள் வாயிலாக மந்திரிசபை, சிவில் சர்வீஸ், காலனி நிருவாகம் ஆகியவைமீது அவர்களின் செல்வாக்கு அந் நூற்றாண்டின் முதல்நாற்பதாண்டுகளில் சதா வளர்ந்து வந்தது.

அவர்களது சமய உணர்வு, மனிதாபிமானப் பணிகள் வாயிலாக நன்கு வெளிப்பட்டது. அடிமைமுறையை ஒழிக்

கும் பணியில் தங்களைப் போன்ற மற்ற எவஞ்சலியர்கள், வெஸ்லியர்கள், இதர டிஸ்ஸென்டர்கள் ஆகியவர்களுடன் மட்டுமின்றி, கட்டற்ற பகுத்தறிவாளர்கள் (free-thinkers), பயன்முதற் கொள்கையினர் ஆகியோருடனும் ஒத்துழைக்க அவர்கள் தயாராயிருந்தனர். நிறுவப்பட்ட திருச்சபைக் குருமார்களிடையிலிருந்த 'கடைந்தெடுத்த' பழமை விரும்பிகள்தாம் தமது அடிமைஒழிப்பு இயக்கத்துக்குத் தடையாக விளங்கினர் என்றும், அதே சமயம் கன்பார்மிஸ்ட் அல்லாதாரும் நாத்திகச் சீர்திருத்தவாதிகளுமே அதைத் தீவிரமாக ஆதரித்தனர் என்றும் வில்பர்போர்ஸ் ஏமாற்றத்தோடு ஒப்புக் கொண்டார். பழைய கட்டற்ற பகுத்தறிவாளர் பெந்தாமும் இவ்வாறு கூறவேண்டியதாயிற்று: 'அடிமை ஒழிப்புவாதியாக இருப்பவன் புனிதனாக இருக்க வேண்டுமென்றால், எனக்கும் புனிதன் பட்டம் தாருங்கள்'. திருச்சபையைச் சேர்ந்த எவஞ்சலியர்கள், டிஸ்ஸென்டர்கள் கட்டற்ற பகுத்தறிவாளர்களாகிய தீவிரவாதிகள் (Radical) ஆகிய இதே சக்திகள் ஒன்றுகூடியே பிரிட்டிஷ், அந்நியப் பள்ளிச் சங்கத்திலும் (British and Foreign School Society) ஏழைகளின் கல்விக்காக உழைத்தன; அடுத்த தலைமுறையில் ஷாபஸ்பரியின் (Shaftesbury) தொழிற்சாலைச் சட்டங்களுக்காகவும் உழைத்தன.

கட்சி, சமயப் பிரிவுகள் ஆகிய எல்லைகளைக் கடந்து நின்ற இந்த இயக்கங்கள் மனிதனின்மீது இன்னும் சுறுசுறுப்பாகவும் சுதந்திரமாகவும் ஆகிவந்தது என்பதைக் காட்டின. இப்பொழுது பலர் தங்களுக்குத் தாங்களே சிந்தித்தனர்; செயல்பட்டனர். விக்குகளுக்காகவும் டோரிகளுக்காகவும் வேண்டி மன்றங்களில் கூட்டம்கூடுவது போய்விட்டது. இந்தப் பொதுமக்கள் இயக்கங்கள் என்கிற புதிய சக்தியினால் 1807-ல் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டது. அவ்வியாபாரத்தினால் இலாபம் அடைந்துவந்த பலம் பொருந்திய குழுக்கள் அதை எதிர்த்தன; ஆயினும் யாகோபியஎதிர்ப்புப் பிற்போக்கு இயக்கம் முழுமூச்சுடன் நடந்துவந்த அச்சமயத்திலும் கூட, அடிமை வியாபாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த முதல்வெற்றியுடன் இவ்வியக்கம் ஓய்ந்துவிடவில்லை; அது தொடர்ந்து முன்னேறி, பிரிட்டிஷ் பேரரசு முழுவதிலும் அடிமைகளுக்கு விடுதலை அளிக்கவேண்டும் என்ற கோரிக்கைக்காகப் போராடியது; 1820–30-ல் இந்த நோக்கத்துக்கான போராட்டத்தின் தலைமைப் பொறுப்பை போவெல் பக்ஸ்டன் (Fowell Buxton) மேற்கொண்டார்.

1833-ல் வில்பர்போர்ஸ் இறந்த அதே ஆண்டில் இவ்வியக்கம் வெற்றிபெற்றது.

இவ்வாறு வில்பர்போர்ஸின் (Wilberforce) மிக நேர்மையான நோக்கம் பெரு வெற்றியடைந்தது. தமது மாபெரும் மனிதாபிமானப் பணியிலிருந்து அவர் ஒருபொழுதும் பின் வாங்கியதில்லை; பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு சிறிது காலம் அரசியல் உலகிலும் நவநாகரிக உலகிலும் இதற்குக் கடும் எதிர்ப்பு இருந்தது; இருந்தாலும் அவர் பின்னடையவில்லை. எந்தக் கட்சியையும் வகுப்பையும் சமயத்தையும் சேர்ந்த மனிதரோடும் சேர்ந்து போராட அவர் எப்பொழுதும் தயாராயிருந்தார். அவர் ஆவேசம் படைத்தவர் மட்டுமல்லர்; விவேகமும் படைத்தவர். அவர் ஒரு சிறந்த பேச்சாளர்; போராட்டத் தளபதி; ஆயினும், அவரிடம் தள்ளமுடியாத ஒரு சமூகக்கவர்ச்சி இருந்தது. இது அவரது இனிய பண்பினால் ஏற்பட்டது. நமது இரண்டுகட்சி அரசியல் வாழ்வில் ஒரு பொதுநிலை வகித்த அரசியல்வாதிக்கு அவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. பதவியைத் தாம் விரும்பியிருப்பாரேயானால் இத்தகையதொரு சீரிய பணியை அவரால் ஆற்றியிருக்க முடியாது. மனித சமுதாயப்பணியை விட்டு விட்டு கட்சிக்கு முதலிடம் தந்திருந்தால், தமது அருந்திறமைகளையும் நிலையையும் வைத்துப் பிட்டுக்குப் (Pitt) பின்னர்ப் பிரதம மந்திரியாகவும் ஆகியிருக்கலாம். ஒருவகையான புகழையும் அதிகாரத்தையும் இவர் தியாகம் செய்து, இன்னொரு வகையைப் பெற்றுப் பின்னர் மக்களால் மனத்தில் வைத்துப் பூசிக்கப்படும் ஒரு சீரிய நிலையையும் பெற்றார்.

பட்டணத்திலும் கிராமத்திலும் இருந்த நடுத்தர வகுப்பினரிடையில் வில்பர்போர்ஸுக்கும் அவரது அடிமைஒழிப்பு இயக்கத்துக்கும் இருந்த நிலையான ஆதரவு பேரழகு வாய்ந்த ஒன்று; இங்கிலாந்தின் சிறந்த பண்புகளில் ஒன்று; உலகில் ஒரு புதுமை. ஒரு தலைமுறை முழுவதும் இந்த அடிமை ஒழிப்புப் போராட்டத் தலைவர் புகழ்பெற்ற யார்க்ஷயர் தொகுதியிலிருந்து ஒவ்வொரு தேர்தலிலும் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர்மட்டும்விரும்பியிருந்தால் அவரது ஆயுட்காலம் முழுவதும் அவர் அத்தொகுதியின் உறுப்பினராகக் காமன்ஸ் சபையில் விளங்கியிருக்க முடியும். அக்காலத்தில் வாக்களிப்பதற்காக எல்லா நிலச்சொந்தக்காரர்களும் (freeholders) கதீட்ரல் (Cathedral) நகரமான யார்க்குக்கே செல்லவேண்டும். 'வாக்களர்களை நிறையச் சுமந்துகொண்டு (ஹல் நகரிலிருந்து) படகுகள் ஆற்றில் மேல்நோக்கிப் போகின்றன;

நூற்றுக்கணக்கானவர்கள் கால்நடையாகவும் செல்கின்றனர்' என்று 1807-ல் எழுதிய ஒரு கடிதம் கூறுகிறது. 'பெரும்பாலும் நடுத்தர வகுப்பு மக்களைக்கொண்ட இன்னொரு பெரிய கூட்டம் வென்ஸ்லி டேலிலிருந்து (Wensley Dale) வந்து கொண்டிருந்தபொழுது, கமிட்டியின் உறுப்பினர் ஒருவர் அவர்களைச் சந்தித்துக்கேட்டார்: 'கனவான்களே, எந்தக் கட்சிக்காக நீங்கள் வருகிறீர்கள்?' 'வில்பர்போர்ஸுக்காகவே, எல்லோரும்' என்று அவர்களின் தலைவர் பதிலளித்தார். ஞாயிற்றுக்கிழமையன்று யார்க்கின் விசாலமான கதீட்ரல் ஆலயம் நிறைந்திருந்தது; யார்க்ஷயரின் மூன்று பகுதிகளிலிருந்தும் (ridings) நிலச்சொந்தக்காரர்கள் அங்கு வந்திருந்தனர். 'ஜோசியாவின் (Josiah) ஆட்சியில் யூதர்களின் பேரால யத்தில் நடந்த புகழ்மிக்க ஆண்டு விருந்து (Passover) என் நினைவுக்கு வந்தது' என்று வில்பர்போர்ஸ் எழுதுகிறார்.

வில்பர்போர்ஸும் அடிமைஒழிப்பு இயக்கத்தினரும் ஆங்கிலேய வாழ்விலும் அரசியலிலும் போராட்டம், பொது மக்களிடையில் பிரசாரம் ஆகியவற்றில் புதிய முறைகளைப் புகுத்தினர். விவரங்களையும் வாதங்களையும் பரப்புதல்; 'மத்தியப் பகுதிகளில்' (Middle-passage) மக்கள் வாழ்வின் ஆனந்தத்தைப் பற்றியும், பருத்தி, புகையிலை, கரும்புத் தோட்டங்களில் நீக்ரோமக்களின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு பற்றியும் தமது விரோதிகள் பரப்பிய கட்டுக்கதைகளுக்குப் பதிலிறுத்தல்; துண்டுப் பிரசுரங்கள்; சந்தாத் தொகைகள்; பொதுக்கூட்டங்கள் போன்ற இந்தப் பிரசாரமுறைகள் அனைத்தும் அன்று விநோதமான, புதிய முறைகளில் (இன்று இவை பழக்கப்பட்ட முறைகளாகிவிட்டன) உருவாக்கப்பட்டு வந்தன. அமைதியாக, நீண்ட நாட்களாக உறங்கிக் கொண்டிருந்த குவாக்கர்களும் (Quakers) இன்று தட்டியெழுப்பப்பட்டுப் பொதுவாழ்வில் ஈடுபடுத்தப்பட்டனர்; கட்சி அரசியல் வாதிகள்மீது ஒரு பாரிசத் தாக்குதல் தொடங்கியது. வில்பர்போர்ஸின் இம்முறைகள், பின்னர்க் கணக்கில்லாமல் தோன்றிய லீக்குகள், சங்கங்கள் ஆகியவற்றுல் பின்பற்றப்பட்டன. அரசியல், சமயம், பொதுப்பணி, கலாச்சாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் செயல்பட்ட இச் சங்கங்கள் அன்றுதொட்டு இன்றுவரை ஆங்கிலேய வாழ்வின் ஊற்றுக்கண்களாக விளங்கிவருகின்றன. ஒவ்வொரு பிரச்னையைப் பற்றியும் பொதுவிவாதம் நடத்துவது, போராட்டம் நடத்துவது என்பன, வில்பர்போர்ஸின் வெற்றிகரமான இயக்கங்களைப் பின்பற்றிய ஆங்கிலேய மக்களின் வழக்கமாக ஆகிவிட்டன. எல்லா

வகையான நோக்கத்துக்காகவும் குறிக்கோளுக்காகவும் மக்கள் சங்கங்கள் அமைப்பது, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய சமூகவாழ்வின் ஒரு முக்கிய அங்கமாயிற்று. அரசாங்கம் செய்யத் தவறிவிட்ட பலவற்றில் இவை கவனம் செலுத்தின.

அரசாங்கக் கடற்படையுடன் சேர்ந்து போனபார்ட்டியின் பேராசையை மண்ணோடு மண்ணாக்கிய பிரிட்டிஷ் வாணிபக் கப்பல்படை (mercantile marine) உலகிலேயே ஒப்புவமையில்லாத மிகப்பெரிய படை. நான்காம் ஜார்ஜின் (1820-1830) காலத்தில் மொத்த எடை கிட்டத்தட்ட இரண்டரை மில்லியன் டன் கொண்டிருந்த அது காற்றையும் பாய்மரத்தையுமே நம்பியிருந்தது. ஆயினும் 1821லேயே டோவருக்கும் (Dover) கலாய்க்கும் (Calais) இடையில் மக்கள் போக்குவரத்துக்கென நீராவிக் கப்பல்கள் விடப்பட்டன; நல்ல வானிலையில் பயணநேரம் மூன்று அல்லது நான்கு மணியாகக் குறைந்தது. கடல்மீதும் தரையின்மீதும் நீராவிக் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அது வருமுன்பாகவே எஞ்சினீரிங் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் நமது தீவின் துறைமுகங்களும் மற்றவைகளும் மாற்றியமைக்கப்பட்டு வந்தன. 1800-க்கும் 1830-க்குமிடையில் டிரினிட்டி ஹவுஸ் (Trinity House) கலங்கரைவிளக்கங்களையும் மிதக்கும் விளக்குகளையும் (floating lights) இங்கிலாந்தின் கடற்கரையைச் சுற்றிலும் நிறுவிற்று. சின்னஞ்சிறு துறைமுகப் பட்டினங்களிலும் கப்பல்துறைகள் கட்டப்பட்டன; இலண்டனில் கப்பல்துறைமுறை (dock) வேகமாக அமைக்கப்பட்டது; நதியில் பாலம் வரையில் உயரமான பாய்மரங்கள் நிறைந்தே இலண்டன் 'ஏரி'(Pool)இன்னும் காட்சியளித்தது. கடற்கரைப் பகுதிகளுக்கு மக்கள்கூட்டத்தைக் கவருவதற்காக மார்கேட்டிலும் பிரைட்டனிலும் உள்ளதைப்போல் பொழுதுபோக்கு ரேவுகள் (Pleasure piers) கட்டப்பட்டன.

பிரிட்டனின் வர்த்தகத்துக்கும் உலக வர்த்தகத்துக்கும் மையமாகத் தலைமைப்பதவியை தேம்ஸின் கழிமுகமே இன்னும் வகித்துவந்தது. சீர்திருத்த மசோதா கொண்டுவரப்படும் சமயத்தில் நம் நாட்டின் கப்பல்களில் நாலில் ஒரு பகுதி இலண்டனில் பதிவுசெய்யப்பட்டவை; இலண்டன் வியாபாரிகட்குச் சொந்தமானவை. ஆறு மாதங்கட்குமேல் பயணம் செய்து தென்னப்பிரிக்க முனையைச் சுற்றிக் கொண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் சென்றுவந்த பெரும் கிழக்கிந்தியக் கம்பெனிக் கப்பல்களும் இலண்டனைச் சேர்ந்

தவையே. இலண்டனுக்கு அடுத்தது நியூகாசில் (Newcastle); இங்குப் பதிவுசெய்யப்பட்ட கப்பல்களின் மொத்த எடை 202,000 டன்கள். இவை பெரும்பாலும் நிலக்கரிக் கப்பல்கள்; இவைகளில் பல இலண்டனுக்கு நிலக்கரி ஏற்றிவந்தன. மூன்றுவதாக வந்தது லிவர்ப்பூல் (Liverpool); இங்குக் கப்பல்களின் மொத்த எடை 162,000 டன்கள்; இவை பெரும்பாலும் அமெரிக்காவுடன் வியாபாரம் செய்தன. சண்டர்லந்தும் ஒயிட்ஹேவனும் (Sunderland, Whitehaven) நான்காவது, ஐந்தாவது இடங்களை வகித்தன; இவைகளின் கப்பல்கள் முறையே கிழக்கு, மேற்குக் கரையோரங்களில் நிலக்கரி ஏற்றிச்சென்றன. ஹல் (Hull) மொத்தம் 72,000 டன் எடைக்குக் கப்பல்களைப் பெற்றிருந்தது; வேறு எந்த ஆங்கிலேயத் துறைமுகப்பட்டினமும் 50,000 டன்களுக்கு மேல் பெற்றிருக்கவில்லை. கிளோட்சைட் (Clydeside) 84,000 டன்கள் பெற்றிருந்தது. (கிளாப் ஹாம், Ec. Hist. Modern Britain, I, பக். 3-8.)

அரசாங்கக் கடற்படைக்கும் வியாபாரக் கப்பல்களுக்கும் கடல்வாழ்வு மேற்கொண்ட மற்ற மக்களுக்கும்—மீனவர்கள், திமிங்கில வேட்டைக்காரர்கள், கள்ளக் கடத்தல்காரர்கள்—இடையேயான உறவுகள் போரின்பொழுது முதல்முக்கியத்துவம் வாய்ந்தவை. இவைகட்கிடையிலான தொடர்பு குழப்பமிக்க, கொடுமை நிறைந்த ஆள்திரட்டும் குழு (press-gang) முறைதான். கடற்படைக்கு ஆள்திரட்டுவதில் வன்முறை தேவைப்பட்டது; ஏனெனில், மன்னரின் பணியில் (King's service) வாழ்க்கைநிலைமை படுகேவலமாயிருந்ததால் மக்கள் தாமாகவே வருவதில்லை. ஆனால், வன்முறை பயன்படுத்தப்பட்டவிதம் மிகமோசமானது. கடற்படையில் பணியாற்றத் தகுதிபெற்ற ஆட்களின் பெயர்களைக் கொண்ட முறையான பதிவேடு ஒன்றைத் தயாரிக்கலாமென்றும், அதிலிருந்து வேண்டும்பொழுது நீதியான, ஒழுங்கான முறையில் கடற்படைக்கு ஆட்களைத் திரட்டிக் கொள்ளலாமென்றும், லூயிXIV-க்கு எதிரான போர்களின் பொழுது கடற்படை இலாகா அதிகாரிகள் கூறியிருந்தனர்; ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. பதினெட்டாம் நூற்றுண்டு முழுவதிலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் நிறுவனங்களும் திறமையற்று விளங்கின; இந்தத் திறமையின்மை கடற்படையிலும் கூட—கடற்படையின் அந்த வீரக் காலத்திலும் கூட (heroic age)—தென்பட்டது. நெல்சனின் காலத்திலுங் கூட ஆள்திரட்டும் குழுவைக்கண்டு இங்கிலாந்தின் கடற்கரைகளிலும் துறைமுகங்களிலும் வசித்த மக்கள் அஞ்சி

நடுங்கினர். மன்னரது அதிகாரிகளின் தலைமையில் வாளேந்திய ஆள்திரட்டும் கூட்டங்கள் சுற்றிவந்தன; முறைமுகங்களிலும் கடலிலும், ஏல் விடுதிகளிலும் தெருக்களிலும் மாலுமிகளையும் மற்றவர்களையும் இவை இழுத்துச் சென்றன. மதாலயங்களின் படிக்கட்டுகளிலிருந்து மணமகனையும் தொழுகைக்கு வந்திருந்தோரையும் கூட சிற்சில சமயங்களில் தூக்கிச் சென்றன. எங்கும் பெரிய அநீதியும் துயரமும் இழைக்கப்பட்டன; குடும்பங்கள் நாசமாக்கப்பட்டன; இதனால், தகுதியற்ற ஆட்களும் பல சமயங்களில் கடற் படையில் சேர்க்கப்பட்டனர்.[1]

கடற்படைக் கப்பலுக்குள் சென்றவுடன் தூக்கி வரப் பட்ட அந்த ஆள் தன்தலைவிதியை நினைத்து அழ வேண்டியதுதான். கொள்ளைலாபம் அடித்த ஒப்பந்தக்காரர்களால் (contractors) கொண்டுதரப்பட்ட உணவை வாயில் வைக்க முடியாது; ஏழை அரசாங்கம் எண்ணிக் கொடுத்த பணமோ சொற்பம். ஸ்பிட்ஹெட் (Spithead), நோர் (Nore) ஆகிய விடங்களில் 1797-ல் நீடந்த ஆபத்தான கலகங்களை அடுத்து இந் நிலைமைகள் திருந்தின. திறமைமிக்க கடற்படை அதிகாரிகளால் பல தலைமுறைகட்கு முன்பு யோசனை கூறப்பட்ட முறைகளில் இப்பொழுது மாலுமிகளின் நிலைமை சீர்திருந்தியது. நெல்சன் தமது ஆட்களை அன்புடனேயே நடத்தினர். ஆயினும், செயின்ட் வின்சன்ட், கேம்பர்டௌன், நைல் போர்களில் இங்கிலாந்தைக் காப்பாற்றிய சாதாரண மாலுமிகள் தங்களது புகழ்மாலை சூட்டத்தக்க பணிகட்கு இடையிடையே கலகங்கள் செய்தனர் என்பதை நன்முகத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு பக்கம் அவர்களது குறைகளும் ஒழுங்கின்மையும்; மறுபக்கம் போரிலும் முற்றுகையிலும் அவர்களது தலைசிறந்த வீரம். இவைகளுக்கிடையிலான முரண்பாடு ஒரு புதிராகத் தோன்றலாம். ஆனால் விளக்கம் இதோ இருக்கிறது: தான் எவ்வளவு கேவலமாக நடத்தப்பட்டாலும், தனது தேசமானது தன்னையே அதன் அரணுகவும் கீர்த்தியாகவும் கருதுகிறது என்பது பாய்மரத்தின் முன்நின்ற ஒவ்வொரு வீரனுக்கும் தெரியும்; நெல்சனின் ஆளாகிய தன்னையும் தனது கரிய சடையையும் கண்டதும் ஒவ்வொரு ஆங்கிலேயனின் கண்களும் அன்பினாலும் பெரு

[1] Sylvia's Lovers என்ற திருமதி கேஸ்கெலின் நூலில் 1800-ம் ஆண்டு வாக்கிலிருந்த விட்பி (Whitby) வருணிக்கப்படுகிறது. ஆள் திரட்டும் குழுவின் வேலைமுறைகளைப்பற்றி அதில் காண்கிறோம்; கிரீன்லந்து, ஆர்க்டிக் கடல்பகுதிகளில் திமிங்கில வேட்டையாடும் ஆங்கிலேயர் களைப்பற்றியும் அதில் படிக்கிறோம்.

மிதத்தாலும் பிரகாசித்தன என்பதும் அவனுக்குத் தெரியும். அவர்களை மோசமாக நடத்திய நாடு, தன்னை அவர்கள் காப்பார்கள் என்று உறுதியாக நம்பியது; அதுவும் அவர்களுக்குத் தெரியும்.

கடற்படை அதிகாரிகள்—இவர்களிலிருந்துதான் நெல்சன் தனது 'சகோதரர்களைத்' தேர்ந்தெடுத்துக் கொண்டார்—முன்னைக் காட்டிலும் இப்பொழுது நமக்குத் திருப்தியளிக்கக் கூடிய நிலையிலிருந்தனர். இருந்தாலும்கூட சிற்சில சமயங்களில் சண்டையிட்டுக்கொண்டும் மனம்போனபடி நடந்து கொண்டும்தான் இருந்தனர். ஸ்டுவர்டுகளின் காலத்தில் கடல்வாழ்வை நன்கறிந்த, எளிய குடும்பங்களிலிருந்து வந்த சாதாரண 'டார்பாலின்' (Tarpaulin) காப்டன்களுக்கும், கடற்படையின் அதிகாரப் பொறுப்பில் பங்குகொள்வதற்காக அரசவையிலிருந்து அனுப்பப்பட்ட கடற்படை வாழ்வையே அறியாத நவநாகரிக மனிதர்கட்கும் அடிக்கடி தகராறுகள் நிகழும். ஆனால், அந்த நாட்கள் போய்விட்டன. இப்பொழுதைய கடற்படை அதிகாரிகள் சிறு கனவான்களின் பிள்ளைகள் (நெல்சன் ஓர் ஏழை மதகுருவின் பிள்ளை); சிறு பிள்ளைகளாக இருக்கும்பொழுதே கடற்படையில் சேர்க்கப்பட்டனர். 'டார்பாலின்களின்' அனுபவத்தையும் பயிற்சியையும், கல்விகற்ற ஒருவனின் நடத்தையையும் சிந்தனையையும் இவர்களிடம் ஒருங்கே காணலாம். இத்தன்மைகளில் மிகச் சிறந்தவை அனைத்தையும் பெற்றவர்களுக்கு உதாரணமாக Mansfield Park நாவலில் பேனியின் (Fanny) சகோதரன் வில்லியத்தையும், Persuasion நாவலில் காப்டன் வென்ட்வொர்த்தையும் நாம் காண்கிறோம். ஆனால் நெல்சன், காலிங்உட் (Collingwood) ஆகியோரின் கடற்படைகளில் எல்லாவிதமான குணங்களும் பைத்தியக்காரத்தனமும் படைத்த அதிகாரிகளும் மற்றவர்களும் இருந்தார்கள்; இதை அவர்களில் ஒருவரான காப்டன் மேரியட் எழுதிய இறவாப் புகழ்பெற்ற Peter Simple, Mr. Midshipman Easy ஆகிய நாவல்களில் காணலாம்.

நெப்போலியனுடனான போராட்டத்தின் கடைசி சில ஆண்டுகளில் கடற்படையைவிட தரைப்படையானது மக்களிடத்தில் அதிகப் புகழ்பெற்றது. ட்ரபால்கர் (Trafalgar) களத்தில் பெற்றவெற்றி முழுமையானதாகையால், நமது 'புயலைப் புறங்கண்ட கப்பல்கள்' போரின் பின்னணிக்குச் சென்றன; ஆயினும், இவ் வெற்றிக்கு அவை தோன்றுத் துணையாக இருந்தன என்பதில் ஐயமில்லை. இப்பொழுது

வெலிங்டனின் வெற்றிகளே மக்களின் மனத்தில் நிறைந்தன. 1812லிருந்து 1815வரை, புகழ்மாலை வீசியங்கள் சூடிய கோச்சு வண்டிகள் சலமான்கா (Salamanca), விட்டோரியா (Vittoria), பிறகு வாட்டர்லூ வெற்றிகள்பற்றிய செய்தியைச் சுமந்துகொண்டு கிராமங்கள், நகரங்கள் வழியாகச் சென்ற பொழுது தரைப்படையின் கீர்த்தி மக்களிடையில் உச்சக் கட்டத்தை எட்டியது. முன்பு எப்பொழுதும் கிடைக்காத கீர்த்தி இது; பின்னரும்கூட இருபதாம் நூற்றாண்டில் நடந்த ஜெர்மன் போர்கள்வரை இது கிட்டியதில்லை. ஆனால் இந்த ஜெர்மன் போர்களின்பொழுதோ தேச முழுவதுமே ஆயுதந் தாங்கிப் போரிட்டது.

வெலிங்டனின் சேனை அத்தகைய சேனை அன்று. பிரெஞ்சுப் படையைப் போலவே அதுவும் ஒரு கட்டாய ஆள் சேர்ப்புப் (conscript) படை. சமூகத்தின் அடித்தட்டிலிருந்து திரட்டப்பட்ட சிப்பாய்களையும் பிரபுக்கள் குடும்பத்திலிருந்து வந்த தளபதிகளையும் கொண்ட படை அது. இந்தச் சிப்பாய்களைத்தான் 'தெருப் புழுதி' என்று வெலிங்டன் வருணித்தார்; ஆயினும்' 'இவ்வளவு சிறந்த வீரர்களாக இவர்களை நாம் ஆக்கியிருப்பது உண்மையிலேயே ஆச்சரியப் படத்தக்கதுதான்' என்றும் அவர் அடுத்தபடியாகக் கூறியதை நாம் மறந்துவிடுகிறோம். (ஸ்டான்ஹோப் எழுதிய Conversations with the Duke of Wellington, பதிப்பு. 1889, பக். 14, 18.) படையில் சேர்ந்ததற்கு முக்கியமான காரணங்கள் குடிப்பழக்கம், வேலையின்மை, காதலில் தோல்வி, சட்டத்துக்கு விரோதமான செயல்கள் ஆகியவை. இந்த முரட்டு மனிதர்களிடை ஒழுங்கை நிலைநிறுத்துவதற்குச் சாட்டை தேவை என்று அப்பொழுது கருதப்பட்டது. இதனால் சமூகத்தில் மதிப்புள்ள குடும்பத்து மக்கள் சிப்பாய்களாக ஆக விரும்பவில்லை. தீபகற்பப் போரின் (Peninsular War) முதலாண்டுகளில் பிரிட்டிஷ் சிப்பாய்கள் கொள்ளைச்செயல்களில் ஈடுபட்டனர்; இதைத் தடுக்க வெலிங்டன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வெற்றிபெறவில்லை. ஆனால் பிரெஞ்சு சிப்பாய்களைப் போல் நம்மவர்கள் அவ்வளவு மோசமில்லை; ஏனென்றால், தாம் கைப்பற்றிய பிரதேசத்தைக் கொள்ளையடித்தே சிப்பாய்கள் வாழ்வதற்கு நெப்போலியன் ஊக்கமளித்தார். ஆனால் 1814–ல் நாம் பிரான்சில் நுழைந்த சமயத்தில் நமது துருப்புகளிடையில் நிலவிய படை ஒழுங்கு வெகு சிறப்பாயிருந்தது; ஐரோப்பாவிலேயே தாமே சிறந்த துருப்புகள் என்ற வகையிலும். தம் நாட்டின

ரின் செல்லப் பிள்ளைகள் என்ற வகையிலும் அவர்கள் அடைந்த நியாயமான பெருமையும் தன்மதிப்பும் நமது நாட்டின் வேடிக்கையான சமூக அமைப்புக்கு ஒரு புகழ் மாலையாக விளங்கின; ஏனெனில், பிரிட்டிஷ் படை இச் சமூக அமைப்பின்படி திரட்டப்பட்டதுதானே.

கடற்படை அதிகாரிகளைவிடவும் பெரிய பிரபுக்கள் குடும்பத்திலிருந்து தரைப்படை யதிகாரிகள் வந்தனர். உள் நாட்டில் நவநாகரிகத்துக்கும் அரசியலுக்கும் தலைமை தாங்கிய பெரிய குடும்பங்களின் பிள்ளைகள் அவர்கள். வெலிங்டனும் அத்தகையவர்தான்; வேறு சிலர், Vanity Fair நாவலில் வரும் ஜார்ஜ் ஆஸ்போர்ன்ஸ் (George Osborne) போல் பணக்காரப் பூர்ஷ்வாக் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் தமது செல்வத்தைக்கொண்டு கமிஷன்பதவிகளை வாங்கி, பிரபுக்குடும்பத்து அதிகாரிகளோடு சமமாகப் பழக முடிந்தது. இத்தகைய அதிகாரிகளுக்கும் இவர்களால் தலைமைதாங்கி நடத்தப்பட்ட சாதாரண சிப்பாய்களுக்கும் இடையில் இருந்த சமூக வேற்றுமை மிகப் பெரிது. தங்களது பொறுப்புகளைச் சரிவர நிறை வேற்ற முடியாதபடி மிகுந்த நவநாகரிகமான அல்லது அதிகக் குடிப்பழக்கமுள்ள பல அதிகாரிகள் சிப்பாய்களைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. படையில் காணப்பட்ட திறமையின்மையும் ஊழலும் நெதர்லந்தில் 1793-ல் நடந்த முதல்போர் நடவடிக்கைகளின் (first campaign) பொழுது ஐயத்துக்கிடமின்றி அம்பலமாயின. படையில் சிப்பாயாகச் சேர்ந்து, சார்ஜன்ட்மேஜர் பதவிக்கு உயர்த்தப் பட்ட காப்பெட், 'ஆட்களுக்கு உணவு, முதல் மற்றவை களைத்தரும் பொறுப்பை நிர்வகித்தவரான தமது ரெஜிமென்டின் குவார்ட்டர்மாஸ்டர், 'கால்பாகத்தைத் தமக்காக எடுத்துக் கொண்டார்' என்பதை. 1793-க்குச் சில ஆண்டுகட்கு முன்பு கண்டார். இந்த ஊழலை அம்பலப்படுத்த முயன்றார்; இத்தகைய ஊழல்கள் படையதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தும் அவர்கள் தெரியாதது போலவே இருக்கிறார்கள் என்று கண்டார்; அவ்வதிகாரிகளின் பழிவாங்குதலுக்கு அஞ்சி அவர் அமெரிக்காவுக்கு ஓட வேண்டியதாயிற்று; ஏனெனில், இந்த மாதிரி தமது செய்கைகளையும் மேல்வரும் படிகளையும் மற்றவர்கள் உளவுபார்த்துத் தொந்தரவு செய்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள்.

நீண்ட அந்தப் போர் நடந்துகொண்டிருந்த பொழுதே சர். ரால்ப் அபர்குராம்பி (Sir Ralph Abercromby), சர் ஜான்மூர்

(Sir John Moore), வெலிங்டன் ஆகியோர் இந்நிலைமையைச் சிறிதுசிறிதாகத் திருத்தினர். பிரிட்டிஷ் அதிகாரிக்குப் பொறுப்புணர்வு மீண்டும் வந்தது; படைக்கு அதன் ஒழுங்குக்கட்டுப்பாடு மறுபடியும் வந்தது. ஆயினும், நன்கு நிர்வகிக்கப்பட்ட ரெஜிமென்டிலும் நன்கு நிர்வகிக்கப்படாத ரெஜிமென்டிலும் சார்ஜன்டுகளின் கட்டுப்பாட்டிலேயே சிப்பாய்கள் இருந்து வந்தனர். இந்த சார்ஜன்டுகள் தாம் 'கமிஷன் அந்தஸ்து பெறுத அதிகாரிகள்' (non-commissioned officers). 'படையின் முதுகெலும்பு' என்று இவர்கள் கருதப்பட்டனர். ஆங்கிலேயக் கிராமங்களில் காணப்பட்ட சமூகப்பிரிவுகளுக் கேற்ப ரெஜிமென்டிலும் பலதரப் பிரிவுகள் இருந்தன; ஏனெனில் கிராமத்திலிருந்துதானே அதிகாரிகளும் சிப்பாய்களும் வந்தனர். ஈட்டன் (Eton) கல்லூரியிலிருந்து அப்பொழுதுதான் வெளிவந்த ஒரு என்சைன் (ensign) கறுப்பு சார்ஜன்டால் (colour-sergeant) மரியாதையாகப் பார்த்துக்கொள்ளப்பட்டுப் பயிற்சி பெற்றார். இவர்களுக்கிடையிலான உறவுகள் இந்த இளைஞனுக்கு ஒன்றும் புதிதல்ல; அவனது வீட்டிலும் வேட்டை விலங்கு வளர்ப்போன் (gamekeeper) இவ்வாறுதான் அவனுக்குத் துப்பாக்கிப்பயிற்சியும் வேட்டைப் பயிற்சியும் அளித்தான்.

இராணுவமனப்பான்மை சிறிதும் இல்லாத நம் நாட்டில் தரைப்படை அதிகாரிகளிடையில் எந்தவிதமான வலுவான ஒற்றுமையுணர்வும் இல்லை. வெலிங்டன் கோமகனிலிருந்து எல்லோருமே வேலைநேரம் முடிந்தவுடன் இராணுவ உடையைக் களைந்துவிட்டு, சாதாரண உடையையே அணிய விரும்பினர். ஆயினும், போர்க்களத்தில் காவல் படையிலிருந்த (Guards) சில சொகுசுக்காரர்கள் மழைக்குக் குடைபிடித்து நின்றபொழுது வெலிங்டனுக்குக் கோபம் வந்தது. தாங்கள் செயின்ட் ஜேம்ஸ் தெருவில் தங்களது 'கிளப்புக்கு' (club) வெளியில் இருப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டார்கள் போலும்! சில அதிகாரிகள்மட்டுமே தமது பிழைப்புக்கான ஒரே சாதனமாகப் படையைக் கருதினர்; ஆனால், பதவிக் காலத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் கமிஷன்களுக்காகக் கொடுக்க வேண்டிய விலையைக் கணக்கிட்டால், அவர்களுக்கு ஆதாயம் ஒன்றுமில்லை. இருந்தாலும் வாழ்க்கையை அனுபவிப்பதற்கு அது ஒரு வழி; விலங்கு வேட்டையைக் காட்டிலும் உற்சாகமான, ஆவேசமான ஒரு பொழுது போக்கை, விளையாட்டை ஸ்பெயினில் அனுபவிக்கலாம்; சிறந்த சமுதாயத்தில் நுழையலாம்; தனது இளமைப் பருவத்

துக் கேற்ற முறையில் நாட்டுக்குப் பணிபுரியலாம். தீபகற்பப் போர் (Peninsular War) பல நல்ல ஆங்கிலேய அதிகாரிகளை நமக்குத் தந்தது; பல நல்ல மரபுகளை ரெஜிமென்டுகளில் ஏற்படுத்தியது. ஆயினும், அது ஓர் ஆங்கிலேய ராணுவ வகுப்பையோ அல்லது நிரந்தரமான படை அமைப்பையோ உண்டாக்கவில்லை. சமாதானம் ஏற்பட்டதும், நாட்டுப்புற இல்லங்களுக்கு மீண்டும் சென்று அவைகளின் பொறுப்பு களை நிர்வகிக்கவும் இன்பங்களைத் துய்க்கவும் பல படையதி காரிகள் ஆவலோடு விரைந்தனர். பலர் கிராமங்களில் தமது மதகுருப் பதவிகளுக்கும், நகரங்களில் நவநாகரிக வாழ்க் கைக்கும் அரசியலுக்கும் மகிழ்ச்சியோடு சென்றனர். பிரான்சு, ஸ்பெயின், பிரஷ்யா ஆகிய நாடுகளின் படை களைப் போல் இங்கிலாந்தின்படை, சிவில் அதிகாரத்தோடு போட்டிபோடும் ஓர் இராணுவம் அன்று; நாட்டை ஆளும் பிரபுவகுப்பினரில் சிலரது பகுதி நேரத் (part-time) தொழில் அது.[1]

நெப்போலியனுக்கெதிரான நீண்ட போரின்பொழுது இரு மாறுதல்கள் நிகழ்ந்தன; தேசத்தின் மிகவும் அவசிய மான அமைப்புகளில் ஒன்று என்றவகையில் நிலைப்படை யானது (standing army)கடைசியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. படைவீரர்கள் தங்குவதற்கு பாளையங்கள் (barracks) கட்டப்பட்டன. நிலைத்தபடியெல்லாம் பொதுவிடுதிகளில் படைவீரர்கள் தங்கிய காலம் முடிவுக்குவந்தது; இதனால் படைவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரிய நிம்மதி ஏற்பட்டது. அதே சமயத்தில் கவுண்டி மக்கட் படை (county militia) ஒரு பாதுகாப்பு அணி என்று கருதப்படுதல் நின்றுபோயிற்று; இனி, முறையான படைக்குப் பயிற்சிபெற்ற புது ஆட்களைத் தருகின்ற ஒரு 'ரிசர்வ்' படையாகவே அது பயன்படுத்தப்பட்டது. ஷயரின் 'சட்டப்படியான' மக்கட் படையிடம் நமது தீவின் பாதுகாப்பை ஒப்படைத்துவிட லாம் என்ற பழங்கருத்தும், 'நிலைப்படையானது' ஆபத்தான, தற்காலிகமான ஒரு கருவி என்ற கருத்தும் ஒரு நூற்றாண் டாகவே மறைந்துகொண்டிருந்தன; ஆனால், இப்பொழுது அது அடியோடு ஒழிந்துபோயிற்று.

[1]Levengro வின் முதல் அத்தியாயங்களில் ஜார்ஜ் பாரோ (George Borrow) வின் தந்தை வெகு அருமையாக வருணிக்கப்படுகிறார். படை வாழ்வையே தனது முழுநோக்கமாகக் கொண்டு, நவநாகரிகத்தில் சிறிதும் நாட்டம் காட்டாத அந்த அபூர்வவகைப் படையதிகாரிகட்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

வாட்டர்லூவுக்குப் பிறகு ஒரு சிறிய நிலைப்படையை அரசாங்கம் வைத்திருந்தது. ஆனால் மக்களிடையில் அதற்கிருந்த ஆதரவு போருடன் முடிந்துபோயிற்று. அரசியல் அமைப்புக்கு (Constitution) அது ஓர் ஆபத்து என்று கருதப்பட்ட காலம் போய்விட்டது. என்றாலும்கூட, அது ஒரு தேவையற்ற செலவு என்று கருதப்பட்டது; அக்காலத்தில் வளர்ந்துவந்த இராணுவ எதிர்ப்பு உணர்ச்சியின் பொருளாதார வாதம் அது. மேலும், அது பிரபுக்களின் ஒரு 'தனிச் சொத்து' என்ற விதத்தில், அப்பொழுது செல்வாக்குப் பெற்றுவந்த சீர்திருத்தவாதிகளால் வெறுக்கப்பட்டது; உண்மையில் அது அவர்களது சொத்தாகத்தானிருந்தது. ஆனால், அதைத் திருத்தி ஜனநாயக ரீதியாக்க வேண்டும் என்று அவர்கள் கோராமல், அதை அழிக்க வேண்டுமென்றனர். அது மட்டுமின்றி, படைக்குத் திரட்டப்படுவது ஓர் அவமானம் என்றும், வாழ்வில் தோல்வியுற்றுவிட்டதற்கான ஓர் அடையாளம் என்றும், மதிப்பான தொழிலாளர் வகுப்பினர் இன்னமும் கருதி வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு இங்கிலாந்து பலதலைமுறைகளுக்கு அந்நியப் படையெடுப்பைப்பற்றிக் கவலைப் படவேண்டியதில்லை; எனவே, தனது கடற்படை வலிமையுள்ளதா யிருக்கும் வரை, தரைப்படைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய தில்லை என்று அது கருதியது. தரைப்படையோ இன்னமும் பிரபுக்களின் ஒரு நிறுவனமாகவே இருந்துவந்தது; எனவே, நடுத்தர வகுப்பினரிடையிலும் தொழிலாளர்களிடையிலும் வளர்ந்துகொண்டிருந்த ஜனநாயக உணர்வுக்கு ஏற்புடையதாக அது இல்லை. ஐரோப்பாவில் வேறு நாடுகளின் மக்களைப்போல், இங்கு எந்த ஒரு மனிதனும் தன்னுட்டை ஆயுதமேந்திக் காக்கப் பயிற்சிபெற வேண்டும் என்று கோரமுடியாது. இதுதான் பிரிட்டிஷ்காரர்களின் சுதந்திரத்துக்குச் சான்று என்று கருதப்பட்டது. சுதந்திரம் பற்றிய இந்தப் புதிய விநோதமான இலக்கணம்'பெருஞ் செல்வமும் அமைதியும் அளித்த தீமை'.

அந்நிய ஆபத்து ஏதுமில்லாத அந்த நூற்றாண்டுகளில் இது மக்களின் எண்ணத்தில் நன்கு ஊறிப்போயிற்று; இதனால், இருபதாம் நூற்றாண்டில் முன்புஎப்பொழுதையும்விட மிகவும் அஞ்சத்தக்கவகையில் ஆபத்து மீண்டும் ஏற்பட்ட பொழுது இந்தக் கொள்கையிலிருந்து விடுபடுவது வெகு கடினமாயிருந்தது.

ஸ்பெயினில் வெலிங்டனின் போர்கள் பற்றிய செய்திகள் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டனவோ, அதே ஆவலோடு குதிரைப் பந்தயம், குத்துச்சண்டை ஆகிய வற்றில் யாருக்கு வெற்றிகிடைக்கும் என்பது பற்றிய அறிக்கைகளும் எதிர்பார்க்கப்பட்டன. சாலைகளும் போக்கு வரத்துச் சாதனங்களும் நன்கு அபிவிருத்தி யடைந்ததால் 'விளையாட்டுப் போட்டிகளில்' தல மக்கள் மட்டுமின்றி, நாடு முழுவதுமிருந்த ஏழைகளும் பணக்காரர்களும் ஆழ்ந்த அக் கறை காட்டினர். ஸ்டூவர்ட்டுகளின் காலத்திலிருந்தே அரச வம்சத்தின் ஆதரவின்கீழ்க் குதிரைப் பந்தயம் நன்கு வளர்ந்து வந்தது; அதேபோல் ஜார்ஜ் II-ன் ஆட்சியில் ஒழுங் கற்ற முறையில் காட்டுமிராண்டித்தனமாகத் தொடங்கிய குத்துச்சண்டைப் பந்தயமும் 'ரீஜன்சி (Regency) காலத்தில் விதிமுறைக்குட்பட்ட ஓர் ஆட்டமாக வளர்ந்து நாட்டினர் கவனத்தை வேறு எந்தப் பந்தயத்தைக்காட்டிலும் அதிக மாக ஈர்த்தது. இன்றைய இங்கிலாந்தின் நற்குணம் படைத்த ஜனநாயகத்தை, டெஸ்ட் பந்தயம் அல்லது ஒரு கோப்பைக்கான போட்டிப் பந்தயம் காண எல்லா வகுப்பு மக்கட்கூட்டமும் சமஉரிமையோடு கலந்து நிற் பதில் நாம் காண்கிறோம். அதேபோல் இன்னும் அதிக வேற்றுமைகளைக் கொண்ட சமூக அமைப்பையும், பண்பாடு குறைந்த பழக்கவழக்கங்களையும் அந்தக் காலத்துக் குத்துச் சண்டை மைதானத்தில் காணலாம். குத்துச்சண்டைப் பந்த யத்துக்கான தேதியும் இடமும் அறிவிக்கப்பட்டதும் தீவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள்கூட்டம் வண்டிகளிலும் குதிரைமீதும், கால்நடையாகவும் வந்து அங்குக் குவிந்தது. சிற்சில சமயங்களில் இருபதாயிரம் பேர்கள் கூடினர். ஒருவிதத்தில் இவ்வளவு பெருங்கூட்டம் திறந்தவெளி யில் கூடியது பொதுமக்களுக்குத் திருவிழாவாக இருந்தது. இங்கு இவைகட்கெல்லாம் தலைமைதாங்கியவர்கள் பிரபுக் கள்குடும்பத்தைச் சேர்ந்த நவநாகரிக மனிதர்கள். இந்தக் கட்டுக்கடங்காத, மூர்க்கத்தனமான கூட்டத்தை அச்சத் தால் அடக்கி ஆண்டவர்கள் இவர்கள்தாம். நவநாக ரிகமும் அந்தஸ்தும் படைத்த இம் மனிதர்களே குத்துச் சண்டைக்காரர்களை வாடகைக்குப் பிடித்துவந்து, இந் நிகழ்ச்சிகளை நடத்தினர். 'தண்டனையைக்' கொடுப்பதும் வாங்குவதுமே தொழிலாகக்கொண்ட, உடற்கட்டு மிக்க இந்தக் 'காயக்காரர்களில்' சில ரவுடிகளும்கூட இருந்தனர். ஆனால், இப் பந்தயங்களில் உண்மையில் வெற்றிவாகை சூடிய மனிதர்கள் நற்குணமும் மதிப்பும் நிறைந்தவர்கள்.

ஜார்ஜ் II-ன் காலத்தில் வாழ்ந்த, பிரிட்டிஷ் குத்துச்சண்டை யின் தந்தை எனப் புகழப்படும் பிரௌட்டன், (Brougton) பிற் காலத்தில் வாழ்ந்த பெல்ச்சர்(Belcher),டாம்கிரிப்(Tom Cribb), டாம்ஸ்பிரிங் (Tom Spring) போன்றவர்கள் இவர்களில் சிலர். இவர்களைக் கோச்சுவண்டியிலும் 'கிக்' (gig) வண்டியிலும் தம்முடன் ஏற்றிக்கொண்டு நாலுபேர் பார்க்கப் பந்தய மைதா னத்துக்குச் செல்வதில், இவர்களை ஆதரித்த பிரபுக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. இதேபோல் பந்தயக் குதிரைகளை வைத் திருந்தவர்களும் இந்த நவநாகரிக மனிதர்களே; பிரபுக் களின் ஆதரவு இருந்திராவிடில் இந்த விளையாட்டு நிகழ்ச்சி கள் தங்களது ஆவேசத்திலும் கவர்ச்சியிலும் பாதியை இழந்துவிட்டிருக்கும்; மிருகத்தனமும் சூதுவாதும் நிறைந்த கீழ்த்தரமான பந்தயங்களாக இவை ஆகிவிட்டிருக்கும். ஏனென்றால், சண்டை வளையத்தைச் (ring) சுற்றியிருந்த கீழ்த்தரமான பந்தயக்காரர்களில் கொலைகாரனை தர்ட்டெல் (Thurtell) போன்ற பலர் இருந்தனர்.

குதிரைப் பந்தயத்திலும் குத்துச்சண்டையிலும் பெருந் தொகையான பணத்தை மக்கள் பணயம் வைத்தனர். இந் நிலையில் இப் பந்தயங்களை ஓரளவு நேர்மையுடன் சூதில்லா மல் நடத்துவது பிரபுக்களுக்கு வெகு கடினம். உதாரண மாகப் பிரபுக்கள் கூடி அமைத்திருந்த ஜாக்கிக் கிளப்பின் (Jockey Club) கட்டுப்பாடு இல்லாமலிருந்தால் குதிரைப் பந்தயம் வெறும் சூதாட்டமாக மாறி மறைந்துபோயிருக்கும். விக்டோரியா ஆட்சியின் முதல்ஆண்டுகளில் குத்துச் சண்டைக்கு இந்தக் கதிதான் ஏற்பட்டது; ஏனெனில் 'குறுக்குச்' சண்டையும் ('cross' fighting) வெற்றிக்கு விலை கொடுப்பதும் சர்வசாதாரணமாய்விட்டன. அக்காலத்தில் வளர்ந்துவந்த மனிதாபிமான உணர்வும் சமயப்பற்றும்கூட குத்துச்சண்டைப் போட்டியின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம். மிருகங்களைப் பந்தயத்தில் சண்டையிட வைப்பதையே பொறுக்காமல் தடைசெய்த அக்காலம், மனிதர்கள் காசுக் காகக் குத்துச்சண்டையிடுவதையா அனுமதிக்கும்? சமீபத் தில் மீண்டும் உயிர்பெற்ற இவ்விளையாட்டில் வலியைக் குறைக்கக் கையுறை வந்துள்ளது; இது இன்னும் ஜனநாயக ரீதியானது; இது பெருமளவில் அமெரிக்காவில் முதலில் நடைபெற்றது; பிறகு உலக முழுவதும் பரவியது. கவர்ச்சி மிக்க ஜார்ஜ், ரீஜன்டாகவும் நவநாகரிகத்தின் தலைவராகவும்

இருந்த காலத்தில் ஆங்கிலேயக் குத்துச் சண்டைக்கிருந்த அந்த விசேஷத்தன்மை இதற்கில்லை.[1]

ஆங்கிலேயர்களிடையில் மிகவும் பிரசித்திபெற்ற விளையாட்டாக இது இருந்தபோது, அவர்களில் சாதாரணமானவர் கூட வாய்ச்சண்டை ஆரம்பித்த உடனேயே கைவிரல்களை மடக்கிக்கொண்டு ஒருவரை யொருவர் குத்தத் தொடங்கியது அப்பொழுது சர்வ சாதாரணமான நிகழ்ச்சி; இதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. Lavengro, Pickwick Papers ஆகியவற்றைப் படித்தவர்கள் இதை நன்கு அறிவர். மேலும் இளைஞரான டிக்கன்ஸ்கூட, தம் ஆளை ஒரே குத்தில் கீழே வீழ்த்தும் சிறந்த திறமையை சாம்வெல்லருக்கு (Sam Weller) அளிக்காமல், மக்களுக்கு மிகவும் பிடித்தமான அந்தப் பாத்திரத்தைப் 1836-ல் உருவாக்கியே இருக்க முடியாது.

அந் நூற்றாண்டு செல்லச்செல்ல, அப்பொழுது வளர்ந்து வந்த மனிதாபிமானஉணர்வும் எவஞ்சலிய சமயமும் மதிப்பான வாழ்க்கையும் ஒன்றுசேர்ந்து குத்துச்சண்டையை முடிவுக்குக் கொண்டுவந்த அதே சமயத்தில், டியூவெல் (duel) சண்டையையும் குறைத்து இன்னும் பெரியதொரு

[1]மதிப்புக்கும் நற்பண்புகளுக்கும் உறைவிடமாக விளங்கிய ஆல்தார்ப் பிரபு (Lord Althorp) தமது முதுமைக் காலத்தில் குத்துச்சண்டை 'பெருங் கீர்த்திபெற்று விளங்கிய அக்காலத்தைப்பற்றி' ஒரு நண்பருக்கு விளக்கினர்; குத்துச்சண்டையில் பல நன்மைகள் உண்டு என்று அவர் உறுதியாக நம்பினர். எனவே, ஒவ்வொரு பந்தயத்துக்கும் செல்வது தனது சமூகக் கடமையல்லவா என்பதைப்பற்றித் தீவிரமாக ஆலோசனை செய்தார். ஆண்மை மிக்க குத்துச்சண்டைப் பழக்கம் எதிர்க்கப்படுவதால் தான் கத்திக்குத்துச் சம்பவங்கள் நிகழ்கின்றன என்பது அவரது கருத்து. தான் பார்த்த குத்துச்சண்டைப் பந்தயங்களை அவர் எங்களுக்கு வருணித்தார்; ஹம்பிரீஸால் முதல்ஐந்து அல்லது ஆறு சுற்றுகளில் மென்டோசா வீழ்த்தப்பட்டார்; தோற்றுவிட்டார் என்றே தோன்றியது; யூதர்களுக்குப் பணம் கிடைத்தது; ஒரு சைகை கொடுக்கப் பட்டதும், அவர் தீவிரமாகப் போராட ஆரம்பித்து, விரைவிலேயே வெற்றிபெற்றார். கல்லிக்கும் சிக்கனுக்கும் (Gully and Chicken) நடந்த ஒரு பந்தயத்தையும் அவர் வருணித்தார். அவர் குதிரைமீதேறி எவ்வாறு பிரிக்ஹில்லுக்குச் சென்றார் என்பதையும், அவர் எவ்வாறு விடுதிக்கு வெளியே உலவிக்கொண்டிருந்தார் என்பதையும், அப்பொழுது நான்கு குதிரை பூட்டிய வண்டியில் பைரன்பிரபுவும் குத்துச்சண்டை ஆசிரியர் ஜேக்சனும் ஒரு குத்துச்சண்டைக்காரர் குழுவும் வந்தனர் என்பதையும், அவர்கள் எல்லோரும் எப்படிச் சாப்பிட்டனர் என்பதையும், அது எவ்வளவு ஆனந்தமாக இருந்தது என்பதையும் நன்கு வருணித்தார். அடுத்தநாள் சண்டை; பயில்வான்கள் உடையைக் கழற்றுதல், கூட்டத்தில் ஒரே ஆரவாரம், பிறகு சண்டை; முதல் சுற்றில் பயில்வான்களின் போக்கு—ஹோமர் இல்லாமல் போய்விட்டாரே!'

பணியாற்றின. பதினெட்டாம் நூற்றாண்டில் டியூவெல் சண்டை கத்தியைக்கொண்டு போடப்பட்டது; பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ கைத்துப்பாக்கி (pistol) உபயோகிக்கப்பட்டது. உதாரணமாகக் காப்டன் மார்க்கரை (Capt. Marker) வீழ்த்துவதற்கு இராவ்டன் கிராவ்லி (Rawdon Crawley) ஒரு கைத்துப்பாக்கியைத்தான் உபயோகித்தார். பிரபுத்துவகாலம் மறைந்து பூர்ஷ்வாக்காலம் வந்துகொண்டிருந்தது; இராணுவ மனப்பான்மை போய்ச் சாதாரணவாழ்வு வந்தது; 'தீவிர' சமய உணர்வுகள்—அதே சமயம் அறிவுக்குகந்த பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல்—மேலோங்கின. எனவே, டியூவெல் சண்டை சிறிதுசிறிதாகக் குறைந்தது. ஆனால், மாறுதல் உண்மையில் ஏற்படத் தொடங்கியது சீர்திருத்த மசோதா கொண்டுவரப்பட்ட காலத்தில்தான். அரசியல் வல்லுநர்கள் தங்களது அரசியல் விரோதிகளுடன் இன்னும் சண்டைபோட்டே வந்தனர். 1829-ல் பிரதம மந்திரியாக இருந்த, 'பழைய காலத்து ஆசாமி'யான வெலிங்டன், விஞ்சில்சீ பிரபுவுக்குச் (Lord Winchilsea) சவால் விடுத்து, ஒரு தடவை அவரை நோக்கிச் சுட்டபின்தான் ஆறுதலடைந்தார். அதேபோல் பிட் (Pitt), டயர்னியுடனும் (Tierney) கானிங் (Canning), கேசல்ரீயுடனும் (Castlereagh) துப்பாக்கி ரவை பரிமாறிக் கொண்டார்; ஆனால், விக்டோரியாவின் ஆட்சியில் பிரதம மந்திரியும் மற்றப் பெரியவர்களும் சுயக்கட்டுப்பாட்டோடு நடந்துகொண்டனர்; ஏனெனில் பொதுநடத்தை நெறிகள்பற்றிய கருத்து அப்பொழுது மாறிவிட்டது; தமது கௌரவத்தை அத்தகைய மடத்தனமான முறைகள் மூலம் காக்கவேண்டும் என்ற எண்ணம் போய்விட்டது.

அந் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில், மக்களுக்குப் பரவசமூட்டிய கலையானது 'வண்ண அச்சுப் படங்களில்' (coloured print) தனது உச்சக்கட்டத்தை எட்டியது. இன்று புகைப்படமும் சினிமாப்படமும் நமது காலத்து மக்களின் மனத்தையும் கற்பனையையும் ஆட்டிப்படைப்பது போல், வண்ண அச்சுப்படங்கள் அன்று செய்தன. கடைச் சன்னல்களில் 'வண்ணக் கேலிச் சித்திரங்கள்' (coloured cartoons) நிறைந்திருந்தன. அவைகள் அரசியலையும் தனி மனிதர்களையும் கடுமையாகவும் கேவலமாகவும் சித்தரித்தன. கில்ரேயின் (Gillray) பேதைமையையும், ரௌலண்சனின் (Rowlandson) ஆவேசமான சமூக நையாண்டியையும் அவைகளில் காணலாம். வழக்கமான வீரச்சுவை மிகுந்த வகையில்

தீட்டப்பட்ட வேறு ஓவியங்கள் தீபகற்பப் போரையும், ஐரோப்பாவெங்கும் நடந்த போர்களில் சில நிகழ்ச்சிகளையும் வருணித்தன; ரஷ்யப்பனியில் உறைந்துகிடக்கும் பிரெஞ்சுக் காரர்களையும், எதிரியுடன் போராடும் நமது கப்பல்களையும் அவைகள் மக்களது கண்முன் கொண்டுவந்து நிறுத்தின. ஆக்கர்மனின் (Ackermann) அழகிய அச்சுப் படங்கள் (prints) அமைதியான நிறங்களில் ஆக்ஸ்போர்டு, கேம் பிரிட்ஜ் கல்லூரிகளின் இனிய எளிய பெருமிதத்தை நன்கு புலப்படுத்தின.

இவைகளுக்கு மேலாக, இந்தியாவிலும் ஆப்பிரிக்கா விலும் காட்டுவிலங்குவேட்டை முதல், நம் நாட்டின் பல் வேறு விளையாட்டுகள், சாலைப்பிரயாணம்வரை பலவகை யான பொழுதுபோக்குகளையும் இவ் வண்ணஅச்சுப் படங் கள் சித்தரித்தன. அக்காலத்திய மக்களின் வாழ்வையும் உணர்வையும் இத்தகைய படங்கள் மூலமே நாம் அறிந்து கொள்கிறோம். இவைகள் இன்றும் அருமையாகக் காத்துப் போற்றப்படுகின்றன; மீண்டும் அச்சிட்டு வெளியிடப் படு கின்றன. விடுதியின் வாயிலிலிருந்து கோச்சுகள் புறப்படு வதை இப்படங்களில் நாம் பார்க்கிறோம்; தபால்கோச்சு வண்டிக்காரனுக்கு அருகில், விலைமிக்க தனது மதிப்பான ஆசனத்தில் இளம் டம்பாச்சாரி உட்கார்ந்துகொண்டிருக் கிறான்; கொழுத்த நடுவயதான வியாபாரி உடல் முழுவதை யும் நன்கு ஆடையால் போர்த்திக்கொண்டு பின்னசனத்தில் அமர்ந்திருக்கிறான்; எல்லாவற்றுக்கும் பின்னல் சிவப்புஉடை தரித்த காவலாளி இருக்கிறான். அடுத்தது ஒரு சாலைக்காட்சி; பயணவண்டிகள், 'கிக்'குகள் (gigs), நாய்வண்டிகள் (dog-carts) ஆகியவை ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு பறக்கின்றன; அடுத்து, மகாடம் (Macadam) முறைப்படி அமைக்கப்பட்ட கடினமான, மேடுபள்ளங்க ளற்ற, சமமான சாலையில் கோச்சுப் போகிறது. இன்னென் றில் வெள்ளம் அல்லது பனிமழையினால் பயணம் தடைப்படு கிறது. உயர்ந்த தொப்பியணிந்த வேட்டைக்காரர்கள் தமது நாய்கள் சுட்டிக்காட்டிய விடத்தில் கவுதாரிகளை நெருங்கித் துப்பாக்கிஏந்தி வருகிறார்கள். நாய்கள் புதரி லிருந்து வான்கோழிகளை விரட்டுகின்றன. காட்டு வாத்து, அன்னம் முதலிய காட்டுப்பறவைகளைத் தேடி உடற்கட்டு மிக்க வேட்டைக்காரர்கள் பனிக்கட்டியிலும் பனிமழையிலும் ஈரம் சொட்டச்சொட்ட நடக்கிறார்கள். பிறகு, வேட்டை நாய்கள் மிருகத்தைத் துரத்தி ஓடிக்கொண்டிருக்கின்றன

சிவப்புக் கோட்டு அணிந்த பிரபுக்கள் வேட்டைக்குக் கிளம்புகின்றனர்; வயல்களில் வேலிகள் அமைக்கப்பட்டுவிட்டன; வடிகால்கள் அமைக்கப்பட்டுவிட்டன; எனவே, அவர்களது வேலி வரிசைகளும் கால்வாய்களும் தடைசெய்கின்றன; குதிரைகள் இவைகளைக் குதித்துத் தாண்டும் பொழுது வேட்டைக்காரப் பிரபுக்களின் மயிர்க்கால்களில் புல்லரிப்பு ஏற்படுகிறது; மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது.

அக் காலத்திய விளையாட்டுகளிலும் வேட்டையிலும் ஆடம்பரமோ பொருட்செலவோ ஒன்றுமில்லை. கடுமையான பயிற்சியும் கட்டுப்பாடுமிக்க பழக்கவழக்கங்களும் தாம் இவைகட்கு மிகவும் தேவை. ஆங்கிலேய உலகின் தலைமைமனிதர்கள் இவைகளில் பெரும் அக்கறை காட்டினர்கள்; எனவே, மைதானங்களையும் வேட்டைக்காடுகளையும் நோக்கிச் சென்றார்கள். இதன் விளைவாக, அன்று கவிதையிலிருந்து குத்துச்சண்டைவரை எல்லாவற்றுக்கும் உருவம் கொடுத்துவந்த அந்த வகுப்பினரிடையில் காடு, வேலி வரிசை, புதர்நிலம் ஆகியவைபற்றிய அறிவும், அவைகளின்மீது ஒரு நெருக்கமான அன்பும் வளர்ந்தன. நகர வாழ்வைவிட நாட்டுப்புற வாழ்வை இவர்கள் விரும்பியதற்கும் இதுவே வகைசெய்தது. இத்தகையதொரு விருப்பத்தை வேறு எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் நவநாகரிகத்தின் தலைவர்களிடையில் காண்பது அரிது.

ஆகவே, துப்பாக்கிஏந்தி வேட்டைக்குச் செல்வதில் பிரபுக்களுக்கிருந்த விருப்பமே நமது நாகரிகத்தில் மிகச் சிறந்த அம்சங்களுக்கு மறைமுகமாக உதவியது. ஆனால், பிறரது வயல்களிலும் காடுகளிலும் அத்துமீறி நுழையும் வழக்கத்துடனும், அடுத்த நிலத்துக்காரர்களுடன் சதா சண்டையும் சச்சரவும்கொண்டு வாழ்வதுடனும்கூட இது தொடர்புள்ளது. 'வேட்டை' பற்றிய சட்டம் மிகவும் சுயநலத்துடன், பிரபுக்களுக்கு மட்டுமே ஏற்றவகையில் இருந்தது. ஏழைகள் மட்டுமின்றி, பிரபுக்களல்லாத வேறு எல்லோருமே இதனால் பாதிக்கப்பட்டனர். வேட்டை விலங்குகளை யாரும் விற்பதும் வாங்குவதும் சட்ட விரோதமாக்கப்பட்டது. இதன் விளைவாக, அத்துமீறிப் பிறரது காடுகளில் வேட்டையாடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் விற்ற வேட்டை மிருகங்களின் விலை ஏறிப்போயிற்று; சட்டப்படி ஒரு கனவான் (squire) அல்லது கனவானின்

மூத்தமகன் மட்டுமே வேட்டைவிலங்கைக் கொல்லலாம்; வேறு யாரும், அவ் விலங்குகளின் சொந்தக்காரர்களது அனுமதிபெற்றுக்கூட அவைகளைக் கொல்லக்கூடாது. இந்தத் தொந்தரவுமிக்க சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு 'பிரதிநிதித்துவம்' (deputation) என்ற ஒரு வழி உண்டாயிற்று. எனவே, 1831-ல் விக்குக் கட்சி இச் சட்டத்தை நீக்கியது; வெலிங்டன் பிரபுவின் எதிர்ப்பு ஒன்றும் பலிக்கவில்லை. வேட்டைவிலங்குகள் இங்கிலாந்தில் உயிருடனிருப்பதற்கு இக் கட்டுதிட்டங்கள் இன்றியமையாதவை என்று அவர் உறுதியாக நம்பினார்; அரசியலில் கனவான்கள் தொடர்ந்து நீடிப்பதற்கு, சிதைந்த பரோக்கள் (rotten boroughs) இன்றியமையாதவை என்று எண்ணியவரும் கூட இவர் தானே! இவ்விரண்டு விஷயங்களிலும் இவர் கொண்டிருந்த கருத்துகள் ஆதாரமற்றவை என்பதை எதிர்காலம் நிரூபித்தது.

1816-ல் ஒரு புதிய சட்டம் வந்தது; அதன்படி, தனது பசியை ஆற்றிக்கொள்ள ஒரு முயலையோ அல்லது குறு முயலையோ பிடிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்ற ஓர் ஏழை, இரவில் தனது வலையுடன் பிடிபட்டால் ஏழு ஆண்டுகள் அவன் நாடுகடத்தப்படுவான். நகரங்களிலிருந்து ஆயுத மேந்திய போக்கிரிகள் கும்பல்கும்பலாக வந்து கனவான்களின் காடுகளில் அத்துமீறி நுழைந்து வேட்டையாடினர்; தங்களை எதிர்த்த கனவான்களோடும் அவர்களது ஆட்களோடும் பக்கத்துக்கு இருபதுபேராக நின்று துப்பாக்கியோடு போர் புரிந்தனர். இத்தகைய ஆட்களைப்பற்றி நாம் இரக்கப்படத் தேவையில்லை. ஆனால், அத்துமீறியதால் நடக்கும் சண்டைகள் தீவிரமாக வளர்ந்துவிட்டன.

இதில் மிகவும் வருந்தத்தக்க ஒரு முறையும் இருந்தது. வான்கோழிகள் (pheasant) நிறைந்த காட்டுப்பகுதியைக் காப்பதற்காக மனிதப்பொறிகளையும் (mantraps), சுழல் துப்பாக்கிகளையும் (spring-guns) புதர்களில் ஒளித்துவைப்பது வழக்கம்; அத்து மீறிய பலர் இந்த மரண இயந்திரங்களில் மாட்டிக்கொண்டனர்; ஆனால் வேறு அலுவலாக அப்பக்கம் சென்ற அப்பாவிகளும்கூட பல சமயங்களில் கால்களை இழந்தனர்; அல்லது கொல்லப்பட்டனர். இந்தக் கொடிய முறை சட்டப்படியானதே என்று ஆங்கிலேய நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். இறுதியில் 1827-ம் ஆண்டில் இது சட்ட விரோதமாக்கப்பட்டது. வேட்டைவிலங்குகளைக் காக்க

வேண்டுமென்று உறுதியாகப் போராடிய மனிதர்கள்கூட எதிர்க்கமுடியாத அளவுக்கு மனிதாபிமான உணர்வு உரம் பெற்றுவிட்டது; பிறகு, அவர்களை எதிர்த்து வேட்டைச் சட்டங்கள் விஷயத்தில் அது பல பெரும் வெற்றிகளை எய்திற்று. இச் சட்டங்கள் கொஞ்சங்கொஞ்சமாகத் திருத்தப் பட்டுத் தம் கடுமையான தன்மையை இழந்து, மேலும் நியாய மான முறையில் அமுலாக்கப்பட்டன; இதனால் வேட்டை விலங்குகளைக் காக்கும் வேலையும் எளிதாயிற்று; கொடிய பழக்கங்களும் குறைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டு செல்லச்செல்ல யாகோபிய எதிர்ப்பு மனப்பான்மை மறைந்துவந்தது; மனிதாபிமான உணர்வும் வாழ்வில் ஒவ்வொரு துறையாகப் பரவிவந்தது. கடந்த காலத்துக் கொடிய, மிருகத்தனமான போக்குகளும் நடைமுறையும் தணிவுற்று, இதயத்தில் அன்புஊற்றுப் பெரு யது; சிற்சில சமயங்களில் கண்களை மறைக்கும் அளவுக்குக் கூட இந்த உணர்ச்சிப்பெருக்கு அதிகரித்தது. மக்களிடத் தில் காணப்பட்ட இந்தப் புதிய உணர்வையும், அதன் பலத் தையும் பலவீனத்தையும் சிறப்பாக உருவகப்படுத்திக் காட்டியவர் மேதை சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens). அந் நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டுகளில் இலண்டன் தெருக்களில் கொடுமைகள் பலவற்றையும் அனுபவித்த டிக்கன்ஸ் ஓர் உணர்ச்சிமிக்க மனிதராக வளர்ந்தார். அந்தப் பத்தாண்டுகளில்தான் எண்ணற்ற குற்றங்களுக்குக் கொலைத்தண்டனை விதித்த அந்த 'அரக்கச் சட்டம்' ரத்து செய்யப்பட்டு வந்தது. இதற்கு முக்கியக் காரணம் ஜூரிகள்; தூக்குத்தண்டனை விதிக்கவேண்டுமே என் பதற்காக திருட்டுக்குற்றம் செய்த பலரை இவர்கள் தண்டிக்க மறுத் தனர். எல்டனின் (Eldon) காலம் கழிந்துகொண்டிருந்தது; பெந்தாம், (Bentham), புரோகம் (Brougham) ஆகியோரின் காலம் வந்துகொண்டிருந்தது. நீக்ரோ அடிமை முறையை ஒழிப்பதற்கான இயக்கம் மனிதர்களின் உணர்ச்சியையும் ஆர்வத்தையும் நன்கு தூண்டியது; 'கருப்புச் சகோதரன்' விஷயத்தில் அதிகமான உணர்ச்சியும் கூட சில சமயங்களில் காட்டப்பட்டது.

மனிதனின் உணர்ச்சிகளில் ஏற்பட்டு வந்த இம் மாறுதல் கள் ஒரு குறிப்பிடத்தக்க, பெரும் முன்னேற்றத்தைக் குறித் தன. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதிரமுதிர, வாழ்வின் எல்லாச் செயல்களிலும், குறிப்பாகக் குழந்தைகளை நடத்தும்

விஷயத்தில், மனிதஉணர்வு விரிவாகக் காணப்பட்டது. இயந்திரத்துறை முன்னேற்றம்பற்றிப் பெருமையடித்துக் கொள்கிறோமே, அதைவிடவும் அதிக முன்னேற்றம் மனித உணர்வில் ஏற்பட்டது; இதைக் குறித்து பத்தொன்பதாம் நூற்றாண்டு அளவுகடந்த பெருமையடையலாம்; ஏனென்றால் இயந்திரமானது தவறுகப் பயன்படுத்தப்பட்டால் மனிதஉணர்வையும் மனிதஇனத்தையும் அழித்துவிடக் கூடும்.

17. இரண்டு சீர்திருத்த மசோதாக்களுக்கு இடையில் (1832-1867)

1832-ம் ஆண்டின் மாபெரும் சீர்திருத்த மசோதாவுக்கும் (Great Reform Bill) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கும் இடைப்பட்ட காலத்தை விக்டோரியாக்காலம் (Victorian Age) என்றும் கூறலாம்; ஆனால் இக்காலத்தில் பொருளாதாரச் சூழ்நிலையிலும் சமூகவழக்கங்களிலும் அறிவுத்துறையிலும் துரிதமான மாற்றம் சதா ஏற்பட்டுக் கொண்டேயிருந்ததால், இந்த எழுபதாண்டுகளில் அறுபதாண்டுகளுக்கும் மேலாகப் 'பேரரசியால்' (1837—1901) ஆளப்பட்டது என்ற ஒரே காரணத்தைக்கொண்டு, இக்கால முழுவதுக்கும் ஓர் ஒத்ததன்மை யிருந்தது என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. இங்கிலாந்தில் விக்டோரியா ஆண்ட காலத்தில் உண்மையான ஓர் ஒருமைப்பாட்டைக் காணவேண்டுமென்றால் அன்று நிலவிய இரண்டு முக்கிய நிலைமைகளில் அதைக் காணலாம். முதலாவது, ஏதாவது பெரிய ஒரு போரோ அல்லது அன்னியப் படையெடுப்புப் பற்றிய அச்சமோ அப்பொழுது இல்லை; இரண்டாவது, அக் காலம் முழுவதும் சமயப் பிரச்னைகளில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது; சிந்தனையில் தீவிரமும் நடத்தையில் சுயக்கட்டுப்பாடும்—இவை பியூரிட்டானியத் தன்மையினால் விளைந்தவை—அக் காலத்தின் இயல்பைப் பெரிதும் மாற்றின. இந்தத் 'தீவிரமானது'' 'அறியொணாக் கொள்கையினரைக்'கூட (agnostics) பீடித்தது; எவ்வாறெனில், இவர்கள் இக்காலத்தின் இறுதியில் கிறிஸ்தவசமயத் தத்துவங்களை—நீதி நெறிகளையல்ல—எதிர்த்தனர்; டார்வினிசம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஆகியவைகள் இவர்களது வெற்றிகளை அதிகரித்தன. மேலும், ஒரு புதிய ஞானத்தைக் கண்ட எவஞ்சலியர்களால் துவக்கி வைக்கப்பட்ட உயர்திருச்சபை (High Church) இயக்கம், இந்தப் பியூரிட்டானியத் தன்மையைத் தானும் பெற்றது.

இந்த வகையைச் சேர்ந்த ஆங்கிலோ-கத்தோலிக்கரான திரு. கிளாட்ஸ்டன் கன்பார்மிஸ்ட்டல்லா ஆதரவாளர்களது உள்ளத்தைக் கவர்ந்தார்; ஏனென்றால் சொற்பொழிவாளர், கேட்போர் ஆகிய இருபாலாருமே வாழ்க்கை (அரசியல், அயல்விவகாரக் கொள்கை ஆகியவையும் இதில் அடங்கியவையே) என்பது தமது சொந்த சமயத்தின் ஒரு கிளையே என்று கருதினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிஎழுபது ஆண்டுகள் முழுவதும் புதிய புதிய சமூகப்பணிகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டு வந்தது; மக்கள் நெருக்கம் அதிகரித்த நமது தீவின் புதிய தொழில்நிலைமைகள் இதை அவசியமாக்கின. ஆயினும், அச் சூழ்நிலை முக்கியமானதுதான் என்றாலும் விக்டோரியாக் காலத்தின் உண்மையான பலத்துக்கும் மகிழ்ச்சிக்கும் முக்கியமான காரணம் அதுவன்று; ஆங்கிலேயனின் சுயக்கட்டுப்பாடும் தன்னம்பிக்கையும் பிறரை எதிர்பார்க்காத தன்மையும்தாம் முக்கியமான காரணம். இவ்வியல்புகள் பலவகையில் ஏற்பட்டன; என்றாலும், வெஸ்லிய இயக்கமும் எவஞ்சலிய இயக்கமும் மறுவாழ்வளித்த, அந்தப் பியூரிட்டானிய மரபுகளிலேயே இவை பெரும்பாலும் ஏற்பட்டன. எல்லா வகுப்புகளையும் சேர்ந்த சிறந்த முக்கியமான மனிதர்களும் 'தன்னுதவி' (Self-help) என்பதையே தமது தாரக மந்திரமாகக் கொண்டிருந்தனர். ஆனால், இருபதாம் நூற்றாண்டிலோ சுயக்கட்டுப்பாடும் தன்னுதவியும் அவ்வளவாகக் காணப்படவில்லை. அரசாங்கமே சமூகமேம்பாட்டுக்கு வேண்டியதனைத்தையும் செய்யவேண்டும் என்ற ஒரு கோரிக்கை முற்காலத்தில் தன்முயற்சிக் கொள்கைகளின் இடத்தை இன்று பற்றிக்கொண்டது. விஞ்ஞானம் பழைய சமய நம்பிக்கையைக் குறைத்துவிட்டது; ஆயினும், இப்பொழுதுகூட இங்கிலாந்தின் பலத்தையும் பலவீனத்தையும் புரிந்துகொள்வதற்கு, அதன் சமய வரலாற்றைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்துகொள்வது இன்றியமையாதது. இரு ஜெர்மானியப் போர்களுக்கும் (1919–1939) இடைப்பட்ட இருபதாண்டுகளில், நமது அயல்விவகாரக் கொள்கையும் படைக்குறைப்புக் கொள்கையும் அறஉணர்வின் அடிப்படையில் அமையவேண்டும் என்று சிலரால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தனிமனிதனின் நடத்தையில் இது எதிர்பார்க்கப்படுவது குறைந்துபோயிற்று. இப்படி எதிர்பார்த்தவர்கள் விக்டோரியாக் காலத்து சமயநெறிகளின் சந்ததிகள். இவர்கள் மற்ற ஐரோப்பிய தேசங்களின் கொள்கைகளைக்

கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. பியூரிட்டானியக் கொள்கைகளை எப்பொழுதுமே கொண்டிராத அத் தேசங் களில் அறஉணர்வுக்கும் அரசியலுக்கும் யாதொரு தொடர் பும் இருந்ததில்லை.

நெப்போலியப் போர்களின்போதும், சமாதானம் ஏற் பட்ட பின் வந்த பத்தாண்டுக் காலத்திலும் நிறுவப்பட்ட திருச் சபையின் ஓர் அங்கமாக எவஞ்சலிய மதகுருக்கள் ஆயினர். திருச்சபையின் வேறு அங்கங்களில் காணப்படாத ஒரு புதிய உயிர்த்துடிப்பையும் ஆர்வத்தையும் அவர்கள் கொண்டுவந் தனர். கேம்பிரிட்ஜில் கிங்ஸ் கல்லூரியின் ஃபெலோவும் (Fellow of King's), ஹோலி டிரினிட்டி ஆலயத்தின் குருவு மாகிய (Minister of Holy Trinity Church) சார்லஸ் சிமியோன் (Charles Simeon) தமது வாழ்நாள் முழுவதையும், எவஞ்சலியர்களின் சமயப்பிரசார ஆர்வத்துக்கும் திருச்சபை யின் கட்டுப்பாடுகளுக்கும் இடையில் ஓர் இணக்கத்தை ஏற் படுத்துவதிலேயே கழித்தார்; நல்ல வெற்றியும் பெற்றார். சிமியோன்மட்டும் இல்லாமலிருந்தால் எவஞ்சலியக் குருமார் கள், டிஸ்ஸென்டர் பிரிவை நோக்கியே தொடர்ந்து நகர்ந்து, அதில் போய்ச் சேர்ந்துவிட்டிருப்பர்; ஏனெனில் பாரிஷ் முறையையும் திருச்சபையின் கட்டளைகளையும் மீறி, வெஸ்லி யின் உதாரணத்தைப் பின்பற்றி ஊர்ஊராகச் சுற்றிப் பிரச் சாரம் செய்வதற்கு அதுவே ஏற்றது. இந்த இயக்கம் தொடர்ந்து இந்த நூற்றாண்டிலும் நீடித்திருக்குமேயானால், 1830-40-ல் 'சீர்திருத்தப் புயல்' பெரும் ஓலத்துடன் வீசிய பொழுது இங்கிலாந்தின் திருச்சபை ஒருவேளை சரிந்துவிட் டிருக்கும். ஆனால், டிஸ்ஸென்டர்களுடன் தாங்கள் நட்புக் கொண்டிருந்த அதே சமயத்தில் சிமியோனைப் பின்பற்றிய மதகுருமார்கள், திருச்சபையையும்கூட உறுதியாகக் காத் தனர்; ஆன்மாக்களைக் கரையேற்றும் திருச்சபையின் பணி இவர்களால்தான் புத்துயிர்பெற்றது.[1]

எவஞ்சலியர்கள் நீங்கலாகத் திருச்சபை முழுவதுமே ஜார்ஜ் III-ன் ஆரம்பஆண்டுகளில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே ரீஜன்சி காலத்திலும் இருந்தது; ஒரேஒரு வேறு பாடு என்னவென்றால், அதன் லாடிடூடினேரிய பரந்த மனப் பான்மை, யாகோபிய எதிர்ப்பு வைதீகமாகப் பரிணமமடைந்

[1]Simeon and Church Order, Canon Charles Smyth's Birkbeck Lectures, Cam. Press, 1940.

திருந்தது; சிமியோன்வாதிகள் புகுத்தியது தவிர வேறு எவ்வித ஆன்மீகவிழிப்பும் அதில் காணப்படவில்லை. மேலும் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்ததைப் போன்றே இப்பொழுதும் நிறுவப்பட்ட திருச்சபையின் மதகுருக்களிடையில் பணக்காரர் ஏழை என்ற வேற்றுமை மிகத் தெளிவாக இருந்தது. பிஷப்புகள், கதீட்ரல் குருக்கள், பாரிஷ் பாதிரிகளில் பணம் படைத்தவர்கள் ஆகியோர் 'அனுபவிக்கும்' வகுப்பைச் சேர்ந்தவர்கள்; பதவியுயர்வு, சலுகைகள் ஆகியவை திருச்சபைக்கு ஆற்றும் இவர்கள் வேலைக்காகக் கொடுக்கப்படுவதில்லை; இவர்களது பிரபுக்குடும்ப அந்தஸ்துகள் அல்லது சிபாரிசு மூலம் தரப்பட்டன. பாரிஷின் வேலைகளை இவர்கள் செய்வதேயில்லை; பெரும்பாலும் கட்டைச் சம்பளம் வாங்கிய துணைக்குருக்களாலும் மற்றவர்களாலும் அவை செய்யப்பட்டன. மேனர்-இல்லத்துக் கனவான்கள் இவர்களை நாடி வரும் உயர்ந்த அந்தஸ்து இவர்களுக்கில்லை; கேதரின் டி பூர்க் சீமாட்டியின் (Lady Catherine de Bourgh) உயர்ந்த குருக்கள் பட்டியலிலும் இவர்கள் இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டுக்கு இவையெல்லாம் மிகவும் ஏற்றவையாயிருந்தன; ஏனெனில் திருச்சபையிலும் அரசிலும் பதவி என்பது ஒரு சிறந்த பரிசாகக் கருதப்பட்டதே தவிர, ஒரு பொதுப்பொறுப்பாக அன்று. ஆனால், இந்தப் புதிய சீர்திருத்த காலத்தில் (Age of Reform) ஒவ்வொருவனும் அவனுக்குக் கொடுக்கும் ஊதியத்துக்கான வேலையைச் செய்யவேண்டும் என்று கோரப்பட்டது. 'சிதைந்த பரோ' (rotten borough) முதல் திருச்சபைப் பதவிகள் வரை எல்லாமே, 'அதனால் பயன் என்ன?' என்ற பெந்தாமின் கடுமையான கேள்விக்கு ஆளாயின.

மேலும், நிறுவப்பட்ட திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார்களுக்கு மக்களிடையில் நல்ல பெயரில்லை; இதற்குக் காரணம் இவர்கள் மற்ற எந்த வகுப்பினரையும்விட உயர் டோரிக் கட்சியை (High Tory party)—அதுவும் அது வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த நாட்களில்—ஆதரித்தனர். பலம் பொருந்தி விளங்கிய கன்பார்மிஸ்ட் அல்லாதவர்களும் பகுத்தறிவாளர்களான தீவிரவாதிகளும் தங்களுக்குள் எவ்வளவுதான் வேற்றுமையிருந்தாலும் அதை விட்டுவிட்டு, மதகுருக்களின் சிறப்புரிமைகளை (privileges) ஒன்றுபட்டு எதிர்த்தனர். ஒவ்வொரு கிராமத்திலுமிருந்த ஊர்க்குரு (parson) கொடுங்கோன்மைச் சக்திகளுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் ஆதரவாகப் போரிடுவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட 'கருப்புச் சிப்பாய்' என்று 1826-ல் கேம்பிரிட்ஜில் ஜான் ஸ்டெர்லிங் (John

Sterling) போன்ற இளம் அறிவாளிகளால் வருணிக்கப்பட்டார்.

இக்காலத்தில் செல்வக் குடும்பத்தில் பிறந்து, கிராமத்துச் சர்வாதிகாரி என்ற முறையில் விளங்கிய ஊர்க்குருவைப் பற்றி மேலும் பொருத்தமான மற்றொரு வருணனையை டீன் சர்ச் (Dean Church) தருகிறார். (The Oxford Movenment, பக் 4,10.):

'போக்குவரத்து வசதிகள் இல்லாத ஒரு காலத்தில் இங்கிலாந்தின் கிராமப்புறவாழ்வில் இவர் ஒரு சிறந்த அங்கம் வகித்தார்; வேறு யாரும் இதைச் செய்திருக்க முடியாது. தமது பாரிஷின் அன்புமிக்க தந்தையும், ஆட்சியாளரும், மருத்துவரும் வழக்கறிஞரும், மாஜிஸ்டிரேட்டும், ஆசானுமாக இவர் விளங்கினர். இவருக்கு முன்னால் பாபச் செயல்கள் நடுங்கின; கிளர்ச்சி தலைகாட்டவே அஞ்சிற்று. பாதிரியின் கருத்து அறவே மறந்துபோகவில்லை; ஆயினும், அதை மங்கச் செய்வதற்கு அங்கு நிறைய இருந்தன; நல்லதும் பயனுள்ளதும்கூட நிறைய இருந்தன'.

'துப்பாக்கி ஏந்தி வேட்டையாடியும் நடனமாடியும் விவசாயம் செய்தும், தீமை பல புரிந்தும் வந்த நாட்டுப்புறக் கனவானையும்' டீன் சர்ச் கவனிக்கிறார். 'திருச்சபைச் சொத்தை வைத்து நிறையப் பொருளீட்டி, தமது குடும்பத்துக்கும் வாரிவாரி வழங்கிய பதவிக் குருமார்களையும் (pluralists)' அவர் நினைவுகூர்கிறார்.

இந்த நிலைமைகளில் ஆங்கிலிகக் குருமார்கள் தீவிர வாதப் பத்திரிகைகளால் வெகு கடுமையாகத் தாக்கப் பட்டனர்; வஞ்சப்புகழ்ச்சி நிறைந்த பாடல்கள், கட்டுரைகள், கொழுத்த சிவந்த முகங்களையுடைய குருக்களைப் பற்றிய கேவலமான கேலிச்சித்திரங்கள் ஆகியவை எழுதப்பட்டன. நீடித்த பாராளுமன்றத்துக்குப் (Long Parliament) பிறகு இத்தகைய தாக்குதல் இதுவரையில் நடந்ததே இல்லை. 1831-ல் பிரபுக்கள் சபையில் (House of Lords) சீர்திருத்த மசோதாவை எதிர்த்து இருபத்திஒன்றுக்கு இரண்டு என்ற ஓட்டுக்கணக்கில் சமயப் பிரபுக்கள் (Spiritual Peers) ஓட்டளித்த பொழுது மக்களது வெறுப்பு உச்சக்கட்டத்தை எட்டியது. அவ்வாண்டு குளிர்காலத்தில் சீர்திருத்த மசோதாவை ஆதரித்த கூட்டங்கள் பிஷப்புகளின் கோச்சுவண்டிகளைக் கல்லெறிந்து சேதப்படுத்தியும், அவர்களது மாளிகைகளுக்குத் தீயிட்டும் தமது ஆத்திரத்தைக் காட்டின.

1833-ம் ஆண்டின் சீர்திருத்தப்பட்ட பாராளுமன்றத்தின் முதல்வேலை டிஸ்ஸென்டர்களின் குறைகளைத் தீர்ப்பதாகத் தான் இருக்கும் என்றும், நிறுவப்பட்ட திருச்சபையானது வெகு சீக்கிரமே வேர்பறிக்கப் படுமென்றும், அதன் சொத்துகள் பிடுங்கப்படுமென்றும் அச்சத்தால் வெலவெலத்துப் போயிருந்த மதகுருக்களும் எக்களித்துக் கொண்டிருந்த அவர்களது எதிரிகளும் நம்பினர்கள். 'நிறுவப்பட்ட திருச்சபை தூக்கிஎறியப்படுவதை எந்த மனிதசக்தியும் தடுக்க முடியாது போலிருக்கிறது' என்று டோரிக் கட்சியினரான சதே (Southey) எழுதினர். 'இன்றைக்கு திருச்சபை இருக்கிற நிலையில் எந்த மனிதசக்தியும் அதைக் காப்பாற்ற முடியாது' என்று லிபரல்-கன்சர்வேட்டிவான ரக்பியைச் சேர்ந்த டாக்டர் ஆர்னல்ட் எழுதினர்; ஆனல், ஒரு நூற்றாண்டு கடந்து விட்டது. திருச்சபையின் சொத்துகளும் அரசுடனான உறவும் அப்படியேதான் எதிர்ப்பின்றி இருக்கின்றன; அயர்லந்திலும் வேல்ஸிலும்தான் சில இழப்புகள் நேரிட்டன. சீர்திருத்த மசோதாவை அடுத்த பத்தாண்டுகளில் ஒரே மூச்சில் தீர்க்கப்படுவதற்குப் பதிலாக, டிஸ்ஸென்டர்களின் குறைகளும் தீர ஐம்பது ஆண்டுகள் பிடித்தது.

வீசப் போவதாகப் பயமுறுத்திக்கொண்டிருந்த சமயப் புரட்சிப்புயலும் திசைமாறிப் போயிற்று. திருச்சபையிலிருந்த ஊழல்கள் அதன் நண்பர்களால் அகற்றப்பட்டன. மதகுருக்களின் செல்வம் சமமற்ற முறையில் பங்கிடப்பட்டிருப்பதைப் பாராளுமன்றம் சரிசெய்தது. மதகுருக்கள் சமயப் பணிகளில் மறுபடியும் வெகு சுறுசுறுப்புடன் ஈடுபட்டனர்; இதனல் திருச்சபையைக் காக்கவும் அதன் பணிகளில் பங்கு கொள்ளவும் பொதுமக்கள் ஆர்வத்துடன் திரண்டனர்.

கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவரான பீலும் (Peel) விக் ஆட்சியாளர்களும் சேர்ந்தே திருச்சபைச் சீர்திருத்தத்துக்கான பாராளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர். திருச்சபையின் வருவாய் விஷயத்தில் அரசு தலையிடுவதை, அப்பொழுதுதான் தோன்றிவந்த ஆக்ஸ்போர்டு இயக்கத்து (Oxford Movement) மனிதர்கள் எதிர்த்தனர்; ஆனல், அவசியமான இந்த மாறுதல்களைச் செய்ய வேறு எந்தச் சாதனமும் இல்லை. எனவே இவர்களை விடவும் சிறந்த விவேகிகளான பிளாம் பீல்ட் (Blomfield) போன்ற எபிஸ்கோப்பியர்கள், சமயக் கமிஷனின் (Ecclesiastical Commission) வேலையிலும், அதன் ஆலோசனை

யின் பேரில் 1836-1840-ல் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டங்களை வகுப்பதிலும் விக், டோரிக் கட்சி உறுப்பினர்களுடன் ஒத்துழைத்தனர்.

மானியச் சொத்துகளின் பங்கீட்டில் காணப்பட்ட ஊழல்களை இச்சட்டங்கள் அகற்றின; பணக்காரக் குருமார்களுக்கும் ஏழைக் குருமார்களுக்கு மிடையிலான ஏற்றத்தாழ்வுகளை ஓரளவு அகற்றின; முழுவதும் அகற்றின என்று கூற முடியாது. ட்ரோலோப்பின் (Trollope) நாவல்களைப் படிப்பவர்களுக்கு இது தெரியும். பல்பதவி வகிப்பது (plurality) சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்டது; சேப்டர்களின் (chapters) உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மானியமுள்ள பதவிகளில் ஒன்றுக்குமேல் வகிக்கக்கூடாது என்றும், ஒரேஒரு சேப்டரில் மட்டுமே ஒருவர் அங்கத்தினராக இருக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டன. கதீட்ரல் குருமார்களின் எண்ணிக்கையும் செல்வமும் குறைக்கப்பட்டன. இவை மூலம் ஆண்டொன்றுக்கு 130,000 பவுன்கள் மிச்சமாயின; ஏழை ஊர்க்குருக்கள் (parsors) துணைக்குருக்கள் (curates) ஆகியோரின் ஊதியத்தை உயர்த்துவதற்கு இத் தொகை பயன்படுத்தப் பட்டது. டயோசீஸ்களின் (diocese) எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டன; வடக்கில் புதிதாகத் தோன்றிய தொழில் மாவட்டங்களின் மக்களுக்காக மான்செஸ்டர், ரிப்பன் ஆகிய புதிய பிஷப்ரிக்குகள் (Bishoprics) உண்டாக்கப்பட்டன. குருமார்களின் வரும்படிகளில் காணப்பட்ட பெரும் ஏற்றத்தாழ்வுகள் சரிசெய்யப்பட்டன; சில குருக்களின் அநியாயமான பெரும் வருமானம் குறைக்கப்பட்டது.

இச் சீர்திருத்தங்களின் விளைவாக திருச்சபையைத் தாக்குவோர் குறைந்தனர்; 'பழைய ஊழலில்' இது ஒரு பகுதி என்ற குற்றச்சாட்டுக் குறைந்தது. ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்த அட்டைகள், லௌகீக மனிதர்கள் என்ற வகையில் பிஷப்புகள், டீன்கள், மற்றக் குருமார்கள் ஆகியோர் பற்றிய தீவிரவாதக் கேலிச் சித்திரங்கள் மறைந்தன.

அதே சமயத்தில் அக்காலத்திய உணர்வுகளைத் தானும் பெற்ற திருச்சபையானது, இடைக்காலத்தைச் சேர்ந்த பாரிஷ் அமைப்பை மாற்றியமைக்கத் தானே நடவடிக்கை மேற்கொண்டது. புதிய பாரிஷ்கள் உண்டாக்கப்பட்டன; தொழில்மாவட்டங்களில் புதிய ஆலயங்கள் கட்டப்பட்டன;

இவ்விடங்களில் இதுவரை கன்பார்மிஸ்ட் அல்லாதாரின் ஆதிக்கம் நடைபெற்றது அல்லது எந்த மதமும் தலைகாட்டா மல் இருந்தது. இலண்டனின் புறப்பகுதிகளில் கோவில்களைக் கட்டுவதற்காக பிஷப் பிளாம்பீல்ட் ஏராளமான நிதி திரட் டினர். ஏனெனில், அரசாங்கத்தின் வரிப்பணத்தைக் கொண்டு புதிய ஆலயங்களைக் கட்டுவது அப்பொழுது சாத்தியமில்லை. ஆனின் ஆட்சியில் ஆலயங்கள் கட்டுவதற்காக டோரிப் பாராளுமன்றங்கள் வரி விதித்தன; வாட்டர்லூவுக்குப் பின் மீண்டும் ஒருமுறை இது நடந்தது. ஆனால், 1832-க்குப் பிறகு இந்த வேலைக்காக வரிவிதிக்க எந்த அரசாங்கத்துக்கும் துணிவு வரவில்லை.

விருப்பமில்லாத பாரிஷ்மக்களிடமிருந்து திருச்சபைக் கட்டணத்தைக் (Church Rate) கட்டாயமாக வசூல் செய்து ஏற்கெனவே இருந்த ஆலயங்களை நிர்வகிப்பதுகூட கடின மாயிருந்தது. டிஸ்ஸென்டர்களின் கை ஓங்கியிருந்த விடங் களிலெல்லாம், குறிப்பாக வடக்குப் பிரதேசத்துத் தொழில் மாவட்டங்களில், இந்தக் கட்டணத்துக்குக் கடும் எதிர்ப்பு இருந்தது. 1840-ல் ராச்டேலில் (Rochdale) திருச்சபைக் கட் டணம் வசூலிக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி வாக்கெடுப்பு நடந்தபோது, இரண்டு தரப்பினருக்கு மிடையில் மோதல் ஏற்பட்டு நிலைமை மோசமடையவே, துப் பாக்கி முனையில் அமைதியைப் பராமரிக்கத் துருப்புகளை நகரத்துக்குள் அழைக்க வேண்டியதாயிற்று.

எனவே, புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் முயற்சிகளுக்கும் வேண்டிய பணத்தை மக்களிடமிருந்து நன்கொடைகளாக வசூலிக்க வேண்டியிருந்தது. இதே முறையில்தான் சுதந்திரமான திருச்சபைகள் (Free Churches) எப்பொழுதும் இயங்கிவந்தன. ஆங்கிலிகப் பள்ளிகள் (Anglican Schools) முழுவதுமே—நாட்டின் ஆரம்பக் கல்விக்கு முக்கியமான சாதனங்களாக விளங்கியவை இவைதான்—பொதுமக்களின் நன்கொடையை நம்பியே நடந்துவந்தன.

பத்தில் ஒன்று (tithe) வசூலித்ததும் மக்கள் திருச்சபையை வெறுத்ததற்கு ஒரு காரணம். விக் அரசாங்கம் இந்த விஷயத் தில் திருச்சபைக்கு உதவியது. பண்டைக் காலந்தொட்டே டிஸ்ஸென்டர்கள் மட்டுமின்றி, விவசாயத்தொழில் செய்து வந்த அனைவருமே இந்தப் பத்தில் ஒன்றைக் கண்டு பொறு மினர்.

'ஊர்க்குருவை ஏமாற்றினேம், இனியும் ஏமாற்றுவோம்,
பத்தில் ஒன்றைக் குருவுக்கு ஏன் கொடுப்போம்?'

என்ற அறுவடைப் பாட்டு, ஆங்கிலோ-சாக்சானிய இங்கிலாந்திலேயே நிலவிய ஒரு வெறுப்பை வெளிக்காட்டுகிறது. இவ்வரி குத்தகைக்குடியானவனிடமிருந்து, பெரும்பாலும் பொருள்களாக வசூலிக்கப்பட்டது; பத்தாவது குட்டிப்பன்றி ஊர்க்குருவின் சமயலறைக்கும், பத்தாவது படி தானியம் அவரது களஞ்சியத்துக்கும் சென்றன. சமயச் சீர்திருத்த இயக்கத்துக்கு (Reformation) முன்னாலேயே இது பூசலையும் மனக்கசப்பையும் உண்டாக்கிவந்தது. 'பத்திலொன்றுக்காகச் சாபமிடாத, அதாவது அதைத் தருவதற்கு மறுத்த மனிதனைச் சமயப் பிரஷ்டம் செய்யாத அந்த நல்ல ஊர்க்குருவை சாசர் (Chaucer) கூட அந்நாளிலேயே போற்றினர்.

பத்திலொன்றை மாற்றும் சட்டம் (Tithe Commutation Act) 1836-ல் இயற்றப்பட்டது. பொருளாக இவ்வரி செலுத்தும் முறையை ஒழித்து, ஒரு பெரிய குறையை இது நிவர்த்தி செய்தது. பத்திலொன்றுக்குப் பதிலாக நிலத்தின்மீது ஒரு கட்டணம் விதிக்கப்பட்டது; 1891-ல் நிலச்சொந்தக்காரனே இதைச் செலுத்த வேண்டுமென்று விதிக்கப்பட்டது; குத்தகைக்காரன் இதைச் செலுத்தவேண்டியதில்லை; ஆனால் அவனது குத்தகையோடு சேர்த்து இதை மறைமுகமாக குத்தகைக்காரனிடமிருந்து வசூலிக்கலாம். கனவான்கள் (squires) சமூக ரீதியிலும் அரசியல்ரீதியிலும் ஊர்க்குருக்களோடு மிகவும் நெருங்கியவர்கள். எனவே, இந்த வரியைச் செலுத்துவதற்குக் குத்தகைதாரர்களைப் போல் அவ்வளவு தூரம் கனவான்கள் ஆட்சேபிக்கவில்லை. மாற்றும் சட்டங்களால் (Commutation Acts) கிராமங்களில் அமைதி ஏற்பட்டது. நமது நாட்களில்மட்டுமே ஒரு புதிய போராட்டம் நடத்தப்பட்டு, திருச்சபைக்கு நஷ்டம் ஏற்படும்வகையில் மேலும் சலுகைகள் வழங்கப்பட்டன. காரணம், 1918-க்குப் பிறகு பல குத்தகைக் குடியானவர்கள் தாங்கள் பயிரிட்டுவந்த நிலங்களை விலைகொடுத்து வாங்கிக்கொண்டனர். இவ்வாறு நிலச்சொந்தக்காரர்களாகிய இம்மனிதர்கள் தாங்களே இவ்வரியைச் செலுத்த வேண்டியிருந்தது. எனவே, ஒரு போராட்டத்தைத் துவக்கினர்.

1836-ல் இயற்றப்பட்ட திருமணச் சட்டத்தால் (Marriage Act) மற்றொரு குறையும் அகற்றப்பட்டது. இங்கிலாந்துத் திருச்சபையைச் (Church of England) சேர்ந்த ஓர் ஊர்க்குருமட்டுமே ஒருவருக்குச் சட்டப்படித் திருமணம் செய்துவைக்க முடியும் என்று 1753-ம் ஆண்டில் பிரபு ஹார்ட்விக்கின் திருமணச் சட்டம் (Lord Hardwicke's Marriage Act) விதித்தது.

இது புராட்டஸ்டன்ட் டிஸ்ஸென்டர்களுக்கும், அதைவிட அதிகமாக ரோமன் கத்தோலிக்கர்களுக்கும் பொறுக்கமுடியாத ஓர் அவமதிப்பு. 1836-ம் ஆண்டுச் சட்டமானது கத்தோலிக்க ஆலயங்களிலும் புராட்டஸ்டன்ட் டிஸ்ஸென்டர்களின் ஆலயங்களிலும் மணச் சடங்குகள் நடைபெறலாம் என்று அனுமதித்தது; பதிவாளருக்கு (Registar) இது அறிவிக்கப் பட்டதும், சட்டப்படியானதாக ஆகிவிடும். எப்படியெனில் இறப்பு—பிறப்பு—திருமணப் பதிவாளர்கள் (Registrar of Births, Deaths and Marriages) என்ற அதிகாரிகள் இச் சட்டத் தினுல் நியமிக்கப்பட்டனர். புள்ளிவிவரங்களும், சரியான விவரங்களும் வேண்டப்பட்ட ஒரு புதிய காலத்துக்கு ஏற் புடைய குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் இது. இங்கிலாந்தின் திருச்சபையில் சமயத் திருமணங்கள் முன்பு போலவே நடந் தன; ஆனுல் ஒரே ஒரு நிபந்தனை. தமது ஆலயத்தில் பதி வான அத் திருமணம்பற்றிய ஒரு நகலை ஊர்க்குரு அரசாங்க அதிகாரியான பதிவாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். நவீன மதச்சார்பற்ற அரசும் பண்டைச் சமயக் கோட்பாடு களும் இவ்வாறு இங்கிலாந்தில் இணைந்தன; இதுவே இன்றும் நிலவுகிறது.

திருச்சபையின் மீது ஒரு தாக்குதல் வரப்போகிறது என்று அதன் விரோதிகள் மட்டுமின்றி நண்பர்களுங்கூட முன்பு ஆரூடம் கூறிவந்தார்கள். ஆனுல் இந்தச் சீர்திருத் தங்கள் அத்தகைய ஆபத்திலிருந்து திருச்சபையைக் காத்தன. ஆயினும் அரசியல், சமூகப் பிரிவுகள் சமய அடிப்படை யிலேயே பெரும்பாலும் அமைந்திருந்தன. ஒவ்வொரு நகரத் திலும் கிராமத்திலும் பெரிய கன்சர்வேட்டிவ்களாக விளங்கிய வர்கள் வழக்கமாக நிறுவப்பட்ட திருச்சபையின் விசுவாச மிக்க ஆதரவாளர்களே; இவர்களைக் கடுமையாக எதிர்த்த வர்களும் லிபரல்களும் டிஸ்ஸென்டர்கள் அல்லது மத குரு எதிர்ப்பாளர்கள் (Anti-clericals). கீழ்-நடுத்தர வகுப் பினரும் தொழிலாளர் வகுப்பினரும் ஒரே சமயத்தையும் சடங்குகளையும் பின்பற்றினர்; பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசியல் என்பது வகுப்பைமட்டும் பொறுத்ததில்லை; சமயப் பிரிவுகளையும் பொறுத்தது. திருச்சபைக் கட்டணம், சவப் புதையல் (Burial), ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் சேர அனுமதி ஆகிய விஷயங்களில் டிஸ்ஸென் டர்களின் குறைகளை 1832-க்குப் பிறகும்கூட விக்குகள் தீர்க்கத் தவறிவிட்டனர்; எனவே சமூகத்தைப் பிளவுபடுத் திய இச்சமயப் பிரிவுகள் தொடர்ந்து நீடித்தன. இன்னும் நெடுங்காலம் வரையில் இங்கிலாந்தில் 'சமயம்—கோவில்

உணர்வு' அதிகமாக இருந்ததே யொழிய 'வகுப்பு உணர்வு' (class-consciousness) அன்று.

இங்கிலாந்தின் 'கர்னடகப் பகுதிகளில்' (old-fashioned parts)—'பார்செட்ஷயரில்' (Barsetshire) என்று கூட நாம் சொல்லலாம்—மதகுருமார்கள் இன்னமும் மேல்வகுப்பினரின் நிழலிலேயே வாழ்ந்தனர். ஆனல், இங்கிலாந்தின் வேறு பகுதிகளில் உயர்ந்தவகுப்பு மக்களே இல்லாத அல்லது மிகக் குறைவாக இருந்த பாரிஷ்களில்கூட குருக்கள் பலர் பணியாற்றினர். இவ்வாறு வகுப்புகள் தனித்தனியிடங்களில் பிரிந்து பிரிந்து வசித்தது தொழிற்புரட்சியின் விளைவு. 'சேரி-மதகுரு' (slum-parson) தோன்றினர்; பண்டை ஆங்கிலேயக் கிராமத்தில் சர்வாதிகாரியாக விளங்கிய பழைய மதகுருவுக்கும் இம்மனிதருக்கும் கருத்துகளிலும் வேலைகளிலும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்தியில் திருச்சபை வாழ்வில் காணப்பட்ட துடிப்பும் ஆர்வமும் பல காரணங்களால் நிகழ்ந்தவை. அந்த நெருக்கடியான காலத்தில் சோம்பலை விடுத்துச் சுறுசுறுப்புடன், செயல்பட வேண்டும் என்பது சாதாரண மதகுரு ஒவ்வொருவருக்கும் நன்கு தெரிந்திருந்தது. அந்நூற்றுண்டின் முதல்ஆண்டுகளில் இருந்ததை விட இப்பொழுது எவஞ்சலியக் கருத்துகள் திருச்சபை வட்டாரங்களில் மிகவும் பரவலாகக் காணப்பட்டன; நவநாகரிகமான கருத்துகள் என்ற வகையில் விரும்பியும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 'திருச்சபையின் எளிய ஊழியர்கள்' என்று இப்பொழுது அழைக்கப்பட்ட எவஞ்சலியர்கள் மிகவும் பலம்பெற்று விளங்கியதால் 'சபாத் (sabbath) அனுஷ்டானங்களை' சட்டப்படியாகவும் வழக்கப்படியாகவும் முந்திய காலத்தைவிட அதிகமாக அவர்களால் புகுத்த முடிந்தது. அதே சமயத்தில் அந்நூற்றுண்டின் மூன்றுவது நான்காவது பத்தாண்டுகளில் ஆக்ஸ்போர்டிலிருந்து பரவிய ஆங்கிலோ-கத்தோலிக்கச் சிந்தனைகளும் நடைமுறைகளும்கூட நாடு முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவின. 1850-70-ல் திருச்சபையைப் பற்றிய இந்த எல்லா அம்சங்களும் ட்ரோலோப்பின் (trollope) 'பார்செட்ஷயர்' (Barsetshire) நாவல்களைப் படிப்பவர்களுக்குத் தெரியும். அவ்வளவு தூரத்திலில்லாமல் சற்று அருகிலிருந்த ஷயர்களில் 'பரந்த திருச்சபைக் குழு' (broad church school) என்ற ஒன்றும் இருந்தது. பிரடெரிக் டெனிசன் மாரிஸ் (Frederick Denison Maurice), சார்லஸ் கிங்ஸ்லி (Charles Kingsley) ஆகியோர் இதில் முக்கியமான

வர்கள் 'கிறிஸ்தவ சோஷலிஸ்டுகள்' என்றழைக்கப்பட்டனர்; ஏனெனில் இவர்கள் தொழிலாளர்களின் வாழ்விலும் கல்வியிலும் நாட்டம் செலுத்தினர்; இதற்கு ஓரளவு காரணமாயிருந்தவை தாமஸ் கார்லிலின் (Thomas Carlyle) கருத்துகள். கார்லில் ஒரு மதகுரு அல்லவாயினும் அவரது கருத்துகள் திருச்சபையினரிடம் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கின. பரந்த திருச்சபைக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை எப்பொழுதுமே அதிகமாய் இருந்ததில்லை; ஆயினும், அதன் சிந்தனைப்போக்கு மிகப் பல வைதீகக் குருமார்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் 'புறச்சமயக் கருத்துகளும்' (heresies) 'சோஷலிசமும்' முதலில் கடுமையாகக் கண்டிக்கப்பட்டனவாயினும், பின்னால் எதிர்ப்புக் குறைந்தது. இவ்வாறு புத்துயிரூட்டக் கூடிய பல பூசல்களையும், சடங்குகளையும் புறச்சமயக் கருத்துகளையும் விரட்டுவதற்கான பல வீண்முயற்சிகளும் நடைபெற்று முடிந்தபின் இங்கிலாந்துத் திருச்சபையானது (Church of England) இன்று நமக்கு நன்கு பழக்கப்பட்ட ஒரு பல்கருத்துத் தொகுதியாக உருப்பெற்றது. பல்வேறுவகை வாழ்க்கையும் சிந்தனையும் தாராளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஆக்ஸ்போர்டு இயக்கத்தைத் (Oxford Movement) தோற்றுவிப்பதில் பெரும் பங்காற்றிய நியூமன் (Newman) 1845-ல் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியதும், அவ்வியக்கம் இரு பிரிவுகளாயிற்று. ஒரு பிரிவு புசே (Pusey), கெபில் (Keble) ஆகியோரின் தலைமையில், நிறுவப்பட்ட திருச்சபைக்குள் ஆங்கிலோ-கத்தோலிக்கக் கொள்கைகளை வளர்த்துவந்தது.[1] மற்றொரு பிரிவு, முதலில் நியூமனின் தலைமையிலும் பிறகு மேனிங்கின் (Manning) தலைமையிலும் இயங்கிற்று; நீண்ட நாட்களாக இங்கிலாந்தில் ஒடுங்கிப் போயிருந்த ரோமன் கத்தோலிக்க இயக்கத்துக்கு இது மறுஉயிர் கொடுத்தது. 1829-ம் ஆண்டில் இயற்றப்பட்ட கத்தோலிக்க விடுதலைச் சட்டம் (Catholic Emancipation Act) இவர்களுக்கு அரசியலில் சமஉரிமை கொடுத்தது; ஐரிஷ் கத்தோலிக்கர்கள் தொடர்ந்து இங்கிலாந்துக்கு வந்து கொண்டிருந்தனர். எனவே[1] எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் கத்தோலிக்க

[1] பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 'ஆங்கிலோ-கத்தோலிக்கச் சமயம்' ஒரு புதுமை; ஆனால், ஆங்கிலிக வரலாற்றை முழுமையாக எடுத்துக்கொண்டால் அது ஒன்றும் புதிதன்று. நான்ஜூரர்களை (Nonjurors) 'ஆங்கிலோ-கத்தோலிக்கர்கள்' என்றழைக்கலாம்; லாடைப் (Laud) பின்பற்றிய மதகுருக்களைக்கூட ஒருவேளை அவ்வாறு அழைப்பது பொருந்தும்.

சமூகம் வளர்ந்து கொண்டேயிருந்தது. ஆயினும், 1850-ல் இங்கிலாந்தில் பிஷப்புகளைப் போப்பாண்டவர் நியமித்த போது, புராட்டஸ்டன்டுகள் நிறைந்த இந்நாடு 'போப்பின் ஆக்கிரமிப்பைப்' பற்றிக் கூச்சல் போட்டது; கத்தோலிக்க சமயத்தை நமது மக்கள் இன்னும் வெறுத்து வந்தனர் என்பதை இந்தத் தேவையில்லாத கிளர்ச்சியில் காணலாம்.

இதற்கிடையில், தொழில்கள் வளர்ந்துவந்த புதிய சமூக அமைப்பில் நடுத்தர வகுப்பினரும் தொழிலாளர் வகுப்பினரும் எண்ணிக்கை, செல்வம், அரசியல் செல்வாக்கு, சமூக மதிப்பு ஆகிய அனைத்திலும் தொடர்ந்து வளர்ச்சியுறவே, கன்பார்மிஸ்ட் அல்லாதாரின் பலமும் வளர்ந்தது. அந்நூற்றாண்டின் ஆறுவது பத்தாண்டில், ஆங்கிலேயச் சமூகத்தின் ஊதிப்போன முகத்தின் அகோரத்தை அப்படியே காட்டுவதற்காக மேத்யூ ஆர்னல்ட் ஒரு கண்ணாடியைத் தூக்கிப் பிடித்தார்; அப்பொழுது அவரது ஆக்ஸ்போர்டு ஆன்மா கண்டு அஞ்சியது எல்லோருக்கும் மேலாக கன்பார்மிஸ்ட் அல்லாப் 'பிலிஸ்தியர்களையே' (Philistines). அவர்களில், அத்தலைமுறையின் பிரதிநிதிகளை, தங்களது பழைய ஆங்கிலேய உரிமைகளையும் புதிய செல்வத்தையும் எண்ணிப் பெருமைப் பட்ட—ஆனால், 'இனிமையிலும் ஒளியிலும்' வறிய ஒரு சமுதாயத்தின் சமூக, அறிவுத் தேவைகளைப்பற்றி ஒரு சிறிதும் தெரியாத—மனிதர்களையே அவர் கண்டார். ஆனால், இந்தப் புதிய சமூக அமைப்பைச் சேர்ந்த செல்வ மிக்க தொழிலதிபர்களில் பலர் நவநாகரிகமான நிறுவப்பட்ட திருச்சபையிலேயே சேர்ந்து, பிறகு தமது உரிமைகளை வற்புறுத்தியும் திருமண முலமாகவும் மேல்வகுப்பினரின் அணியில் போய்ச்சேர்ந்தனர். 'சமுதாயத்தில் கலப்பு ஏற்பட்டு வந்தது.'

இன்னொரு கவிஞரான இராபர்ட் பிரௌனிங் (Robert Browning)— இவர் ஆக்ஸ்போர்டைச் சேர்ந்தவரல்லர்—பியூரிட்டானியச் சமயம் சமுதாயத்தில் மெய்வருந்தி உழைக்

நான்ஜூரர்களின் யாகோபியக் கொள்கையைமட்டும் விட்டுவிட்டால், இவர்களுக்கும் ஆக்ஸ்போர்டு டிராக்ட்டேரியர்களுக்கும் (Oxford Tractarians) வேறுபாடு இல்லை. ஆக்ஸ்போர்டு இயக்கமானது ஆங்கிலோ-கத்தோலிக்கக் கோட்பாடுகளுக்கு ஒரு தேசீய முக்கியத்துவத்தை அளிப்பதற்கு ஒரு தலைமுறை முன்பே பிஷப் ஜெப் (Jebbe), அலெக்சாந்தர் நாக்ஸ் (Alexander Knox) என்ற இரு ஐரிஷ் திருச்சபைக்காரர்கள் இக் கோட்பாடுகளைக் கோடிட்டுக் காட்டினர். ஆங்கிலோ-கத்தோலிக்கத் தொழுகைகளின் சடங்குகள் பிறகுதான் வளர்ந்தன. ஆக்ஸ்போர்டு இயக்கத்தின் தொடக்கத்தில் அவை முக்கிய இடத்தை வகிக்கவில்லை.

கும் வறியவர்களின் வாழ்வில் எத்தகைய வலிமையையும் வசதியையும் கூட்டிற்று என்பதை இன்னும் நன்றாகக் கண்டார். ஆனல், மேத்யூ ஆர்னல்டின் East London என்ற கவிதையை வாசித்தால் அவர்கூட ஓரளவு அதைத் தெரிந்து கொண்டார் என்பது தெரியும்.[1]

விக்டோரியா ஆட்சியின் முதல்பாதியில் இங்கிலாந்தின் செல்வமும் செய்தொழிலுற்பத்தியும் ஏராளமாகப் பெருகின. 'நிலநடுக்கம் போல் நடுங்கவைக்கும் பண நடுக்கம்' ஏற்பட்டது; இதன் குழந்தைகள் இரண்டு; மரபு எதுவுமில்லாத ஒரு புதிய நடுத்தர வகுப்பு; அதேபோல் புதியதொரு பாட்டாளி வகுப்பு (proletariat). இவைகளுக்கு அறிவூட்ட கல்வி தேவைப்பட்டது. அரசாங்கக் கல்வி (State Education) என்ற எந்தஒரு திட்டத்தையும் கொண்டுவருவதற்கு அக் காலத்தியப் பிரதம மந்திரிகளுக்குத் துணிவில்லை; கிளாட்ஸ்டன் மட்டுமே 1870-ல் இதைச் செய்யமுடிந்தது. இதற்குக் காரணம், அந்தத் திட்டமானது சமயப் பிரிவுகளுக் கிடையில் ஒரு போரைக் கிளப்பிவிட்டிருக்கும்; சமயக் கல்வி விஷயத்தில் நிறுவப்பட்ட திருச்சபையும் டிஸ்ஸென்டர் பிரிவுகளும் கட்டாயம் மோதிக்கொள்வார்கள்; 1841-ல் சர் ஜேம்ஸ் கிரஹாம் (Sir James Graham) புரோகத்துக்கு (Brougham) எழுதினர்: 'கல்வியின் அச்சாணியான சமயம் இந்நாட்டில் அதன் முன்னேற்றத்துக்குத் தடையாயிருக்கிறது.' இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையிலிருந்த அரசாங்கம் பல்வேறு பொதுமக்கட் சங்கங்களுக்கும் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்காக ஆண்டொன்றிற்கு இருபதாயிரம் பவுன்கள் மானியம் அளித்தது. இது 1833-ல் தொடங்கி, ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தப் பிச்சைக்காசைப் பங்கிட்டுத் தருவதற்காகப் பிரிவுகவுன்சிலின் கல்விக் கமிட்டி (Educational Committee of the Privy Council) ஒன்று நிறுவப்பட்டது. அதற்கு ஒரு நிரந்தரக் காரியதரிசி இருந்தார்; அரசாங்க உதவிபெறும் பள்ளிகளைச் சோதனைசெய்ய (inspection) ஒரு முறை வகுக்கப்பட்டது. இந்த எளிய முறையில்தான் இன்றையக் கல்வி அமைச்சகம் (Ministry of Education) தோன்றியது. அரசாங்க மானியம் வேண்டுமென்றல் அதன் மேற்பார்வையையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற நிலை வெகு சீக்கிரத்தில் வாழ்க்கையின் பலதுறையிலும் தோன்ற

1 William Law Mathieson, English Church Reform 1815-40; Dean Church, The Oxford Movement; Pretractarion Oxford by W. Tuckwell; Matthew Arnold, Culture and Anarchy.

ஆரம்பித்தது. 1833-ம் ஆண்டுத் தொழிற்சாலைச் சட்டத்தின் படி (Factory Act) தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டனர்; இதையொட்டிப் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களும் தோன்றினர். விரைவிலேயே சுரங்க இன்ஸ்பெக்டர்கள் வந்தனர்; அரசாங்கத்தின் 'இன்ஸ்பெக்ஷன் முறை' ராஜ தடை போட்டது. நாட்டின் நடவடிக்கைகளில் பாதியைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு இம்முறை வளருங்காலம் வரும்.

உலகிலேயே மிகப் பணக்கார அரசுக்கு ஆண்டுதோறும் கல்விக்காக இருபதாயிரம் பவுன்கள் செலவிடுவது ஒன்றும் அதிகமில்லை. பிரஷ்ய அரசானது தனது மக்கள் அனைவருக்கும் கல்வி அளித்தது. தந்தையைப்போல் ஜெர்மெனியை அரசாண்ட மன்னர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமது மக்களுக்குக் கல்வியூட்டினர்; ஆனால், அரசியல் சுதந்திரமோ அரசாங்கத்தில் பங்கோ தரவில்லை. ஆங்கிலேய அரசு தனது பொதுமக்களுக்கு நிறைய அரசியல் சுதந்திரமும், அரசாங்கத்தில் ஓரளவு பங்கும் தந்தது; ஆனால் தனிப்பட்ட சமயப்பள்ளிகளில் கல்விபெறும்படி அவர்களை விட்டு விட்டது. 1867-ம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டத்தின் (Reform Act) படி நகரத்துத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்ட பின்னரே 'நமது எஜமானர்களுக்கு நாம் கல்வி கற்பிக்க வேண்டும்' என்று அரசியல்வாதிகள் கூறினர்கள்.

பொதுமக்களின் ஆரம்பக் கல்விக்குச் செலவிடப்பட்ட தொகை இவ்வளவு குறைவாக இருந்த சமயத்தில், பணக்காரர்களின் இடைத்தரக் கல்வி (secondary education) 'பொதுப்பள்ளி முறையினால்' (Public School system) பெருவளர்ச்சியுற்றது.

அந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மூவகையான இடைத்தரப் பள்ளிகள் இருந்தன; நவ நாகரிகமான 'பொதுப் பள்ளிகள்' (இவை உண்மையில் தனியார் பள்ளிகளே); ஈட்டன் விஞ்செஸ்டர், ஹாரோ ஆகியவை இவைகளில் சில; இவைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு; இலத்தீன், கிரேக்கம் ஆகியவையே சொல்லித்தரப்பட்டன; ஒழுங்குமுறை படுகேவலம். இரண்டாவது, தனியார்கள் நடத்திய 'அகாதமிகள்' (Academies); இங்கு டிஸ்ஸென்டர்களான சாதாரண மத்தியதர வகுப்பினர் கல்வி கற்றனர்; நல்ல ஒழுக்கமும் விஞ்ஞானப்படியான நவீனக்கல்வியும் போதிக்கப்பட்டன. இறுதியாகப் பழைய, மானியம்உடைய இலக்கணப் பள்ளிகள்

(Grammer Schools); பதினெட்டாம் நூற்றுண்டில் பொதுநிறு வனங்களில் சாதாரணமாகக் காணப்பட்ட கவனக் குறைவு ஊழல் ஆகியவை காரணமாக இப்பள்ளிகளில் பலவும் சீர் கேடுற்று விளங்கின.

புதிய நூற்றுண்டில் இங்கிலாந்தின் சக்தியும் செல்வமும் பெருகின; உள்நாட்டிலும் குடியேற்ற நாடுகளிலும் பல துறைகளையும் தலைமைதாங்கி நடத்துவதற்குச் சிறந்த மனி தர்கள் தேவைப்பட்டனர்; எனவே இடைத்தரக் கல்வி பெருகவேண்டியது இன்றியமையாததாயிற்று. ஓரளவுக்கு இத் தேவை பூர்த்திசெய்யப்பட்டது; ஆனால், எதிர்பார்க் காத முறையில் இது செய்யப்பட்டதால் பல முக்கிய சமூக விளைவுகள் ஏற்பட்டன. அது சீர்திருத்தகாலமாக விளங்கிய தாலும், ஜனநாயகம் நெருங்கிக் கொண்டிருந்ததாலும் இலக்கணப் பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படலாம்; இவ் வாறு நடந்திருக்குமேயானால் பல்வகை வகுப்புகளையும் சேர்ந்த கெட்டிக்காரப் பிள்ளைகளுக்கும் ஒரு பொதுவான கல்வி கிடைத்திருக்கும். டியூடர்கள், ஸ்டூவர்டுகள் காலத்தில் இலக்கணப் பள்ளிகளில் இதுதான் நடைபெற்றது; அதன் விளைவுகளும் வெகு சிறப்பாயிருந்தன. ஆனால், மான்செஸ் டரில் சில நல்ல இலக்கணப் பள்ளிகள் இருந்தாலும்கூட பொதுவாக விக்டோரியாக் காலத்தில் அவைகளின் முக்கியத் துவம் குறைந்துபோயிற்று. அதே சமயம், முந்திய நூற்றுண் டில் மிகவும் பயனுள்ளவையாய் விளங்கிய டிஸ்ஸென்டர் க்களின் அகாதமிகளும் ஒன்றுமில்லாமல் போயின. 'பொதுப் பள்ளிகள்' (Public Schools) என்ற புதிய நவநாகரிகம் எங் கும் தோன்றியது; ஈட்டன், வெஸ்ட்மின்ஸ்டர், வின்செஸ்டர், ஹாரோ ஆகிய பழைய பள்ளிகளின் மாதிரியில் இவை அமைந்தன; எல்லாவற்றிலும் ரக்பி (Rugby) ஒரு தலைசிறந்த உதாரணமாக விளங்கிற்று.

இந்த வளர்ச்சி தற்செயலாக, ஒரு தனிமனிதரின் காரண மாக ஏற்பட்டது. 1830–40–ல் கல்வித் துறையில் மாபெரும் சீர்திருத்தவாதியாக விளங்கியவர் ரக்பியின் தலைமைஆசிரிய ரான டாக்டர் தாமஸ் ஆர்னல்ட் (Dr. Thomas Arnold). சமயம், ஆலயத்தில் தொழுகை ஆகியவற்றை இவர் வலியுறுத்தினர்; 'மானிட்டர்' (monitor) முறையை ஏற்படுத்தினர்; 'போர்க்கள மாக' விளங்கிய பழைய பொதுப்பள்ளிகளில் நிலவிய மிரட் டல், குடிப்பழக்கம், தீயொழுக்கம், இன்னும் பலவித ஒழுங் கீனத்தையும் வெற்றிகரமாக ஒழித்தார்; இது மற்றப் பள்ளி

களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாய் விளங்கிற்று. பழைய பள்ளிகள் சீர்திருத்தப்பட்டன: போட்டி ஆர்வத்துடன் புதிய பள்ளிகள் தோன்றின. 'விதிமுறைகளைக்கொண்ட விளையாட்டுகள்' தாமே தோன்றின; ஆர்னல்டு இவைகளை அதிகம் வலியுறுத்தவில்லை; பொதுப்பள்ளிவாழ்வில் இவை ஒரு தலையாய இடத்தைக் கைப்பற்றி அப்பள்ளிகளுக்குப் புகழைத் தேடித்தந்தன; பின்னர், ஆக்ஸ்போர்டுக்குப் புகழ் தேடித் தந்தன; பிறகு, ஆக்ஸ்போர்டுக்கும் கேம்பிரிட்ஜுக்கும்கூடப் பரவின.[1]

சீர்திருத்தப்பட்ட இப் பொதுப்பள்ளிகளில் சேர்ந்தால் தங்களது பிள்ளைகள் 'ஆளும் வகுப்பினரின்' அணியில் சென்று சேர்ந்துவிட முடியும் என்று நடுத்தர வகுப்பு மக்கள் எண்ணினர். பழைய நிலம்படைத்த கனவான்கள், வழக்கறிஞர்போன்ற தொழில்செய்த மக்கள், புதிய தொழிலதிபர்கள் ஆகியோர் சேர்ந்து கல்விகற்றனர்; பரவலான நவீன மடைந்த மேல்வகுப்பு ஒன்று இவ்வாறு ஏற்பட்டது. விக்டோரியாவின் இங்கிலாந்திலும் விக்டோரியாவின் பேரரசிலும் அரசாங்கத்தையும் வேறுபல துறைகளையும் தலைமைதாங்கி நடத்துவதற்கு இவர்களது எண்ணிக்கை போதுமானதாயிருந்தது.

பல வழிகளில் பொதுப்பள்ளிகள் வெற்றியடைந்தன; தேவையான பங்கை ஆற்றின. ஆனால், அவை கற்பித்த பாடங்கள் பெரும்பாலும் பண்டை இலக்கியங்களே. ஆக்ஸ்

1 'ஆர்னல்டின்' சீர்திருத்தங்களுக்கும் விதிமுறைகளைக் கொண்ட விளையாட்டுகளுக்கும் முன்பு பொதுப்பள்ளிகள், தங்களது பிள்ளைகளைக் கெடுத்துவிடும் என்று அக்கறை மிக்க பெற்றோர்கள் அஞ்சினர். இதற்கான காரணங்களைக் கூப்பர் (Cowper) எழுதிய Tirocinium, 1785. என்ற கவிதையில் காணலாம்:

> திமிர், தீயொழுக்கம், முட்டாள்தனம் இம் மூன்றும்
> பிள்ளைக்கு வேண்டுமானால் பொதுப்பள்ளியில் சேருங்கள்.
> அங்கே யிருக்கிறார் ஆயிரம் பையன்கள்
> குறும்பிலும் கூச்சலிலும் குழந்தைகள் அவர்கள்;
> ஆனால், வயதோ அதிகம்; வளர்ச்சியும் அஃதே.
> பத்தில் ஐந்து பேர் தீயொழுக்கக்காரர், காமாந்தகாரர்;
> அம் மேன்மக்கள் கூட்டத்தில் சேர்ந்த உம்பிள்ளை
> பதினாறுண்டு முடியுமுன்னே பல கலையில் தேர்ந்திடுவான்.
> நல்ல நூல்களை அடகு வைத்தல், கடையில் விற்றல்
> சாலச் சிறந்தது என்ற பேருண்மையும்
> பள்ளியில் கற்பது படிப்பில் செருக்கே என்பதையும்
> மதுக்கடையில் மதனநூல் பயிலலாம் என்பதையும்
> பருவம் வருமுன்னே அறிவான் உம்பிள்ளை.

சமூக வரலாற்றைப் படிக்கும் மாணவர்கள் இக் கவிதை முழுவதையும் வாசிக்கவேண்டும்.

போர்டிலும் கேம்பிரிட்ஜிலும், டென்னிசனின் இங்கிலாந்து முழுவதிலுமேகூட, இலக்கியக் கலாச்சாரம் ஓங்கிவளர இது அடிப்படையாய் விளங்கிற்று; எனினும், நவீனகாலத்தின் தேவைகளுக்கு இது போதுமானதன்று. 'பொதுப் பள்ளி வாழ்வு' என்ற அந்த உலகில், தங்களது சமுதாயத்தை அமைக்கவும் ஆளவும் பையன்களுக்குச் சுதந்திரம் இருந்தது; இதனால் சிந்தனையைவிட குணஇயல்புகள் நன்கு வளர்ந்தன; அவர்களுக்குள் ஒற்றுமை உணர்வுக்குத்தான் அதிக ஊக்கமளிக்கப்பட்டதே யொழிய அறிவுவளர்ச்சிக்கு அன்று. டாக்டர் ஆர்னல்ட் இறந்து சுமார் இருபது ஆண்டுகள் கழிந்த பின்னர், எதையும் துருவி ஆராயும் இயல்புடைய அவரது புதல்வர் மேத்யூ, ஆங்கிலேய ஆளும்வகுப்பைக் 'காட்டு மிராண்டிகள்' என்று அழைத்தார்: 'பூமியின் ஆதிகாலத்து உறுதிமிக்க மனிதர்களின்' நிறை குறை இரண்டையுமே காப்பதற்குப் பொதுப்பள்ளிகள் உதவின.

மேல்வகுப்பு, மத்தியதர வகுப்பின் மேல்பகுதி, வழக்கறிஞர் போன்ற தொழில்செய் வகுப்புகள் ஆகிய எல்லாம் பொதுப்பள்ளிகளில் ஒரே சமூகமாக அமைந்தன; இதே காரணத்தினால், வேறு கல்விமுறையில் பயின்று வந்த இதர வகுப்புகளிலிருந்து இவை மேலும் அதிகமாகப் பிரிந்து சென்றன. வகுப்புகள் தனித்தனியே ஒதுங்கி வாழ்வது கல்வியினால் அதிகப்பட்டது; நவீனப் பெருநகரங்களில் வெவ்வேறு வகுப்புகள் வெவ்வேறு பகுதிகளில் வாழ்வதும் ஏற்பட்டது. மேலும் இலக்கணப் பள்ளி, பகல் பள்ளி (Day School) ஆகியவற்றைவிடப் பொதுப்பள்ளியில் செலவு மிக அதிகம்; நடுத்தர வகுப்பினரும் தொழில்செய் வகுப்பினரும் (professional class) இப் பளுவைத் தாமே விரும்பி ஏற்றுக் கொண்டாலும் கூட, அவர்களாலும் தாங்கமுடியவில்லை. அந் நூற்றாண்டின் இறுதியில் சமுதாயத்தின் மிகச்சிறந்த சில பிரிவுகளில் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்ததற்கு இது ஒரு பிரதான காரணம்.

நவீன இங்கிலாந்தின் வெற்றியிலும் தோல்வியிலும் பெரும்பகுதி பொதுப்பள்ளிகளினால் விளைந்தவையே. ஆங்கிலேயர்களின் உள்உணர்வும் குண இயல்புகளும் தம்மையுமறியாமல் உருவாக்கிய பெரிய அமைப்புகளில் பொதுப்பள்ளியும் ஒன்று; நமது பாராளுமன்றங்களைப் போல் அயல்நாடுகளில் அமைத்தாலும் அமைக்கலாம்; ஆனால் பொதுப்பள்ளிகளை அமைப்பது கடினம்.

அந் நூற்றாண்டின் மத்தியில் பெண்களுக்கான இடைத்தரக் கல்வி (secondary education) வசதிகள் மிகக் குறைவு.

தங்களது சகோதரர்களின் செலவு மிக்கக் கல்விக்காகப் பணம் மிச்சம்பிடிக்க வேண்டி இவர்களது நலன்கள் பலி யிடப்பட்டன. இந்த விஷயத்திலும் வேறு பல விஷயங் களிலும் பெண்களின் விடுதலையும் முன்னேற்றமும் விக் டோரியா ஆட்சியின் இறுதி முப்பதாண்டுகள்வரை ஒத்திப் போடப்பட்டன. அந்த முப்பதாண்டுகள்தாம் இங்கிலாந்தில் 'பெண்களின் உண்மையான விடுதலைக் காலம்.'

மேல்வகுப்பினரைக் 'காட்டுமிராண்டிகள்' என்றும் நடுத் தர வகுப்பினரைப் 'பிலிஸ்தியர்கள்' என்றும் துணிச்ச லோடும் ஆத்திரமூட்டும் வகையிலும் மேத்யூ ஆர்னல்ட் வருணித்தார். ஆயினும், தாம் நிந்தித்த அந்தக் காலத்தின் சிறந்த தீர்க்கதரிசியும் கவிஞரும் அவரேதாம். 'உலகிலேயே படுமோசமானது' என்று நமது இடைத்தரக் கல்வியை அவர் கண்டித்தார். ஆயினும், பத்தொன்பதாம் நூற்றுண்டு இங்கி லாந்தின் உயர்கலாச்சாரம் பல தரப்பட்டதாகவும், உறுதி மிக்கதாகவும், சமூகத்தில் பரவலாகவும் காணப்பட்டது என் பது மறுக்கமுடியாத உண்மை. இத்தகையதொரு நேர்த்தி யான, பரவலான கலாச்சாரத்தை இன்னும் பல நூற்றுண்டு கள் வரையில் உலகம் காண்பது இயலாது.

ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்தியிலேயே தொழில்வளர்ச்சி காரணமாக மக்களின் கருத்துகளிலும் பழக்க வழக்கங்களிலும் தரக்குறைவு ஏற்பட்டு வந்தது. இது வெகு சீக்கிரத்திலேயே இலக்கியக் கலாச்சாரத்தின் உயர்ந்த தரத்தை அழித்துவிடும்; புதிய பத்திரிகை உலகம் பிறந்து, கிராமப்புறங்கள் சீரழிந்து, வாழ்வு இயந்திரமாகி யதும் இது நடைபெறும். இறுதியில் விஞ்ஞானக் கல்வி வந்த பொழுது மனிதாபிமானக் கோட்பாடுகள் விரட்டப்பட்டன. ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் கல்வியானது இன்னும் மனிதாபிமான அடிப்படையிலேயே தான் அமைந்திருந்தது; விஞ்ஞானத்தின் ஆக்கிரமிப்பு இன் னும் தொடங்கவில்லை. இத்தகைய கல்வியின் நடைமுறை யில் பெரிய குறைபாடுகள் சில காணப்பட்டாலும், விசால மான நூலறிவின் அடிப்படையில் ஒரு பெரிய இலக்கிய நாகரிகம் அக்காலத்தில் உருவாவதற்கு இது தற்காலிகமாக வகை செய்தது; பதினெட்டாம் நூற்றுண்டைக் காட்டிலும் அதிகமான அளவில் அறிவுக்கூர்மை மிக்க வாசகர்களையும் இது உண்டுபண்ணிற்று; பாய்லோவும் (Boileau) போப்பும் (Pope) இலக்கியச்சுவைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய முந்திய காலத்தைவிட பலதரப்பட்ட, விசாலமான நடையை

யும் கருத்துகளையும் இக்காலத்திய இலக்கியத்தில் காண முடிந்தது. இலக்கியம், சிந்தனை, சமுதாயம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் பிரபுத்துவத்திலிருந்து ஜனநாயகத்துக்கு மாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருந்த காலம் அது; அதே போல் கண்மூடித்தனமாகப் பழையதை ஏற்றுக்கொள்வது போய் மக்கள் சிந்தித்து முடிவுசெய்த காலம் வந்துகொண்டிருந்தது. இத்தகைய நிலைமைகள் குறுகிய காலமே நீடித்தன என்றாலும், இலக்கியமும் சிந்தனையும் வளருவதற்கு அவை ஏற்றவையாயிருந்தன.

சிறப்பான வரலாற்று நூல்கள் எல்லா வகுப்புகளைச் சேர்ந்த வாசகர்களுக்காகவும் எழுதப்பட்டன; பெரும் புகழ் பெற்றன. இத்தகைய சிறப்பான வரலாற்றுசிரியர்களில் மெக்காலேயும் (Macaulay) ஒருவர். சுதந்திரமான சமய விவாதங்கள், ஒழுக்கநெறி பற்றிய சிந்தனை, வைதீகச் சமயக் கோட்பாடுகள்பற்றிய கவலையும் மரியாதையும் கூடிய ஐயங்கள், புதியவைகளைப் பற்றிய ஆராய்ச்சி ஆகிய இவையெல்லாம் கார்லில், ரஸ்கின், In Memoriam எழுதிய ஆசிரியர் ஆகிய சிந்தனைவளம் மிக்க எழுத்தாளர்களுக்கு உயிரும் உணர்வும் ஊட்டின; இதன் விளைவாக இறந்து போன பைரனைவிடவும் வயோதிகர் வேர்ட்ஸ்வொர்த் அதிகப் புகழ் பெற்றார். அதே சமயத்தில் சமுதாயத்தைப்பற்றிய ஒரு திறனாய்வு டிக்கன்ஸ், தேக்கரே, திருமதி கேஸ்கெல், ட்ரோலோப் ஆகியவர்களுக்கு உற்சாகத்தையும் மக்களிடையில் பெரும் ஆதரவையும் தேடித்தந்தது. சமுதாயம் மிகவும் குறையுடையது என்பது தெரிந்திருந்தாலும் அதைத் திருத்த முடியும் என்று இவர்கள் நம்பினார்கள். பெண்கள் விஷயத்திலும்கூட ஆளுமை (personality) உரிமைகள், பிரான்ட் சகோதரிகளின் (Bronte sisters) நாவல்களில் நன்கு படம் பிடித்துக் காட்டப்பட்டன; பிளாரன்ஸ் நைட்டிங்கேலின் (Florence Nightingale) பணிகளிலும் இது நன்கு புலனாயிற்று. Liberty (1859), Subjection of Women (1869) ஆகிய தமது நூல்களில் சமூக வழக்கங்களை (convention) ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) தாக்கி, சுதந்திரமாக வாழவும் சிந்திக்கவும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை உண்டு என்று விளம்பரம் செய்தார்; விக்டோரியாக் காலத்தின் முன்பகுதிக்கும் பின் பகுதிக்கும் இடையில் ஒரு திருப்புமையமாக இது விளங்கியது எனலாம்.

மனிதாபிமானத்துக்கு மிகவும் நெருங்கிய விஞ்ஞானம் இயற்கையை அன்னியோன்னியமான முறையிலும் நேசத்

துடனும் அணுகி ஆராய்வது; அக்காலத்திய இலக்கியத்தின் தூண்டுசக்திகளில் இது ஒன்று; இலக்கியத்தை எல்லா வகுப்பினரும் விரும்பிப் படித்ததற்கு இதுவும் ஒரு காரணம். பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பகுதியில் இதற்காக வழி வகுத்தவர்கள் செல்போர்னைச் சேர்ந்த ஒயிட்டும் (White of Selborne) பெவிக்கும் (Bewick) மற்ற இயற்கை விரும்பிகளும் (naturalists) ஆவர். இயற்கையை ஆராய் வதே இவர்களில் சிலரது தொழில்; வேறு சிலர் பல வேலை களுக்கிடையில் இதிலும் கவனம் செலுத்தினர். இயற்கை உலகைக் கூர்ந்த கண்கொண்டு நோக்கிப் போற்றவேண்டு மென்றும், அதில் வாழ்வது மனிதனுக்கு ஒரு பெருமை என் றும் அவர்கள் தம் நாட்டினருக்குக் கற்பித்தனர். அந் நூற் றாண்டின் இறுதியில் இயற்கையைக் கூர்ந்து நோக்கும் இந்தப் பரவலான பழக்கம் கிர்ட்டின் (Girtin), டர்னர் (Turner), கான்ஸ்டபிள் (Constable) ஆகியோரின் இயற்கை ஓவியங்களி லும் வேர்ட்ஸ்வொர்த், கீட்ஸ் ஆகியோரின் கவிதைகளிலும் நன்கு புலப்பட்டது. அடுத்த தலைமுறையில், 1830-60 ல் டி வின்ட் (de Wint), டேவிட் காக்ஸ் (David Cox), எட்வர்ட் லியர் (Edward Lear) முதலிய பலர் திறமைமிக்க இயற்கைப் பட ஓவியர்களின் பட்டியலில் சேர்ந்தனர்; பொது மக்களிடையில் இவர்களது ஓவியங்கட்குப் பெரும் கிராக்கி இருந்தது; நீர்வண்ணத்தைப் (water-colour paint) பயன் படுத்தியும் கூட இத் தேவையை இவர்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. கவிதைத்துறையில் கிட்டத்தட்ட விக்டோரி யாக் காலம் முழுவதுமே டென்னிசன் எழுதிக் கொண்டிருந் தார். இயற்கையின் வருணிப்பில் அவர் காட்டிய உறுதியும் அழகும் தெளிவும்தாம் அவரது பெரும் புகழுக்குக் காரணம்.

டென்னிசன் தமது கவிதைப்படைப்பின் உச்சக்கட்டத்தி லிருந்தபொழுது இயற்கையைப் பற்றிய தமது மிகப் பொருத்தமான வருணனைகளுக்கு 'கடலிலும் நிலத்திலும் எப் பொழுதுமே காணப்படாத அந்த ஒளியைக்' கொண்டு அணி செய்ய முடிந்தது. இதனால் விக்டோரியாக் காலத்து மக்கள் அவரை விரும்பிப் படித்தனர்; அவர் சொல்லின் மந்திர சக்தியிலும் இயற்கையின் அழகிலும் கட்டுண்டனர். டென்னிசனின் கவிதைகள் காட்டிய வெகு துல்லியமான சித்திரங்கள், தாம்சனின் Seasons காட்டிய தெளிவற்ற இயற் கைக் காட்சிகளின் இடத்தைக் கைப்பற்றின. டென்னிசன் வரும்வரையில் தாம்சனின் இந்தக் கவிதைகளே நடுத்தர வகுப்பு வாசகர்களால் பெரிதும் விரும்பப்பட்டன. விக் டோரியா ஆட்சியின் ஆரம்பத்தில் Cranford நாவலில்

டென்னிசனைப்பற்றி சீமாட்டிகளுக்குச் சொல்லப்படுகிறது: 'ஆஷ் (ash) மரத்தின் அரும்புகள் கறுப்புநிறம் என்று இந்த இளைஞர் எனக்குக் கூறுகிறார்; நான் போய்ப் பார்க்கிறேன்; அவை கறுப்பாகத்தா மிருக்கின்றன.'

இதே காரணத்தினால்தான் இதே வாசகர்களிடத்தில் ரஸ்கினும் புகழ்பெற்று விளங்கினார்; அந் நூற்றாண்டின் நான்காவது பத்தாண்டுகளில் இவர் திடீரெனத் தோன்றிப் பல்லாண்டுகள் புகழுடன் வாழ்ந்தார். ஆங்கிலேய இயற்கைக் காட்சி ஓவியர்களின் சிறப்பைக் குறிப்பாக, டர்னரின் (Turner) சிறப்பை எடுத்துக்காட்டுவதற்காகவும், பின்னர் ரபேலுக்கு முந்திய ஓவியர்களை (Pre-Raphaelites) ஆதரிப்பதற்காகவும் இவர் Mordern Painters என்ற நூலை எழுதினார். இந்நூலில் தெள்ளத் தெளிவான, அற்புதமான உரைநடையில் மேகம், மலை, செடி கொடி மரங்கள் ஆகியவற்றின் அழகை—மனிதனின் மகிழ்ச்சிக்காகக் கடவுள் எங்கும் விரித்திருக்கும் வனப்பை—அலசி ஆராய்ந்தார். இவ்விதங்களில் சில ஓவியங்கள் உண்மையோடு ஒத்திருப்பதைக் கொண்டுமட்டும் அவைகளின் மதிப்பை அவர் கணக்கிட்டதில் தவறுகள் நேர்ந்திருக்கலாம்; ஆயினும், தம் நாட்டினர் ஆல்ப்ஸ் மலைகட்கும் இத்தாலிக்கும் பயணம் செய்தபொழுதும், தங்களுக்கு மிகவும் பழக்கமான தமது நாட்டுக் காடுகளிலும் வயல்களிலும் உலவச் சென்றபொழுதும், அவர்களுக்கு புதிய கண்களை இவர் அளித்தார் என்பது உண்மை.

ஐரோப்பாவில் ஓரளவு அமைதியும் பல்வகைப்பட்ட அழகும் இன்னும் நிலவிவந்தன. இன்னும் இயந்திரங்கள் பரவவில்லை; போரும், தேசீய வெறுப்புகளும் இன்னும் ஐரோப்பாவின் கதவுகளை அடைக்கவில்லை; எனவே, புதிதாகப் பெற்ற பெருஞ் செல்வத்தை ஸ்விட்சர்லந்தின் மலைகளையும் மலர்நிறைந்த புல்வெளிகளையும், நெதர்லந்து, இத்தாலி, பிரான்சு ஆகியவற்றின் கட்டட அழகையும் ஓவியக்கூடங்களையும் இயற்கை யழகையும் கண்டு இரசிப்பதில் செலவிடுவதற்காக மக்கள் ஆயிரக் கணக்கில் ஐரோப்பாவுக்குச் சென்றனர். இயற்கையின் உலகையும் மனிதனின் உலகையும் அவைகளின் அழகையும் கண்டு இரசிப்பதற்காக வேண்டி வரலாறு, இலக்கியம், இயற்கை விஞ்ஞானம் ஆகியவை பற்றி ஓரளவு அறிந்த தமது விரிந்த மனத்துடன் ஆங்கிலேயப் பிரயாணிகள் அயல் நாடுகளுக்குச் சென்றனர்.

அதே சமயத்தில் ஸ்காட்லந்தின் ஹைலந்து பகுதியில் இரயில் பாதைகள் புகுந்தன. மலைக்காற்றிலும் காட்சியிலும் தினைக்க விரும்பிய ஆங்கிலேயர்கள் அங்குச் சென்றனர்; செல்வ மிகுந்த, நவநாகரிக முதிர்ந்த மனிதர்களுக்கு மான் வளர்ப்புக் காடும் (deer-forest) கிரௌவ்ஸ் பறவைச் சதுப்பும் (grouse-moors) இருந்தன; இலையுதிர்காலங்களில் இங்கு விருந்தினர்களை அவர்கள் உபசரித்தனர். பால்மோரலிலிருந்து (Balmoral) விக்டோரியா அரசியாரும் ஆல்பர்ட் இளவரசரும் சதுப்பு நிலங்கட்குச் சென்றதும், இளவரசர் சுட்டுக் கொன்ற மானும், அதைப் பற்றி லேண்ட்சீர் (Landseer) தீட்டிய ஓவியமும், எல்லா வகுப்புகளைச் சேர்ந்த ஆங்கிலேயரும் ஹைலந்தின் இயற்கைஅழகை அறியும்படி செய்தன; ஸ்காட் தீட்டிய காதல் காட்சிகளின் களத்தை இப்பொழுது அவர்களால் காண முடிந்தது.

பல விதமான இயற்கை அழகுக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் தேவையான ரசனை உள்ளம் அந்நூற்றாண்டின் மத்தியில் விக்டோரியாவின் குடிகளிடம் வளர்ந்திருந்தது. பண்டைக் காலத்துப் பேரிலக்கியங்களை வாசித்தும் புதிய பேரிலக்கியங்களைப் படைத்தும் ஒரு மாபெரும் இலக்கிய நாகரிகத்தை அவர்கள் அனுபவித்தனர். ஆனால், நமது இந்த மூதாதையர்கள் ரோமானியர்களின் கால்வாய்ப்பாலங்களையும் (aqueducts) காதிக் கதீட்ரல்களையும் கண்டு இரசிப்பதற்காகக் கடலையும் நிலத்தையும் கடந்து சென்றனரே யொழிய. அவர்கள் கட்டிய கட்டிடங்கள் பரிதாபகரமானவை; அவைகளில் மேசை நாற்காலிகளையும் வேறுபல தேவையற்ற பொருள்களையும் போட்டு அடைத்தனர். ரீஜன்சி காலத்துக்கும் ஆல்பர்ட் இளவரசரின் காலத்துக்குமிடையில் இவ்வகையில் கலைச்சுவை குன்றியது வேடிக்கையாக இருக்கிறது. மிகவும் பண்பட்ட, தேர்ந்த கல்விபெற்ற வகுப்பினரும்கூட மற்றவர்களைவிட எவ்விதத்திலும் கலைச்சுவையில் மேம்பட்டிருக்கவில்லை; வில்லியம் பட்டர்பீல்ட்(William Butterfield), ஆல்பிரட் வாட்டர் ஹவுஸ் (Alfred Waterhouse) ஆகியோரின் காலத்தில் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் டான்களின் (Dons) உத்திரவின்படி நிர்மாணிக்கப்பட்ட அகோரக் கட்டடங்கள் எதிர்காலத்தினரை அருவருப்பால் கண்களை மூடிக்கொள்ளும்படி செய்கின்றன.

பண்டைக்காலத்தில் கட்டப்பட்ட பல அழகிய மேனர் இல்லங்கள் (manor-houses) அக்காலத்தில் இடிக்கப்பட்டன. இது மிகவும் வருந்தத் தக்கது. இவ்விடங்களில் கண்ணை

உறுத்தும் பல கிராமப் புறத்து மாளிகைகள் கட்டப்பட்டன. பிரிட்டனின் வரலாற்றிலேயே மிகவும் செழிப்புமிக்க அக் காலத்தில் வசித்த செல்வந்தர்கள் இலண்டனிலிருந்து தங்கள் விருந்தினர்களை அங்கு அழைத்து உபசரித்தனர். சிறந்த கலைச்சுவையும், பாங்கில் (bank) குறைந்த பணமும் உடைய அவர்களது சந்ததிகள் தங்களுக்கு இவ்வாறு விட்டுச்செல் லப்பட்ட இந்தச் சுமைகளைப்பற்றி வருந்த வேண்டி யிருந்தது.

விக்டோரியாக் காலத்தில் கட்டடக்கலையில் காணப்பட்ட இந்தச் சீர்கேட்டின் காரணங்களைக் கண்டுபிடிப்பது எளி தன்று. ஆனல் ரஸ்கின் ஓரளவு இதற்குப்பொறுப்பாவார். ஆங் கிலேயக் கட்டடக் கலை ஒரு முக்கியப் பகுதியாக விளங்கிய மறுமலர்ச்சிக் காலத்துப் (Renaissance) பாணியை, வேடிக்கை யான சமயக் காரணங்களைக்கொண்டு, அடியோடு கண்டனம் செய்தார் அவர். பெரும் பண்டிதரான அவரது கருத்துகள் சமுதாயம் முழுவதும் பரவி அவரது நூல்களில் ஒருவரியை யும் படிக்காத மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஊக வாணிப நோக்கத்தோடு வீடுகட்டியவர்கள் (jerry-builders) தமது கட்டடங்களில் 'காதிக் அலங்காரத்தின் ஒரு துளியைச்' சிந்திவிட்டால் எல்லாம் பிரமாதமாகிவிடும் என்று கருதினர். கட்டடக்கலையின் உயிர்நாடியான தகவுப் பொருத்தத்தைப் (proportion) பற்றி யாரும் கவலைப்படவேயில்லை. இந்தச் சீர் கேட்டுக்கு அடிப்படைக் காரணம் தொழிற்புரட்சி: கட்டடத் தொழிலிலும் மற்றத் தொழில்களிலும் இயந்திரங்கள் புகுத்தப் பட்டதால் கைத்திறன் குறைந்து போயிற்று. அங்கங்குக் கிடைத்த பொருள்களைக்கொண்டு அங்கங்கு நிலவிய வழக் கத்தின்படி முன்பு கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆனல் இரயில் பாதைகள் வந்தபின் ஒரே மாதிரியான விலைமலிவான செங் கற்களும் பலகைகளும் எங்கும் குவிந்தன; ஒவ்வொரு பிர தேசத்துக்கும் இயல்பான கல், கல்ஓடுகள், விழல், மெல்லிய செங்கல் ஆகியவை மறைந்தன; வழிவழி வந்த திறன், பிர தேச மரபு ஆகியவைகளைப் பின்னணியாகக் கொண்ட முந்திய தலைமுறையினர் இவைகளைத்தான் அற்புதமாகக் கையாண்டனர். ஆனல், இப்பொழுது நவீன முறைகளைப் பயன்படுத்தி மலிவாக ஆயிரக்கணக்கில் வீடுகளைக் கட்டிக் குவிப்பதே எங்கும் நோக்கமாயிற்று. இயந்திரங்களால் செய்யப்பட்ட நவீன மரச்சாமான்களும்கூட இதே போல் மோசமாயின. தடித்த, மெத்தை தைக்கப்பட்ட, கை வைத்த நாற்காலிகளும் புதிய வீடுகளும் அதிக வசதியுடையவை

யாக இருக்கலாம்; ஆயினும், அழகு தனது சிறகுகளை விரித்துப் பறந்து சென்றுவிட்டது.

1840-70-ல் ஓவியம் தீட்டுவது ஒரு பெரிய தொழிலாக நடைபெற்று வந்தது; ஓவியங்களுக்கு அவ்வளவு கிராக்கி இருந்தது. ஏனெனில், புகைப்படக்காரர் (photographer) தமது விஞ்ஞானத்தை அவ்வளவு தூரம் இன்னும் அபிவிருத்தி செய்யவில்லை; எனவே, குடும்பப் படங்களை வரைதல், புகழ்மிக்க ஓவியங்களைப் பிரதிசெய்தல், பண்டைக் கட்டடங்களையும் பிரசித்திபெற்ற இயற்கைக் காட்சிகளையும் தீட்டுதல் ஆகிய வேலைகளைச் சித்திரக்காரர்களே இன்னும் செய்துவந்தனர். ரோமிலும், ஐரோப்பாவில் கலையில் சிறந்த ஒவ்வொரு தலைநகரிலும் திறமையானவர்களும் திறமையற்றவர்களுமாக ஓவியர் பட்டாளங்கள் பல இருந்தன. இயற்கைக் காட்சிகளைத் தீட்டுதல், 'பழம் பெரும் சைத்ரிகர்களின்' ஓவியங்களைப் பிரதிசெய்தல் ஆகிய வேலைகளைச் செய்து ஆங்கிலேயப் பிரயாணிகளுக்கு இவை விற்றன. தங்களது பிரயாணங்களின் நினைவாக இவைகளை இப் பிரயாணிகள் நம் நாட்டுக்குக் கொண்டுவந்தனர். இராயல் அகாதமி (Royal Academy) புகழுடன் விளங்கியது. வளர்ந்துவரும் தொழிலதிபர்களுக்கு உருவப் படங்கள், இயற்கைக் காட்சிகள், வரலாற்று ஓவியங்கள் ஆகியவற்றை விற்று அது பொருளீட்டியது. அவர்களது வசதி மிகுந்த, புதிய கலைச்சுவை இல்லாத, பகட்டான வீடுகளின் விசாலமான சுவர்களில் அவை தொங்கின. இத்தொழில் இவ்வளவு விரிவாக நடைபெற்றதுதான் ரஸ்கின் இவ்வளவு முக்கியத்துவம் பெற்றதற்கு ஒரு காரணம். முன்பு Edinburgh Review, Quarterly Review ஆகியவை எவ்வளவு சர்வாதிகாரத்தை இலக்கியத்தில் காட்டினவோ அந்த அளவு சர்வாதிகாரத்தை இவரும் கலையுலகில் கையாண்டார். செல்வாக்கற்றுப் போன ரா. அ.வின் (Royal Academy) முறையீடுகளைக் கீழ்வரும் பாடல் மிகவும் கிண்டலாகக் குறிப்பிடுகிறது:

வண்ணவண்ண ஓவியங்கள்
வரைந்தேன்; அதனில் குறையில்லை.
வண்ணம் உலர்ந்து காயுமுன்னே
விற்றேன் அவற்றை நன்றுக;
கண்டான் ரஸ்கின் எனுங் கொடியோன்
குறைகள் சொன்னன் பலவாக
அண்டி வந்து அதை வாங்க
அச்சம் கொண்டார் அனைவரும்தாம்.

சீர்திருத்த மசோதாவுக்கு முந்திய ஆண்டுகளில் சமயச் சக்திகள் சிலவும் சமூகச் சக்திகள் சிலவும் சேர்ந்துகொண்டு நிறுவப்பட்ட திருச்சபையின் மதகுருமார்களை அழிக்கக் காத்திருந்தன அல்லவா? திருச்சபையின் நலன்கள் கை கோத்து நின்ற[1] பழைய நகரசபைகளையும் (Municipal Corporations) அதே சக்திகள் அச்சுறுத்தின. சுயச் சீர்திருத்தம் செய்து கொண்டு மீண்டும் உயிர்பெற்றெழும் சக்தி திருச்சபைக் கிருந்தது; ஆனால் பழைய நகரசபைகளுக்கு இல்லை. பாராளுமன்றத்துச் சிதைந்த பரோக்களின் (Rotten Boroughs) நிலை தான் இவைகளுக்கும்; இவையிரண்டின் தலைவிதியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவையாயிருந்தன. 'சிதைந்த பரோக்கள்' செத்து மூன்றாண்டுகள் சென்ற பிறகு சிதைந்த (rotten) நகர சபைகளும், 1835-ம் ஆண்டின் நகர சபைச் சீர்திருத்தச் சட்டத்தின் (Municipal Reform Act) மூலம் அகற்றப்பட்டன.

புதிய வகுப்புகளின் (classes) கைகளுக்கு இச் சட்டம் அதிகாரத்தை உடனடியாக மாற்றியது; நகரத்தின் சமூக வாழ்வை இது பெருமளவில் மாற்றியது. இது இச் சட்டத்தின் முக்கியமான விளைவு. எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிகப் பலன்கள் ஏற்பட்டன; இந்த அடிப்படையின்மீதுதான் அடுத்த நூறு ஆண்டுகளில் சமூகத்தின் எல்லா வகுப்பினருக்கும், குறிப்பாக ஏழைகளுக்குப் பெரும் பயனளித்த நகரசபைப் பொதுப்பணிகள் என்ற மாபெரும் அமைப்பு உருவாகப் போகிறது. 'புதிய நகர சபைகள்' தெருக்களைச் சீர்செய்து விளக்கேற்றி வைக்கும்; அதற்கும் மேலாக வீடுகள் கட்டுதல், பரோவின் சுகாதார அமைப்பு ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும்; தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதற்கும் திரும்பிவருவதற்கும் போக்குவரத்துச் சாதனங்களை ஏற்பாடுசெய்யும்; பொதுநூலகங்களை நடத்தும். பெரும் நகர்சபைத் தொழில்களை நடத்தும்; இறுதியாக மக்களுக்குக் கல்வியூட்டும். இவையனைத்தையும் நகர சபைகள் செய்யக்கூடிய நாள் வரும் என்று 1835-ல் ஒரு வரும் எதிர்பார்க்கவில்லை.

இச் சட்டத்தினால் டிஸ்ஸென்டர்களுக்கும் கடைக்காரர்களுக்கும் அதிகாரம் மாற்றப்பட்டது. உடனடியாக ஏற்பட்ட

[1] இந்த உறவுகளைப்பற்றித் தெரிந்துகொள்வதற்குப் பார்க்க: 1940-க்கான Royal Historical Society Transactions என்ற வெளியீட்டில் A Leicester Election of 1826 என்ற கட்டுரை; மேலும் Halevy's Hist. of Eng. People (Ernest Benn, Watkin's transla. 1927), III, பக். 217-220.

இந்த மாறுதலைப் பற்றித்தான் அப்பொழுது வாழ்ந்த மக்கள் பரபரப்புற்றனர். பழைய நகரசபைகளில் அதிகாரமனைத்தையும் டோரிக் கட்சி வழக்கறிஞர்களும் மதகுருக்களும் பிரபுக்களின் ஆட்களும் மட்டுமே பெற்றிருந்தனர்; இப்பொழுது இவர்களது கையிலிருந்து அது பிடுங்கப்பட்டுவிட்டது. புதிய நகராட்சித் தலைவரிடம் 'இனிமையும் ஒளியும்' முன்பு போல் அவ்வளவு அதிகம் இல்லை; எனினும், அவரது ஆட்சியில் கரடுமுரடான ஒரு புதிய வீரியம் இருந்தது; 'அபிவிருத்திகளை' வரவேற்க அது தயாராயிருந்தது. அது மட்டுமின்றி, உண்மையான ஒரு ஜனநாயக முறையில் இந்த ஆட்சியாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; எனவே, மக்களுக்கு வேண்டியதனைத்தும் இவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. 1832-ம் ஆண்டுச் சீர்திருத்த மசோதாவில் பாராளுமன்றத் தேர்தலில் ஓட்டுரிமையானது 'பத்துப் பவுன் வீட்டுக்காரர்களுக்கு' மட்டுமே கொடுக்கப்பட்டது; ஆனால், நகரசபைச் சீர்திருத்த மசோதாவானது ஓர் அடி கூடுதலாக எடுத்துவைத்து வரி செலுத்திய எல்லோருக்கும் தல ஆட்சித் தேர்தலில் ஓட்டுரிமையளித்தது. புதிய பரோக்களின் தலசுயஆட்சித் தேர்தலில் மட்டுமாவது பங்குகொள்வதற்குத் தொழிலாளர் வகுப்புக்கு உரிமை கொடுக்கப்பட்டது. இவ்வாறு முற்றிலும் புதிய மனிதர்களின் கைகளுக்கு நகராட்சி மாறியது; மேலும், பெரிய பரோக்களில் மாஜிஸ்டிரேட்டுகளின் பதவிக்கு, அப்பொழுது எங்கும் செல்வாக்குப் பெற்றுவந்த நடுத்தர வகுப்பினரையும் டிஸ்ஸென்டர்களையுமே விக் அரசாங்கம் நியமித்தது. இங்கிலாந்தின் நகரங்களில் 'பீட்டர்லூ மாஜிஸ்டிரேட்டுகள்' நீதி நிர்வாகம் செய்த நாட்கள் போய்விட்டன.

1832-ம் ஆண்டின் சீர்திருத்த மசோதாவும், அதன் தொடர்ச்சியான 1835-ம் ஆண்டின் நகரசபைச் சீர்திருத்த மசோதாவும் சேர்ந்து நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையிலான வேற்றுமைகளைத் தெள்ளத்தெளிவாகக் காட்டின; அதிகப்படுத்தின. இவ்விரண்டின் சமூக வாழ்விலும் காணப்பட்ட இவ் வேற்றுமைகளை அன்றையப் பொருளாதார சக்திகள் மேலும் மேலும் அதிகமாக்கிக் கொண்டிருந்தன. விக்டோரியாவின் இங்கிலாந்தில் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு சமூக அமைப்புகள் இருந்தன: ஒன்று நாட்டுப்புறத்து மாவட்டங்களைக்கொண்ட பிரபுத்துவ இங்கிலாந்து; மற்றொன்று, பெரிய நகரங்களைக்கொண்ட ஜனநாயக இங்கிலாந்து. கவுண்டிகளும் மார்க்கெட் நகரங்களும் நிர்வாகத் துறையிலும் நீதித்துறையிலும் நாட்டுப்புறக் கனவான்களா

லேயே இன்னும் ஆளப்பட்டுவந்தன; இக் கனவான்களுக்கு முன்னால் எல்லா வகுப்பினரும் கைகட்டி, வாய்புதைத்து நின்றனர். ஆனால் நகரத்தை ஆண்டவர்கள் முற்றிலும் வேறான மனிதர்கள்; ஜனநாயக சமூகக் கருத்துகளை கொண்டு—அதாவது, கனவான்களது சமூகக் கருத்துகளுக்கு முற்றிலும் வேறானவைகளைக் கொண்டு—இவர்கள் ஆண்டனர்.

பொருளாதாரக் காரணங்களாலும் போக்குவரத்துச் சாதனங்கள் அபிவிருத்தியடைந்ததாலும் நகரத்தின் புதிய சமுதாயம், நாட்டுப் புறத்துப் பழைய சமுதாயத்தின்மீது இடைவிடாமல் ஆக்கிரமிப்பு நடத்திக்கொண்டேயிருந்தது; இருபதாம் நூற்றாண்டில் நகர்ப்புறச் சிந்தனையும் கருத்துகளும் அரசாங்கமும் நாட்டுப்புறத்தின்மீது முழுமையாக வெற்றிபெற்றவரை இந்த ஆக்கிரமிப்பு நடைபெற்று வந்தது. ஆனால், அது ஒரு நெடுங்கால வளர்ச்சி; எனவே, பத்தொன்பதாம் நூற்றாண்டு ஒரு மாற்ற-இடைநிலைக்காலம் (age of transition). 1846-ம் ஆண்டில் தானியச்சட்டங்கள் ரத்தானதால் (Repeal of the Corn Laws) விவசாயம் உடனே அழிந்து விடவில்லை; அதுமட்டுமின்றிக் கிராமங்களிலும் மார்க்கெட் நகரங்களிலும்பிரபுத்துவஆட்சியும் அழிந்து போகவில்லை. ஒரு தலைமுறைக்குப் பிறகு அமெரிக்க வயல்கள் தமது தானியத்தையும் மாடுகளையும் இங்கிலாந்தின் மார்க்கெட்டில் கொண்டுவந்து குவிக்கும் வரையில் ஆங்கிலேய விவசாயம் செழித்தது; அத்துடன் சம்பந்தப்பட்ட சமூக அமைப்பும் நீடித்தது.

ஆனால், விவசாயம் முடிவில்லாமல் தொடர்ச்சியாக வளர்ந்துகொண்டே போகமுடியாது; அந் நூற்றாண்டின் மத்தியில் அது தனது வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை எட்டிவிட்டது; விவசாய நிலத்தின் பரப்பளவை மேலும் அதிகரிக்க முடியவில்லை. மறுபக்கத்தில், தொழிற்புரட்சியும் வாணிகப் புரட்சியும் முழுமூச்சுடன் நடைபெற ஆரம்பித்தன; நகரத்தின் செல்வமும் மக்கட்தொகையும் ஆண்டுதோறும் அதிகரித்தன. நாட்டின் மொத்த மக்கட்தொகையில் பாதிப்பேர் நகரங்களில் வசித்தனர் என்பதை 1851-ம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்புக் (Census)காட்டிற்று. 'உலக வரலாற்றில் ஒரு பெரிய நாட்டில் எப்பொழுதுமே இத்தகையநிலை ஏற்பட்டதில்லை.' (Clapham I, பக் 536) மேலும், இந்த ஆபத்தான போக்கு நிற்பதற்கான அறிகுறியையும் காணோம்; எதிர்காலம் விநோதமாக இருக்கும் என்பதை அது சுட்டிற்று. ஜான் புல் (John

Bull) கிராமத்தானுகவும் விவசாயியாகவும் இருந்த காலம் மறைந்து வந்தது. அவன் முழுக்கமுழுக்க நகரத்தானுக ஆனபிறகு, ஜான்புல்லாக இருப்பானு? அல்லது Punch பத்திரிகையின் கேலிச்சித்திரங்களில் மட்டும்தான் அவனைக் காணமுடியுமா?

ஆங்கிலேய மக்களில் இவ்வளவு பெருந்தொகையினர் 1951-ல் வசித்துவந்த புதிய நகர்ப்புற நிலைமைகள் கடைசியில் மக்களின் கவனத்தை ஈர்த்தன; அவைகளுக்குப் பரிகாரம் கண்டுபிடிக்க விரும்பினர். காற்றோட்டமான திறந்த கிராமத்து வெளியில் மக்கள் வாழ்ந்த பழைய வாழ்வில் வீடுகட்டுதல், சுகாதார அமைப்பு ஆகியவைபற்றி எந்தவிதமான கட்டுப்பாடும் வேண்டியிருக்கவில்லை; அது வேண்டுமென்று மக்களும் விரும்பவில்லை: கிராமத்துக் குடிசைகள் மோசமாக இருந்தனவாயினும் இறப்புவீதம் நகரத்தைவிட கிராமத்தில் குறைவு. 1780-க்கும் 1810-க்குமிடையில் இறப்புவீதம் வேகமாக வீழ்ச்சியுற்றது; ஆனல் நகரத்தில் வசிக்கும் மக்களின் விகிதம் அதிகரிக்கவே 1810-க்கும் 1850-க்குமிடையில் இந்த வீழ்ச்சி தடுத்து நிறுத்தப்பட்டது. நமது தீவு முழுவதையும் எடுத்துக்கொண்டால் பதினெட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இருந்த அளவுக்கு இறப்புவீதம் மறுபடி எப்பொழுதும் அதிகரிக்கவில்லை; ஆயினும் அது மேலும் வீழ்ச்சியுறவும் இல்லை; மருத்துவ வசதிகளும் விஞ்ஞானமும் வளர்ச்சியுற்றும் கூட இறப்புவீதம் மேலும் குறையவில்லை. இதற்கு முக்கியமான காரணம் தொழிற்சாலைப் புறத்துச் சேரிகள் அதிகமானதும், ஆண்டுகள் செல்லச்செல்ல அவைகளின் நிலைமை மோசமானதும்தான்.

1835-ம் ஆண்டு நகரசபைச் சீர்திருத்தச் சட்டம் டோரி மேல்வகுப்பினரின் ஆட்சியை ஒழித்துக்கட்டியது; மக்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கடைக்காரர்கள், பொதுவிடுதிக்காரர்கள் கட்டடம் கட்டியவர்கள் (builders) ஆகியோரின் ஆட்சி வந்தது. ஆயினும் பொதுசுகாதாரத்தைப் பராமரிப்பதில் எந்த விதமான மாற்றத்தையும் காணேம். சேரிப்புறங்களைக் கட்டி வாடகை வாங்கியவர்களையும் ஊகவாணிப நோக்கத்தோடு வீடுகட்டியவர்களையும் கட்டுப்படுத்த 1840-50-ல் ஒன்றுமே செய்யப்படவில்லை. இம்மனிதர்கள் சுயநலநோக்கத்தோடு பொதுமக்களின் நல்வாழ்வுக்கு வழிசெய்து கொண்டிருக்கிறார்கள் என்று அன்றையத் தலையிடாமைத் (laissez-faire) தத்துவம் வாதித்தது. 'முன்னேற்றத்தின்' வழிகாட்டி

களான இந்த மனிதர்கள் ஒரே அறைகளில் அல்லது பூமிக் கடி அறைகளில் குடும்பங்களைக் குவித்து இடத்தை மிச்சம் பிடித்தனர்; விலைமலிவான கட்டடச் சாமான்களை மிகவும் குறைவாக உபயோகித்தும், சாக்கடை வசதிகள் அமைக்கா மலும், இதையும்விட மோசமாகக், குடிதண்ணீருடன் கலக்கும் வகையில் ஒழுகுகின்ற சாக்கடைக் குழாய்களை அமைத்தும் பணத்தை மிச்சம் பிடித்தனர். நான்கு மூலைகளிலும் நான்கு குடும்பங்கள் வாழ்ந்த ஓர் அறையையும், மரப்பலகைத் தரைக்கு (boarded floor) அடியில் சாக்கடைத் தொட்டி (cess-pool) யிருந்த அறையையும் ஷாபஸ்பரிபிரபு இலண்டனில் கண்டார். முதலில் சீர்திருத்த மசோதா நிறைவேறிய அந்த ஆண்டிலும், பின்னர் 1848லும் காலரா வந்தது நல்லதாகப் போயிற்று; ஏனெனில் இந்தப் புதிய நோயின் பரபரப்பூட்டும் தன்மையினல் சுகாதாரத்துறையில் சில தற்காப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ளும்படிப் பீதியுற்றிருந்த மக்கள் நிர்ப்பந் திக்கப்பட்டனர். அக்காலத்தில் பெரிதும் விரும்பிப் படிக்கப் பட்ட Punch பத்திரிகையில் முழுப்பக்கக் கேலிச் சித்திரம் ஒன்று வெளியாயிற்று; அதில் திரு. பஞ்ச், ஹேம்லெட் (Hamlet) வேடத்தில் நகரத்துச் சாக்கடைக் குழாயின்மேல் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்துள்ளார். 'காணமற்போன ஓர் ஆல்டர்மேனைத் (Alderman) தேடிக்கொண்டிருக்கும் இந்த மூளை, அவரது சவம் தனது வார்டின் (Ward) தண்ணீரை அசுத்தப்படுத்துவதை ஏன் காணக்கூடாது?

முதல் பொதுச்சுகாதாரச் சட்டம் (Public Health Act) 1848-ல் இயற்றப்பட்டது. அது காலராவினலும், எட்வின் சட் விக்கின் (Edwin Chadwick) முயற்சியினலும் தோன்றியது; இரவலர் சட்டக் கமிஷனர்களின் காரியதரிசியாகத் (Secretary to the Poor Law Commissioners) தான் இருந்ததால் நிலைமை இவருக்கு நன்கு புரிந்தது. அவர் எழுதினர்:

'சிறைச்சாலைகள்' முன்பு அசுத்தத்துக்கும் காற்றோட்ட மின்மைக்கும் பெயர்பெற்று விளங்கின; இங்கிலாந்தில் தாம் சென்று பார்த்த படுமோசமான சிறைகளை (ஐரோப்பாவில் தாம் கண்ட படுமோசமான சிறைச்சாலைகளின் பட்டியலில் இவைகளையும் சேர்க்க வேண்டும் என்றார் அவர்) ஹோவர்ட் (Howard) வருணித்திருப்பது நமக்குத் தெரியும்; ஆனல் டாக் டர் ஆர்னட்டும் (Dr. Arnott) நானும் பார்வையிட்ட எடின் பரோ, கிளாஸ்கோ நகரங்களின் சந்து ஒவ்வொன்றும் அசுத் தத்தில் இச் சிறைகளை விஞ்சியது. ஹோவர்ட் வருணிப்பதை விட அதிக அசுத்தமும் அதிக உடல்வருத்தமும் தீயொழுக்க

மும் லிவர்ப்பூல், மான்செஸ்டர், லீட்ஸ், இலண்டன் ஆகிய வற்றில் தொழிலாளர்கள் வசிக்கும் பூமியடி இருட்டறை களில் காணப்படுகின்றன.

ஆனல், 1848–ம் ஆண்டின் பொதுச்சுகாதாரச்சட்டமானது நகரசபைகளால் இன்னும் இருபது ஆண்டுகளுக்கு ஒழுங் காக அமுலாக்கப்படவேயில்லை; மேலும், அச்சட்டத்தின் முக் கியமான உட்பிரிவு, செயல்களுக்கு அனுமதி பெறுவதன் அடிப்படையில் அமைந்திருந்ததே யொழியக் கட்டாயத்தின் அடிப்படையில் அன்று. அந்நூற்ருண்டின் ஏழாவது பத்தாண் டுகளில், இச்சட்டத்தை அமுல் நடத்துவதற்குத் தல ஆட்சிக் குழு (Local Government Board) நிறுவப்பட்டது; சமூகச் சீர் திருத்த ஆர்வங்கொண்ட ஜோசப் சேம்பர்லின் (Joseph Chamberlain) பர்மிங்ஹாமின் மேயரானர்; அப்பொழுது புதிய காலம் பிறந்தது. அப்பொழுதுதான், நகர்சபைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்புகள் என்ற வகையில் பொது மக்கள் உண்மையான பலன்களைப் பெருவாரியாகப் பெற் றனர்; அரசாங்கமும் நல்ல நிர்வாகம் வேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டி வலியுறுத்தியது. கட்டட, சுகாதாரச் சீர்திருத்தங்களின் விளைவாக 1870-80ல்தான் இறப்புவீதத்தில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது; அந் நூற்ருண்டின் இறுதியில்தான் ஆங்கிலேய நகரங்களின் சுகாதாரம் நல்ல முறையில் அமைந்தது.

ஆயினும், அந்நூற்ருண்டின் மத்தியிலேயே கொஞ்சம் அபிவிருத்தி ஏற்பட்டிருந்தது; ஷாபஸ்பரி பிரபு பொதுமக் களிடமிருந்து நிதி வசூலித்துச் சில மாதிரிவாடகை வீடுகளைக் கட்டியிருந்தார். காலரா இங்குக் காலடி எடுத்துவைக்க வில்லை. எனவே, வாடகை வீடுகளைப் பார்வையிடுவதற்கு வகைசெய்யும் ஒரு சட்டத்தைப் பாராளுமன்றம் 1851–ல் இயற்றியது. சுகாதாரம், வெளிச்சம் ஆகியவற்றுக்கு விரோதி யாக விளங்கிய சன்னல் வரியும் (window tax) இச் சமயத் தில் ரத்து செய்யப்பட்டது. மாபெரும் கண்காட்சி (Great Exhibition) நடைபெற்றபொழுது அதன் கண்ணுடிக் கூரை ஹைடி பூங்காவின் (Hyde Park) மரங்களுக்கு மேலாகவும் விரிந்தது; இங்கிலாந்தின் செல்வத்தையும் முன்னேற்றத்தை யும் அறிவுப்பிரகாசத்தையும் காண்பதற்கு உலக முழுவதுமே இங்கு வந்தது. ஆனல், நமது ஏழை மக்கள் எவ்வளவு மோச மான வீடுகளில் வாழ்கிறர்கள் என்பதையும் அவர்கள் பார்ப் பதற்காக வேறு ஒரு 'கண் காட்சி'யை அப்போது நடத்தாமல் போய்விட்டனர்; அது மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும்;

ஏனெனில், பெருமை பேசப்பட்ட புதிய காலத்தில் என்னென்ன ஆபத்துகள் இருக்கின்றன என்பதை வந்திருந்த அன்னியர்கள் தெரிந்து கொண்டிருப்பர். அன்னிய நாட்டுச் சேரிகளும் நம் சேரிகளைப் போன்றே மோசமாயிருந்தன; ஆனால், ஐரோப்பியக் கண்டப்பகுதி நாடுகளின் மக்களில் ஒரு சிறிய விகிதத்தினரே உடல்நலத்துக்குகந்த கிராமங்களை விடுத்து நகரங்களில் வசித்தனர்.

இந்த ஒருதலைபட்சமான 'அரசியல் பொருளாதாரத்தினால்' (Political Economy) அவதியுற்ற ஏழை எளியவர்களைக் கண்டு இரங்கிய சிலர் அதை ஓர் 'இருண்ட விஞ்ஞானம்' (dismal science) என்று வருணித்தனர். இதற்குக் காரணம் என்ன? சட்விக்கின் (Chadwick) சுகாதாரச் சட்டத்தை எதிர்த்து மே 1848-ல் பத்திரிகையில் (Economist) வெளிவந்த இந்தப் புனிதமான வரிகளைக் கவனிக்க:

'துன்பமும் தீமையும் இயற்கை நமக்குத் தரும் தண்டனைகள்; அவைகளை ஒழிக்க முடியாது; அருளுள்ளம் படைத்தவர்கள் அவைகளை உலகத்திலிருந்து அகற்றுவதற்காகப் பொறுமையை யிழந்து சட்டம் இயற்றுகிறார்கள்; இதனால் எப்பொழுதும் நன்மையைவிடத் தீமையே அதிகம் விளைகிறது. எனவே துன்பம், தீமை ஆகியவற்றின் காரண காரியங்களை அருளுள்ளம் படைத்தவர்கள் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.'

இதனால்தான் 'இருண்ட விஞ்ஞானம்' என்ற பட்டம் கிடைத்தது. எல்லாவிதமான சித்தாந்தங்களுமே மனித சமுதாயத்தின் இன்னல்களில் பாதிக்குக் காரணமாயிருந்திருக்கின்றன; ஆயினும், நல்ல வேளையாக அக் காலத்திய ஆங்கிலேயர்கள் சிந்தாந்தவாதிகளாக மட்டும் இருக்கவில்லை; எனவேதான் அன்று நிலவிய தலையிடாமைத் தத்துவங்களையும் பொருட்படுத்தாமல் பத்து மணி நேர மசோதாவையும் (Ten Hours Bill) பொதுச்சுகாதாரச் சட்டத்தையும் இயற்றினர்.[1]

இச்சமயத்தில் பொதுச்சுகாதாரம் இன்னும் பின்தங்கியிருந்ததே யொழிய, பொதுஅமைதி நன்கு பராமரிக்கப்பட்டது. சர் இராபர்ட் பீல் நிறுவிய புகழ்மிக்க போலீஸ் 1829-ல்

[1]Clapham, I, பக். 536-547; Fay, C. R, Great Britain from Adam Smith to the present day, பக். 362-365; Ec. Hist. Rev., ஏப்ரல் 1935, பக் 71-78; Griffith, Population problems of the age of Malthus, பக். 39-42.

இலண்டன் நகரில் மட்டுமே இருந்தது; ஆனால், சுதந்திர உரிமை, சொத்துரிமை, சுயப் பாதுகாப்பு ஆகியவற்றை விரும்பிய மக்கள், குறுந்தடியேந்தி நீலக் கோட்டும் உயர்ந்த தொப்பியும் (பின்னர் இரும்புத் தொப்பியும்) அணிந்த, நல்லியல்பும் திறமையும் மிகுந்த இலண்டன் 'பாபிகளை' (Bobbies) மிகவும் விரும்பினர்கள்; மற்றவிடங்களிலும் அவர்களைப் போல் நியமிக்கவேண்டும் என்று கோரினர். 1856-ம் ஆண்டு வாக்கில் ஒவ்வொரு கவுண்டியிலும் பரோவிலும் ஒரு போலீஸ் படை இருந்தது. அதன் நிர்வாகம், ஒழுங்குக் கட்டுப்பாடு, நிதி ஆகியவை தல நிர்வாகத்தின் கையில் பாதியும் தேசீய நிர்வாகத்தின் கையில் பாதியும் இருந்தன. டாக்பெரி (Dogberry), வெர்ஜ்கள் (Verges) வகையைச் சேர்ந்த திறமையற்ற காவல்காரர்களின் (Watchmen) நாட்கள் போய்விட்டன; தனியார் சுதந்திரத்துக்கு எந்தவித ஊறும் வராத முறையில் மனிதனும் சொத்தும் நன்கு காக்கப்பட்டன. பீட்டர்லூவில் நடந்ததுபோல் படை வீரர்களை அழைக்காமல் கும்பல்களையும் கூட்டங்களையும் உரிய நேரத்திலும் அமைதியாகவும் கட்டுப்படுத்த முடிந்தது.

இரண்டு சீர்திருத்த மசோதாக்களுக்கும் இடையிலான காலம் (1832-1867) 'நிலக்கரி-இரும்புக் காலம்'; அதாவது 'இரயில் பாதைக் காலம்.' அது முழுமூச்சில் முன்னேறிக் கொண்டிருந்தது.

இரயில் போக்குவரத்துச் சாதனம் உலகுக்கு இங்கிலாந்து அளித்த நன்கொடை. இரும்பை உருக்குவதற்கும் தொழிற் சாலைகளுக்கும் அடுப்பெரிக்க வீடுகளுக்கும் நிலக்கரியைப் பெருமளவில் சுரங்கப் பிரதேசங்களிலிருந்து சிறந்த முறையில் எடுத்துச் செல்வதற்காகச் செய்யப்பட்ட சோதனைகளின் வாயிலாக இரயில் பாதைகள் தோன்றின. மரத்தால் அல்லது இரும்பால் செய்யப்பட்ட தண்டவாளங்களின்மீது குதிரைகளைக்கொண்டு நிலக்கரியை இழுப்பது சிறந்ததா, அல்லது நீலயான ஓடாத எஞ்சின்களைக் கொண்டு இழுப்பது நல்லதா, அல்லது ஜார்ஜ் ஸ்டீவென்சனின் 'ஓடும் எஞ்சினைக்' ('locomotive') கொண்டு இழுப்பது உகந்ததா என்பது பற்றிய விவாதம் 1820-30-ல் நடந்துவந்தது. கடைசி முறையே மிகச் சிறந்தது என்றுயிற்று; எல்லாவிதமான பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கு மட்டுமின்றி, புதிய முறையில் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கும் எதிர்பாராத முறையில் இதனால் பெரும் வாய்ப்புகள் ஏற்பட்டன. கால்வாய்கள் மட்டுமின்றி ஸ்டேஜ்-கோச்சுகளும் (stage-coaches) விடை

பெற வேண்டியதுதான்; திரு. மூத்த வெல்லரின் (Mr. Weller senior) தொழில் போய்விட்டது. நிலக்கரி மாவட்டங்களில் அமைக்கப்பட்ட நீளமில்லாத தல ரயில்பாதைகள் 1830-50ல் தேச முழுதுக்குமான பாதைகளாக வளர்ச்சியுற்றன. இந்த இரயில்பாதை அமைக்கும் தொழிலில் இரண்டு காலங்களை நாம் காண்கிறோம்: முதலீடு செய்த காலம், 1836-1837; ஊக வாணிபம் செய்த காலம், 1844-1848.

மூன்றாவது பத்தாண்டுகளில் இரயில்பாதை அமைப்பில் முதலீடு செய்தவர்களில் பலர் டிஸ்ஸென்டர்கள்; இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் மிட்லந்துப் பகுதிகளையும் வடக்குப் பிரதேசத்தையும் சேர்ந்த குவேக்கர்கள். பீஸ் குடும்பம் (Peases) கிராப்பர் குடும்பம் (Cropper) ஸ்டர்ஜ் குடும்பம் (Sturges) ஆகியவை இவைகளில் முக்கியமானவை. மனித சமூகத்துக்கு உதவ விரும்பிய ஒரு 'நண்பனால்' 1839-ல் முதலாவது Bradshaw's Railway Time Table வெளியிடப் பட்டது; 'பிராட்ஷா அட்டவணையின்' மேல்ஏட்டில் இருப தாம் நூற்றாண்டு வரையில் ஜனவரி என்பதற்குப் பதிலாக 'முதல் மாதம்' என்ற குவேக்கர்களின் மாதப் பெயர்முறையே காணப்பட்டது.

ஆனால், நான்காவது பத்தாண்டுகளில் நீதி, நேர்மை ஆகியவைபற்றி அதிகம் கவலைப்படாத 'இரயில்வே மன்ன ரான' ஜார்ஜ் ஹட்சனின் (George Hudson, the 'Railway King') தலைமையில் பொதுமக்கள் 'இரயில்வேப் பயித்தியம்' பிடித்து ஊக வாணிபத்தில் தலைகீழாகக் குதித்தனர்; பல போலிக் கம்பெனிகளிலும், முறிந்துபோன கம்பெனி களிலும் பெருந்தொகையை இழந்தனர். தேக்கரே எழுதிய Feames de la Pluche, Esq, என்பாரின் நாட் குறிப்பேட்டில் (Diary) இந்த ஊகவாணிபம் செழித்த காலத்தில் நிலவிய பரபரப்பும், பின்வந்த வீழ்ச்சியும் நகை யூட்டும் வகையில் விவரிக்கப்படுகின்றன. ஆனால், இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் ஓய்ந்த பிறகு, முட்டாள்கள் பலர் தலை மேல் கைவைத்துஉட்கார்ந்துவிட்டபோதிலும் இலாபகரமான சில இரயில் கம்பெனிகள் எஞ்சியிருந்தன. ஹட்சன் வெறும் மோசடிக்காரர் மட்டுமல்லர்; இங்கிலாந்தின் முகத்தில் அவரது சுவடுகள் ஆழப்பதிந்திருந்தன. 1843-ல் கிரேட்பிரிட்டனில் 2000 மைல் நீளத்துக்கு இரயில் பாதை இருந்தது; 1848-ல் அதன் நீளம் 5000 மைல்கள். [1]

[1] உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வெகுதூரிதமாக இரயில்வேத் துறை யிலும் எஞ்சினீயரிங் துறையிலும் ஆங்கிலேயரின் முயற்சியால் நடைபெற்ற

இப்பொழுதுமுதல் பளுவான சாமான்களையும், பிரயாணி களையும் நீண்ட தூரத்துக்கு ஏற்றிச்செல்லும் முக்கியமான சாதனமாக ஆயிற்று இரயில். சுமார் அரைநூற்றுண்டு காலச் செழிப்புக்கும் பொதுப்பணிக்கும் பிறகு, கால்வாய்கள் நாச மாயின; இவைகளோடு போட்டியிடுவதற்காகவே ஆரம்பிக் கப்பட்ட தல ரயில்வேக் கம்பனிகளால் இவைகளில் பல வாங்கப்பட்டன. அதே சமயம் தேசத்தின் இரத்த ஓட்டத் துக்கு வேண்டிய பிரதான நாளங்களாக இதுவரை விளங்கிய சாலைகளும் தமது முக்கியத்துவத்தை இழந்தன. பயணர் விடுதிகளும் (posting-inns) வழிகாட்டும் பையன்களும் (postilions) மறைந்து போயினர்; அவைகளுடன் தபால் கோச்சும், பிரபுக்கள் உபயோகித்த கனமான குடும்பக் கோச் சும் கூட மறைந்தன. தலைநகரத்தின் தெருக்களில் ஆட்சி புரிந்தவை வசதிமிக்க 'லேண்டா' (landau), லேசான 'விக்டோ ரியா', கண்ணுக்கழகான 'கேப்' (cab) வண்டி (இலண்டனின் வெனிஸ் நகரத்துப் படகு (the gondola of London) என்று டிஸ் ரேலி இதை வருணித்தார்), விரும்பத்தக்கநான்கு சக்கரவண்டி, ஜனநாயக பஸ் ஆகியவை. நாட்டுப் புறங்களில் ஓடியவை 'கிக்' (gig) வண்டி, 'வேகனெட்' (wagonette), மட்டக் குதிரை வண்டி, நாய் வண்டி ஆகியவை. பிரயாணிகளையும் சாமான் களையும் ஏற்றிச்செல்வதில் இரயில்வேக்களுக்குத் துணையாகக் குதிரை வண்டிகள் பெரும் செல்வாக்குப்பெற்று விளங்கின. இரயில்பாதைகள் எல்லாவிடங்களிலும் போடப்படவில்லை; மேலும் 'இரயில்நிலையத்துக்குப் போவது' அவசியம். கிளைச் சாலைகளின் (byroads) எண்ணிக்கையும் தரமும் பயனும் அதி கரித்துக் கொண்டேயிருந்தன. ஆனல், நீண்ட பயணத்துக்குச் சாலைகளைப் பயன்படுத்துவது வழக்கொழிந்தது; தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துக் குறைந்தது; மோட்டார் கள் வந்த பின்தான் இச்சாலைகளுக்கு மீண்டும் உயிர்வந்தது.[2]

இந்த வளர்ச்சிக் காலத்துக்குச் சிறந்த உதாரணமாக, 'சுயமாக முன்னுக்கு வந்த மனிதராக' ட்ரோலோப்பின் Dr. Thorne நாவலில் வரும் சர் ரோஜர் ஸ்கேட்சர்டு (Sir Roger Scatcherd) விளங்கினர். கற்பனைப் பாத்திரமான ஸ்கேட்சர்டைவிட மேலும் மதிக்கத் தக்க, இக்காலத்தைச் சேர்ந்த ஓர் உண்மையான எஞ்சினியரின் சுயசரிதத்துக்கு John Brunton's Book, Cam Press, 1939. பார்க்க.

[2] பிக்விக் (Pickwick)கின் அத்தியாயம் இரண்டில் 'கேப்' (Cab) வண்டிக் காரனுடனான சண்டையைப் புகழ்மிக்க சேமோர் (Seymour) அவர்களின் சித் திரத்தில் காண்கிறோம். 1830-40ல் காணப்பட்ட 'கண்ணுக்கழகான கேப்' வண்டியின் ஆதி உருவத்தை நாம் அதில் காண்கிறோம்; வண்டியோட்டு பவனது ஆசனம் அதில் உயர்ந்த கூரையின்மேல் இல்லை; பக்கத்தில் இருக் கிறது. 1840-க்குப் பிறகு போக்குவரத்து, உடை, விளையாட்டுகள், சமூக வழக்கங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களைப் படங்களில் (punch) காணலாம்.

போக்குவரத்துச் சாதனங்களில் மாற்றம் ஏற்பட்ட அதே சமயத்தில், புதிய இரயில் பாதையோடு ஒட்டிய விதத்தில் மின்சாரத் தந்தியும் வளர்ச்சியுற்றது. 1848-ல் 1800மைல் நீளத்துக்கு (இது இரயில் பாதைகளின் மொத்த நீளத்தில் மூன்றிலொரு பங்கு) இரயில் பாதை நெடுகிலும் தந்திக் கம்பிகள் போடப்பட்டன. 1846-ல் ஆரம்பிக்கப்பட்ட மின்சாரத் தந்திக் கம்பெனிக்கு (Electric Telegraph Company) 1854-ல் இலண்டனில் பதினேழு அலுவலகங்கள் இருந்தன; அவைகளில் எட்டு இரயில்வேப் பாதைகள் முடிவுறும் கடைசிநிலையங்களில் இருந்தன. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துச் சான்சலர் (Chancellor) பதவிக்கு ஆல்பர்ட் இளவரசரை நியமிப்பதற்கான ஏற்பாடுகளில் சில, தந்திகள் மூலம் 1847-ம் ஆண்டிலேயே நடைபெற்றன. அதிலும் இதைச் செய்தவர்கள் பழங்காலத்து மனிதர்களான கேம்பிரிட்ஜ் டான்கள் (dons).

இரயில் பாதைகளும் மின்சாரத் தந்தியும் துரிதமாக வளர்ச்சியுற்ற அதே பத்தாண்டுகளில் பென்னி தபால் முறையும் (Penny postage) வெற்றிபெற்றது. ஆட்சியாளர்களின் அலட்சியம், சீர்திருத்தப்படாத சிவில் சர்வீஸ் அதிகாரிகளின் கோபாவேசமான தடங்கல்கள் ஆகியவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பொதுமக்களின் ஆதரவைமட்டுமே தன் துணையாகக் கொண்டு தன்னலம் பாராட்டாமல், மனச்சோர்வுறுமல் பெருமுயற்சி செய்து இதை நிறுவினர் ரவுலண்ட் ஹில் (Rowland Hill). இந்தப் பெருமாற்றம் ஏற்படுவதற்கு முன்பு, வயிற்றுக்கு உணவு தேடி நமது நாட்டிலோ அல்லது வெளியிலோ வேற்று இடங்களுக்குச் சென்ற ஏழைகள் தாங்கள் விட்டுவிட்டு வந்த தமது பெற்றோர்கள், நண்பர்களுடன் செய்திகளைப் பரிமாறிக் கொள்வது வெகு கடினமாயிருந்தது; காரணம், கடிதங்களைப் பெறுவதற்கு அதிகச் செலவு பிடித்தது. முன்னாலேயே காசு கொடுத்துத் தபால்தலை ஒட்டிய மலிவான தபால் பட்டுவாடா முறையை ரவுலண்ட் ஹில் கொண்டு வந்ததால், தமது சொந்த ஊரில் தாம் விட்டுவந்த பெற்றோருடனும் உற்றாருடனும் மனிதவரலாற்றில் முதல்தடவையாகத் தொடர்பு கொள்வது ஏழை எளியவர்களுக்குச் சாத்தியமாயிற்று. தொழில்-வியாபார உலகமும் இந்த மலிவான தபால் முறை ஒரு வரப்பிரசாதம் என்பதைக் கண்டது; மேலும் பிடிவாதமான தபால் நிலையத்தின் (Post Office) மீது இது திணிக்கப்பட்டபின் பெருலாபமும் கிடைத்தது. இவ்வாறுக நாகரிக உலகின் எல்லாநாடுகளும்இப்புதியமுறையைக்கையாள ஆரம்

பித்தன. இந்த மாபெரும் சீர்திருத்தத்தில் அரசாங்கமே முழுப் பொறுப்பையும் வகிக்கவேண்டியிருந்தது; இது தவிர்க்க முடியாதது. ஆயினும், இதற்கான யோசனையும் முதல் நடவடிக்கைகளும், பொதுமக்களின் ஆதரவைப் பெற்ற ஒரு தனிநபரைச் சேர்ந்தவை.

நான்காவது பத்தாண்டில் நமது தீவில் இரயில்வேக்கள் துரித வளர்ச்சியுற்றதை அடுத்து வியாபாரக் கப்பல் போக்குவரத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. பாய்மரம் போய் நீராவி வந்தது; மரத்துக்குப் பதிலாக இரும்பு பயன்படுத்தப்பட்டது. 1847-ம் ஆண்டில்கூட நமது நீராவிக்கப்பல்கள் எண்ணிக்கையில் குறைவாயும் அளவில் சிறியவையாயும் இருந்தன; நமது வியாபாரக் கப்பல்களின் மொத்தமான மூன்று மில்லியன் டன்களில் 116,000 டன்களுக்கு மட்டுமே நீராவி பயன்படுத்தப்பட்டது. ஆனல், ஐந்தாவது ஆருவது பத்தாண்டுகளில் வெதுதூரம் செல்லும் பெருங்கப்பல்கள் நீராவியால் செலுத்தப்படுவது அதிகரித்தது; அவை முதலில் இரும்பாலும் பின்னர் எஃகாலும் கட்டப்பட்டன. இந்த மாற்றம், இங்கிலாந்தின் இரும்பு எஃகு உற்பத்தியில் ஏற்பட்ட பெரும் அபிவிருத்தியை ஒட்டி நிகழ்ந்தது; அதே சமயம் எல்லாவகையான தொழிலுற்பத்தி முறைகளிலும் நீராவியும் உலோகமும் அதிகப்படியான அளவில் உபயோகிக்கப்பட்டு வந்தன. 1848லேயே உலகின் மொத்த வார்ப்பிரும்பு உற்பத்தியில் பிரிட்டனில்மட்டும் பாதி உற்பத்தியாயிற்று; அடுத்த முப்பது ஆண்டுகளில் நமது உற்பத்தி மும்மடங்காயிற்று. இதுவரை மிகவும் பின்தங்கியிருந்த ஸ்காட்லந்தின் மேற்குப் பகுதி மட்டும் இன்னும் சில ஆண்டுகளில் நமது மொத்த வார்ப்பு இரும்பில் கால்பகுதியை உற்பத்திசெய்தது. ஸ்டாபோர்ட்ஷயர், வேல்ஸ், டைன்சைட் பகுதியைச் சேர்ந்த வடகிழக்கு இங்கிலாந்து, மிடில்பரோ ஆகியவைகளில் இரும்பு ஆலைகள் குவிந்தன; இவ் வாலைக்காரர்கள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் அதிகக் கவனம் செலுத்தி, எஃகுக் காலத்தில் அடியெடுத்து வைத்து அங்கும் தலைவர்களாக விளங்கினர்கள்.[1]

[1] தொழில்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களைக் காட்டும் பீட்டர்மனின் (Petermann) தேசப்படம் 1851-ல் வெளியிடப்பட்டது. அதில் மிடில்பரோ, பாரோ, கார்டிப் (Cardiff), நியூபோர்ட் ஆகியவைகளில் எதுவுமே இரும்புத் தொழிலுக்குப் பெயர்பெற்ற இடமாக அப்பொழுது காட்டப்படவில்லை என்பதை கிளாப்ஹாம் (II, 515) சுட்டிக்காட்டுகிறார். எனவே, அவைகள் 1851-க்குப் பிறகே துரிதமாக வளர்ச்சியடைந்தன.

இந்த அபிவிருத்திகளின் விளைவாக விக்டோரியாக் காலத்தின் மத்தியில் செல்வம் பெருகியது. இதனால் தொழிலாளி மக்களில் பெரும்பான்மையோரின் உண்மைக்கூலி (real wage) உயர்ந்து, சமூகப் பிரச்னைகளின் தீவிரம் சற்றுக் குறைந்தது; மேலும் தொழிற்சங்கங்களும் (Trade Unions) கூட்டுறவு இயக்கமும் நமது தேசத்தின் ஆக்கத் தொகையை (National dividend) ஓரளவு முன்னைவிட சரிசமமாக விநியோகம் செய்ய உதவின.

தேசத்தின் ஆக்கத்தொகை உண்மையில் ஏராளம். கலிபோர்னிய, ஆஸ்திரேலியத் தங்கவயல்கள் கண்டுபிடிக்கப் பட்டதால் வர்த்தகம் பிரம்மாண்டமாக அதிகரித்தது; வாணிபத்திலும் தொழிலிலும் முன்னணியிலிருந்த இங்கிலாந்து, அந்நூற்றாண்டின் மத்தியில் இதனால் எல்லா நாடுகளைக் காட்டிலும் பெரும் பயனடைந்தது. 1870-ம் ஆண்டில் பிரான்ஸ், ஜெர்மெனி, இத்தாலி ஆகிய மூன்றின் மொத்த அந்நிய வர்த்தகத்தையும்விட இங்கிலாந்தின் வர்த்தகம் அதிகம்; ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வர்த்தகத்தைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகம்.

இத்தகைய பெரும் தொழில்வளர்ச்சியும் வாணிக வளர்ச்சியும் புரட்சிகரமான வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தபொழுது, பிரிட்டிஷ் விவசாயமும் ஒரே சீராக முன்னேறிக்கொண்டு வந்தது; ஏராளமான மூலதனமும் வயல்வேலைக்கு இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்தியதும் இதற்கு உதவின. 1846-ல் ஏற்பட்ட தானியச் சட்டரத்து (Repeal of the Corn Laws) விலைகளை ஏறுமல் ஒருநிலைப்படுத்தியது; ஆனால் ஒரு தலைமுறைக் காலம் வரையில் விவசாயச் செழிப்பை அது மட்டுப்படுத்தவில்லை. ஏனென்றால் இங்கிலாந்தில் தனது விவசாயப் பொருள்களைக் கொண்டு வந்து குவிக்கும் நிலையை அமெரிக்கா இன்னும் எட்டவில்லை. 1851-ல் ஆங்கிலேய மக்களின் உணவில் கால் பாகம்மட்டுமே அயல்நாடுகளிலிருந்து வந்தது என்று கணக்கிடப்பட்டது.

தானியச்சட்ட ரத்து மான்செஸ்டருக்கும் நகரத்தில்வாழ் மக்களுக்கும் ஓர் அரசியல் வெற்றி; இது நிச்சயம் தொழிலுக்கு உதவி செய்தது. ஆனால், இதனால் உடனடியாக எந்த ஒரு பொருளாதாரப்புரட்சியோ அல்லது சமூகப் புரட்சியோ ஏற்படவில்லை. நகரங்களில் ஜனநாயகம் நிலவியது; ஆனால் கிராமங்களிலோ நிலப்பிரபுக்கள், அவர்களது பிரதிநிதிகளும்

சகாக்களுமான குத்தகைக் குடியானவர்கள் (tenant farmers) ஆகியோரின் கையே ஓங்கியிருந்தது; இம்மனிதர்களின் செல்வமும் செல்வாக்கும் ஒருதலைமுறைக்குமுன்பு இருந்ததை விட ஆறுவது பத்தாண்டில் அதிகமாயிருந்தன. வேட்டையும் அரசியல், இலக்கிய 'விருந்துபசாரங்களும்' நிறைந்த நாட்டுப்புற இல்லத்து வாழ்வு, எப்பொழுதையும்விட செல்வமிக்கதாகவும் சிரமமில்லாததாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருந்தது. அதன் ஒழுக்கநெறிகள், பதினெட்டாம் நூற்றாண்டுப் பிரபுக்களின் வரைமுறையற்ற அராஜக வாழ்வை விட 'மதிக்கத் தக்கவையாக' இருந்தன. கிராமப்புறங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தல அரசாங்கம் இன்னும் ஏற்படவில்லை. நிலப்பிரபுக்களிடையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைதிகாக்கும் நீதிபதிகளிடமே (Justices of the Peace) நிர்வாகமும் நீதியதிகாரமும் இன்னும் இருந்தன. பண்டைக்காலத்திய கனவான்-மாஜிஸ்டிரேட்டுகளே இன்னும் ஆட்சிபுரிந்து வந்தனர்; ஆயினும் செய்தித்தாள்கள், காலத்தின் உணர்வு (spirit of the age) ஆகியவைகளால், ஹனோவீரிய காலத்தின் ஆரம்பத்தில் இருந்ததைவிட இவர்களின் அதிகாரம் வரவேற்கத்தக்க முறையிலும் வெற்றிகரமாகவும் அலசி ஆராயப்பட்டன.

இரயில்போக்குவரத்தால் கிராமத்துக்கும் நகரத்துக்கு மிடையிலான தூரம் சதா குறைந்து வந்தது; விவசாய உற்பத்தியிலும் விஞ்ஞானமும் இயந்திரங்களும் புகுந்துவந்தன; இந்நிலையில், நாட்டுப்புற மரபுகளோடு எல்லாத் தொடர்புகளையும் இழந்துவிட்ட ஏராளமான மக்கள் நகரங்களில் வாழ்ந்த நமது சின்னஞ்சிறு தீவில், நகர்ப்புறத்துச் சிந்தனையும் செயலும் பழைய கிராமப்புறத்து உலகில் நுழைந்து அதை ஜீரணித்து, அதன் விசேஷ தன்மைகளையும்தலவேறுபாடுகளையும் அடியோடு அழிக்கும் காலம் வெகுதூரத்திலில்லை. இந்த மாற்றம் நிகழுவதற்கு ஆறுவது பத்தாண்டில் இரண்டு விஷயங்கள் மட்டுமே வேண்டியிருந்தன. ஒன்று, பிரிட்டிஷ் விவசாயத்தின் பொருளாதார ரீதியான அழிவு; இரண்டு, நாடு முழுவதற்கும் நகரத்துக் கல்விமுறை.

விக்டோரியா அரசி அரியணையேறும்பொழுதே 'பெரிய பண்ணை' முறை (great estate system) நடைமுறைக்கு வந்துவிட்டது. கடைசி ஸ்டூவர்ட் மன்னர்களின் காலத்திலிருந்தே சிறுகனவான்கள், தாமே விவசாயம் செய்துவந்த சிறு குடியானவர்கள் ஆகியோரின் நிலங்கள் பெரிய நிலப்பிரபுக்களின் கைகளுக்கு மாறின. இப்பெரிய நிலப்பிரபுக்களில் பலர் பட்ட

ணத்து மனிதர்கள்; இவர்கள் திருமணஉறவு மூலமும் பெரிய அடுத்தடுத்த பண்ணைகளை வாங்கிச் சேர்ப்பதன் மூலமும், புதிய 'நாட்டுப்புற இல்லங்களை' அமைப்பதன் மூலமும் பெரிய நிலப்பிரபுக்களின் வரிசையில்சேர்ந்து வந்தனர். சிறு கனவான்கள் போய்விட்டனர்; அவர்களின் மேனர்ப்பண்ணைகள் குத்தகைவயல்கள் (tenant farms) ஆகிவிட்டன; நிலச்சொந்தக்காரக் குடியானவர்களின் (freehold yeomen) தொகை குறைந்து வந்தது. பெரிய பண்ணைகளும் நடுத்தரப் பண்ணைகளுமே எங்கும் காணப்பட்டன.

பண்ணைகள் பெரியவையாகிவிட்டன; ஆனால் வயல்கள் (farms) அதே அளவில் விரிவடையவில்லை. ஆயினும் அவைகள் முன்னைவிட இப்பொழுது பெரியவை. அதே சமயம் கூலியாட்களை அமர்த்தாமல் ஒரே குடும்பமே பயிரிட்டு வந்த நடுத்தர வயல்களும் (middle-sized farms) சர்வசாதாரணமாகக் காணப்பட்டன. அத்தகைய வயல்கள் இன்றுங்கூட, சிறப்பாக வடக்குப் பிரதேசத்து மேய்ச்சல் (pastoral) கவுண்டிகளில் ஏராளமாக இருக்கின்றன; வயல்வேலைகட்கு வேண்டிய ஆட்களின் தொகையை இயந்திரங்கள் குறைத்துவிட்டதால் இது மிகவும் சாத்தியமாயிற்று. [1]

1846-ம் ஆண்டில் ஏற்பட்ட தானியச் சட்டரத்தை அடுத்து வந்த இருபதாண்டுகளிலும் விவசாயம் செழித்தது; எனவே மேலும்மேலும் அதிக நிலம் வேலியிடப்பட்டுப் பயிரிடப்பட்டது. நமது தீவின் மக்கட்தொகை சதா அதிகரித்து வந்தது; உள்நாட்டில் விளைந்த தானியத்தைக்கொண்டே பெரும்பாலும் இவர்களுக்கு உணவளிக்கப்பட்டது. ஐந்தாவது பத்தாண்டில் தங்கவயல்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் விலைகள் ஏறின. ஆறுவது பத்தாண்டில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் போர்கள் நடந்தபொழுது இங்கிலாந்து அவைகளில்

[1] ஐந்து ஏக்கருக்குக் குறைவான வயல்களை விட்டுவிட்டால், இங்கிலாந்திலும் வேல்ஸிலும் வயல்களின் விஸ்தீரணம் 1851-ல் இவ்வாறு இருந்தது:

	பரப்பளவு-ஏக்கர்	வயல்களின் எண்ணிக்கை	பிரிவின் மொத்த ஏக்கர்ப் பரப்பு
1.	5-49	90,100	2,122,800
2.	50-99	44 600	3,206,500
3.	100-299	64,200	11.015,800
4.	300-499	11,600	4,360,900
5.	500-999	4,800	2,841,000
6.	1000மும் மேலும்	771	1,112,300

Clapham, Ec. Hist. of Modern Britain, II, பக். 264.

ஈடுபடவில்லை. கால்நடை வளர்ப்பிலும் பெருமுன்னேற்றம் ஏற்பட்டு வந்தது. மேலும், சிறந்த வடிகால்முறையும் உரமிடும் முறையும் வந்தன; இயந்திரத்தைக்கொண்டு உழுவது, அறுப்பது, அடிப்பது ஆகியவை எங்கும் சிறிது சிறிதாகப் பரவின; இராயல் விவசாயக் கழகம் (Royal Agricultural Society) நன்கு செயல்பட்டது; தங்களது பண்ணைகளில் நிறைய மூலதனத்தைச்செலவிட்டு, அபிவிருத்திகளைத் தோற்றுவித்துப் பெரு நிலப்பிரபுக்கள் பெருமிதமுற்றனர். இவையனைத்தின் காரணமாகவும் பாமர்ஸ்டன் பிரபுவின் (Lord Palmerston) இங்கிலாந்தில் மேலும்மேலும் அதிக நிலம் பண்படுத்தப் பட்டுப் பயிருக்கு ஏற்றதாக மாற்றப்பட்டது. இருபதாண்டுகளுக்கு முன்னல் தமது நண்பரான ஆர்தர் கிளப் (Arhur Clough) என்பாருடன் தாம் சுற்றித்திரிந்த ஆஸ்க் போர்டு மலைப்பகுதிகட்கு இப்பொழுது மேத்யூ ஆர்னல்ட் மீண்டும் சென்றார். இப்பொழுது அவர் கண்டதென்ன? சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் கண்டு வருந்திய 'பங்களாக் கூட்டங்கள்' இன்னும் தோன்றவில்லை; கண்ணுக்கினிய பசும் வயல்களே எங்கும் காணப்பட்டன!

'இம் மலைப் பகுதிகளை என்னைத் தவிர யாரே நன்கறிவார்? உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இம்மலைச் சரிவுகளில் எண்ணற்று நிறைந்திருந்த அப்பள்ளத்தாக்குகளில் முள்ளும் செடியும் முதிய வெண்மலர் மரமும் பச்சைப்பசேலெனப் படர் கொடியும் பற்பலவாய் முன்பு மூடிக்கிடந்தன. இப்புலத்தில் இன்று நாம் உழவர்களைக் காண்கின்றோம்; விவசாயம் வந்தது. ஒதுக்கான ஓடைக் கரைமீது மட்டுமே காட்டு மலர் ஒளிசிந்திப் பண்டைச் சிறப்பைப் பறைசாற்ற நாம் காண்கின்றோம்.'

திறந்த வயல்களுக்கு வேலியமைப்பதும், அத்துடன் விவசாயத்தில் நிலவிய 'துண்டு' (strip) முறையை முடிவுக்குக் கொண்டுவருவதும் விக்டோரியா அரியணை ஏறுவதற்கு முன்பே நடைபெற்றுவிட்டன. அங்குமிங்கும் சில மிச்ச சொச்சங்கள் மட்டுமே இருந்தன. ஆயினும், பொதுநிலத்துக்கு (commons) வேலிபோடுவது இன்னும் முடிவுறவில்லை; 1845-ம் ஆண்டின் பொது வேலியமைப்புச் சட்டத்தினல் (General Enclosure Act) தூண்டப்பட்டு இது இன்னும் நடந்து வந்தது.

பொதுநிலத்துக்கு வேலியமைக்கும் இயக்கம்—இது கடந்த பல நூற்றாண்டுகளில் தகராறுகளுக்கும் கஷ்டங்களுக்

கும் காரணமாயிருந்தது; அதே சமயம் நமது தீவின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு உதவியது—1865-க்கும் 1875-க்கு மிடையில்தான் கடைசியாக நிறுத்தப்பட்டது. கிராமப்புறத்து விவசாயிகளின் ஆட்சேபத்தால் அன்று; நகர மக்களின் ஆட்சேபத்தால். விடுமுறை நாட்களில் தாங்கள் விளையாடுமிடங்களையும் கிராமப்புறங்களுக்குச் சென்று பொழுதுபோக்குமிடங்களையும் இதனால் தாங்கள் இழந்துவிட நேரிடுகின்றது என்று இந்த நகரத்துமக்கள் ஆட்சேபித்தனர். சமுதாயத்தின் சமச்சீர்நிலை எவ்வாறு மாறியிருந்தது என்பதை இது காட்டுகிறது. இன்னும் எஞ்சியிருக்கும் பொதுநிலத்துக்கு வேலியிடுவதைப் பொதுநிலப் பாதுகாப்புச் சங்கம் (Commons Preservation Society) வெகு திறமையாக எதிர்த்தது. கிராமத்தில் மறைந்து வரும் 'சாதாரண மனிதனுக்காக' இது பெயரளவிலும் சட்டப்படியாகவும் போராடியதே ஒழிய, 'காற்றையும் பொழுது போக்கையும்' விரும்பிய நகரப் பொதுமக்களின் நன்மைக்காகவே இது உண்மையில் இயங்கியது. பெர்காம்ஸ்டெட் பொதுநிலத்திற்காக (Berkhamsted Common) 1866ல் நடந்த பெரிய போராட்டமும், எப்பிங் காடு (Epping Forest) காக்கப்பட்டதும் ஒரு புதிய யுகத்தைத் தோற்றுவித்தன. இங்கிலாந்தில் வேலியமைப்பு இயக்கம் தனது வேலையைச் செய்துவிட்டது; இனி, ஒன்றும் செய்ய வேண்டாம். (Clapham, I,) 450 வது குறிப்பு, 454; II 258-9)

1860-70ல் விவசாயம் செழிப்புடன் நடந்தது; ஆயினும் விவசாய முறையில் பல்வேறு விதங்கள் இன்னும் இருக்கத்தான் செய்தன: லோத்தியன் பகுதியில் விஞ்ஞானத்தை ஏற்றுக்கொண்ட ஸ்காட்லந்தியர்கள் முழுக்கமுழுக்க இயந்திரங்களையே பயன்படுத்தினர்; ஆனால், சஸ்ஸக்ஸ் குடியானவர்கள் எருதுகளைக்கொண்டே இன்னும் உழுதனர். கடந்த இரு நூற்றாண்டுகளில் விசாலமான, நீள்சதுர வடிவில் வேலியிடப்பட்ட பழைய திறந்த வயல், ஆடுகளுக்கான மேய்ச்சல் நிலம், சதுப்பு ஆகியவைகளில் வெகு எளிதாக நவீன விஞ்ஞான, இயந்திரமுறை விவசாயம் புகுந்தது; இதற்கு ஓர் உதாரணம் கேம்பிரிட்ஜ்ஷயர். மேற்கிலும் தென்கிழக்கிலும் ஆதிகாலம்தொட்டே நிலங்கள் வேலியிடப்பட்டிருந்தன; ஆனால், அவை விவசாயத்தைத் தடைசெய்யக் கூடிய விதத்தில் சின்னஞ்சிறிய, ஒழுங்கான வடிவமில்லாத வயல்களாகத் துண்டு துண்டாக இருந்தன. ஆயினும், அவை ஒவ்வொரு ஷயரிலும் வெவ்வேறு முறை பயன்படுத்தப்பட்டன; இதற்குக் காரணம் மண்வளத்தில் காணப்பட்ட வேறுபாடு

அல்லது இறந்தகாலத்துப் பொருளாதார சமுதாயக் கட்டமைப்பில் காணப்பட்ட வேற்றுமை.

மூன்றாவது பத்தாண்டிலும் 'உணவில்லாத நாலாவது பத்தாண்டிலும்' விவசாயத் தொழிலாளியின் நிலை, குறிப்பாகத் தெற்குப் பகுதியில், பெரும்பாலும் படுமோசமாகவே இருந்தது; அவனை வேலைக்கமர்த்திய குடியானவன்கூட இக் காலத்தின் சிரமத்தினால் மிகவும் கஷ்டப்பட்டான். 1834-ல் இயற்றப்பட்ட புதிய இரவலர் சட்டம் (New Poor Law) வயலிலும் தொழிற்சாலையிலும் வேலைசெய்த ஏழைத் தொழிலாளர் மீது ஒரு பெருஞ்சுமையாக விழுந்தது; இதன்படி வெளியில் தரப்பட்ட நிவாரணம் (outdoor relief) நிறுத்தப்பட்டது. (ஆனால் எல்லாவிடங்களிலும் அன்று); பொதுத்தர்மம் (public alms) வேண்டிய விண்ணப்பதாரர்கள்மீது 'தொழிலகப் பரீட்சை' திணிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி அதிகாரம் பெற்ற இரவலர் சட்டக் கமிஷனர்களின் இரக்கமற்ற, பயன்முதற்கொள்கை வாத (utilitarian) தர்க்க சாஸ்திரம் இவ்வாறு கூறியது. ஒரு பயங்கரமான நோய்க்கு இது ஒரு கடுமையான பரிகாரம்: கூலியோடு சேர்த்து இரவலர் வரிப் பணத்திலிருந்து ஒரு சிறு தொகையைக் கொடுத்த ஸ்பீன்ஹாம்லந்து கொள்கையினால் வேலைசெய்து வந்த தொழிலாளர்கள் முன்பு 'இரவலர்' ஆயினர்; கூலிகள் ஏறுவது தடுக்கப்பட்டது; அது மட்டுமின்றி இரவலர் வரி செலுத்துவோரையும் அது இப்பொழுது நாசத்துக்குள்ளாக்கியது. சமுதாயத்தைக் காப்பதற்கு அறுவைசிகிச்சை தேவைப்பட்டது; ஆனால் அறுவையின்பொழுது மயக்கமருந்து கொடுக்கப்படவில்லை. வயலிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்வது தொழிலகங்களில் (workhouses) வேலை செய்வதைவிட எவ்வளவோமேல் என்பதை இரவலர்களுக்குப் புலப்படுத்த வேண்டும் என்பதைக் கமிஷனர்கள் கொள்கையாகக் கொண்டனர். ஒரு குறைந்தபட்சக் கூலியை அமுலாக்கி வேலைக்கு மக்களைக் கவருவது. அந்தக் காலத்தில் அவர்களால் முடியவில்லை. எனவே, தொழிலகங்களில் வாழ்க்கையின் தரத்தைக் குறைத்து மோசமாக்குவதைத் தவிர அவர்களால் வேறெதுவும் செய்ய இயலவில்லை. மேலும் வயது வந்த தொழிலாளர்களின் (adult workmen) பிரச்னையிலேயே முழுக்கமுழுக்க ஈடுபட்டிருந்த இந்தக் கமிஷனர்கள், முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகள் ஆகியோரை அன்புடனும் ஆதரவுடனும் நடத்த வேண்டியதன் அவசியத்தையும் நீதியையும் மறந்து போனார்கள்.

டிக்கன்ஸ் (Dickens) எழுதிய நூல் (Oliver Twist) தொழிலக நிர்வாகத்தின்மீது தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதல்; விக்டோரியாக் காலத்து மக்களிடையில் காணப்பட்ட மனிதாபிமான உணர்வுகள் இத் தாக்குதலில் வரவேற்றன. நகரத்திலும் கிராமத்திலும் வசித்த தொழிலாளர் வகுப்பினர் புதிய இரவலர் சட்டத்தை (New Poor Law) வெறுக்கத்தக்க கொடுங்கோன்மையாகக் கருதினர்; அது பெரும்பாலும் அப்படித்தான் இருந்தது. ஆயினும் பழைய தல சுயாட்சியை அகற்றி ஒரு மத்திய நிறுவனத்தை அது ஏற்படுத்தியிருந்தது; காலப்போக்கில் ஏழைகளின் துயரைத் துடைப்பதற்கும் முன்னே விட சிறந்ததொரு தேசீய அமைப்பை ஏற்படுத்துவதற்கும் இந் நிறுவனம் பயன்பட்டது. இரவலர் சட்டத்துக்கு ஒரு தேசீயத் தன்மையை ஊட்டி, இரவலர் நிவாரணத்தை ஒரு மத்தியக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தனர் முதல் கமிஷனர்கள். இதனால் பின்னர்ப் பல அபிவிருத்திகளைச் செய்வது எளிதாயிற்று; அதிக அனுபவமும் விஞ்ஞானக் கருத்துகளும் முன்னைவிட அதிக மனிதாபிமான உணர்வும் பெற்ற பொதுப்பணி ஆர்வ மிக்கவர்கள் இந்த அபிவிருத்திகளைப் பின்னர் வேண்டினர். 1834-ல் இரவலர் சட்டத்தில் குறைபாடுகள் இருந்தன; அது கடுமையானதாகவும் இருந்தது. ஆயினும், அதில் நேர்மை நோக்கம் இருந்தது. தனது சீர்திருத்தத்துக்குத் தேவையான வித்துகளையும் தானே கொண்டிருந்தது.

புதிய இரவலர் சட்டத்துக்காக நிறுவப்பட்ட அமைப்பு தலையிடாமைக் (laissez-faire) கோட்பாட்டின்மீது அமையாமல் அதற்கு எதிரிடையாக இருந்தது. அதில் பெந்தாமின் கொள்கைகள் அப்படியே பிரதிபலித்தன. அதாவது தேர்தல் கோட்பாட்டையும் அதிகார வர்க்கக் (bureaucratic) கோட்பாட்டையும் அதில் காணலாம். பெந்தாம் தனது 'கான்ஸ்டிடூஷனல் கோட்' (Constitutional Code) என்பதில் இதைத் தான் வலியுறுத்தினர். இரவலர் சட்ட நிர்வாகத்துக்கு வேண்டிய விதிகளை வகுப்பதும், அவை அமுலாகுமாறு பார்த்துக் கொள்வதும் மூன்று அரசாங்கக் கமிஷனர்களின் வேலை (மத்திய அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதிகார வர்க்கத்தினர் இவர்கள்). ஆனால் அவைகளை உண்மையில் அமுலாக்குவது தேர்ந்தெடுக்கப்பட்ட தலக்குழுக்களான 'காப்பாளர் குழுக்களின்' (Boards of guardians) வேலை. பாரிஷ்களின் 'தொகுதி' ஒவ்வொன்றும் 'இரவலர்களுக்கான காப்பாளர் குழு'வினால் நிர்வகிக்கப்பட வேண்டும். இக் காப்பாளர்

களை வரிசெலுத்துவோர் அனைவரும் தேர்ந்தெடுப்பர். உச்சியிலிருந்த மத்திய அரசாங்கத்து அதிகார வர்க்கத்தினரும், தலங்களிலிருந்த ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பாளர் குழுக்களும் பெந்தாமின் கொள்கைகட்குப் பொருந்தியவை; சம்பளமில்லாத அமைதிகாக்கும் நீதிபதிகளான (Justices of the Peace) நாட்டுப்புறக் கனவான்களின் பழைய ஆட்சிமுறையை நீக்கிவிட்டு இம்முறை வந்தது.

ஆனால் 1834-ம் ஆண்டின் புதிய இரவலர் சட்டம் கிராமப்புற ஆட்சியில் புகுத்தப்பட்ட புதிய சீர்திருத்த முறைகளுக்கு மிகவும் துரதிருஷ்டவசமான ஓர் ஆரம்பம். அது மிகவும் கடுமையானதாக இருந்தது; குறிப்பாக அது குடும்பங்களைக் கலைத்தது.[1] இதனால் கிராமத்து ஏழைகளுக்குப் பெந்தாம் கொள்கைகளின்படி ஏற்பட்ட சீர்திருத்தத்தின்மீது வெறுப்பு ஏற்பட்டது. இதனால் மற்ற எல்லா விஷயங்களிலும் அமைதி காக்கும் நீதிபதிகளின் பழைய ஆட்சியையே இவர்கள் மீண்டும் விரும்பினர். எனவே அது இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்கு நீடித்தது. புதிய இரவலர் சட்டம் தல ஆட்சியில் மற்ற மாற்றங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்திருக்கலாம்; ஆயினும் மக்கள் அதை வெறுத்தனர்.

கிராமப்புறங்களின் மீதான தங்களது ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் இந்த இரவலர் சட்ட நிர்வாகத்தை ஏன் விக்குக் கனவான்களும் டோரிக் கனவான்களும் ஏற்றுக்

[1] பிரசித்திபெற்ற எழுத்தாளரான வில்லியம் ஹோவிட் (William Howitt) 1838ல் தனது Rural Life of England என்ற நூலில் (II, பக். 131) குடிசையில் வாழும் ஏழைக்கு நாட்டுப்புற வாழ்வு தரும் எளிய இன்பங்களை வருணித்து விட்டு, மேலும் எழுதுகிறார்: 'ஏழைகள் கண்டு பரவசப்படும் பொருள்களும் அவர்களைக் கவரக்கூடிய பொருள்களும்கூட இருக்கின்றன என்பதற்காக நான் பலமுறை கடவுளுக்கு நன்றி செலுத்தியிருக்கிறேன். அவர்களது குடும்பத்தினரின் அன்புத்தலைகளும் உறவுகளும் மகிழ்ச்சிக்கும் இன்பத்துக்கும் ஊற்றுக விளங்குகின்றன; இந்த ஒரு நாட்டில் மட்டுமாவது எதேச்சாதிகார ஆட்சியின் கரங்கள் இந்த அன்பு வட்டத்துக்குள் புகுந்து மனைவியிடமிருந்து கணவனையும், குழந்தைகளிடமிருந்து பெற்றோரையும், சகோதரியிடமிருந்து சகோதரனையும், அடிமைத் தேசங்களில் நடப்பது போல் பிரிக்கத் துணிவதில்லை—இதற்காகவெல்லாம் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆயினும், இந்தப் பாதுகாப்பான வாழ்க்கைக்கு ஒரு பேரிடியாக வந்துள்ளன நமது புதிய இரவலர் சட்டங்கள். தேசம் விழித்தெழுந்து இந்தச் சட்டங்களின் கொடிய ஆட்சிக்கு முடிவுகட்டும். ஆயினும் அந்த நல்லகாலம் வருவதற்குள், ஏழைகள் வறுமையின் இரும்புக் கரங்களில் தப்பித் தவறிச் சிக்கிவிட்டார்களேயானால் அதைவிடப் பத்துமடங்கு பயங்கரமான விதத்தில் தமது குடும்பத்தினரிடமிருந்து பிரிக்கப்பட்டு வறுமைச் சிறையின் (Poverty Prison) அறைகளில் தனித்தனியாகப் பூட்டி வைக்கப்படுவார்கள்.'

கொண்டனர்? இரவலர் சட்ட விஷயத்தில் மட்டும்தான் அதி காரவர்க்கமும் ஜனநாயகத் தேர்தலும் கிராமப்புறத்தின்மீது படையெடுப்பதை அவர்கள் அனுமதித்தனர். இதற்குக் கார ணம் தெளிவு. இந்த மாற்றத்தில் நாட்டுப்புறக் கனவான் களுக்கு நேரடி அக்கறையிருந்தது. அவர்கள் செலுத்திவந்த இரவலர்வரி ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டேயிருந் தது; இன்னும் சில ஆண்டுகளில் தங்களது குத்தகைப் பணம் முழுவதையுமே இந்த வரி விழுங்கிவிடும் என்று அஞ்சினர்; இந்த மசோதாவைக் கொண்டுவந்த விக் அமைச்சர்கள் இது 'விவசாய நிவாரணத்துக்கான ஒரு சாதனம்' என்று கூறினர். பீலும் (Peel) வெலிங்டனும் (Wellington) இதை அப்படியே ஏற்றுக்கொண்டனர். இந்த வெறுக்கப்பட்ட மசோதாவை நிராகரிக்க விரும்பிய பிரபுக்கள் சபையை (House of Lords) வெலிங்டனின் உத்தரவுகள் தடுத்தன.

ஐந்தாவது, ஆறுவது பத்தாண்டுகளில் தொழிலும் விவ சாயமும் செழித்து வளர்ந்ததால் நகரத்திலும் கிராமத்திலும் வசித்த தொழிலாளியின் நிலை உயர்ந்தது. 1870-க்குப் பிறகு விவசாயக்கூலி பிந்திய பல ஆண்டுகளில் எப் பொழுதுமே எட்டாத ஓர் உச்சக் கட்டத்தை எட்டியது. நல்ல காலத்திலும் சரி, கெட்ட காலத்திலும் சரி, வயலில் வேலை செய்தவனின் கூலி தெற்கைவிட வடக்கில் அதிகம். இதற்குக் காரணம் நிலக்கரிச் சுரங்கங்களும் தொழி லாளர்கட்கு அதிக ஊதியம் கொடுத்த தொழில்களும் அங்கு நிறைய இருந்தன. யார்க்ஷயரின் வெஸ்ட் ரைடிங்கில் (West Riding) வாரக்கூலி பதினான்கு ஷில்லிங்காக இருந்த பொழுது வில்ட்ஷிலும் (Wilts) சப்போக்கிலும் (Suffolk) அது ஏழு ஷில்லிங்காக இருந்தது. (Clapham, I, பக். 466-67; II, பக் 286, அட்டவணை.)

பொதுநிலத்திலிருந்தும் திறந்த வயலிலிருந்தும் விரட்டப் பட்ட தொழிலாளிக்கு நஷ்டஈடாகப் பொதுப்பணி ஆர்வமிக்க கனவான்களாலும், ஊர்க்குருக்களாலும் குடியானவர்களா லும் சிறுசிறு உருளைக்கிழங்குத் தோட்டமும், துண்டுநிலமும் சிலவேளைகளில் கொடுக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற் றாண்டில் விவசாயத்தொழிலாளிக்கு உருளைக்கிழங்கு மிகவும் பயன்பட்டது. ஆயினும் துண்டுநிலம் ஒதுக்கும் இயக்கம் (allotment movement)மெதுவாக நடைபெற்றது; மேலும், அது வாய்க்கசப்பைத் தற்காலிகமாக மறக்கச் செய்யும் ஒரு இனிப்பு மிட்டாயே ஒழிய, நோயைக் குணமாக்கும் மருந் தன்று.

ஐந்தாவது, ஆறுவது பத்தாண்டுகளில், விவசாயம் இலாபகரமான தொழிலாக இருந்த அச் சமயத்தில் செங்கல்லால் நல்ல குடிசைகள் (cottages) கட்டப்பட்டன; அவைகளில் இரண்டு அல்லது மூன்று படுக்கை அறைகள் இருந்தன; கல் பலகைகளைக் கொண்டு கூரைவேயப்பட்டது. இவைகளைப் 'பண்ணைக்குடிசை' (estate Cottages) என்ற விதத்தில் நிலப் பிரபுக்கள் கட்டினர்; உதாரணமாக பெட்போர்டு கோமகன் (Duke of Bedford) போன்ற பெரிய பிரபுக்களின் பண்ணைகளில் இவை இருந்தன. மோசமான குடிசைகள் எல்லாம் பழையவை; அவை ஏராளமாக இருந்தன. களிமண், மரச் சட்டம், சுண்ணாம்புப் பூச்சு ஆகியவைகளைக்கொண்டு அவை கட்டப்பட்டன. பொத்தல் நிறைந்த விழல் வேய்ந்த கூரைகள் அவைகளை மூடியிருந்தன. ஒரு குடிசை முழுவதிலும் இரண்டே அறைகள்தாம். 'பொதுவாகப் படுமோசமான குடிசைகள் எல்லாம் சொந்தக் குடிசைகள்தாம்; அவைகட்கு உரியவர்களே அங்குக் குடியிருந்தனர்'. பண்ணை இல்லங்கள் (farmhouses) குடிசைகளைவிடப் பெரியனவாகவும் வசிப்பதற்கு ஏற்றவையாகவும் இருந்தன. அவைகளிலும் சிறந்தவை என்று கருதப்பட்டவை சமீபத்தில்தான் நிலப்பிரபுக்களால் கட்டப்பட்டன. இரு நூருண்டு வயதான ஒரு நல்ல பண்ணை இல்லம் ஒன்று இருந்தது என்றால், அது பெரும்பாலும் மேனர் இல்லமாகவே (manor-house) முன்பு இருந்திருக்க வேண்டும்; சிறிய கனவான் குடும்பம் ஒன்று முன்பு அதில் வசித்திருக்கவேண்டும். (Clapham II, பக். 505-512).

ஆங்கிலேய நிலப்பிரபு தர்மசிந்தை உள்ளவனாக இருந்தான்; அவ்வாறு இல்லாமலிருந்தாலும், இலாபம் கருதிமட்டும் நிலத்தைப் பெற்றிருக்கும் 'வியாபார நோக்கங்'கொண்டவனல்லன் அவன். 'பண்ணைக் குடிசைகளின்' வாடகை மிகவும் குறைவு; அவைகளைக் கட்டிய செலவுக்கும் பின்னர் செப்பனிடும் செலவுக்கும் அது போதுமானதன்று. கெட்ட நிலப் பிரபுக்களும் இருக்கத்தான் செய்தனர்; பொதுவாகக் கூறப் போனால், விவசாயத் தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பதில் கனவான்கள் போதுமான அக்கறை காட்டவில்லை. விவசாயச் சங்கங்கள் (agricultural unions) அமைத்து அதிகக் கூலி பெறுவதற்கு ஜோசப் ஆர்ச் (Joseph Arch) முயற்சி செய்தபோது இது தெளிவாகப் புலப்பட்டது (1872-1873). ஆயினும், ஆங்கிலேயக் கிராமப்புறத்து நிலப்பிரபுக்கள் தமது பகுதிகளும் அங்கு வாழ்ந்த மக்களும்

முன்னேற எவ்வளவோ செய்தனர். ஆனால் அயர்லாந்தின் கிராமப்புறத்து நிலப்பிரபுக்கள்—இங்கிலாந்தின் நகரங்களில் வீடுகளைக் கட்டிக் குடக்கூலிக்குவிட்ட மனிதர்களோடு (town landlords) இவர்களை ஒப்பிடலாம்—மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டியவர்களேயொழிய வேறில்லை. நகரத்து வீட்டுக்காரர்களின் இழிசெயல்களைக் கொண்டு மனங் கொதித்த தீவிரவாதிகளும் சோஷலிஸ்டுகளும் எல்லா 'நிலப்பிரபுக்களையும்' (landlords) ஒரேயடியாக நிந்தித்தனர்; இதனால் கிராமப்புறத்துப் பிரச்னைகளை நன்கு புரிந்துகொள்வதற்கு இம்மனிதர்களுக்கு முடியாமல் போயிற்று.

இவ்வாறுக, அடுத்த பத்தாண்டுகளில் திடீரென வீழ்ச்சியுறுவதற்கு முன்னால், 1870-ம் ஆண்டு வாக்கில் பிரிட்டிஷ் விவசாயம் தனது செழிப்பின் உச்சக் கட்டத்தை எட்டிய பொழுது அது நிலப்பிரபுத்துவ சமுக அமைப்பையே அடிப்படையாகக் கொண்டிருந்தது; நிலப்பிரபு, குடியானவன் ஆகிய 'இருவருக்குமே நிலம் சொந்தமாயிருந்தது.' இம்முறையினால் விவசாய உற்பத்தி அதிசயப்படத்தக்க விதத்தில் பெருகியது; ஆயினும் கிராம வாழ்வில் ஏற்பட்ட செழிப்பில் ஒரு துளியே விவசாயத் தொழிலாளிக்குக் கிடைத்தது. ஐரோப்பாவின் கண்டப்பகுதி நாடுகளில் தனது சகோதரனுக்குக் கிடைத்த கூலியைவிட ஆங்கிலேய விவசாயத் தொழிலாளிக்கு அதிகக்கூலியே கிடைத்தது; ஆயினும் ஆங்கிலேயத் தரத்தின்படி அது ஒன்றும் அதிகமில்லை. ஐரோப்பாவில் சுயமாக விவசாயம் செய்துவந்த (self-employed) விவசாயியைவிட இவனது பொருளாதாரநிலை எவ்வளவோ மேல் என்பது உண்மைதான். அதே சமயம் குடும்ப அடிப்படையில் நிர்வகிக்கப்பட்ட சிறுசிறுவயல்களும் இங்கிலாந்தில் நிறைய இருந்தன என்பதும் உண்மைதான். ஆயினும் மற்ற வகுப்பினரோடு ஒப்பிடக்கூடியபடி பெரும் எண்ணிக்கையில் இங்கிலாந்தில் முன்பு ஒரு காலத்தில் இருந்த சுயேச்சையான விவசாயிகளின்தொகை இப்பொழுது குறைந்துபோயிற்று. இன்னமும் கண்டப்பகுதி நாடுகளிலும்கூட அவர்களது எண்ணிக்கை அதிகமாயிருந்தது. இதன் விளைவு என்னவென்றால், 1875-க்குப் பிறகு பிரிட்டிஷ் விவசாயத்தின் செழிப்பை அழித்துத் தடையிலாவர்த்தகம் (Free Trade) தனது வேலையை முடித்த பிறகு, கிராமத்து வாழ்வின் சீரழிவைப் பற்றி நகரத்து வாக்காளர்களுக்கு அக்கறையில்லை. ஏனெனில் அது நிலப் பிரபுத்துவ முறையோடு சம்பந்தப்பட்டது. தேசத்துக்கு ஏற்பட்ட இந்த நாசத்தைக் கண்டு ஆங்கிலேயர்

பலர் மகிழ்ந்தனர்; இது ஒரு சுதந்திரமான, இயற்கையான பொருளாதார மாற்றம் என்று அவர்கள் கருதினர்.

1832-ல் சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு, தங்களது வாழ்வின் சிரமங்களுக் கெதிராகக் குறிப்பாக அதிக வேலைநேரத்துக் கெதிராக, வடக்கில் ஆலைத்தொழிலாளிகள் ஒரு கடுமையான போராட்டத்தைத் துவக்கினர். யார்க்ஷயரில் தீவிரவாதிகளும் (Redicals) டோரிகளும் சேர்ந்து கொண்டனர். வெஸ்ட்மின்ஸ்டரில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் அதில் பங்கு கொண்டனர்; எனவே 1833-ல் விக் அரசாங்கமானது இவர்களைத் திருப்தி செய்ய ஒரு சட்டமியற்றியது. நாட்டின் முக்கியத் தலைவர்களான ஓஸ்ட்லர் (Oastler), சேட்லர் (Sadler), ஷேபஸ்பரி (Shaftesbury) ஆகியோர் டோரிக் கட்சியைச் சேர்ந்தவர்கள்; மேலும் அவர்கள் மூவருமே எவஞ்சலியர்கள். எவஞ்சலிய மனிதாபிமான உணர்வு கல்வியறிவு மிகுந்த தலைவர்களை உண்டாக்கியது; அதே சமயம் அவ்வியக்கத்தின் சுறுசுறுப்புக்குக் காரணமாயிருந்தவர்கள் தீவிரவாதிகளான ஆலைத்தொழிலாளிகள். ஆயினும், டோரிக் கனவான்கள் இல்வியக்கத்தை எதிர்க்கவில்லை. ஏனெனில் திடீரென்று முளைத்த ஆலைமுதலாளிகளைக் கண்டு இவர்களுக்குப் பொறுமையாக இருந்தது. இங்கிலாந்தின் இந்தக் கனவான்கள் தங்களது தானியச் சட்டங்களைக்கொண்டு ஏழைகளை நசுக்கிப் பிழிகிறார்கள் என்று இந்தத் திடீர்க்குபேரர்கள் தாக்குவது அவர்களுக்கு ஆத்திரமூட்டியது; ஆலை வேலையில் நிலவிய தீமைகளை இவர்கள் பதிலுக்குக் கண்டித்தார்கள். முன்னர் இதே குற்றச்சாட்டுகளை லுட்டைட்டுகள் (Luddites) மொழிந்தபோது அவை 'யாகோபியர்களின் தாக்குதல்கள்' என்று கூச்சல் போட்டவர்கள் இந்தக் கனவான்களின் முன்னோர்கள்தாம். செல்வந்தர்களின் அணியில் பிளவு ஏற்பட்டதால் தொழிலாளர்களின் குற்றச்சாட்டுகளைக் கேட்க ஆட்கள் இருந்தனர். இந்த வகுப்புப் பூசல்களுக்குப் பின்னணியாக விளங்கியது அக்காலத்து உண்மையான மனிதாபிமான உணர்வு; இதைப் பரப்பியவர்கள் எவஞ்சலியர்கள். ஆயினும் எந்த ஒரு சமயப் பிரிவுக்கும் அரசியல் கட்சிக்கும் மட்டும் அது உரித்தான தன்று.

மனிதாபிமான உணர்வு அரசியலில் ஒரு பெரும் சக்தியாக இப்பொழுது ஆகிவிட்டது. 1833-ல் நமது பேரரசில் அது அடிமைமுறையை ஒழித்தது; இதற்கு வேண்டிய 20

மில்லியன் பவுன்களை பிரிட்டிஷ் மக்கள் வெகு மகிழ்ச்சியுடன் வரிப் பணமாகச் செலுத்தினர். அதே ஆண்டில் உள் நாட்டில் துணி ஆலைகளில் குழந்தைகளை வேலைக்கமர்த்தும் தீய முறையை அது முடிவுக்குக் கொண்டுவந்தது.

மனிதாபிமான உணர்வைத் தொடுவதற்குக் குழந்தைகளைப் பற்றிய இந்த விஷயம்தான் மிகவும் எளிது என்பதைத் தொழிற் சட்டங்களைத் தோற்றுவித்தவர்கள் கண்டு கொண்டனர். திரு. ஹலேவி எழுதுகிறார்:

'தொழிலாளர் சங்கங்கள் வயது வந்த தொழிலாளர்களின் வேலை நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோருகின்றன; எஜமானர்களின் கொடுங்கோன்மையைவிடத் தொழிலாளிகளின் மிருகத்தனத்துக்கே அதிகமாகப் பலியாகும் குழந்தைகளின் வேலைநேரத்தைப் பற்றி இவைகளுக்குக் கவலையில்லை. ஆயினும் ஆலைகளில் வேலைசெய்யும் குழந்தைகளின் எண்ணிக்கை, பெரியவர்களின் எண்ணிக்கையைவிட மிக அதிகம்; எனவே, குழந்தைகளின் வேலைநேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், அதே சமயம் பெரியவர்களின் வேலைநேரத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். ஆங்கிலேய நடுத்தர வகுப்பினரின் மனத்தைக் குழந்தைகளுக்காக நெகிழச் செய்யவே ஓஸ்ட்லர் முயன்றார்; ஆனால் அவரது நோக்கம் வயது வந்த தொழிலாளிகளுக்குச் சட்டப்படியான பாதுகாப்புப் பெறுவதே,' (Halevy's, Hist. of Eng. People, trans by Watkin, III, p. iii.)

1833-ல் இயற்றப்பட்ட ஆல்தார்ப் பிரபுவின் தொழிற் சாலைச் சட்டம் (Lord Althorp's Factory Act) குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோரின் வேலைநேரத்தைக் கட்டுப்படுத்தியது. இதன் ஷரத்துகளை அமுலாக்குவதற்குத் தொழிற் சாலை இன்ஸ்பெக்டர்கள் (factory inspectors) நியமிக்கப்படுவர். தொழிற்சாலைகட்குள் நுழையும் அதிகாரம் இவர்களுக்கிருக்கும். இவர்களை நியமிக்கவேண்டுமென்று வேலையளிப்போரில் (employers) சில நல்லவர்கள்கூடக் கூறினர். ஏனெனில், கண்காணிக்க வேண்டியது சில கெட்ட வேலையளிப்போரை மட்டுமன்று; தங்களது குழந்தைகளின் கூலியைக்கொண்டு வாழ்ந்த சில கெட்ட பெற்றோர்களையும் கூடக் கண்காணிக்க வேண்டும். மேலும், முன்பு பல சட்டங்களை மீறியதைப்போல் இச் சட்டத்தையும் சில கெட்ட வேலையளிப்போர் மீறக்கூடும். இதனால் நல்ல வேலை

யளிப்போரின் விலையைவிட, கெட்ட வேலையளிப் போரின் விலை குறைவாக இருக்கும். எனவே, இச் சட்டத்தை அவர்கள் மீறுமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டு மென்று நல்ல வேலையளிப்போர் கூறினர்.

1833-ம் ஆண்டின் இந்தக் குழந்தைகள் சாசனத்தி லிருந்து தோன்றியதுதான் பத்துமணி நேர மசோதா (Ten Hours Bill). தொழிற்சாலைச் சட்டத்தின் இந்த இரண்டாவது நெருக்கடி 1845–1847-ல், தானியச் சட்டங்கள் ரத்து செய்யப் பட்ட சமயத்தில் தீவிரமடைந்தது. அந்த ரத்து சம்பந்தமாக எழுந்த பெரிய வாதத்தினுல் இந்த நெருக்கடியும் கூடு பிடித் தது. துணி ஆலைகளில் வேலைசெய்த பெண்கள், குழந்தை களின் அன்றாட வேலையைப் பத்துமணி நேரச் சட்டம் கட்டுப்படுத்தியது; வயது வந்த ஆண்கள் மட்டும் உற்பத் தியைத் தனியே நடத்த முடியாதாகையால், பத்து மணிக் குப் பிறகு எல்லா வேலையும் நிற்க வேண்டியதாயிற்று. பல்லாண்டுகளாகத் தொழிலாளிகள் கனவு கண்டது இது தான்; இதுவே காரசாரமான விவாதத்துக்கும் காரணமா யிருந்தது. பாராளுமன்றத்தில் ஒரு கட்சியினரில் சிலர் இன் னொரு கட்சியினரோடு சேர்ந்து கட்சிக்கட்டுப்பாட்டை எல் லாம் அலட்சியம் செய்து ஓட்டளித்தனர். லிபரல்களில் மெல்போர்ன் (Melbourne), காப்டென் (Cobden), பிரைட் (Bright) ஆகியோர் இம்மசோதாவை எதிர்த்தனர்; ரஸ்ஸல் (Russell), பாமர்ஸ்டன் (Palmerston), மெக்காலே (Macaulay) ஆகியோர் இதை ஆதரித்தனர். கன்சர்வேட்டிவ்களிடையி லும் இதே மாதிரி பிளவு காணப்பட்டது: பீல் (Peel) இம் மசோதாவைப் பலமாக எதிர்த்தார்; ஆனல், காப்பு வாதக் கனவான்களில் (Protectionist squires) பெரும்பான்மையோர் இதை ஆதரித்து வாக்களித்தனர். ஆனல் இம் மசோதாவை இறுதியாகக் காமன்ஸ் சபையில் வெற்றிகரமாக இயற்றி முடித் தவர் பீல்டென் (Fielden); இவர் இங்கிலாந்திலேயே பெரிய நூற்பாலை முதலாளி; இவரோடு சேர்ந்து இம் மசோதாவுக்கு ஆதரவு தேடிப் பாடுபட்ட மற்றொரு மனிதர், தான் தொழி லாளியாக வேலை செய்த அதே ஆலையில் பின்னர் முதலாளி யாக ஆனவர்.' (Hammond, Lord Shaftesbury, பக். 121 முதலியன.)

வாக்குரிமையானது பின்னர் எல்லோருக்கும் கொடுக்கப் படுவதற்கு அடிப்படையாக 1832-ம் ஆண்டு சீர்திருத்த மசோதா எவ்வாறு அமைந்திருந்ததோ, அதே போல் கிட் டத் தட்ட எல்லாத் தொழிலிலும் நிலவும் நிலைமைகளையும்

வேலைநேரத்தையும் கட்டுப்படுத்தும் இன்றைய விரிவான சட்ட திட்டங்களுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தவை 1833லும் 1847லும் இயற்றப்பட்ட தொழிற்சாலைச் சட்டங்கள். தொழிற்சாலைமுறை முதன்முதலில் வந்தபொழுது நமது மக்களின் உடல்நலத்தையும் மகிழ்ச்சியையும் அது அழித்து விடும் போலிருந்தது; ஆனால் அது வேலைநிலைமைகளைச் சரி செய்து, தொழிலாளர்களின் பொருளாதார நிலைமையைச் சமன் செய்வதற்கு ஏற்ற கருவியாகச் சிறுகச்சிறுக மாற்றப் பட்டது. பழைய இல்லத்தொழில் முறையில் வேலைநிலைமை களைக் கண்காணிப்பதைவிட (inspect) தொழிற்சாலைகளைக் கண்காணிப்பது வெகு சுலபம். தொழிலாளர்கள் கண்ணிய மான நிலைமைகளில் வாழவேண்டுமென்று இராபர்ட் ஓவன் (Robert Owen) கனவு கண்டு, தமது நியூலானர்க் மில்லில் அதைச் செயல்படுத்தினாரே, அதே நிலைமைகள் அடுத்த நூறு ஆண்டுகளில் தொழிலுலகம் முழுவதிலும் பெரும்பாலும் பரவின. 1833-க்கும் 1847-க்கும் இடையிலான காலத்தில் தான் இதற்கான முதல்அடிகள் எடுத்துவைக்கப்பட்டன— வேடிக்கை என்னவென்றால் இந்தக் காலத்தைத்தான், தடையிலாக் (laissez-faire) கோட்பாட்டில் மதியைப் பறி கொடுத்த காலம் என்று கண்டனம் செய்வது வழக்கம். மக்களின் இதயத்தையோ அல்லது பணத்தையோ தொட்டு விட்டால் அதன்பின் வறட்டுக் கோட்பாட்டில் அவர்களை மதியைப் பறிகொடுக்கச் செய்வது கடினம். முந்திய தலை முறையானது அந்த யாகோபிய எதிர்ப்பு நாட்களில், தடையிலாக் கோட்பாட்டில் தனக்குப் பிடித்தது எதுவோ அதை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்றவைகளை விட்டு விட்டது; ஏனெனில் ஏழைகளை நசுக்க அது எண்ணங் கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது அது மாறிவந்தது. தலையிடாமை என்ற பெயரைச்சொல்லித் தானியச்சட்டங்களை ரத்து செய்த அதே காமன்ஸ் சபை, இப்பொழுது அதே கோட்பாட்டை எதிர்த்துப் பத்துமணி நேர மசோதாவை நிறை வேற்றியது. எந்த ஒரு சமயத்திலும் தலையிடாமைத் தத்துவம் எல்லாத் துறைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தில்லை. பலவிதங்களில் பெந்தாமின் தத்துவங்கள் அதற்கு நேர்மாறுனவை; சமுதாயத்தின் எதிர்எதிரான நலன்களைக் கட்டுப்படுத்தி, ஓர் இலக்கணத்தை ஏற்படுத்தக்கூடிய நிறுவனங்களை உருவாக்க வேண்டுமென்று அவை கோரின.

1847-ம் ஆண்டு பத்துமணிநேர மசோதாவுக்குப் பிறகு தொழிற்சாலைக் கட்டுதிட்டம் என்பது பல சட்டங்களின்

மூலம் துணிஉற்பத்தி தவிர மற்றத் தொழில்களிலும் புகுத்தப் பட்டது. பல நூற்றாண்டுகளாக நிலக்கரிச் சுரங்கங்களில் பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் வேலை நிலைமைகளில் நிலவிய கொடுமைகள் இப்பொழுது மக்களின் கண்களில் பட்டன; இதனால் ஷாபஸ்பரி பிரபுவின் சுரங்கச் சட்டம் (Mines Act) 1842-ல் வந்தது. பெண்களும் பத்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளும் பூமிக்கடியில் வேலை செய்வது இதனால் தடைசெய்யப்பட்டது. 1850-ல் சுரங்க இன்ஸ்பெக்டர் அலுவலகம் (Mines Inspectorate) ஒன்றின் மூலம் வயதுவந்த ஆண் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பளிக்கும் சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டது; சுரங்கங்களில் பாதுகாப்புக்கு வழிசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகப் படிப்படியாக ஆயிற்று.

கரிமண்டிய புகைபோக்கிகளைச் சுத்தம் செய்வதற்கு நீண்ட 'பிரஷ்'களை உபயோகிப்பதைவிடச் சிறு பையன்களை உபயோகிப்பது மலிவாயிருந்தது. இது ஓர் ஆபத்து நிறைந்த வேலை; உடல் நலத்துக்கும் ஊறு செய்வது. இந்தத் தீமைகளும் கொடுமைகளும் பொதுமக்களுக்கு ஆத்திர மூட்டின; ஆயினும் பலன் ஒன்றுமில்லை. 1875-ல் ஷாபஸ்பரி தமது நாட்குறிப்பேட்டில் எழுதினர்: 'நல்லவ ரான ஜோனஸ் ஹான்வே (Jonas Hanway) இந்த மிருகத்தன மான கொடுமையை மக்களுக்கு எடுத்துக்காட்டி நூற்றிரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆயினும், இங்கிலாந்திலும் அயர்லந்திலும் பலவிடங்களில் இது இன்னும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது; எல்லா வகுப்புகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இதை நன்கு தெரிந்துகொண்ட பிறகும்கூட ஆமோதித்துத்தான் வருகிறார்கள்'. அந்த ஆண்டில்தான் ஷாபஸ்பரியின் முயற்சியால் ஒரு சட்டம் இயற்றப்பட்டது; அது இந்தக் கொடுமைக்கு முடிவுகட்டியது. முன்னர் 1840லும் 1864லும் இயற்றப்பட்ட இரு சட்டங்களும் வெறும் எழுத்தோடு நின்றுபோயின; காரணம், வீட்டுச் சொந்தக்காரர்களும் தல அதிகாரிகளும் மாஜிஸ்டிரேட்டு களும் இச் சட்டங்களை அமுல் நடத்தி இத் தீமையை ஒழிக்க முயற்சி செய்யவில்லை. (Hammomd, Lord Shaftesbury, அத். XV).

பயனற்றுப்போன 1864-ம் ஆண்டின் புகைபோக்கி சுத்தம் செய்வோர் சட்டமானது இயற்றப்படுவதற்கு ஒரு முக்கியக் காரணம் சார்லஸ் கிங்ஸ்லி (Charles Kingsley) எழுதிய

Water Babies. சிறுவன் டாமுக்கும் அவனது எஜமானர் கிரைம்ஸுக்கும் (Grimes) இடையிலான உறவுகள் இதில் வருணிக்கப்பட்டன. மேலும், குழந்தைகளின் துன்பங்களிலும் அவர்களது உணர்ச்சிகளிலும் பொதுமக்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதற்காக டிக்கன்ஸ் ஏற்கெனவே பெரு முயற்சி செய்து வெற்றிபெற்றிருந்தார்; Water Babies நூலும் இதில் வெற்றிபெற்றது; அதற்கும் மேலாகக் கற்பனையும் வேடிக்கைகளும் செறிந்த ஒரு தேவதைகள் உலகத்தை அது சிருஷ்டி செய்தது; அவ்வுலகத்துக் கனவுகளிலும் வேடிக்கைகளிலும் குழந்தைகள் மட்டுமின்றி முதியவர்களும்கூட மூழ்கித் திளைக்கலாம். குழந்தைகளின் விளையாட்டுகள், கற்பனைகள், சிந்தனைப் போக்குகள் ஆகியவற்றில் பரிவும் அக்கறையும் காட்டப்பட்டன அக்காலத்தில்; குடும்பவாழ்வைப் போற்றி நிறையக் குழந்தைகளைப் பெற்று வளர்த்த அக்காலத்தின் தலைசிறந்த அம்சங்களில் இது ஒன்று. அந் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பியக் கண்டப் பகுதியிலிருந்து கிரிம் (Grimm), ஆண்டர்சன் (Andersen) ஆகியோரின் தேவதைக் கதைகள் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வென்றன. சிறுபையன்களுக்கும் பெண்களுக்குமான கதைப் புத்தகங்கள் ஏராளமாக வெளிவந்தன. பெரியவர்களும் படித்து மகிழக்கூடிய சிறுவர் இலக்கியம் அக்காலத்தின் ஒரு நவீனப் படைப்பு. அதற்கு முந்திய நூற்றாண்டில் கல்லிவர் (Gulliver), ராபின்சன் குரூசோ (Robinson Crusoe) ஆகியவை பெரியவர்களுக்காக எழுதப்பட்டன; ஆயினும் குழந்தைகளும் பையன்களும்கூட இவைகளையும் அராபிய இரவுகள் (Arabian Nights) நூலையும் படித்து இன்புற்றனர். 1855-ல் தேக்கரே தனது Rose and the Ring, a Fireside Pantomime for great and small children என்ற நூலை வெளியிட்டார்; பத்து ஆண்டுகட்குப் பிறகு Alice என்ற நூலும் வெளிவந்தது. கிரைஸ்ட் சர்ச்சின் (Christ Church) டீன் அவர்களின் சின்னஞ்சிறு பெண்ணுக்காக இது எழுதப்பட்டு, 'லூயி கரோல்' (Lewis Carroll) என்பவரால் வெளியிடப்பட்டது. தனிவகை இலக்கியத்தைச் சேர்ந்த இந்தப் பெருநூல்கள் எண்ணிறந்த எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்கின. இவ்வழியை ஸ்டீவென்சன் (Stevenson), பாரீ (Barrie) ஆண்ட்ரூ லேங் (Andrew Lang) ஆகியோரும் பின்பற்றினர்.

உண்மையான நாகரிகத்துக்கு விக்டோரியாக் காலத்து இங்கிலாந்தின் பிரதான காணிக்கை, குழந்தைகளிடம்

காட்டப்பட்ட இந்தப் பரிவுதான். ஆயினும் இந்த உணர்வு எல்லாவிடங்களிலும் விரவிக் காணப்படவில்லை; புகை போக்கியைச் சுத்தம் செய்யும் குழந்தைகளுக்கு நிவாரணம் அளிக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் இதை நன்கு புலப் படுத்துகிறது. குழந்தைகளைத் தவருன முறையில் பயன் படுத்துவதும் அலட்சியப் படுத்துவதும் சிறுகச் சிறுக மறைந்தன. நகரத்துக் குழந்தைகளில் பெரும்பாலோருக்குச் சேரித் தெருக்களே இன்னும் விளையாட்டு மைதானமாக இருந்துவந்தன; 1870 வரையில் இவர்கள் செல்வதற்குப் பள்ளிக்கூடங்களும் இல்லை; அந் நூற்றாண்டு முடியும் வரை இவர்களுக்கு விளையாட்டு நிறுவனங்களும் கிடையா. குழந்தைகளைக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சங்கம் (Society for the Prevention of Cruelty to Children) 1884 வரையில் நிறுவப்படவேயில்லை; ஆனல் அது நிறுவப்பட்டபின் 5 மில்லியன்களுக்கும் அதிகமான வழக்குகளில் வெற்றிகர மாகப் பணியாற்றியது. சிறு பையன்களைக் கொடுமையான முறையில் சவுக்கால் அடிக்கும் பழக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மெல்ல மறைந்தது. இப் பழக்கத்தைத்தான் கடந்த நூற்றாண்டுகளில் கல்வியறிவுமிக்க சீர்திருத்த வாதிகள் கண்டித்து வந்தனர். பல துறைகளில் இவ்வாறு மனித உணர்வு புகுந்தது; கரியும் மூடுபனியும் புகையும் மண்டிய பெரு நகரங்கள் வளர்ச்சியுற்று, வாழ்வில் அருவருப் பையும் மாசையும் வளர்த்து வந்தன ஒருபுறம்; அதற்கு ஓரளவு ஈடு செய்யும் வகையில் மறுபுறத்தில் இந்த மாற்றமும் நிகழ்ந்தது.

இங்கிலாந்து, ஏழை பணக்காரர் என்ற இரு தேசங் களாகப் பிரிக்கப்பட்டது என்று டிஸ்ரேலி கூறியதில் நிறைய உண்மை இருக்கிறது. ஆனல் எல்லா வாசகங்களையும் போல இதுவும் பாதிதான் உண்மை. தொழிற்புரட்சியானது விக்டோரியாக் காலத்தில் பெருஞ் செல்வந்தர்களுக்கும் பரம ஏழைகளுக்கும் இடையிலான தூரத்தை அதிகப் படுத்தியது என்பது மறுக்க முடியாதது; எல்லா வகுப் பினருக்கும் பொதுவான சில அம்சங்களையும் நலன்களையும் கொண்ட மார்க்கெட்நகர வாழ்வுக்கும் கிராம வாழ்வுக்கும் பதிலாக, ஒவ்வொரு வகுப்பினரும் தனித்தனியாக ஒவ் வொரு பேட்டையில் வாழ்ந்த பெரு நகரங்களை அப் புரட்சி உண்டாக்கியது என்பதும் மறுக்க முடியாதது. அதே சமயம் நல்ல வசதி படைத்த நடுத்தர வகுப்புகளின் எண்ணிக்கை யையும் அது அதிகரித்தது; மேலும், தொழிலாளர் வகுப்பு

களிலும் கூட வசதி மிக்க சிலரின் வாழ்க்கைத்தரத்தை—உதாரணமாக எஞ்சினியர்களின் வாழ்க்கைத் தரத்தை—திறம் பெறுத தொழிலாளி (unskilled labourer), சேரி வாழ் மக்கள் ஆகியோரின் தரத்துக்கு வெகு மேலாக உயர்த்தியது. அங்கு இரண்டுக்கும் அதிகமான 'தேசங்கள்' இருந்தன; இரண்டு மட்டும்தான் இருந்தன என்று வைத்துக் கொண்டாலும் அவைகளைக் கோடிட்டுப் பிரித்துக் காட்டுவது டிஸ்ரேலியின் கூரிய அறிவினால் கூட முடியாது.

ஐந்தாவது, ஆறுவது பத்தாண்டுகளில் கூலி உழைப்பாளர்களின் (wage-earners) நிலை உயர்ந்தது. இதற்கு ஒரு காரணம் அக்காலத்து வியாபாரச் செழிப்பு; இங்கிலாந்து உலகின் தொழிற்கூடமாக அப்பொழுது விளங்கியது. இன்னொரு காரணம் பாராளுமன்றம் இயற்றிய சமூகச் சட்டங்கள்; கூலி உயரவும், பணத்துக்குப் பதிலாகப் பொருள்களையே கூலியாகக் கொடுப்பதை நிறுத்தவும், வேறு ஊழல்களையும் தீமைகளையும் ஒழிக்கவும் தொழிற் சங்கங்கள் போராட்டம் நடத்தியது வேறு ஒரு காரணம். எஞ்சினியர்கள், மற்றத் திறம்பெற்றத் தொழிலாளர்கள் ஆகியோர் அடங்கிய தொழிலாளி வகுப்பின் மேல்தட்டில் தொழிற் சங்க இயக்கம் மிகவும் பலம் பொருந்தி விளங்கியது.

கூட்டுறவு இயக்கமும் இக்காலத்தில்தான் வளர்ந்தது. சில்லறை வியாபாரிகள் துய்ப்போரைச் (consumers) சுரண்டுவதைத் தடுப்பதற்கும், சுய நிர்வாகம், வியாபாரம் ஆகியவற்றில் தொழிலாளர் வகுப்புக்குப் பயிற்சியளிப்பதற்கும் இது மிகவும் பயன்பட்டது. ராச்டேலைச் (Rochdale) சேர்ந்த சுமார் இருபத்தைந்து தொழிலாளர்களின் முயற்சியால் இது தொடங்கியது. இவர்கள் சார்டிச இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்; ஓவனின் (Owen) கொள்கைகளை ஆதரித்தவர்கள். இவர்கள் ராச்டேல் முன்னோடிகள் (Rochdale Pioneers) என்று ஒரு கூட்டுறவுக் கடையை 1844-ல் டோட் சந்தில் (Toad or T'owd Lane) ஆரம்பித்தனர். அது ஒரு சிறிய நிறுவனம்; பல பெரிய கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்கெனவே தோல்வியுற்று விட்டன. ஆனால், ஓவனின் கனவை நனவாக்குவதற்கானதொரு சரியான திட்டத்தை இவர்கள் வகுத்தனர். மார்க்கெட் விலைக்குப் பொருள்களை விற்றல், தாங்கள் பொருள்களை வாங்கிய விகிதத்துக்கு ஏற்றபடி இலாபத்தைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளுதல் என்ற விதிகளை இவர்கள் வகுத்துக் கொண்டனர். இதன் விளைவாக இக்கடையை நன்முக நடத்துவதில் எல்லோருக்கும் அக்கறை

ஏற்பட்டது; துய்ப்போரை ஏமாற்றி இலாபம் ஈட்டும் எண்ணமும் மறைந்தது. இதே முறைகளில்தான் அந் நூற்றாண்டு முடிவுக்கு வருமுன் கூட்டுறவு இயக்கம் மிக விரிவாகப் பரவியது.

இந்த இயக்கம் ஐந்தாவது பத்தாண்டில் நடைமுறையில் வெற்றி பெற்றதற்குச் சிலர் துணையாயிருந்தனர். இந்த இயக்கம் கொள்கைரீதியில் கூட மிகவும் போற்றத்தக்கது என்று வெகு ஆர்வத்துடன் சிலர் பிரசாரம் செய்தனர்; இவர்களில் முக்கியமானவர்கள் சமயச் சார்பற்றவர்களும் (Secularists) கிறிஸ்தவ சோஷலிஸ்டுகளும் (Christian Socialists). சமயச் சார்பற்றவர்களின் தலைவராக அப்பொழுது விளங்கியவர் ஹோல்யோக் (Holyoake); இவர் ஓவனின் சீடர். கிறிஸ்தவ சோஷலிஸ்டுகளுக்கு ஆசானாக விளங்கியவர் பிரெடெரிக் டெனிசன் மாரிஸ்; இவர்களில் கூட்டுறவு இயக்கத்துக்காகப் பிரசாரம் செய்தவர் டாம் ஹ்யூக்ஸ் (Tom Hughes); இவர்தான் Tom Brown's School days என்ற நூலின் ஆசிரியர். கடைக்காரர்கள் இந்த இயக்கத்துக் கெதிராக ஒரு மறியல் ஆரம்பித்தனர்; இதனால் இந்த இயக்கம் மேலும் பலமடைந்தது. ஏழாவது பத்தாண்டில் வியாபாரத் துறையில் மட்டுமின்றி உற்பத்தித் துறையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு ஆற்றின.

கூட்டுறவு இயக்கம் பணத்துறையில் மட்டும் முக்கியமானது அன்று. நாட்டின் வெற்றிதோல்விகளில் தமக்கும் ஒரு பங்கு உண்டு என்ற உணர்வை அது தொழிலாளிகள் பலருக்கு ஊட்டியது. அவர்களுக்குத் தொழில் பழக்க வழக்கங்களையும் பரஸ்பர உதவிமுறையையும் அது கற்றுத் தந்தது. கல்வியும் சுயஅபிவிருத்தியும் முக்கியமானவை என்ற எண்ணத்தை உண்டுபண்ணி ஊக்குவிக்கக் கூடிய சங்கங்களில் அது அவர்களை ஒன்றுதிரட்டியது. அதன் வரலாற்றுசிரியர்களில் ஒருவர் எழுதுகிறார்: 'பணத்துறையில் சிக்கனத்துக்கு அது வழிசெய்கிறது; இதைவிட முக்கியமானவை அறிவுத்துறையிலும் ஒழுக்கத்துறையிலும் அதனால் விளைந்த நன்மைகள். இந்த வகையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களில் நலம் பயக்கும் ஒரு புரட்சியையே அது தோற்றுவித்து, கிரேட் பிரிட்டனின் சமுதாய மாற்றத்துக்குப் பெரிதும் உதவியிருக்கிறது'.

இவ்வாறு கூட்டுறவு இயக்கம், தொழிற்சாலைச் சட்டங்கள், தொழிற் சங்கங்கள், தடையிலா வாணிகம் ஆகிய பல

முறைகளைப் புதிய பிரிட்டன் கையாண்டு, தொழிற் புரட்சியினால் விளைந்த பல தீமைகளுக்குப் பரிகாரம் காண முயன்று கொண்டிருந்தது; தொழிற்புரட்சியானது பிரிட்டன் பெற்றெடுத்த குழந்தை; அதே போல் இவையனைத்தும் கூட பிரிட்டனின் சொந்தக் குழந்தைகளே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது இருபத்தைந்தாண்டுகளில் கானடா, ஆஸ்திரேலியா, நியூசிலந்து ஆகியவற்றின் குடியேற்றத்தில் ஒரு புதிய தன்மை புகுந்தது; இந்தப் பிரதேசங்களில் இங்கிலாந்திலிருந்து வந்த மக்களே பெரும்பாலும் குடியேற்றப் படவேண்டும் என்பதும் இவை சுதந்திரமான பிரிட்டிஷ் காமன்வெல்த் ஒன்றின் பாகங்களாக ஆகவேண்டும் என்பதும் இக்காலத்தில்தான் தீர்மானிக்கப்பட்டன.

கிரேட் பிரிட்டனில் மக்கள்தொகை அளவுக்கு மீறி அதிகமானதும்—இதைத்தான் மால்தஸ் கண்டனம் செய்தார்—ஆங்கிலேய விவசாயிகளின் இன்னல்களும் ஏராளமான ஆங்கிலேயக் கிராமவாசிகளைக் குடியேற்ற நாடுகளுக்குச் செல்லும்படி இந்த ஆண்டுகளில் விரட்டின; இவ்வாறுதான் நமது தற்காலப் பேரரசானது நிர்மாணிக்கப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளை நோக்கியும் இவர்கள் பெரும் எண்ணிக்கையில் சென்றனர்; பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளை விட்டுவிட்டு அமெரிக்காவுக்கு மட்டுமே கூட இவர்கள் சென்றிருப்பார்கள்; ஆனால் குடிப்பெயர்ச்சிச் சங்கங்களின் (emigration societies) இடைவிடாத முயற்சியும், அங்குமிங்குமாக அரசாங்கமளித்த ஆதரவும், கிப்பன் வேக்பீல்டின் (Gibbon Wakefield) பிரசாரமும் இதைத் தடுத்தன. மக்களின் பொருளாதார இன்னல்களுக்குச் சிறந்த மருந்து குடிப்பெயர்ச்சிதான் என்றும், குடியேற்ற நாடுகள் எல்லாமே வியாபார ஸ்தலமாகவோ, அல்லது இன்று போய் நாளை திரும்பக்கூடிய இடமாகவோ இல்லாமல் பின்னர்ப் புதிய பிரிட்டிஷ் தேசங்களாக அவை ஆகக் கூடும் என்றும் அவர், தம் நாட்டினருக்கு எடுத்துக்கூறினர். தற்காலக் கானடா, ஆஸ்திரேலியா, நியூசிலந்து ஆகியவை உருவாவதற்குக் காரணமாயிருந்த ஆங்கிலேய மக்கள், குடிப்பெயர்ச்சிச் சங்கங்களின் உதவி பெற்றுத் திட்டமிட்ட வகையில் தம் தாய்நாட்டிலிருந்து பெயர்ந்து சென்றதற்கு இவர்தான் முக்கியக் காரணம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் மகிழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது என்ன? 'முன்னேற்றம்'தான்

வரலாற்றின் விதி என்ற உறுதியான நம்பிக்கை விக்டோரியாக் காலத்து மக்களின் மனத்துக்குப் பரவச மூட்டியதே அதற்குக் காரணம் என்ன? வாட்டர்லூவுக்குப் பிறகு ஒரு நூறு ஆண்டுகளுக்கு எந்த ஒரு பெரும் போரிலும் இங்கிலாந்து ஈடுபடவில்லை—இதுதான் காரணம்.

கிரிமியாப் போர் (1854—1856) ஒரு விதிவிலக்கன்று; ஏனெனில், போதுமான காரணம் ஏதுமின்றிக் கருங்கடலை நோக்கி நமது துருப்புகள் செய்த முட்டாள்தனமான பயணம் அது; நீண்ட அமைதியான சுவாரஸ்யமில்லாத வாழ்வு ஆங்கிலேயர்களுக்கு அலுப்புத் தட்டியதுதான் இதற்குக் காரணம். மூன்று ஆண்டுகட்கு முன்பு ஹைடி பார்க்கில் (Hyde Park) நடந்த மாபெரும் கண்காட்சியின் (Great Exhibition) பொழுது, போரை எதிர்த்தும் சமாதானத்தை ஆதரித்தும் தாம் முழக்கியதெல்லாம் அவர்களுக்கு மறந்துபோயிற்று. பால்கன் நாடுகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள்மீது துருக்கியின் ஆதிக்கமே நீடிக்கவேண்டும் என்பதற்காக ஓர் இலட்சியப் போரில் இறங்கும் ஆவேசம் பூர்ஷ்வா ஜனநாயகத்துக்கு ஏற்பட்டது; பிடித்தமான செய்தித்தாள்களும் இதற்குத் தூபமிட்டன. அடுத்த தலைமுறையில் இதே செய்தித்தாள்களும் மனிதர்களுமே கிளாட்ஸ்டனின் தலைமுறையில் பால்கன் கொள்கையைத் தலைகீழாக்கினர். சிறிய அளவிலேயே நாம் கிரிமியாப் போரில் இறங்கினோம்; நமது வேட்டைஆசை தீர்ந்ததும் திரும்பி வந்துவிட்டோம். வெளிவிவகாரக் கொள்கை (foreign policy) என்பது ஆட்சியாளர்களுக்கு மட்டுமே தெரிந்த ஒரு இரகசியம் என்ற கருத்து மறைந்து, மக்களும் அதில் அக்கறை காட்டும் காலம் வந்தது. வெளிவிவகாரக் கொள்கையில் பெரிய முட்டாள்கள் யார்? ஆட்சியாளர்களா அல்லது மக்களா? இதற்கு விடை கூறுவது வெகு கடினம்.

ஆயினும் கிரிமியாப் போரினால் மிக நல்லது ஒன்று விளைந்தது: பயிற்சிபெற்ற பெண்கள் செவிலியர்களாகப் பணியாற்றும் தொழில் பிறந்தது; திருமதி கேம்பை (Mrs. Gamp) விட இவர்கள் திறமை மிக்கவர்களாயிருந்தனர். பத்தாம்பசலிக் கொள்கைகளில் ஊறிப்போயிருந்த கிரிமியாப் படை அதிகாரிகளின்மீது பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) தமது நவீன மருத்துவமனை முறைகளைத் திணித்தார்; இதில்தான் அவரது பெரும் வெற்றிகள் அடங்கியிருக்கின்றன. அப்படை அதிகாரிகளைப் பற்றித்

தெரிந்து கொள்வதற்கு இதோ ஒரு சான்று: பலகிளாவா (Balaclava) துறைமுகத்திலிருந்து செபாஸ்டாபோல் (Sebastopol) முற்றுகை அணி வரையான சில மைல் தூரத்துக்கு இரயில்பாதை அமைப்பதற்கு இவர்கள் மறுத்தார்கள்; பத்திரிகைகள், அவைகளின் முதலாவது 'போர்முனை நிருபர்கள்' (War Correspondents) ஆகியோரின் எழுத்துகளைப் படித்துக் கொதித்த நம் மக்களின் நிர்ப்பந்தத்தின் பேரில்தான் பின்னர் அப்பாதைகள் அமைக்கப் பட்டன.

இவ்வாறு கிரிமியாப் போரினால் பிரபலப்படுத்தப்பட்ட செவிலியர் தொழில் பொதுவாழ்வில் விரைவாகப் பரவியது; இதனால் பொதுசுகாதாரத்திலும் மருத்துவப்பணியிலும் ஒரு புதியகாலம் தொடங்கியது. மேலும், செவிலியர் தொழில் தவிர பல்வேறு தொழில்களையும் செய்வதற்காகப் பெண்களைப் பயிற்றும் பழக்கம் பிளாரன்ஸ் நைட்டிங்கேலின் முயற்சியால் பரவியது. வேலையற்றுச் சோம்பியிருத்தலின் அழகு, ஆண்களின் நிழலிலேயே வாழ்நாள் முழுவதையும் கழிப்பது ஆகியவைதான் ஸ்காட்டும் பைரனும் பெண்களுக்கு வகுத்துத் தந்த இலட்சியங்கள். ஆனால் விக்டோரியாக் காலத்தின் பின்பாதியில் முற்றிலும் வேருனதொரு கருத்துப் பரவியது; மேல்வகுப்பையும் நடுத்தர வகுப்பையும் சேர்ந்த மணமாகாத பெண்கள் தமது காலிலேயே நிற்பதற்கும் உலகுக்கு ஏதாவதொரு வழியில் பயன்படுவதற்கும் பயிற்றப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்பட்டது.

வேறு பல முக்கியமில்லாத சாதாரண விஷயங்களிலும் கூடக் கிரிமியாப் போரின் முத்திரைகள் பதிக்கப்பட்டன. செபாஸ்டாபோல் போர்முனைப் பள்ளங்களில் (trenches) நமது வீரர்கள் புகைபிடித்தார்கள் என்பதால், எண்பது ஆண்டு வனவாசத்துக்குப் பிறகு புகைப்பழக்கம் மீண்டும் மேல்வகுப்புகளிடையில் நாகரிகமாயிற்று. இருநூறு ஆண்டுகளாக செத்துப்போயிருந்த தாடி வளர்க்கும் பழக்கமும் கூட இதே காரணத்தினால் மீண்டும் இப்பொழுது உயிர் பெற்றது. விக்டோரியாக் காலத்தின் நடுப்பகுதியின் பிரதிநிதிகளாக விளங்கிய எல்லா வகுப்பு ஆண்களும் தாடியும் புகைபிடிக்கும் குழாயும் வைத்திருந்தனர்.

'உடல் வலிமிக்க கிறிஸ்தவ சமயமும்' கடின உழைப்பும் குளிர்நீர்க்குளியலும் நிலவிய காலம் அது. கிரிக்கெட், கால்பந்து போன்ற ஆட்டங்கள் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்

களிலும் அன்றாட வாழ்விலும் இடம்பெற்றன. சுறுசுறுப்பும் விளையாட்டு ஆர்வமும் மிக்க இந்தத் தலைமுறையினரிடம் உலவுதல், மலையேற்றம் ஆகியவையும் பரவின; பெண்கள்கூட இப்பொழுது நடந்து உலவ அனுமதிக்கப்பட்டனர். புல்வெளி டென்னிஸ் (lawn tennis) ஆட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை; ஓடியாட வசதியில்லாத கிரினோலின் (crinoline) ஆடைகள் வழக்கிலிருந்து ஒழிந்த பின்தான் இது சாத்தியம். ஆயினும் உடற்சிரமம் அதிகமில்லாத குரோக்கா லான் (croquet lawn) ஆட்டத்தில் பிரபுக்களும் சீமாட்டிகளும் பங்குகொண்டனர்; பந்தை அடிப்பதற்கு முன்னால் தமது விசாலமான கிரினோலின் ஆடையின் மறைவில் தமக்குச் சாதகமானபடி பந்தை இடம் மாற்றி வைத்துக்கொள்ள இந்த ஆட்டம் பெண்களுக்கு வசதியாக இருந்தது!

கிரிமியாப் போர் தோற்றுவிக்காத ஒன்று படைச் சீர்திருத்தம். தீபகற்பப் போரின் சிறந்த ரெஜிமென்ட் மரபுகளைக் காப்பாற்றி நமது வீரர்கள் நன்கு போரிட்டனர்; ஆனால் போதுமான ஆட்பலமோ, உணவோ, வசதிகளோ அல்லது சிறந்த தளபதிகளோ, படை அமைப்போ அவர்களுக்குக் கிடையா. இது அப்பொழுது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆயினும் அடுத்த ஆண்டில் இந்திய சிப்பாய்க் கலகத்தின்பொழுது நமது படை தனது பெரும் புகழை மீண்டும் நிலைநாட்டியது; தன்னுதவி, தனியார் முயற்சி ஆகிய விக்டோரியாக் காலத்துப் பண்புகள் சிறப்பாகப் புலப்பட்டன. அது எப்படி யிருந்தாலும் அக்காலத்துச் சீர்திருத்தவாதிகள் படையில் அக்கறை செலுத்தவில்லை. அது ஒரு திருத்த முடியாத மேல்வகுப்பு நிறுவனம் என்றும், ஒரு நாகரிக அரசுக்கு அது தேவையில்லாதது என்றும் அவர்கள் கருதினர்கள். அதைத் திருத்தியமைத்துத் தமது பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்வதில் அக்கறை காட்டாமல், அதைக் குறைத்துப் பணத்தை மிச்சப்படுத்தவே அவர்கள் விரும்பினர்கள்.

மூன்றாம் நெப்போலியன் தமது நாட்டின்மீது தீய நோக்கம் கொண்டுள்ளார் என்று ஆங்கிலேயர்கள் கற்பனை செய்து கொண்டதால் 1859-ல் நமது நாட்டில் ஒரு பீதி ஏற்பட்டது. இங்கிலாந்துடன் நட்புப் பூண்டு வாழ்வதுதான் அவரது உண்மையான விருப்பம். எப்பொழுதுமே தற்காப்பு ஆயத்தங்களை அலட்சியம் செய்து வந்த நமது மக்களுக்கு இத்தகைய கலவர உணர்வு அடிக்கடி ஏற்பட்ட

துண்டு; 1859-ல் இதன் விளைவாகத் தொண்டர்படை இயக்கம் (Volunteer movement) ஏற்பட்டது. தொழிலதிபர்கள், வியாபாரிகள், இவர்களது ஊழியர்கள் எல்லோரும் தத்தம் வேலை நேரம் முடிந்தபின் மைதானங்களில் திரண்டு உடற் பயிற்சி (drilling) செய்தனர்; அக்காலத்திய சிவிலியன் உணர்வு, தனியார் முயற்சி ஆகியவற்றுக்குப் பொருந்திய செயலே இது. ஆயினும் படைச் சீர்திருத்த முயற்சி இன்னும் தொடங்கவில்லை. 1870-ல் நடந்த பிராங்கோ—பிரஷ்ய யுத்தம்தான் இதைத் தூண்டியது; புரிந்துகொள்ள முடியாத அந்த அந்நிய தேசங்களில் ஏதோ நடந்து கொண்டிருக் கின்றன என்பதை ஆங்கிலேயப் பொதுமக்கள் சற்று உணர்ந்தார்கள். அதிருஷ்டவசமாக இந்தச் சமயத்தில் ஏற்பட்ட கலவர உணர்வினால் கார்டுவெல் (Cardwell) சீர்திருத்தங்கள் ஏற்பட்டன; கமிஷன் பதவிகளை விற்பனை செய்யும் பழக்கம் ஒழிந்தது; குறுகியகாலப் படைப்பணி முறை (short-service enlistment) கொண்டுவரப்பட்டது; இதனால் ஒரு 'ரிசர்வ்' படை இறுதியாகத் தோற்றுவிக்கப் பட்டது.

18. விக்டோரியாக் காலத்தின் பின்பாதி
[1865—1901]

ஒரு தேசத்தின் அரசியல் வரலாற்றை எழுதுவதில் இல்லாத ஒரு சிரமம் அதன் சமூக வரலாற்றை எழுதுவதில் உள்ளது. விஷயங்களின் வளர்ச்சிப் போக்கைச் சுட்டிக் காட்டுவதற்குத் தேவையான திட்டவட்டமான தேதிகளும் அவ்விஷயங்களின் போக்கை முடிவுசெய்யும் நிகழ்ச்சிகளும் சமூக வரலாற்றில் கிடையா. மனிதர்களின் சமூகப் பழக்க வழக்கங்களும், அவைகளின் பொருளாதாரச் சூழ்நிலைகளும் எப்பொழுதும்-குறிப்பாக நவீன காலத்தில்-மாறிக்கொண்டே யிருக்கின்றன; ஆயினும் அவை முழுமையாகவோ, ஒரே சமயத்திலோ மாற்றமடைவதில்லை. புதியது வந்த பின்னரும் கூடப் பழையது நீடிக்கிறது; எனவே எண்ணத்திலும் செயலிலும் காணப்படும் ஒரு தன்மை இந்தத் தலை முறைக்கு உரித்தானது என்று கூறுவதா, அல்லது அடுத்த தலைமுறைக்கு உரித்தானது என்று கூறுவதா என்பது பல சமயங்களில் சிரமமாயிருக்கிறது.

என்றாலும் பொதுவாகக் கூறுமிடத்து, விக்டோரியாக் காலத்து இங்கிலாந்தின் தன்மைகளில் காணப்பட்ட மிக முக்கியமான மாறுதல்கள் ஆறாவது பத்தாண்டின் பின் பகுதியிலும் ஏழாவது பத்தாண்டிலும் ஏற்பட்டன என்று கூறலாம். பழைய மைல் கற்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன; ஆயினும் அவை முன்புபோல் அவ்வளவு தெள்ளத் தெளிவாகத் தெரியவில்லை. பிரபுத்துவம் கிராமங் களில் இன்னும் ஆட்சிபுரிகிறது; இலண்டனிலும் தனது நாட்டுப்புற இல்ல விருந்துகளிலும் இன்னும் தலைமைப் பொறுப்பை அதுதான் வகிக்கிறது; தனி நபர் வாதியான (individualist) தொழில் முதலாளியும் வியாபாரியும் இன்னமும் செழிப்புடனேயே வாழ்கிறார்கள்; தன்னுதவி என்ற நல்ல, நேர்மையான, குறுகிய பூர்ஷ்வாப் பண்பு அவர்களுக்குப் பக்கபலமாயிருக்கிறது. ஆயினும் பாமர்ஸ் டன், பீல் ஆகியோரின் நாட்களில் கேட்பதுபோல் அவர் களது குரல்கள் இப்பொழுதும் அதிகமாகக் கேட்க வில்லை; அவர்களது கருத்துகளும்—அல்லது கருத்துக ளின்மையும்—'கீழ்க்குடியில் பிறந்த தீவிரவாதிகளாலும்' (Radicals), வேறுபலராலும் பலமாக எதிர்க்கப்படுகின்றன.

விக்டோரியாக் காலத்தின் முன்பகுதியில் கண்மூடித் தனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளும் கோட் பாடுகளும் மறைந்து, சமூக வழக்கங்கள், சமய நம்பிக் கைகள் ஆகியவை பற்றிய சுதந்திரமான விவாதத்தில் எல்லா வகுப்பு மக்களும் ஈடுபட்டுள்ளனர். சம்பிரதாயக் கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்க்காமல் ஏற்றுக் கொள்வதை எதிர்க்கவேண்டும் என்று ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) தமது 'Liberty' (1859) என்ற நூலில் போதித்தார்; பத்தாண்டுகளுக்குப் பிறகு இந்தக் கொள்கை எல்லாவிடங்களிலும் பரவிவிட்டது. அது ஒரு பரந்த நோக்குடைய, எண்ணியதைத் துணிச்சலாகப் பேசிய காலம்; அதன் பிரதிநிதிகள் மேல்வகுப்பினரோ அல்லது வியாபாரிகளோ அல்லர்; அவர்கள் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள், அல்லது பல தனித் தொழில்களில் (professions) திறமையோடு திகழ்ந்தவர்கள்; மில், டார்வின், ஹக்ஸ்லி, மேத்யூ ஆர்னல்ட், ஜார்ஜ் எலியட், பிரௌனிங் ஆகியோரின் நூல்களை அவர்கள் படித்தனர்; பெருந்தன்மை வாய்ந்த, தாடிவைத்த அறிவாளிகள் (intellectuals) அவர் கள்; அவர்களது குடும்பவாழ்வை Punch பத்திரிகையின் இதழ்களில் சித்தரித்துக் காட்டுவதில்தான் டு மாரியர் (Du Maurier) எவ்வளவு ஆனந்தமடைந்தார்!

ஜனநாயகம், அதிகாரவர்க்க ஆட்சி (bureaucracy), கூட்டுறவு ஆகியவை எல்லாம் நூற்றுக்கணக்கான சந்து பொந்துகள் மூலம் ஓர் அமைதியான வெள்ளமாகப் பெருகி வழிந்தன. ஏழாவது பத்தாண்டை அதற்கு முந்திய தலைமுறையிலிருந்து பிரித்துக் காட்டும் சில மாறுதல் களை நாம் பார்ப்போம். ஆங்கிலேயரின் பைபிள் சமயத்தின் மீது டார்வின் தத்துவங்களால் ஏற்பட்ட விளைவுகளை எல்லோரும் இன்னும் உணராவிட்டாலும், பலரும் உணர்ந் தார்கள்; சமய வேறுபாடுகளைத் துறந்து ஆக்ஸ்போர்டும் கேம்பிரிட்ஜும் 1871-ல் எல்லோருக்கும் திறந்துவிடப் பட்டன; கல்வி உலகில் பண்டை இலக்கியம், கணிதம் ஆகியவற்றோடு விஞ்ஞானமும் வரலாறும் இடம்பெற்றன; பல்கலைக்கழகப் பட்டம்பெற்ற திறமைமிக்க இளைஞர் களையும் புதிய அதிகார வர்க்கத்திற்குள் சேர்த்துக் கொள்வதற்காக சிவில் சர்வீசுக்கு ஆள்திரட்டும் முறை யில் போட்டித்தேர்வு (competitive examination) 1870-ல் புகுத்தப்பட்டது; 1867-ம் ஆண்டுச் சீர்திருத்த மசோதா மூலம் நகரத்துத் தொழிலாளி மக்களுக்குப் பாராளுமன்றத் தேர்தலில் வாக்குரிமை வழங்கப்பட்டது; மூன்று ஆண்டு

களுக்குப் பிறகு போர்ஸ்டரின் சட்டம் (Forster's Act) எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்க வழிசெய்தது; வளர்ந்துவரும் தங்களது சக்திக்கு ஏற்றமுறையில் ஒரு புதிய உரிமைச் சாசனத்தைத் தொழிற்சங்கங்கள் பெறுவதற்காக 1871—1875ல் சட்டங்கள் இயற்றப்பட்டன; தொழில் உலகில் பழைய குடும்ப நிறுவனங்கள் மறைந்து பொறுப்பு வரையறுத்த கம்பெனிகள் (limited liability companies) தோன்றின; மில் (Mill) தமது Subjection of Women (1869) என்ற நூலில் எடுத்துக் கூறிய அதே நெறிகளில் பெண்களின் சமூக விடுதலை முன்னேறியது; ஆக்ஸ்போர்டிலும் கேம்பிரிட்ஜிலும் மகளிர் கல்லூரிகள் நிறுவப்பட்டன; பெண்களின் இடைத்தரப் பள்ளிகளில் (secondary schools) பெரும் அபிவிருத்தி ஏற்பட்டது; மணமான பெண்களின் சொத்துச் சட்டம் (Married Women's Property Act), தனிப்பட்ட பணம் சிறிது வைத்திருந்த மனைவிக்குக் கணவனின் பொருளாதாரக் கட்டுத்தளையிலிருந்து விடுதலையளித்தது; 'ஆண் பெண் சமத்துவம்' கொள்கையளவில் பேசப்பட்டது; எல்லா வகுப்பினரிடையிலும் நடைமுறையிலும் கூட அது வளர்ந்தது. ஏற்கெனவே தரப்பட்ட சமூக உரிமைகளின் அடிப்படையில் அரசியல் வாக்குரிமையும் பெண்களுக்குத் தரப்படவேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது.

ஆனால் ஏழாவது பத்தாண்டில் நடந்தவற்றுள் எல்லாம் மிகப் பெரியதும், எதிர்காலத்தில் அளவிட முடியாத பெரும் விளைவுகளைத் தோற்றுவித்ததும் ஆங்கிலேய விவசாயத்தின் திடீர் வீழ்ச்சிதான்.

1875 முதல் நாசம் தொடங்கியது. வீழ்ச்சியின் ஆரம்பக் கட்டங்களில் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் பருவம் பொய்த்தது; ஆனால் இதற்கு உண்மையான காரணம், ஆங்கிலேய மார்க்கெட்டுக்கு எட்டக்கூடிய தூரத்தில் அமெரிக்கப் பிரெய்ரிப் புல்வெளிகள் (prairies) தானிய வயல்களாக மாறியதுதான். புதிய விவசாயக் கருவிகளும் வந்தன; இவைகளைக் கொண்டு மத்திய-மேற்குப் பிரதேசத்துக் (Middle-West) குடியானவர்கள் எல்லையின்றிப் பரந்து கிடந்த கன்னிநிலத்தின் வளத்தையெல்லாம் திரட்டி மலைமலையாகத் தானியத்தைக் குவித்தனர்; புதிதாக வந்து முளைத்த இரயில்கள் அத் தானியத்தைத் துறைமுகங்கட்குச் சுமந்து சென்றன; புதிய நீராவிக் கப்பல்களில் அது ஏற்றப்பட்டு அட்லாண்டிக் பயணம் செய்தது. அமெரிக்க

விவசாயத்தைக் காட்டிலும் ஆங்கிலேய விவசாயம் அதிக விஞ்ஞான ரீதியானது. அதிக மூலதனத்தையும் கொண்டது. ஆயினும், அன்றைய நிலைமைகளில் சிரமங்கள் அளவிட முடியாதவை. கடந்த இருநூறுண்டுகளாகத் திறம்பட நடத்தப்பட்ட ஆங்கிலேயப் பண்ணைகளில் நிலவிய விவசாய முறைகள் சிக்கலும் செலவும் மிக்கவை; ஆனால் ஓர் எளிய, மலிவான முறையில் எல்லாகாணமுடியாத வயல்களில் அமெரிக்காவில் தானியங்கள் விளைந்தன; எனவே அமெரிக்கத் தானியத்தின்விலை மிகவும் குறைவு. தூரத்து அமெரிக்கக் குடியானவர்களின் ஜனநாயகத்தினால் பிரிட்டிஷ் நிலப் பிரபுத்துவம் கவிழ்க்கப்பட்டது, பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தின் விளைவுகளில் ஒன்று. இதைவிட முக்கியமான ஒரு விளைவும் உண்டு. இயற்கையோடு இயைந்த வாழ்விலிருந்து ஆங்கிலேயர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்; கடந்த காலம் முழுவதிலும் தமது மக்களின் மனத்தையும் சிந்தனையையும் உருவாக்குவதற்குப் பெரிதும் பயன்பட்டது இந்த வாழ்க்கைதான்; அது இப்பொழுது போய்விட்டது.

ஐரோப்பாவின் மற்ற நாடுகளில் குடியானவர்கள் இன்னும் இருந்தனர்; சமுதாய அமைப்புக்குப் பலமூட்டுவது குடியானவ வகுப்பு என்று அங்குக் கருதப்பட்டது. எனவே அமெரிக்காவி லிருந்துவந்த தானியத்துக் கெதிராகச் சுங்க வரிகளை விதித்து அந்த நாடுகள் தம்மைக் காத்துக்கொள்ள முடிந்தது. ஆனால் இங்கிலாந்தில் அத்தகைய கொள்கை மேற்கொள்ளப் படவேயில்லை; அதைப்பற்றி யாரும் சிந்தித்துப் பார்க்கவுமில்லை. தடையிலா வாணிபம்தான் (Free Trade) நமது பெரும் செல்வத்துக்கு மூலகாரணம் என்று அப்பொழுது நம்பப்பட்டது; உலக வாணிபத்தில் தலையிட யாரும் விரும்பவில்லை; ஏனெனில் அவ்வாணிபத்தின் மீது நமது ஆதிக்கமும் செல்வமும் எத்தகைய ஆபத்துமின்றிப் பாதுகாப்புடன் இருப்பதாக அவர்களுக்குத் தோன்றியது; எண்ணிக்கையிலும், அதைவிட அறிவுத்துறை, அரசியல்துறைத் தலைமையிலும் கிராமங்களைவிட நகரங்கள் பெரும் முக்கியத்துவம் வகித்தன; தானியச் சட்டங்களால் ஏழைகளின் ரொட்டி விலையேறிப்போன அந்த 'நான்காவது பத்தாண்டுப் பட்டினிக்காலம்' (hungry 'forties) பற்றிய நினைவுகள் இன்னும் அகலவில்லை; இவை எல்லாம் ஒன்று சேர்ந்து, கிராம வாழ்வைக் காப்பதற்கான எல்லா முயற்சியையும் தடைசெய்தன. மேலும், எதிர்

காலப் போர்களின்பொழுது மக்களுக்கு உணவளிப்பதற் காக உள்நாட்டிலேயே தானியம் விளைவிப்பது அவசியம் என்பதைப் பிந்திய விக்டோரியாக் காலத்து மக்கள் உணர வில்லை. வாட்டர்லூவுக்குப் பிறகு நிலவிய அமைதி இரண்டு தலைமுறைகளுக்கு நீடிக்கவே,

'இறந்த காலத்து இன்னல் போலவும்
போன தலைமுறைப் போர்கள் போலவும்'

தேசத்தின் ஆபத்து அடியோடு ஒழிந்துபோயிற்று என்று கருதப்பட்டது.

தானியத்தில் தடையிலா வாணிபம் காரணமாக ஆங்கிலேய விவசாயம் அழிவது நிச்சயம் என்று 1846லேயே தீர்க்கதரிசனத்துடன் டிஸ்ரேலி (Disraeli) கூறினர். அவர் கூறியது முப்பது ஆண்டுகளாகப் பலிக்கவில்லை; ஆனால் இப்பொழுது அது திடீரென்று பலித்துவிட்டது. இப்பொழுது அவர்தான் பிரதம மந்திரி. ஆயினும் அதைத் தடுக்க அவர் ஒரு முயற்சியும் செய்யவில்லை; 'காப்டனின் சாபத்தினால்' (curse of Cobden) ஆங்கிலேயத் தானிய வயல்கள் கருகிப் போகும்படி அவர் விட்டுவிட்டார். கீழை நாடுகள் பற்றிய பிரச்னைகளில் மூழ்கிக் கிடந்த இந்த முதியவர் தம் நாட்டில் அப்பொழுது நிலவிய கருத்துகளை எதிர்க்காமல் போய்விட்டார்; உண்மை என்னவென்றால், முன்பு தாம் எதிர்த்த கருத்துகளுக்கு தாமே இப்பொழுது அடிமையாகி விட்டார்.

விவசாயத்தின் கதியைப் பற்றி ஆட்சியாளர்கள் அசட்டையாயிருந்ததற்கு ஒரு முக்கியக் காரணம், அதனால் வேலையில்லாப் பிரச்னை தோன்றுததுதான். வேலையிழந்த சுரங்கத் தொழிலாளிகள் மூடப்பட்ட சுரங்கத்தைச் சுற்றிச் சுற்றிவருகிறார்களே அதைப்போல் வேலையிழந்த விவசாயத் தொழிலாளி செய்யவில்லை. ஒரு 'பட்டிக்காட்டான்' தனது வேலை போய்விட்டாலோ அல்லது கூலி குறைந்து விட்டாலோ உடனே நகரத்துக்குச் சென்று, அங்கு வேலை செய்தான். அல்லது குடியேற்ற நாடுகளுக்கோ (Colonies) அமெரிக்காவுக்கோ சென்றான். துரிதமாகப் பெருகிவரும் நமது மக்கட்தொகையின் உபரிப்பகுதியை இன்னமும் அந் நாடுகள் வரவேற்று வந்தன. மேலும், தனது நாட்டை விட்டுச் செல்வதைப்பற்றி ஆங்கிலேய விவசாயத் தொழிலாளி பொதுவாக வருத்தப்பட்டதே கிடையாது; ஏனெனில், பிறரது கூலியாள் என்ற முறையில் தான் உழுத

நிலங்களை அவனுல் நேசிக்க முடியவில்லை. இந்த விதத்தில் ஐரிஷ் விவசாயியின்நிலை வேறு. தனது குடும்பத்துக்குத் தேவையான உணவைத் தான் வருந்திப் பயிரிட்ட துண்டு நிலத்தை-தனக்கே உரித்தானது என்று தான் கருதிய துண்டு நிலத்தை-ஐரிஷ் விவசாயி உயிருருக நேசித்தான். அது மட்டுமின்றி நகரங்களைப் பற்றியும் அங்குள்ள வாய்ப்பு, கூலி பற்றியும் ஆங்கிலேயக் கிராமத்தானுக்கு அதிகம் தெரியும். 'முன்னுக்கு வரவேண்டும்' என்ற எண்ணம் நமது மற்ற வகுப்பினரிடம் காணப்பட்டது போலவே அவனிடமும் காணப்பட்டது; எனவே, தான் சிறுபிள்ளையாயிருந்த நாட்களில் ஓடியாடிய ஊரிலிருந்து வெளியேறியபொழுது அவன் சோர்ந்துபோகவில்லை.

ஆனுல், நிலப்பிரபுக்களும் குடியானவர்களும் தம் நிலத்தைவிட்டு ஓடும் எண்ணமோ சக்தியோ இல்லாமல் தமது கிராமங்களைப்பற்றிப் பயனின்றிக் கண்ணீர்விட்டார்கள்; ஏனெனில் இங்கிலாந்தின் ஆட்சியாளர்களாக அவர்கள் திகழ்ந்தகாலம் போய்விட்டது. ஏழாவது எட்டாவது பத்தாண்டுகளைச் சேர்ந்த லிபரல், கன்சர்வேடிவ் கட்சிகளைச் சேர்ந்த அறிவாளிகள் இருசாராருமே தடையிலா வாணிபக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு விட்டார்கள்; தடையிலாப் போட்டியில் ஒரு தொழில்—உதாரணமாக விவசாயம்—தோற்றுப் போனுல், மற்றத் தொழில்கள் அதே விகிதத்தில் வெற்றிபெற்று, அதன் இடத்தை வகிக்கும் என்றும், இவ்வாறு எல்லாம் சரியாகிவிடும் என்றும் அவர்கள் நம்பினர்கள். ஆனுல் எல்லாம் சரியாகவில்லை. ஏனென்ருல் மனிதனின் நல்வாழ்வு முழுவதுக்கும் அரசியல் பொருளாதாரம் பொருந்தாது. விவசாயமானது பல்வேறு தொழில்களில் ஒன்று மட்டுமன்று, அது ஒரு வாழ்க்கைமுறை; அதன் சமுதாய, ஆன்மீக முக்கியத்துவம் தனிச்சிறப்பு வாய்ந்தது; அதற்கு வேறு ஈடு கிடையாது. இந்த உண்மையானது வெறும் தத்துவம் பேசிய மனிதர்களுக்குத் தெரியவில்லை.

1875-ல் தொடங்கிய விவசாய வீழ்ச்சிக்குப்பின் பத்து ஆண்டுகளில் இங்கிலாந்தில் கோதுமை விளைந்த நிலத்தில் ஒரு மில்லியன் ஏக்கர்கள் குறைந்தன. 1881-ல் பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட விவசாயத் தொழிலாளிகளின் எண்ணிக்கை இலட்சக்கணக்கில் குறைந்திருந்தது; இவ்வாறு தான் குடிப்பெயர்ச்சி ஆரம்பமாயிற்று. மேற்கிலும் மிட்லந்திலும் (Midlands) வடக்கிலும் ஏராளமான தானிய வயல்கள்

புல்மூடிப் போயின; அதே சமயம் கால்நடைகளின் எண்ணிக்கையும் பெருகவில்லை; ஆனால், ஆடுகளுக்குப் பதிலாக மாடுகள் வளர்க்கப்பட்டன. ஆஸ்திரேலியா, நியூசீலந்து, தென் அமெரிக்கா ஆகியவிடங்களிலிருந்து குளிர வைக்கப்பட்ட இறைச்சி (frozen meat) இறக்குமதி செய்யப் பட்டது; எட்டாவது, ஒன்பதாவது பத்தாண்டுகளில் ஏற்பட்ட ஒரு புதிய அம்சம் இது. 1891—1899ல் இரண்டாவது விவசாய மந்தம் (depression) ஒன்று நேர்ந்தது; 1875-1884ல் ஏற்பட்ட முதல் மந்தத்தைப் போல இதுவும் கடுமையாகவே இருந்தது. 1871-ல் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் மொத்தம் எட்டு மில்லியன் ஏக்கராக இருந்த தானிய வயல்கள் அந் நூற்றாண்டின் இறுதிவாக்கில் ஆறு மில்லியன்களுக்கும் கீழாகக் குறைந்துபோயின. கால்நடைகளுக்கு நிரந்தரமான மேய்ச்சல் நிலங்கள் அதிகமாகப் பெருகின; ஆனால் தானிய விலைவீழ்ச்சியை ஒட்டிய முறையில் கால்நடைகளின் விலையும் குறைந்தது. விவசாயத் தொழிலாளிகளுக்கு 1884-ல் வாக்குரிமை தரப்பட்டுவிட்ட தாயினும் நகரங்களை நோக்கியும் கடல்கடந்தும் அவர்கள் குடிபெயர்வது தணியவில்லை.

ஆங்கிலேய விவசாயத்தின் வரலாற்றாசிரியர், விக்டோரியாக் காலத்தின் இறுதிப் பத்தாண்டுகளைப் பற்றி இவ்வாறு தொகுத்துரைக்கிறார்:

'பயனுள்ள உதவி எதையும் செய்வதற்குச் சக்தியற்றதாகப் பாராளுமன்ற மிருந்தது. நாம் ஏற்றுமதிசெய்த செய்பொருள்களுக்கு (manufactured goods) விலையாக அந்நிய தேசங்கள் கொடுத்த பணம் உணவுதான். அந்த உணவின் மலிவான விலையினால் கூலி உழைப்பாளி பெரும் பயனடைந்தான் என்பதில் ஐயமில்லை. வேறு உதவி ஏதுமில்லாத விவசாயிகள் நெஞ்சுரத்தோடும் முயற்சி குன்றாமலும் தமது சக்திக்கு மீறிய போரைத் தொடர்ந்து நடத்தினர். காலஞ் செல்லச்செல்ல சோர்வு மேலிட்டது. செய்தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் தமது நாட்டை மட்டும் விட்டுவிட்டு, வெளிநாடுகளிலெல்லாம் இருந்து உணவை எதிர்பார்த்தனர். முயற்சியும் ஊக்கமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குன்றின; உதவிபுரியும் சக்தியை நிலப் பிரபுக்கள் இழந்தனர்; மீண்டும் புத்துயிர்பெறும் சக்தியைக்

காரர்களும் பயிரிட்டோரும் தமது குறைந்து வந்த வருவாயைக்கொண்டு செலவை ஈடுகட்டும் முயற்சியில் இறங்கினர். நிலத்தின் தன்மை குன்றியது; குறைவான

வியாபார நோக்கத்தை விட்டுவிட்டு கலைக்கண்ணோடு பார்த்தால் 1830-ம் ஆண்டில் மற்ற எந்த நாட்டையும் விட மிகவும் நேர்த்தியான மரங்களை இங்கிலாந்து உற்பத்தி செய்தது. ஆனால் இப்பொழுது காடுகள் எல்லாம் அழிந்து விட்டன; நியூ பாரஸ்ட் (New Forest), பாரஸ்ட் ஆப் டீன் (Forest of Dean) போன்ற ஒரிரு திட்டுகளே அங்குமிங்கு மிருந்தன. ஆயினும் ஆகாயத்திலிருந்து பார்த்தால் நிலப் பரப்பு ஓரளவு மரங்கள் நிறைந்தே காணப்பட்டிருக்கும். அவ்வாறு காணப்பட்ட மரங்கள் கிராமப்புறங்களில் வேலி வரிசை மரங்களும், அழகுக்காக காப்பாற்றப்பட்ட பூங்கா மரங்களும், வேட்டை விலங்குகளுக்காக வளர்க்கப்பட்ட புதர்களும் மரங்களுமே. மரங்களின் அருமை, பண்ணை ஏஜன்டுகளுக்குத் தெரியாது; எனவே மரங்களில் படர்ந்த கொடிகளை வெட்டாமலும், அடர்த்தியைக் குறைக்காமலும், உரிய நேரத்தில் வெட்டி விற்காமலும் அவர்கள் வீணக்கி விட்டார்கள். கோனிபர் (conifer) வகை மரங்களும் ரோடோடென்ரான் (rhododendron) வகை மரங்களும் செடிகளும் அக்காலத்தின் கலைச்சுவைக்கு மிகவும் ஏற்றவையாயிருந்ததால், புதிதாக வளர்க்கப்பட்டன. நமது தீவின் பெரும்பாலான பிரதேசங்களைப் பொறுத்தவரை இவை இரண்டுமே அன்னியத் தாவரங்கள்; ஆயினும், 'பல ஷயர்களிலும் தலைமைவகித்த ஆண் வான்கோழிகளை வளர்ப்பதற்கு' இவை ஏற்றவையாயிருந்தன. செல்வம், அமைதி ஆகிய கனவுகளில் ஈடுபட்டுக் கொழுத்துக் கொண்டிருந்த இங்கிலாந்தின் சின்னமாக இந்த வான்கோழிகள் இளம் கிப்ளிங்கின் (Kipling) கோபம் நிறைந்த கண்களுக்குப் பட்டன; இந்தக் கனவு ஒரு நாள் கலைந்து நாசம் விளையும் என்று கிப்ளிங் எச்சரிக்கை செய்தார்.

ஆங்கிலேய அரசாங்கத்தினுடைய கொள்கையின் இயல்பான குறுகிய பார்வைக்கு ஒரேவோர் எடுத்துக்காட்டுதான் விவசாயத்தின் கதி. பிந்திய விக்டோரியாக் காலத்து மக்கள் எதிர்காலத்துக்கான நீண்டகாலத் திட்டங்களை வகுக்கவில்லை. ஏற்கெனவே முற்றிப்போன பிரச்னைகளையும் தேவைகளையும் தீர்ப்பதுடன் அவர்கள் திருப்தியடைந்தனர். ஆயினும் இந்த எல்லைகளுக்குள் பார்த்தால், பாமர்ஸ்டன் காலத்தைச் சேர்ந்த, மனநிறைவு மிக்க தமது முன்னோர்களைவிட இவர்கள் சுறுசுறுப்பு மிக்க சீர்திருத்தக்காரர்கள்; சிவில் சர்வீஸ், தல நிருவாகம், கல்வி, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைக் காலத்துக்கு ஒட்டிய முறையில் திருத்தி

யமைத்தவர்கள் இவர்கள்தாம்; படையைக்கூட ஓரளவுக்கு இவர்கள் திருத்தியிருந்தார்கள்.

ஏனென்றால் ஐந்தாவது, ஆறுவது பத்தாண்டுகளில் ஆங்கிலேயர்களிடையில் காணப்பட்ட மனநிறைவும் நம்பிக்கை மிகுதியும் ஏற்கெனவே ஒருசிறிது குறைந்து விட்டன. இறந்துபோன அந்த அதிருஷ்டமிக்க நாட்களில் இயந்திர சாதனங்களில் தனக்கு ஒரு தலைமுறை பிந்தியிருந்த ஓர் உலகத்துக்காக இங்கிலாந்து ஆலைப்பொருள்களை உற்பத்திசெய்தது; அப்பொழுது மூன்றும் நெப்போலியன் ஆண்ட பிரான்ஸைக் காட்டிலும் அதிகப் பலம் பொருந்திய, அதிகப் பகைமை காட்டிய இராணுவசக்தி வேறு ஒன்றுமில்லை; 1848-ல், ஐரோப்பியக் கண்டப்பகுதியில் புரட்சியும் பிற்போக்கும் (Revolution and Reaction) தலைவிரித்தாடிய அந்த ஆண்டில், மற்ற நாடுகள் எல்லாம் பொருமைப்படும்படி அவை எல்லாவற்றுக்கும் உயர்ந்ததாகச் செல்வம், சுதந்திர உரிமைகள், அமைதி ஆகிய எல்லாவற்றிலும் தம் நாடு விளங்கியது கண்டு மெக்காலே பிறந்த இந் நாட்டினர் பூரித்தனர். 1870-ல் வந்த பிராங்கோ—பிரஷ்ய யுத்தம்தான் முதல் அதிர்ச்சி. அடுத்த மூன்று தலைமுறைகளில் அமெரிக்காவும் ஜெர்மெனியும் நமக்குப் போட்டியாக ஆலை உற்பத்தி நாடுகளாக வளர்ந்து வந்தன. அமெரிக்காவின் அளவிடற்கரிய இயற்கைச் செல்வங்களும், தூரப்பார்வையுடைய ஜெர்மென் அரசாங்கம் போதித்துவந்த விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வியும் ஆண்டுதோறும் இந்தத் தொழிலுற்பத்தியை அதிகரித்தன. இந்தப் புதிய நிலைமையைச் சமாளிப்பதற்கு நமது சுதந்திர உரிமைகள், தடையிலா வாணிபம், தனி நபர் வாத அடிப்படையிலமைந்த தன்னுதவிக் கோட்பாடு ஆகியவைமட்டும் போதா. எனவே, நமது தொழில்நுட்பக் கல்வியில் அபிவிருத்தி செய்யப்பட்டது. 'கடல்கட்கு அப்பாலுள்ள நமது நிலங்களில்' இதனால் அதிக அக்கறையும் காட்டப்பட்டது; அதுதான் ஒன்பதாவது பத்தாண்டின் ஏகாதிபத்தியப் (Imperialist) போக்குக்குக் காரணம்; பாமர்ஸ்டன் காலத்தின் இறுதிவாக்கில் அமெரிக்காவின் உள்நாட்டுப் போரின்பொழுது நமது அரசியல் வகுப்புகள் அந் நாட்டை வெகு மட்டமாக நினைத்தன அல்லவா? அந்தப் போக்கு மாறி, நட்பும் மரியாதையும் இப்பொழுது அந் நாட்டிடம் காட்டப்பட்டன. புதிய சகாப்தத்தைச் சேர்ந்த ஜனநாயக இங்கிலாந்தினால் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் 'குடியேற்ற நாடுகளையும்'—கானடாவும் ஆஸ்திரேலேஷியாவும் இவ்வாறு

தான் இன்னும் அழைக்கப்பட்டன—மேலும் நன்முகப் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்தப் புதிய நிலைமை காரணமாக நவீன ஜெர்மனியைப் பற்றி அறிந்துகொள்ள மக்கள் விரும்பினர். 1870வரை இந்த அக்கறை காணப்படவேயில்லை. விதிவிலையாடிய அந்த ஆண்டில் இரு நூல்கள் வெளிவந்தன; மேத்யூ ஆர்னல்டு எழுதிய Friendship's Garland; ஜார்ஜ் மெரிடித் எழுதிய Harry Richmond. ஐரோப்பாவின் டியூடானிய (Teutonic) இதயத்தில் வளர்ந்துவரும் தேசீயக் கல்வியும் தேசீயக் கட்டுப்பாடும் ஒரு புதியவகைச் சக்தியை உருவாக்கி வருகின்றன என்றும், நாம் எளிதாகப் பெற்றுப் பாதுகாப்பின்றி வைத்து, சமத்துவமின்றிப் பங்கிடப்பட்டிருக்கும் நமது செல்வத்தை அப்புதிய சக்தி தனது பொருமை நிறைந்த கண்களால் பார்க்கிறது என்றும் அவ்விரு நூல்களும் நம்மை எச்சரித்தன. அதேசமயம், கலை, இயற்கை ஆகியவற்றில் நிபுணர் என்று பெயரும் செல்வாக்கும் பெற்றிருந்த ரஸ்கின் இப் பொழுது ஒரு சமூகச் சீர்திருத்தவாதியாகவும் சிறந்த பணியாற்றினர். நாம் புகழ்ந்து பாடும் நமது செல்வமானது அழகை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்றும், பெரும் பணக்காரர்களுக்கும் பரம ஏழைகளுக்கும் ஆன்மீக ஊறுசெய்யும்வகையில் அது தவருகப் பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் அவர் கண்டனம் செய்தார்.

அந்நூற்றாண்டின் கடைசி ஆண்டுகள்வரை தொழிலாளர்களிடையில் பலமான சோஷலிச இயக்கம் ஒன்றும் இருந்ததில்லை. ஆயினும் தலையிடாமைக் (Laissez-faire) கோட்பாட்டின் மீதிருந்த அவநம்பிக்கை வெகுநாட்களாகவே அதிகரித்து வந்தது. 1873-ல் இறந்த ஜான்ஸ்டுவர்ட் மில், அடுத்துவந்த தலைமுறையின் சிந்தனையையும் செயலையும் வேறு திசையில் திருப்பிய ஒரு புதியலிபரல் தத்துவத்தை (neo-liberal philosophy) விட்டுச் சென்றார். மில்லின் கோட்பாடுகள் ஓரளவு சோஷலிசத் தன்மை வாய்ந்தவை. நேரடி வரிகள் (direct taxes) மூலம், குறிப்பாக வாரிசாகச் சொத்தை ஒருவர் மேற்கொள்ளும்பொழுது வரி விதிப்பதன் மூலம் செல்வத்தை இன்னும் சமமான முறையில் பங்கீடு செய்யவேண்டும் என்று அவர் கோரினர்; சமுதாயத் தீமைகளை அகற்றும் சட்டங்கள் வகுத்து, அரசாங்க அதிகாரிகளைக்கொண்டு அவைகளைத் திறமையோடு அமுலாக்கி, வாழ்க்கை நிலைமைகளைச் சீர்திருத்த வேண்டும் என்று அவர் கோரினர்; பாராளுமன்றத் தேர்தலில் மட்டுமின்றி, தலைஆட்சி நிறுவனங்களுக்

கான தேர்தலிலும் எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் முழுவாக்குரிமை கொடுக்கவேண்டும் என்றும் அவர் வாதாடினர். மில் அவர்களின் சிந்தனைப்படி, அதிகாரவர்க்கமும் ஜனநாயகமும் சேர்ந்து செயல்பட வேண்டும்; பெரும்பாலும் இதே அடிப்படையில்தான் பின்னர் நவீன இங்கிலாந்தின் சமுதாய அமைப்பு நிர்மாணிக்கப்பட்டது; மில் அவர்களும் அவரது தத்துவமும் மறைந்துபோன பின்னரும்கூட சமுதாயச் சீர்திருத்தம் அதே திசையில்தான் சென்றது.

இங்கிலாந்தின் விவசாயம் சீரழிந்தது; தொழிலபிவிருத்தியில் அதற்கும் மற்ற தேசங்களுக்கு மிடையிலிருந்த தூரம் குறைந்து வந்தது; தனது சமூக அமைப்பிலும் தனது நகர மக்களின் வாழ்க்கை நிலைமைகளிலும் ஏதோ கோளாறு இருக்கிறது என்ற உணர்வு நாள்தோறும் அதிகரித்துவந்தது. ஆயினும், விக்டோரியா ஆட்சியின் கடைசி முப்பதாண்டுகளும் வளங்கொழித்த ஆண்டுகள். அப்பொழுது செல்வமும் தொடர்ந்து பெருகியது; சமுதாயத்தின் பெரும்பாலான வகுப்புகளும் அச்செல்வத்தில் பங்குபெற்றன. 1887லும் 1897லும் நடைபெற்ற அரசியாரின் விழாக்களில் (Queen's Jubilees) எல்லா வகுப்பு மக்களும் பங்குகொண்டனர். உண்மையான பெருமிதமும் நன்றிஉணர்வும் அவர்கள் அனைவரிடமும் விரவிக் கிடந்தன; ஏனெனில் அவரது ஆட்சியின் தொடக்கத்தில் தாம் அனுபவித்த துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றுவிட்டதை அவர்கள் உணர்ந்தார்கள்; 'நான்காவது பத்தாண்டுப் பட்டினிக் காலம்' (hungry' forties) இன்னும் அவர்களது நினைவிலிருந்து நீங்கவில்லை. மக்களின் பழக்கங்களில் கண்ணியம் ஏற்பட்டது; தெருக்களில் காப்பு இருந்தது; வாழ்வில் மனிதாபிமான உணர்வு புகுந்தது; சுகாதார வசதிகள் வேகமாகப் பெருகின; தொழிலாளர்களின் வீடுகள் மோசமேயானலும் முன்னைவிட எவ்வளவோ மேல். வேலைநிலைமைகள் திருந்தின. உண்மைக் கூலி உயர்ந்தது; வேலைநேரம் குறைக்கப்பட்டது. ஆயினும் வேலையின்மை, நோய், முதுமை ஆகியவற்றின் கொடிய பிடிகளிலிருந்து தொழிலாளர்கள் இன்னும் விடுபடவில்லை; இத்துறைகளில் அரசாங்கம் தனது கவனத்தை இன்னும் செலுத்தவில்லை.

பீலும் கிளாட்ஸ்டனும் கடைப்பிடித்த தடையிலா வாணிபநிதிக் கொள்கை, மறைமுக வரிகளை (indirect taxes) வெகுவாகக் குறைத்தது; இதனால் ஏழைகளின் மீதிருந்த வரிச்சுமை குறைந்தது. என்றாலும் எட்டாவது

பத்தாண்டில் விதிக்கப்பட்ட வருமான வரி மிகமிகக் குறைவு. அது வெறும் இரண்டு பென்னிகளிலிருந்து ஆறரைப் பென்னி வரை இருந்தது. ஆனால் இப்பொழுது (1941) அது பத்து ஷில்லிங்குகள்; அதன்மீது மிகைவரியும் (surtax) விதிக்கப் படுகிறது.

தடையிலா வாணிபம் ஏழைகளின் பளுவைக் குறைத்தது மட்டுமின்றி நமது கப்பல் போக்குவரத்திலும் அயல்நாட்டு வாணிபத்திலும் ஏற்பட்ட ஏராளமான வளர்ச்சிக்கும்கூடக் காரணமாயிருந்தது. நமது கடற்கரை வாணிபம்கூட (coastal trade) எல்லா நாடுகளின் கப்பல்களுக்கும் திறந்து விடப்பட்டிருந்தது; என்றாலும் இந்தத் தடையிலாப் போட்டியில் அந்த வாணிபத்தில் அரை சதவிதத்தை மட்டுமே அன்னியர்களால் பெறமுடிந்தது. உள்நாட்டி லேயே பெரும்பாலும் செலவிடப்பட்ட நமது நிலக்கரி கடற்கரை வாணிபத்தில் ஒரு முக்கியமான பொருள். எட்டாவது பத்தாண்டில் இந்தக் கடற்கரை வாணிபத்தில் ஈடுபட்ட நமது சரக்குக் கப்பல்களின் மொத்த டன்கள் நமது பெரும் உலக வர்த்தகத்தைக் காட்டிலும் அதிகம். ஆயினும் உலகின் பெருங்கடல்களே இங்கிலாந்தின் நெடுஞ்சாலைகள். 1885-ல் உலகின் கப்பல்களில் மூன்றில் ஒருபகுதி பிரிட்டனில் பதிவு செய்யப்பட்டவை; உலகின் மொத்த நீராவிக்கப்பல் களில் ஐந்தில் நான்கு இதில் அடங்கும். பாய்மரக் கப்பல்கள் மறைந்து வந்தன; ஆயினும் கடல்களில் வேகமாகச் சென்ற 'கிளிப்பர்கள்' (clippers) பிரிட்டனைச் சேர்ந்தவையே. 1885லும் கூட நமது பாய்மரக் கப்பல்களின் மொத்த டன்கள் 1850-ம் ஆண்டில் இருந்ததைப்போல மிக அதிகம்தான்; ஆயினும், நமது நீராவிக் கப்பல்களின் மொத்த டன்கள் பாய்மரக் கப்பல்களைவிட நான்கு மில்லியன் அதிகம்.

இலண்டன் துறைமுகத்தில் பதிவுசெய்யப்பட்ட கப்பல் களின் மொத்த டன்கள் மெர்சி (Mersey) துறைமுகத்தைவிட 60 சதவிகிதம் அதிகம்; ஆயினும் இலங்காஷயர் பருத்தித்துணி களை ஏற்றுமதிசெய்த லிவர்ப்பூல் நம் தலைநகரைவிட அதிக மான பிரிட்டிஷ்பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியது. பெரிய தேம்ஸ் கப்பல்துறையும் மெர்சி கப்பல்துறையும் (docks) எட்டாவது பத்தாண்டில் கட்டிமுடிக்கப்பட்டன. அயல்நாட்டு வாணிகத்தின் அளவை இரயில்வேக்கள் பெரிதும் அதிகப்படுத்தின; அதே சமயம் துறைமுகங்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்தன; இந்தக் குறைவு,

பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கியது. விட்பி, (Whitby), இலங்காஸ்டர், அயர் (Ayr) போன்ற பல துறை முகங்களும் போவே (Fowey), செஸ்டர், சிங்க் (Chinque) ஆகிய துறைமுகங்களைப் போலவே தமது முக்கியத்துவத்தை இழந்தன. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பாதியில், முன்பு சூன்யமாக இருந்த பாரோவும் (Barrow), 'கிட்டத்தட்ட சூன்யமாக' இருந்த கிரிம்ஸ்பியும் (Grimsby) பெரும் துறைமுகங்களாக வளர்ச்சியுற்றன; இதற்கு முக்கியக் காரணம் இரயில்பாதை. நீண்ட நாட்களாகக் குன்றிப் போயிருந்த சதாம்ப்டன் மீண்டும் தழைத்து, கிழக்கு நாடு களுடன் வர்த்தகம் செய்த பி அண்ட் ஓ கப்பல் கம்பெனி யின் (P. and O. line) தலைமையகமாக இப்பொழுது விளங்கி யது. கார்டிப் (Cardiff) தனது மக்கட்தொகையில் பதின் மூன்று மடங்கு பெருகி, உலகின் மாபெரும் நிலக்கரி ஏற்று மதித் துறைமுகம் என்ற முறையில் நியூகாசில் (Newcastle) சமீபத்தில்தான் புறங்கண்டது; அதே சமயம் ஆம்ஸ்ட்ராங் கின் எல்ஸ்விக்கின் (Armstrong's Elswick) கீர்த்திமிக்க நாட்களில் டைன்சைடும் (Tyneside) பிரமாதமாக வளர்ந்து கொண்டிருந்தது. இரயில்வேக்கள் தொழிலையும் வாணிபத் தையும் புனர்நிர்மாணம் செய்ததன் விளைவு இவை எல்லாம். ஆயினும் 'டைன்சைடை உருவாக்கியவை இரயில்வேக்கள் அல்ல; டைன்சைடுதான் ரயில்வேக்களை உருவாக்கியது' (Clapham, II, 519–529).

இவ்வாறு 'தடையிலா வாணிபம்' காரணமாகச் செல்வம் பெருகியது; 1837-ல் ஆடம்பரப் பொருள்களாகக் கருதப்பட்ட பல பொருள்கள் 1897-ல் வெகு சாதாரண மானவைகளாக ஆகிவிட்டன. உணவு, உடை, படுக்கை, மேசை நாற்காலிகள் ஆகியவை முன்பு எக்காலத்தையும்விட இப்பொழுது நிறையக் காணப்பட்டன. வாயு விளக்கும் எண்ணெய் விளக்கும் போய் மின்சாரம் வந்தது. கீழ் மத்தியதர (lower middle) வகுப்பினருக்கும், வடபகுதியில் வாழ்ந்த தொழிலாளிகளில் பலருக்கும்கூட, கடற்கரையோர ஆரோக்கிய நிலையங்களில் விடுமுறை நாட்களைக் கழிப்பது வழக்கமாயிற்று. 1876-ம் ஆண்டிலேயே ஒரு பரோவின் (Borough) அந்தஸ்தைப் பெறும் அளவுக்கு பிளாக்பூல் (Blackpool) வளர்ந்துவிட்டது; இதற்குக் காரணம் ஆண்டு விடுமுறைதோறும் இலங்காஷயர் தொழிலாளிகள் அங்கு விடாமல் சென்றதுதான்; லாண்டுட்னோவும் (Llandudno) ஐல் ஆப் மேனும் (Isle of Man) கூட இதே வகையில்

வளர்ச்சியுற்றன. அதேபோல் தூரத்துக் கார்ன்வாலும் (Cornwal) முன்னேறியது; ஈஸ்டர் சமயத்தில் வசதிமிக்கவர்களும் ஆகஸ்டில் சாதாரண மக்களும் அங்குச் சென்றனர். கோடைக்காலத்தில் கெஸ்விக்கிலும் (Keswick) விண்டர்மியரிலும் (Windermere) இருந்த வாடகை விடுதிகளும் லேக் மாவட்டப் (Lake District) பண்ணைகளும் வெளியூர்களிலிருந்து வந்த குடும்பங்களால் நிறைந்திருந்தன.

இரயில்வேக் காலத்துக்கு முன்னரேகூட பிரைட்டனின் ரேவு மீதும் (Pier of Brighton) மார்கேட்டின் (Margate) கடற்கரை மணல்மீதும் மக்கள்கூட்டம் நிறைந்திருந்தது. இப்பொழுது நீராவி இரயில்வண்டி, மக்களின் கூடுதலான வருமானம் ஆகியவை காரணமாக இங்கிலாந்து, வேல்ஸ் ஆகியவற்றின் கடற்கரை முழுவதிலும் மக்கள் நிறைந்து காணப்பட்டனர். கடற்கழிகளிலும் கரையோரக் குப்பங்களிலும் நகரத்திலிருந்து பல குடும்பங்கள் வந்து விடுமுறைகளைக் கழித்தன; குழந்தைகளும் பெற்றோர்களும் நீராடினர்; ஓடியாடிப் பொழுதைக் கழித்தனர். கிராமத்திலிருந்து அறவே துண்டிக்கப்பட்டுவிட்ட நகரமாந்தர் அப்பெரும் இழப்பிலிருந்து மீண்டு இவ்விடங்களில் சிறிது ஆறுதல் பெற்றனர்.

பருவகாலந்தோறும் விடுமுறை நாட்களை வெளியில் கழிப்பது வழக்கில் வந்துவிட்டாலும்கூட, 'வாரவிடுமுறை நாட்களை நகரத்துக்கு அப்பால் கழிப்பது' இப்பொழுதுதான் தொடங்கிக் கொண்டிருந்தது. பெரிய நாட்டுப்புற இல்லங்களை (country houses) வைத்திருந்தவர்களுக்கும் அவர்களது நண்பர்களுக்கும் இது ஏற்கெனவே வழக்கமானதுதான். ஆனால் 'வாரவிடுமுறைக் குடிசைகளை' (week-end cottages) நடுத்தர வகுப்பு மக்கள் இன்னும் அறியார்கள். குடும்பத்தோடு ஆலயத்துக்குச் செல்லுதல், வியாபார மரபுகள் ஆகியவைகளால் வாரத்தின் ஏழு நாட்களிலும் மக்கள் நகரத்திலேயே அடைந்துகிடக்க வேண்டியிருந்தது.

பெண்களின் பாவாடை (skirt), நீளத்திலும் சுற்றளவிலும் குறையவே அவர்கள் விளையாட்டுகளிலும் உலவுதலிலும் இன்னும் அதிகமாகப் பங்குபெற்றார்கள்; கிரினோலினும், நீண்டு தொங்கும் ஆடையும் மறைந்தன; எனவே, எட்டாவது பத்தாண்டில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடக்கூடிய ஆட்டம் என்ற முறையில் குரோகா (croquet) ஆட்டம்

மறைந்து, சுறுசுறுப்பு மிக்க டென்னிஸ் வழக்கில் வந்தது. அதேபோல் ஒன்பதாவது பத்தாண்டில் சைக்கிள் வண்டிகளை இவர்கள் உபயோகிக்க ஆரம்பித்தனர்; ஆபத்தான 'உயர மிக்க சைக்கிள்' போய், தாழ்ந்த சக்கரங்கள் இரண்டு பொருத்தப் பட்டன; பெண் விடுதலைக்கு இது மிகவும் உதவியது; தன்னந்தனியாகவோ அல்லது வேறோர் ஆண் துணையுடனே பெண்கள் நாட்டுப்புறங்களில் சுற்றினர். விக்டோரியா இறந்தபொழுது மோட்டார்சைக்கிளும் காரும் எல்லோருடைய வீட்டிலும் காணப்பட்வில்லை.

நகர்வாழ் மக்கள் தமது நாட்டின் மூலைமுடுக்குகளையெல்லாம் நடந்தோ சைக்கிளிலோ சுற்றிய அதேசமயம், வேறு சிலர் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் பிரான்ஸ், ஸ்விட்சர்லந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்குச் சென்றனர்; மேற்கு ஐரோப்பா, மத்தியதரைக்கடல் நாடுகள், எகிப்து ஆகிய நாடுகளின் ஓட்டல்களில் இவர்களால் நல்ல வியாபாரம் நடைபெற்றது. தாமஸ் குக்கின் (Thomas Cook) பயண நூலைப் படித்த சாதாரண மக்களும்கூட அந்நாடுகளைப் பற்றிக் கனவு கண்டனர். லெஸ்லீ ஸ்டீபன் (Leslie Stephen), விம்பர் (Whymper), பேராசிரியர் டிண்டல் (Tyndall) ஆகியோரின் காலமான ஆறுவது, ஏழாவது பத்தாண்டுகளில் ஸ்விஸ் வழிகாட்டிகளின் துணையோடு ஆங்கிலேயர்கள் ஆல்ப்ஸ் மலைகளின் பனி நிறைந்த உச்சிகளை ஏறி அளந்தனர். அந் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டில் வேல்ஸிலும் லேக் மாவட்டத்திலும் நமது இளைஞர்கள் மலையேற்றப் பயிற்சிபெற்று மகிழ்ச்சியோடு பொழுதுபோக்கினர்.

1899-ல் தென் ஆப்பிரிக்கப் போர் (South African War) தொடங்குவதற்குச் சற்று முன்பு, தமது இளமைப் பருவத்து இலண்டன் சமுதாயத்தை ஜான் புச்சான் (John Buchan) கீழ்வருமாறு தமது 'நினைவுகளில்' (Memoirs) வருணித்திருக்கிறார்:

'அந்நூற்றாண்டின் இறுதியிலுங்கூட இலண்டனில் ஜார்ஜ் மன்னர்களின் காலத்து வாடை வீசிக்கொண்டுதானிருந்தது. விக்டோரியா அரசியாரின் மரணம்வரை அந் நகரில் ஆதிக்கம் செலுத்திவந்தது பிரபுக்கள் சமூகம்தான்; பிரபுக்கள் ஆதிக்கத்தின் முறைகளும் சடங்குகளும் இன்னும் தொடர்ந்து நீடித்தன. இலண்டனின் பெரும் மாளிகைகள் மறைந்து தனித்தனிக் குடியிருப்புப் பகுதிகள் (flats)

அடங்கிய கட்டடங்கள் இன்னும் வரவில்லை. கோடையில் அது ஓர் இன்ப நகரமாகக் காட்சிதந்தது; ஒவ்வொரு சன்ன லிலும் மலர்ச்செடிகள் அழகு செய்தன; ஒவ்வொரு தெரு விலும் அழகிய கோச்சுவண்டிகள் முதலியன காணப்பட்டன; பூங்காவில் நேர்த்தியான குதிரைகளும் கவர்ச்சிமிக்க ஆண் களும் பெண்களும் நிறைந்திருந்தனர். இந்த அலங்காரம் சமுதாயத்தில் நன்கு பரவியிருந்தது; பிராக் கோட்டும் (frock-coat) உயர்ந்த தொப்பியும் வெஸ்ட் எண்டில் (West End) மட்டுமன்றி, லா கோர்ட் பகுதியிலும் (Law Courts) நகரத்தின் மையப்பகுதியிலும்கூட சாதாரணமாக அணியப்பட்டன. ஞாயிறு பிற்பகலில் நாங்கள் நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களுக்குக் கடமை தவறாமல் சென்றோம். உரையாடல் (conversation) என்பது இன்றுபோல் ஒரு வீண்பொழுது போக்காக அன்று கருதப்படவில்லை; அது ஒரு கலையாக விளங்கியது; அதில் திறமை காட்டியோர் பெருமை பெற் றனர். மேலும் 'கிளப்புகள்' (Clubs) இன்னும் உச்சநிலையி லிருந்தன; அவைகளில் சேரக் காத்திருந்தோர் பட்டியல் வெகு நீளம்; நல்ல 'கிளப்' ஒன்றில் உறுப்பினராவது வாழ் வில் ஒரு படி உயர்வதற்குச் சமம்...அக்காலத்தை நான் இப் பொழுது திரும்பிப் பார்க்கிறேன்; அது எவ்வளவு மனநிறை வும் பாதுகாப்பும் நிறைந்து காணப்பட்டது என்பது எனக்கு வியப்பளிக்கிறது! அந்த உலகம் சிறந்த பண்புகளையும் இத மான நட்பையும் கொண்டிருந்தது எனக்கு நன்கு நினைவிருக் கிறது; புதிய சமுதாயத்தோடு சேர்ந்து பிறந்திருக்கும் பண் பாடின்மையும் பணப்பித்தும் அன்று இல்லை! (Memory Hold-The-Door) பக். 92-94)

ஆயினும், அப்பொழுதே 'சமுதாயத்தில் கலப்பு ஏற்பட்டு வந்தது'; அரசியார் இறப்பதற்கு இருபதாண்டுகள் முன்பே கூட இலண்டன் உயர்வட்டாரங்களில் பணம்படைத்த மனிதர்கள் முக்கிய இடம் வகித்தனர்; அவர்களின் எண் ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததனால் ஒருவேளை இந்த முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கலாம். டு மாரியரின் (Du Mau rier) பஞ்ச் (Punch) படங்களில்வந்த சர் கார்ஜியஸ் மைதாஸ் (Sir Gorgius Midas) இதற்கு ஓர் உதாரணம். சமுதாயம் (Society) என்பது பழைய பொருளில் பாமர்ஸ்டனின் காலத் திலுங்கூட ஒரு குறுகிய உலகமாகவே இருந்துவந்தது; விக்,டோரி சீமாட்டிகள் சிலர், பிறரை அதில் நுழையவிடாமல் காத்துநின்றனர். ஆனால் எட்டாவது பத்தாண்டில் 'சமுதாயம்' என்பதன் பொருள் தெளிவற்றதாய் இருந்தது; மேல்வகுப்பு

கூடியும் வழக்கறிஞர் போன்ற தொழில்செய் மக்கூடியும் ஒருவேளை அது குறித்திருக்கலாம்; ஹைடிபூங்காவில் (Hyde Park) உலவிய நல்லுடைதரித்த நாகூக்கான மனிதர்கூடியும் இலண்டன் விருந்துகளில் நீண்ட உரையாடல்கள் செய்து பொழுதுபோக்கிய ஆண்கூடியும் பெண்கூடியும் ஒருவேளை அது குறித்திருக்கலாம். ஆயினும், ஜான்புச்சான் எழுதியிருப்பதைப்போல்இந்தமனிதர்கள்,குறைந்தது இலண்டனில் மட்டுமாவது, ஒருவித பிரபுத்துவ மணத்தையும் மரபையும் அந் நூற்றாண்டின் இறுதிவரையில் பேணிவந்தனர். வேறு பட்டணங்களில் இருந்த வசதி மிக்க பூர்ஷ்வாக்களிலிருந்து வேறுனவர்கள் இவர்கள்; ஆடம்பர ஆடையணிந்து பங்கு கொள்ளும் விருந்துகளுக்குப் பதிலாகத் 'தேநீர் விருந்து கூடியே' இந்த யார்க்ஷயர், இலங்காஷயர் பூர்ஷ்வாக்கள் இன்னும் விரும்பி வந்தனர்.

ஏழாவது, எட்டாவது பத்தாண்டுகளில் நம் நாட்டின் பல் வேறு வகுப்புகளில் பெரிய குடும்பங்கூடிச் சாதாரணமாகக் காணலாம். இதனாலும், முன் எப்பொழுதைக் காட்டிலும் அதிகக் குழந்தைகள் இப்பொழுது உயிருடனிருந்ததாலும் மக்கட்தொகை வேகமாகப் பெருகியது. நகரத்தின் சுகாதார வசதிகளிலும் மருத்துவ அறிவிலும் சிகிச்சையிலும் ஏற்பட்ட பெரும் முன்னேற்றம் காரணமாக இறப்புவீதம் வீழ்ச்சி யுற்றது. 1886-ல் இங்கிலாந்தில் இறப்புவீதத்தைவிடப் பிறப்பு வீதம் 13·3 அதிகமா யிருந்தது; அதேசமயம் ஜெர்மெனியில் இது 10.8ம், பிரான்சில் 1·4ம்தான் அதிகம்.

1870-க்குப் பிறகு கட்டாய இலவச ஆரம்பக் கல்வி முறை அமுலுக்கு வந்தது; தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு இது ஒரு பெரிய நிவாரணம்; ஆயினும் இது ஒரு பெரும் போராட்டம்தான்; பள்ளிக்கூடநேரம் போக மற்ற நேரத்தில் ஏழைக்குழந்தைகள் கவனிப்பாரற்றுத் தெருக்களில் சுற்றிவந்தனர். நடுத்தரவகுப்புக் குழந்தை களுக்கு அது மகிழ்ச்சி நிறைந்த காலம்; குழந்தைஅறை களும் (nurseries) படிப்பறைகளும் சின்னஞ்சிறு குழந்தை களின் பேச்சாலும் சிரிப்பாலும் விளையாட்டாலும் கலகல வென்றிருந்தன. அவர்களுக்கு நிறைய விளையாட்டுப் பொருள்கள் கிடைத்தன. அங்குக் குழந்தைகளின் குண நலன்களும் பண்புகளும் மனமும் அறிவும் நன்கு வளர்ந்தன. பின்னர், இவர்கள் விடுதி வசதியுள்ள பள்ளிகளுக்கு (boarding schools) அனுப்பப்பட்டனர்; இப்பொழுது விடு முறைநாட்களில் மட்டும்தான் தமது சகோதரிகளுக்கு இச்

சிறுவர்கள் மகிழ்ச்சியையும் தொந்தரவையும் கொடுக்க முடியும். குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் வீட்டு ஆசிரியைகள் (governesses), செவிலித்தாய்கள் (nurses) வேலையாட்கள், சமையல்காரர்கள் ஆகிய எல்லோரும் இன்னமும் நிறைய இருந்தனர்; அவர்களது கூலியும் வேறு கோரிக்கைகளும் இன்னும் அதிகமாகவில்லை. அவர்களில் பலர் தங்களது எஜமானர்களோடு அன்னியோன்னியமாகப் பழகி அன்புபூண்டு அக் குடும்பங்களோடு ஐக்கியமுற்று விட்டனர்; வேறு பலர் வருவதும் போவதுமாய் நினைவி லிருந்துகூட அகன்று விட்டனர். அவர்களது வேலைகள் அதிகம்; அவை மிகவும் முக்கியமானவை. ஏனெனில், நடுத் தர வகுப்பினரின் உயர்ந்த, குறுகிய நகரத்து வீடுகளில் வேலைப்பளுவைக் குறைக்கும் உபகரணங்கள் இன்னும் நுழையவில்லை; குழந்தைகள் அறைகளுக்கு வெந்நீர் சுமந்து வேலைக்காரிகள் மாடிப்படி ஏறவேண்டும்; ஒவ்வொரு அறைக்கும் நிலக்கரி கொண்டுசெல்லவேண்டும். இந்த நிலக்கரியின் புகையினால் இலண்டனின் பனிப்படலம் மேலும் கனத்தது.

குடும்பத்தின் அளவு சுருங்க ஆரம்பித்துவிட்டது என் பது ஒன்பதாவது பத்தாண்டில்தான் தெளிவாகத் தெரிந்தது. முதன்முதலில் இது நடுத்தர வகுப்புக் குடும்பங்களிடையி லும் வசதிமிக்கத் தொழிலாளிகளிடையிலும் காணப்பட்டது. 'பொதுப்பள்ளிகளில்' (public schools) வதூலிக்கப்பட்ட சம்பளம் நடுத்தர வகுப்பினருக்கு மிகப் பளுவாக இருந்தது; தமது உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் குறையாமல் காப் பாற்ற மேற்சொன்ன தொழிலாளர்கள் போராடினர். மால்த ஸின் கோட்பாட்டைப் பின்பற்றிய ஒரு சிறு துண்டுப் பிர சுரத்தை வெளியிட்டதற்காக பிராட்லாவும் (Bradlaugh) திருமதி பெசன்ட்டும் (Mrs. Besant) 1877-ல் வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டனர்; குடும்பக் கட்டுப்பாட்டு (birth-control) முறைகள் இவ்வாறுதான் முதன்முதலில் நாட்டுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டன. ஆயினும் இந்தச் சீர்திருத்தவாதிகள் யாருக்காக இவ்வளவையும் செய்தார்களோ அந்தச் சேரி வாழ் மக்கள்தாம் இம்முறைகளை வெகு மெதுவாகக் கடைப் பிடித்தவர்கள். குழந்தைகளைச் சிறந்த முறையில் பெற்று வளர்ப்பதற்கு ஏற்ற குடும்பங்கள்தாம், அடுத்த நூற்றாண்டில் வரப்போகும் 'இனத்தற்கொலை'ப் ('race suicide') போக்கில் அதிகம் அக்கறை காட்டின; இது மிகவும் வருந்தத்தக்கது.

ஏழாவது பத்தாண்டிலும் எட்டாவது பத்தாண்டிலும் பெரிய குடும்பங்கள் நிறையக் காணப்பட்டன என்பது மட்டு

மின்றி, ஒழுக்கநெறி, ஆண்-பெண் உறவு ஆகியவைபற்றிய கருத்துகளிலும் தூய்மைக் கொள்கை (puritanism) பேசப் பட்டது; ஆயினும் செயலில் மனிதனுடைய பலவீனங்கள் அடியோடு மறைந்து போகவில்லை. தமது அரசவையை ஆடம்பர மேதுமின்றி அமைத்து, கட்டுதிட்டங்களை ஏற் படுத்தி, விக்டோரியா அரசியார் ஒரு முன்னுதாரணத்தை உண்டுபண்ணினார். பிரிட்டிஷ் வியாபாரிகள் பெரும்பாலா ரின் வியாபார நேர்மை நமது பெரும் வர்த்தகச் செழிப்புக்கு ஒரு காரணம். அக்காலத்து மக்களால் போற்றிப் புகழப்பட்ட தலைவர்கள்—அவர்கள் உண்மையில் புகழுக்கு உரியவர்கள் தாம்—முதலாவதாகச் சமய மனிதர்கள்: ஆப்பிரிக்காவை அலசி ஆராய்ந்த சமயப் பிரசாரகர் லிவிங்ஸ்டன் (Living-stone); படை வீரராகவும் பொதுப்பணி ஆர்வமிக்கவராகவும் விளங்கிய ஜெனரல் கார்டன் (General Gordon); ஷாபஸ்பரி பிரபு; திரு. கிளாட்ஸ்டன்; மற்றவர்களோடுமட்டு மின்றி, தமக்குள்ளும்கூட ஒருவரோடொருவர் பெரிதும் மாறுபட்ட இந் நால்வரும் கடவுளுக்குப் பணிசெய்வதே வாழ்வு எனக் கருதினர்.

ஆனால், இந்த மனிதர்கட்குப் பெரியதாகத் தோன்றிய பழைய சமய நம்பிக்கைகள் 'அறியொணாக் கொள்கையின ரால்' (Agnostics) வெற்றிகரமாகத் தாக்கப்பட்டன. ஆயினும் இந்த அறியொணாக் கொள்கையினரும்கூடத் தமது உணர்வி லும் கண்ணோட்டத்திலும் பியூரிட்டானியர்கள்தாம். 'பண்பாட்டின்' பிரசாரகராக விளங்கிய மேத்யூ ஆர்னல்ட், 'நடத்தை'யானது 'வாழ்வின் முன்று பாகங்களுக்குச் சமம்' என்று பேசினார்; ஆயினும், அவரது 'நடத்தை'பற்றிய கருத்து குறுகியதோ அல்லதுஉலகஇன்பத்தை வெறுப்பதோ அன்று. ஜார்ஜ் எலியட்டின் நாவல்கள் புகழும் முக்கியத்து வமும் பெற்று விளங்கியதற்குக் காரணம் என்ன? 'பகுத் தறிவுவாத அறியொணாக் கொள்கையினருக்கு ஏற்றவகை யில் ஆன்மீக நெறிகளை அவை எடுத்துக் கூறுகின்றன' என்று பலர் கருதியதுதான். Sartor நூலில் கார்லைலின் தீர்க்கதரிசனமிக்க சொற்கள் மனிதர் பலருக்கு ஒரு தெளி வில்லாத, ஆயினும் அழுத்தந்திருத்தமான கோட்பாட்டை அளித்தன; டார்வினைத் தீவிர ஆர்வத்தோடு பின்பற்றிய ஹக்ஸ்லியும் இவர்களில் ஒருவர். வோம்ஸில் (Worms) லூதர் அஞ்சாநெஞ்சுடன் எதிர்த்து நின்றதைப் போல ஹக்ஸ்லியும் ஆக்ஸ்போர்டின் பிரிட்டிஷ் சங்கத்தில் (British Association) நடந்த கூட்டத்தில் மதகுருமார்களை எதிர்த்துப் பிரசித்தி பெற்றார். தாங்கள் நம்பிக்கை இழந்த பழைய

தத்துவங்களை மீண்டும் ஏற்றுக்கொள்ள லெஸ்லீ ஸ்டீபனும் ஜான் மார்லியும் ஆவேசமாக மறுத்தனர்; பதினேழாம் நூற்றாண்டின் பியூரிட்டானியக் கொள்கையின் விட்டுக் கொடுக்காத தன்மை இந்த மறுப்பில் பிரதிபலித்தது. லெஸ்லி ஸ்டீபன் ஒரு சமயத்தில் மதகுருவாக இருந்தவர்தான்; லிபரல் வாதியான மக்கள் விரும்பிப் படித்த வரலாற்றாசிரியர் ஜே. ஆர். கிரீனும் (J. R. Green) இவ்வாறு முன்பு மதகுருவாக விளங்கியவரே. சமயத்திலிருந்து விலகிச் செல்லும் ஓர் அரைகுறைச் சமயப் போக்கை இக்காலத்திய இலக்கியத்திலும் சிந்தனையிலும் காணலாம்.

'மத்திய விக்டோரியாக் காலத்தின் பின்பகுதியில் விளங்கிய கலாச்சாரம் பல துறைகளிலும் அக்கறை காட்டித் தனது திறமையைப் புலப்படுத்தியது; மிகுந்த தன்னம்பிக்கையும் சுறுசுறுப்பும் பெற்று அது விளங்கியது; இவ்விஷயங்களில் கிரேக்கக் கலாச்சாரத்தோடு இதை ஒப்பிடலாம். அறிவுத்துறைச் சாதனையையும் ஒழுக்கநெறியில் அடக்கத்தையும் பெற்றிருந்த இதை ஏதென்ஸின் கலாச்சாரத்துடனும் ஒப்பிடலாம். டென்னிசன் காலத்து மக்கள் அதிகமாகவும் அடிக்கடியும் பயன்படுத்திய அவரது வரிகள் இவைதாம் என்று நினைக்கிறேன்:

> 'அறிவு அதிகம் அதிகம் வளருவதாக!
> மேலும் அதிகமாக நம்முள் பக்தி உறைவதாக!
> உள்ளமும் ஆன்மாவும் முன்புபோல் இயைந்து
> மேலும் இனிய இசைபொழிய வழி இதுவே.

'ஒரு திடமான மையத்தைச் சுற்றி விரிவு ஏற்படுவதை விரும்பிய விக்டோரியாக் காலத்து இலட்சியத்தை வேறு எந்தச் சொற்களும் இவ்வளவு தெளிவாகக் கூறமுடியாது. ஆனால் இவை சோபோகிளீஸ் (Sophocles) எழுதிய கவிதையின் மொழிபெயர்ப்பு அல்ல என்று யாராவது உறுதிகூற முடியுமா?' (Daylight and Champaign, பக். 264, G.M. Young)

வாழ்க்கையையும் நடத்தையையும் பியூரிட்டானியக் கண்கொண்டு பார்க்கும் பழக்கத்தை, விக்டோரியாக் காலத்து மக்கள் பின்பற்றிய பைபிள் சமயமும் (Bible religion) ஆங்கிலேயக் கத்தோலிக்கச் சமயமும் சேர்ந்து உண்டாக்கின. இந்த ஆங்கிலோக் கத்தோலிக்கச் சமயம் மூன்றாவது பத்தாண்டின் ஆக்ஸ்போர்டு இயக்கத்தின் விளைவு; அது இப்பொழுது விரிந்து பரந்து, கிளாஸ்ட்டன்,

சாலிஸ்பரி போன்றவர்களையும்கூடக் கவர்ந்துவிட்டது. ஆயினும், பாரிஷ் குருமார்களிடையில்தான் இது மிகவும் பலம் பெற்று விளங்கியது; அவர்களில் பலருக்குத் தமது தொழிலில் ஒரு புதிய பெருமிதத்தையும் இலட்சியத்தையும் இது அளித்தது; 'திருச்சபை மதகுருமார்களுக்கு' முன்பு சொந்தமாயிருந்த அந்தப் பெரும் சமூக அந்தஸ்து இப் பொழுது மறைந்து வந்ததன்றே? அதற்கு இந்தப் பெருமிதமும் இலட்சிய உணர்வும் ஈடுசெய்தன. ஆங்கிலோக் கத்தோலிக்கக் கொள்கை காரணமாகச் சாதாரண மனித இயல்புக்கேற்ற வகையில் சில சலுகைகளை வழங்குவதும் சாத்தியமாயிற்று; உதாரணமாக 'சபாத்' (Sabbath) அனுஷ்டானங்கள் சற்றுச் தளர்த்தப்பட்டன; எவஞ்சலியர்கள் இதை விரும்பவில்லை. ஆயினும் 'ஆங்கிலேய ஞாயிற்றுக்கிழமை' இவ்வாறு சிறுகச் சிறுக மாற்றியமைக்கப்பட்டதால் சில நல்ல விளைவுகளும், சில கெட்ட விளைவுகளும் ஏற்பட்டன.

சமய ஆசாரம் மிகுந்த பண்டை நாட்களுக்கும் மனம் போனபடி செல்லும் இன்றைக்கும் இடையிலான அக் காலத்தில் பல குடும்பங்களில் ஒரு நல்ல பழக்கம் இருந்தது; ஞாயிற்றுக் கிழமைகளில் சமய நூல்கள் அல்லது ஆழ்ந்த நூல்கள் படிக்கப்பட்டன. வாரத்தில் ஒரு நாளாவது நாவல்கள், வார, மாதப் பத்திரிகைகள் படிப்பது நிறுத்தப் பட்டது. பழம்பெரும் தொன்மை இலக்கியங்களான பைபிள், பில்கிரிம்ஸ் புராகிரஸ் (Pilgrim's Progress), பேரடைஸ் லாஸ்ட் (Paradise Lost) போன்றவை படிக்கப்பட்டன; மேலும் சமயச் சார்பற்ற கவிதைகளும் வரலாற்று நூல்களும்கூட அன்று படிக்கப்பட்டன; தற்காலத்திலோ இவைகளைப் படிப்பார் அருகிப் போயினர்.

திருத்தப்பட்ட ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டானங்கள் மட்டுமின்றி, பைபிள் படித்தலும் குடும்ப வழிபாடுகளும்கூட (family prayers) அந்நூற்றாண்டின் இறுதிவரை சாதாரணமாக வழக்கிலிருந்தன. ஆங்கிலேய வாழ்வின்மீது சார்லஸ் சிமியோனின் செல்வாக்கின் விளைவுகளைப்பற்றிக் கேனன் ஸ்மித் (Canon Smyth) எழுதுகிறார்:

'எவஞ்சலிய சமயம் வீட்டுச் சமயம்; இவ்வாறு குடும்ப வழிபாடு மறுபடியும் உயிர்பெற்றதில் அது தனது வெற்றிகள் எல்லாவற்றிலும் மிகவும் குறிப்பிடத்தக்க, மிகவும் சிறப்பான வெற்றியை அடைந்தது. இந்த மறுமலர்ச்சியானது

மேல் வகுப்பு, நடுத்தர வகுப்பு மக்களிடையில் மட்டுமே—குறிப்பாக நடுத்தர வகுப்பு மக்களிடையில் மட்டுமே—ஏற்பட்டிருக்கலாம். ஆயினும் இந்த எல்லைகளுக்குள் அது வெகு விரிவாகப் பரந்துவிட்டது; எனவேதான், 1889-ல் கிங்ஸ் கல்லூரியின் (King's Cambridge) புரொவோஸ்ட் (Provost), தமது கல்லூரியின் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான ஒரு சுற்றறிக்கையில் கல்லூரி ஆலயத்தில் காலைத்தொழுகைக்கு அவர்கள் வருவதுபற்றிக் குறிப்பிடும் பொழுது 'குடும்ப வழிபாடு வழக்கிலிருக்கும் குடும்பங்களிலிருந்து உங்களில் பெரும்பாலோர் வருகிறீர்கள்'..... என்று எழுத முடிந்தது. இன்று அந்தப் பக்திப் பழக்கம் அறவே ஒழிந்துவிட்டது என்று கூறலாம்; காரணம், விக்டோரியாக் காலத்துப் பக்தி ஒழிந்துவிட்டது மட்டுமன்று; விக்டோரியாக் காலத்துக் குடும்பமும் ஒழிந்துவிட்டது.' (Simeon and Church Order, Charles Smyth, 1940, பக். 19-20)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு கம்பீரமான நிறுவனமாகத் திகழ்ந்தது ஆங்கிலேய சமயம்; ஆயினும் அதன் அடிப்படையில் ஒரு பலவீனம் இருந்தது; விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அதை நன்றாகத் துளைத்தன; கன்பார்மிஸ்டு அல்லாதவர்களும் திருச்சபை எவஞ்சலியர்களும், கிட்டத்தட்ட அதே அளவில் பிஷப் சாமுவேல் வில்பர்போர்ஸ், திரு. கிளாட்ஸ்டன் போன்ற உயர்திருச்சபையினரும் பைபிள் நூல் தனது சொற்களாலேயே மக்களின் பக்தி ஊற்றைத் திறந்துவிடும் என்ற நம்பிக்கையைப் பொதுவாகக் கொண்டிருந்தனர்—இதுவே அந்தப் பலவீனம். வால்டேர் ஒரு துருவம் என்றால் சார்லஸ் டார்வின் அவருக்கு எதிர்மாறான மற்றொரு துருவம்; பண்டைச் சமயக் கொள்கைகளை டார்வின் எதிர்க்க விரும்பவில்லை; திருச்சபை 'இழி செயல் மலிந்தது' என்றும் அவர் கருதவில்லை; எனவேதான் அவர் இறந்தபொழுது பெரும் மரியாதையோடு வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் (Westminster Abbey) திருச்சபை அவரை அடக்கம் செய்தது. ஆயினும், புதிய ஏற்பாட்டில் (New Testament) காணப்படுவதுபோல் 'ஆங்கிலேய பைபிளிலும்' (the English Bible) காணப்படும் 'படைப்பு' (Genesis) அத்தியாயத்தின் முதல் பிரிவுகளில் வரும் வாசகங்களுக்கு மாறுபட்டவையே அவரது விஞ்ஞான முடிபுகள். மேலும், பொதுவாகச் சொல்லப்போனால் பரிணம வளர்ச்சி என்ற கருத்தும், 'மனிதன் குரங்கிலிருந்து வந்தவன்' என்ற கருத்தும்,

படைப்புப் பற்றிய சமயக் கருத்துக்கும் பிரபஞ்சத்தில் மனி தனே நடுநாயகம் என்ற சமயக்கருத்துக்கும் முற்றிலும் மாறு பட்டவை.

தனது பண்டை வழக்குகளையும் கௌரவத்தையும் காப் பதற்காகச் சமயம் ஆயுதமேந்தியது; இது இயற்கைதான். அதேபோல் விஞ்ஞானக் கண்ணோட்டமிக்க இளைஞர்கள் தங்களது மதிப்புமிக்க தலைவரைக் காப்பதற்காக விரைந் தனர்; 'படைப்பு' அத்தியாயம் உலகின் தோற்றத்தைப் பற்றி யும் காலத்தைப் பற்றியும் என்ன கூறினாலும், திருச்சபையின் பண்டை மரபுகள் என்னவாயிருந்தாலும் தமது ஆராய்ச்சிகள் புலப்படுத்தும் முடிவுகளைத் தாம் ஏற்றுக்கொள்ளத் தமக்கு உரிமை உண்டு என்பதற்காக அவர்கள் போராடினர். ஆறு, ஏழு, எட்டாவது பத்தாண்டுகளில் இப் போர் தீவிரமாக நடைபெற்றது. விந்தைச் செயல் (miraculous) பற்றிய எல்லா நம்பிக்கைகளும் விவாதிக்கப்பட்டன; புதிய ஏற்பாட்டின் (New Testament) எல்லைக் கோடுகள்கூடத் தொட்டுப் பார்க்கப்பட்டன. அறிவாளிகள் (intellectuals) மேலும் மேலும் அதிகமாக மதகுருமார்களையும் சமயத்தையும் எதிர்ப்பவர்களாயினர்; உலகாயதவாதிகள் (materialists) ஆயினர். போராட்டத்தின் தீவிரம் அவர்களை இவ்வாறு மாற்றியது.

'மாற்றமும் பூசலும் மலிந்த இந்தக் காலத்தில் பல மனிதர்களும் குடும்பங்களும் மகிழ்ச்சியிழந்தனர்; பலரை மனச்சான்று உறுத்திற்று. கல்வி கற்ற ஆண்களும் பெண் களும் விவாதத்தில் ஈடுபட்டு இருகட்சிகளாகப் பிரிந்தனர். மாறுபட்ட கருத்துடைய கட்சிகளிடையே சமரசத்தை விரும்புவது ஆங்கிலேயர்களின் பொதுவான தன்மை; ஆயினும் அன்று நிலவிய அந்தப் பிளவை அவர்கள்கூட மறுக்க முடியவில்லை.[1] இருபதாம் நூற்றாண்டில் அந்தப் புயல் ஓய்ந்துவிட்டது; அப்போர் முடிந்து, அதில் மாண்டவர்கள் புதைக்கப்பட்டு விட்டனர். சமய

[1]டென்னிசனின் அறிவுக் கூர்மையைச் சில மனிதர்கள் காரண மில்லாமல் குறைத்து மதிப்பிடுகிறார்கள். ஆர்தர் அரசரின் நைட்டுகள் (King Arthur's knights) பற்றிய துதிப் பாடல்களைத் (hymns) தாம் இயற்று வதற்கு முன்னால் தமது இளமை வளர்ச்சிக் காலத்தில் அவர் எழுதிய கவிதைகளில் அக்கூர்மையில்லை எனக் கூறுகிறார்கள். அவரது In Memoriam நாலாவது பத்தாண்டில் எழுதப்பட்டு, டார்வினின் Origin of Species தோன்றுவதற்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே 1850-ல் வெளியிடப் பட்டது. அடுத்த தலைமுறையில் கொந்தளிப்பை மூட்டிவிடும் சமய-விஞ் ஞானப் போரையும் அதன் துயரத்தையும் அது முன்கூட்டியே சுட்டிக் காட்டியது.

நம்பிக்கையும் அதன் மறுப்பும் வெவ்வேறான நிலைகளில் இருக்கின்றன. ஏழாவது பத்தாண்டு விஞ்ஞானிகளின் உலகாயதம் போதுமானதன்று என்று இன்று உணரப்படுகிறது; அதேபோல் பைபிள் கூறுவது எல்லாம் உண்மையல்ல என்பதும் உணரப்படுகிறது. பிரபஞ்சம் பற்றிய உண்மை முழுவதையும் ஓர் ஆய்வுக் கூடத்தில் (laboratory) கண்டு பிடிப்பதோ அல்லது திருச்சபை அறிந்துகொள்வதோ முடியாத காரியம் என்பதை இருசாராரும் வருத்தத்துடன் ஒத்துக்கொள்கிறார்கள். அப்படியானால் அதை எங்கே கண்டுபிடிப்பது என்ற கேள்விக்கு விடையளிப்பது மேலும் கடினமான்று.

ஆங்கிலத் திருச்சபையிலும் புராடஸ்டண்ட் திருச்சபையிலும்காணப்பட்ட சித்தாந்த உறுதிகள் இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றுண்டின் பின்பாதியில் குலைக்கப்பட்டது ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பிரசாரத்துக்கு மிகவும் உதவியது. தனக்கு மட்டும்தான் உண்மை முழுவதும் திட்டவட்டமாகத் தெரியும் என்று அது எப்பொழுதுமே வாதித்து வந்துள்ளது; தாம் பழைய நம்பிக்கைகளை இழந்து ஐயத்தில் உழல்வதைப் பொறுக்கமுடியாத பலர் இத்திசையில் திரும்பினர். ஐரிஷ்காரர்கள் ஆயிரக்கணக்கில் இங்கிலாந்து வந்து குடியேறினர்; நாகரிக மேல்வகுப்பிலும் அறிவாளிகள் வகுப்பிலும் (intellectual class) பலர் மதம் மாறினர்; ரோமன் கத்தோலிக்கர்களிடையில் பிறப்பு வீதம் அதிகமாயிருந்தது; இவையனைத்தும் சேர்ந்து விக்டோரியாக் காலத்தின் இறுதியில் ஆங்கிலேய வாழ்வில் ரோமன் திருச்சபைக்கு ஒரு மிக முக்கிய இடத்தை யளித்தன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பின்பாதியில் புதை பொருள் ஆராய்ச்சியும் வரலாறும் வேகமாக முன்னேறின; அவைகளின் புதிய கண்டுபிடிப்புகள் வைதீக நம்பிக்கைகளுக்கெதிராக விஞ்ஞானத்தின் கைகளைப் பலப்படுத்தின. லெக்கியின் (Lecky) விவேகமிக்க History of Rationalism (1865) என்ற நூலும், பக்கிள் (Buckle) எழுதிய History of Civilization (1857) என்ற நூலின் அளவுக்குமீறிய தன்னம்பிக்கையுடைய உலகாயதமும் பண்டைச்சமய நம்பிக்கைகளிலிருந்து மனிதனை அடித்துச் சென்ற பெருவெள்ளத்தில் சில பகுதிகள். அறிவு ஒளி வீசி, செயல்ஆர்வம் மிக்கிருந்த ஒரு கல்வித்துறை 'லிபரல்' கட்சியானது திருச்சபையின் தளையிலிருந்து ஆக்ஸ்போர்டையும் கேம்பிரிட்ஜையும் விடுவிக்கப் போராடியது; 1871-ம் ஆண்டுச் சோதனைச் சட்டத்தின்மூலம்

(Test Act) வெற்றியும் பெற்றது. இத்தகைய சுதந்திரங்களைத் தமது பிறப்புரிமை என்ற விதத்தில் இலண்டன், மான்செஸ்டர் ஆகிய இளம் பல்கலைக் கழகங்கள் நெடுநாட்களாகவே அனுபவித்துவந்தன.[1]

அரசியாரின் ஆட்சி முடிவதற்குள் ஆக்ஸ்போர்டிலும் கேம்பிரிட்ஜிலும் புதிய கருத்துகள் நிறையப் புகுந்து விட்டன; அவைகளின் 'டான்களில்' (dons) மதகுருக்களின் எண்ணிக்கை குறைந்துவந்தது; எஞ்சியிருந்த மதகுரு 'டான்களும்' திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்; இதனால் அவர்களது 'பெலோஷிப்புகள்' (Fellowships) எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. பண்டை இலக்கியம், கணிதம் ஆகியவற்றோடுகூட இப்பொழுது பௌதிக விஞ்ஞானமும், இடைக்காலத் தற்கால வரலாறும்கூட போதிக்கப்பட்டன. அந் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டில் கிளார்க் மாக்ஸ்வெல், (Clerk Maxwell), ரேலே (Rayleigh), இளைஞரான J. J. தாம்சன் ஆகிய பெரும் விஞ்ஞானிகள் கேம்பிரிட்ஜில் ஆசிரியர்களாயிருந்தனர்; ஆர்ச்டீக்கன் கன்னிங்ஹாம் பொருளாதார வரலாற்றை அங்குப் புகுத்தினர்; மேலும் சிறந்த மேதையான மெய்ட்லண்ட் (Maitland) இடைக்காலத்துச் சட்டங்கள் மூலமாக அக்காலத்து மக்களின் பொதுச்சிந்தனைகளை உலகுக்கு எடுத்துக்காட்டினர். ஆக்ஸ்போர்டில் ஏற்பட்ட மாற்றம் இதைவிடவும் துரிதமானது. விக்டோரியாக் காலத்தின் முதலாண்டுகளில் இந்தப் பல்கலைக் கழகத்தில்தான் புனிதர்கள் (Saints) செய்த விந்தைச்செயல்கள்பற்றியும் மதகுருக்களின் அதிகாரம்பற்றியும் நியூமனும் அவரது எதிர்ப்பாளர்களும் விவாதங்கள் நடத்தி வந்தனர். முப்பதாண்டுகளுக்குப் பிறகு அப்பல்கலைக் கழகத்தில் முற்றிலும் மாறுன சூழ்நிலை நிலவியது. அச்சூழ்நிலையின் காலத்துக்கேற்ற, பரந்த தன்மையைப் பேரறிஞர் பலர் அங்குப் பிரதிநிதித்துவப்படுத்தினர்; ஜோவெட் (Jowett) பேலியோல் (Balliol) கல்லூரியில் 'மாஸ்டராக' இருந்தார்; ஸ்டப்ஸ் (Stubbs), கார்டினர் (Gardiner) ஆகியோரின் விரிவான நூற்புலமை ஆங்கிலேய அரசியல் அமைப்பின் வளர்ச்சியை உலகுக்கு எடுத்துக்காட்டியது; ஒழுக்கநெறியை அடிப்படையாகக் கொண்டதொரு

[1]மற்றப் பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் பின்னர் இருபதாம்நூற்றாண்டின் முதல்ஆண்டுகளில் நிறுவப்பட்டன. 1902–ம் ஆண்டு பல்போரின் மசோதாவுக்கு (Balfour's Bill) முன்பு ஒரு முறையான இடைத்தரக் கல்வி (secondary education) அமைப்பு இல்லாமலிருந்ததால்தான் புதிய பல்கலைக் கழகங்கள் இவ்வளவு மெதுவாக வளர்ச்சியுற்றன.

புதிய தத்துவ முறையை T. H. கிரீன் (T. H. Green) வகுத்தார்.

விக்டோரியா ஆட்சியின் பின்பாதியில்தான் ஆக்ஸ்போர்டும் கேம்பிரிட்ஜும் பொதுமக்களின் கண்முன் சதா நின்றன. அவைகளின் சீர்திருத்தம்—குறிப்பாக, ஆசிரியர் பதவிக்கு சமயத் தத்துவம்பற்றிய ஒரு தேர்வு நடத்தி ஆட்களை நியமிக்கும் முறை ஒழிக்கப்பட்டது (1871) அதில் முக்கியமானது—அக்காலத்துப் பிரதான அரசியல் பிரச்னைகளில் ஒன்று. ஏழாவது பத்தாண்டின் ஆளும்வகுப்பானது பரந்த நோக்குடையது; கல்வியறிவு மிக்கது. இப்பொழுது அழிந்துவந்த நிலப்பிரபு வகுப்போடும், உயர்ந்துவந்த பணக்கார வகுப்போடும், அது கொண்டிருந்த தொடர்பைவிட பல்கலைக்கழகங்களோடு அதிகத் தொடர்புகொண்டிருந்தது. எல்லாப் பொதுப்பதவி விஷயத்திலும் 'சிபாரிசு முறையை' (patronage) கிளாட்ஸ்டன் அகற்றி, சிவில் சர்வீசுக்குள் நுழைவதற்குப் போட்டிப் பரீட்சையைக் கட்டாயமாக்கினர். தேர்வு அதிகாரிகளின் அறிக்கைகளைக்கொண்டு நடைமுறைப் பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்முறை அபத்தமானதாக பாமர்ஸ்டனுக்கும், முந்தியகாலத்து மேல்வகுப்பு அரசியல்வாதிகளுக்கும் தோன்றியிருக்கலாம். தேர்வுகள் நடத்திப் பட்டமளிக்கும் முறையை மேற்கொண்ட ஆக்ஸ்போர்டுக்கும் கேம்பிரிட்ஜுக்கும் சூட்டப்பட்ட புகழ்மாலை இது; பல்கலைக்கழக மனிதர்களுக்கும் பொதுவாழ்வுக்கும் இடையிலான தொடர்பை இது இன்னும் நெருக்கமாக்கிற்று. இனிச் சமூக அந்தஸ்து, உயர்தொடர்புகள், சிபாரிசுகள் ஆகியவைகளுக்குப் பதிலாகப் பயிற்றப்பட்ட அறிவே ஓர் இளைஞனின் முன்னேற்றத்துக்கான அனுமதிச் சீட்டு. தேர்வு முறையின் (Examination system) தீமைகள்—குறிப்பாகப் பள்ளிக்கல்வியின் மீதான அதன் தீய விளைவுகள்—இன்னும் உணரப்படவில்லை; மேலும், அத் தீமைகள் அப்பொழுது அவ்வளவு பெரியவையாகவுமில்லை; பின்னர்தான் இது விளைந்தது.

ஆனால், விக்டோரியா ஆட்சியின் இறுதி ஆண்டுகளின் தன்மையைச் சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஒரு பெரும் சாதனை Dictionary of National Biography என்ற நூல். இதைத் தொகுத்தது அரசோ அல்லது ஒரு பல்கலைக்கழகமோ அன்று. இதைத் தொடக்கியவரும் அதற்குப் பொருளுதவி செய்தவரும் நூல்வெளியீட்டாளரான ஜார்ஜ் ஸ்மித் என்ற தனி நபர்தான். எழுத்தாளர் பலரோடு தாம் கொண்டிருந்த நட்புக் காரணமாக அப்பெரு முயற்சியில் அவர்

ஈடுபட்டார். இந்த அகராதி விக்டோரியாக் காலத்தின் இறுதியில் காணப்பட்ட தலைசிறந்த வியாபாரத் திறமைக்கும் பரந்த நோக்குடைய பொதுப்பணி உணர்வுக்கும் விக்டோரியாக் காலத்தின் விரிவான இலக்கிய, வரலாற்று நூல் அறிவுக்கும் ஒரு சிறந்த நினைவுச் சின்னம். தனது கடந்த காலத்து அருமை பெருமைகளை எடுத்துக்கூறும் இத்தகையதொரு சிறந்த நூலை வேறு எந்தத் தேசமும் இவ்வளவு நல்ல முறையில் தொகுத்ததில்லை.

முந்திய விக்டோரியாக் காலத்துச் சமயத்துக் கெதிராக ஆங்கிலேயர்கள் செய்த கிளர்ச்சியின் ஓர் அம்சம்தான் அறியொணாக் கொள்கை (agnosticism) என்பதையும், ஆனால் இக் கொள்கைக்கும் மகிழ்ச்சிக் கொள்கைக்கும் (hedonism) சொல்லிலோ செயலிலோ எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதையும் ஏற்கெனவே கண்டோம். 'சீர்கேட்டுக் காலம்' என்றழைக்கப்பட்ட ஒன்பதாவது பத்தாண்டில்தான் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் தளர ஆரம்பித்தன. திட்டவட்டமான, ஓரளவு மிகவும் கடுமையான ஒழுக்க நெறிகளை எடுத்துக் கூறிய பழைய சமய நம்பிக்கைகள் சிறிதுசிறிதாக மறைந்தது இதற்கு ஒரு முக்கிய காரணம். விக்டோரியா அரியணையேறிய காலத்தில் 'பொதுமக்களுக்கெல்லாம் உரிய, முறையாகத் தொகுக்கப்பட்ட நம்பிக்கைகள், நடைமுறைகள், இலட்சியங்கள் என்ற முறையில் விளங்கிய பழைய சமயம், 'தனி மனிதனின் சொந்தத் தேவைகளுக்கு வகை செய்யும்' புதிய சமயமாகப் பின்னர் மாறிவிட்டது; எனவே, அத்தகைய தேவைகள் ஒன்றுமில்லாத மனிதர்களின் நடத்தையை அது பாதிக்க முடியாமல் போய்விட்டது. குடும்ப வழிபாடு, ஆலயம் செல்லல் ஆகியவை மறைந்து, வாரவிடுமுறை நாட்களில் உல்லாசப்பயணம், குதிரைப் பந்தயம், நல்லவையும் கெட்டவையுமான பிற கேளிக்கைகள், பொழுது போக்குகள் எல்லாம் வந்தன. இதற்கெல்லாம் தலைவராக விளங்கியவர் வேல்ஸ் இளவரசர் (பின்னர் எட்வர்ட் VII). மகனைப் புரிந்துகொண்டு அன்பும் ஆதரவும் காட்டாத தாய், தவறான கல்வி ஆகியவைகளின் விளைவு இது. அந்நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டில்தான் Yellow Book வெளியாயிற்று. 'கலை கலைக்காகவே' என்றாயிற்று. ஆயினும் மெரிடித், ஹார்டி, வில்லியம் மோரிஸ், ஸ்டீவென்சன், ஹவுஸ்மன் (Housman) போன்ற சிறந்த எழுத்தாளர்களும் வாழ்ந்தது அக்காலத்தில்தான். இவர்கள் அனைவருமே வைதிக சமயத்தை எதிர்த்தனர்; என்றாலும் விக்டோரியாக் காலத்தின் முன்பகுதியில் வசித்த

மக்களைப்போல் இவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரிய வழியில் ஆழ்ந்த கருத்துடைய மனிதர்களே.

படித்த மக்களிடையில் விஞ்ஞானத்துக்கும் சமயத்துக்கும் நடந்த இப் போராட்டத்தைச் சார்லஸ் பிராட்லாவின் (Charles Bradlaugh) ஆவேசமிக்க நாத்திகம் (atheism) வெகு திறமையாகப் பிரதிபலித்தது. தொழிலாளர் பொதுக்கூட்டங்களில் பிராட்லா தமது நாத்திகத்தைப் போதித்தார்; அதே சமயம், கடைசிப் பெரும் எவஞ்சலிய மறுமலர்ச்சியாகிய இரட்சண்ய சேனையும் (Salvation Army) வெஸ்லியின் முறைகளைப் பின்பற்றி ஏழை எளியவர்களுக்கும் குடிகாரர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் விலைமகளிருக்கும் 'மதமாற்றம்' (conversion) என்னும் புதிய உற்சாகத்தை ஊட்டியது. இச் சேனையை நிறுவியவர் 'ஜெனரல்' பூத் (Booth). பழைய கன்பார்மிஸ்டல்லா நிறுவனங்களைக் காட்டிலும் இரட்சண்ய சேனை கடைப்பிடித்த முறைகள் பரபரப்பூட்டுபவை; வரப் போகும் காலத்தின் தன்மையை இவை எடுத்துக்காட்டின. புராடஸ்டண்ட் சமயத் தொண்டில் தெரு ஊர்வலங்களில் 'பாண்ட்' (bands) வாத்தியங்களையும் வண்ண 'யூனிபார்ம்களையும்' (uniforms) புகுத்தி இது ஒரு புதுமையை இயற்றியது. ஏழை எளியவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதும் சமூகப் பணியும், மனிதர்களின் ஆன்மாவைக் கடைத்தேற்றும் கிறிஸ்தவ சமயத்தொண்டின் ஒரு முக்கியப் பகுதிதான் என்று இரட்சண்ய சேனை கருதியதும் மிகவும் குறிப்பிடத் தக்கது. நவீன ஆங்கிலேய வாழ்வில் இச் சேனையின் சக்தி ஒரு நிரந்தர அம்சமாக ஆகிவிட்டதற்கு இதுவும் ஒரு பெரிய காரணம்; புத்துயிர்ப்பு இயக்கம் (revivalism) மட்டும் அதற்குக் காரணம் அன்று.

சமய, சமுதாய நோக்கங்களை முன்னிட்டு அமைக்கப் பட்ட இரட்சண்ய சேனையைப் போன்றே குடிப்பழக்கத்தை விலக்கும் இயக்கம் ஒன்றும் (Total Abstinence or 'Teetotalism') இருந்தது. குடிப்பழக்கமும், மதுவகைகளில் பெரும்பொருள் செலவுசெய்தலும் நகரவாழ்வின் பெருந் தீமைகளில் இரண்டு; குற்றங்களுக்கும் குடும்ப நாசத்துக்கும் இது ஒரு பிரதான காரணமாயிருந்தது; பீர் மதுவுக்குப் பதிலாகச் சாராய வகைகள் (spirits) வந்த பின்னர் இத்தீமை அதிகமாயிற்று. ஹொகார்த்தின் Gim Lane வெளிவந்த நாள் முதற்கொண்டு ஜார்ஜ் குருயிக்ஷாங்கின் (George Cruikshank) The Bottle, The Drunkard's Children (1847-1848) ஆகிய அச்சுப் படங்கள் வந்த நாள்வரை, பெரும் ஆங்கிலேய

நையாண்டிச் சித்திரக்காரர்கள் (caricaturists) தமது மக்களின் இந்தத் தீய பழக்கத்தை நன்கு படம் பிடித்துக்காட்டி எதிர்த்து வந்தனர்; மேற்சொன்ன இரண்டு படங்களும் ஆயிரக்கணக்கில் விற்பனையாயின. அடுத்து வந்த ஆண்டுகளில் 'நீல ரிப்பன் படை' (Blue Ribbon Army) என்ற ஒரு இயக்கம் இந்தக் குடிப்பழக்கத்தின்மீது ஸ்தாபன ரீதியான தொரு வெற்றிகரமான தாக்குதலை நடத்தியது: குடிப்பழக்கத்தை அடியோடு கைவிடுவது என்ற உறுதியை மேற்கொண்டவர்கள் உலகுக்குத் தம் உறுதியை எடுத்துக்கூறுவதற்காக ஒரு நீல ரிப்பனைத் தமது மார்புப்புறத்தில் அணிந்தனர். குறிப்பாகக் கன்பார்மிஸ்ட் அல்லாதாரிடையில் பலம் பொருந்தி விளங்கிய மதுவிலக்குக் கட்சி (Temperance party)[1] ஏழாவது பத்தாண்டில் லிபரல் கட்சியில் ஒரு பெரும் சக்தியாக விளங்கியது; ஆனால் குடியை ஒழிக்கும் அவர்களது சட்டசபைக் கோரிக்கைகளில் ஒருவித வெறித்தன்மை காணப்பட்டது; இதனால் நடைமுறைக்கொத்த சில நடவடிக்கைகள்கூட நீண்ட நாள் ஒத்திப்போடப்பட்டன. மது உற்பத்திக்காரர்களின் எதிர்ப்பை இந்த இயக்கம் தூண்டிவிட்டது; அவர்களுக்குப் பெரும்பலம் இருந்தது; மதுக் கம்பெனிகளை ஆதரிக்க எண்ணிறந்த பங்குதாரர்கள் (share-holders) இருந்தனர்; அந் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டில் அவர்கள் சன்சர்வேட்டிவ் கட்சியைக் கைப்பற்றினர்; இக் கட்சியின் கையில்தான் 1886-க்குப் பிறகு நாட்டின் அரசாட்சி பெரும்பாலும் இருந்தது.

மதுவைக் கைவிடும் பழக்கமும் மது, பீர் ஆகியவற்றை மிதமாக முறையாக உபயோகிக்கும் பழக்கமும், வாழ்க்கை வசதிகளில் ஏற்பட்டுவந்த முன்னேற்றம் காரணமாக வளர்ச்சியுற்றன. வாழ்க்கை வசதிகள் பெருகி, அதில் சுவாரஸ்யம் மிகுந்தது; படித்தல், இசை, விளையாட்டுகளைக் கவனித்தல் அல்லது அவைகளில் பங்குகொள்ளுதல், சைக்கிள் சவாரி, உல்லாசப்பயணம், விடுமுறைகளைக் கிராமப் புறங்களிலும் கடற்கரைகளிலும் கழித்தல், இவைகளுக்கெல்லாம் மேலாகச் சுறுசுறுப்பும் கல்வியறிவும் நிறைந்த மூளைகள்,

[1] ஆனால் எல்லா மதஸ்தாபனங்களும் மதுவிலக்கு இயக்கத்தை ஆதரித்தன. 1909-ல் ஆங்கிலேயத் திருச்சபையின் மதுவிலக்குச் சங்கத்தில் (Church of England Temperance Society) 639,233 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் 114,444 பேர் 'முழுமையான விரதத்தை' மேற்கொண்டனர்; 486,888 பேர் 'இளம் உறுப்பினர்கள்'. குடிப்பழக்கத்தை மேற்கொள்ளுமுன்பே சிறுவர்களைச் சேர்த்துக்கொள்வது இச் சங்கத்தின் ஒரு வழக்கமான கொள்கை.

வசதிகள் நிறைந்த இல்லங்கள் ஆகிய காரணங்களால் இத்தீய பழக்கம் குறைந்தது. அலமாரியில் இருந்த மதுப் புட்டியும், சுகத்தையும் வரவேற்பையும் விளம்பரம் செய்யும் 'ஜின் மாளிகை' விளக்குகளும் சோம்பேறி மூடனைக் கவருவது இந்தக் காரணங்களால் கடினமாயிற்று. மேலும், மது உற்பத்திக் கம்பெனிகளையும் ஒருவித அவமான உணர்வும் அச்சமும் பீடித்தன; தாங்கள் நடத்திவந்த பொதுவிடுதிகளில் சீர்திருத்தங்களை அவை ஏற்படுத்தின; அவ்விடுதிகளில் ஓரளவு கண்ணியமும் பெருந்தன்மையும் புகுந்தன; மதுவகைகளைத் தவிர வேறு பலவும் அங்கு விற்கப்பட்டன; தமது வாடிக்கைக்காரர்கள் குடிமயக்கத்தில் தள்ளாடிக் கொண்டே வெளியேறுவதில் முன்பு அவ்விடுதிக்காரர்களுக்கிருந்த நாட்டம் இப்பொழுது குறைந்தது. இறுதியாக மதுக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைக்க 1904-ல் ஏற்பட்ட பல்போரின் லைசென்சுச் சட்டம் (Balfour's Licensing Act) ஓர் உருப்படியான முறையைக் கண்டுபிடித்தது.

இருபதாம் நூற்றாண்டில் மதுவகைகளுக்கு வேறு புதிய விரோதிகளும் தோன்றிவிட்டனர்; தெருக்கோடியில் சினிமாவும் வீட்டிலேயே ரேடியோப்பெட்டியும் வந்துவிட்டன; தொழில்திறமிக்க முறையில் இயந்திரங்களுடன் மனிதன் அன்றாடம் பணிபுரிய வேண்டியிருக்கிறது; இதற்கு ஒரு சிறந்த உதாரணம் மோட்டார்க்கார் ஓட்டுதல்; குடிபோதையில் இவைகளை இயக்குவது சாத்தியமில்லை. இன்று குடியைவிடச் சூதாட்டமே அதிகத் தீமை விளைக்கிறது என்று கூறலாம். ஆயினும் விக்டோரியா அரசி இறந்தபொழுது சமுதாயத்தின் அடிமுதல் முடிவரை எங்கும் நிறைந்து காணப்பட்ட தீமை குடிப்பழக்கம்தான்; இன்று இருப்பதைவிட அன்று அது விரிவாகப் பரவிக்கிடந்தது; ஆனால், அவர் அரியணை ஏறிய காலத்தில் காணப்பட்டதைவிட அவர் இறந்தபொழுது அது குறைவாகவே இருந்தது என்பது நிச்சயம்.

விக்டோரியாக் காலத்தில்தான் புகைப்படக் கலை (photography) உலகில் நன்கு பரவியது. 'சமீப ஆண்டுகளில் ஏழை வகுப்பினருக்குக் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம்' இதுதான் என்று 1871-ம் ஆண்டிலேயே ஒருவர் புகழ்ந்து கொண்டாடினர்.

'சமூக வாழ்விலும், தொழிற்சாலை வாழ்விலும் காணப்படும் போக்குகள் மகிழ்ச்சிக்கு வழிசெய்யும் அன்புமிக்கக்

குடும்ப உறவுகளை நாள்தோறும் குலைக்கின்றன; இப் போக்குகளுக்கு ஈடுசெய்கிறது ஆறு பென்னி புகைப் படம். இந்தவிதத்தில் ஏழை மக்களுக்கு உலகி லுள்ள பொதுப்பணியாளர்கள் செய்யும் நன்மைகள் அனைத்தைக் காட்டிலும் புகைப்படம் அதிக நன்மைகள் செய்கிறது. கீழ்வகுப்பு மக்களிடையில் குடும்ப உறவில் அன்பிற்கு என்ன இடம் இருக்கிறது என்ப தைத் தெரிந்தவர்கள், ஓர் ஏழைத் தொழிலாளியின் குடிசைச் சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் சின்னஞ்சிறு புகைப்பட உருவங்களைக் காண்பவர்கள் நான் சொல்வதை ஆமோதிப் பார்கள் என்று நினைக்கிறேன். வாழ்வானது சதா பிரித்துக் கொண்டே யிருக்கும் 'அக் குடும்பங்களை, அந்தப் புகைப் படங்கள் ஒன்றுபடுத்துகின்றன. 'கானடாவுக்கு போய் விட்ட' பையனும், 'வேலை செய்வதற்காக வெளியில் சென் றிருக்கும் பெண்ணும்' மலர்ச் செடிகளுக்குக்கீழ் உறங்கும் பொன்னிறமுடிகொண்ட சின்னஞ்சிறு குழந்தையும், கிராமத்தி லிருக்கும் வயதான தாத்தாவும் அப்புகைப்படங்களில் ஒன்று சேர்ந்து காணப்படுகிறார்கள்! (Macmillan's Magazine, Sept. 1871.)

இறந்து போனவர்கள், வெளியூர் சென்றவர்கள், முந் திய ஆண்டுகள், நிகழ்ச்சிகள், நட்புகள்பற்றிய எல்லா நினைவுகளும் எல்லா வகுப்பினரிடையிலும் நீடித்து நிற்ப தற்கு மலிவான, மிகவும் தெளிவான புகைப்படங்கள் வழி செய்தன.

கலையின்மீது இதன் விளைவுகள் அனைத்தும் நல்லவை என்று கூறமுடியாது. உருவப்படங்கள், முக்கியமான நிகழ்ச்சி கள், காட்சிகள், கட்டடங்கள் ஆகியவற்றை நன்முக வரைந் தும், பழைய பிரசித்திபெற்ற படங்களைப் பிரதிசெய்தும் ஆயிரக்கணக்கான ஓவியர்கள் உயிர்வாழ்ந்தனர். இப் பொழுது புகைப்படம் அவர்களது தொழிலை மேற்கொண்டு விட்டது. ஓவியம் தீட்டும் தொழிலின் முக்கியத்துவத்தைக் குறைத்தும், உள்ளதை அப்படியே எடுத்துக் காட்டுவதில் ஓவியத்தை விஞ்சியும் ஓவியக் கலைஞனை அது விரட்டி விட்டது. அக் கலைஞன் தத்துவத்தில் (theory) நுழைந்து ஒளிந்து, கலை கலைக்காகவே என்பதை நிறுவுவதற்காகப் பல புத்திசாலித்தனமான ஆராய்ச்சிகளில் இறங்கினன்.

விக்டோரியா ஆட்சியின் இறுதியில் வழங்கிய ஆங்கில மொழியை, எலிசபெத்தின் கடைசி ஆண்டுகளில் நிலவிய

ஆங்கில மொழியோடு ஒப்புநோக்கினால் வேறுபாடு ஒன்றையும் காணமுடியாது; தற்கால ஆங்கிலேயன் ஒருவன் 1611-ம் ஆண்டின் பைபிளை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்; சாசரின் (Chaucer) மொழியைவிட எளிதாக, மரபுகள் (idioms) மலிந்த ஷேக்ஸ்பியரின் உரையாடல்களை அவன் புரிந்துகொள்ளலாம். ஏனென்றால், எலிசபெத்துக்கும் விக்டோரியாவுக்கும் இடையிலான மூன்று நூற்றாண்டுகளிலும் எழுத்து, கடிதம் மூலமாகவே எல்லாம் நடந்துவந்தன; படித்த மேல்வகுப்பு ஒன்று அப்பொழுது ஆட்சி நடத்தியது; இலக்கணம், நிலவிவந்த எழுத்தமைப்புகள் ஆகிய எதிலும் எந்த அடிப்படை மாற்றத்தையும் எதிர்த்து அவ்வகுப்பு நமது மொழியைக் காத்தது. ஆயினும் மற்றொரு பொருளில் மொழி மாற்றமடைந்தது; கவிதை, உணர்ச்சி ஆகியவற்றின் மொழியாகவிருந்த ஆங்கிலம் விஞ்ஞானம், பத்திரிகைத் தொழில் ஆகியவற்றின் மொழியாயிற்று. எலிசபெத்துக் கால மனிதன் ஒருவன் விக்டோரியாக் காலத்துச் செய்தித்தாளைப் படித்தாலும், அல்லது கல்விகற்ற இன்றைய மனிதர்களின் உரையாடல்களைக் கேட்டாலும் புரிந்துகொள்ள முடியாத பல நீண்ட சொற்கள் அவனைத்திணறஅடிக்கும்; இவைவழக்கமாக இலத்தீன் சொற்களிலிருந்து அமைக்கப்பட்டவை; கவிதை மாலை தொடுப்பதற்காக அல்ல; விஞ்ஞான, செய்திப் பத்திரிகைக் கட்டுரைகள் தீட்டுவதற்கும், சமூக-அரசியல் விவாதங்கள் நடத்துவதற்கும் இவை ஏற்பட்டவை. opportunist, minimize, international, centrifugal, commercialism, decentralize, organization ஆகிய சில இவற்றிற்கு உதாரணங்கள்; பௌதீக விஞ்ஞானத் துறையிலும் மிக நுட்பமான கலைச் சொற்களும்கூட இவ்வாறு தோன்றியவையே; இவை அழகில்லாதவையாக இருப்பினும் பயனுள்ளவை[1].

[1] திரு, பியர்சல் ஸ்மித் (Pearsall Smith) தமது The English Language என்ற நூலில் (Home University Library p. 124) இவ்வாறு எழுதுகிறார்: பலவிதங்களில் மொழியின் இயற்கையான விரோதியாக விளங்குவது விஞ்ஞானம். மொழியானது தனது இலக்கியநடைக்கும் கொச்சைப் பேச்சுக்கும் ஏராளமான உயிருள்ள தெளிவான சொற்களைக் கொண்டிருக்க வேண்டும்; அவைகள் 'சிந்தனை ஓவியங்கள்'; அவை நமது உணர்வுகளைத் தூண்டுகின்றன; தாம் வருணிக்கும் பொருள்கள்பற்றிய நமது உணர்வுகளை அவை வெளிப்படுத்துகின்றன. ஆனால் விஞ்ஞானத்துக்கு நமது உணர்ச்சிகளைப்பற்றியோ அல்லது உயிர்த்துடிப்புடனான வர்ணனைகளைப்பற்றியோ கவலையில்லை; ஆராய்ச்சிக்கு உதவும்வகையில் ஒருவிதக்குறிகளை உருவாக்குவதுதான் அதன் குறிக்கோள்; இதற்காக வெறும் வறட்டு, சூட்சுமச் சொற்றொடர்களை அது நியாயமாக எடுத்தாள்கிறது; அவை ஏதோ ஓர் இறந்த மொழியிலிருந்து எடுத்தாளப்படுகின்றன; அவைகளில் உயிரோ, குணங்களோ ஒன்றுமேயில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பாதியில் விரோதி களான 'முதலாளிகளும் தொழிலாளிகளும்' தங்களது ஸ்தாப னங்களை விரிவுபடுத்தி, நவீனமுறையில் அவைகளைத் திருத்தி யமைத்து வந்தனர். பல புதிய குடும்ப நிறுவனங்கள் மறைந்து பொறுப்பு வரையிட்ட கம்பெனிகளும் (Limited Liability Company) அவைகளை நிர்வகிக்கச் சம்பளம் வாங்கும் மேனேஜர்களும் ஏற்பட்டனர். நிர்வாகப் பொறுப்பையே தமது தொழிலாகக் கொண்டதொரு பிரிவினரை ஏற்படுத்திப் புதியகாலத்தின் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த மாறுதல் பயன்பட்டது; இக் குடும்ப நிறுவனங்கள் நன்கு நிறுவப்பட்டபின் இரண்டாவது, மூன்றுவது தலை முறைகளில் இவைகளின் முன்னேற்றத்தைத் தடைசெய்த திறமைக் குறைவு இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும் தனியார் முனைப்பிலிருந்து (individual initiative) விலகிக் கூட்டு முயற்சி (collectivism), முனிசிபல் அல்லது அரசாங் கத் தொழில்நிறுவனங்கள் ஆகியவைகளை நோக்கி ஓர் அடி எடுத்து வைப்பதாகும் இது. இரயில்வேக் கம்பெனிகள், பங்கு தாரர்களின் இலாபத்தைக்கருதி நடத்தப்பட்ட தனியார் நிறுவ னங்களாகவே இன்னமும் இருந்துவந்தன வாயினும், பழைய குடும்பத் தொழில்நிறுவனங்களிலிருந்து இவை பெரிதும் மாறுபட்டன. இவைகள் பாராளுமன்றச் சட்டங்க ளால் உயிர்பிழைத்திருந்தன; அரசாங்கத்தின் கட்டுதிட்டங் களை இவை ஏற்றுக்கொண்டதால் கைம்மாருகச் சில அதிகாரங் களும் சிறப்புரிமைகளும் இவைகளுக்கு அச் சட்டங்களால் தரப்பட்டன. அதேசமயம் தம் மக்களுக்கு விளக்கு, போக்குவரத்து முதலிய வசதிகளைச் செய்து தருவதற்காகப் பெரும் நகரசபைகளும் தொழிலில் இறங்கின.

பொறுப்பு வரையிட்ட கம்பெனிகளும் நகரசபைகள் தொழிலில் நுழைந்ததும் முக்கியமான விளைவுகளைத் தோற்று வித்தன. மூலதனமும் தொழிலும் இவ்வாறு விரிவான, பொதுவான முறையில் நிர்வகிக்கப்படும் வழக்கம் ஏற்பட்ட தால் பங்குதாரர்களின் எண்ணிக்கையும் முக்கியத்துவமும் அதிகரித்தன; இந்தப் பங்குதாரர் வகுப்பானது, நிலத்திலும் நிலநிர்வாகத்திலும் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத ஒரு பொறுப்பற்ற செல்வத்தைத் தேசீய வாழ்வில் பிரதிபலித்தது; அதேபால் தொழில்நிர்வாகப் பொறுப்புகளிலும்கூட இவர்களுக்குப் பங்கில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டு முழு வதும் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலே ஷியா, ஐரோப்பாவின் சில பகுதிகள் ஆகியவை யெல்லாம்

பிரிட்டிஷ் மூலதனத்தைக்கொண்டே பெரும்பாலும் அபிவிருத்தியடைந்து வந்தன; இவ்வாறு உலகம் தொழில் மயமாகும் இயக்கம் பிரிட்டிஷ் பங்குதாரர்களின் செல்வத்தைப் பெருக்கியது. போர்ன்மூத் (Bournemouth), ஈஸ்ட்போர்ன் (Eastbourne) போன்ற பட்டணங்கள் தோன்றின; நல்ல வருமானத்தைப்பெற்று ஓய்வுடன் சுகமாகக் காலம்கழிக்கும் 'வசதிமிக்க வகுப்பினம்' இந்த நகரங்களின் வீடுகளில் வாழ்ந்தன; சமூகத்தின் மற்ற வகுப்புகளோடு இவர்களுக்கு யாதொரு தொடர்பும் இல்லை; இலாப ஈவுத் தொகைகளைப் (dividends) பெறுவதும், நிர்வாகிகளைப் (management) பயமுறுத்துவதற்காகப் பங்குதாரர்களின் கூட்டங்களுக்கு எப்பொழுதாவது செல்வதும்தான் இவர்களுக்கும் சமுதாயத்துக்கும் உள்ள தொடர்பு. 'பங்குதாரரா யிருத்தல்' என்றால் ஓய்வையும் சுதந்திரத்தையும் அனுபவித்தல் என்பது பொருள்; பிந்திய விக்டோரியாக் காலத்து மனிதர்கள் பலர் ஒரு பெரிய நாகரிகத்தை உருவாக்கும் தலைசிறந்த பணிக்கு இந்த ஓய்வையும் சுதந்திரத்தையும் பயன்படுத்தினர்.

தான் பங்குவைத்திருக்கும் கம்பெனியில் வேலைசெய்யும் தொழிலாளிகளின் வாழ்வு, எண்ணம், தேவை ஆகிய எதைப்பற்றியும் 'பங்குதாரருக்குத்' தெரியாது; முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான நல்லுறவுகள் அவனால் பாதிக்கப்பட்டனவே ஒழிய வேறில்லை. கம்பெனியை நிர்வகித்த, சம்பளம் வாங்கிய மேனேஜர் தொழிலாளிகளுடனும் அவர்களது தேவைகளுடனும் மேலும் நேரடியான தொடர்பு கொண்டிருந்தார்; ஆயினும் அவருக்கும்கூட அவர்களுடன் அன்னியோன்னியமான உறவோ பழக்கமோ கிடையாது. பழைய குடும்பத் தொழில் நிறுவனங்களில் காணப்பட்ட இந்த நல்லுறவும் தொடர்பும் இப்பொழுது மறைந்துவந்தன. மேலும் தொழில்கள் பெரிய அளவில் விரிவடைந்ததும் தொழிலாளர்களின் எண்ணிக்கைப் பெருக்கமும் இத்தகைய நேரடி உறவுகளை இயலாதவை ஆக்கின. ஆயினும் தொழிற் சங்கங்கள் வளர்ச்சியுற்றுப் பலம்பெற்றதால் கம்பெனி மேனேஜர்கள் தங்களது தொழிலாளர்கள் விஷயத்தில் சர்வாதிகாரிகளாக நடந்துகொள்ளச் சாத்தியமில்லாமல் போயிற்று; நுட்பம் மிகுந்த தொழில்களில் பெரும்பாலும் தொழிற்சங்கங்கள் மிகுந்த பலம்பெற்று விளங்கின. வேலை நிறுத்தம், கதவடைப்பு என்ற இரு கடுமையான முறைகளும் இரு தரப்பினரும் ஒருவரது பலத்தை மற்றொருவர் புரிந்து கொள்ளவும், நியாயமான பேச்சுவார்த்தையின்

முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளவும் வழி செய்தன.

இந்தச் சூழ்நிலையில், நாள்தோறும் பெருகிவந்த நாட்டு ஆக்கத் தொகையானது (national dividend) ஓரளவு சமமான முறையில் வகுப்புகளிடையில் பங்கிடப்பட்டது. ஆயினும் முதலாளிக்கும் தொழிலாளிக்கு மிடையிலான வேறுபாடுகளும், அன்றுட வாழ்வில் அவர்களுக்கிடையேயான நேரடித்தொடர்பின்மையும் அதிகமாகிக்கொண்டே போயின. ஏழைகள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை நல்ல குணம் படைத்த சில பூர்ஷ்வாக்களுக்குக் காட்டவேண்டிப் பொதுப் பணியாளர்கள் சிலர் தொழிலாளர்கள் வசித்த பகுதிகளில் 'குடியிருப்புகளை' (settlements) அமைத்தனர்; இது மிக முக்கியமானது. எனவே, 'வகுப்புப் போராட்டம்' தவிர்க்க முடியாதது என்ற மார்க்ஸின் தத்துவம் அந் நூற்றாண்டின் இறுதிவாக்கில் நன்கு பரவிக் காணப்பட்டது; இதை விடவும் அதிகச் சந்தர்ப்பவாதக் கோட்பாடான கூட்டு முயற்சித் தத்துவத்தை (collectivism) பேபிய சங்கத்தினர் (Fabian Society) பரப்பினர்; மார்க்ஸின் தத்துவத்தைவிட அதிகமாக இது மக்களிடையில் ஆதரவு பெற்றிருந்தது.

ஆனால், இத் தத்துவங்கள் எல்லாம் ஏட்டுச்சுரைக்காய்கள்; எனவே, ஆங்கிலேயத் தொழிலாளியை இவை அதிகம் பாதிக்கவில்லை. நீதிபதி இயற்றிய ஒரு சட்டத்துக் கெதிராகத் தொழிற்சங்கங்களைக் காக்கவேண்டிய ஒரு நடைமுறைத் தேவையானது தொழிலாளர் வகுப்பை (Labour) அரசியலில் புகுத்தித் தமக்கென ஒரு கட்சியை அமைத்துக் கொள்ளும்படிச் செய்தது; இத்தகைய தத்துவங்கள் இதற்குக் காரணமல்ல. எவ்வாறு என்றால், தொழிற்சங்கங்களுக்கு எந்த உரிமைகளைக் கொடுக்கச் சில சட்டங்களைப் பாராளுமன்றம் இயற்றியதோ அச் சட்டங்கள், அந்த உரிமைகள் உண்மையில் வழங்கவில்லை என்று கூறக்கூடிய ஒரு துரதிருஷ்டவசமான குணத்தை ஆங்கிலேய நீதிமன்றங்கள் பெற்றிருந்தன. 1825-ம் ஆண்டுச் சட்டம் ஒன்று, கூலியை உயர்த்துவதற்கான தொழிலாளர் போராட்டங்களும் தொழிற் சங்கங்களும் சட்டப்படியானவை என்று விதித்தது; அல்லது, அது அப்படி விதித்தது என்று பாராளுமன்றமும் சரி, மக்களும் சரி நாற்பதாண்டுகளாகக் கருதியிருந்தனர். ஆனால், 1867-ல் பாய்லர் செய்வோர் வழக்கில் (Boilermakers' case) பிரதம நீதிபதிப் பிரபுவைத் (Lord Chief Justice) தலைமையாகக்

கொண்ட நீதிபதிகள், 'தொழிலைக் கட்டுப்படுத்துவதால்' தொழிற்சங்கங்கள் சட்டவிரோதமான சங்கங்கள் என்று தீர்ப்பளித்தனர். அதிருஷ்டவசமாக அதே ஆண்டில் நிறை வேற்றப்பட்ட சீர்திருத்த மசோதா (Reform Bill) பாராளு மன்றத் தேர்தலில் தொழிலாளிகளுக்கு வாக்குரிமை அளித் தது; எனவே, அரசியல் அமைப்புக்கு (constitutional) உட் பட்ட முறையில் செயலாற்றித் தங்களது குறைகளைத் தீர்ப் பதற்கு அரசியல்வாதிகளை இணங்கச் செய்வதற்கு வழி இருந்தது. இதன் விளைவாக 1871-ல் இயற்றப்பட்ட கிளாட்ஸ் டனின் சட்டம் ஏராளமான சுதந்திரத்தோடு தொழிற் சங்கங்களுக்கு வாழும் உரிமையை அளித்தது; 1875-ம் ஆண்டு டிஸ்ரேலியின் சட்டம் 'அமைதியான மறியல் இயக்கத்தை' (peaceful picketing) சட்டப்படியாக் கிற்று.

இதற்குப் பிறகு ஒருதலைமுறைக்குத் தொழிற்சங்கங்களில் நீதிபதிகள் தலையிடவில்லை; இந்த இடைக்காலத்தில் நுட்பத் தொழில்களிலிருந்து (skilled trades) நுட்பமற்ற தொழில்களுக்கும் தொழிற்சங்க இயக்கம் பரவியது; குறிப் பாக, 1889-ல் ஜான் பர்ன்ஸ் (John Burns) தலைமையின்கீழ் இலண்டன் துறைமுகத் தொழிலாளிகள் நடத்திய பெரும் வேலை நிறுத்தத்தில் இதைக் காணலாம். அந் நூற்றாண்டின் இறுதிவாக்கில் இங்கிலாந்தின் பெரும்பாலான தொழில்களி லும், பெரும்பாலான இடங்களிலும் தொழிலாளியின் கூலி யைக் காக்கும் சக்தி மிகுந்த சாதனமாகத் தொழிற்சங்கங்கள் விளங்கின; புத்திசாலித்தனமாகவே இந்தச் சாதனமும் பொதுவாகப் பயன்படுத்தப் பட்டது. பிறகு 1901-ல் டேப் வேல் (Taff Vale) தீர்ப்பு மூலம் நீதிபதிகள் மறுபடியும் தாக்கி னர்கள்; முந்தியப் பாராளுமன்றங்களின் சட்டங்கள் வீணாயின; வேலைநிறுத்தம் சட்டவிரோதமென அறிவிக்கப் பட்டது. இந்தத் தீர்ப்பினால் தூண்டப்பட்டுத் தனியாக ஒரு தொழிற்கட்சி (Labour Party) புதிய நூற்றாண்டின் தொடக்கத் தில் பாராளுமன்றத்தில் நிறுவப்பட்டது; சட்டநடவடிக்கை களிலிருந்து தொழிற்சங்கங்களுக்குச் சிறந்த பாதுகாப்பளிக் கும் ஒரு சட்டமும் 1906-ல் இயற்றப்பட்டது. ஆனால், இந் நிகழ்ச்சிகள் சமூக வரலாற்றின் இன்னொரு அத்தியாயத்தைச் சேர்ந்தவை; விக்டோரியா இங்கிலாந்தின் காலத்துக்கும் சூழ்நிலைக்கும் அப்பாற்பட்டவை.

விக்டோரியாவின் ஆட்சி முடிவுற்றபொழுதும், அந் நூற்றாண்டு சென்று மறைந்தபோதும்கூடக் கிராமப்புறத்து

'நிலமானியச்' சமுதாயம் இன்னமும் உயிரோடுதானிருந்தது; ஆயினும், ஜனநாயகமானது கிராமப்புறத்து இங்கிலாந்திலும் பரவும் அறிகுறிகளும், நகரத்துச் சக்திகளும் கருத்துகளும் கிராமத்து வாழ்வில் புகும் அறிகுறிகளும் காணப்பட்டன; இவ்வாறு மாறிவரும் ஒரு சூழலில் அச் சமுதாயம் இருந்தது; அடுத்ததலைமுறையில் மோட்டார்ப்போக்குவரத்து ஏற்பட்டது. உடனே கிராமத்தின்மீது நகரத்தின் படையெடுப்பு துரிதமாக, தடுக்க முடியாதபடி நடைபெற்றது; இங்கிலாந்து முழுவதுமே ஒரு புறநகர்ப் பகுதியாக (suburb) மாற்றப்பட்டது. ஆனால் விக்டோரியா இறந்த சமயத்தில் (1901) இந்த வளர்ச்சி இவ்வளவு தூரம் பரவவில்லை; கிராமத்துச் சந்துகளும் சாலைகளும் இன்னமும் அப்படியேதான் இருந்தன; பல நூற்றாண்டுகளை வென்ற அவைகளின் நித்திரை கலையாத சோபை குன்றிப்போகவில்லை; நகரத்து சைக்கிள் பிரயாணிகள் அவ்வழகை இன்னும் கண்டு ரசித்து வந்தார்கள். சிறிதும் பெரிதுமான 'நாட்டுப்புற இல்லங்கள்' (country houses) தமது வேட்டைகளையும் நகரத்து விருந்தினர்களையும் பெற்று இன்னமும் வளத்தோடு திகழ்ந்தன; ஆங்கில விவசாயமும் இன்னும் பண்ணை முறையிலேயே (estate system) அமைந்திருந்தது.

ஆயினும், இந்த நாட்டுப்புற இல்லங்களும் பண்ணைகளும் முன்புபோல் குத்தகைகளைமட்டும் நம்பியிருக்க முடியவில்லை; அமெரிக்கத் தானிய இறக்குமதியால் குத்தகைகள் குறைந்து, செலுத்தப்படாமல் பாக்கியும் நின்றது. நாட்டுப்புற இல்லங்களின் இன்பவாழ்வும் பண்ணைவேலைகளும் தமது எஜமானன் தொழிலிலிருந்தும் வேறு முதலீடுகளிலிருந்தும் பெற்ற வருமானத்தைக்கொண்டு நடந்துவந்தன; அல்லது தூரத்துப் பட்டணங்களில் வீட்டுமனைச் சொந்தக்காரன் (ground landlord) என்ற வகையில் அவனுக்கு வந்த வருவாயைக்கொண்டு நடந்து வந்தன. அவன் இன்னமும் ஒரு நாட்டுப்புறக் கனவானாகவே இருந்து வந்தான்; ஆயினும் வேறுவகைத் தொழில்களிலும் ஈடுபட்டு அவன் தனது செலவு மிக்க வாழ்வை வாழ்ந்து வந்தான். ஏனென்றால் தன் சொந்தக் கால்களிலேயே நிற்கக்கூடிய ஒரு தொழில் என்ற வகையில் பிரிட்டிஷ் விவசாயம் ஏற்கெனவே வீழ்ந்து விட்டது.

இந்தச் சூழ்நிலைகளில் பண்ணைமுறையானது 'நிலமானிய முறையைச்' (feudal) சேர்ந்ததாக இருந்தாலும், கிராமப்புறங்களில் அது எங்கும் காணப்பட்டது; ஏனென்றால் அழிந்து

வரும் விவசாயத்தைத் தாங்குவதற்காக அது தொழிலுலகத்திலிருந்து பணத்தைக் கொண்டுவந்தது; மேலும் கனவான்களும் அவர்களது குடும்பத்தினரும் கிராமப்புறத்து வாழ்வில் கல்வியையும் நட்புடன் கூடிய தலைமைப் பதவியையும் கொண்டுவந்தனர்.

புதிய நூற்றாண்டின் தொடக்கத்தில் மோட்டார்கள் தோன்றுமுன்பேயே பண்டைக் கிராமவாழ்வானது செய்தித் தாள்கள், கருத்துகள், பிரயாணிகள், புதிய குடித்தனக்காரர்கள் ஆகியவைகளைப் பட்டணத்திலிருந்து பெற்று, அப் பட்டணத்தின் புறநகர்ப் பகுதிகளைப்போல் ஓரளவு ஆகி விட்டது. விக்டோரியா ஆட்சியின் நடுப்பகுதியில் ஜன நாயக நகரத்தையும் 'நிலமானிய' கிராமத்தையும் முரண் படுத்திக் காட்டினார் ட்ரோலோப் (Trollope). ஆனால் அந் நூற்றாண்டின் இறுதியில் இம் முரண்பாடுகள் குறைந்து விட்டன. 1870-ம் ஆண்டுக் கல்விச் சட்டத்தினால் (Education Act) அடுத்த தலைமுறையைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளியும் அவன் மனைவிமக்களும் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர். ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால் கிராமப் புற வாழ்வில் அக்கறையையும் ஆசையையும் அவர்களிடம் வளர்ப்பதற்கு இந்தச் சக்தியானது பயன்படுத்தப்படவில்லை. இப் புதிய கல்வியை வகுத்தவர்களும் மேற்பார்வை செய்தவர்களும் நகரத்து மனிதர்கள்; இதன் நோக்கம் குமாஸ்தாக்களை உற்பத்திசெய்வதுதானே ஒழிய, விவசாயிகளை உற்பத்திசெய்வது அன்று. விக்டோரியா இறப்பதற்கு முன்னரேயே கிராமத்து மதுக்கடையிலும் கூரை வீட்டிலும் Daily Mail வாசிக்கப்பட்டது. தனிப்பட்ட தன்மைகளைக் கொண்டிருந்த கிராமப்புறத்து மனப்பாங்கில் நகரத்து வாசனை புகுந்தது; கிராமத்து மரபுகளும் வழக்குகளும் தேய்ந்து தேச முழுவதுக்குமான பொது இயல்புகள் தலை தூக்கின.

அரசியல் துறையிலுங்கூட நகரமும் கிராமமும் ஒன்று பட்டன. 1884-ல் விவசாயத் தொழிலாளிக்குப் பாராளுமன்றத் தேர்தலில் வாக்குரிமை வழங்கப்பட்டது; 1867-ல்இதே உரிமை நகரத் தொழிலாளிக்கு வழங்கப்பட்டதே ஒழிய விவசாயத் தொழிலாளிக்கு அன்று. இப்பொழுது குடியான வனையும் நிலப்பிரபுவையும்பற்றிக் கவலைப்படாமல் தான் நினைத்தபடி வாக்களிக்க இவனால் முடியும். 1885-ல் புதிய வாக்குரிமை மசோதாவின்படி (Franchise Bill) நடத்தப்

பட்ட முதல் பொதுத்தேர்தலில் இது நிரூபிக்கப்பட்டது. அச் சமயத்தில் பரோக்கள் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஓட்டளித்தன; ஆனால், கவுண்டிகளோ எதிர்பார்க்காத முறையில், கனவானையும் குடியானவனையும் மதியாமல் லிபரல் கட்சிக்கு ஓட்டளித்தன. இத்தனை நூற்றாண்டுகளாக ஆங்கிலேயக் கிராமவாழ்வின்மீது கனவான் நடத்திவந்த ஆட்சியானது பாராளுமன்றத் தேர்தல்களைப் பொறுத்தவரை முடிவுக்கு வந்துகொண்டிருந்தது. அடுத்தபடியாகக் கவுண்டிகளின் தல ஆட்சிமுறையும் தேர்தலின் அடிப்படையில் அமைய வேண்டியதுதான்; இதை யாரும் தடுத்த நிறுத்த முடியாது.

ஆகவே, 1888-ம் ஆண்டில் தலஆட்சிச் சட்டம் வகுக்கப் பட்டது. இதன்படிக் கிராமங்களில் நிர்வாக ஸ்தாபனங்களாக அமைக்கப்பட்டவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுண்டிக் கவுன்சில்கள்; அமைதி காக்கும் நீதிபதிகள் (Justices of the Peace) தமது பழைய நிர்வாகப் பொறுப்புகளை இழந்து, வெறும் மாஜிஸ்டிரேட்டுகளாக நீதிபரிபாலனம் மட்டுமே இனிச் செய்தனர். அவர்களது நிர்வாக அதிகாரங்களை மேற்கொண்ட கவுண்டிக் கவுன்சில்கள் சில ஆண்டுகளுக்குப் பிறகு மேலும் பலப்படுத்தப்பட்டன; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர, கிராமப்புற மாவட்டக் கவுன்சில்கள் (Urban and Rural District Councils) நிறுவப்பட்டன. இவ்வாறுக, 1835-ம் ஆண்டு நகரசபைச் சீர்திருத்தச் சட்டமானது (Municipal Reform Act) பரோக்களில் ஜனநாயக ஸ்தல ஆட்சியை நிறுவியபின் ஐம்பது ஆண்டுகள் கழித்துக் கிராமப்புறங்களிலும் அதே கோட்பாடானது அமுலாக்கப் பட்டது. அமெரிக்காவின் போட்டி, உணர்வுப் பண்டங்களின் விலைவீழ்ச்சி ஆகியவை காரணமாக ஆங்கில விவசாயம் அழியத் தொடங்கிய பின்னரே விவசாயத் தொழிலாளிக்குப் பாராளுமன்றத் தேர்தலிலும் தல ஆட்சித் தேர்தலிலும் வாக்குரிமை அளிக்கப்பட்டது, விதியின் விளையாட்டுதான். கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளிகள் இனியும் தங்கியிருப்பார்களேயானால் தல ஆட்சியில் அவர்கள் பங்குகொள்ள முடியும்; ஆனால், அவர்கள் நகரங்களை நோக்கிப் படையெடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

1835-ம் ஆண்டு நகரசபைச் சீர்திருத்தச் சட்டம் மிகச் சில நகரங்களையே பாதித்தது; ஆனால், 1888-ம் ஆண்டின்

தல ஆட்சிச் சட்டம் இங்கிலாந்து முழுவதிலும் இந்த நகர சுயாட்சி முறையைப் புகுத்தியது.

1835-ம் ஆண்டுச் சட்டத்தைக் கொண்டுவந்தவர்கள் தலைநகரத்தின் ஆட்சியை விட்டுவிட்டார்கள்; அகன்ற இலண்டன் (greater London)–அதாவது பழையநகர எல்லைக்கு வெளியிலமைந்த இலண்டன் முழுவதும் – எந்தவிதமான நிர்வாக ஐக்கியமும் இன்றி விடப்பட்டது. ஐம்பதாண்டு களுக்குப் பின்னருங்கூட அதன் நிர்வாகத்தில் பல நிறுவனங் கள் ஒரு குழப்பமான வகையில் ஒன்றுக்கொன்று முரணான முறையில் அங்கு வசித்த ஐம்பது லட்சம் மக்களை ஆண்டன. 1888–ல் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டம் இந்தக் குழப் பத்தை அகற்றியது. இலண்டன் கவுண்டிக் கவுன்சிலை அது ஏற்படுத்தியது. இந்தக் கவுன்சில்தான் இலண்டன் நகரத்தை —பழைய இலண்டன் பகுதி நீங்கலாக மற்றப் பகுதிகளை— இன்றுவரை ஆண்டு வருகிறது. பழைய இலண்டன் பகுதி மேயர்ப் பிரபுவாலும் ஆல்டர்மன்களாலும் நிர்வகிக்கப்பட்டு ஒரு வரலாற்று நினைவுச் சின்னமாகத் தனித்து நிற்கிறது. அந்நியர்கள் இலண்டனின் மேயர்ப் பிரபுவைக்காண வரு கிறார்கள். ஆனால் இலண்டன் நிர்வாகத்தின் தலைவர் அதன் கவுண்டிக் கவுன்சிலின் தலைவர்தான்.

இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட இலண்டன் கவுண்டிக் கவுன்சில் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு, தனது முதல் இருபதாண்டுகளிலேயே சமூக மேம்பாட்டுக்கான பல புதிய திட்டங்களை அமுலாக்கியது. அதேபோல் இலண்டன் பள்ளிக் குழுவும் (London School Board) இதே காலத்தில் கல்வித் துறையில் பல அருமையான சோதனைகளைச் செய்தது; 1902-ல் இயற்றப்பட்ட கல்விச்சட்டம் (Education Act) இக் குழுவின் நடவடிக்கைகளை இலண்டன் கவுண்டிக் கவுன்சி லின் நிர்வாகத்திடம் ஒப்படைத்தது. இதுவரை பின்தங்கி யிருந்த இலண்டன் தல சுயாட்சியின் இந்த முன்னேற்றத்துக் குக் காரணம் புரோகிரஸிவ் கட்சி (Progressive party); இது அடுத்தடுத்துப் பல தேர்தல்களில் கவுன்சிலில் பெரும் பான்மை ஸ்தானங்களைக்கைப்பற்றியது. லிபரல் கட்சியுடனே அல்லது தொழிற்கட்சியுடனே (Labour party) தன்னை முழுமையாகச் சேர்த்துக் குழப்பிவிடாமலிருக்கும் பொருட்டு இது புரோகிரஸிவ் கட்சி என்ற பெயரை வைத்துக் கொண் டது. ஆயினும் அவ்விரு கட்சிகளுடனும் இதற்கு நெருங்கிய உறவு இருந்தது. இது நகரசபை விவகாரங்களுக்காகவே இருந்தது. எனவே பாராளுமன்றத் தேர்தலில் கன்சர்வேடிவ்

கட்சிக்கு வாக்களித்தவர்களும்கூட, கவுண்டிக் கவுன்சில் தேர்தலில் புரோகிரஸிவ் கட்சிக்கு வாக்களிக்க முடியும். பொதுவாக ஒன்பதாவது பத்தாண்டின் இலண்டன் வாக்காளர்கள் தமது தேச அரசியலில் பழமையை விரும்புபவர்களாகவும் ஏகாதிபத்தியவாதிகளாகவும் இருந்தனர்; ஆயினும் தமக்கும் தமது நகரத்துக்கும் ஜனநாயக, சமூக அபிவிருத்திகளை அவர்கள் விரும்பினர். நகர மேம்பாட்டைப் பொறுத்தவரை முற்போக்கான கொள்கை படைத்திருந்த இந்த இலண்டனில்தான் பேபிய சங்கம் (Fabian Society) செழித்து வளர்ந்தது; இச்சங்கத்தின் கொள்கைகளைப் பிரசாரம் செய்த அறிஞர்களாகிய சிட்னிவெப் தம்பதிகள் (Sidney Webbs), கிரஹாம் வாலாஸ் (Graham Wallas) ஆகியோர் புரோகிரஸிவ் கட்சியின் இலண்டன் நகராட்சியுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தனர். ஆயினும் பொதுமக்களிடையில் மிகவும் செல்வாக்குப்பெற்று விளங்கியவர் ஜான் பர்ன்ஸ் (John Burns); தொழிற்கட்சிக்கும் லிபரல் கட்சிக்கும் ஏற்பட்டுவந்த இணைப்பை இவர் பிரதிநிதித்துவப்படுத்தினர். 'இலண்டன் நகரைப்' பற்றிய பழைய பெருமிதஉணர்வு அந் நகரின் பழைய எல்லைகளுக்குள்ளேயே நின்று இப்பொழுது சுருங்கிவிட்டது; கடந்த காலத்தைப் பற்றிய ஒரு பெருமை மிக்க நினைவாக அது இப்பொழுது ஆகிவிட்டது; அதற்கு மாறாக இலண்டன் நகரப்பற்றை (London patriotism) உருவாக்கி அதைப் பரப்பிய முதல்மனிதர் பட்டர்சீயைச் சேர்ந்த (Battersea) ஜான் பர்ன்ஸ்.

விக்டோரியா ஆட்சியின் கடைசிப் பத்தாண்டில் சுகாதாரம், விளக்கு, போக்குவரத்து, பொதுநூல்நிலையங்கள், பொதுக்குளியலறைகள் ஆகிய துறைகளிலும், ஓரளவு வீடுகள் கட்டுவதிலும் நகரங்களில் இவ்வாறு துரித முன்னேற்றம் ஏற்பட்டு வந்தது. இந்த விஷயத்தில் முன்மாதிரியாக விளங்கியது ஏழாவது பத்தாண்டில் ஜோசப் சேம்பர்லினின் (Joseph Chamberlain) தலைமையின்கீழ் இயங்கிய பர்மிங்ஹாம் (Birmingham) நகராட்சி; இருபதாண்டுகளுக்குப் பிறகு இவ்வுதாரணத்தை இலண்டன் கவுண்டிக் கவுன்சிலும், பிறகு மற்ற நகரசபைகளும் பின்பற்றின. தல வரிகள் போதாமையால் மத்திய அரசாங்கமும் உதவித் தொகைகள் (grants) அளித்து நகரமக்களின் வாழ்வை மேம்படுத்த ஒத்துழைத்தது; ஒரேஒரு நிபந்தனை என்னவென்றால் அரசாங்க இன்ஸ்பெக்டர்கள் அந் நகரசபைகளின் பணி

கலைப்பற்றி நல்ல சாதகமான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் உதவியுடன் நடைபெற்ற இந்த நகர சபைச் சீர்திருத்தம் சமூகவாழ்வு அடியோடு நிலைகுலைந்து போவதைத் தடுத்து நிறுத்தியது. விக்டோரியாக் காலத்தின் முன்பகுதியில் நகரங்களில் காணப்பட்ட பெரிய இறப்பு வீதம் வேகமாக வீழ்ச்சியுற்றது; வாழ்வதற்கு ஏற்றவையாக நிலைமைகள் திருந்தின; ஆரம்பக்கல்வி கட்டாயமாயிற்று. ஆயினும், இருபதாம் நூற்றாண்டு உதித்தபொழுது எல்லா வகையிலும் போற்றத்தக்க நகரங்களையே பத்தொன்பதாம் நூற்றாண்டின் வாரிசாக அது பெற்றது என்று கூறமுடியாது. தற்கால நவீன நகரமானது திட்டம் ஏதுமின்றி வளர்ச்சி யுற்று, வடிவமோ அமைப்போ இன்றித் திகழ்கிறது; மனிதனின் உணர்வுகளைச் சாகடிக்கூடிய ஒரு சிறைச்சாலை அது. நமது தீவின் பழைய கிராமவாழ்வும் பண்டைக்கால ஐரோப்பிய நகரவாழ்வும் கண்களின் மூலமாகக் கற்பனைக்கு உயிரூட்டின; ஆனால், இன்றைய இங்கிலாந்தின் நகர, நகர்ப்புற வாழ்வில் அந்தச் சிறப்புக் கிடையாது. தம் நகரம் பற்றிய பெருமித உணர்வு, நகராட்சியில் போட்டி ஆகியவை இன்று வடக் கத்தியத் தொழில் நகரங்களில் காணப்படுகின்றன; இவை எல்லாம் அன்றுட லௌகீக வாழ்வைப் (material life) பற்றி யவைதாமே யொழியக் கலையுணர்வைப்பற்றியவை யல்ல. வாழ்வில் கண்ணுக்கு இனிமைதரும் அம்சங்களில் அழகு அல்லது மகிழ்ச்சியை உண்டாக்க நாம் முயற்சி செய்தாலும் கூட மண்டிக்கிடக்கும் கரும் புகையும் குப்பைக் கூளமும் அம் முயற்சியைத் தோற்கடித்துவிடப் போது மானவை.

புதிய நகரங்கள் ஏதென்ஸ், ரோம், பெருகியா (Perugia), நூரம்பர்க் (Nuremberg), டியூடர் காலத்து இலண்டன், மற்றும் ஆயிரக்கணக்கான பல பண்டை நகரங்களைப் போல் அல்லாமல் மிகவும் பெரியவையாயிருந்தன; எனவே அவை முழுவதிலும் ஓர் ஒற்றுமையோ அல்லது ஒரு மித்த தன்மையோ கிடையா; அவை முழுவதையும் ஓரிடமிருந்து கண்ணால் காண்பதுவும்முடியாது. ஆனால், மேற் சொன்ன அப்பண்டைய நகரங்களை அவ்வாறு காணவும், கண்டு நேசிக்கவும் முடிந்தது. மேலும், விக்டோரியாக் காலத்து நகரங்களில் எந்தவிதமான நகரமைப்புத் திட்டமும் இல்லாதது நிலைமையை இன்னும் மோசமாக்கிற்று. தமது சொந்த இலாபத்துக்கு எது ஏற்றதோ அந்த முறைப்படி

நவீன இங்கிலாந்தைக் கட்டி நிர்மாணிக்கும்படி வாடகை வீட்டுச் சொந்தக்காரர்களையும் ஊக வாணிபத்துக்காக வீடு கட்டுவோரையும் அரசாங்கம் அனுமதித்திருந்தது; வீட்டினுள் தேவையான வசதிகள், பொதுநலம் ஆகிய வற்றைப் பற்றிக்கூடப் பல சமயங்களில் அரசாங்கம் கவலைப் பட்டதில்லை.

மிகவும் விசாலமான இலண்டனிலும் மற்ற நகரங்களிலும் பிள்ளைகள் விளையாடுவதற்கு வேண்டிய காலி இடங்களே கிடையா; பள்ளிக்கூட முற்றத்தைவிட்டால் அவர்களுக்கு விளையாடுவதற்குக் கடினமான, அருவருப்பான, அழுக்கு நிறைந்த தெருக்கள்தாம் இருந்தன. இலட்சக்கணக்கான மக்கள் இயற்கையோடு அணுவளவும் சம்பந்தமின்றி வாழ்ந்தனர்; அதேபோல் கண்ணியம், அழகு, சிறப்பு ஆகியவைகளிலிருந்தும் அறவே தொடர்பற்று வாழ்ந்தனர்; வசதிமிக்க மக்கள் வாழ்ந்த நகர்ப்புறப் பகுதியாக (suburb) இருந்தாலும் சரி, சேரிப்புறமாக இருந்தாலும் சரி தாங்கள் வளர்ந்த எளிய தெருக்கள்தாம் அவர்களுக்கு எல்லாம். புதிய கல்வியும் புதிய பத்திரிகை உலகும் இந்தச் சுற்றுப்புறங்களின் விளைவுகள்தாம்; இவைகளின் தன்மையைத்தான் அவை பெற்றிருந்தன. இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்த மனித இனம் பல உரமிக்க சிறந்த பண்புகளைப் பெற்றிருக்கலாம்; நல்ல உணவும் உடையும் பெற்று உடலையும்கூட அபிவிருத்தி செய்யலாம். புத்திக் கூர்மையையும், வாழ்வில் அஞ்சாமை, மகிழ்ச்சி, நகைச்சுவை ஆகியவைகளையும் கூடப் பெறலாம். ஆயினும், அதன் கற்பனை சக்திகள் (imaginative powers) கட்டாயம் குறையும்; எல்லா மனிதர்களும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்களைப்போல் ஒத்த பண்பு, ஒத்த திறமை முதலியவற்றையே கொண்டவர்களாக இருப்பார்கள்; இவைகளுக்குத் தேவையான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

பிந்திய விக்டோரியாக் காலத்து மக்கள் தங்களது துன்பங்களைச் சமாளிக்கச் சக்தியற்றிருந்தாலும்கூட அதை உணர்ந்துகொள்ளத் தொடங்கியிருந்தனர். தங்களது தந்தையர்கள் முன்பு கண்டு பெருமைப்பட்ட தொழில் நாகரிகத்தைப்பற்றிய ஒரு வெறுப்பை இளம் எழுத்தாளர்களிடையிலும் சிந்தனைவாதிகளிடையிலும் ரஸ்கின் தூண்டினார். வரலாற்றை அவர்கள் பின்னோக்கிப் பார்க்கின்றனர்; நவீன இலங்காஷயரைவிட அழகிய உலகைத் தாம் காண்பதாக அவர்கள் எண்ணினர்; 1868-ம் ஆண்டிலேயே தமது The

Earthly Paradise என்ற கவிதையின் பதிகத்தில் (Prologue) வில்லியம் மோரிஸ் (William Morris) கீழ்வருமாறு எழுதியிருந்தார்:

புகைமண்டிக் கிடக்கின்ற ஆறுகவுண்டியின்
அசுத்தத்தை அருவருப்பை மறந்துபோவோம்;
நகர்கின்ற பிஸ்டனும் பாய்ந்துசீறும்
நீராவி இவைகளையும் மறந்து போவோம்;
அழகிலாநகர் வளர்ச்சிதனை மறந்து
புல்வெளியில் பொதிகுதிரைதனை நினைப்போம்.
மனக்கண்ணில் தூய, சிறு லண்டன் காண்போம்;
தெள்ளியதேம்சும் அதன்கரைக் காவும் காண்போம்.

ஆயினும், திரும்பிச்செல்வது என்பது இனிக்கற்பனையில்தான் சாத்தியமே ஒழிய உண்மையில் முடியாது.

1870-ம் ஆண்டானது கல்வியில்—எனவே, சமூக வரலாற்றில்—ஒரு திருப்பு மையம். கல்வி என்பது தேசத்துக்கு இன்றியமையாதது; இதை எல்லா அரசியல்வாதிகளும் ஏற்றுக்கொண்டனர். அதுமட்டுமின்றி கல்விதான் பல்வேறு சமயப் பிரிவினருக்கும் பிரதான போர்க்களமாக விளங்கியது. டிஸ்ஸென்டர்களுக்கோ அல்லது நிறுவப்பட்ட திருச்சபைக்கோ எல்லாவிதத்திலும் ஏற்புடைய ஒரு தேசீயக் கல்வித்திட்டத்தை வகுத்து, அரசாங்கச் செலவில் அதை அமுல் நடத்துவதைப்பற்றி விக் அரசியல் நிபுணர்களோ அல்லது டோரி அரசியல் நிபுணர்களோ எண்ணிப் பார்க்க முடியவில்லை; மத்திய விக்டோரியாக் காலத்தில் ஆங்கிலேயக் கல்வி பின்தங்கி யிருந்ததற்கு இதுதான் முக்கியமான காரணம். எல்லா அரசாங்கங்களும் தொடுவதற்கே அஞ்சிய இப் பிரச்னையை 1870-ல் கிளாட்ஸ்டன் தைரியத்துடன் தீர்த்து வைக்க முன்வந்தார். தத்தம் மக்களிடமிருந்து நன்கொடைகள் பெற்று ஏராளமான தொண்டர்பள்ளிகளைப் (Voluntary Schools) பல சமயப் பிரிவினரும் நாடு முழுவதிலும் ஏற்கெனவே அமைத்திருந்தனர்; ஆனால், சமயப் பிரிவுகளின் இந்தப் போட்டிஆர்வம் இரண்டு அரசியல் கட்சிகளையும் அஞ்சச்செய்து, ஒரு தேசீய விவகாரம் என்ற முறையில் கல்விப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குத் தடையாய் விளங்கியது.

மக்களுக்கு ஆரம்பக்கல்வி அளித்தவை இத் தொண்டர் பள்ளிகள்தாம் (Voluntary Schools). கிட்டத்தட்ட இவைகள் அனைத்துமே திருச்சபைக் கோட்பாடுகளின்படி நடத்தப் பட்டன. இவைகள் தேசீயப்பள்ளிகள் (National Schools)

என்றும் அழைக்கப்பட்டன; ஏனெனில் இவைகளை (ஆங்கிலிக) தேசீயச் சங்கம் (National Society) நிறுவியிருந்தது. 1833-ம் ஆண்டுமுதல் ஒரு சின்னஞ்சிறு உதவித்தொகை(grant) மூலம் அரசாங்கம் இப்பள்ளிகளுக்கு உதவிசெய்து வந்தது. 1870-ம் ஆண்டு கிளாட்ஸ்டனின் மசோதாவுக்கு மூலகாரணம் W. E. பார்ஸ்டர் (W. E. Forster). இவர் குவாக்கர்கள் குடும்பத்தில் பிறந்தவர்; நிறுவப்பட்ட திருச்சபைக்காக முழுமூச்சோடு உழைத்தார். நிறுவப்பட்ட திருச்சபைப் பள்ளிகளுக்கும் (Church Schools) ரோமன் கத்தோலிக்கப் பள்ளிகளுக்கும் அளிக்கப்பட்டுவந்த அரசாங்க உதவித்தொகை பார்ஸ்டரின் மசோதாவினால் இரட்டிப்பாக்கப்பட்டது. புதிய கல்வி அமைப்பின் நிரந்தர உறுப்புகளாக இவை ஆவதற்கு இது உதவியது. அதேசமயம் பள்ளிகளின் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ்ப் பல பள்ளிகளையும் அது துவக்கியது. இந்தப் புதிய பள்ளிகள் போர்டு பள்ளிகள் (Board Schools) என்று அழைக்கப்பட்டன. தலவரிகளைக்கொண்டு (Local Rates) இவை நடத்தப்படும்; பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி போர்டுகள்(School Boards)இவற்றை நிர்வகிக்கும். பழைய தொண்டர் பள்ளிகள் பெரும்பாலானவற்றில்—அதாவது தேசீயப்பள்ளிகள் அனைத்திலும்—திருச்சபை போதனை (Church Teaching) தொடர்ந்து நடைபெறும். ஆனால் புதிய போர்டு பள்ளிகளில் எந்த ஒரு சமயப் பிரிவையும் சேர்ந்த கொள்கைகளைச் சமய போதனையில் பயன்படுத்துவது சட்டத்தினால் தடை செய்யப்பட்டது.

இவ்வாறு கிராமங்களிலிருந்த நிறுவப்பட்ட திருச்சபைப் பள்ளிகளை (Church Schools) அரசாங்கம் நிரந்தரமாக்கி விட்டது என்றும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரேஒரு பள்ளி தான் இருக்கிறதென்றும், அதற்குமட்டுமே எல்லாக் குழந்தைகளும் செல்லவேண்டியிருக்கும் என்றும் டிஸ்ஸென்டர்கள் குறைப்பட்டுக் கொண்டனர். நகரங்களில் திருச்சபைப் பள்ளிகள், தொண்டர் பள்ளிகள் ஆகிய இரண்டுமே காணப்பட்டன. வேறு போட்டிப்பள்ளிகள் இல்லாத கிராமங்களில் மட்டுமே பெரும்பாலும் திருச்சபைப் பள்ளிகள் காணப்பட்டது துரதிருஷ்ட வசம்தான். இன்று (1941) வரை இந்த நிலைதான் காணப்பட்டது; ஆனால் 1870-ல் இது வெறுக்கப்பட்டதைப்போல் அவ்வளவு அதிகமாக இன்று வெறுக்கப்படவில்லை; இதற்கு ஒரு காரணம். டிஸ்ஸென்டர்களுக்கும் நிறுவப்பட்ட திருச்சபையினருக்குமிடையிலான விரோத உணர்வு இன்று வெகுவாகக் குறைந்துபோயுள்ளது; மேலும்

1902-ம் ஆண்டு பல்போரின் சட்டம் (Balfours Act) கவுண்டிக் கவுன்சில்களைப் பொதுக்கல்வி அதிகாரிகளாக நியமித்து, நிறுவப்பட்ட திருச்சபைப் பள்ளிகளை அவைகளின் கட்டுப் பாட்டின்கீழ்க் கொண்டுவந்துவிட்டது; இதுவும் ஒரு காரணம்.

1870-ம் ஆண்டுச் சமய சமரசத்தின்படி ஒருவழியாகக் கட்டாய ஆரம்பக் கல்விமுறை யொன்று இங்கிலாந்தில் அமுலாக்கப்பட்டது. இம்முறைமட்டும் அப்பொழுது இல்லாமலிருந்திருந்தால் நவீன நாடுகளிடையில் ஒரு பின் தங்கிய நிலையை இங்கிலாந்து அடைந்துவிட்டிருக்கும். 1870-க்கும் 1890-க்குமிடையில் பள்ளிப்பிள்ளைகளின் தொகை ஒன்றேகால் மில்லியனிலிருந்து நான்கரை மில்லியனாக உயர்ந்தது; அதேசமயம் ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்விக் காகச் செலவிடப்பட்ட பணம் இரட்டிப்பாயிற்று.

ஆயினும் இடைத்தரக் கல்வி (Secondary Education) விஷயத்தில் அரசாங்கம் இன்னும் ஒன்றும் செய்யவே யில்லை; [1] அதேபோல் மிகச்சிறந்த ஆரம்பப் பள்ளி மாணவர் கள் பல்கலைக் கழகப் படிப்பை மேற்கொள்வதற்கான போதிய பள்ளி உபகாரச் சம்பளங்களும்கூட, அப்பொழுது கிடையா. புதிய பள்ளிப் போர்டுகளின் பொறுப்பு ஆரம்பக் கல்வி மட்டும்தான். 1870-ம் ஆண்டுச்சட்டத்தின்படி பொது மக்களின் வரிப்பணம் எந்தவிதமான இடைத்தர அல்லது உயர்தரக் (Higher) கல்விக்கும் செலவிடப்பட முடியாது என்று 1900-ல் பிரசித்திபெற்ற காக்கர்டன் தீர்ப்பில் (Cockerton Judgment) நீதிமன்றங்கள் முடிவுசெய்தன.

பள்ளிப் போர்டு நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்ட பிரதேசத் தின் பரப்பளவு மிகவும் குறைவாயிருந்தது அச்சட்டத்தின் மற்றொரு குறைபாடு. ஒவ்வொரு பள்ளிப் போர்டின் பொறுப் பும் ஒரு நகரம் அல்லது கிராமத்துடனேயே நின்றுபோயிற்று; இதனால் அதற்கு ஒரு பரந்த கல்விக் கண்ணோட்டம் இருக்க வழியில்லை. எனவே, அதன் குறுகிய அக்கறையினால், நிறுவப் பட்ட திருச்சபைக்கும் டிஸ்ஸென்டர் பிரிவுக்கும் ஏற்கெனவே இருந்த பகைமை மேலும் தீவிரமடைந்து, தனிநபர் பகைமையாக உருவெடுத்தது.

[1] '1899-ல் இங்கிலாந்தில் இடைத்தரக் கல்விக்காகச் செலவிடப்பட்ட பொதுப்பணம் தலைக்கு மூன்று பார்த்திங்குகள்தாம்; ஆனால், ஸ்விட்சர்லந்தில் ஒரு ஷில்லிங், ஒரு பென்னி, மூன்று பார்த்திங்குகள் செலவிடப் பட்டன.'-Bernard Allen's Sir Robert Morant, பக். 141.

1870-ம் ஆண்டுச் சட்டத்தின் இக் குறைபாடுகள் 1902-ல் பல்போரின் கல்விச் சட்டத்தினால் நிவர்த்தி செய்யப்பட்டன; இச்சட்டத்துக்குக் காரணமாயிருந்தவர் பொதுமக்கள் ஊழிய ராக விளங்கிய சர் இராபர்ட் மோரன்ட் (Sir Robert Morant) என்ற அந்த மாமனிதர்தாம். இச்சட்டம் பள்ளிப் போர்டுகளை அகற்றி, ஆரம்பக் கல்வியையும் இடைத்தரக் கல்வியையும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுண்டிக் கவுன்சில்களிடமும், சில பெரிய பரோக் கவுன்சில்களிடமும் ஒப்படைத்தது. இதுதான் இன்றைய நமது கல்வி அமைப்பு. இக்கவுன்சில்கள் தங்களது கல்விக் கமிட்டிகளைக்கொண்டு (Education Committees) தங் களது கல்விப்பணியை ஆற்றுகின்றன. இந்தக் கவுண்டிக் கல்விக் கமிட்டிகள் பரந்த பிரதேசங்களுக்குப் பொறுப்பு வகிக்கின்றன; விரிந்த கண்ணோட்டத்தையும் கொண்டுள் ளன; இவை காரணமாக ஏற்படும் பெரும் அபிவிருத்திகளி னால் ஆரம்பக் கல்வியும், அதைவிட அதிகமாக இடைத்தரக் கல்வியும் பெரிதும் பயனடைந்துள்ளன; பல்கலைக் கழகங் களுக்கு இட்டுச் செல்லும் ஒரு நல்ல பாதையையும் பல் போரின் மசோதா உருவாக்கியது.

1870லும் 1902லும் இயற்றப்பட்ட கல்விச் சட்டங்கள் இல்லாமலிருந்திருந்தால் பின்னர் வந்த இயந்திர, ஸ்தாபன காலத்தில் இங்கிலாந்து போட்டியிட்டிருக்க முடிந்திருக்காது; அதன் மக்கள் கல்விவாசனையறியாத ஒரு நகர அநாகரிகத் தில் உழன்றுகொண் டிருந்திருப்பார்கள்; பண்டைய கல்வி யற்ற கிராமச் சமுதாயத்தைவிட படுமோசமானதொரு சமு தாய அமைப்பாக அது இருந்திருக்கும். ஏனெனில், அந்தப் பழைய கிராமச்சமுதாயத்தில் வாழ்ந்த விவசாயிகள், கை வினைஞர்கள் (craftsmen) ஆகியோரின் அறிவும் இயல்பும் இயற்கையின் தொடர்பு, விவசாய வாழ்வு, பழைய கற்றுக் குட்டி முறை (apprenticeship) ஆகியவற்றால் உருவாக்கப் பட்டன.

நமது இன்றைய மக்கள் கல்விமுறையானது இன்றியமை யாததாயிருந்தது; அதனால் நாட்டுக்குப் பெரு நன்மைகள் பல விளைந்துள்ளன. ஆயினும், சில முக்கியமான விஷயங்களில் அது நமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. நகரத்தில் உரு வாக்கப்பட்ட ஒரு திட்டமாக அது இருப்பதால் கிராமத்துத் தேவைகளை அதனால் நிறைவேற்ற முடியவில்லை; அத்தேவை களின் தனித்தன்மையைக் கல்வி போர்டினால் (Board of Education) புரிந்து கொள்ள முடியவில்லை. கிராமத்திலிருந்து மக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அதை

அது துரிதப்படுத்திவிட்டது. இன்னும் பொதுவாகச் சொல்லப்போனால் வாசிக்கும் திறமைபெற்ற, ஆனால் வாசிப்பதற்கு எது அருகதையுடையது என்பதை உணர்ந்துகொள்ளும் திறமையற்ற ஒரு வாசகர்கடலை அது உருவாக்கிவிட்டது; இதனால், அவ்வாசகர்கள் உணர்ச்சியும் பரபரப்பும் ஊட்டும் நூல்களுக்கும் போலிவாதங்களுக்கும் அடிமையாகிவிட்டார்கள். இதன் விளைவாக 1870-க்குப்பிறகு இலக்கியம், பத்திரிகைகள் ஆகிய இரண்டுமே பெருமளவில் தரமிழந்து போயின. ஏனெனில், அரைப்படிப்பும் கால்படிப்பும் பெற்ற இலட்சக்கணக்கான மக்களுக்காக அவை இப்பொழுது எழுதப்படுகின்றன; இவர்களின் முன்னோர்களோ தமக்கு எழுதப் படிக்கத் தெரியாத காரணத்தால் செய்தித்தாள்களையும் நூல்களையும் விலைகொடுத்து வாங்கவில்லை. சின்னஞ்சிறு வகுப்பாக விளங்கும் நிறையக் கல்விகற்ற மக்கள் முன்புபோல் இப்பொழுது தரங்களை நிர்ணயிப்பவர்களாக இருக்கவில்லை; பெரும்பான்மையோரின் தரங்களையே அவர்களும் ஏற்றுக் கொள்ளும் நிலை இன்று காணப்படுகிறது. இலக்கியம், பத்திரிகை ஆகியவற்றின் கீழான அம்சங்கள் உயர்ந்த அம்சங்களை அடியோடு விழுங்கும் காலம் இருபதாவது அல்லது இருபத்தோராவது நூற்றாண்டில் வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அப்படி அது நிகழாமல் போனால் அபிவிருத்தியடைந்த இடைத்தரக் கல்வியும் உயர்தரக்கல்வியும்தாம் அதற்குக் காரணமாயிருக்கும்; உண்மையிலேயே படிக்கத்தகுந்த விஷயங்களைப் படிப்பதற்கு ஒரு விரிவான வாசகர் வகுப்பை அது உருவாக்க வேண்டும்.

இங்கிலாந்தின் சமூக வரலாற்றை வரைவதே இந்நூலின் நோக்கம். எனவே, கடல்களுக்கு அப்பால் உள்ள, பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள் என்றும் சார்பு நாடுகள் (Dependencies) என்றும் அழைக்கப்படுகிற அப்பரந்த, பல்வேறு வகையான நிலப்பரப்புகளைப் பற்றி இந்நூல் ஆராயவில்லை. ஆயினும், ஒரு பெரிய கடல் வாணிபத்தின் மையமாகவும், அதற்கு மேலாக ஒரு பேரரசின் மையமாகவும் நம் சின்னஞ்சிறு இங்கிலாந்து இல்லாமலிருந்திருந்தால் நம் சமூக வாழ்வு மிகவும் வேறுனதொன்றாக இருக்கும். நாம் கடல் கடந்து எங்கும் சென்ற துணிச்சல் மிகுந்த மக்கள் என்று நீண்டகாலமாகவே பெருமை பேசி வந்திருக்கிறோம்; அது நமது தீவு வாழ்வின் இயல்புகளில் ஒன்று. ஆனாலும் ஒரு பேரரசின் மையமாக விளங்குகிறோம் என்ற ஓர் உணர்வை நாம் அப் பேரரசைப் பெற்றபின்னர் வெகுகாலம் கழித்தே பெற்றோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்

நமது மக்கள் பாடிய நாட்டுப்பற்று ததும்பும் பாடல்களில் 'சின்னஞ்சிறிய தீவு' ('the right little, tight little island') பற்றியே புகழ்ந்துரைக்கப்பட்டது. 'சூரியன் என்றுமே அஸ்தமனமாகாத ஒரு பேரரசின்' மையம் என்ற முறையில் அத் தீவைப் பற்றி நினைக்கும் காலம் இன்னும் வரவில்லை. இந்த நினைவு முற்றிலும் வந்தது விக்டோரியா அரசியாரின் ஐம்பதாவது, அறுபதாவது ஆண்டு விழாக்கள் (1887,1897) கொண்டாடப் பட்டபொழுதுதான். அப்பொழுது பல்வேறுதரப்பட்ட தூரத்து நாடுகளிலிருந்தெல்லாம் நமது சின்னஞ்சிறு முதிய அரசிக்கு மரியாதை செய்வதற்காக வந்த கண்கவர் பொருள்கள் அனைத்தும் முதல்தடவையாகக் காண்போர் கண்கள் கூசி வியக்கும் வண்ணம் இலண்டன் தெருக்களில் விரித்து வைக்கப்பட்டன.

ஆயினும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இங்கிலாந்தின் நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் மக்களின் சிந்தனைப் போக்கும் வாழ்க்கைப் பழக்கங்களும் நமது கடல் கடந்த நாடுகளுடனான தொடர்புகளால் பெரிதும் பாதிக்கப் பட்டன. பதினெட்டாம் நூற்றாண்டில் அயல்நாட்டுத் தேயிலையும் புகையிலையும், நம் நாட்டு மாட்டிறைச்சியையும் பீரையும் போலவே நமது தேசீய உணவாயிருந்தன. பதினேழாம் நூற்றாண்டு முதற்கொண்டு துணிச்சல் மிக்கவர்களும் அதிருப்தியுற்றவர்களும் அகல்கடலைக் கடந்து முதலில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கும், பின்னர் ஐக்கிய அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்காவுக்கும் சென்றனர். பத்தொன்பதாம்நூற்றாண்டு வரையில் அவ்வாறு குடிபெயர்ந்து சென்ற மக்கள் தாம் விட்டுச்சென்ற தமது சுற்றத்தினரிடமிருந்து இறுதியாகப் பிரிந்து சென்றனர். அவர்கள் எவ்வளவு சம்பாதித்தாலும் அவர்களைப் பற்றிப் பின்னர் ஒன்றுமே தெரியாமற் போய்விட்டது. ஆனால் விக்டோரியாவின் ஆட்சியில் — குடிப்பெயர்ச்சி இயக்கம் முன்னைவிட அதிகத் தீவிரத்துடன் நடைபெற்றுக் கொண்டிருந்த அக்காலத்தில் — தபால்தலை (postage stamp) மூலமாகத் தாயகத்தில் தான் பிறந்து வளர்ந்த குடிசையோடு, 'குடியேற்ற நாடுகளுக்குச் சென்ற' மகன் தொடர்பு கொண்டான்; பையில் பணத்தோடு அவன் பல சமயங்களில் தனது குடிசையைப் பார்த்துவிட்டுப் போகவும் வந்தான். சமத்துவமும் தன்னுதவியும் (selp-help) நிலவும் புதிய நாட்டைப் பற்றிய கதைகளைச் சொன்னான்; தாய்நாட்டின் சுணக்கமான, பத்தாம்பசலி முறைகளைப்பற்றிப் பிரியம் நிறைந்த வெறுப்போடு பேசினான். இந்த மனிதத் தன்மை

மிக்க முறையில் நடுத்தர வகுப்பினரும் கீழ்வகுப்பினரும் தமது 'மேலோர்களைப்' ('betters') போலவே பேரரசைப்பற்றி (Empire) நன்கு தெரிந்திருந்தனர். மேலும், ஐக்கிய அமெரிக்காவைப் பற்றித் தமது 'மேலோரை' விடவும் அதிகமாகத் தெரிந்துவைத்திருந்தனர்; இதை அமெரிக்க உள்நாட்டுப் போரின்பொழுது (1861-65) நன்கு கண்டோம். ஆயினும் கற்றறிந்து தொழில்செய்வோரும் மேல்வகுப்பினரும்கூடப் பொருளையும் பதவியையும் தேடி உலக முழுவதும் சென்றனர்; ஆட்சி செய்யவும் வியாபாரம் நடத்தவும், காட்டு விலங்குகளை வேட்டையாடவும் ஆப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் சென்றனர். படை வரிசையிலிருந்து எவ்வளவு தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவு, நமது படையின் எல்லாப் பிரிவினருக்கும் இந்தியாவைப் பற்றித் தெரிந்திருந்தது.

இவ்விதமாகப் பல்வேறு தரப்பட்ட அயல் நாடுகளின் அனுபவங்கள் ஏராளமான அளவில் விக்டோரியாக் காலத்து இங்கிலாந்தின் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் வந்து சதா குவிந்துகொண்டேயிருந்தன. டியூடர் காலத்திலிருந்தே மலைப்பிரதேசத்துக் கிராமங்களிலும்கூடக் கடல்போக்குவரத்தின் விளைவுகள் நன்கு காணப்பட்டன; மலைப்பிரதேசத்துக் கிராமம் எதுவும் கடற்கரையிலிருந்து எழுபது மைல் தூரத்துக்குமேல் இல்லை. இந்தப் பழைய கடல் வாணிபத்தின் விளைவுகளோடு குடியேற்ற நாடுகளின் விளைவுகளும் இப்பொழுது முழுமையாகச் சேர்ந்துகொண்டன. சிற்சில விதங்களில் நமது தீவினர் உலகத்து மற்ற மக்களைவிட அதிகமாக வெளிஉலகத் தொடர்புடையவர்கள்; தீவுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் இயல்பு நம்மிடம் இல்லை. ஐரோப்பியர்களுக்கு நாம் நமது தீவிலேயே அடைபட்டுத் கிடப்பதாகத் தோன்றியது; ஏனெனில் நாம் அவர்களது கண்டத்தில் வாழவில்லை. ஆயினும், மற்ற நாட்டு மக்களைக் காட்டிலும் நமது அனுபவங்களும் வாய்ப்புகளும் வெகு அதிகம்.

விக்டோரியாக் காலத்துச் செழிப்பும் நாகரிகமும்—அதன் மோசமான அம்சங்களிலும் சரி, தலைசிறந்த அம்சங்களிலும் சரி—பெரிய போர்களோ அல்லது தேசத்துக்கு எந்தவிதமான பெரும் ஆபத்தோ இல்லாத அமைதியான ஒரு நூற்றாண்டின் விளைவுகள். கடற்படை என்ற இருப்பு அரணால் சூழப்பட்டு எந்தவிதமான அச்சமும் இன்றி ஆங்கிலேயர்கள், வாழ்வின் எல்லாப் பிரச்னைகளையும் அமைதி, பாதுகாப்பு என்ற கண்கொண்டே பார்த்தனர். இந்த அமைதி

யும் பாதுகாப்பும் ஒரு தற்காலிகமான, ஸ்தல சூழ்நிலையின் விளைவுகளே தவிர இயற்கையின் இன்றியமையாத விதியல்ல. ஆங்கிலம் பேசும் அமெரிக்காவைத் தவிர வேறு எந்தஒரு பெருநாடும் விக்டோரியாக் காலத்து இங்கிலாந்தைப்போல் அவ்வளவு பூரணமாக இராணுவத்தை மறந்து வாழ்க்கையிலேயே தனது சிந்தனையையும் செயலையும் செலுத்தியது கிடையாது. படையில் சேருவது என்பது ஒரு அருவருக்கத்தக்க செயலாக நடுத்தர வகுப்பினராலும் தொழிலாளர்களாலும் கருதப்பட்டது; ஆனல் போர்க்காலம் விதிவிலக்கு.

'இந்த டாமியோ அந்த டாமியோ,
தள்ளு வெளியே கழுத்தைப் பிடித்து;
ஆனல் போர்ப்பீரங்கி முழங்கும் பொழுது,
'நன்றி உமக்கு மிஸ்டர் அட்கின்ஸ்.'

இது ஓர் அநாகரிகப் போக்கு; கிரிமியாப் போரும் போயர் போரும் (Boer War) தொடங்குவதற்கு மூன்னல் நிலவிய போர் வெறியோடு (Jingoism) இது தொடர்புடையது. மேலும் பல போர்களும்கூட இதனல் விளையும் ஆபத்து இருந்தது. ஆயினும் ட்ரபால்கர் (Trafalgar), வாட்டர்லூப் போர்களுக்குப் பிறகு ஒரு நூருண்டுக்காலம் இதனல் பெரும் போர் ஒன்றும் விளையவில்லை. ஏனெனில் கடலின் மேற்பரப்பு முழுவதும் நமது கையிலிருந்தது; அக் காலத்தில் மனிதனின் செயல்கள் மேற்பரப்புடன் நின்றுபோயின. கடலிலும் உலகின் கடற்கரையோரங்களிலும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நாம் செலுத்திய மேலாதிக்கம், அமைதி, நல்லெண்ணம், சுதந்திரம் ஆகியவைகளைப் பேணுவதற்காகவே பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. அது அழிக்கப்பட்டிருக்குமேயானல் மனிதகுலம் அமைதியிழந்து அவதியுற்றிருக்கும்.

விக்டோரியாக் காலத்தில் வாழ்ந்த கவலையற்ற ஆங்கிலேயர்கள் இராணுவமயமாக்கப்பட்ட கண்டப்பகுதியின் உணர்வுகளையும் உள்ளத்துஉணர்ச்சிகளையும் அறியார்கள். அக் கண்டத்தை ஒட்டினற்போல் நமது பசுமையான, மகிழ்ச்சிபொங்கிய சிறு தீவு அமைந்திருப்பினும் இவைகளையெல்லாம்பற்றி அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. மனிதர்கள் வழியிலும் வியாபார வழியிலும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆகியவைபற்றி அவர்களுக்கு அதிகம் தெரியும். ஆல்ப்ஸ் மலைத்தொடர்கள், ஓவியக்கூடங்கள், புராதன நகரங்கள் ஆகியவைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த ஐரோப்பாவானது ஆங்கிலேயரின் விளையாட்டு

மைதானம். நாம் கடல்கடந்த ஒரு பேரரசை ஆளும் ஒரு தீவின் மக்கள்; கண்டத்துக்காரர்கள் இல்லை. நாம் மாலுமிகள்; சிப்பாய்கள் அல்ல. ஆதிக்கம் அல்லது நமது தேசப்பாது காப்பு என்ற நோக்கத்தோடு ஐரோப்பிய அரசியலைப் பற்றி நாம் சிந்திக்கவில்லை; துருக்கி, ரஷ்யா, ஆகியவற்றின் அரசாங்கங்கள், நெப்போலியன் III, இத்தகைய தேசீய இயக்கம் (risorgimento) ஆகியவற்றைப்பற்றிய நமது விருப்பு, வெறுப்பு களின்படியே நாம் ஐரோப்பிய அரசியலைப்பற்றிச் சிந்தித் தோம். சிற்சில சமயங்களில் இந்த உணர்வுகள் நம்மைச் சரியான பாதையில் இட்டுச் சென்றன; வேறுசில சமயங் களில் தவருன பாதையில் இட்டுச் சென்றன. அது எவ்வாறு இருந்தாலும், வேண்டிய இராணுவத் தயாரிப்புகளுடன் கூடிய ஒரு முரண்பாடற்ற தேசீயக்கொள்கை இல்லாமல் போய்விட்டது. ஆங்கிலேயர்களைப் பொறுத்தவரை வெளி விவகாரக் கொள்கை என்பது லிபரல், கன்சர்வேடிவ் கட்சி களின் அரசியலில் ஒரு பகுதியாகவே இருந்தது; விருப்பு வெறுப்புகள், உணர்ச்சிகள் ஆகியவை அதில் கலந்திருந் தன; அது ஒரு வாழ்க்கைப் பிரச்னை என்று கருதப் படவேயில்லை.

விக்டோரியாக் காலத்தில் எந்தவிதமான நாசத்துக்கும் ஆளாகாமல் நாம் இத்தகைய போக்கில் மூழ்கியிருக்க முடிந் தது. ஆனல் அவரது ஆட்சியும், பத்தொன்பதாம் நூற்றாண் டும் முடிவுக்கு வந்தபொழுது மனித விவகாரங்கள் அனைத் திலும் ஒரு மாபெரும் புரட்சி காத்துக்கொண்டிருந்தது. உள் ளெரி இயந்திரம் (internal combustion engine) கண்டுபிடிக்கப் பட்டுவிட்டது; வானவெளியை வெல்லும் அதன் விளைவுகள் சீக்கிரமே வெளிப்படப் போகின்றன. மோட்டார்கள், மோட் டார் லாரி, நீர்மூழ்கிக் கப்பல், டாங்கி (Tank), ஆகாய விமா னம் ஆகியவை உலகை ஒரு புதிய சகாப்தத்திற்கு அழைத் துச் செல்லப்போகின்றன. அப் புதிய காலம் சமாதான காலத் திலும் சரி, போரிலும் சரி கடந்த காலத்தைவிடப் பெரிதும் வேறுபட்டதாக இருக்கும். மற்ற எல்லா நாடுகளைக் காட்டி லும் இங்கிலாந்துதான் இதனல் அதிகம் பாதிக்கப்படும்; ஏனெனில், பிறர் தீண்ட முடியாத அதன் தனித்த தீவு வாழ்க்கையின் பலன்களில் பாதி போய்விடும். கடலின் மேற் பரப்பைக் கப்பல்களைக் கொண்டுமட்டும் ஆள இனி முடி யாது; அப்படி அதை ஆள முடிந்தாலும் முடியாமற்போனலும் நமது அமைதியான தீவின் ஆயிரங்காலத் தனிமையையும் பாதுகாவலையும் ஆகாய விமானங்கள் மீறமுடியும். இந்தப் புதிய சூழ்நிலையில், கண்டப்பகுதி அரசியலைப்பற்றிய நமது

கவலையற்ற போக்கும், இராணுவச் சிந்தனையின்றி அமைந்த நமது வாழ்வும், புதிய தேவைகளுக்கேற்றவாறு ஆயுதமேந்த நாம் மறுத்ததும் இன்னும் தொடர்ந்து நீடிக்குமேயானால் நமக்கு அது ஒரு பேராபத்தாக முடியும்.

சமாதானகாலத்திலும்கூட சாலைகளில் புதிதாகக் காணப் பட்ட மோட்டார்ப் போக்குவரத்துக் காரணமாக இருபதாம் நூற்றாண்டின் முதல்நாற்பதாண்டுகளில் வெகுதுரிதமான ஒரு சமூக, பொருளாதாரப்புரட்சி ஏற்பட்டது; இரயில்வேக்களா லும் இயந்திரகளாலும் முன்பு ஏற்பட்டபுரட்சியைவிடவும்கூட இது துரிதமானது. இரயில்வேக்களின் காலத்தில் குதிரைப் போக்குவரத்தும் சைக்கிள்களும்கூட இருந்தன; அதனால் தல, மாகாண வேறுபாடுகள் வேகமாக மறைந்தன; ஆயினும், மாற் றத்தின்வேகம் ஓர் அளவுக்குள்ளேயே இருந்தது. இந்தப் புதிய நிலைமைகளில் இங்கிலாந்தானது திட்டமிடப்படாத ஒரு மாபெரும் புறநகர்ப் பகுதியாக (suburb) ஆகிக் கொண் டிருந்தது. தீவின் வளர்ச்சி முழுவதையும் தனது கட்டுப்பாட் டின்கீழ் அரசு கொண்டுவருவதன் அவசியத்தை மோட் டார் ஊர்திகள் ஏற்படுத்தின; ஆனால், துரதிருஷ்டவசமாக அந்த முக்கியமான விஷயம் விதியின் கரங்களிலும், வாடகை வீடு கட்டிச் சுரண்டுவோனின் கரங்களிலும் விடப்பட்டது. முன் எப்பொழுதும் காணாத வேகத்துடன் தோன்றிய புதிய நிலைமைகளுக்கேற்றவாறு அரசியல் சமூகமானது தனது சிந் தனைப் போக்கை மாற்றியமைத்துக்கொள்ள முடியவில்லை.


ஆயினும், இந்தப் புதிய காலத்தில் சில நல்ல அம்சங் களும் இருக்கின்றன. புதிய நூற்றாண்டின் முதல்நாற்பதாண்டு களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், குறிப்பாகக் கல்வித் துறையிலும்[1] சமூகப்பணிகளிலும்ஏற்பட்டுள்ள முன்னேற்றம் போற்றத்தக்கதுதான். ஓர் அளவோடு அமைந்த மனித அறி விலிருந்து இதைவிட அதிக முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது. தொழிலாளர்வகுப்பின் பொருளாதார நிலைமைகள்


[1] வாட்டர்லூப் போரானது ஈட்டனின் விளையாட்டு மைதானத்தில் வெல்லப்படவில்லை; இங்கிலாந்து கிராமத்துவெளிகளில் வெல்லப்பட்டது. ஜூன் 18, 1815-ல் படையணியில் நின்று போராடிய அம் மனிதர்கள் கல்வி யறிவு இல்லாதவர்கள்; ஆயினும் கிராமப்புறத்து மனிதர்களின் தன்மைகளை அவர்கள் பெற்றிருந்தார்கள். இன்று வாழும் நாம் நகரத்து மக்கள்; கல்வி கற்றவர்கள். இராயல் விமானப்படையின் (R.A.F) விமானமோட்டிகள் கிராமப்புறத்து எளிமையான சிருஷ்டிகள் அல்ல; அவ்வாறு இருக்கவும் முடியாது. இப்போரை நாம் வெல்வோமானால், ஆரம்பப்பள்ளிகளிலும் உயர்தரப் பள்ளிகளிலும் (secondary schools) அதை நாம் வென்றவர்கள் ஆவோம் (1941).


விக்டோரியா அரசி இறந்தபொழுது இருந்ததைவிட 1939-ல் மிகவும் மேம்பட்டிருந்தன.


இப்பொழுது போரிலும் சமாதானத்திலும் இங்கிலாந்துக்கு என்ன நடக்கவிருக்கிறது என்பதைக் கணிப்பதற்கு மற்ற எவரையும் போலவே வரலாற்றுசிரியனுக்கும் திறமையில்லை. சில ஆண்டுகள் கழித்து இப் புதிய நூற்றாண்டின் முதல்நாற்ப தாண்டுகளில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பிரம்மாண்ட மான மாறுதல்களைப் பார்த்தால் இன்று தோன்றுவதைப் போல் அவை தோன்றமாட்டா; மாறுபட்டுத் தோன்றும். அப் பொழுது ஒரு புதிய வரலாற்றுப் பார்வையை அவை பெற்று விடும். எனவே, விக்டோரியா அரசியாரின் மரணமும் இரயில் வேக்கள்காலத்தின் முடிவுமே இங்கிலாந்தின் சமூக வரலாற்றை முடிப்பதற்குச் சிறந்ததொரு கட்டம் ஆகும்.


—★



Highbury
Islington
St. Pancras the Wells
Hoxton
M I D D L E S E X
Fleet River
Mile End
Smithfield
St. Bartholomew's
MOOR GATE
NEW GATE
ALDERS GATE
BISHOPS GATE
White Chapel
TEMPLE BAR
CHEAP-SIDE
ALD GATE
LUD GATE
St. Paul's
Temple
Savoy Palace
R I V E R
The Tower
Shadwell
Charing Cross
LONDON BRIDGE
T H A M E S
Wapping
Southwark Suburb
Rotherhithe
Westminster Abbey
Bermondsey
Lambeth Palace
Lambeth
S U R R E Y
Walworth
Vauxhall
Peckham
New Cross
CHAUCER'S LONDON
Scale of 1 mile
0 ¼ ½ 1
The dotted line is the area of the City; the black line is the City wall and ditch, at that time in very good repair. There were probably houses between the wall and the outer boundary. There were certainly houses round Smithfield.



HARROW
HIGHGATE
HAMPSTEAD
R. Brent
EALING
Kensington Palace
Holland House
R. Brent
CHELSEA
BATTERSEA
PUTNEY
RICHMOND
CLAPHAM
R. Thames
Hampton Court Palace
KINGSTON
R. Wandle
Scale of Miles
0 1 2 3 4



TOTTENHAM
WALTHAMSTOW
R. Lea
ILFORD
EAST HAM
WEST HAM
R. Thames
WOOLWICH
GREENWICH
DEPTFORD
DULWICH
CROYDON
The
GROWTH OF LONDON
1600 - 1900
Old wall of London
Built-up area in 1600
" " " 1800
" " " 1900
Boundary of the County of London, 1888



Late Tudor and Early Stuart
LONDON
Scale of 1 Mile
0 ¼ ½ 1
Pancras
Fleet Ditch
Tottenham Court
Lambs Conduit Fields
DEFENCES
EDGWARE ROAD
Paddington
Tyburn Brook
Mary-le-bone
St. Giles's Fields
Tyburn
EARTHWORK
Hyde Park
St. James's Palace
Knight's Bridge
West Bourne
Westminster
Abbey
Lambeth
Lambeth Palace
Horse Ferry
Ebury Farm
Brompton
Chelsea
Vauxhall
RIVER THAMES
Battersea



Islington
New River
Hoxton
OUTER LONDON, 1643
Bethnal Green
Spital Fields
Mile End
Wallbrook
MILE END ROAD
Stepney
Whitechapel
St. Paul's
Temple
RATCLIFF HIGHWAY
RIVER
LONDON BRIDGE
Tower
Shadwell
THAMES
Globe Theatre
Marsh
SOUTHWARK
Wapping
Rotherhithe
Bermondsey
Newington Butts
Walworth
Camberwell
Peckham



LONDON
in the reign of George I
Scale of 1 Mile
0
¼
½
¾
1
To Highgate
St. Pancras
the Wells
Sadler's Wells
New River Pond
Pasture Grounds
The way to Hampstead
Tottenham Court
St. Mary le Bon
Southampton (later Bedford) House
Montague House
Lamb's Conduit
CAVENDISH SQUARE
BLOOMSBURY SQUARE
Gray's Inn
Ely Place
HOLBORN
OXFORD ST.
TYBURN ROAD
ST. GILES'S
Lincoln's Inn Fields
Lincoln's Inn
Road to Oxford
Pasture Ground
Covent Garden
The Temple
PICCADILLY
ST. JAMES'S SQUARE
Somerset House
Savoy
Hyde Park
Cupid's Garden
Charing Cross
THE MALL
Whitehall
St. James's Palace
Road to Exeter
St. James's Park
Buckingham House
WESTMINSTER
Parliament House
Abbey
Lambeth Marsh
Tuthill Fields
Lambeth House
Lambeth


Part of Islington
Cold Harbour
Bun Hill Fields
BETHNAL GREEN
Charter House
SPITAL FIELDS
Smith Field
Bloor Fields
to Mile End
LONDON BRIDGE
Garden Grounds
ROTHERHITHE


LONDON
during the Napoleonic Wars
Scale of 1 Mile
0 ¼ ½ ¾ 1
T = turnpike
SOMERS TOWN
PADDINGTON
THE NEW ROAD
EDGWARE ROAD
Foundling Hosp.
GRAY'S INN
RUSSELL SQUARE
BEDFORD SQUARE
TOTTENHAM COURT RD.
MANCHESTER SQUARE
PORTMAN SQUARE
CAVENDISH SQUARE
BLOOMSBURY SQUARE
OXFORD STREET
HOLBORN
DRURY LANE
to Oxford
HANOVER SQUARE
SOHO SQUARE
GROSVENOR SQUARE
Covent Garden
HYDE PARK
MAYFAIR
PICCADILLY
ST. JAMES'S SQUARE
THE STRAND
Serpentine River
KNIGHTSBRIDGE
PALL MALL
CHARING CROSS
Queen's Garden
Queen's Palace
St. James's Palace
THE MALL
St. James's Park
Whitehall
WESTMINSTER BRIDGE
Westminster Abbey
Westminster Palace
PIMLICO
WESTMINSTER
SLOANE STREET
PRIVATE ROAD
Lambeth Palace
THE KING'S
Chelsea Water Works
Tothill Fields
CHELSEA
Royal Hospital
Neat Houses Gardens
Millbank
RIVER THAMES
Vauxhall Gardens
PORTSMOUTH ROAD


PENTON-
VILLE
ISLINGTON
ISLINGTON
Finsbury
Fields
CITY ROAD
New River
Head
HACKNEY RD.
BETHNAL
GREEN
SHOREDITCH
STREET
SPITAL
FIELDS
Gray's
Inn
Lincoln's
Inn
Smithfield
Moor
Fields
LONDON WALL
NEWGATE ST.
FLEET ST.
CHEAPSIDE
BISHOPSGATE
WITHOUT
HOUNDS
DITCH
WHITECHAPEL RD.
St. Paul's
The
Temple
LOMBARD
ST.
BLACKFRIARS
BRIDGE
R I V E R
LONDON
BRIDGE
Tower
RATCLIFF
HIGHWAY
London
Docks
SOUTHWARK
THAMES
BERMONDSEY
RULES
OF THE
BENCH
Sessions
House
ROTHERHITHE
NEWINGTON
BUTTS
KENT ROAD
WALWORTH
KENNINGTON


to Edgware
Hendon
to Barnet
Finchley
Hornsey
Harrow
Highgate
ISLING
ST. PANCRAS
Wembley
HAMPSTEAD
Willesden
ST. MARYLEBONE
R. Brent
PADDINGTON
HOLBORN
Ealing
HAMMERSMITH
KENSINGTON
to Uxbridge
Acton
Kensington Palace
CITY OF WESTMINSTER
Holland House
R. Brent
Brentford
Chiswick
CHELSEA
Kew
to Staines
Barnes
BATTERSEA
Putney
Clapham
Richmond
WANDSWORTH
Balham
Twickenham
R. Thames
Tooting
Streatham
LAMBETH
Wimbledon
Kingston
Surbiton
R. Wandle
to Reigate
to Guildford
to Epsom
Sutton


Tottenham
Walthamstow
Wanstead
STOKE NEWINGTON
Leyton
R. Lea
R. Roding
to Colchester
Ilford
HACKNEY
SHORE DITCH
Barking
East Ham
to Southend
FINSBURY
BETHNAL GREEN
West Ham
CITY
STEPNEY
R. Thames
Tower
Tunnel
SOUTHWARK
BERMONDSEY
Charlton
GREENWICH
DEPTFORD
Peckham
to Dartford
Eltham
Herne Hill
Dulwich
Catford
LEWISHAM
Sydenham
Croydon
LONDON
end of the Nineteenth Century
Scale of Miles
0 1 2 3 4
Built-up areas
Boundary of the County of London, 1888
Main roads
Main railways

பொருள்குறிப்பு அகராதி

அ

அடிசன், ஜோசப், 14
அடிமை ஒழிப்பு இயக்கம், 116-119, 136, 186
அபர்குராம்பி, சர் ரால்ப், 125
அமெரிக்க உள்நாட்டுப் போர், 209
அமெரிக்க ஐக்கிய நாடுகள், 72, 195, 209, 249
அயர், 213
அயர்லந்து, 185, 205
அராபிய இரவுகள், 191

ஆ

ஆக்ஸ்போர்டு இயக்கம், 116, 143, 149, 220
ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், 154, 201, 224, 225
ஆகாய விமானம், 252
ஆங்கிலோ-கத்தோலிக்க சமயம், 149-50, 220
ஆண்டர்சன், ஹேன்ஸ், 191
ஆபர்டீர் பல்கலைக் கழகம், 30
ஆபர்டீன்ஷயர், 40
ஆர்ச், ஜோசப், 184
ஆர்னுட், டாக்டர், 167
ஆர்னல்ட், டாக்டர், தாமஸ், 143, 153, 154, 155
ஆர்னல்ட், மேத்யூ, 150, 156, 178, 210, 219
ஆல்பர்ட், அரசியாரின் கணவர், 160, 172
ஆல்பர்ட் எட்வர்ட், வேல்ஸ் இளவரசர், 227
ஆல்தார்ப் பிரபு, 131, 187
ஆள்திரட்டும் குழு, 121-22
ஆறு சட்டங்கள், 91
ஆஸ்டின், ஜேன், 106, 123
ஆஸ்திரேலியா, 87, 175, 195, 206, 249

இ

இத்தாலி, 159
இந்திய சிப்பாய்க் கலகம், 198
இயற்கை விஞ்ஞானம், 157
இரட்சண்யசேனை, 228
இரவலர் சட்டம், 180-182
இரவலர் நிவாரணம், 78-79, 180-81
இறப்பு-பிறப்பு-திருமணப் பதிவாளர், 147
இறப்பு வீதம், 166, 168, 217

ஈ

ஈட்டன் கல்லூரி, 152, 153
ஈஸ்ட்போர்ன், 234

உ

உட்ரூ ராபர்ட், 44

எ

எடின்பரோ, 9, 30-35, 60-63, 167
எடின்பரோப் பாராளுமன்றம், 3, 9, 29
எடின்பரோ பிரிவிகவுன்சில், 3, 35, 39
எட்வர்ட் 1, 1, 49
எட்ஜ்வொர்த், மேரியா, 106

எபிஸ்கோப்பியர்கள், 13-14, 39-41, 65-66
எப்பிங்காடு, 179
எலியர், ஜார்ஜ், 219
எல்டன் பிரபு, 136
எவஞ்சலியர்கள், 64, 113-118, 140, 149, 186, 221-22

ஐ

ஐல் ஆப் மேன். 213

ஒ

ஒயிட், கில்பர்ட், 158
ஒயிட் ஹேவன், 121
ஒச்சில்ட்ரீ, எடி, 27
ஓஸ்ட்லர், ரிச்சர்ட், 186

க

கடற்படை, 120-123, 251
கட்டடக்கலை, 160-61
கட்டடக்கலை (ஸ்காட்லந்து), 11, 62-63
கத்தோலிக்க விடுதலைச் சட்டம், 149
கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள், 60
கரான் கம்பெனி, 60.
கலாமி, எட்மண்ட், 8, 18
கலிபோர்னியாத் தங்கம், 175
கல்லோடன், 56
கல்விச் சட்டங்கள், 201-2, 238, 245-47
கற்றுக்குட்டிகள், 97
கன்னிங்ஹாம், ஆர்ச்டீக்கன், 225
காக்கர்டன் தீர்ப்பு, 246
காக்பர்ன், ஹென்ரி தாமஸ், 61
காக்ஸ், டேவிட், 158
காப்பெட், வில்லியம், 74, 83, 112, 113, 125
கார்டிப், 174, 213
கார்லில், தாமஸ், 68, 149, 157, 219
கார்லில், ஜேம்ஸ், 68
காலரா, 167. 168
காலிங்உட், அட்மிரல், 123
கால்பந்து, 129, 167
கால்வாய்கள், 170, 172
கானடா, 87, 195, 209, 249
கான்ஸ்டபிள், ஜான், 158
கிங்ஸ்லி, சார்லஸ், 148, 190
கிப்ளிங், ரூட்யார்ட், 208
கிரிக்கெட், 197
கிரிமியாப்போர், 196-198
கிளப், ஆர்தர் ஹ்யூக், 178
கிளாவர் ஹவுஸ், 37, 63
கிளாட்சைட், 53, 58, 59, 121
கிறிஸ்துவ அறிவைப் பரப்பும் சங்கம், 48, 56-59
கிறிஸ்துவ சோஷலிஸ்டுகள், 145, 193-94
கீட்ஸ், ஜான், 158
குக், தாமஸ், 215
குடிசைத் தொழில்கள், 82, 101-105, 110
குடிப் பழக்கம், 229-30
குடியேற்றம், 85-87
குவாக்கர்கள், 119, 171
குழந்தைகளைக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சங்கம், 192
குழந்தைத் தொழிலாளிகள், 187-90
குழந்தை நூல்கள், 191
கூட்டுறவு இயக்கம், 175, 194
கூப்பர், வில்லியம், 154
கெபில், ஜான், 149
கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம், 155, 160, 173, 202, 224-25

ச

சட்விக், எட்வின், 167, 169
சதாம்டன், 213
சதே, ராபர்ட், 143
சண்டர்லந்து, 121
சமயச் சார்பற்றவர்கள், 194
சமயப் பொறைச் சட்டம் (ஸ்காட்லந்தில்) 40, 49
சார்லஸ் II, 25
சால்மன் மீன், 12
சாலிஸ்பரி பிரபு, 221
சிமியோன், சார்லஸ், 116, 140, 221

சிவில் சர்வீஸ் தேர்வு, 201, 226
சிறைச்சாலைச் சீர்திருத்தம், 170
சுங்கச்சாலைச் சட்டம், 53
சுரங்கச் சட்டம், 190
செயின்ட் ஆன்ட்ரூஸ் பல் கலைக் கழகம், 30
செவிலியர் தொழில், 196, 197
செஸ்டர், 213
சேட்லர், மைக்கல் தாமஸ், 186
சேம்பர்லின், ஜோசப், 168, 241
சைக்கிள், 215
சோதனைச் சட்டம், 224-25
சோஷலிசம், 210

ஞ

ஞாயிறு பள்ளி இயக்கம், 96

ட

டண்டாஸ், 61
டர்னர், ஜே. எம். யூ, 158
டார்வின், சார்லஸ், 222
டிக்கன்ஸ், சார்லஸ், 131, 136, 157, 181, 191
டிரினிட்டி ஹவுஸ், 120
டிஸ்ரேலி, பெஞ்சமின், 172, 193, 204, 236
டிஸ்ஸென்டர்கள், (அல்லது நான்-கன்பார்மிஸ்டுகள்), 90, 115-17, 138-41, 143, 147, 227-28
டூஃபோ, டேனியல், 33, 74
டுமாரியர், 201, 216
டென்னிசன், ஆல்பிரட், 155, 157, 158, 220, 223
டேரியன் திட்டம், 24
டைன்சைட், 213
டோரிகள், 13
ட்ரபால்கர், 123
ட்ரோலோப், அந்தோனி, 107, 144, 148, 157, 172, 238

த

தடையிலா வாணிபம், 185, 203, 204, 205, 209, 211-13
தலசுய ஆட்சிமுறை, 71-72, 176, 239-41
தலையிடாமைக் கோட்பாடு, 99, 166, 169, 189, 210
தாம்சன், ஜே. ஜே 225
தாம்சன், ஜேம்ஸ், 158
தானியச்சட்டம், 72, 203
தானியச்சட்ட ரத்து, 72, 165, 175, 177, 188, 189
திருச்சபைக் கட்டணம், 145.
திருச்சபைப் பள்ளிகள், 96-97, 245
திருமணச் சட்டம் (1836), 146
தீபகற்பப் போர், 75, 124
தீவிர வாதம், 91, 141, 143
தேக்கரே, வி. மே., 157, 171, 191
தேசீயக் கடன், 111
தேசீயப் பள்ளிகள், 97, 244
தேயிலை, 12, 54
தொழில்நுட்பக் கல்வி, 209
தொழிலகப் பரீட்சை, 180
தொழிற்கட்சி, 236
தொழிற்கூட்டுச் சட்டம், 99
தொழிற்சங்க இயக்கம், 97-101, 175, 193, 201, 235-36
தொழிற்சாலைகள், 100-101, 105, 110-111, 118, 152, 186-190

ந

நகர ஆட்சி, 71, 163-66, 239-41
நாக்ஸ், அலெக்சாந்தர், 150
நாக்ஸ், ஜான், 16, 40
நான்-கன்பார்மிஸ்டுகள் : பார்க்க-டிஸ்ஸென்டர்கள்
நியூகாசில், 121, 213
நியூசீலந்து, 87, 195, 206
நியூபாரஸ்ட், 208
நியூமன், ஜான்ஹென்றி, 149, 225

நியூ லானர்க் மில்ஸ், 101, 189
நீராவிக் கப்பல்கள், 120, 174
நெப்போலியன், 51, 68, 70, 72, 104
நெப்போலியன் III, 198, 209
நெல்சன் பிரபு, ஹொரேஷியா, 121, 122
நைட்டிங்கேல், பிளாரன்ஸ், 105, 157, 196
நோர் கலகம், 122
பக்ஸ்டன் குடும்பம், 116, 117
பட்டர்பீல்ட் வில்லியம், 160
பத்துமணி நேர மசோதா, 169, 189
பயன் முதற்கோட்பாட்டினர், 114
பர்ன்ஸ், ராபர்ட், 5, 62
பர்ன்ஸ், ஜான், 236, 241
பாக்ஸ், சார்லஸ் ஜேம்ஸ், 114
பாப்டிஸ்ட்டுகள், 115
பாமர்ஸ்டன் பிரபு, 178, 188, 208, 209, 216, 226
பாய்லோ, 156
பாராளுமன்றச் சீர்திருத்தம், 82, 98, 142-43, 164, 186, 188, 201, 236, 238-39
பாரிங், 73
பாரோ, 174, 213
பால்கன் தீபகற்பம், 196-97
பாஸ்வெல், ஜேம்ஸ், 5
பிட்கெய்ர்ன், டாக்டர், 31
பியூரிட்டானியர்கள்: பார்க்க-டிஸ்ஸென்டர்கள்.
பிரம்மல், பேர, 75
பிரஷ்யா, 152
பிராங்கோ-பிரஷ்யப்போர், 199
பிராட்லா, சார்லஸ், 218, 228
பிராட்ஷாவின் ரயில்வேக் கால அட்டவணை 171
பிரான்ட் சகோதரிகள், 96, 105, 157
பிரிட்டிஷ் அந்நியப் பள்ளிச் சங்கம், 97, 117
பிரிட்டிஷ் காமன்வெல்த், 195, 248
பிரீஸ்ட்லி, ஜோசப், 115
பிரெஞ்சுப் புரட்சி, 74, 77, 115
பிரைட்டன், 112, 120, 214
பிரைட், ஜான், 188
பிரௌனிங், ராபர்ட், 150
பிளாக்பூல், 213
பென்னி தபால், 173, 249
பேபியன் சங்கம், 235, 241
பைரன் பிரபு, 70, 76, 106, 131, 157
பொதுச் சுகாதாரம், 167-69.
பொதுப் பள்ளிகள், 152-155
பொது விடுதிகள், 230
போப், அலெக்சாண்டர், 156
போர்பெஸ், 13, 16
போர்ன் மூத், 234
போலீஸ், 98, 169-70
ப்ளாடன், 9

ம

மணமான பெண்களின் சொத்துச்சட்டம், 105-106
மரணவீதம், 166, 168, 217, 242
மாக்ஸ்வெல், ஜே. கிளார்க், 225
மார்கேட், 120, 214
மார் பிரபு, 10
மார்க்ஸின் தத்துவம், 235
மால்தஸ், தாமஸ், 80, 86, 195
மான்செஸ்டர், 168
மான்செஸ்டர் பல்கலைக் கழகம், 225
மான்செஸ்டர் இலக்கணப் பள்ளி, 153
மிடில்பரோ, 174
மில்னர், ஐசக், 116
மில், ஜான் ஸ்டுவார்ட், 157, 201, 202, 210
மின்சாரத் தந்தி, 173
முதியோர் கல்வி இயக்கம், 93-96
மூர், சர் ஜான், 125
மூர், ஹன்னா, 106, 108
மெக்காலே, தாமஸ் பேபிங்டன், 157, 188, 209
மெக்கானிக்குகளின் இன்ஸ்டிடூட்டுகள், 94, 95

மெகாடம் சாலிகள், 133
மெயிட்லண்ட், பேராசிரியர், 225
மெர்சி கப்பல் துறைகள், 212
மெரிடித், ஜார்ஜ், 210, 227
மெல்போர்ன் பிரபு, 188
மேரியட், கேப்டன், 123
மேனிங், கார்டினல் ஹென்றி எட்வர்ட், 149
மோரன்ட், சர் ராபர்ட், 247
மோரிஸ், வில்லியம், 227, 244

ய

யாகோபியர்கள், 4, 10, 11, 13 39, 54, 61, 64-66
யாகோபிய - எதிர்ப்பியக்கம், 70, 78, 97, 100, 117-18, 136, 140.

ர

ரக்பிப் பள்ளி, 153
ரயில்வேக்கள், 161, 170-74, 213, 233
ரஸ்கின், ஜான், 159, 162 210 243
ராச்டேல் முன்னேடிகள், 193
ராப்ர்ட்சன், டாக்டர் வில்லியம், 5, 17, 61, 64
ராயல் அகாதமி, 162
ராயல் விவசாயக் கழகம், 178
ரிக்கார்டோ, டேவிட், 99
ரௌலண்ட்சன், தாமஸ், 132
ரோமன் கத்தோலிக்க சமயம், 116, 149-50, 224

ல

லங்காஸ்டர் துறைமுகம், 213
லாடிடுடினேரியனிசம், 140
லிவர்ப்பூல், 121, 168, 212
லிவிங்ஸ்டன், டேவிட், 219
லீட்ஸ், 168
லீயர், எட்வர்ட், 158
லுட்டைட்டுகள், 98, 99, 186
லெக்கி, W. E. H, 224
லேங், ஆண்ட்ரூ, 191
லேண்ட்சீர், எட்வின், 160
வாட்டர்லூ, 204, 253
வாட்டர்ஹவுஸ், ஆல்பிரட், 116
வால்போல், ஹொரேஸ், 114
வால்டேர், 222
வால்ஸ், கிரஹாம், 241
விக்டோரியா அரசி, 130, 160, 211, 215, 249
விஞ்சில்சீ பிரபு, 132
விஞ்செஸ்டர் கல்லூரி, 153
விட்பி, 122, 213
விம்பர், எட்வர்ட், 215
வில்பர் போர்ஸ், பிஷப், 222
வில்பர் போர்ஸ், வில்லியம், 116-119
வேக்பீல்ட், கிப்பன், 87, 195
வேட், தளபதி, 45, 55
வேர்ட்ஸ்வொர்த், வில்லியம், 75, 84, 88, 107, 158
வேலியமைப்பு இயக்கம், 178-79

ஜ

ஜார்வி, பெய்லி நிகோல், 30, 45, 59
ஜெப், பிஷப், 150
ஜோவெட், பெஞ்சமின் 225

ஹ

ஹக்ஸ்லி, தாமஸ், 219
ஹட்சன், ஜார்ஜ், 171
ஹல், 121
ஹவுஸ்மன், A. E., 227
ஹார்ட்விக் பிரபு, 146
ஹார்டி, தாமஸ், 227
ஹாரோப் பள்ளி, 153
ஹான்வே, ஜோனஸ், 190
ஹில், ரவுலண்ட், 173
ஹேடிங்டன் நியூமில்ஸ், 28
ஹைலந்து, 160
ஹோலிரூட் அரண்மனை, 30
ஹோவிட், வில்லியம், 84, 182
ஹோல்யோக், 194
ஹோவர்ட், ஜான், 167
ஹ்யூம், ஜோசப், 100

ஸ

ஸ்காட், சர் வால்டர், 5, 61, 160, 197
ஸ்டப்ஸ், பிஷப் வில்லியம், 225
ஸ்டர்ஜ் குடும்பம், 171
ஸ்டீபன் குடும்பம், 116
ஸ்டீபன், லெஸ்லி, 215, 220
ஸ்டீபன்சன், ஜார்ஜ், 93, 170
ஸ்டீவன்சன், ராபர்ட் லூயி, 191, 227
ஸ்டெர்லிங், ஜான், 141
ஸ்பிட்ஹெட் கலகம், 122
ஸ்பீன்ஹாம்லந்து முறை, 79 180
ஸ்மித், ஆடம், 5, 17, 59, 62
ஸ்மித், ஜார்ஜ், 226
ஸ்மோலெட், 5

ஷ

ஷாபஸ்பரி, ஏழாவது பிரபு, 167, 168, 186, 190.